


# காந்தியின் வாழ்க்கையிலே

எம். சண்முகசுந்தரம்

# காந்தியின் வாழ்க்கையிலே

மு. சண்முகசுந்தரம்

கவிஞர் முருகு சுந்தரம்.

வள்ளுவர் பண்ணை
137, பிராட்வே, சென்னை-1

வெளியீடு 127
முதற் பதிப்பு : ஆகஸ்டு '63
முழுஉரிமையும் பண்ணைக்கே

---

விலை ரூபாய் 6-00

அச்சிட்டோர்;
மெட்ரோபாலிடன் பிரிண்டர்ஸ்
சென்னை - 2.

# முன்னுரை

காந்தியடிகள் பிறக்கும்போதே 'மகாத்மா' வாகப் பிறக்கவில்லை. நம்மைப் போல் சாதாரண மனிதராகவே பிறந்தார். அதோடு குற்றமுள்ள மனிதராகவும் இளமையில் வாழ்ந்தார். ஆனால், தம்முடைய நல்லொழுக்கத்தாலும், சத்தியத்தாலும் தம்மை மகாத்மாவின் நிலைக்கு உயர்த்திக் கொண்டார். இது பெரிய சாதனையல்லவா! இத்தகைய பெரியாரின் வாழ்க்கை உலகிற்கு ஒரு அரிய கருவூலமாகும்.

மேலும் இந்நூற்றண்டில் வாழ்ந்த பெரியார்களில் அவர் தலைசிறந்தவர். இந்நூற்றுண்டைக் "காந்தியின் நூற்றுண்டு" என்று கூறினாலும்பொருந்தும். உலகில் எவ்வளவோ பெரியார்களும், அறிஞர்களும், கலைஞர்களும், கவிஞர்களும், வீரர்களும் வாழ்ந்திருக்கிறார்கள். இவர்களில் பலர்—நூற்றுக்கணக்

கானவர்—தம்வாழ்க்கை வரலாற்றை எழுதி யிருக்கிருர்கள். இவர்களில் ஒருவர் கூட, தம் உள்ளத்தை அப்படியே பிளந்து முழுதும் தெரியக் காட்டியவர் இருக்க முடியாது. எவராக இருந்தாலும், தாம் செய்த குற்றத்தைக்குறைத்தும்,நன்மையை மிகைப் படுத்தியும் கூறுதல் இயல்பே. ஆனல் காந்தி யடிகள் வழக்கமான அத் தவற்றின் பால் படியவில்லை. விலைமாதின் இல்லத்திற்குச் சென்றதைக்கூட ஒளிவு மறைவின்றி எழுதும் நாணய உணர்வைக் காந்தியடிகளிடம் தான் காண முடியும். அவருள்ளத்திற் படர்ந்திருந்த சிறு மயிரிழைகூட, உலகின் கண்களினின் றும் மறைக்கப்படவில்லை.

உலகப் பொருளாதாரத்தையே மாற்றி யமைத்த பேரறிஞர் காரல் மார்க்ஸின் தத்து வத்தை எல்லோரும் அறிவர். அவருடைய கொள்கையை மார்க்ஸியம் என்று அழைக் கிருேம். அதேபோலக் காந்தியடிகளின் கொள்கைகளைக்'காந்தியம்' என்ற பெயரால் உலக மக்கள் அழைக்கின்றனர். இந்நூலில் காந்தியக் கொள்கைகளைப் பல கூறுகளாக்கி அவற்றை பல தலைப்புகளால் விளக்கி ஒவ்வொன்றுக்கும் அடிகளின் வாழ்க்கை நிகழ்ச்சிகளையே எடுத்துக்காட்டுகளாக அமைத்திருக்கிறேன். முதலில் அடிகளின் வாழ்க்கை நிகழ்ச்சிகளை மட்டும் தொகுத்து நூலாக்க விழைந்தேன். பிறகு கொள்கை

களின் அடிப்படையில் நிகழ்ச்சிகளைத் தொகுத்தால், படிப்போர் காந்தியக் கொள்கைகளைப் புரிந்துகொள்வதோடு, அடிகளின் வாழ்க்கை நிகழ்ச்சிகளையும் அறிந்து இன்புற முடியும் என்பதை உணர்ந்தேன். அம் முயற்சியின் விளைவுதான் தங்கள் கையிலிருக்கும் இந்நூல். தமிழுலகம் இந்நூலை வரவேற்று, என்னை இப்பணியில் மேலும் ஊக்குமென்று நம்புகிறேன். இந்நூலை நன் முறையில் பதிப்பித்து மக்கட்கு விருந்தாக்கிய வள்ளுவர் பண்ணைக்கு என் உளம் கலந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

சேலம்
15-1-61.

இப்படிக்கு
மு.ச.

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | சத்தியம் | 9 |
| 2. | அஹிம்சை | 35 |
| 3. | அஞ்சாமை | 74 |
| 4. | தீண்டாமை | 106 |
| 5. | அருள் | 123 |
| 6. | சமயம் | 134 |
| 7. | புலால் மறுத்தல் | 147 |
| 8. | நோயும் மருந்தும் | 164 |
| 9. | உணவு | 177 |
| 10. | உடை | 186 |
| 11. | தொழில் | 194 |
| 12. | ஏழ்மை | 208 |
| 13. | மொழி | 214 |
| 14. | கல்வி | 222 |
| 15. | காலந் தவறாமை | 228 |
| 16. | சிக்கனம் | 233 |
| 17. | பொதுப்பணம் | 241 |
| 18. | பிடிவாதம் | 260 |
| 19. | பொறுப்புணர்ச்சி | 264 |
| 20. | நகைச்சுவை | 269 |
| 21. | மூன்றும்வகுப்புப் பயணம் | 277 |
| 22. | தூய்மை விருப்பம் | 284 |

23. தொழுகை 287
24. கடவுள் 288
25. கோவில் 290
26. சோம்பலின்மை 293
27. நாணம் 294
28. அவை நடுக்கம் 297
29. திருமணம் 300
30. பிரம்மச்சரியமும் கருத்தடையும் 306
31. உடற்பயிற்சி 311
32. சத்தியாக்கிரகம் 314
33. உண்ணாவிரதம் 316
34. நூல் நிலையம் 322
35. காங்கிரஸ் 323

# 1. சத்தியம்

சத்தியம் காந்தியடிகளின் பரம்பரைச் சொத்து. காந்தியார் குஜராத்தி நாட்டைச் சேர்ந்தவர். குலம் 'மோட பனியா' என்னும் வணிகர் குலம். ஆனால் இவருடைய முன்னோர்கள் வாணிபம் செய்ததில்லை. குஜராத் மாநிலத்தில் சிறிதும் பெரிதுமாக நிறைந்திருந்த சுதேச சமஸ்தானங்களில் அரசியற் பணியே செய்து வந்தனர். காந்தியாரின் பாட்டனார் பெயர் திருவாளர் உத்தம சந்திர காந்தி. அவர் போர்பந்தர் சமஸ்தானத்தில் திவான் வேலைபார்த்து வந்தார். அவருடைய பகைவர் சிலர் அவரைக் கவிழ்த்து விடச் சூழ்ச்சி செய்தனர். இதை எவ்வாறோ உணர்ந்த உத்தம சந்திரர், போர்பந்தரிலிருந்து தப்பியோடி, அருகிலிருந்த ஜூனகைத் சமஸ்தானத்தில் அடைக்கலம் புகுந்தார். ஜூனகைத் சமஸ்தானத்தை அடைந்ததும், அரியணையில் வீற்றிருந்த நவாபின் முன் சென்றார் உத்தம சந்திரர். தம்முடைய இடது கையால் 'சலாம்' செய்தார். எப்போதும் பெரியோர்களுக்கு வலது கையால் வணக்கம் செலுத்துவதுதான் மரியாதை. ஆனால் உத்தம சந்திரர் அவ்வாறு செய்யவில்லை. இவருடைய செயலைக் கண்ட நவாபு பெருஞ்சினங் கொண்டார். அவையில் வீற்றிருந்த அமைச்சர், படைத்தலைவர் முதலியோரும் உத்தம சந்திரரின் செயலைப் பெரிய அவமதிப்பாகக் கருதினர். அதற்குக் காரணம் கேட்டபோது உத்தம சந்திரர், "என்னுடைய வலது கை முதலிலேயே போர்பந்தர் சமஸ்தானத்திற்கு அடிமைப்பட்டிருக்கிறது. அதனால்தான்

நான் தங்களுக்கு இடது கையால் சலாம் செய்தேன்" என்று விடையளித்தார்.

உத்தம சந்திரரின் விடையைக் கேட்ட நவாபு சினங் கொள்ளவில்லை. மாருக மகிழ்ச்சியே கொண்டார். அவரு டைய அரசபக்தியையும் கடமை யுணர்ச்சியையும், நன்றி யுணர்ச்சியையும் வியந்தார். "உத்தம சந்திரரே! உண்மை யில் நீர் உத்தமர்தான்! உம்மைப்போல் சத்தியவானை நான் கண்டதில்லை!" என்று கூறிப் பாராட்டினர். இப்பொழுது கூறுங்கள்! சத்தியம் காந்தியடிகளின் பரம்பரைச் சொத்துத்தானே?

சத்தியம் என்ற சொல்லுக்கு, வாய்மை, உண்மை எனப் பொருள் கொள்ளலாம். சத்தியத்திற்கு மாருன சொல் பொய்மை. பொய்மையைக் காந்தியடிகள் மலச்சிக்க லுக்கு ஒப்பிடுகிருர். "மலச்சிக்கல்தான் பிற நோய்களுக்கு அடிப்படை; அதே போலப் பொய்மைதான் பிறகுற்றங் களுக்கு அடிப்படை" என்பது அடிகளின் அசைக்க முடியாத நம்பிக்கை. எனவே பொய்மையை உள்ளத்தி லிருந்து நீக்கிச் சத்தியத்தைக் கடைப்பிடிக்கத் தொடங்கி விட்டால், பிறகுற்றங்கள் நம்மைவிட்டுப் பறந்து விடும் என்று அவர் அடிக்கடி கூறுவார். நம் வான்புகழ் வள்ளுவனும், "பொய்யாமை பொய்யாமை யாற்றின் அறம்பிற செய்யாமை செய்யாமை நன்று" என்று திட்ட வட்டமாக அறுதியிட்டுக் கூறிச் சென்ருன்.

சத்தியத்தையும் காந்தியடிகளையும் தனித்தனியே பிரிக்க முடியாது. காந்தியடிகளே சத்தியம்; சத்தியமே காந்தியடி கள். காந்தியடிகளை எண்ணுந்தோறும் வாய்மை நம் உள்ளத்தில் தோன்றும். வாய்மையை எண்ணும் போதெல் லாம் அடிகளின் எழிலார் திருவுருவம் நம் எண்ணத் திரை யில் மின்னலிட்டுத்தோன்றும். அடிகள் தம் வாழ்க்கையைச் சத்தியத்தின் ஆராய்ச்சிக்கூட (Laboratory)மாகவே

கருதினர். ஆகையினால்தான், தம்முடைய வாழ்க்கைவரலாறு நூலுக்கு "உண்மையின் ஆய்வு" [சத்திய சோதனை—My Experiment with Truth] என்று பெயர் கொடுத்தார். தம் உள்ளத்தில் தோன்றும் ஒவ்வொரு எண்ணத்தையும், தம் மெய்வழி நிகழும் ஒவ்வொரு செயலையும் சத்தியம் என்னும் சோதனைக் குழாயிலிட்டு ஆராய்ந்து பார்ப்பார். சத்தியத்தின் அடிப்படையில் அவைகள் அமைந்திருந்தால் மேற்கொள்வார்; மாறாக இருந்தால் ஒதுக்கிவிடுவார். சத்தியம் என்பது அவருடைய மனச்சாட்சி. அவருடைய மனச்சாட்சிக்குப் பொருந்திய எந்தச் செயலையும் இமயமே தடுத்துநிறுத்தினாலும் செய்யாமல் விடமாட்டார். அவரோடு அரசியல் வாழ்வில் பங்குகொண்டிருந்த ஒவ்வொருவரும் இவ்வுண்மையைப் பட்டறிவால் உணர்ந்திருப்பர்.

காந்தியடிகளின் உயிர்நாடியாக விளங்கிய இச்சத்தியம் இளமையிலேயே அவருடைய உள்ளத்தில் ஊறிவிட்டது. காந்தியடிகள் தாம் கற்ற பள்ளிப் படிப்பை எப்பொழுதும் பாராட்டிக் கூறியதில்லை. அக்காலப் பள்ளிப்படிப்புப் பயனற்றது என்று அடிக்கடி கூறுவார். தாம் பள்ளிப் படிப்பில் கற்றுக் கொண்டதைவிட நாடகங்களின் மூலம் கற்றுக் கொண்டதுதான் அதிகம் என்று குறிப்பிடுகிறார். அவருடைய இளமை வாழ்வைச் செப்பனிட்டுச் சத்தியத்தின் வழியில் செலுத்தக் காரணமாக இருந்தவை, சிரவணனின் பெற்றோரன்பு (சிரவண பித்ரு பத்தி நாடகம்) அரிச்சந்திரா என்ற இரு நாடகங்களே. [நம் அமரகவி பாரதியார் கூட, பெண்ணுரிமை பற்றி உணர்ச்சிமிகுந்த பாடல்களைப் பாடுவதற்கு, இளமையில் கண்ட 'பாஞ்சாலியின் துகிலுரிதல்' நாடகமே காரணம் என்று குறிப்பிடுகிறார்]

சிரவணன் என்பவன் ஒரு பார்ப்பனச் சிறுவன். அவனுடைய பெற்றோர்கள் முதுமையுற்றவர்கள்; கண்

இழந்தவர்கள். அவர்கள் புண்ணிய ஆறுகளில் நீராடிப் புனிதத்தலங்களை வழிபட விரும்பினர். உடனே சிரவணன் ஒரு காவடி கட்டி, அதன் இருபுறமும் பெற்றோர்களை ஏற்றிச் சுமந்து ஊர் ஊராகச் சென்றான். அவர்களுக்குப் பரிவோடு பணிவிடை செய்தான். இந்நாடகத்தைக் கண்ட காந்தியடிகளின் உள்ளம் உருகியது. தாமும் சிரவணனைப் போல் பெற்றோர்களுக்குப் பணிவிடை செய்ய வேண்டும் என்று உறுதிபூண்டார்.

சத்தியத்திற்காக அரிச்சந்திரன் பட்ட இன்னல்களை அறியாதார் யார்? நாடிழந்தான்; நகரிழந்தான்; பெற்ற மனைவியையும் உற்ற மகனையும் கடனுக்காக விற்றான்; உலகத்தை அடிமை கொண்டு அரியணை ஏறி ஆட்சி புரிந்தவன், கள்ளுண்ணும் புலையனுக்கு அடிமையானான். ஒரு பொய் கூறியிருந்தால் இத்துன்பங்களை அவன் அனுபவித்திருக்க வேண்டியதில்லை. ஆனால் சுடுகாட்டில் மகனின் பிணத்தைக் கண்டபோது கூட, சத்தியத்திலிருந்து அவன் உள்ளம் சிறிதுகூட அசைந்து கொடுக்கவில்லை. அரிச்சந்திரனின் வாய்மை அடிகளின் இளமையுள்ளத்தில் பசுமரத்தாணி போல் பதிந்து விட்டது.

"அரிச்சந்திரனைப் போல் நானும் ஏன் சத்தியவானாக இருக்கக் கூடாது? நானும் இனிப் பொய் பேசுவதில்லை; எவ்வளவு துன்பம் வந்தாலும் உண்மையே பேசுவேன்" என்று உறுதி பூண்டார். சத்தியத்தைக் காப்பாற்ற அரிச்சந்திரன் எவ்வளவு துன்பம் அனுபவித்தானோ அதை விடப் பதின் மடங்கு துன்பத்தைக் காந்தியடிகள் தம்முடைய வாழ்க்கையில் அனுபவித்தார். அரிச்சந்திரன் சத்தியத்திற்காக உயிரிழக்கவில்லை; ஆனால் அடிகள் உயிரையும் வழங்கினார். இனிச் சத்தியத்திற்கு எடுத்துக் காட்டாக அடிகளின் வாழ்க்கையில் நடந்த ஒரு சில நிகழ்ச்சிகளைக் காண்போம்.

* * *

அடிகளின் தந்தையாரான காபாகாந்தி இராசகோட்டையில் அரசாங்க வழக்குமன்ற உறுப்பினராகப் பணியாற்றிவந்தார். அச்சமயம் காந்தியார் இராசகோட்டை உயர்நிலைப் பள்ளியில் பயின்று வந்தார். கல்வித்துறைத் தணிக்கையாளர் திருவாளர் 'கைல்சு' என்பவர் பள்ளியைத் தணிக்கையிட வந்தார். காந்தியார் படித்த வகுப்பிற்குள் நுழைந்தார். ஐந்து ஆங்கிலச் சொற்களைச் சொல்லி எல்லா மாணவரையும் எழுதச் சொன்னார். அச்சொற்களில் கெட்டில் (Kettle) என்ற சொல் காந்தியாருக்கு எழுத வரவில்லை; தவருக எழுதினர். ஆசிரியருக்கோ அச்சம். மாணவர்கள் தவருக எழுதினல் வகுப்பாசிரியர் சரிவரச் சொல்லித்தரவில்லை என்று தணிக்கையாளர் குற்றம் சாட்டலாமல்லவா? ஆசிரியர் காந்தியாரின் அருகில் வந்தார். தம்முடைய செருப்புக் காலால், காந்தியாரின் காலை மிதித்துப் பக்கத்தில் அமர்ந்திருந்த பையனைப் பார்த்து எழுதுமாறு சாடை காட்டினர். ஆனல் காந்தியார் அவ்வாறு செய்யவில்லை. மறுநாள் ஆசிரியர் வகுப்புக்கு வந்ததும், காந்தியாரைப் பார்த்து, "நீ அதிமுட்டாளடா! பக்கத்து மாணவனைப் பார்த்தெழுதுமாறு நான் பலதடவை சைகை செய்தும் நீ புரிந்து கொள்ளவில்லை!" என்று கூறி நகையாடினர். ஆசிரியரின் கூற்று தவறுபட்டது என்று காந்தியார் எண்ணினர். வேறு ஒரு மாணவனைப் பார்த்து எழுதி, தாம் சரியாக எழுதிவிட்டதாகத் தணிக்கையாளரிடம் காண்பிப்பது பாவம்; சத்தியத்திற்கு மாருன செயல் என்று அவருடைய பிஞ்சுள்ளம் எண்ணியது.

* * *

காந்தியடிகள் பிறக்கும்போதே மகாத்மாவாகப் பிறக்கவில்லை. அவரும் நம்மைப்போல் சாதாரண மனிதராகவே பிறந்தார். நம்மைப்போல் அவரும் பல குற்றங்களைச் செய்தார். ஆனல் அவருக்கும் நமக்கும் ஒரு முக்கிய வேறுபாடுண்டு. அவர் அக் குற்றங்களையெல்லாம் உணர்ந்து

திருந்திஞர். ஆனல் நாம் குற்றம் என்று எதை உணரு கிருேமோ அதை விட்டுத் திருந்துவதில்லை; மேலும் மேலும் தொடர்ந்து செய்து கொண்டிருப்போம். காந்தியடிகள் குலத்தார், புலால் உணவு உண்ணும் வழக்கமில்லை. ஒரு கெட்ட நண்பனின் தொடர்பால், இவர் புலால் உண்ண ஆரம்பித்தார். ஆனல் புலால் உண்ட இரவு, வயிற்றில் ஆடு கத்துவதுபோல் இருக்குமாம். உடனே திடீரென்று விழித்து எழுந்துவிடுவாராம். தம்முடைய தவற்றுக்காக வருந்துவாராம். மேலும், புலால் உண்ட நாட்களில் அன்னையார் உணவு உண்ண அழைத்தால், "எனக்குப் பசிக்கவில்லை; வயிறு எப்படியோ இருக்கிறது; நண்பர் வீட்டில் சாப்பிட்டேன்" என்பன போன்ற பொய்களைக் கூற நேரிட்டதாம். புலால் உண்டதற்காகக் கூடக் காந்தி யார் அதிகம் வருந்தவில்லை. பெற்ற அன்னையிடம் பொய் கூற வேண்டியிருக்கிறதே என்பதற்காகப் பெரிதும் வருந் திஞர். இங்கிலாந்திற்குப் படிப்பதற்காகச் சென்றபொழுது, "புலால் உண்பதில்லை; மது அருந்துவதில்லை; பிற மாதரை அன்னையாகக் கருதுவேன்" என்று மூன்று வாக்குறுதிகளை அளித்து விட்டுச் சென்ருர். இங்கிலாந்து குளிர்நாடு; அங்குப் புலால் உண்ணுமல் வாழ்வது கடினம். அதனல் காந்தியார் எவ்வளவோ துன்பங்களுக்கும், நண்பர்களின் இகழ்ச்சிக்கும் ஆட்பட்டார். பல கல் தொலைவு நடந்து சென்று ஒருவேளைச் சைவ உணவு உண்டார். தாமே சமையல் செய்து சாப்பிட்டார். இந்திய நாட்டிலிருந்து சென்ற உயர்சாதி மாணவர்கள் கூடப் புலால் உணவு உண்டனர். ஆனல் காந்தியார் இறுதிவரையில் புலால் உணவைக் கையினலும் தீண்டவில்லை எனவே காந்தியடி களைப் புலால் உண்ணல் என்னும் குற்றத்திலிருந்து காத்தது சத்தியமே என்பதை அறியலாம்.

* * *

காந்தியடிகள் திருட்டுத்தனமாகப் புலால் உண்டது போலவே இளமையில் சுருட்டும் குடிக்கத் தொடங்கிஞர்.

சுருட்டு, சுவையாக இருக்கிறது என்பதற்காகவோ, அதன் மணத்தை விரும்பியோ காந்தியார் அப்பழக்கத்தை மேற் கொள்ளவில்லை. சுருட்டைக் குடித்துச் சுருள் சுருளாகப் புகைவிடுவதில், அவருக்கு ஓரலாதியான பற்று; அவ்வளவு தான். முதலில் பெரியவர்கள் குடித்தெறிந்த துண்டுச் சுருட்டுகளைப் பொறுக்கிக் குடிக்கத் தொடங்கினார். ஆனால் சுருட்டுத் துண்டு நினைத்தபொழுதெல்லாம் கிடைக்குமா? பெரியவர்கள் எப்பொழுது குடித்துவிட்டுப் போடுவார்கள் என்று எதிர்நோக்கி யிருக்க வேண்டும். அதெல்லாம் அடிகளுக்கு ஒத்துவரவில்லை. முழுச்சுருட்டே குடிக்கத் தொடங்கினார். ஆனால் முழுச்சுருட்டுக் குடிக்கக் காசு வேண்டுமே. வேலைக்காரர்களுக்குக் கொடுக்கும் 'இனும்' காசில் திருடத் தொடங்கினார். போதாதற்குத் திருட்டுச் சுருட்டுத் திருப்பணியில் தமையனாரும் நண்பர்களும் சேர்ந்து கொண்டார்கள். தனி வியாபாரம் கூட்டு வியாபாரமாகி விட்டது. சுருட்டு வாங்க நிறையக் கடன் பட்டார் காந்தியார். கடனை அடைக்க வழி தெரியாது விழித்தார். கடைசியாகத் தமையனாரின் தங்கக் காப்பி லிருந்து ஒரு சிறு துண்டை வெட்டி எடுத்து விற்றுக் கடன் காரர்களுக்குக் கொடுத்தார்.

அஞ்சி அஞ்சிச் சுருட்டுக் குடிப்பது அடிகளுக்கு வெறுப் பாக இருந்தது. பெரியவர்களைப் போல் சுதந்தரமாகச் சுருட்டுக் குடிக்க முடியவில்லையே என்று பெரிதும் வருந் தினார். நண்பர்களும் அப்படியே வருந்தினர். உடனே எல்லோருக்கும் வாழ்க்கையே வெறுத்து விட்டது. சுதந்தர மற்று அஞ்சி வாழ்வதை விடச் சாவதே மேல் என்று முடிவு செய்தனர். நேராகக் கேதார்ஜீ கோவிலுக்குச் சென்றனர். இறைவனை உள்ளத்தால் வணங்கி இறுதி விடை பெற்றனர். தற்கொலை செய்து கொள்ள நஞ்சு வேண்டுமல்லவா? ஊமத்தை விதையில் நஞ்சிருப்பதை அறிந்து, அதை எப்படியோ தேடிக் கொணர்ந்தனர்.

பின்னர் ஒரு தனி மூலையை நாடிச் சென்றனர். ஊமத்தை விதையை உண்ணத் தொடங்கும் போது, திடீரென்று அவர்களுக்கு உயிரின் மேல் அடங்காத ஆசை வந்து விட்டது. சுதந்திரமில்லா விட்டாலும் பரவாயில்லை; உயிர் வாழத்தான் வேண்டும் என்ற முடிவுக்கு வந்தனர். எல்லோரும் வீடு திரும்பி விட்டனர்.

இத் தற்கொலை நிகழ்ச்சி மற்றவர்கள் உள்ளத்தில் மறைந்து, தேய்ந்த கனவாகி விட்டது. ஆனால் காந்தியடிகளின் உள்ளத்தில் முள்போல் உறுத்திக் கொண்டிருந்தது. குற்றத்தைத் தந்தையிடம் எடுத்துக் கூறி மன்னிப்புப் பெற்றாலன்றி, அவருடைய உள்ளத்தில் நிம்மதி ஏற்படாது போல் தோன்றியது. உடனே தாம் திருட்டுத்தனமாகச் செய்த குற்றங்களை யெல்லாம் ஒரு தாளில் எழுதினார். நோய்வாய்ப்பட்டுப் படுக்கையில் படுத்திருந்த தம் தந்தையிடம் சென்றார். அவரிடத்தில் அத் தாளைக் கொடுத்து விட்டு அவருக்கெதிரிலிருந்த இருக்கையில் தலைகுனிந்த வண்ணம் உட்கார்ந்து கொண்டார். அக் கடிதத்தின் இறுதியில், தம்மை மன்னிக்க வேண்டுமென்று அவர் குறிப்பிடவில்லை. தாம் செய்த குற்றங்களுக்குத் தக்க தண்டனை வழங்க வேண்டுமென்று அவர் வேண்டிக் கொண்டார். காபா காந்தி கடிதத்தைப் படித்தார். பிறகு நடந்தவற்றைக் காந்தியாரின் வாயாலேயே கேட்போம்.

"அவர் கடிதத்தை முற்றும் படித்தார். படிக்கும் போது அவர் கண்களிலிருந்து முத்து முத்தாகக் கண்ணீர் துளித்து வழிந்தது. கடிதமும் நனைந்து போயிற்று; ஒரு கண நேரம் அவர் கண்ணை மூடிச் சிந்தனையில் ஆழ்ந்தார்; பின்னர்க் கடிதத்தைக் கிழித்துப் போட்டார். கடிதத்தைப் படிப்பதற்காக எழுந்து உட்கார்ந்தவர் மீண்டும் படுத்துக் கொண்டார். நானும் அழலானேன். அவரது அளவிறந்த மனவேதனையை நான் உணர்ந்தேன். நான் ஓர் ஓவியக்

கலைஞனு யிருந்தால், அந்தக் காட்சியை அப்படியே இன்று படமாக எழுதி விடுவேன். இன்னும் என் மனக்கண்ணின் முன்பு அக்காட்சி அவ்வளவு தெளிவாகக் காணப்படுகிறது. அவ்வன்புக் கண்ணீர்த் துளிகளினுல் என் இதயம் தூய்மை பெற்றது; என் பாவம் நீங்கியது. அத்தகைய அன்பை அனுபவித்தோர் மட்டுமே அதன் ஆற்றலை உணர்தல் கூடும்.''

இந் நிகழ்ச்சியால், காந்தியடிகளுக்கு இளமையில் சத்தியத்தின்பால் ஏற்பட்டிருந்த பற்று விளங்கும். அதோடு மற்ருென்றையும் உணரலாம். வேறு ஒரு தந்தை யாக இருந்தால் மனமுருகி அழுதிருக்கமாட்டான். தடி எடுத்துக் குற்றம் செய்த தனயனைத் தாக்கி யிருப்பான். ஆனுல் காபா காந்தி, ஏன்? என்று தம் மகனை ஒரு சொல் கூடக் கேட்கவில்லை. தடியால் அடித்துச் சாதிக்க முடியாத தைத் தம் கண்ணீரால் — அகிம்சையால் — சாதித்து விட்டார் காபா காந்தி. தந்தையின் இச்செயலால் தாம் அகிம்சையின் ஆற்றலை அப்பொழுதே உணர்ந்து கொண்ட தாகக் காந்தியடிகள் கூறுகிருர்.

*   *   *

நாள் தோறும் பள்ளிவிட்டதும் காந்தியடிகள் நேராக வீட்டிற்குச் சென்றுவிடுவது வழக்கம். நோய்வாய்ப்பட்டுப் படுத்த படுக்கையாகக் கிடந்த தந்தைக்குப் பணிவிடை செய்வதற்காகவே அவர் சீக்கிரம் செல்வார். சனிக்கிழமை நாட்களில் காலையில் மட்டும் பள்ளி உண்டு. மாலை நான்கு மணிக்கு உடற்பயிற்சி வகுப்புக்குமட்டும் செல்லவேண்டும். ஓர் சனிக்கிழமைமாலை வானத்தை மேகம் மூடி மறைத்துக் கொண்டதால் நேரம் தெரியவில்லை. காந்தியார் தந்தையின் பணிவிடையிலேயே மெய்மறந்து இருந்து விட்டார். பள்ளிக்குச் சென்றபோது உடற்பயிற்சி வகுப்பு முடிந்து மாணவர்கள் வீடு திரும்பிவிட்டனர். திங்கட்கிழமை

காலை பள்ளிசென்றதும் தலைமையாசிரியர் காந்தியாரைக் கூப்பிட்டனுப்பினார். "ஏன் உடற்பயிற்சி வகுப்புக்கு வரவில்லை?" என்று கேட்டார்.

"வானத்தை மேகம் மறைத்துக் கொண்டதால் நேரம் தெரியவில்லை. என்னிடத்தில் கடிகாரமும் இல்லை. அதனால் வகுப்புக்குவரக் காலதாமதமாகி விட்டது" என்று உண்மையைக் கூறினார். ஆனால் தலைமையாசிரியர் அதை நம்பவில்லை. பொய் கூறியதாகக் கூறி, இரண்டணா தண்டம் விதித்தார். காந்தியார் உள்ளம் மிகவும் கலங்கினார். தண்டனைக்காக அவர் வருந்தவில்லை. தாம் பொய் கூறியதாகத் தலைமையாசிரியர் கடிந்துரைத்ததே அவர் உள்ளத்தை மிகவும் வருத்தியது.

* * *

காந்தியடிகள் இங்கிலாந்து நாட்டில் வழக்கறிஞர் கல்வி பயின்று கொண்டிருந்தபோது, இந்திய மாணவர்கள் நிறையபேர் அங்குப் பல துறைக்கல்வியும் பயின்று கொண்டிருந்தனர். திருமணம் செய்து கொண்டு கல்வி பயிலும் வழக்கம் ஆங்கில நாட்டில் கிடையாது. நம் நாட்டிலும் பண்டைக் காலங்களில் அப்படித்தான். பள்ளி வாழ்க்கையைப் 'பிரமச்சரியம்' என்று கூறும் வழக்கம் அதனால் தான் வந்தது. ஆனால் பத்தொன்பதாம் நூற்றாண்டில் இளமை மணம் இந்திய நாட்டில் மிகுதியாக நடந்து வந்தது. பிறந்தவுடனேயே குழந்தைகளுக்குத் திருமணம் செய்துவிடும் வழக்கம் இந்திய நாட்டில் இருந்தது என்று கூறினால் மிகையல்ல. இங்கிலாந்தில் கல்வி பயின்றுகொண்டிருந்த இந்திய இளைஞர்களில் பலர் திருமணமானவர்கள். ஆனால் தங்களைத் திருமணமானவர்கள் என்று கூறிக்கொள்ள அவர்கள் மிகவும் வெட்கப்பட்டார்கள். இதற்கு மற்றொரு காரணமும் உண்டு. இங்கிலாந்து சென்ற இந்திய மாணவர்கள் எல்லோரும் ஏதேனும் ஓர் ஆங்கிலக்

குடும்பத்திலேயோ அல்லது ஆங்கில இந்தியக் குடும்பத் திலேயோ தங்கிக் கல்வி பயில வேண்டியிருந்தது. அதுதான் சிக்கனமாகவும் வசதியாகவும் இருந்தது. இவர்கள் சேர்ந்து வாழும் குடும்பத்தில் திருமணமாகாத இளம் பெண்களும் இருப்பார்கள். ஆங்கில நாட்டுப் பெண்கள் உரிமை மிக்க வர்கள். தங்கள் கணவனைத் தாங்களே தேர்ந்தெடுத்துக் கொள்ளும் பழக்க முடையவர்கள். அவர்கள் தங்கள் இல்லத்தில் தங்கியிருக்கும் இந்திய இளைஞர்களுடன் நெருங்கிப் பழகுவார்கள்; உறவு கொள்வார்கள். அவர் களுடைய பெற்றோர்களும் அதை அனுமதித்தார்கள். தாங்கள் மணமானவர்கள் என்ற செய்தி தெரிந்துவிட்டால் இளம்பெண்களுடன் உலாவப் போகவும், கேளிக்கை நடத் தவும், தொடர்பு கொள்ளவும் இடமில்லாமல் போய் விடுமே என்பதற்காகவும் இந்தியஇளைஞர்கள் உண்மையை மறைத்தனர்; பொய் வாழ்வு வாழ்ந்தனர்.

இத்தொற்று நோய் காந்தியாரையும் பற்றிக் கொண்டது. காந்தியாருக்குப் பதின்மூன்றும் வயதிலேயே திருமணம் நடந்துவிட்டது. இந்துக்களின் வீட்டில் திருமணம் என்றால் பண்டைக் காலத்தில் சாதாரணமான காரியமல்ல. பல மாதங்களுக்கு முன்பிருந்தே பொருள் களைச் சேகரிக்கவும், துணிமணிகள் தயாரிக்கவும் நகைகள் செய்யவும் தொடங்கி விடுவார்கள். ஒரு மாதத்திற்கு முன் பிருந்தே விருந்துகளும் ஆர்ப்பாட்டங்களும் துவங்கிவிடும். ஆயிரக்கணக்கில் பொருள் செலவாகும். திருமணம் செய்தே ஓட்டாண்டியாகப் போனவர்கள் பலபேர். ஆகை யினால் ஒரே செலவாகப் போய்விடட்டும் என்று இரண்டு மூன்று திருமணங்களை ஒன்றாக நடத்திவிடுவார்கள். காந்தி யாருக்கும், அவருடைய தமையனாருக்கும், சிறிய தந்தை யின் மகனாருக்கும் ஆக மூன்று திருமணங்கள் ஒன்றாக நடந்தன. கஸ்தூரிபாய்க்கும் அப்போது வயது பதின்

மூன்றுதான். இவ்விளமை மணத்தைப்பற்றிக் காந்தியடிகள் பிற்கால வாழ்வில் வருந்திக் கூறுகிறார்.

காந்தியடிகள் இங்கிலாந்தில் படித்துக் கொண்டிருந்த போது, ஒரு ஆண் குழந்தையும் அவருக்கிருந்தது. இருந்தாலும் காந்தியடிகள் திருமணமாகாதவரைப் போல் நடிக்கத்தொடங்கி விட்டார். இப்பொய் வாழ்வினால் அவர் இன்பம் எதுவும் அடையவில்லை. இயற்கையாக அவரிடம் அமைந்திருந்த கூச்சம் இவ்வழியில் எல்லைமீறிப் போய் விடாமல் அவரைத் தடுத்தாட் கொண்டது.

இவர் தங்கியிருந்த வீட்டிலும் ஒரு மணமாகாத இளம் பெண் இருந்தாள். அவளுடன் இவர் உலாவச் செல்வது வழக்கம். அருகிலிருந்த குன்றின் உச்சிக்கு இருவரும் ஏறுவர். வழியெல்லாம் அவள் ஏதேதோ பேசிக் கொண்டு வருவாள். ஆனால் காந்தியார் 'ஆம்' அல்லது 'இல்லை' என்று மட்டும் விடையிறுப்பார். அதற்குமேல் அவளோடு சிரித்து மகிழ அவரால் முடியவில்லை. ஏதோ ஒவ்வொருசமயம் ஆகா! என்ன அழகானகாட்சி' என்று கூறுவார். அதற்கு மேல் பேச அவர் நா எழாது. காலில் குதி உயர்ந்த செருப் பணிந்திருந்தாலும் வில்லிலிருந்து புறப்பட்ட அம்புபோல் குன்றின் உச்சியிலிருந்து அடிவாரத்திற்குப் பறந்து ஓடுவாள். ஆனால் காந்தியார் உச்சியிலிருந்து இறங்குவதற்குத் தவிப்பார். அவள் அடிவாரத்திலிருந்து புன்னகை புரிவாள். "கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு வரட்டுமா?" என்று கூறிப் பரிகாசம் செய்வாள். அவர் அடிவாரத்தை அடைந்ததும் 'சபாஷ்' என்று கூறிச் சிரிப்பாள். காந்தியாருக்கு வெட்கமாக இருக்கும்

ஒரு நாள் ஒரு ஆங்கில மூதாட்டியோடு காந்தியாருக்கு உணவு விடுதியில் நட்பேற்பட்டது. பின் அந் நட்புரிமை முதிர்ந்தது. ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் அவ்வம்மையார் காந்தியடிகளை விருந்துண்ண அழைப்பது வழக்கம்.

காந்தியாரும் தவருமல் செல்லுவார். இவருடைய கூச்ச மானது நீங்குவதற்குப் பல இளம் பெண்களுடன் இவரை அறிமுகம் செய்து வைத்து உரையாடும்படி செய்வார். அவர்களில் ஒரு குமரியைக் குறிப்பிடவேண்டும். அவள் அம் மூதாட்டியுடன் வாழ்ந்து வந்தாள். அடிக்கடி காந்தி யாரும் அப்பெண்ணும் தனிமையில் விடப்பட்டனர். முதலில் காந்தியாருக்கு இது சிறிது தொல்லையாகப் பட்டது. பெண்களோடு பேசுவதே ஒரு தனிக்கலை. நகைச் சுவையோடு புகழ்ச்சியையும் அழகையும் கூட்டி அவர்கள் உள்ளத்தை மகிழ்விக்க வேண்டும். ஆனல் காந்தியாருக்கு அவ்வாறு பேச வரவில்லை. அம் மூதாட்டியார் அவ்வகை யில் இவருக்குப் பயிற்சி யளித்தார். இவரும் கற்றுக் கொண்டார். கொஞ்ச நாட்கள் சென்றதும் ஞாயிற்றுக் கிழமை எப்போது வரும் என்று ஆவலோடு எதிர்பார்க்கத் தொடங்கினர். அவ்விள மங்கையோடு உரையாடுவதில் இன்பங் கண்டார்.

அம்மூதாட்டி நாள் தோறும் தம் வலையை விசால மாக்கிக் கொண்டு வந்தார். காந்தியாரும் அம் மங்கையும் அடிக்கடி சந்திப்பதில் அம் மூதாட்டியார் அதிக அக்கறை காட்டினர். உடனே காந்தியடிகளுக்கு ஐயம் தோன்றலா யிற்று. தமக்கும் அப்பெண்ணுக்கும் திருமணம் செய்து வைக்க அவ்வம்மையார் முயற்சி செய்கிருர் என்பதை உணர்ந்தார். இனிமேல் உண்மையை மூடி மறைத்துப் பயனில்லை என்று உணர்ந்தார். உடனே அம்மூதாட்டி யாருக்குப் பின்வருமாறு ஒரு கடிதம் எழுதினர்.

“அன்புடையீர்! நாம் முதன் முதலில் சந்தித்த நாளி லிருந்து தாங்கள் என்னிடம் அளவுகடந்த அன்புகாட்டிவந் திருக்கிறீர்கள். என்னைத் தங்கள் மகனுகவே எண்ணி என் பொருட்டுக் கவலை எடுத்துக்கொண்டு வந்திருக்கிறீர்கள். எனக்கு மணம் செய்துவைக்க வேண்டுமென்று விரும்பி

அதற்காக இளம் பெண்களை எனக்கு அறிமுகம் செய்து வைத்து வருகிறீர்கள். ஆனால் காரியம் மிஞ்சிப்போவதற்குள், தங்கள் அன்புக்கு நான் அருகதையற்றவன் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். தங்கள் வீட்டுக்கு வரத் தொடங்கிய போதே நான் திருமணமானவன் என்பதைத் தெரிவித்திருக்க வேண்டும். இங்கிலாந்தில் இந்திய மாணவர்கள் திருமண மாகாதவர்போல் நடிப்பதை அறிந்து நானும் அவ்வாறு செய்து வந்தேன். என் தவற்றினை இப்போது உணருகிறேன். சிறுவனாக இருந்தபோதே எனக்கு மணமாகிவிட்டது. எனக்கு ஒரு மகனும் இருக்கிறான். இதுநாள் வரை இச்செய்திகளைத் தங்களுக்கு அறிவியாதிருந்ததன் பொருட்டு என் உள்ளம் வருந்துகிறது. இப்பொழுதேனும் உண்மையைச் சொல்லுவதற்கு இறைவன் எனக்கு மன உறுதி அளித்தது பற்றி மகிழ்ச்சியடைகிறேன். என்னைத் தாங்கள் மன்னிப்பீர்களா? எனக்குத் தாங்கள் அறிமுகம் செய்துவைத்த இளம் பெண்ணிடம் தகுதியற்ற உரிமை எதையும் நான் எடுத்துக் கொண்டதில்லையென்று உறுதி கூறுகிறேன். என்னுடைய எல்லை என்ன என்பதை உணர்ந்தே நடந்துகொண்டேன். நான் ஏற்கெனவே திருமணமானவன் என்பது தங்களுக்குத் தெரியாதாதலின், எங்களிருவருக்கும் மணம் செய்துவைக்க வேண்டுமென்று தாங்கள் விரும்பியது இயல்பே. நிலைமை எல்லை மீறிப்போகக்கூடாதென்பதற்காக உண்மையைக் கூறலானேன். இக்கடிதத்தைப் படித்தும் தங்கள் அன்புக்குத் தகுதியற்றவனாக நான் நடந்துகொண்டதாய்த் தாங்கள் கருதினால், அதற்காகத் தங்கள் மீது வருத்தப்படமாட்டேன். தாங்கள் இதுகாறும் என்னிடம் காட்டிவந்த பேரன்பிற்கும் செய்த உதவிக்கும் என்றென்றைக்கும் கடமைப்பட்டவனாவேன். இதற்குப் பிறகும் தாங்கள் என்னைப் புறக்கணிக்காமல், தங்கள் வீட்டுக்கு வரத் தகுதியுள்ளவனாகக் கருதினால் நான் மகிழ்ச்சியடைவேன் என்று

சொல்ல வேண்டுவதில்லை. தங்கள் அன்புக்கு இதை மற்றோர் அறிகுறியாகக் கருதுவதுடன், அவ்வன்புக்குஏற்ற வனாகவும் நடந்துகொள்வேன்.''

இக்கடிதத்தை எழுதி முடித்து அஞ்சல் நிலையத்தில் கொண்டுபோய்ச் சேர்த்தவுடன், காந்தியடிகளின் உள்ளத் தில் ஏற்பட்டிருந்த ஒரு பெருஞ்சுமை நீங்கியது போலிருந் தது. இரண்டு நாட்கள் கழித்து மூதாட்டியிடமிருந்து ஒரு கடிதம் வந்தது அது பின்வருமாறு.

''உண்மையறிவிக்கும் உமது கடிதம் பெற்றேன். நாங்கள் இருவரும் மிகவும் மகிழ்ச்சி யடைந்தோம். இடி இடியென்று சிரித்தோம். நீர் கூறும் பொய்மைக் குற்றம் மன்னிக்கற்பாலதே. ஆனால் உண்மை நிலையை எங்களுக்கு அறிவித்தது நலமேயாகும். உமக்கு நான் அனுப்பிய அழைப்பு இதனால் மாறுபடவில்லை. அடுத்த ஞாயிற்றுக் கிழமை கட்டாயமாக உம்மை எதிர்பார்க்கிறோம், உமது குழந்தை மனத்தைப்பற்றிய எல்லாச் செய்திகளையும் கேட்டுச் சிரித்து மகிழ ஆவல் கொண்டிருக்கிறோம். இந் நிகழ்ச்சியினால் நம் நட்புரிமை சிறிதும் பாதிக்கப்படவில்லை யென்று நான் உறுதி கூறுகிறேன்.''

இக்கடிதத்தைப் படித்த பிறகு அவருடைய உள்ளத் தில் அமைதி ஏற்பட்டது. அதன் பின்னர் அவசியம் நேர்ந்த போதெல்லாம் தாம் திருமணமானவர் என்பதை வெளியில் கூறத் தயங்கியதில்லை.

* * *

உண்மையைத் தம் உயிர் மூச்சாகக்கொண்ட காந்தி யடிகள், வழக்கறிஞர்த் தொழிலை எவ்வாறு செய்ய முடிந்தது என்பது பலருக்கு வியப்பாக இருக்கலாம். பொய்யைத் தன்னுடைய பேச்சு வன்மையால் மெய்யாக்கும் சொல்லாற்றல் மிக்க ஒருவன்தான் சிறந்த வக்கீலாக முடியும். அவன் வாயிலிருந்து வரும் ஒவ்வொரு சொல்லும்

உண்மையின் பிரதிபலிப்பு. அவன் நா அசைந்தால் நாடே அசைகிறது. அதனால்தான் வள்ளுவப் பெருந்தகையும், "விரைந்து தொழில் கேட்கும் ஞாலம் நிரந்தினிது சொல்லுதல் வல்லார்ப் பெறின்" என்று கூறினர். எத்தனையோ கொலைகாரர்களும், கள்வர்களும் சமுதாயத்தில் பெரு மதிப்போடு நிரபராதிகளாகத் திரிவதைக் கண்ணால் காண்கிறோம். குற்றமற்ற அப்பாவிகள் தூக்குமேடைக்கு அனுப்பப்படுவதையும் நாம் காண்கிறோம். இந்நிலை எவ்வாறு ஏற்பட்டது? யாரால் ஏற்பட்டது? வழக்கறிஞர்களால்! பொய்யை மெய்போலப் பேசக் கற்ற அவர்கள் பேச்சுத் திறமையால்! இத்தகைய தொழிலை, வாய்மையாளரான காந்தியடிகள் எவ்வாறு மேற்கொள்ள முடிந்தது என்பதைக் காண்போம்.

வழக்கறிஞர் தொழிலைத் திறம்படத் தம்மால் செய்ய முடியும் என்ற நம்பிக்கை காந்தியடிகளுக்கு ஆரம்பத்திலிருந்தே கிடையாது. வெளி நாடு சென்று படிக்கவேண்டும் என்ற பேரவாவும், சமுதாயத்தில் பாரிஸ்டர்களுக்கு இருந்த பெருமதிப்பே அவரை இங்கிலாந்து செல்லுமாறு தூண்டின. இந்திய நாட்டில் அக்காலத்து இரு பெரு வழக்கறிஞர்கள் பெரும்புகழோடு இருந்தனர். அவர்களில் ஒருவர் பிரோஸிஷாமேத்தா என்பவர், அவரைப் 'பம்பாயின் சிங்கம்' என்று எல்லோரும் அழைப்பர். அவருடைய திறமையின் ரகசியம் அவருக்குச் சட்டங்களிலிருந்த பேரறிவாகும். சாட்சியச் சட்டம் முழுதும் அவருக்குத் தலைகீழ்ப் பாடம். முப்பத்திரண்டாவது பிரிவு சம்பந்தமான எல்லா வழக்குகளையும் அவர் அறிவார். மற்ருெருவர் பட்ருடீன் தயாப்ஜீ. அவருடைய வாதத்திறமை வியத்தற்குரியது. நீதிபதிகளையும் வியப்பிலாழ்த்தும்வண்ணம் சட்ட நுணுக்கங்களை அள்ளி வீசிச் சொல்மழை பொழிவார். இத்தீரர்களின் கதைகளைக் கேட்டுக் காந்தியடிகளுக்கு மனத்தளர்ச்சி ஏற்பட்டது.

இங்கிலாந்தில் சிறந்த வழக்கறிஞராக விளங்கிய பிரடரிக் பிஸ்கட் என்பவரை ஒரு நாள் சந்தித்துக் காந்தியடிகள் உரையாடினர். வழக்கறிஞர் தொழிலைப்பற்றி அறிவுரை வழங்குமாறு அவரைக் கேட்டார். அவர் கன்சர்வேடிவ் கட்சியைச்சார்ந்தவராக இருந்தாலும் இந்திய மாணவர்கள் பால் அன்பு கொண்டவர். காந்தியடிகளின் கவலைகளைக் கேட்டு நகைத்தார். அவர் கூறியதாவது:—

"ஒவ்வொருவரும் பிரோஸிஷா மேத்தாவாக இருக்க வேண்டுமென்று நினைக்கின்றீரா? பிரோஸிஷாக்களும் பட்ருடின்களும் ஓரிருவரே இருக்க முடியும். சாதாரண வழக்கறிஞராக இருப்பதற்கு அத்தகைய வியத்தகு திறமை எதுவும் வேண்டியதில்லை. இதை உறுதியாக நம்பும். சாதாரண முயற்சியும் கண்ணியமும் இருந்தால் போதும், நம் வாழ்க்கைக்குரிய வருவாய் நிச்சயம் கிட்டும். வழக்குகள் எல்லாமே சிக்கல் உள்ளவைகளாக இரா. உமக்குரிய கவலை என்னவென்று எனக்குப் புரிகிறது. உமது பொதுப்படிப்பு மிகவும் சொற்பம். வழக்கறிஞர் தொழிலுக்குப் பொது அறிவு மிகவும் இன்றியமையாதது. உமக்கு அது தான் இல்லை. இந்திய வரலாறு கூட நீர் படித்ததில்லை. வழக்கறிஞர் தொழில் செய்பவனுக்கு மனிதப் பண்பைப் பற்றி நன்கு தெரிந்திருக்க வேண்டும். ஒரு மனிதனுடைய பண்புகளை அவன் முகத் தோற்றத்திலிருந்து அறியும் ஆற்றல் வேண்டும். மேலும் இந்தியன் ஒவ்வொருவனுக்கும் இந்திய வரலாறு தெரிய வேண்டாமா? வக்கீல் தொழிலுக்கும் அதற்கும் தொடர்பில்லை என்றாலும் வரலாற்றறிவு மிகவும் தேவை. 'கேயும்' 'மாலிசனும்' இயற்றிய 1857-ஆம் ஆண்டுச் சிப்பாய்க் கலகத்தைப் பற்றிய வரலாற்றைக் கூட நீர் படித்ததில்லை. உடனே அதை வாங்கிப்படியும். மனிதப்பண்பை முகத்தில் படித்தறிவதற்கு 'லவேடர்', 'ஷம்மல் பென்னிக்' என்பவர்கள் எழுதிய இரண்டு நூல்களையும் உடனே வாங்கிப்படியும்."

இவ்வாறு பல பேரறிஞர்களின் அறிவுரைகளைக் காந்தியடிகள் பெற்றிருந்தாலும் வழக்கறிஞர் தொழிலில் அவருக்குப் பிடிப்பு ஏற்படவில்லை. முதன் முதலாக அவர் எடுத்துக்கொண்ட வழக்கே அவருக்கு அவமானத்தை விளைவிப்பதாக முடிந்தது. வழக்கறிஞர் தொழிலுக்கு முழுக்குப் போட்டுவிட்டு விண்ணப்பம் எழுதுபவராகக் கொஞ்சநாள் காலம் கழித்தார்.

காந்தியடிகள் நடத்திய வழக்கறிஞர் தொழில் எந்த நிலைமையில் இருந்தது என்று அவருடைய தென்னாப்பிரிக்க நண்பர் திருவாளர் ஹென்றி எஸ். எல். போலக் என்பார் எழுதியுள்ளவற்றை இங்குக் குறிப்பிட விரும்புகிறேன்.

"திரான்ஸ்வால் உயர்நீதி மன்றத்தில் காந்தியார் வழக்கறிஞராகப் பணியாற்றி வந்தார். வழக்கறிஞர் கூட்டத்தில் அவருக்கு நல்ல மதிப்பு இருந்ததென்றும், வழக்கு மன்றமும் அவர்பால் பெருமதிப்புக் கொண்டிருந்ததென்றும் நான் கேள்விப்பட்டேன். தம்முடைய கட்சிக்காரன் தமக்குக் கொடுக்க வேண்டிய தொகையைக் கொடுக்காவிட்டால் அவனைத் திரும்பக் கேட்கும் வழக்கம் அவரிடம் இல்லையென்றும் அறிந்தேன். ஒரு வழக்கை எடுத்து நடத்தும்போது, அவ்வழக்கிற்குரிய கட்சிக்காரன் பொய் பேசித் தம்மை ஏமாற்றுவதாக அறிந்தால், காந்தியடிகள் அவ்வழக்கைத் தொடர்ந்து நடத்த மறுப்பதோடு, அவனிடம் பெற்ற பணத்தையும் திருப்பிக் கொடுத்து விடுவார். இந்த நிபந்தனையை முதலில் கூறிய பிறகே எந்த வழக்கையும் அவர் எடுத்துக் கொள்வார். வழக்கறிஞன் என்பவன் உண்மையின் பிரதிநிதியாக இருக்கவேண்டுமே தவிர ஏமாற்றுக்காரரின் பிரதிநிதியாக இருக்கக் கூடாது என்பது அவருடைய அசைக்க முடியாத கொள்கை. வழக்கை ஏற்று நீதிமன்றத்தில் நடத்திக் கொண்டிருக்கும் போது, தம் கட்சிக்காரன் உண்மைக்குப் புறம்பாக நடந்து

கொள்கிறான் என்பதை உணர்ந்தால், உடனே அவர் நீதிபதியிடம் மன்னிப்புப் பெறுவதோடு, வழக்குக் குறிப்புகளையும் வீசி எறிந்துவிட்டுச் சென்று விடுவார். இது போன்ற ஒரு நிகழ்ச்சியை நான் நேரில் கண்டிருக்கிறேன். சிக்கலான வழக்குகள் தம்மிடம் வரும்போது, அவ்வழக்கிற்குரிய இரு கட்சியினரையும் நேரில் வரவழைத்து, "நீங்கள் ஏன் வழக்குமன்றம் ஏறிப் பெரும்பொருளைப் பாழாக்குகின்றீர்கள். நீங்கள் சமாதானமாகப் போய் விட்டால் பொருளும் மிச்சமாகும்; தொல்லையும் ஒழியும்" என்று எடுத்துக் கூறுவார். தாதா அப்துல்லா கம்பெனியாரின் வழக்கு சம்பந்தமாகக் காந்தியடிகள் முதன் முதலாகத் தென் ஆப்பிரிக்கா வந்தார். பல்லாண்டுகள் நடந்து வந்த அவ்வழக்கை, இவர் சமாதான முறையிலே தீர்த்து வைத்தார். இவர் ஒரு பாரிஸ்டராக இருந்தாலும், ஆலோசகராகவே (Solicitor) பெரும்பாலும் தொழிலாற்றினார்."

திருவாளர் போலக் கூறும் இக்கூற்றுக்களை வைத்துக் கொண்டு ஆராய்ந்தால், வழக்கறிஞர் தொழில் புரியும் போதுகூடக் காந்தியடிகள் வாய்மையிலிருந்து அணுவும் தவறவில்லை என்பது புலனாகும். காந்தியடிகள் மாணாக்கராக இருந்தபோதே வழக்கறிஞர் தொழில் பொய்த் தொழில் எனக் கேள்விப்பட்டிருந்தார். இதை அவர் சிறிதும் பொருட்படுத்தவில்லை. ஏனெனில் பொய் சொல்லிப் பணமோ, உதவியோ தேடும் எண்ணம் அவருக்குக் கிடையாது. தாம் எடுத்துக்கொண்ட வழக்கிலுள்ள குற்றத்தைத் தாமே நீதிமன்றத்தில் எடுத்துக் கூறும் வழக்கறிஞரை எங்காவது கண்டிருக்கிறோமா? அவ்வாறு கூறும் வழக்கறிஞனைப் பைத்தியக்காரன் என்றுதான் உலக மக்கள் எண்ணுவர். காந்தியடிகள் ஒருமுறை தம்முடைய வழக்கிலுள்ள குற்றத்தை நீதிபதியிடம் எடுத்துக் கூறினார். எதிர்க்கட்சி வழக்கறிஞரும் நீதிபதியும் வியப்படைந்தனர். அவருடைய நேர்மையைப் பாராட்டி, அவர் எடுத்துக்

கொண்ட வழக்கு வெற்றியடையுமாறு நீதி வழங்கினர் நீதிபதி.

காந்தியடிகள் தென்னப்பிரிக்காவில் வாழ்ந்தபோது, அவர் கடைப்பிடித்து வந்த சத்தியத்திற்கு ஒரு பெருந்த சோதனை ஏற்பட்டது. திருவாளர் ரஸ்டம்ஜி என்பவர் ஒரு பாரசீக வணிகர்; பெருஞ்செல்வர்; காந்தியடிகளின் உயிர்த்தோழர். தென்னப்பிரிக்க இந்திய சமுதாயத்தில் பெருமதிப்புப் பெற்றவர். காந்தியடிகள் டர்பன் நகர வீதியில் ஒருமுறை குண்டர்களால் தாக்கப்பட்டு உயிருக்கு மன்றாடிக் கொண்டிருந்தபோது, தம் இல்லத்தில் அடைக் கலமளித்துக் காப்பாற்றிய பெருமை ரஸ்டம்ஜியையே சாரும்.

ஒருமுறை இந்த நண்பர் பெரும் சங்கடத்தில் மாட்டிக் கொண்டார். அவர், தம் உள்ளத்திலுள்ள எந்தச் செய்தி யையும் காந்தியடிகளிடம் மறைப்பது கிடையாது. சாதா ரணக் குடும்பக் காரியங்களுக்குக் கூடக் காந்தியடிகளின் அறிவுரையைக் கேட்பது அவர் வழக்கம். ஆனல் ரஸ்டம்ஜி ஒரு செய்தியை மட்டும் காந்தியாரிடம் சொல்லாமல் நீண்ட நாள் மறைத்து வந்தார். பம்பாயிலிருந்தும் கல்கத்தாவி லிருந்தும் கள்ளத்தனமாகப் பொருள்களைத் தென்னப்பிரிக் காவில் இறக்குமதி செய்யும் வழக்கம் அவருக்குண்டு. அதை மட்டும் அவர் காந்தியாரிடம் கூறியதில்லை. பலநாள் திருடன் ஒருநாள் அகப்படுவது திண்ணம். ரஸ்டம்ஜியும் ஒருநாள் அகப்பட்டுக் கொண்டார். அரசியலாரை ஏமாற் றிய குற்றத்திற்காக டர்பண் நீதிமன்றத்தில் அவர்மேல் வழக்குத்தொடர ஏற்பாடாகி யிருந்தது, ரஸ்டம்ஜி அலறி யடித்துக்கொண்டு காந்தியடிகளிடம் ஓடிவந்தார். இத் துன்பத்திலிருந்து தம்மை எவ்வாறேனும் காப்பாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

"உங்களைக் காப்பாற்றுவதும், காப்பாற்றுமல் விடு வதும் ஆண்டவன் கையிலிருக்கிறது. என்னுடைய வழி

எது என்று உங்களுக்குத் தெரியும். குற்றத்தை ஒப்புக் கொள்வதன் மூலமாகவே நான் உங்களைக் காப்பாற்ற முயற்சி செய்யக்கூடும்'' என்று காந்தியடிகள் கூறினார்.

இதைக்கேட்டு ரஸ்டம்ஜி மனங்குன்றிப் போனார். குற்றத்தை ஒப்புக் கொண்டால் சிறைசெல்ல வேண்டி நேருமே என்ற அச்சம் அவர் உள்ளத்தை வாட்டியது. இறுதியில் காந்தியடிகள் கூறும் அறிவுரையின்படி நடப்ப தாக ஒத்துக் கொண்டார். காந்தியடிகள் கூறிய அறிவுரை பின்வருமாறு :—

''இந்த வழக்கு நீதிமன்றத்துக்குப் போகக் கூடா தென்று நான் கருதுகிறேன். உங்கள்மேல் வழக்கு நடத்து வதோ, விட்டுவிடுவதோ, கடற்சுங்க அதிகாரியைப் பொறுத் தது. அவர் அட்டர்னி ஜெனரலின் அறிவுரையின்படி நடக்கவேண்டியவராவார். அவ்விருவரையும் நேரில் கண்டு பேச நான் ஒருப்படுகிறேன். அவர்கள் விதிக்கும் ஒறுப்புக் கட்டணத்தை(Fine)த் தாங்கள் செலுத்த ஒப்புக்கொள்ள வேண்டும். அநேகமாக அவர்கள் இதற்குச் சம்மதிக்கலாம். அப்படிச் சம்மதியாவிடில், தாங்கள் சிறைக்குச் செல்லச் சித்தமாயிருக்க வேண்டும். குற்றம் செய்வது மானக் கேட்டைத் தரக்கூடியதுதான். ஆனால் அதற்காகச் சிறை செல்வது மானக்கேடல்ல என்பது என் கொள்கை. மானக் கேட்டிற்குரிய செயல் ஏற்கனவே செய்தாகி விட்டது. சிறைவாசத்தை அக்குற்றத்திற்குரிய கழுவாயாகக் கருத வேண்டும். ஆனால் இனிமேல் கள்ளக்கடத்தல் செய்வ தில்லை என்று உறுதிகொள்வதே உண்மையான கழுவா யாகும்.''

காந்தியடிகள் கூறிய அறிவுரைகளை ரஸ்டம்ஜி அப்படியே ஏற்றுக் கொண்டார். அடிகளும் கடற்சுங்க அதிகாரியையும், அட்டர்னி ஜெனரலையும் நேரிற் கண்டு உண்மையை எடுத்துக் கூறினார். ரஸ்டம்ஜியின் வழக்கை

நீதிமன்றத்திற்கு எடுத்துச் செல்ல வேண்டாமென்று மன்றாடினார். இறுதியில் வெற்றியும் பெற்றார். வழக்கு சமாதான முறையில் தீர்த்து வைக்கப்பட்டது. ரஸ்டம்ஜி உண்மையை ஒப்புக்கொண்டு அவர்கள் விதித்த தண்டத்தைச் செலுத்தினார். இவ்வழக்கின் முழு விவரங்களையும் ஒரு தாளில் எழுதிக் கண்ணாடி போட்டுத் தம் வாணிப நிலயத்தில் எல்லோருடைய கண்ணிலும் படும்படி மாட்டி வைக்கும்படி ரஸ்டம்ஜிக்குக் காந்தியடிகள் கூறினார். ஏனென்றால் மற்ற வாணிகர்களுக்கும் அவருடைய செயல் ஒரு எச்சரிக்கையாக இருக்குமல்லவா?

ஒரு முறை ஜோகன்ஸ்பர்க் நீதிபதியின் முன்னிலையில் காந்தியார் ஒரு வழக்கை நடத்திக் கொண்டிருந்தார். அவருடைய கட்சிக்காரர் அவரை ஏமாற்றிவிட்டதாக அப்பொழுது அவருக்குப் புலப்பட்டது. சாட்சிக் கூண்டில் குறுக்கு விசாரணையின்போது, கட்சிக்காரர் விழித்துப் போய்விட்டார். எனவே, மேற்கொண்டு வாதம் எதுவும் செய்யாமல், அவ்வழக்கைத் தள்ளிவிடும்படி காந்தியடிகள் நீதிபதியைக் கேட்டுக்கொண்டார். எதிர்த்தரப்பு வழக்கறிஞர் வியப்படைந்தார். நீதிபதி மகிழ்ச்சி கொண்டார். தம்மிடம் பொய் வழக்குக் கொண்டு வந்ததற்காகக் காந்தியடிகள் கட்சிக்காரரைக் கண்டித்தார். அவருக்கு மாறாகத் தீர்ப்பு வழங்கும்படி நீதிபதியைக் கேட்டுக்கொண்டார். சத்தியத்தின்பால் இவர் கொண்டிருந்த பற்றை அறிந்த மற்ற வழக்கறிஞர்கள், காந்தியடிகளின்பால் அளவற்ற மதிப்பும் மரியாதையும் கொண்டனர்.

"வழக்கறிஞர் தொழிலில் என் நினைவுகள்" என்ற தலைப்பில், காந்தியடிகள் தம் வாழ்க்கை வரலாற்றில் குறிப்பிட்டுள்ள சில செய்திகளை இங்குக் குறிப்பிட விரும்புகிறேன். அவை பின்வருமாறு:

"தென்னாப்பிரிக்காவில் நான் வழக்கறிஞனாகத் தொழில் புரிந்துவந்தபோது, என்னுடைய உறுதி பலமுறை சோதனைக்குள்ளாயிற்று. எதிர்க்கட்சிக்காரர்கள், தங்கள் சாட்சிகளைச் சொல்லிக் கொடுத்துத் தயாரிக்கிறார்கள் என்று நான் அறிவேன். அத்தகைய வழக்குகளில், என் கட்சிக்காரனையோ அவன் சாட்சிகளையோ பொய்சொல்லச் செய்தால் வழக்கில் வெற்றியடைந்து விடலாம் என்று உறுதியாய் அறிவேன். எனினும் இத்தகைய கீழ்ச்செயலில் நான் எப்போதும் வீழ்ந்துபடவேயில்லை. என்னுடைய இதயத்தில், "என் கட்சிக்காரன் சார்பில் நேர்மை இருந்தால் மட்டுமே வெற்றிபெறவேண்டும்" என்று நான் எப்போதும் விரும்பி வந்தேன். ஊதியம் பேசிக் கொள்ளும் போது, வழக்கில் வெற்றிபெற்றால் இவ்வளவு என்பதாகப் பேசிக்கொண்டதேயில்லை. கட்சிக்காரன் வென்றாலும் தோற்றாலும் என்னுடைய ஊதியம் ஒன்றுதான். அதிகமோ குறைவோ பெற்றுக்கொள்வதில்லை.

புதிதாக வரும் ஒவ்வொரு கட்சிக்காரரிடமும், நான் பொய் வழக்கு எடுத்துக்கொள்ள மாட்டேனென்றும், சாட்சிகளுக்குச் சொல்லிக்கொடுத்துத் தயாரிப்பேனென்று எதிர்பார்க்கக் கூடாதென்றும் முதலிலேயே எச்சரிக்கை செய்துவிடுவேன். நாளடைவில் இச்செய்தி எங்கும் விளம்பரமாகி, என்னிடம் பொய் வழக்குகள் வருவதே நின்று விட்டன. என் கட்சிக்காரர்கள் சிலர், உண்மை வழக்குகளுக்கு மட்டும் என்னை வைத்துக்கொண்டு, ஐயத்துக்கிடமான வழக்குகளைப் பிறரிடம் கொடுப்பதுண்டு.

தொழில் முறையில் என்னுடைய அறியாமையை மறைக்கும் வழக்கம் என்னிடம் இல்லை. கட்சிக்காரர்களிடமாகட்டும், வழக்கறிஞர் நண்பர்களிடமாகட்டும்; எனக்குத் தெரியாததைத் தெரியாது என்று சொல்லிவிடுவேன். அத்தகைய சூழ்நிலைகளில் என் கட்சிக்காரரை வேறு வழக்

கறிஞரிடம் யோசனை கேட்கச் சொல்வேன். அல்லது அவர் என்னிடமே ஒப்படைப்பதாயிருந்தால், பெரிய வழக்கறிஞரின் துணையைத் தேட அவர் ஒப்புதலைப் பெறுவேன். இத்தகைய உண்மை நடக்கையால், கட்சிக்காரர்களின் அளவற்ற நம்பிக்கைக்கும் அன்புக்கும் நான் உரியவனானேன். இவ்வாறு நான் பெற்ற அன்பும் நம்பிக்கையும் பொது ஊழியத்தில் எனக்குப் பெரிதும் பயன்பட்டன."

* * *

காந்தியடிகள் தம் வாழ்க்கையில் பொய்யே புகன்றதில்லையா? அவர் பல முறை தன் நண்பர்களிடம் சிறுபொய் பேசியிருக்கிறாரே என்று சிலர் கூறலாம். அவர்களுக்கு வள்ளுவர் கூறிய, "பொய்ம்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த நன்மை பயக்குமெனின்" என்ற குறளைத்தான் விடையாகக் கூறவேண்டும். பிறருக்குத் தொல்லை கொடுக்கக்கூடாது என்பதற்காகவும், நன்மையின் பொருட்டும் அவர் பலமுறை பொய் பேசியிருக்கிறார். நோயினால் வருந்திக்கொண்டிருக்கும் போது, பிறருக்குத் தொல்லை கொடுக்கக்கூடாது என்பதற்காகத் தாம் நலமுடன் இருப்பதாகக் கூறுவார். ஒரு முறை காந்தியடிகள் பல்நோயால் வருந்திக் கொண்டிருந்தார். அப்போது டாக்டர் ஒருவர் அங்கு வந்தார். அடிகள் நோய் செய்யும் தம் பல்லைக் காட்டிப் பிடுங்கிவிடுமாறு கூறினார். ஆனால் அம்மருத்துவர் தமக்குப் பல்லைப்பற்றி யொன்றும் தெரியாதென்றும். ஒரு சிறந்த பல் மருத்துவரிடம் பல்லைக் காட்டி பிடுங்கிவிடுவது தான் சிறந்தது என்றும் கூறினார். ஆனால் அடிகள் அதற்கு ஒத்துக்கொள்ளவில்லை. அவரையே பிடுங்குமாறு கூறினார். வேறு வழியின்றி அம்மருத்துவரும் பிடுங்கிவிட்டார். பிடுங்கும்போது அடிகளின் முகத்தில் ஏற்பட்ட மாறுதல்களிலிருந்து, வலி மிகவும் அதிகமாக இருந்திருக்கும் என்பதை மருத்துவர் உணர்ந்தார். ஆனால் அடிகளோ சிறிது கூட வலியில்லை என்று கூறிச் சாதித்தார். ஒரு முறை அவர்

சீதபேதியால் வருந்திக்கொண்டிருந்தபோது, மருத்துவர் பல முறை கேட்டும் தாம் நலமாக இருப்பதாகவே கூறினார்; மருந்து உட்கொள்ளவும் மறுத்துவிட்டார்.

இராசகோட்டையில் சத்தியாக்கிரகம் நடந்துகொண்டிருந்தபோது மணிபென் படேலும், மிருதுலா சராபாய் ஆகிய இருவரும் சிறை செய்யப்பட்டனர். சத்தியாக்கிரகத்தைத் தொடர்ந்து நடத்துவதற்காகக் கஸ்தூரிபாய் இராசகோட்டைக்கு அனுப்பப்பட்டார். அச்சமயத்தில் ராமதாஸ் காந்தி (காந்தியடிகளின் மகன்) யின் ஆண் குழந்தையொன்றை கஸ்தூரிபாய் வளர்த்து வந்தார். கஸ்தூரிபாய் இராசகோட்டைக்குப் புறப்பட்டுச் சென்ற பிறகு, அக்குழந்தை "பாட்டி! பாட்டி" என்று அழத் தொடங்கிவிட்டது. அதன் அழுகையை நிறுத்தப் பலரும் பல வழியில் முயன்றனர்; பயனில்லை. காந்தியடிகளோ இடையறாத அலுவலில் மூழ்கியிருந்தார். இருந்தாலும் சிறுவனின் அழுகையை நிறுத்தாமல், அவரால் வேலையைத் தொடர்ந்து செய்ய முடியாதுபோலிருந்தது. உடனே அச்சிறுவனை எடுத்து மடியில் வைத்துக்கொண்டார். "பாட்டி வருவாள்; அழாதே கண்ணு!" என்று கூறினார். பையன் சிறிது நேரம் சிரித்துக்கொண்டிருந்தான்; மீண்டும் அழத் தொடங்கிவிட்டான். அடிகளின் உள்ளத்தில் ஒருயோசனை தோன்றியது. ஒரு துளசிமணி மாலையை எடுத்துச் சிறுவனின் கையில் கொடுத்தார். "பாட்டி! பாட்டி! என்று கூறிக்கொண்டே இம்மாலையை உருட்டு" என்றுசொன்னார். சிறுவனும் சிறிது நேரம் அவ்வாறே செய்தான். பிறகு கண்ணைத் திறந்தான். பாட்டியைக் காணவில்லை. "எங்கே பாட்டி?" என்று காந்தியடிகளைக் கேட்டான்.

"கண்ணு! துருவனின் கதையைக் கேட்டிருக்கிறாயா? அவன் கண்ணபிரானைக் காண எத்தனையோ ஆண்டுகள் கண் திறக்காமல் தியானம் செய்தான். நீ அதற்குள்ளாகக்

கண் திறந்துவிட்டாயே! அடிக்கடி கண்களைத் திறக்கக் கூடாது. மெய்மறந்து தியானத்தில் ஈடுபட வேண்டும்" என்று உபதேசம் செய்தார் காந்தியடிகள்.

சிறுவன் மீண்டும் கண்களை மூடிக்கொண்டு பாட்டியின் தியானத்தில் ஈடுபட்டான். இப்படியே இரண்டு நாட்கள் கழிந்தன. மூன்றும் நாள் சிறுவனைக் கஸ்தூரிபாயினிடம் கொண்டு சேர்க்க ஏற்பாடு செய்யப்பட்டது.

அடிகளின் இச் செயலை நாம் என்னவென்று கூறுவது? கஸ்தூரிபாய் சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டிருக்கிறார். அவர் திரும்பி வந்து இச் சிறுவனைச் சீக்கிரம் அடையப் போவதில்லை என்பது அடிகளுக்கும் தெரியும். ஆனால் அச்சிறுவனின் எண்ணத்தை வேறு பக்கம் திருப்பித் தொல்லையைக் குறைப்பதற்காக ஒரு பொய் சொன்னார். அவ்வளவுதான். இதைத்தான் "பொய்ம்மையும் வாய்மையிடத்த" என்றார் வள்ளுவர்.

* * *

"சத்தியத்தினும் சிறந்த சமயம் ஒன்றில்லை என்பது என் பிறழாத உறுதி."

"ஒரு நாணயத்தின் ஒருபக்க முத்திரை அன்பு. மற்றொருபக்க முத்திரை உண்மை."

"இவ்வுலகில் எவர்க்கும் யான் அஞ்சேன்; ஆண்டவன் ஒருவனுக்கே நான் அஞ்சி நடப்பேன்; எவரிடத்தும் பகை கொள்ளேன்; எவரது அநியாயத்துக்கும் இணங்கேன். பொய்ம்மையைச் சத்தியத்தால் வெல்வேன்; பொய்ம்மையோடுபோராட எல்லாத் துன்பங்களையும் ஏற்பேன்"— இவை காந்தியடிகள் சத்தியத்தைப்பற்றி உதிர்த்த முத்துக்கள்.

# 2. அஹிம்சை

காந்தியடிகள் உலகிற்கு வழங்கிச் சென்ற அரும் பொருள்—ஒப்பற்ற பொருள்—யாது என்று கேட்டால் அஹிம்சை என்று எல்லோரும் ஒருமுகமாகக் கூறுவர். ஆனால், இக்கொள்கை நம் நாட்டிற்குப் புதியதன்று. "அஹிம்சா பரமோ தர்ம" என்ற அருள்வாக்கை முதன் முதலில் உலகிற்கு வழங்கியவர் நம்நாட்டைச் சேர்ந்த விருஷப தேவர். அவருக்குப் பின் இக்கொள்கையை வற்புறுத்திய பெரியார்கள், புத்தரும் சோக்ரதரும், இயேசுவும், திருவள்ளுவரும், திருநாவுக்கரசரும் தால்ஸ் தாயும் ஆவர். திருவள்ளுவர், அன்புடைமை, அருளுடைமை, கொல்லாமை, புலால் மறுத்தல், கண்ணோட்டம், தவம், வெருவந்த செய்யாமை ஆகிய பல அதிகாரங்களில் இவ்வருளறத்தை வற்புறுத்திச் சொல்லுகின்றார். புத்த, சமண சமயங்கள் தோன்றி நம் நாட்டில் பரவி யிருந்த ஒரு சில நூற்றாண்டுகளில் அஹிம்சையானது, அச் சமயங்களைச் சார்ந்த துறவிகளால் மட்டும் கடைப்பிடித்து ஒழுகப்பட்ட ஒரு கொள்கையாக விளங்கியது. பின் அந் நிலையும் அழிந்து விட்டது. தற்காலத்தில் ஈவிரக்கமற்ற வட்டிக்கடைக்காரர்களாகச் சமணர்கள் விளங்குகிறார்கள். சீன நாட்டில் வாழ்ந்த பௌத்தக்குருமார்கள் கொடுமைக் கும், ஏமாற்றுக்கும் பெயர் பெற்றவர்களாக விளங்கினார்கள் என்று வரலாறு கூறுகிறது. நம் நாட்டிலும் சமண சமயத்தார், திருநாவுக்கரசர் போன்ற பெரியார்களுக்கு இழைத்த கொடுமைகளை அறிவோம்.

"ஒரு கன்னத்தில் அறைந்தால் மறு கன்னத்தைத் திருப்பிக் கொடு" என்ற இயேசுவின் அருள் மொழி, விவிலிய நூலுக்கே தனிச்சிறப்பைக் கொடுக்கும் உயர் மொழி. பரலோகத்திலுள்ள பரமபிதாவின் பெருமையைத்

துண்டுப் பிரசுரத்தில் அச்சிட்டு முச்சந்தியில் நின்று கொண்டு கிருத்தவசமயத்தைப் பரப்பும் சாதாரணப் பாதிரி முதல், 'வாடிகன் அரண்மனை*'யில் வீற்றிருக்கும் போப்பாண்டவர் வரை, இவ்வுயர் மொழியைக் கூறிப் பெருமையடையாதவர் எவருமிருக்க முடியாது. ஆனால் நடைமுறையில் காண்பதென்ன? இவ்வேசுவின் வழி நிற்கும் மேலை நாட்டுக் கிருத்தவரே, அணுகுண்டையும், நீர்வளிக் குண்டை (Hydrogen bomb)யும், கண்டத்தை விட்டுக் கண்டம் பாயும் பறக்கும் குண்டையும் உருவாக்கி உலகத்தைச் சுடுகாடாக்குகின்றனர். கிருத்தவ சமயத்தைச் சாராத பிறமக்களை 'அஞ்ஞானிகள்' என்று கூறுவதில் இவர்கள் இன்பம் காண்கின்றனர். திருவள்ளுவரையே ஒரு பாதிரியார் அஞ்ஞானி என்று கூசாமல் கூறுகிறார். அப்பாதிரி திருக்குறளைப் படித்தவர். அதன் உயர்வை உணர்ந்தவர். "திருவள்ளுவர் அஞ்ஞானியாக இருந்தாலும். அவர் நாக்கு மட்டும் நரகத்திற்குப் போகாது"* என்று அவர் திருவாய் மலர்ந்தருளுகிறார். அவர் ஏன் அவ்வாறு கூறினார் தெரியுமா? கிருத்தவரல்லாத பிறசமயத்தார் யாவரும் அஞ்ஞானிகள் என்பது கிருத்தவ சமயக் கொள்கை. அவர்களுக்குப் பரலோக சாம்ராஜ்யம் கிட்டாது என்பதும், அவர்களுடைய அசைக்க முடியாத கொள்கை. எனவே வேற்றுச் சமயத்தைச் சார்ந்த வள்ளுவர் நரகம் செல்வது உறுதி. ஆனால் உயர்ந்த அற நூலைப்பாடிய காரணத்தால் வள்ளுவருடைய நாக்குமட்டும் நரகத்திலிருந்து தப்பி வீடு பேற்றை அடையும் என்பது அப்பாதிரியாரின் அதிசயக் கண்டுபிடிப்பு. ஐரோப்பாவில் ஒரு சில நூற்றாண்டுகளுக்கு முன் கிருத்தவ சமயத்தின்

---

* வாடிகன் அரண்மனை (Vatican City) உரோமாபுரியின் ஒரு பகுதி. போப்பாண்டவர் வாழ்விடம்.

* Though Valluvar is a Heathen his tongue never go to hell.

பேரால், அச் சமயத்தின் தலைவர்களான புனித குருமார்களால் செய்யப்பட்ட கொடுமைகளுக்கு எல்லை யில்லை. மாதாகோவில்களில்—குறிப்பாகக் கத்தோலிக்கக் கோவில்களில்—தோட்டியின் மகள் (Scavenger's daughter) என்ற பெயரால் ஒரு இடுக்கி இருக்குமாம். கிருத்தவ சமயக் கொள்கைகளை நம்பாதவர்களையும், அக் கொள்கைகளுக்கு மாருக நடப்பவர்களையும் அவ்விடுக்கியில் வைத்து நசுக்குவார்களாம்; ஒரு பெரிய முள் பெட்டியில் போட்டு உருட்டுவார்களாம். நடுத் தெருவில் நாட்டப்பட்ட கம்பத்தில் கட்டித் தீயிட்டுக் கொளுத்துவார்களாம்; ஜோன் ஆப் ஆர்க் என்ற கள்ளங்கபடமற்ற சிறுமியைச் சூனியக்காரி என்று தீயிலிட்டுக் கொன்றவர்களும், கலிலியோ போன்ற அறிவியற் கலைஞர்களுக்கு அளப்பரும் இன்னலைக் கொடுத்தவர்களும் ஏசுவின் புதல்வர்களே. இயேசு வழங்கிய அஹிம்சை இவர்கள் கையில் செல்லாக் காசாகி விட்டது.

இவ்வாறு அஹிம்சை சீந்துவாரற்றுக் கிடந்த நிலையில் தான் காந்தியடிகள் தோன்றிஞர். துருப்பிடித்து மூலையில் கிடந்த அஹிம்சை என்னும் ஆயுதத்தை எடுத்தார்; துலக்கித் தூய்மைப்படுத்திஞர்; உலக அரங்கில் உயர்த்திப் பிடித்து அதன் பெருமையை உரக்கக் கூறிஞர். ஆனல் மக்கள் முதலில் கேளாத காதினராய் இருந்தனர். அடிகளைப் பித்தன் என்று கூறி நகையாடினர். காரணம் மக்கள் உள்ளம் பரம்பரை பரம்பரையாக இம்சையில் ஊறிப் போயிருந்தது. வில்லும் அம்பும், வேலும் வாளும், அணுகுண்டும் அவர்கள் வணங்கும் கடவுள்களாக விளங் கின. போரே மக்களின் கடமை என்று எண்ணினர். கிரேக்கரும் உரோமானியரும் போருக்கென்று தனிக் கடவுளர்களை நாட்டி வழிபட்டனர். போரில் வல்ல வீரனே, அச்சமுதாயங்களில் உயர் மதிப்புப் பெற்ருன். நம் நாட்டில் கூட, போரிட்டு மார்பில் விழுப்புண் படாத

நாட்களை வீரர்கள் வீணான நாட்களாகக் கருதினர்.* போரில் மறுபடியும் வீரன் வீரசுவர்க்கம் அடைவதாக எண்ணி இறுமாப்படைந்தனர். அலெக்சாந்தர், ஜூலியஸ் சீசர், செங்கிஸ்கான், நெப்போலியன், இட்லர் போன்ற போரரக்கர்கள் பெருவீரர்களாகக் கருதப்பட்டனர். அவர் புகழை, வரலாறு ஏடுகள் பொன்னெழுத்துக்களில் பொறித்தன. உலகத்தின் ஒவ்வொரு மூலையிலும் 'போர்! போர்' என்ற எதிரொலியே கேட்டது. ரஸ்கின் போன்ற பேரறிஞர்களும் போரைப் பாராட்டிப் பேசினர். போரினாலும், கொடிய போர்க் கருவிகளாலுமே, உலகில் அமைதியை நிலை நாட்ட முடியும் என்று அரசியல் வாதிக ளெல்லாம் தொண்டை கிழியக் கத்தினர். இரோசிமா, நாகசாகி என்ற இடங்களில் இரண்டு அணுகுண்டுகள் வீசப்பட்டன. பலகல் சுற்றளவுக்கு உயிரினமே இல் லாமல் அழிந்த சுடுகாடு ஏற்பட்டது. அக்குண்டு வீச் சினால் ஏற்பட்ட மின்கதிர்களால் அளப்பரும் இன்னல் கள் ஏற்பட்டன. பிறகு உலகமக்களின் கண் திறந்தது.

இந்நூற்றாண்டில் வாழ்ந்த ஐன்ஸ்டீனை நோக்கி, "மூன்றாம் உலகப் போரில் என்னென்ன போர்க்கருவிகள் பயன் படுத்தப்படும்?" என்று ஒரு நண்பர் கேட்டாராம். அதற்கு ஐன்ஸ்டீன், "மூன்றாம் உலகப் போரில் என்ன கருவிகள் பயன்படுத்தப்படும் என்று எனக்குத் தெரியாது. ஆனால் நான்காம் உலகப்போரில் கற்கருவிகளே பயன்படுத் தப்படும்" என்று கூறிச் சிரித்தாராம். மூன்றாம் உலகப் போர் ஏற்பட்டால் உலகமே அழிந்துவிடும். பிறகு மக்களினம் மீண்டும் தோன்றிக் கற்கால நாகரிகம் தொடங் கும் என்ற கருத்தில் அவர் கூறினார்.

---

விழுப்புண் படாதநாள் எல்லாம் வழுக்கினுள்
வைக்குந்தன் நாளை எடுத்து —குறள்

கோளாக் காதினராக விளங்கியவர்களும், காந்தியடிகளைப் பித்தர் என்று எள்ளி நகையாடியவர்களும் தம் காதுகளை இந்திய நாட்டின் சபர்மதி ஆசிரமத்தை நோக்கித் திருப்பினர். அதே சமயத்தில் மேலை நாட்டு அறிஞர்களான தால்ஸ்தாய், இரஸ்ஸல், பெர்னுடுஷா போன்றவர்களும் போரின் கொடுமைகளைக் கண்டித்தனர். காந்தியடிகள் கூறிய அஹிம்சைக் கொள்கை உலக மக்களுக்குக் கொஞ்சம் கொஞ்சமாகப் புரியத்தொடங்கியது. அஹிம்சை மகான்களின் படைக்கருவி என்று எண்ணிய காலமும் உண்டு. ஆனால் அக்கருவியைச் சாதாரண மக்களும் கையாளலாம் என்ற உண்மையை எடுத்துக் காட்டியவர் காந்தியடிகளே. உலகம் தோன்றிய நாளிலிருந்து, போரே அரசியல் அரங்கில் ஆதிக்கம் செலுத்திவந்தது. ஆனால் அஹிம்சையை அரசியலில் புகுத்தி வெற்றிகண்ட பெருமை காந்தியடிகளையே சாரும்.

இவ்வுயர்ந்த கொள்கையாகிய அஹிம்சை தம் வாழ்வில் எவ்வாறு இடம் பெற்றது என்பதைக் காந்தியடிகள் பல இடங்களில் விளக்கினார். அஹிம்சையை முதன்முதலில் தமக்குக் கற்றுக்கொடுத்த குரு, தம் மனைவியே என்று அவர் குறிப்பிடுகிறார்.

“என் விருப்பம்போல் என் மனைவியை நான் நடத்த முயன்றேன். அதனால் எனக்கு அஹிம்சைப் பயிற்சி உண்டாயிற்று. என் மனைவியிடம் இரண்டு பண்புகள் விளங்கின. ஒன்று என் கட்டளையை மறுப்பது; மற்றொன்று என் மடமையைப் பொறுமையால் சகிப்பது. இரண்டும் என் உள்ளத்தில் நின்று நின்று நாணத்தை எழுப்பின. அவ்வெழுச்சியால் மனைவியை என் வழியில் அடக்கியாளல் வேண்டும் என்ற எண்ணம் என்னைவிட்டு அகன்றது. அகன்றதும் என் மனைவி எனக்கு அஹிம்சை அறத்தை அறிவுறுத்தும் ஆசிரியையானாள். அவளது

பேச்சற்ற போதனை வளர்ந்து வளர்ந்து, சத்தியாக்கிரகமாக என்னுள்ளத்தில் மலர்ந்தது. தென்னாப்பிரிக்கா முதலிய இடங்களில் நான் புரிந்த சத்தியாக்கிரகப் போர்களுக்கு ஊற்றாக அமைந்தது, நான் என் மனைவியிடம் பயின்ற அஹிம்சையே."

காந்தியடிகள் பல சமய நூல்களையும் பயின்றவர். கீதையைத் தம் வழிகாட்டியாகக் கொண்டவர். ஆனால் அஹிம்சையின்பால் தமக்குப் பிடிப்பு ஏற்படக்காரணமாக இருந்தது ஏசுநாதர் அருளிய மலைச் சொற்பொழிவே (Sermons on the Mount) என்று அடிகள் குறிப்பிடுகிறார்.

"அஹிம்சை என்பது பிறருக்குத் துன்பம் செய்யாதிருத்தல் மட்டுமன்று; தனக்குப் பிறர் துன்பம் செய்யும் போது, அவர் மீது வஞ்சினம் கொள்ளாது, அக்கொடுமையிலிருந்து அவரைக் காக்கவேண்டி, அவர்பால் அன்பு கொண்டு துன்பம் பொறுத்தலும் அஹிம்சையின்பாற் பட்டது. அஹிம்சையாவது அயராத அன்பு. அதுவே செந்நெறி அதன் வாயிலாகவே மக்களினத்தைக் காத்தல் இயலும். அஹிம்சை தாழ்மையில் கொண்டு போய்விடும். அஹிம்சை கடவுள் சார்புடையது. அவருடைய துணையைப் பெறவேண்டுமானால் தாழ்மையோடும் கசிவோடும் அவர்பால் அணுக வேண்டும். சிந்தும் குருதி நம்முடையதாக இருக்க வேண்டும். பிறரது குருதியைச் சிந்தாமல், பிறர் வாளால் இறக்கத் துணியும் வீரத்தில் அஹிம்சையுண்டு" என்று அடிகள் விளக்கம் கூறுகிறார்,

* * *

அடிகள் தென்னாப்பிரிக்காவில் வாழ்ந்தபோது, முதன் முதலாக அஹிம்சை அவருள்ளத்தில் மலர்ந்தது. காந்தியடிகள் தென்னாப்பிரிக்கா சென்ற புதிதில் ஒரு முறை பிரிட்டோரியாவுக்குச் செல்லவேண்டி நேரிட்டது. தென்னாப்பிரிக்காவில் கறுப்பர்கள் முதல் வகுப்பில் புகை

வண்டிப் பிரயாணம் செய்ய அநுமதிக்கப்படுவதில்லை. ஆனால் காந்தியடிகள் ஒரு முதல்வகுப்பு டிக்கெட் வாங்கிக் கொண்டு புகைவண்டியில் ஏறினார். வண்டி நேட்டாலின் தலைநகரமாகிய மேரிட்ஸ்பர்க்கை அடைந்தது. ஒரு வெள்ளைக்காரர் காந்தியடிகள் அமர்ந்திருந்த பெட்டியில் ஏறினார். கறுப்பு மனிதர் ஒருவர் முதல்வகுப்புப் பெட்டியில் உட்கார்ந்திருந்ததைப் பார்த்ததும் அவருடைய உள்ளம் பெரும் சங்கடத்திற்குள்ளாகிவிட்டது போலும். ஏதோ ஒரு நச்சுப்பூச்சியைப் அருவருப்போடு பார்ப்பது போல் அடிகளை உற்றுப் பார்த்தார். உடனே அவர் வெளியே சென்று இரண்டு இரயில்வே அதிகாரிகளை அழைத்து வந்தார். எல்லோரும் காந்தியாரை உற்றுப் பார்த்துக்கொண்டு நின்றார்கள். கடைசியில் மற்றொரு அதிகாரி வந்தார். அவர் அடிகளை நோக்கி, "கீழே இறங்கு, சாமான் வண்டியில் போய் ஏறிக்கொள்" என்று கூறினார்.

"என்னிடம் முதல் வகுப்பு டிக்கட் இருக்கிறது ஐயா" என்று தாழ்மையாகச் சொன்னார் காந்தியடிகள்.

"அக்கறையில்லை. நீ போய்ச் சாமான் வண்டியிலே தான் ஏறிக்கொள்ள வேண்டும். இந்த வண்டியில் உனக்கு இடம் கிடையாது" என்றார் அவ் வதிகாரி.

"டர்பனில் இந்த வண்டியில்தான் எனக்கு இடமளிக்கப்பட்டது. இதிலேதான் நான் பயணம் செய்வேன்" என்று உறுதியான குரலில் விடையிறுத்தார் அடிகள்.

அடிகளின் உறுதியான மறுப்புரையைக் கேட்ட வெள்ளைக்கார அதிகாரிக்குச் சினம் பொத்துக்கொண்டு வந்துவிட்டது. கண்கள் சிவந்தன; மீசை துடித்தது. கேவலம் ஒரு கறுப்பன் தன்னை எதிர்த்துப் பேசுவதா? என்ற எண்ணம் அவருள்ளத்தில் பொங்கி எழுந்தது.

"மரியாதையாகச் சொல்லுகிறேன். இவ்வண்டியை விட்டு இறங்குகிறாயா? அல்லது போலீஸ்காரனை அழைத்து

வெளியே தள்ளச் சொல்லட்டுமா?" என்று சீறினார் அதிகாரி.

"நல்லது! போலீஸ்காரன் வரட்டும். நானாக இந்த வண்டியிலிருந்து நகரப்போவதில்லை" என்றார் காந்தி.

இரயில்வே அதிகாரி கூறியது வெறும் மிரட்டலல்ல, உண்மையாகவே போலீஸ்காரன் வந்தான். காந்தியடிகளின் கையைப் பிடித்து இழுத்து வெளியில் தள்ளினான். அவருடைய பெட்டி படுக்கைகளும் வெளியில் வீசி எறியப் பட்டன. எடுத்தெறியப்பட்ட சாமான்களில் கைப்பையை மட்டும் எடுத்துக்கொண்டு பிரயாணிகள் தங்கும் அறைக்குச் சென்றார். சாமான்களை யெல்லாம் இரயில்வே ஊழியர்கள் எடுத்து வைத்தனர்.

தென்னாப்பிரிக்கா குளிர்நாடு. மேலும் உயரமான பகுதிகளில் குளிர் மிகவும் கடுமையாக இருக்கும். மேரிட்ஸ் பர்க் மிகவும் உயரமான இடத்தில் அமைந்திருந்தது. பொறுக்கமுடியாத குளிர்; பனி கொட்டியது. அப்போது இரவு 9 மணி இருக்கும். எலும்பிலும் குத்திப் பாயும் கடுங்குளிரைத் தாங்கிய வண்ணம் நடுங்கிக்கொண்டே அங்கிருந்த இருட்டறையில் இரவைக் கழித்தார். குளிருக்குப் பயன்படும் கம்பளிக்கோட்டு பெட்டிக்குள் இருந்தது. அதையாவது எடுத்துவரலாம் என்று கிளம்பினார். ஆனால் அங்கும் ஒரு வெள்ளை உருவம் நின்றது. மீண்டும் அவமானத்திற்குள்ளாக நேரிடுமோ என்ற அச்சத்தால் பேசாமல் திரும்பிவந்துவிட்டார். அவர் உள்ளத்தில் பல எண்ண அலைகள் மோதின. அதை அடிகள் பின்வருமாறு வெளியிடுகிறார் :

"வண்டி ஓடியது. குளிர் என்னைக் குடைந்தது. தென்னாப்பிரிக்காவிலேயே தங்கி இந்தியரின் அடிமை விலங்கைத் தகர்த்தெறியப் போராடுவதா? அல்லது தாய் நாட்டிற்கே திரும்பி விடுவதா? என்ற எண்ணத்தில் என்

உள்ளம் ஊசலாடியது. அப்பொழுதுதான் எனது வாழ்வில் படிந்து கிடந்த அஹிம்சை செயலில் மலர்ந்தது.''

*     *     *

காந்தியடிகள் தென்னுப்பிரிக்காவில் வாழ்ந்த காலத்தில், டர்பன் நகரிலிருந்து பிரிடோரியாவுக்கு நெடுகிலும் புகைவண்டிப் பாதை கிடையாது. டர்பனிலிருந்து சார்லஸ் டவுனுக்குப் புகை வண்டியில் சென்று, அங்கிருந்து ஜோகன்னஸ்பர்க்கிற்கு குதிரை வண்டியில் செல்ல வேண்டும். ஜோகன்னஸ்பர்க்கில் மீண்டும் புகை வண்டி ஏறிச் செல்ல வேண்டும். அடிகள் சார்லஸ் டவுனில் இறங்கினுர். அவரிடம் பீடனுக் (குதிரை வண்டி) குரிய டிக்கட் இருந்தது. வண்டியின் தலைவன் நிறத் திமிர் பிடித்த ஒரு வெள்ளையன். அவன் காந்தியாரைக் கண்டதும், ஒரு கறுப்பனை நம் வண்டியில் ஏற்றுவதா? என்று எண்ணினுன். ஏதேனும் சாக்குப் போக்குச் சொல்லிக் காந்தியடிகளை வண்டியில் ஏறவிடாமல் தடுக்க வேண்டும் என்று திட்டமிட்டான். ''உன்னுடைய பயணச் சீட்டு நேற்றையது. இன்று செல்லாது. அடுத்த வண்டியில் வா'' என்று கூறினுன்.

காந்தியடிகள் அச்சீட்டுச் செல்லும் என்ற காரணத்தை விளக்கிக் கூறித் தம்மை வண்டியில் அவசியம் ஏற்றிக் கொள்ளத்தான் வேண்டும் என்று வாதாடினுர். இவ்விடாக்கண்டரை ஏமாற்ற முடியாதென்பதை உணர்ந்த அவ்வண்டித் தலைவன் காந்தியாருக்கு வண்டியில் இடம் கொடுக்க வேண்டியதாயிற்று. ஆனுல் வண்டிக்குள் இடம் கொடுக்கவில்லை. வண்டியோட்டி (ஒரு நீக்ரோ) உட்காருமிடத்தில், வெளியிலேயே உட்காருமாறு சொன்னுன். அவனேடு வாதம் செய்தால் வீண் சச்சரவுக் கிடமாகும் என்பதை உணர்ந்த அடிகள், அந்த அவமானத்தைப் பொறுத்துக் கொண்டு வண்டியோட்டியின் அருகிலேயே அமர்ந்து கொண்டார். வண்டியும் புறப்பட்டது.

பிற்பகல் மூன்று மணி சுமாருக்கு வண்டி பர்தேகோப் என்ற இடத்தை அடைந்தது. உள்ளே இருந்த வண்டித் தலைவனுக்கு உல்லாசம் பிறந்து விட்டது. வெளியில் வந்து புகைப் பிடிக்க விரும்பினான். வண்டியோட்டி, காலை வைத்து ஏறுவதற்கு வண்டியில் ஒரு படி அமைந்திருந்தது. வண்டியோட்டியிடமிருந்து ஒரு கிழிந்த சாக்குத்துண்டை வாங்கி, அப் படியின் மேல் விரித்தான் தலைவன். அச் சாக்குத் துண்டு அழுக்கடைந்த கந்தல். அவன் காந்தியாரைப் பார்த்து, "ஏய்! சாமி!* இந்தப் படியின் மேல் உட்கார். நான் வண்டியோட்டியின் அருகில் அமர்ந்து புகைப் பிடிக்க வேண்டும்." என்று சொன்னான்.

இக் கொடுமைக்கு அடிபணிய காந்தியடிகளின் உள்ளம் இணங்கவில்லை. அவருடைய மான உணர்ச்சி தலை தூக்கி நின்றது. ஆனால் உள்ளத்துள் என்ன நேருமோ? என்ற அச்சம் தோன்றியது. அவருடைய உடலெல்லாம் நடுங்கியது. அவர் வண்டித் தலைவனைப் பார்த்து, "நீ நியாயமாக வண்டிக்குள் எனக்கு இடம் கொடுத்திருக்க வேண்டும். ஆனால் அவ்வாறு செய்யாமல் என்னை வெளியில் உட்காரச் சொன்னாய். அதை நான் பொறுத்துக் கொண்டேன். ஆனால் இப்போது உன் காலடியில்

---

* 'சாமி' என்ற சொல் தென்னாப்பிரிக்காவில் வாழ்ந்த இந்தியர்களுக்கு வெள்ளையர்களால் வழங்கப்பட்ட பொதுப் பெயர். தென்னாப்பிரிக்காவில் கூலிகளாகச் சென்ற இந்தியர்களில் பெரும்பாலோர் தமிழர். இராமசாமி, கந்தசாமி, பெரியசாமி, பெருமாள்சாமி என, அவர்கள் பெயர் பெரும்பாலும் அமைந்திருந்த காரணத்தால் 'சாமி' என்று அழைக்கப்பட்டனர். சில தைரியமான இந்தியர்கள், " 'சாமி' என்றால் 'எசமான்' என்று பொருள்: எங்களைச் சாமி என்று அழைக்கிறீர்களே! நாங்கள் உங்களுடைய எசமானா?" என்று துணிந்து கேட்டு விடுவார்கள். பிறகு அவர்களுடைய உயிர் தப்புவது ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம்.

உட்காரச் சொல்லுகிறாய். இக் கொடுமைக்கு நான் உடன் படமாட்டேன். உள்ளே வேண்டுமானால் எனக்கு இடங் கொடு. உன் விருப்பம் போல் இங்கு அமர்ந்து உல்லாசமாகப் புகைப் பிடி. ஆனால் படியில் மட்டும் உட்கார முடியாது'' என்று உறுதியான குரலில் சொன்னார்.

இவ்வாறு சொல்லிக் கொண்டிருக்கும்போதே அம் முரடன் காந்தியடிகளின் காதைப் பார்த்து ஓங்கி அறைந் தான்; கையைப்பற்றிக் கீழே இழுத்து விட முயன்றான். அடி களின் மனவுறுதி பெரும் சோதனைக்குள்ளாகியது. வண்டிப் பெட்டியின் பித்தளைக் கம்பிகளை உறுதியாகப் பற்றிக் கொண்டார். மணிக்கட்டே முறிந்து போனாலும் பிடித்த பிடியை மட்டும் விடுவதில்லை என்று முடிவுசெய்தார். அக் கொடியவன் அடிப்பதை நிறுத்தவில்லை; வாயில் வந்த படியெல்லாம் திட்டினான். அடிக்கும் அம்முரடனோ பெருந் தடியன். அடிபடும் மனிதரோ மிகவும் எளிய உருவத்தினர். இக் கொடுஞ் செயலை வண்டியின் உள்ளே இருந்து கண்ட வெள்ளையர்கள் காந்தியாரின் மேல் இரக்கம் கொண்டனர்.

''ஏன் அப்பா அவரை அடிக்கிறாய்? அவர் சொல்வது நியாயந்தானே. அங்கே இடமில்லாவிட்டால் உள்ளே வந்து உட்காரட்டும்'' என்று கூறினார்கள்.

''அதெல்லாம் முடியாது'' என்றான் அம்முரடன்.

என்றாலும் சிறிது வெட்கமடைந்து அடிப்பதை நிறுத்திவிட்டான். வண்டியோட்டியைப் படியில் அமர்த்தி விட்டு, வண்டியோட்டியின் இடத்தில் அவன் உட்கார்ந்து கொண்டான். வண்டி மறுபடியும் புறப்பட்டது.

காந்தியடிகளின் இதயம் வேகமாக அடித்துக்கொண் டது. பிரிட்டோரியாவுக்கு உயிரோடு போய்ச் சேருவோமா என்ற கவலையே உண்டாகி விட்டது. வண்டித் தலைவன் அடிக்கடி அவரைச் சினத்தோடு முறைத்துப் பார்ப்பதும், விரலை ஆட்டிக் கொண்டே ''இரு இரு! ஸ்டாண்டர்டன்

சென்றதும் உனக்குச் சரியான பாடம் கற்பிக்கிறேன்'' என்று உறுமுவதுமாயிருந்தான். இருள் சூழ்ந்த பிறகு வண்டி ஸ்டாண்டர்டனை அடைந்தது. வண்டி நின்ற இடத்தில் சில இந்தியர்கள் நின்று கொண்டிருந்தார்கள். அவர்களைக் கண்ட பிறகுதான் அடிகளின் உள்ளத்தில் சிறிது ஆறுதல் ஏற்பட்டது. பெருமூச்சுடன் வண்டியிலிருந்து இறங்கினார். உடனே அங்கிருந்த இந்தியர்கள் அடிகளைச் சூழ்ந்து கொண்டு வரவேற்றார்கள்.

* * *

பிரிடோரியாவில் காந்தியடிகள் வாழ்ந்து வந்த போது மாலை வேளைகளில் நாள்தோறும் உலாவச் செல்வது வழக்கம். சாலையின் இருமருங்கிலும் நடையாகச் செல்வோருக்கென்று கெட்டியான நடைபாதை அமைக்கப்பட்டிருக்கும். அப்பாதையின் வழியாகவே காந்தியடிகள் நாள்தோறும் நடந்து செல்வார். அவர் செல்லும் பாதையின் ஓரத்தில் பிரிடோரியாவின் பேரமைச்சர் திருவாளர் குரூகர் என்பாரின் வீடு அமைந்திருந்தது. அவ்வீடு மாளிகையன்று; எளிய தோற்றத்தையுடையது. எப்போதும் அதன் வாயிலில் ஒரு காவற்காரன் நின்று கொண்டிருப்பது வழக்கம். இதைக் கொண்டே அது ஒரு அமைச்சரின் வீடு என்று உணர்ந்து கொள்ள வேண்டும்.

நாள்தோறும் காந்தியடிகள் அவ்வழியாக நடந்து சென்றதை அக் காவல்காரன் பார்த்திருக்கிறான். ஒருநாள் திடீரென்று அவன் நிறத் திமிர் தலைவிரித்து ஆடத் தொடங்கிவிட்டது. ஒருகால், காவற்காரன் புதியவனாகவும் இருக்கலாம். நேராக அவன் காந்தியடிகளை நோக்கி ஓடி வந்தான். தன் செருப்புக் காலால் எட்டி உதைத்தான். "ஏய்! கருப்புக் கூலி! உனக்கு என்ன திமிர்! முதலமைச்சர் குடியிருக்கும் வீதியில் நடக்க உனக்கு என்ன துணிச்சல்'' என்று சீறினான். எதிர்பாராமல் உதைபட்ட காந்தியடிகள்

நடைபாதையின் கீழே போய் உருண்டு விழுந்தார். திடுக்கிட்ட உள்ளத்தோடு எழுந்து வந்தார். தம்மைத் தாக்கியதற்குரிய காரணம் யாது என்று காவற்காரனை வினவத் தொடங்கினார். அப்போது எதிர்ப்புறத்தில் குதிரைச் சவாரி செய்து கொண்டு ஒரு வெள்ளைக்கார நண்பர் அங்கு வந்தார்.

இச் செய்தி பத்திரிகையில் வெளியாயிற்று. இதை உணர்ந்த உலக அறிஞர்கள் காந்தியடிகளின் அஹிம்சையைப் பாராட்டினர். தால்ஸ்தாய், அடிகளின் அரும் பண்பை வியந்தார். அன்னிபெசண்ட் அம்மையார், அடிகளை, 'மகாத்மா' என்று பாராட்டினார். அன்றிலிருந்து அடிகள் 'மகாத்மா' என்ற பெயராலேயே உலக மக்களால் அழைக்கப் பெறுகிறார்.

* * *

"மிஸ்டர் காந்தி! நான் இங்கு நடந்த அக்கிரமத்தை நேரில் பார்த்துக் கொண்டுதான் வந்தேன். இவனை லேசில் விடக்கூடாது. நீர் இவன் மீது வழக்குத் தொடரும். நான் உங்கள் சார்பாகச் சாட்சி சொல்லுகிறேன்" என்று கூறினார். ஆனால் அப்போது காந்தியடிகள் என்ன கூறினார் தெரியுமா?

"இதில் வழக்குத் தொடர வேண்டிய அவசியமே இல்லை. அவன் ஆயிரக்கணக்கான இந்தியர்களிடம் நடந்து கொள்வது போலவே என்னிடமும் நடந்து கொண்டான். பாவம்! அவன் அறியாமையை நான் மன்னிக்கிறேன்" என்று காந்தியடிகள் கூறினார். முதல் வகுப்புப் பெட்டியிலிருந்து வெளியில் தள்ளப்பட்ட போதும், குதிரை வண்டித் தலைவனிடம் அடிபட்டபோதும் அவர்கள் மேல் அடிகள் எவ்வித நடவடிக்கையும் எடுத்துக் கொள்ளவில்லை. காரணம் அவர் உள்ளத்தில் படிந்திருந்த அஹிம்சையே. பிரிடோரியாவில் காவல்காரனின் காலால் உதைபட்ட

போது காந்தியடிகளுக்குத் தென்னாப்பிரிக்காவில் நல்ல செல்வாக்கு இருந்தது. அவர் பெயர் நன்கு விளம்பரமாகி யிருந்தது. அவர் விரும்பியிருந்தால் அக்காவற்காரனுக்குத் தக்க தண்டனை வாங்கிக் கொடுத்திருக்க முடியும். ஆனால் அவர் விரும்பவில்லை. இந் நிகழ்ச்சியைக் குறிப்பிடும்போது, அவர் அஹிம்சையைப்பற்றிச் சிறப்பாகக் கூறிய ஒரு விளக் கத்தை எடுத்துக் காட்டுவது பொருத்தமாக இருக்கும் என்று எண்ணுகிறேன். அது வருமாறு :—

"இம்சையிலும் அஹிம்சை விழுமியது. தண்டித்த லினும் மன்னித்தல் ஆண்டகைமை. மன்னிப்பு, வீரனை அணி செய்கிறது. தண்டிக்கும் அதிகாரம் உள்ளபோது மன்னிப்பதே மன்னிப்பதாகும். மன்னிப்பு என்பது முழு வல்லமையைக் கொண்டது."

*　　　*　　　*

ஜோகன்னஸ்பர்க்கில் 'ஆசிய இலாகா' என்ற ஒரு நிறுவனம் இருந்தது. ஆசிய இலாகாவில் அலுவல் புரிந் தவர்கள் வெள்ளையர்கள். அவர்கள் அளப்பரிய கொடுமை கள் புரிந்து வந்தனர். இந்தியர், சீனர் ஆகிய ஆசியாக் காரர்களைக் கசக்கிப் பிழிந்து கொண்டிருந்தனர். அந் நிறு வனத்தில் இலஞ்சப் பேய் தலைவிரித்தாடியது. டிரான்ஸ் வால் மாகாணத்தில் ஏற்கனவே வசித்தவர்களுக்கு, அம் மாகாணத்தில் நுழைய அனுமதிச்சீட்டுக் கிடைப்பதில்லை. உரிமையற்றவர்கள், நூறு பவுன் ஆசிய இலாகாவிற்கு இலஞ்சம் கொடுத்துவிட்டு எளிதில் நுழைந்து விடுவார்கள். இக்கொடுமைகள் பலரால் காந்தியடிகளிடம் முறையிடப் பட்டன.

காந்தியடிகள் ஆசிய இலாகாவின் இலஞ்சப் பேயை ஒழிப்பதற்காக முயற்சிகள் எடுத்துக் கொண்டார். தக்க சாட்சியங்களைத் தேடிச் சேர்த்தார். ஜோகன்னஸ்பர்க் போலீஸ் அதிகாரியிடம் முறையிட்டார். அவ்வதிகாரி

மிகவும் நல்லவர். நேர்மையுள்ளம் படைத்தவர். இலஞ்சம் வாங்கும் அதிகாரிகள்மேல் நடவடிக்கை எடுத்துக்கொள்வதாகக் கூறினார். ஆனால் அதே சமயத்தில் வேறொன்றையும் காந்தியாரிடம் சொன்னார். "ஆசிய இலாகா அதிகாரிகள் குற்றவாளிகள் என்று வழக்குமன்றத்தில் உண்மைப்படுத்தப்பட்டாலும் அவர்கள் தண்டனையிலிருந்து தப்பிவிட வழியுண்டு. ஏனெனில் ஜூரிகள் அவர்களுக்கு எதிராகத் தீர்ப்பு வழங்கமாட்டார்கள். வழக்கு மன்றத்தில் அமர்ந்திருக்கும் ஜூரிகள் வெள்ளையர்கள். ஆகையினால், வெள்ளையர்கள் வெள்ளையர்களுக்கு மாறாகத் தீர்ப்பளிக்க மாட்டார்கள். நாம் வழக்குத் தொடர்ந்தும் பயனில்லை." என்று கூறினார்.

காந்தியடிகள், முடிவைப்பற்றிக் கவலைப்படவில்லை. தம் கடமையைச் செய்வதில் கண்ணும் கருத்துமாயிருந்தார். "நாம் செய்ய வேண்டியதைச் செய்து விடுவோம். முடிவை ஆண்டவன் பொறுப்பில் விட்டு விடுவோம்" என்று கூறினார். உடனே போலீஸ் அதிகாரி ஆசிய இலாகாவைச் சேர்ந்த இரண்டு பேர் மீது "வாரண்டு" பிறப்பித்தார். அவ்விருவர் மீது சரியான சாட்சியங்கள் கிடைத்திருந்தன. இச் செய்தியைக் கேட்டதுமே, அவ்விருவரில் ஒருவர் திரான்ஸ்வால் மாகாணத்தை விட்டே ஓடிவிட்டார். பிறகு அவரும் கைப்பற்றிக் கொணரப்பட்டார். வழக்கு ஆரம்பமாயிற்று. அவர்கள் குற்றம் உண்மையென நிரூபிக்கப்பட்டது. இருந்தும் பயனென்ன? ஜூரிகள் விடுதலை செய்துவிட்டனர். வழக்கின் முடிவைக் கண்ட காந்தியடிகள், மனம் வருந்தினார். நீதியை நிலைநாட்ட வேண்டிய நீதிமன்றம், அநீதிக்கு ஆக்கமளித்தால் அவர் எவ்வாறு பொறுப்பார்? வழக்கறிஞர் தொழிலின் மீதே ஒருவகை வெறுப்பு அவருக்கு ஏற்பட்டது.

இருந்தாலும் அவர் முயற்சி வீண் போகவில்லை. அவர்கள் விடுதலை பெற்றாலும், குற்றவாளிகள் என்ற

உண்மை அரசாங்கத்தாருக்குப் புலப்பட்டு விட்டது. எனவே அவர்களை வேலையிலிருந்து நீக்கிவிட்டனர். வேலையை இழந்த அவ் வெள்ளையர் வயிற்றுப் பிழைப் புக்குத் திண்டாடினர். ஜோகன்னஸ்பர்க் நகரவை அலுவ லகத்தில் இரண்டு வேலைகள் காலியிருந்தன. அவற்றிற்கு விண்ணப்பம் செய்தனர். அவர்களுக்கு எதிராகக் காந்தி யடிகள் ஏதேனும் நடவடிக்கை எடுத்துக்கொண்டால், அந்த வேலைகள் கிடைக்காமல் போகலாம். அவ்விருவரின் நண்பர் ஒருவர், காந்தியடிகளிடம் அது சம்பந்தமாகப் பேச வந்தார். அவர்களுக்கு எதிராக எந்தவித நடவடிக்கையும் எடுத்துக்கொள்ள வேண்டாம் என்று கேட்டுக் கொண் டார்.

"அவர்களுடைய இலஞ்சம் வாங்கும் வழக்கத்தை நிறுத்தவே நான் விரும்பினேன். தனிப்பட்ட முறையில் அவர்கள் பேரில் எனக்கு எவ்வித வெறுப்பும் கிடையாது. அவர்கள் வேறு அலுவலில் அமர்ந்து நேர்மையோடு வாழ்க்கை நடத்துவதற்கு நான் ஏன் குறுக்கே நிற்க வேண்டும்?" என்று கூறினார் காந்தியடிகள். காந்தியடிகள் பால் படிந்திருந்த மன்னிக்கும் மனப்பண்புக்கு இதுவும் ஓர் எடுத்துக்காட்டாகும்.

* * *

பலாத்காரத்தாலும் தண்டனையாலும், ஒருவன் உள்ளத்தில் படிந்திருக்கும் குற்றத்தையும் தீமையையும் மாற்ற முடியாது. பலாத்காரத்தின் மூலமாகப் பெற்ற வெற்றி நிலையானதல்ல. அன்பினாலும் அஹிம்சையினாலும் பெற்ற வெற்றியே நிலைத்து நிற்கும். பிறருடைய குற்றத் தைப் போக்க அஹிம்சையை விடச் சிறந்த ஆயுதமில்லை. இக் கொள்கையைக் காந்தியடிகள் பல விடங்களில் உண்மைப்படுத்தி யிருக்கிறார்.

உருஷிய நாட்டுப் பேரறிஞரான லியோ தால்ஸ்தாய், "ஆண்டவன் நாடு உனக்குள்ளே" என்ற அரிய நூலொன்று

எழுதியிருக்கிறார். அந்நூலில் கூறப்படும் கொள்கைகள் காந்தியடிகளின் உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்தன. காந்தியடிகளின் வாழ்க்கையையே அந்நூல் மாற்றியமைத்து விட்டது என்று கூறலாம். காந்தியடிகளின் நெருங்கிய நண்பர்களுள் கல்லன்பேக் என்பவரும் ஒருவர். அவர் ஜெர்மானியர். அவர் 1100 ஏக்கர் நிலப்பரப்புள்ள ஒரு உழவுப் பண்ணையை வாங்கி யிருந்தார். அவ்விடத்தில் ''தால்ஸ்தாய் பண்ணை'', 1910-ஆம் ஆண்டு மே திங்கள் 10-ஆம் நாள், காந்தியடிகளால் துவக்கப்பட்டது. தால்ஸ் தாயின் மீது தாம் கொண்டிருந்த பெருமதிப்பின் காரண மாகவே காந்தியடிகள் அவ்வாறு பெயரிட்டார்.

சத்தியாக்கிரக இயக்கத்தில் ஈடுபட்டு, அல்லலுற்ற இந்தியக் குடும்பத்தினரெல்லாம் அப்பண்ணையில் காந்தியடிகள் குடியேற்றினார். எல்லோரையும் அதில் பாடுபடு மாறு செய்தார். அதில் கிடைத்த வருவாயைக் கொண்டு எல்லோரும் வாழ்க்கை நடத்தினர். தால்ஸ்தாய் பண்ணையில் வாலிபர்களும் கன்னியர்களும் நிறைய இருந்தனர். எல்லோரும் மனவேறுபாடு எதுவுமின்றி அன்பாய்ப் பழக வேண்டுமென்று அடிகள் விரும்பினார். இளமைக் கோளாறினால் எவ்விதத் தவறும் நேர்ந்து விடாது என்ற நம்பிக்கையும் அவருக்கிருந்தது. இருந்தாலும் அங்கு வசித்த இளம் பெண்களின் பாதுகாப்புக்குத் தாம் பொறுப்பு என்பதை உணர்ந்து, அவர்களுடைய நடவடிக்கைகளைக் கண்ணும் கருத்துமாகக் கவனித்து வந்தார்.

ஒருநாள் உள்ளத்திற்குக் கவலை தரும் நிகழ்ச்சியொன்று நடந்தது. பண்ணையில் வாழ்ந்த வாலிபர் சிலர் இரண்டு இளம் பெண்களிடம் சற்று எல்லைமீறிப் பரிகாசச் சொற்களைப் பேசிவிட்டனர். இது போன்ற நிகழ்ச்சி மறுபடியும் நேராமலிருப்பதற்கு என்ன வழி என்று அடிகள் சிந்தனை செய்தார். அந்த இளைஞர்களைக் கூப்பிட்டு அறிவுரை வழங்கினார். அத்தோடு அவர் மனம்

அமைதியுறவில்லை. ஒருநாள் இரவெல்லாம் தூங்காமல் சிந்தித்தார். அவருடைய உள்ளத்தில் ஒரு யோசனை வெளிப்பட்டது. கேலிப் பேச்சுப் பேச விரும்பும் இளைஞர் களுக்குச் சரியான முறையில் புத்தி புகட்டி எச்சரிக்கை செய்யக்கூடியதாக அந்த யோசனை அமைந்திருந்தது.

மறுநாள் காலையில் கேலிக்கு உள்ளான அவ்விரு பெண்களையும் அழைத்தார். "அருமைக் குழந்தைகளே! நேற்று உங்களைப் பார்த்துச் சில இளைஞர் கேலி செய்தன ரல்லவா? இதை எண்ணி நேற்று இரவெல்லாம் எனக்கு உறக்கமே வரவில்லை. அவர்களுக்குச் சரியான பாடம் கற்பிக்க வேண்டும். அப்பாடம் மற்றவர்களுக்கு எச்ச ரிக்கையாகவும் அமைய வேண்டும். இதற்காக உங்களை ஒரு தியாகம் செய்யும்படி கேட்கிறேன். உங்களுடைய தலையில் அழகாக நீண்டு வளர்ந்துள்ள கூந்தலை வெட்டி விட விரும்புகிறேன். அவ்வாறு வெட்டி விட்டால், உங்களைப் பார்க்கும் போதெல்லாம் தங்களுடைய தவற்றை நினைந்து அவ்விளைஞர்கள் வருந்துவார்கள். பண்ணையில் மீண்டும் இத்தகைய குற்றம் நேராது. பண்ணையின் நன்மைக்காக உங்களை இக்கடின சோதனைக்கு உட்படுத்த விரும்புகிறேன். உங்களுக்குச் சம்மதமா? என் வேண்டு கோளுக்காக இத் தியாகத்தை மேற்கொள்ளுவீர்களா?" என்று கேட்டார்.

கூந்தலை இழக்க எந்தப் பெண்தான் இசைவாள்? கூந்தலையே சிறந்த அழகுச் சாதனமாக இந்தியப் பெண்கள் கருதுவர். பலவிதமாக அதனை ஒப்பனை செய்து மகிழ்வர். எனவே அப்பெண்கள் சிறிது தயக்கம் காட்டினர். அந்தப் பெண்களின் தாய்மார்களோ திடுக்கிட்டனர். மகாத்மா அப் பெண்களைப் பார்த்து, "உங்களை நான் வற்புறுத்த விரும்பவில்லை, உங்களுக்கு விருப்பமில்லையென்றால் வேண்டாம்" என்று கூறி மறுபடியும் தம்முடைய நோக்கம் என்னவென்பதை விளக்கிக் கூறினர். இறுதியில் அப்

பெண்கள் இருவரும், "பாபு! உங்கள் விருப்பத்திற்கு மாறு பட்டு நாங்கள் நடக்க விரும்பவில்லை. தங்கள் கட்டளையின் படி நடக்கச் சித்தமாயிருக்கிறோம்" என்று கூறினர்.

அந் நிகழ்ச்சியைப்பற்றிக் காந்தியடிகள் பின்வருமாறு எழுதியுள்ளார்:—"இந் நிகழ்ச்சியை இன்று எழுதும் இதே கையால் கத்தரிக்கோலை எடுத்து, அழகிய அப் பெண்களின் கூந்தலை வெட்டி எறிந்தேன். அவ்விரு பெண்களும் அரும் பண்பு வாய்க்கப் பெற்றவர்கள்; அறிவிற் சிறந்தவர்கள். அவர்களில் ஒருத்தி இறந்து விட்டாள். மற்றொருத்தி இன்று ஒரு பெரிய குடும்பத்தின் தலைவியாக இருக்கிறாள். அவர்களுடைய கூந்தலை வெட்டிவிட்ட பிறகு, நான் நடத்தி வந்த வகுப்பில் அதன் காரணத்தை எடுத்து விளக்கமாகக் கூறினேன். இதனால் மிகவும் நல்ல பலன் ஏற்பட்டது. அதற்குப் பிறகு தால்ஸ்தாய் பண்ணையில் எந்தப் பெண்ணிடமும் யாரும் பரிகாசமாகப் பேசியது கிடையாது." இந் நிகழ்ச்சியில் நாம் அரிய உண்மையொன்று உணர்கிறோம். காந்தியடிகள் விரும்பி யிருந்தால் அவ்விளைஞர்களுக்குத் தண்டனை வழங்கியிருக்கலாம்; அல்லது பண்ணையை விட்டு வெளியேற்றியிருக்கலாம். ஆனால், அவ்வாறு செய்திருந்தால் எதிர்பார்த்த பலன் கிட்டியிருக்காது. அவர் அஹிம்சை வழியில் இளைஞர்களின் உள்ளத்தைத் தூய்மைப்படுத்தி விட்டார். பலாத்காரத்தால் அடைய முடியாத பெரும் வெற்றி இது.

*          *          *

அஹிம்சையானது ஒருவன்பால் படிந்து கிடக்கும் வெறி உணர்வை (பலாத்கார உணர்வை)ப் போக்கும் ஆற்றல் மிக்கது. இதற்குப் பல எடுத்துக்காட்டுகள் அடிகளின் வாழ்வில் காணப்படுகின்றன. காந்தியடிகள் எரவாடா சிறையில் தங்கியிருந்தபோது திருவாளர் குவின் என்ற ஓர் ஐரிஷ்காரர் சிறைக்காவலராக இருந்தார். அவர்

நாள்தோறும் மாலை வேளையில் தவறாது வந்து, காந்தியடிகளை நலன் விசாரித்துச் செல்வது வழக்கம். அடிக்கடி அடிகள்பால் அவர் உரையாடுவதும் உண்டு. ஒருநாள் திருவாளர் குவின் காந்தியாரை நோக்கி, "ஐயா! நான் தங்களிடம் குஜராத்தி கற்றுக்கொள்ள விரும்புகிறேன். எனக்குக் கற்றுக் கொடுக்கிறீரா?" என்று கேட்டார், அடிகளும் மகிழ்ச்சியுடன் ஒப்புக் கொண்டார். நாள் தோறும் மாலையில் குஜராத்தி வகுப்பு நடந்தது. சில நாட்களில் குவின் எரவாடாவிலிருந்து வேறிடத்துக்கு மாற்றப் பட்டார். அவர் புறப்படும் போது அடிகளிடம் வந்தார்.

"ஐயா! தயவு செய்து ஒருதாளில் தங்களுக்குப்பிடித்தமான குஜராத்திச் சொற்றொடர் ஒன்றை எழுதிக் கொடுங்கள். அதை நான் அடிக்கடி பார்த்துக் கொண்டிருக்க விரும்புகிறேன்" என்று கேட்டார். அடிகள், "சிறைக் கைதிகளிடம் அன்பு காட்டு. எல்லை மீறிச் சினம் கொள்ளும் நேரங்களில், சினத்தையடக்கிப் பொறுமை கொள்" என்று எழுதிக் கொடுத்தார்.

இதே குவின், விசாபூர் சிறைச்சாலையின் தலைமைக் காவலராகப் பணியாற்றி வந்த போது, குஜராத்தி அரசியற் கைதிகள் சிலர் அங்கு இருந்தனர். ஏதோ ஒரு காரணத்தால் குவினுக்கும் அவ்வரசியற் கைதிகளுக்கும் சச்சரவு ஏற்பட்டது. குவின் மிக்க சினம் கொண்டார். கைதிகளை அடக்கத் துப்பாக்கிப் பிரயோகம் செய்ய நினைந்தார். அச்சமயம் சட்டைப் பையில் கைவிட நேர்ந்த போது காந்தியடிகள் எழுதிக் கொடுத்த காகிதம் தட்டுப் பட்டது; எடுத்துப் படித்தார்; அவர் சினம் தணிந்தது; கைதிகளும் உயிர் தப்பினர்.

* * *

1934-ஆம் ஆண்டு மே திங்கள் காந்தியடிகள் அரிஜன முன்னேற்றத்தின் பொருட்டு வட இந்தியாவில் ஒரு

சுற்றுப் பயணம் நடத்தினார். அடிகளின் தீண்டாமை ஒழிப்புக் கொள்கையை விரும்பாத சனாதன இந்து இளைஞர்கள் பலர், சுவாமி லால்நாத் என்ற துறவியின் தலைமையில் ஒன்று கூடிக் காந்தியடிகளைப் பின்தொடர்ந்து சென்றனர். அடிகள் புகை வண்டியில் சென்ற போதும், பொதுக் கூட்டங்களில் பேசிய போதும், தங்களுடைய சுலோகங்களை உரக்கக் கூறிக் கலகம் செய்தனர். அடிகள் ஆஜ்மீர் நகரில் பொதுக் கூட்டத்திற்காகப் புறப்பட்டுக்கொண்டிருந்த சமயத்தில், யாரோ ஒருவர் சுவாமி லால்நாத்தைத் தலையில் அரிவாளால் வெட்டி விட்டார். படுகாயமடைந்த சுவாமியைத் தொண்டர்கள் காந்தியடிகளிடம் சுமந்து வந்தனர் சுவாமிகளின் காயத்திற்கு வேண்டிய முதலுதவிகளையெல்லாம் காந்தியடிகள் செய்தார். பிறகு தம்முடைய பாதுகாப்பின் கீழேயே சுவாமிகளை வைத்துக் கொண்டு மருத்துவம் செய்தார். பிறகு கராச்சிக்குப் புறப்பட்டார். லால்நாத்தும் அடிகளுடன் மார்வார் புகை வண்டிச் சந்திப்பு வரையிலும் சென்றார். காந்தியடிகள் லால்நாத்தோடு உரையாடல்கள் நிகழ்த்தினார். அவருடைய கொள்கைகளைப் பொறுமையுடன் கேட்டார். தம்முடைய கொள்கைகளையும் விளக்கிச் சொல்லி, அன்பால் அவர் உள்ளத்தை வென்றார்.

* * *

பாகிஸ்தானும் இந்திய யூனியனும் தனித் தனியே பிரிக்கப்பட்டு விட்டன. அச்சமயத்தில் இந்து முஸ்லீம் கலகமானது உச்ச நிலையில் இருந்தது. ஆயிரக்கணக்கான இந்துக்களும் முஸ்லீம்களும் தில்லி, நவகாளி, பஞ்சாப் ஆகிய இடங்களில் படுகொலை செய்யப்பட்டனர். நூறாயிரக் கணக்கான அகதிகள் இந்திய நாடெங்கிலும் சுற்றியலைந்து கொண்டிருந்தனர். கற்பழிக்கப்பட்ட கன்னிப் பெண்களின் கண்ணீர், சிந்து, கங்கை நதிகளின் வெள்ளப் பெருக்கோடு கலந்து ஓடியது. மகாத்மா கலகம்

நடந்த இடங்களுக்குச் சென்று அமைதியை நிலைநாட்டப் பெரு முயற்சியில் ஈடுபட்டிருந்தார். 6-8-47 புதன் கிழமை காலை, அடிகள் லாகூரிலிருந்து பாட்னுவுக்குப் புகை வண்டியில் சென்று கொண்டிருந்தார். வண்டி அமிருதசரஸ் நிலையத்தை அடைந்தது. காந்தியடிகள் முதலில் காஷ்மீர் சென்ற போது, இதே நிலையத்தில் சில குழப்பக்கார இளைஞர்கள் கையில் கருப்புக் கொடிகளைத் தாங்கிய வண்ணம், "காந்தியே! திரும்பிப்போ!" என்று கூச்சலிட்டனர். இவர்கள் இந்து மகா சபையைச் சார்ந்த இளைஞர்களாக இருக்கலாம்; அல்லது இசுலாமியர்களுக்குப் பாதுகாப்பளிக்கும் காந்தியடிகளின் செயலை வெறுத்த சாதி இந்துக்களாக இருக்கலாம். அக் கூச்சலைக் கேட்ட காந்தியடிகள் தம் இரு கண்களையும் மூடிக் கொண்டார்; இரு காதுகளையும் விரல்களால் பொத்திக் கொண்டார். இராம நாமத்தை அவர் வாய் ஜெபிக்கத் தொடங்கியது. கூச்சலிட்ட அவ்விளைஞர்களைத் தடுக்க அடிகள் எவ்வித முயற்சியும் எடுத்துக் கொள்ளவில்லை.

அதே இளைஞர்கள் இன்று அமிருதசரஸ் நிலையத்தில் கூடியிருந்தனர். ஆனால் குழப்பக்காரர்களாக அல்ல. அரிஜன நிதிக்காகத் திரட்டிய பண முடிப்புடன் அவ்விளைஞர்கள் காந்தியடிகளை அணுகி, அவர் அடிகளை வணங்கினர். "மகாத்மா வாழ்க!" என்ற வாழ்த்தொலி விண்ணைப் பிளந்தது. தங்கள் அறியாமையை மன்னிக்குமாறு அவ்விளைஞர்கள் அடிகளை வேண்டினர்.

"உங்களுடைய பெருமையை அறியாமல் நாங்கள் தவறு புரிந்து விட்டோம். நீங்கள் நான்கு நாட்களாக மேற்கொண்ட புனித யாத்திரை, இங்குள்ள மக்களின் மனப்பண்பை மாற்றி, நல்ல சூழ்நிலையை ஏற்படுத்தியிருக்கிறது" என்று கூறினர்.

"நடந்ததை மறந்து விடுங்கள். தவறான வழியில் இனிச் செல்லாதீர்கள்" என்று அன்புடன் அவ்விளைஞர்

களுக்கு அறிவுரை கூறினார் காந்தியடிகள். அஹிம்சையின் உயர்வுதான் என்னே! அவ்விளைஞர்கள் கருப்புக் கொடி காட்டிக் குழப்பம் விளைவித்த போது, காந்தியடிகள் சினங் கொண்டிருந்தாலோ, அல்லது போலீஸ்காரர்களை விட்டு அவர்கள் வாயை அடக்க முயற்சி செய்திருந்தாலோ நிலைமை தலை கீழாக மாறியிருக்கும்; அவ்விளைஞர்களின் உள்ளமும் மாறியிருக்காது.

* * *

நவகாளியில் இந்து-முஸ்லீம் கலகம் தீவிரமாக நடந்து கொண்டிருந்தது. குருதியாறு பெருக்கெடுத்து ஓடிக் கொண்டிருந்தது. காந்தியடிகள் நவகாளியில் அமைதியை நிலைநாட்டுவதற்காகப் புறப்பட்டார். ஆனால் கல்கத்தா விலும் கலவரம் மிகுந்திருப்பதைக் கேள்விப்பட்டு, நவகாளிப் பயணத்தை ஒத்தி வைத்துவிட்டுக் கல்கத்தாவில் இறங்கினார். கல்கத்தாவில் பெலிகட்டா என்பது ஒரு பகுதி' அது முஸ்லீம்கள் வாழ்ந்த பகுதி. அங்கிருந்த முஸ்லீம்கள் எல்லோரும் அடியோடு கொல்லப்பட்டனர். அப்பகுதி யிலிருந்த ஹைதரிமாளிகை என்ற கட்டிடத்தில் அடிகள் தங்குவதென்று முடிவாயிற்று.

அவ்வீடு தூய்மையற்றிருந்தது; வசதியற்றிருந்தது; பாதுகாப்பற்றிருந்தது. கதவுகளும், பல கணிகளும் உடைத்தெறியப்பட்டிருந்தன. அவ்வீடு தூய்மைப்படுத்தப் பட்டது. அடிகள் அதில் தங்கினார். 13-8-47—ஆம் நாள் காலையில் கலகக்கார இந்து இளைஞர்களின் கூட்ட மொன்று ஹைதரிமாளிகையை நோக்கி வந்தது. அவ்விளைஞர்கள் காந்தியடிகளைக் கண்டு "நீங்கள் ஏன் இங்கு வந்தீர்கள்? முஸ்லீம்களுக்கு இழைக்கப்பட்ட சிறு துன்பத்தைக் கேள்விப்பட்டவுடன், நீர் இங்கு ஓடோடியும் வந்திருக்கிறீரே! இந்துக்களுக்கு அளவற்ற இன்னல்கள் முஸ்லீம்களால் இழைக்கப்பட்ட காலத்தில் எங்கிருந்தீர்?"

என்று சரமாரியாகக் கேள்விகளைத் தொடுத்தனர். அப்போது சாகித் சாகிப் அங்கு வந்தார். ஆனால் அவ்விளைஞர்கள் அவரை உள்ளே நுழையக் கூடாது என்று கூறித்தடுத்து விட்டனர். சாகித் சாகிபை உணர்ச்சி வேகத்தில் அவ்விளைஞர்கள் கொன்று விடுவார்களோ என்று அஞ்சும் நிலைமை ஏற்பட்டது. காந்தியடிகள் நிர்மல்பாபுவை அனுப்பி அக்கலகக்காரர்களின் பிரதிநிதிகளை அழைத்து வருமாறு கூறினார். இரு இளைஞர்கள் உள்ளே வந்தார்கள். உரையாடல் தொடங்கியது.

"சென்ற ஆண்டில் முஸ்லீம்கள் பகுதியில் வாழ்ந்த இந்துக்களெல்லாம் படுகொலை செய்யப்பட்டனரே! அப்பொழுது ஏன் நீங்கள் வரவில்லை? ஆனால் இன்று முஸ்லீம்களுக்கு நேர்ந்த சிறு துன்பத்தைக் கேட்டவுடன் ஓடோடி வந்திருக்கிறீரே?" என்று கேட்டனர் அப்பிரதிநிதிகள்.

"சென்ற ஆண்டின் நிலைமை வேறு; இன்றைய நிலைமை வேறு. சென்ற ஆண்டில் நடந்த படுகொலைகளுக்கு முழுக்க முழுக்கப் பொறுப்பாளிகள் இஸ்லாமியர்களே என்பதை நான் ஒத்துக்கொள்கிறேன். ஆனால் பழைய தவறுகளை மனதில் வைத்துக் கொண்டு பழிவாங்க எண்ணலாமா? நான் இஸ்லாமியரின் நன்மையின் பொருட்டே இங்கு வரவில்லை நான் எல்லோருக்கும் நண்பன். எல்லோருக்கும் தொண்டு செய்வதே என் கடமை. கொலை செய்வதிலும் தீயிடுவதிலும் ஈடுபட்ட எல்லோரும்—எச்சமயத்தாராயினும் — அவர்களுடைய சமயத்திற்குத் துரோகம் செய்தவர்களாவார்கள். நவகாளியில் அமைதியை நிலைநாட்டுவதற்காக நான் செல்லுகிறேன். அப்பணியில் உயிரை விடவும் நான் தயாராக இருக்கிறேன். நீங்கள் விரும்பினால் என்னைக் காப்பாற்றலாம்; அல்லது கொன்றும் விடலாம். நான் கிழவன்; இன்னும் சில நாட்களே இவ்வுலகில் நான் வாழ முடியும். என் வாழ் நாட்களில் நான் எவ்வளவோ காரியங்களைச் செய்து முடித்து விட்டேன்.

நான், இந்து-முஸ்லீம் ஆகிய இரு சமுதாயத்தினருக்கும் ஊழியன் என்று எண்ணுகிறேன். நான் ஒரு வணிகன் (பனியா). நான் என்னுடைய வாணிபத்தைச் செய்து கொண்டிருக்கிறேன். பீகாரிலிருக்கும் இந்துக்களை நோக்கி, 'பழைய பகையுணர்ச்சியை உள்ளத்தில் கொண்டு, மீண்டும் கலகத்தைத் துவக்கி முஸ்லீம்களைக் கொலை செய்ய முயன்ருல் நான் உயிரை விட்டுவிடுவதெனை முடிவு செய்திருக்கிறேன்' என்று எச்சரிக்கை விடுகிறேன். அதே சமயத்தில் முஸ்லீம்களை நோக்கி, 'நீங்கள் நவகாளியில் மீண்டும் கலகத்தை ஆரம்பிக்க விரும்பிளுல் முதலில் என்னைக் கொன்று விடுங்கள்!' என்று கூறியிருக்கிறேன். நவகாளியில் அமைதியை நிலைநாட்டும் பணியில், சாகித் சாகிபும் குலாம்சர்வாரும் எனக்குத் துணையாகவிருக்கிருர்கள்" என்று காந்தியடிகள் அவ்விளைஞர்களுக்கு விளங்கக் கூறினர்.

அவ்விளைஞர்கள் அடிகளின் சொற்களை ஏற்றுக் கொள்ளவில்லை. "நாங்கள் இம்சையைப் பற்றியோ அஹிம்சையைப்பற்றியோ உங்களிடம் பாடம் கேட்பதற்காக வரவில்லை. நீங்கள் இவ்விடத்தை விட்டுச் சென்று விட வேண்டும். எந்த முஸ்லீமையும் பெலிய கட்டாவிற்குள் நுழைய விடமாட்டோம்" என்று கூறினர்.

"அப்படியானல் வகுப்புக் கலவரத்தைப் போக்கி அமைதியை உண்டாக்கும் பணியில் என்னைத் தலையிட வேண்டாம் என்று நீங்கள் கூறுகிறீர்களா? இப்பணியில் நீங்களும் எனக்கு ஒத்துழைப்பு நல்கினல், இந்துக்கள் இப்பொழுது நுழைய முடியாத பகுதிகளில், எவ்வித அச்சமும் இன்றி அமைதியோடு வாழத்தக்க மாற்றத்தை என்னல் செய்து காட்ட முடியும். சென்ற ஆண்டில் நடந்த நிகழ்ச்சிகளை மனதில் வைத்துக் கொண்டு, நிரந்தர எதிரிகளாக வாழ்வதில் யாது பயன்?" என்று அன்போடு கூறினர் காந்தியடிகள்.

அப்பொழுது பதினெட்டு வயது கூட நிரம்பாத ஒரு இளைஞன் அடிகளைப் பார்த்து, "சமயத்தாலும், பண்பாட்டாலும் வேறுபட்ட இரண்டு சமுதாயங்கள் ஓரிடத்தில் ஒன்றி வாழ்ந்ததாக உலக வரலாற்றில் எங்கும் காண முடியாது. இந்துக்களும் இஸ்லாமியர்களும் அடிக்கடி சண்டையிடுவதை நான் பிறந்த நாளிலிருந்து பார்த்துக் கொண்டிருக்கிறேன்" என்று கூறினான்.

அதைக் கேட்டுக் காந்தியடிகள் புன்முறுவல் பூத்தார். அவ்விளைஞனை நோக்கி, "தம்பி! நீ என்னை விட வயதில் முதிர்ந்தவனல்ல. இந்து சமயத்தைச் சார்ந்த சிறுவர்கள் இசுலாமியர்களை 'மாமா' என்று உறவு பாராட்டி அழைப்பதை நான் பலதடவை நேரில் பார்த்திருக்கிறேன். இரு சமுதாயனத்தினரும் வாணிப, சமுதாய நடவடிக்கைகளிலும் முக்கிய நிகழ்ச்சிகளிலும் நட்புறவோடு சேர்ந்து பணியாற்றுவதைக் கண்டிருக்கிறேன். என்னை இவ்விடத்திலிருந்து வெளியேற்ற வேண்டுமென்று நீங்கள் எண்ணுகிறீர்கள்; கட்டாயப்படுத்துகிறீர்கள். நான் எப்போதும் பலாத்காரத்தை எதிர்ப்பவன்; ஆகையினால் உங்கள் பிடிவாதத்திற்கு நான் ஒருபோதும் இணங்கமாட்டேன். நீங்கள் விரும்பினால் என் பணியைத் தடை செய்யலாம்; என்னைச் சிறை செய்யலாம்; ஏன்? கொன்றும் விடலாம். ஆனால் நான் வெளியிலிருந்து எவ்விதத் துணையையும் அழைக்கமாட்டேன். போலீசையோ பட்டாளத்தையோ கூப்பிடமாட்டேன். நான் இந்துக்களுக்கு எதிரி என்று நீங்கள் நினைக்கிறீர்கள். என் மனச் சாட்சிக்கு விரோதமில்லாமல் கூறுகிறேன்; நான் யாருக்கும் எதிரியல்ல. நான் தொடங்கியிருக்கும் பணி தவறானது என்று என் உள்ளம் ஏற்றுக் கொள்ளுமாறு, நீங்கள் எடுத்து விளக்கினால் நான் இவ்விடத்தை விட்டுச் சென்று விடுகிறேன். கடைசியாக உங்களுக்கு ஒன்று கூற விரும்புகிறேன். பெயராலும், செயலாலும், பண்பாட்டாலும், சமயத்தாலும் நான் ஒரு

இந்து. அப்படியிருக்கும் போது என் சொந்த சமயத்திற்கே நான் எதிரியாக இருப்பேனு? உங்கள் குறுகிய எண்ணத்தைக் கைவிடுங்கள் என்று உளமுருகிச் சொன்னுர்.

காந்தியடிகள் இறுதியில் சொன்ன சொற்களைக் கேட்ட அவ்விளைஞர்கள் மகுடிக்கடங்கும் பாம்பு போல் அடங்கிவிட்டனர். அதே இளைஞர்கள் காந்தியடிகளுக்குப் பாதுகாவலாக ஹைதரிமாளிகையைச் சூழ்ந்து கொண்டு இரவில் காவல் புரிந்தனர். "ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம். உண்மையில் இக் கிழவன் பெரிய சூனியக் காரன். எல்லோரும் இவன் சொல்லுக்குத் தோற்றுவிடு விடுகிருர்கள்; இவன் யாருக்கும் தோற்பதில்லை" என்று அவ்விளைஞர்களின் வாய் முணு முணுத்தது.

*     *     *

நமக்குத் தீமை செய்தவரை மன்னிப்பதோடு அஹிம்சையின் கடமை தீர்ந்து விடவில்லை, அவனிடத்தில் அன்பு காட்ட வேண்டும். அப்பொழுதுதான் அஹிம்சை முழுமை பெறுகிறது. ஜாலியன் வாலாபாக் படுகொலையைப் பற்றி அறியாத இந்திய மக்கள் இருக்க முடியாது. இதைப் பஞ்சாப் படுகொலை என்றும் சொல்லுவர். 'பாக்' (Bagh) என்ற சொல்லுக்குத் தோட்டம் என்று பொருள். இது ஒரு இந்திச் சொல். ஆனுல் ஜாலியன் வாலாபாக்கில் அப்போது மரம் செடி கொடி எதுவும் கிடையாது. அது ஒரு வெட்ட வெளி. சீக்கியர்களின் புண்ணிய நகரமான அமிருதசரஸில் அவ்விடம் அமைந்துள்ளது. அவ்வெட்ட வெளிக்குச் சுற்றுச் சுவர்கள் கிடையாது. ஆனுல் மூன்று பக்கங்களில் உயரமான மாடிவீடுகள் அமைந்திருக்கின்றன. அம் மாடி வீடுகளின் பின்புறத்து நெடுஞ்சுவர்கள் அவ்வெளியைச் சுற்றிக் கோட்டைச்சுவர் போல் அமைந்திருந்தன. ஒரே ஒரு பக்கத்தில் மட்டும் உயரமான மதிற் சுவர் அமைந்திருந்தது. அவ்வெளியினுள் நுழைவதற்கும், வெளிச் செல்வதற்கும்

ஓரே ஒரு சிறிய வாயில்தான் அமைந்திருந்தது. ஒரே சமயத்தில் ஐந்நாறுபேர் தான் செல்ல முடியும்.

1919-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 13 ஆம் நாள் மாலை ஜாலியன் வாலாபாக்கில் ஒரு காங்கிரஸ் பொதுக் கூட்டம் நடைபெற ஏற்பாடாகியிருந்தது. பிற்பகலிலிருந்தே மக்கள் பெருந்திரளாகக் கூடத் தொடங்கினர். இளைஞர், பெண்டிர், குழந்தைகள் ஆகியோரும் நிறையக் கூடியிருந்தனர். அங்கிருந்த மக்களின் தொகை 20,000 இருக்கும். கூட்டம் அமைதியாகத் துவங்கப்பட்டது. அன்ஸ்ராஜ் என்ற ஒரு தொண்டர் பேசிக் கொண்டிருந்தார். திடீரென்று படைகள் வரும் பேரொலி அப்பொழுது கேட்டது. ஐம்பது ஐரோப்பிய வீரர்களும், நூறு இந்திய வீரர்களும் அடங்கிய படை உள்ளே நுழைந்து அணி வகுத்து நின்றது. இப்படைக்கு ஜெனரல் டயர் என்பவன் தலைமை வகித்திருந்தான். கவசம் பூண்ட இயந்திர பீரங்கியொன்றும் கொண்டுவரப்பட்டது.

ஜாலியன் வாலாபாக்கில் அமைந்திருந்த உயர்ந்த மேடையில் ஏறி நின்றான் டயர் "உடனே கலைந்து செல்லுங்கள்" என்று அங்கு கூடியிருந்த மக்களுக்கு ஆணையிட்டான். கூட்டம் அலையோய்ந்த கடலைப் போல் அமைதியாக நின்றது. இரண்டு நிமிடங்கள் கழிந்தன. உடனே "சுடுங்கள்" என்று ஆணையிட்டான். துப்பாக்கிகளிலிருந்து குண்டுகள் பறந்தன.

ஜெனரல் டயரின் வீரர்கள் அரைமணி நேரம் சுட்டார்கள். மொத்தம் 1600 குண்டுகள் சுட்டார்கள். கொண்டு வந்திருந்த தோட்டாக்களெல்லாம் தீர்ந்து போன பிறகு தான் சுடுவதை நிறுத்தினார்கள். மொத்தம் 400 மக்கள் உயிரிழந்தனர். ஆயிரம் பேருக்கு மேல் காயம் பட்டனர். செத்தவர்களின் உடலங்கள் இரவெல்லாம் அவ்விடத்திலேயே கிடந்தன. அடிபட்ட மக்களில் பலர் "தாகம்! தாகம்!" என்று தவித்தனர். ஒருவாய் தண்ணீர்

கொடுப்பதற்குக் கூட அங்கு ஆளில்லை. அருகில் குடியிருந்த மக்கள் அச்சத்தால் உறைந்து போய் வெளியில் கூடத் தலை காட்டவில்லை.

ஜெனரல் டயரின் கொடுமை இவ்வளவோடு நின்று விடவில்லை. கற்பனைக்கும் எட்டாத அரிய பல கொடுமைகள் செய்தான். அமிருதசரஸ் மக்களுக்குக் குழாயில் குடிநீர் செல்லாதவாறு தடை செய்தான். வீதி விளக்குகளையெல்லாம் அணைக்குமாறு ஆணையிட்டான். வீடுகளுக்கும் மின்சாரம் செல்லாதவாறு தடை செய்தான். தெருவில் இரண்டு பேருக்குமேல் சேர்ந்து செல்லக் கூடாது என்று கட்டளையிட்டான். கடைகளைக் கட்டாயமாகத் திறக்கச் செய்து இராணுவ அதிகாரிகள் சொன்ன விலைகளுக்குப் பொருள் விற்பனை செய்யுமாறு வணிகர்களைக் கட்டாயப் படுத்தினான். வண்டிகளையும், மிதி வண்டிகளையும் கட்டாயமாகக் கைப்பற்றினான். முச்சந்திகளில் முக்கோணங்களை நாட்டி, இராணுவ ஆணைகளை மீறிநடக்கும் மக்களை, மிலாறினால் அடிக்கும்படி சொன்னான்.

ஜெனரல் டயரின் கொடுமைகளில் தலைமணி போன்றதும், குலைநடுக்கம் கொள்ளச் செய்ததும், வயிற்றினால் ஊர்ந்து செல்லும் தண்டனை (Crawling Order) ஆகும். குமாரி ஷெர்வுட் என்ற ஆங்கில மாது ஒருத்தி, ஒரு சந்தின் வழியாகச் சென்று கொண்டிருந்த போது இராணுவச் சட்டக் கொடுமைகளால் வெறிகொண்டிருந்த சில இந்திய இளைஞர்கள் அவளைத் தாக்கிவிட்டனர். ஆனால் அதே சமயத்தில் அச்சந்தில் வாழ்ந்து வந்த நல்ல மனிதர் சிலர் அப்பெண்ணை அவ்விளைஞர்களின் கையிலிருந்து மீட்டனர். இச் செய்தி டயரின் காதுக்கு எட்டியது; குமுறும் எரிமலையானான். அச் சந்தின் முனைக்கு வந்து, "இனி, இச் சந்தில் செல்லுவோரெல்லாம் வயிறு தரையில் படும்படி ஊர்ந்து செல்ல வேண்டும்," என்று கட்டளையிட்டான். அந்தச் சந்தில் குடியிருந்த மக்கள் அனைவரும் வெளியில் போக

வேண்டுமானாலும், மறுபடி திரும்பி வீட்டுக்கு வரவேண்டுமானாலும் வயிற்றினால் ஊர்ந்து செல்ல வேண்டியதாயிற்று.

அமிருதசரஸில் ஜெனரல் டயர் ஏற்படுத்திய இராணுவ வழக்குமன்றத்தின் ஆணைகளை மீறியதற்காக 298 பேர் விசாரணைக்குட்படுத்தப் பட்டார்கள். அவர்களில் 51 பேருக்கு மரணதண்டனையும், 49 பேருக்கு ஆயுள் முடிய தீவாந்திர தண்டனையும், 79 பேருக்கு 7 ஆண்டுச் சிறையும் கிடைத்தன.

ஜெனரல் டயரின் அரக்கச் செயல்களைக் கேட்டு இந்திய நாடே கொதித்தெழுந்தது. நாடெங்கும் கண்டனத் தீர்மானங்களும், ஊர்வலங்களும் நடந்தன. மக்களின் கிளர்ச்சி பொங்குமாங்கடல் போல் பொங்கி எழுந்ததை உணர்ந்த ஆங்கில அரசாங்கத்தார் வேறு வழியின்றிப் பஞ்சாப் படுகொலையைப்பற்றி விசாரிக்க ஒரு குழுவை ஏற்படுத்தினர். இந்தியத் தலைவர்களில் பலர் டயருக்குத் தூக்குத் தண்டனை வழங்க வேண்டும் என்று வற்புறுத்தினர். அதைத் தானே எல்லோரும் எதிர்பார்ப்பார்கள்? ஜெனரல் டயருக்கு என்ன தண்டனை வழங்கலாம் என்று நம்மைக் கேட்டால் நாம் என்ன சொல்வோம்? "தூக்கிலிட்டுக் கொல்வது ஜெனரல் டயருக்குக் குறைந்த தண்டனை! அவனைத் தெருவில் விட்டு, வெறிநாயைக் கொல்வது போல் கல்லால் எறிந்து கொல்ல வேண்டும்; முச்சந்தியில் இரும்புக் கம்பம் நாட்டி, அதில் அவனைப் பிணித்துத் தீயிட்டுக் கொளுத்த வேண்டும்; அல்லது அங்கம் அங்கமாக வெட்டிக் காக்கைக்கும் கழுகுக்கும் விருந்தாக்க வேண்டும்" என்று தயங்காமல் சொல்லுவோம். ஆனால் காந்தியடிகள் என்ன கூறினார் தெரியுமா? "ஜெனரல் டயரைத் தூக்கிலிட்டுக் கொல்லக் கூடாது; வேலையிலிருந்து விலக்கினாலே போதும்" என்று கூறினார்.

காந்தியடிகள் தென்னாப்பிரிக்காவில் வாழ்ந்த போது, திரான்ஸ்வால் மாகாண அரசாங்கத்தார் இந்தியமக்களின் குடி உரிமையைப் பறிக்கும் வகையில் ஒரு கொடிய சட்டம் கொண்டு வந்தனர். அச் சட்டத்தைக் காந்தியடிகள் 'கருப்புச் சட்டம்' என்று குறிப்பிட்டார். அச் சட்டத்தை ஒழிப்பதற்குக் காந்தியடிகள் பெரிய போராட்டம் ஒன்றைத் துவக்கினார். அமைதியான முறையில் அச் சட்டத்தை மீறிப் பல்லாயிரக் கணக்கான மக்கள் சிறை சென்றனர். பலர் சிறையில் வாடி உயிர் துறந்தனர். அவர்களில் குறிப்பிடத் தக்கவர் வள்ளியம்மை என்ற வீரத் தமிழ்ப் பெண். இறுதியாகக் கருப்புச் சட்டம் நீக்கப்பட்டது. இந்தியருக்குப் பாதகமாக இருந்த பல சட்டங்களும் அகற்றப்பட்டன. இத்தனை கொடுமைகளுக்கும் காரணமாக இருந்தவர் திரான்ஸ்வால் மாகாணத்தின் தலைவராக இருந்த தளபதி ஸ்மட்ஸ் துரை. ஆனால் காந்தியடிகள் அவரை வெறுக்கவில்லை. தம்முடைய ஆசிரமத்தில் தம் கையால் செய்த, ஓரிணை மூடு செருப்பு(Shoes)க்களை தளபதி ஸ்மட்ஸ் துரைக்குப் பரிசாக வழங்கினார். பகைவனிடத்திலும் அன்பு காட்டினார் அடிகள்.

* * *

"அஹிம்சையாவது, முற்றும் மாசின்றி இருத்தல். அஹிம்சையின் முழுமை எது என்று கேட்டால், நஞ்சுள்ள பூச்சி, விலங்குகளிடத்தும் பகைமை கொள்ளாமை" என்று அடிகள் கூறுகிறார். நச்சுப் பூச்சிகளிடம் எவ்வாறு அன்பு காட்ட முடியும்? இது விந்தையாக இருக்கிறதே என்று எண்ணலாம். இக் கொள்கையைச் செயலில் கடைப்பிடித்தல் சாலுமா என்று சிலர் ஐயுறலாம். அடிகள் வாய்ச் சொல் வீரரல்லர், செயல் வீரர். தம் வாழ்வில் செய்து காண்பித்தார். இந் நிகழ்ச்சி 1917-ஆம் ஆண்டு நிகழ்ந்தது. ஒருநாள் மாலைத் தொழுகையை முடித்துக் கொண்டு காந்தியடிகள் ஆசிரமத்தில் அமர்ந்திருந்தார். முதுகுக்குத் தாங்க

லாக ஒரு தலையணையை வைத்துக்கொண்டு நண்பர்களிடம் சுவையாக உரையாடல் நிகழ்த்திக் கொண்டிருந்தார். அப்போது குளிர் அதிகமாக இருந்தது. கஸ்தூரிபாய் வெண்மையான ஒரு கதர்ப் போர்வையைக் கொண்டுவந்து அடிகளின் மேல் போர்த்தார். அப்போது ராவ்ஜிபாய் படேல் அருகில் அமர்ந்திருந்தார். அவருடைய கவனம் காந்தியடிகள் போர்த்திருந்த போர்வையின் மேல் சென்றது. வெண்மையான போர்வையின் விளிம்பில் கருநிறமான ஒரு பொருள் நெளிவது தெரிந்தது. உற்றுப் பார்த்ததும், அது ஒரு நீண்ட கரும்பாம்பு என்பதை ராவ்ஜி அறிந்தார். அப்பாம்பு அடிகளின் முதுகின் மேல் மெதுவாக ஏறித் தோள் பட்டையை அடைந்தது. அதற்குமேல் செல்லப் பற்றுக் கோடு ஏதுவும் இல்லாத காரணத்தால், அப்பக்கமும் இப்பக்கமும் பார்த்தது.

ராவ்ஜிபாய் தம்மைக் கவனிக்காமல் தம் தோள்களையே உற்றுப் பார்த்துக் கொண்டிருப்பதை அடிகள் கவனித்தார். அதுவுமல்லாமல் தம் தோள்மீது ஏதோ ஒரு பொருள் ஊர்வதாகவும் அறிந்தார்.

''ராவ்ஜிபாய்! என்ன அப்படிப் பார்க்கிறீர்கள்?'' என்று கேட்டார் அடிகள். ராவ்ஜிபாய் நிதானத்தை இழந்து விடவில்லை. தாம் உரக்கச் சொன்னால், உள்ளேயிருக்கும் கஸ்தூரிபாய் முதலியோரின் செவிகளில் விழலாம். உடனே அச்சத்தால் அவர்கள் ஏதேனும் குழப்பம் விளைவித்து விட்டால், பாம்பு மருண்டு காந்தியடிகளைக் கடித்தாலும் கடித்து விடலாமல்லவா? அதனால் ராவ்ஜிபாய் அடிகளை நோக்கி, ''ஒன்றுமில்லை பாபு! ஒரு பாம்பு தங்கள் தோள்மீது இருக்கிறது. சிறிது நேரம் அசையாமல் இருங்கள்'' என்று மெதுவாகச் சொன்னார்.

''சரி! நான் அமைதியாக இருக்கிறேன். நீங்கள் இப்போது என்ன செய்யப் போகிறீர்கள்?'' என்று கேட்டார் அடிகள்.

"நான் போர்வையின் நான்கு மூலைகளையும் சேர்த்துப் பாம்போடு தூக்கி எறியப் போகிறேன்" என்று சொன்னார் ராவ்ஜி. பாம்பு தோளிலிருந்து மெதுவாக இறங்கிப் போர்வைக்குள் சென்று மறைந்தது.

"நான் மிகவும் அமைதியோடு இருக்கிறேன். ஆனால் நீங்கள் உங்களுக்குத் தீங்கு நேராதவாறு பார்த்துக் கொள்ள வேண்டும்" என்று எச்சரிக்கை செய்தார் அடிகள். ராவ்ஜி போர்வையை மெதுவாகச் சுருட்டிப் பாம்புடன் அப்புறப்படுத்தினார்; பாம்பும் ஓடிவிட்டது.

அடுத்தநாள் இச் செய்தி, செய்தித்தாள்களில் பல் வேறு உருவங்களுடன் வெளிப்பட்டது. "ஒரு நாகப்பாம்பு காந்தியடிகளின் முதுகின் வழியாகத் தோள்மேல் ஏறியது. பின் தலைமேற் சென்று, தன் படத்தை விரித்து அவருக்குக் குடைப்பிடித்தது. இது அவருடைய எதிர்கால வாழ்வின் நற்குறி. அவர் இந்திய நாட்டின் பேரரசராக எதிர்காலத்தில் முடிசூட்டிக்கொண்டு அரியணையில் வீற்றிருப்பார்" என்று கதை கட்டிவிட்டனர். இச்செய்தியைப் படித்த காகா காலேல்கர், அதை அடிகளிடம் காண்பித்தார்.

"பாம்பு உங்கள் தோளின்மேல் இருந்தபோது தாங்கள் என்ன நினைத்தீர்கள்?" என்று கேட்டார் காகா.

அதற்கு அடிகள், "ஒரு கணம் அச்சத்தால் என் உள்ளம் நடுங்கியது. ஆனால் ஒரேகணம் தான்! அடுத்த கணம் அச்சம் நீங்கி அமைதியுற்றேன். ஒருகால் அப்பாம்பு என்னைக் கடித்துவிட்டால், அதை அடிக்கவேண்டாமென்று அருகிலிருந்தவர்களுக்குக் கூறவேண்டும் என்று அப்பொழுது எண்ணினேன். பாம்பை ஒரு மனிதன் கண்டவுடன், அவன் உள்ளத்தில் தோன்றும் முதல் எண்ணம் அதைக் கொல்லவேண்டுமென்பது தான். நீங்களும் அப்படித்தானே எண்ணுவீர்கள். ஆனால் என்னைக் கடித்த

பாம்பை, யாரும் அடிக்கக்கூடாது; அச்சமின்றி அதைச் செல்லவிட வேண்டும்" என்று கூறினர்.

*　　*　　*

காந்தியடிகளின் அஹிம்சை விலங்குகளிடம் மட்டு மன்றி தாவரங்களிடத்தும் அன்பு காட்ட வேண்டும் என்பதாகும். ஒருநாள் மீராபாயின் வேண்டுகோளுக் கிணங்கி, இராப்பொழுதில் இளைஞர் சிலர், பசுந்தழை சிறிது பறித்துவருவதற்குப் பதிலாகத் தழைகளைக்கொத்து கொத்தாகப் பறித்து வந்தனர். அவை காந்தியடிகளுக்குக் காட்டப்பட்டன. அப்பொழுது காந்தியடிகளால் சில மணிமொழிகள் அருளப்பட்டன. அவை பின்வருமாறு:-

"மரங்களும் நம்மைப்போல் உயிருடையனவே, அவை நம்மைப்போலவே வளர்கின்றன; முகர்கின்றன; உண்கின் றன; பருகுகின்றன; உறங்குகின்றன. அவை இரவில் ஓய்வு பெற்று உறங்கும்போது, அவற்றின் தழைகளை பறித்தல் இழிதகைமை. என்மீது தூவவும், என் கழுத்தில் மாலையாக அணிவிக்கவும் மென்மையான மலர்களைப் பறிப்பது எனக்குத் துன்பமூட்டுகிறது. அஃறிணை உயிர்களிடத்தும் நாம் அன்புகாட்டுதல் வேண்டும்."

1930-ஆம் ஆண்டில் காந்தியடிகள் எரவாடா சிறை யில் இருந்தார். அவரோடு காகா கலேல்காரும் இருந்தார். காகா நூல் நூற்பதற்காகப் பஞ்சை வில்லாலடித்துத் தூய்மைப்படுத்திப் பட்டையிடுவது வழக்கம். மழைகாலம் வந்துவிட்டது. பஞ்சடிக்கும் வில்லில் பொருத்தப்பட்டிருந்த நாண் சுருங்கிப் பிசுபிசுத்தது. அதை மழமழப்பாக்குவதற் காக சிறைச்சாலையின் உள்ளேயிருந்த வேம்பின் இலைகளைப் பறித்துத் தேய்ப்பது வழக்கம். காகா நாள்தோறும் ஒரு கொம்பை ஒடித்து, அதிலுள்ள இலைகளைப் பறிப்பது வழக்கம். இதை அடிகள் கவனித்தார்.

ஒருநாள் காலேல்கரைப் பார்த்து, "காகா! உம்முடைய செயல் அஹிம்சைக்குப் புறம்பானது. பிறருக்கு இவ்

உண்மை எளிதில் புரியாமலிருக்கலாம்; ஆனால் உங்களுக்குப் புரியுமென்று எண்ணுகிறேன். வில்லின் நாணை மழமழப் பாக்க நான்கு வேப்பிலைகள் போதுமென்று எண்ணு கிறேன். மன்னிக்குமாறு வேப்பமரத்தை வேண்டிக் கொண்டு, அந்நான்கு இலைகளை மட்டும் மரத்தினின்று பெற்றுக்கொள்ளலாம். ஆனால் நீர் ஒரு கொம்பையே நாள் தோறும் ஒடித்துவிடுகின்றீரே!" என்று கூறினார்.

காகா உயரமானவர். ஆகையினால் மரத்திலிருந்து சில இலைகளை மட்டும் பறித்துக்கொள்ள அவர் தொல்லைப்பட வேண்டியிருக்கவில்லை. அன்றிலிருந்து கொம்பை ஒடிப்பதை விட்டுவிட்டார். ஒருநாள் சிறிய மெழுகுவர்த்தித் துண்டு ஒன்று அவருக்குக் கிடைத்தது. அம்மெழுகுவர்த்தியைப் பயன்படுத்தி வில்லின் நாணை மழமழப்பாக்கினார். அதன் பிறகு வேப்பிலைகளைப் பறிப்பதில்லை. இதைக் கண்டு காந்தி யடிகள் மிகவும் மகிழ்ந்தார்.

திருவாளர் காகா, பல் துலக்குவதற்காகக் காந்தியடி களுக்கு வேப்பமரத்திலிருந்து பற்குச்சி ஒடித்துக் கொடுப் பது வழக்கம். ஒருநாள் ஒரு குச்சியைப் பயன்படுத்திய வுடன், காந்தியடிகள் எறிந்துவிடமாட்டார். காகாவைப் பார்த்து, "ஒருநாள் பயன்படுத்திய பிறகு, பயன்பட்ட பகுதியை மட்டும் வெட்டியெறிந்துவிட்டு மீண்டும் அதைப் பயன்படுத்தலாம்" என்று கூறுவார்.

காகா அடிகளை நோக்கி, "பாபு! நாம் ஏன் பயன்படுத் தியதையே மீண்டும் பயன்படுத்தவேண்டும்? இங்கு வேப்ப மரங்கள் நிறைய இருக்கின்றன. நாள்தோறும் புதியதாக ஒன்று ஒடித்துக்கொள்ளலாமே!" என்று சொன்னார்.

"நானும் அதை அறிவேன். ஆனால் நாள்தோறும் அம் மரத்திலிருந்து குச்சியை ஒடிப்பதற்கு நமக்கு என்ன உரிமையிருக்கிறது? பற்குச்சி காய்ந்துபோனாலோ, அல்லது துலக்க முடியாதவாறு மிகவும் சிறிதாகப்போனாலோ நாம்

வேறொன்று ஒடித்துக்கொள்ளலாம்'' என்று அடிகள் கூறினர்.

சில சமயங்களில் பற்குச்சி மிகவும் சிறிதாகிவிடும். அதன் நுணி மென்மையாகவுமிருக்காது. அதை வைத்துக் கொண்டு அடிகள் பல் துலக்குவார். அக்குச்சியினுல் காந்தி யடிகளின் வாயில் எஞ்சியிருந்த ஓரிரண்டு பற்களும் படும் பாட்டைக் காண காகாவிற்கு மிகவும் வருத்தமாக இருக்கும். ஆனுல் பயன்?

* * *

அடிகள் அஹிம்சையை எவ்வளவு நுட்பமாகக் கடைப் பிடித்தார் என்பதற்கு மற்றுமோர் எடுத்துக்காட்டைக்கூற விரும்புகிறேன். அடிகள் முதலில் குழந்தைகளுக்கு அரச வாழ்த்துச் சொல்லிக்கொடுப்பது வழக்கம். அஹிம்சை யின் நுட்பத்தை உணர்ந்த பின்னர் அவ்வாழ்த்தில் அமைந் திருந்த சில கொள்கைகள் அவருக்குப் பிடிக்கவில்லை அவை யாதெனில்:—'அவள் (அரசி) பகைவரைச் சிதறடிக் கட்டும்; அவரை அழிக்கட்டும்; அவர் அரசியலைக் குலைக் கட்டும்; அவர் வஞ்சகச் சூழ்ச்சிகளை நொறுக்கட்டும்' என்பனவாகும்.

இக்கொள்கைகளை அடிகளின் அஹிம்சையுள்ளம் ஏற்றுக்கொள்ளவில்லை. ''இவ்வுரைகள் எனக்குப் பிடிக்க வில்லை. எனது கருத்தை டாக்டர் பூத் என்பவருக்குத் தெரி வித்தேன். அஹிம்சையில் நம்பிக்கையுள்ள ஒருவருக்கு இப்பகுதியைப் பாட விருப்பமாராதென்பதை அவர் ஒப்புக்கொண்டார் பகைவர் எங்ஙனம் வஞ்சகராவர்? பகைவர் என்பதாலேயே அவர்கள் தவறுடையவர்களா? ஆண்டவனிடத்திலிருந்து நாம் நியாயம் மட்டும் வேண்ட லாம். டாக்டர் பூத் என்னுடன் முற்றும் உடன்பட்டுத் தமது திருச்சபைக்கெனப் புதிய முறையில் ஓர் இராச வாழ்த்து எழுதிக்கொண்டார்'' என்று காந்தியடிகள் தம்

வரலாற்றில் குறிப்பிட்டிருக்கிறார். இக்குறிப்பால் அடிகள் உள்ளம் அஹிம்சையில் எவ்வளவு தூரம் படிந்திருந்தது என்பதை உணரலாம்.

* * *

காந்தியடிகள் உலகிற்கு அறிவுறுத்திவந்த அஹிம்சையிலிருந்து அவரே தவறிவிட்டதாகக் கருதத்தக்க நிகழ்ச்சிகள் நான்கு அவருடைய வாழ்க்கையில் ஏற்பட்டன. ஒன்று வெறிநாய்களைக் கொன்றுவிடுமாறு அடிகள் ஆணையிட்டது; இன்னொன்று ஆசிரமத்தில் நோயால் துடித்துக் கொண்டிருந்த ஒரு பசுவின் கன்றைக் கொன்றுவிடுமாறு சொன்னது; மற்றொன்று முதல் உலகப் போர்க்கு ஆள் திரட்டியது. பிறிதொன்று அந்நியத் துணிகளைத் தீக்கிரையாக்கியது.

இச்செயல்களைப் பற்றி நாட்டில் பல கண்டனங்களும் நகையாடல்களும் எழுந்தன. ஆனால் காந்தியடிகள் அச்செயல்கள் யாவும் அஹிம்சையின் காரணமாகவே எழுந்தன என்று கூறுகிறார். வெறிநாய்க் கொலையைப் பற்றிக் காந்தியடிகள் 'யங் இந்தியா'வில் பல கட்டுரைகள் எழுதியுள்ளார். வெறி நாய்களை இன்னின்ன முறைகளில் பாதுகாக்க வேண்டுமென்று எழுதியுள்ளார். வெறி நாய்களுக்கென ஒன்றும் செய்ய முடியாத நேரத்தில், அவற்றால் மக்கள் கடியுண்டு இறக்கும் நேரத்தில், அவைகளைக் கொல்லலாம் என்பது காந்தியடிகளின் கருத்து. வெறிநாய்கள் அறிவிழந்து, காவலின்றி, உணவின்றி, அடியுதை பட்டு, நோய்வாய்ப்பட்டு மக்களுக்குத் தீங்கிழைத்துக் கொண்டிருப்பதைக் காட்டிலும், கொல்லப்படுதல் நல்லதல்லவா? அதற்காகவே அவைகளைக் கொல்லுமாறு காந்தியடிகள் கூறினார். காந்தியடிகள் வெறிநாய்களின்பால் கொண்ட இரக்கமே, அவரை இம்முடிவுக்கு வருமாறு தூண்டியது. இந்நுட்பத்தை உணராத சிலர் அடிகளைக் குறை கூறுவர்.

சபர்மதி ஆசிரமத்தில் ஓர் ஆன்கன்று நோயால் மிகவும் வருந்திக்கொண்டிருந்தது. அது படுத்த படுக்கையாகக் கிடந்தது. அதன் உடலில் புழுக்கள் நெளிந்தன. உயிருக்காக அக் கன்று மன்றாடிக் கொண்டிருந்தது. அது படும் பாட்டைக் காந்தியடிகள் நேரிற்கண்டு வருந்தினர். அது இவ்வாறு துன்புறுவதைக் காட்டிலும் இறப்பதே மேல் என்று எண்ணினர். அடிகள் ஆராயாமல் அவசரப்பட்டு இம்முடிவுக்கு வரவில்லை. சிறந்த பல மருத்துவர்களை அழைத்துக் காட்டி அதன் நோயைப் போக்கப் பெருமுயற்சி செய்த பிறகே கொன்றுவிட எண்ணினர். அதுவும் இனிப் பிழைக்க முடியாது என்ற நிலையை அடைந்த பிறகே அடிகள் அம்முடிவுக்கு வந்தார். இச்செயலும் அஹிம்சையின் அடிப்படையில் எழுந்ததுதான். பசுவைக் கடவுளின் அவதாரமாக எண்ணி வந்தவர் காந்தியடிகள். ஆன் காத்தலைப்பற்றிக் காந்தியடிகள் எழுதியுள்ள கட்டுரைகளைப் படிப்போருக்கு இதன் உண்மை விளங்கும்.

போருக்குத் தாம் துணை நின்றதைப்பற்றி அடிகள் ஒருவிதச் சமாதானம் கூறுகிறார். போருக்கும் தாம் துணை நிற்க விரும்பவில்லையென்றும் ஆங்கிலப் பேரரசால் சில நன்மையுண்டென்று தாம் நம்பியதாகவும், அவ்வாட்சிக்குத் துன்பம் விளைந்தால் தமது அஹிம்சைப் பேச்சுக்கே இடமில்லாமற் போய்விடுமென்றும், அவ்வாட்சிக்குத் தீங்கு நேராதவாறு காத்தல் அஹிம்சைப் பிரசாரத்துக்கு இடமிருக்குமென்றும் கருதித் தாம் துணை நின்றதாகக் காந்தியடிகள் கூறினர்.

அந்நிய நாட்டுத்துணிகளைத் தீக்கிரையாக்கியதற்கு அடிகள் பின் கண்டவாறு சமாதானம் கூறினர். "பொது மக்கள் உள்ளத்தில் பகைமைக் கனல் மூண்டுகொண்டிருக்கிறது. மனிதர்மீதுள்ள பகைமையைப் பொருள்மீது மாற்றுகிறேன்" என்று விடையிறுத்தார்.

* * *

மிகவும் இன்றியமையாத சமயங்களில் அஹிம்சையைக் கைவிட்டுவிடலாம் என்பது காந்தியடிகளின் கொள்கை. தம்முடைய ஆசிரமத்தில் திருடர் தொல்லை ஏற்பட்ட போது, தற்காப்புக்காகத் துப்பாக்கி வைத்துக்கொள்ளலாம் என்று நண்பர்களுக்குக் கூறியிருக்கிறார்.

"வழிப்பறிக் கள்வருக்கு அஞ்சித் தனது அரிசிமூட்டைகளை அவர்களுக்குக் கொடுப்பவன் கோழை. அவன் அஹிம்சையைக் கடைப்பிடிப்பவன் ஆகான். அவன் அஹிம்சையைப்பற்றிய உணர்வில்லாதவன்; அதுபற்றி ஒன்றுந் தெரியாதவன். பெண் இழிவுபடுதலைப் பார்த்தும், மூர்க்கர் அடிக்கு அஞ்சி ஓடுபவன் ஆண்மையுடையவன் அல்லன்; அதற்குப் புறம்பானவன். அவன் கணவனாயிருக்கவோ, தந்தையாயிருக்கவோ, உடன் பிறந்தவனாக இருக்கவோ தகுதியற்றவன்" என்று கூறுகிறார். இவைபோன்ற சமயங்களில் பலாத்காரத்தை உபயோகப்படுத்தலாம் என்று அடிகள் கூறுகிறார்.

* * *

அஹிம்சையின் உருவமான காந்தியடிகள் பிறரைத் தம் கையால் அடித்தார் என்று சொன்னால் நீங்கள் நம்புவீர்களா? ஆனால் அத்தகைய நிகழ்ச்சி யொன்று அவர் வாழ்க்கையில் நடந்தது. காந்தியடிகள் 1947 ஆம் ஆண்டு காஷ்மீரத்திலிருந்து கல்கத்தாவிற்குப் புகை வண்டியில் பயணம் செய்துகொண்டிருந்தார். வண்டி 'பக்காடியார் பூர்' நிலையத்தை அடைந்தது. அது பீஹார் மாகாணத்திலுள்ள ஓரூர். புகைவண்டி நிலையத்தில் பெருந்திரளாக மக்கள் கூடியிருந்தனர். காந்தியடிகளைத் தரிசிப்பதற்காக எல்லோரும் முட்டி மோதிக்கொண்டு ஓடி வந்தனர். "மகாத்மா வாழ்க!" என்ற வாழ்த்தொலி காது செவிடுபடும்படி கேட்டது. நல்ல உடலுரம் பெற்ற ஒருவனாலேயே அவ் விரைச்சலைத் தாங்கமுடியாதென்றால் காந்தியடிகள்

எவ்வாறு பொறுப்பார்? அவர் தம் இருக்கையை விட்டு எழுந்தார். பலகணியின் அருகில் சென்றார். "ஏன் ஒரு கிழவனுக்கு இத்தகைய தொல்லையைக் கொடுக்கிறீர்கள்?" என்று கத்தினார்.

காந்தியடிகளைப் பலகணியில் கண்ட மக்கள் மிக்க மகிழ்ச்சியடைந்தனர். காந்தியடிகளைத் தம் கையினால் தொட்டுப் புனிதமடைய விரும்பிய சிலர் அவரை நோக்கி ஓடிவந்தனர். ஒவ்வொருவரும் தங்கள் காணிக்கையைக் காந்தியடிகளிடம் தாங்களாகவே நேரில்கொடுக்க முந்தினர். அதனால் பெருங்குழப்ப மேற்பட்டது. அதனாற் சினம் கொண்ட காந்தியடிகள் தம்மருகில் வந்த ஒருவனைக் கன்னத்தில் அறைந்தார். காந்தியடிகளின் கைகளால் அடிபடுவதைப் பெரும் புண்ணியமாகக் கருதி, அவரிடம் அடிபடுவதற்காகக் கன்னத்தைக் காட்டிய வண்ணம் ஒவ்வொருவரும் போட்டியிட்டு ஓடிவந்தனர். உடனே அருகிலிருந்த மனுகாந்தியும், அப்பாபெகனும் காந்தியடிகளைப் பலகணியைவிட்டு நீங்கி உள்ளே செல்லுமாறு வேண்டிக் கொண்டனர். அடிகளும் தம் இருக்கையில் சென்றமர்ந்தார்.

இந்தச் செயல் ஹிம்சையின் பாற்பட்டதா; அஹிம்சையின்பாற்பட்டதா என்று நாம் ஆராய வேண்டிய அவசியமில்லை. ஏனென்றால் அடிபட்ட அத்தொண்டர்களே அதை ஹிம்சை என்று கருதவில்லை. கருதியிருந்தால், கன்னத்தைக் காட்டிய வண்ணம் காந்தியடிகளின் கையால் அடிபடுவதற்கு போட்டி போட்டுக்கொண்டு ஓடிவருவார்களா?

## 3. அஞ்சாமை

'அஹிம்சை கோழையின் ஆயுதம்' என்பது சிலர் கொள்கை. ஆனால் அஞ்சாமைக்கும் அஹிம்சைக்கும்

நெருங்கிய தொடர்புண்டு; அஞ்சாமையிலிருந்து தான் அஹிம்சை பிறக்கிறது என்பதை விளக்கவே, அஞ்சாமை என்ற தலைப்பை அஹிம்சையின் பின் வைத்தேன்.

அஹிம்சையைப் பற்றிக் காந்தியடிகள் விளக்கும் போது, "அஹிம்சை அஞ்சாமையின் உச்சியில் நிலவுவது. ஹிம்சையில் தேர்ச்சி பெற்றவர்க்கு அஹிம்சையின் விழுப்பத்தை எளிதில் நிறுவிக்காட்டல் என்னால் இயலும். பல்லாண்டு யான் கோழையா யிருந்த பொழுது மூர்க்க நெறியைக் கடைப் பிடித்திருந்தேன்; எனது கோழைமையை உதிர்க்கத் தொடங்கிய போதே, அஹிம்சையையும் போற்றி மதிக்கத் தொடங்கினேன்.

அஹிம்சை கோழை கடைப்பிடித்து நடக்கத்தக்க நெறியன்று. அது சாவுக்கு அஞ்சாதான் கடைப்பிடித்து நடக்கும் தகுதி வாய்ந்தது. கையில் வாள் தாங்காதவன் அச்சம் இல்லாதவனே. ஆனால் அவனிலும் அச்சமில்லாத ஆண்டகையாளன் எவன்? தற்காப்புக்கென்று சிறு விரலையும் உயர்த்தாது சாவை ஏற்பவன்.

அஹிம்சை கோழையின் ஆயுதமன்று; அது வீரனின் ஆயுதம். அஹிம்சையில் உறுதியுடையவன் ஆண்டவனிடத்தில் உறுதியுடையவன். உண்மையும் அஞ்சாமையும் அஹிம்சையின் தற்கிழமைப் பொருள்கள். அஹிம்சைக்கு ஆண்மை தேவை அதுவே வீரத்திற் சிறந்த வீரரின் அறம்.

இறக்க அஞ்சுகிறவன் மகாவீரரையோ புத்தரையோ வேதங்களையோ பின்பற்றுபவனல்லன். மகாவீரரும் புத்தரும் போர்வீரர்கள். தால்ஸ்தாயும் அவ்வினத்தவரே. ஹிம்சையின் இடையில் அஹிம்சையைக் கண்ட மேலோர், நியூட்டனைப்பார்க்கிலும் அறிஞர்கள்; அவர்கள் வெல்லிங்டனைப் பார்க்கிலும் போர் வீரர்கள்—" என்று பலபடக் கூறுகிறார்.

மேற்கூறிய விளக்கங்களை வைத்துக்கொண்டு காந்தியடிகளின் வாழ்க்கையை ஆராய்வோம். அப்போது அஞ்சாமைக்கும் அஹிம்சைக்கும் உள்ள உயிர்த் தொடர்பு தெற்றென விளங்கும்.

தாதா அப்துல்லா கம்பெனியாரின் வழக்குச் சம்பந்தமாகக் காந்தியடிகள் முதன் முதல் தென் ஆப்பிரிக்கா சென்றார். பாரிஸ்டர் காந்தி டர்பன் சென்றடைந்த மூன்றாம் நாள், தாதா அப்துல்லா அவரை வழக்கு மன்றத்துக்கு அழைத்துச் சென்றார். அங்கிருந்த பல வழக்கறிஞர்களுக்கும் இவரை அறிமுகம் செய்து வைத்து அவர்களுடன் உட்கார வைத்தார். இதுவரையில் காந்தியடிகளுக்கு உற்சாகமாகவே இருந்தது.

நீதிபதி உள்ளே வந்து தம் இருக்கையில் அமர்ந்தார். புதிதாக வந்து அமர்ந்திருந்த காந்தியடிகளை ஏற இறங்கப் பார்த்தார். தாம் வழக்குமன்றத்துக்குப் புதியவராகையால் நீதிபதி அவ்வாறு பார்க்கிறார் என்று காந்தியடிகள் முதலில் எண்ணினார். பிறகு தொடர்ந்து ஏதோ விசித்திரப் பொருளைப் பார்ப்பதைப் போல் தம்மையே நீதிபதி பார்ப்பதை உணர்ந்த அடிகளுக்கு என்னவோபோல் இருந்தது. நீதிபதி காந்தியடிகளை நோக்கி, "உமது தலைப்பாகையை அகற்றி விடும்" என்று ஆணையிட்டார். இக்கட்டளையைக் கேட்டவுடன் காந்தியடிகள் திகைத்துப் போனார். பலபேர் முன்னிலையில் நீதிபதி தம்மை அவமானப்படுத்தி விட்டதாக எண்ணினார். வழக்கு மன்றத்திலிருந்த எல்லோரும் காந்தியாரை நோக்கிக் கொண்டிருந்தனர். மிகவும் இக்கட்டான நிலையில் தாம் இருப்பதை உணர்ந்தார். எனினும் நீதிபதியின் ஆணைக்குக் கீழ்ப்படியாமல் அங்கு அமர்ந்திருப்பதும் குழப்பத்துக்கு இடமாகும். எனவே தம் இருக்கையை விட்டு எழுந்து வெளியில் சென்று விட்டார்.

"இந்தியர்கள் வழக்குமன்றத்துக்குள் தலைப்பாகை அணியக் கூடாதா? அப்படி யென்றால் தாதா அப்துல்லா

எப்படித் தலைப்பாகை அணிய அநுமதிக்கப்பட்டார்?" என்ற ஐயப்பாடு காந்தியாரின் உள்ளத்தைக் குடைந்தது அப்துல்லாவை அணுகித் தம் ஐயப்பாட்டை வெளிப்படுத்தினர். தாதா அப்துல்லா பின்வருமாறு கூறி அவர் ஐயத்தைப் போக்கினர்:

'இசுலாமியர்கள் தங்களை இங்கு அராபியர்கள் என்று கூறிக்கொள்கின்றனர். பார்சிகள் தங்களைப் பாரசீக நாட்டவர் என்று கூறிக் கொள்கின்றனர். அராபிய நாடும் பாரசீக நாடும் சுதந்தர நாடுகள். எனவே சுதந்தர நாட்டு மக்களான அவர்கள் தலைப்பாகை வைத்துக்கொள்ள அநுமதிக்கப்படுகிறார்கள். ஆனால் இந்துக்கள் தங்களை இந்தியர் என்று தானே கூறிக்கொள்ள வேண்டும்? அடிமை இந்தியருக்குத் தலைப்பாகை ஒரு கேடா? என்று இவ் வெள்ளைக்காரர்கள் எண்ணுகின்றனர்.'

அப்துல்லா கூறிய இவ் விளக்கத்தைக் கேட்டவுடன் அடிகளின் உள்ளம் மிகவும் வருந்தியது. தென்னாப்பிரிக்க இந்தியரின் நிலையை எண்ணி உள்ளம் புண்ணானார். நீதிபதி தமக்கு இட்ட கட்டளை நாகரிகத்திற்குப் புறம்பான, முறையற்ற செயல் என்று கண்டித்துச் செய்தித்தாள்களில் அறிக்கை வெளியிட்டார். காந்தியடிகளின் அறிக்கையைப் படித்த வெள்ளையர்கள் நகையாடினர். "வேண்டாத விருந்தாளி" என்ற தலைப்பில் இவரைப்பற்றி எழுதிக் கேலிக்கும் கிண்டலுக்கும் ஆட்படுத்தினர். ஆனால் அடிகள் அவற்றை யெல்லாம் பொருட்படுத்தவில்லை. தென்னாப்பிரிக்கா சென்ற சில நாட்களில் காந்தியடிகளின் பெயர் விளம்பரமாகிவிட்டது. நேர்மைக்குப் புறம்பான செயல் எங்கு நிகழ்ந்தாலும், காந்தியடிகள் அதைக் கண்டிக்கத் தயங்கியதே இல்லை.

* * *

காந்தியடிகள் இரண்டாம் முறையாகத் தென்னாப்பிரிக்கா சென்றபோது அவருடைய வாழ்க்கையில் குறிப்

பிடத்தக்க ஒரு நிகழ்ச்சி நடந்தது. அந்நிகழ்ச்சி காந்தியடிகளின் பெருமையை இமயத்தின் உச்சிக்கே கொண்டு சேர்த்து விட்டது என்று கூறலாம். மகாத்மாவின் இலக்கணத்தை அந்நிகழ்ச்சி வரையறுத்துக் காட்டிவிட்டது என்று மார்தட்டிக் கூறலாம். மேலும் அஹிம்சை கோழையின் ஆயுதமல்ல; அஞ்சாமையே அஹிம்சையின் கருவறை என்ற உண்மையையும் அந்நிகழ்ச்சி உலகிற்கு உணர்த்தியது.

காந்தியடிகள் முதன்முறை தென்னுப்பிரிக்காவிலிருந்து இந்தியா திரும்பியவுடன், தென்னுப்பிரிக்க இந்தியருக்கு வெள்ளையர்களால் இழைக்கப்படும் அநீதியை எடுத்துக் கூறினர். பம்பாயின் சிங்கமான பிரோஸிஷா மேத்தாவின் தலைமையில், பம்பாய் ஜஹாங்கீர் மண்டபத்தில் தென்னுப்பிரிக்க இந்தியரின் இரங்கத்தக்க நிலையை எடுத்துக் கூறிச் சொற்பொழிவாற்றினர். பூனைவில் புகழ்பெற்ற சரித்திரப் பேராசிரியரான பந்தார்க்கரின் தலைமையில் ஒரு சொற்பொழிவாற்றினர். பல பத்திரிகைகளுக்குக் கட்டுரை எழுதி வெளியிட்டார். பிறகு தமிழகத்துக்குச் சென்றார். தென்னுப்பிரிக்க இந்தியரில் பெரும்பாலோர் தமிழராயிற்றே! அதனால் அடிகளுக்குத் தமிழகத்தில் நல்ல வரவேற்பிருந்தது. தென்னுப்பிரிக்க இந்தியரின் நிலையை விளக்கி ஒரு சிறு நூலை வெளியிட்டார். அதற்குப் "பச்சைப் பிரசுரம்" என்று பெயர். அவ்வெளியீடு நல்ல முறையில் விற்பனையாயிற்று.

காந்தியடிகள் தென்னுப்பிரிக்க வெள்ளையரின் கொடுமைகளை, இந்தியாவி லிருந்துகொண்டு உலகறியும்படி அம்பலப்படுத்தி விட்டதால் தென்னுப்பிரிக்க வெள்ளைக்காரருக்கு மிகவும் எரிச்சலேற்பட்டது. தங்களைப் பற்றிப் பொய்ப்பிரசாரம் செய்வதாகக் காந்தியடிகளின் பால் அடங்காத சினம் கொண்டனர்.

காந்தியடிகள் இரண்டாம் முறையாகத் தென்னுப்பிரிக்கா புறப்பட்டார். அவர் ஏறிச் சென்ற 'கோர்லாண்டு' என்ற கப்பல் தாதா அப்துல்லா கம்பெனியாருடையது. அக் கப்பல் டர்பன் துறைமுகத்தை வந்தடைந்தது. காந்தியார் தென்னுப்பிரிக்கா மீண்டும் வருகிருர் என்ற செய்தி எப்படியோ நேடால் வெள்ளையர்களுக்குத் தெரிந்து விட்டது. காந்தியடிகளை எப்படியாவது டர்பனில் இறங்காமல் செய்து, இந்தியாவிற்கே திருப்பியனுப்பிவிட வேண்டும் என்ற முயற்சியில் நேடால் வெள்ளையர்கள் தீவிரமாக ஈடுபட்டனர். பெரும் அளவில் கூட்டங்களும் கிளர்ச்சிகளும் நடத்தினர். தென்னுப்பிரிக்க அரசாங்கமும் அவர்களுக்கு உடந்தையாக இருந்தது. நேடால் அரசாங்க அமைச்சர் ஒருவர் வெளிப்படையாகவே இக்கிளர்ச்சிக் கூட்டங்களில் கலந்து கொண்டார்.

வெளிநாடுகளிலிருந்து டர்பன் துறைமுகத்திற்கு வரும் பிரயாணிகளை மருத்துவச் சோதனைக்கு உள்ளாக்கி, அதன் பிறகே கப்பலிலிருந்து இறங்க அனுமதிப்பது வழக்கம். மருத்துவச் சோதனை முடியும் வரை மஞ்சட் கொடியொன்று கப்பலில் பறக்கவிடப்படும். அக்கொடி கீழே இறக்கப்பட்ட பிறகுதான் உறவினர்கள் கப்பலுக்குள் சென்று, வந்தவர்களை வரவேற்க முடியும். கோர்லாண்டு கப்பலிலும், அதனோடு வந்த 'நாடேரி' என்ற கப்பலிலும் மஞ்சள் கொடிகள் பறக்கவிடப்பட்டன. அவ்விரு கப்பல்களிலும் நிறைய இந்தியர்களே இருந்தனர். இவ்விரு கப்பல்களும் பம்பாயிலிருந்து புறப்படும் போது அங்கு 'பிளேக்' என்னும் தொற்று நோய் பரவியிருந்தது. "பிளேக் கிருமிகள் ஒருவருடைய உடலில் முழு வளர்ச்சியடைவதற்கு 23 நாட்கள் ஆகும். கோர்லாண்டும், நாட்டேரியும் பம்பாயை விட்டுப் புறப்பட்டுப் பதினெட்டு நாட்களே ஆகின்றன. எனவே இன்னும் ஐந்து நாட்கள் கழித்தே இவ்விரு கப்பல்களும் துறைமுகத்திற்குள்

அனுமதிக்கப்பட வேண்டும்" என்று மருத்துவர்கள் கூறினர். எனவே காந்தியடிகளும் அவர் குடும்பமும் மேலும் ஐந்து நாட்கள் கப்பலிலேயே அவதிப்பட நேர்ந்தது.

இதற்குள் டர்பனில் காந்தியடிகளுக்கு எதிராக வெள்ளையரின் கிளர்ச்சி மிகுந்தது. கணக்கற்ற கண்டனக் கூட்டங்களும் ஊர்வலங்களும் நடந்தன. கோர்லாண்டு நாட்டேரி ஆகிய இரண்டு கப்பல்களையும் எப்படியாவது திருப்பியனுப்பிவிட வேண்டும் என்று பெரு முயற்சி செய்தனர். கப்பல்களின் உரிமையாளரான தாதா அப்துல்லா கம்பெனியாரை மருட்டினர். ஆனால் அவர்கள் அம் மருட்டலுக்கெல்லாம் அஞ்சவில்லை. கப்பலுக்குரிய நஷ்டஈட்டையும் கொடுப்பதாகச் சொன்னார்கள். அதற்கும் அப்துல்லா இணங்கவில்லை.

"மரியாதையாகத் திரும்பிப் போய்விடுங்கள். திரும்பிச் செல்லச் சம்மதித்தால் பயணச் செலவைத் திருப்பிக் கொடுத்துவிடுகிறோம். இல்லையென்றால் கடலில் தள்ளிக் கொன்றுவிடுவோம்" என்பன போன்ற அச்சுறுத்தும் கடிதங்கள் காந்தியாருக்கு வந்தன. காந்தியடிகள் அதற்கெல்லாம் அஞ்சவில்லை.

தென்னாப்பிரிக்க இந்தியர்கள் காந்தியடிகள் மேல் இரண்டு குற்றங்களைச் சுமத்தினர்.

1. இந்தியாவிலிருந்த போது காந்தியடிகள் நேடால் வெள்ளைக்காரர்கள் மீது அவதூறான குற்றங்களைக் கூறிப் பொய்ப் பிரசாரம் செய்தார் என்பது ஒன்று.

2. கோர்லாண்டு, நாட்டேரி என்ற இரண்டு கப்பல்கள் நிறைய இந்தியர்களை ஏற்றிக்கொண்டு வந்து நேடாலை இந்தியமயமாக ஆக்கக் காந்தியார் முயற்சிக்கிறார் என்பது மற்றொன்று.

இவ்விரு குற்றச் சாட்டுகளுக்கும் காந்தியடிகளுக்கும் இம்மியளவும் சம்பந்தமில்லை. நேடால் வெள்ளையர்கள்

செய்யாத எந்தக் கொடுமையையும் இவர் கற்பனை செய்து இந்திய நாட்டில் பரப்பவில்லை. அவர்களுடைய கொடுமைகளையெல்லாம் குறைத்துச் சொன்னாரே யொழிய மிகைப் படுத்திச் சொல்லவில்லை.

இரண்டாவது குற்றச் சாட்டு பொருளற்றது. காந்தியடிகளுக்குத் தம் மனைவி மக்களைத் தவிர வேறு எந்தப் பிரயாணியையும் உண்மையாகத் தெரியாது அவர் எந்த இந்தியரையும் தென்னாப்பிரிக்கா வரும்படி அழைக்கவுமில்லை.

காந்தியடிகள் டர்பன் துறைமுகத்திற்கு வெளியே கப்பலில் தங்கியிருந்தபோது கிருஸ்துமஸ் பண்டிகை வந்தது. கப்பலில் இருந்த கிருத்தவர்கள் அங்கு அவ் விழாவைக் கொண்டாடினர். ஒரு பெரிய விருந்தும் நடந்தது. கப்பலில் இருந்த வெள்ளையர்கள் காந்தியடிகளையும் விருந்தில் கலந்து கொள்ளுமாறு அழைத்தனர். அடிகளும் கலந்து கொண்டார். விருந்துக்குப் பிறகு விருந்தாளிகளில் சிலரும் விருந்து கொடுத்தவரும் பேசுவது மேனாட்டு முறை. அம்முறைப்படி காந்தியடிகளும் பேச அழைக்கப்பட்டார். பொதுவாகப் பண்டிகை விருந்துகளில் ஏதாவது மகிழ்ச்சியாகச் சிரிக்கச் சிரிக்கப் பேசுவது முறை. ஆனால் காந்தியடிகளுக்குச் சிரிப்பு வரவில்லை. நேட்டால் வெள்ளையரின் கிளர்ச்சியை எண்ணிப் புண்பட்டிருந்த அவர் உள்ளம், அக் கிளர்ச்சிக்குக் காரணமான மேலை நாட்டு நாகரிகத்தில் படிந்திருந்த குற்றங்களை எடுத்துக் காட்டினார். மேனாட்டு நாகரிகம் பலாத்காரத்தின் அடிப்படையில் அமைந்திருப்பதை எல்லோரும் உளங்கொள்ளும் வகையில் எடுத்து விளக்கினார். ஆனால் கீழை நாட்டு நாகரிகமோ அருளறத்தின் அடிப்படையில் இயங்குகின்றது என்பதையும் விளக்கினார்.

"அருளறத்தைப் பற்றி வாயால் பேசிப் பயனில்லை. அதைச் செயலில் காட்ட உம்மால் முடியுமா? நேட்டாவில்

உள்ள கிளர்ச்சிக்காரர்கள் நாளை உமக்குத் துன்பம் விளைவித்தால் அமைதியோடு அவைகளை ஏற்றுக் கொள்வீரா? துன்பம் செய்தவர்களை மன்னிப்பீரா?" என்று பல கிருத்தவர்கள் அடிகளைக் கேட்டனர்.

"கட்டாயம் அவர்களை மன்னிப்பேன். எனக்குத் துன்பஞ் செய்தவர்களுக்கு எதிராக ஒரு சுடு சொல் கூடக் கூறமாட்டேன். அவர்கள் மீது வழக்குத் தொடரமாட்டேன். இவற்றில் சிறிதேனும் நீங்கள் ஐயப்படவேண்டாம்" என்று அடிகள் ஆணித்தரமாக விடையிறுத்தார். அடிகள் தாம் கூறிய இச் சொற்களை உண்மைப்படுத்த வேண்டிய வாய்ப்பு அவருக்காகக் காத்துக்கிடந்தது.

கோர்லாண்டு கப்பலில் மஞ்சள் கொடி இறக்கப்பட்டது. கப்பல் டர்பன் துறைமுகத்திற்குள் புகுந்தது. ஆற்ருமையோடு கப்பலில் அடைந்திருந்த பிரயாணிகள் யாவரும் ஆவலோடு கரையில் இறங்கினர். நேடால் அரசாங்கத்தின் அட்டர்னியும், அடிகளின் நெருங்கிய நண்பருமான திருவாளர் எஸ்கோம்பு என்ற வெள்ளையர் "இங்குள்ள வெள்ளையர்கள் உங்கள் மீது தனிப்பட மிகவும் சினங் கொண்டிருக்கிருர்கள். நீங்கள் பகலில் இங்கு இறங்கி வந்தால் துன்பத்திற்கு ஆளாக வேண்டி வரும் எனவே இரவில் வருவதுதான் நல்லது" என்று காந்தியடிகளுக்குச் செய்தியனுப்பினர். காந்தியடிகளும் அதன்படியே செய்ய எண்ணினர் ஆனல் அரை மணி நேரத்திற்குப் பிறகு, தென்னுப்பிரிக்க இந்தியரின் வழக்கறிஞரான திருவாளர் இலாப்டன் என்பவர் காந்தியடிகளைக் காண்பதற்காக வந்தார். அவர் அடிகளைப் பார்த்து, "நீங்கள் இருட்டிய பிறகு வீடு திரும்பும் யோசனை எனக்குப் பிடிக்கவில்லை. திருடனைப் போல் இருட்டில் ஏன் நீங்கள் செல்ல வேண்டும்? நீங்கள் அச்சம் கொள்ள வேண்டிய அவசியமில்லை. இப்பொழுது டர்பனில் நிலைமை சீர்திருந்திவிட்டது; கிளர்ச்சிகள் அடங்கி விட்டன

உங்கள் மனைவியையும் குழந்தைகளையும் வண்டியில் ஏற்றி ரஸ்டம்ஜியின் வீட்டுக்கு முதலில் அனுப்பிவிடுங்கள். நாம் நடந்து செல்லுவோம்'' என்று சொன்னார்.

காந்தியடிகளுக்கு இலாப்டனின் யோசனை மிகவும் நல்லதாகப் பட்டது. திருடனைப் போல் இருளில் செல்வதை அவர் விரும்பவில்லை. தம் மனைவியையும் குழந்தைகளையும் முதலிலேயே வண்டியில் ஏற்றி அனுப்பிவிட்டார். பின் கப்பல் தலைவரின் அனுமதியைப் பெற்றுக் கப்பலிலிருந்து இறங்கினார். துறைமுகத்திலிருந்து ரஸ்டம்ஜியின் வீடு இரண்டு கல் தொலைவு இருக்கும். இலாப்டனுடன் நடந்தே புறப்பட்டார். துறைமுகத்திலிருந்து சிறிது தூரம் சென்றதும் சிறுவர்கள் காந்தியடிகளை இன்னாரென்று அறிந்து கொண்டனர். உடனே "காந்தி! காந்தி" என்று கூக்குரலிட்டனர். உடனே பெரியவர்களும் ஒன்று சேர்ந்து காந்தியைச் சூழ்ந்து கொண்டனர்.

நிலைமை மோசமாகிவிடும் என்பதை உணர்ந்த இலாப்டன், நடந்து செல்வதால் இனிப் பயனில்லை என்பதை உணர்ந்தார். அருகிலிருந்த ஒரு ரிக்ஷாக்காரனை அழைத்தார். காந்தியடிகள் எப்பொழுதும் மனிதன் இழுக்கும் வண்டியில் ஏறியதில்லை; ஏறவும் அவர் விரும்பியதில்லை. இலாப்டனின் வற்புறுத்தலுக்காக அரைமனதோடு வண்டியில் ஏற ஒருப்பட்டார். அதற்குள் பெருங் கூட்டம் கூடிவிட்டது. ரிக்ஷாக்காரனை மருட்டிச் சிலர் துரத்திவிட்டனர். இலாப்டனை இழுத்துப் புறம் விடுத்தனர். கூட்டம் காந்தியடிகளைச் சூழ்ந்து கொண்டது. வட்டமிட்ட வல்லூறுகளின் நடுவில் சிக்கித் தவித்த மாடப்புறாவின் நிலைமை அவருக்கு ஏற்பட்டது. அவர் புனித மெய்யைப் புல்லர் பலர் பற்றினர்; கல்லால் எறிந்து காயப்படுத்தினர். அடிகளின் உடல் தளர்ந்தது; தலை சுற்றியது; கண்கள் சுழன்றன; நா வற்றியது. கீழே விழுந்து விடாமல் இருக்க

அருகிலிருந்த ஒரு வீட்டின் முள் வேலியைக் கையால் பற்றிக் கொண்டார்.

அச்சமயம் டர்பன் நகரக் காவல் தலைவரான திருவாளர் அலெக்சாண்டரின் மனைவி அப்பக்கமாக வந்தார். வெறி கொண்ட கூட்டத்தைக் கண்டார். வெறி நாயைச் சூழ்ந்து தாக்குவது போல், மெலிந்த ஒரு இந்தியரைப் பலர் கூடித் தாக்கும் வெறிச் செயலைக் கண்டார். காந்தியடிகளை அவருக்கு முன்பே தெரியும். கூட்டத்தை விலக்கிக்கொண்டு அடிகளிடம் சென்றார். தம் கைக்குடையை விரித்துப் பிடித்து அவருக்கு நிழல் செய்தார். அதற்குப் பிறகு அடிகளை அடிக்க யாரும் உள்ளம் துணியவில்லை. அம்மையாரின் மீது அடிபடாமல் காந்தியடிகளை அடிக்கவும் அவர்களால் முடியவில்லை; செயலற்று நின்றனர். இதற்குள் அவ்வழியாக வந்த இந்தியர் ஒருவர், காவல் நிலையத்திற்கு ஓடிச் செய்தியைத் தெரிவித்தார். அலெக்சாண்டர் சில காவலர்களை அனுப்பிக் கூட்டத்தைக் கலைத்தார். காந்தியடிகளையும் அவ்வெறியர்களின் கையிலிருந்து மீட்டார். அன்று இரவு வரையிலும் காவல் நிலையத்திலேயே தங்கிச் செல்லுமாறு வற்புறுத்தினர். ஆனால் அடிகள் அதற்கு ஒப்பவில்லை. உயிருக்கு அஞ்சிக் காவல் நிலையத்தில் அடைக்கலம் புக அவர் விரும்பவில்லை. காவலர்கள் அடிகளை ரஸ்டம்ஜியின் இல்லத்தில் கொண்டு போய்ச் சேர்த்தனர். அடிகளின் அவலநிலையினைக் கண்ட ரஸ்டம்ஜி உள்ளம் வருந்தினர். கஸ்தூரிபாய் கண்ணீர் விட்டார். அவர் காயங்களுக்கு மருந்திட்டனர்; அடிபட்டுக் கன்றிப் போன இடங்களுக்கு ஒத்தடம் கொடுத்தனர். பலமான காயம் ஒன்று ஏற்பட்டிருந்தது; அதிலிருந்து குருதி வழிந்து கொண்டிருந்தது. அடியினால் உடல் முழுதும் தழும்புகள் காணப்பட்டன. இவ்வளவோடு தொல்லை தீர்ந்தது என்று எண்ணினர். ஆனால் தொல்லை மீண்டும் தொடர்ந்தது.

ரஸ்டம்ஜியின் வீட்டின் முன்பும் வெள்ளைக்கார வெறியர்கள் கூடிவிட்டனர். "காந்தியை வெளியே அனுப்பு!" என்று கூக்குரலிட்டனர். நேரம் ஆக ஆகக் கூக்குரல் வலுத்தது. வீட்டிலிருந்தோர் செய்வதறியாமல் திகைத்தனர். அலெக்சாண்டருக்குச் செய்தி எட்டியது; நேராக ரஸ்டம்ஜியின் வீட்டுக்கு வந்தார். கூட்டமோ மிகவும் பெரிதாக இருந்தது. அவர்கள் வெறியுணர்ச்சி எல்லை கடந்து இருந்தது. அவர்களை மருட்டித் துரத்துவது முடியாத செயல் என்பதை அறிந்தார்; ஒருகால் தொல்லையாகவும் முடியலாம் என்று கருதினார். கூட்டத்தை அமைதியுறும்படி கேட்டுக்கொண்டார். வீட்டுக்குள்ளிருந்த காந்தியடிகளுக்கு ஒரு ஆள் மூலம் செய்தியனுப்பினர். அச் செய்தி இதுதான்:

"உங்கள் நண்பரின் வீட்டையும், வீட்டிலுள்ள உடைமைகளையும், உங்கள் மனைவி மக்களையும் காப்பாற்ற விரும்புகிறீர்களா? அப்படியானால் நீங்கள் மாறுவேடம் பூண்டு இந்த வீட்டை விட்டுத் தப்பிச் செல்வது இன்றியமையாதது. இதைத்தவிர இந்த இக்கட்டான நிலையில் வேறு வழியே இல்லை!"

இந்தச் செய்தியைக் கேட்டதும் காந்தியடிகளின் உள்ளத்தில் பெரிய போராட்டம் எழுந்தது. மாறு வேடந் தாங்கிக் கோழையாய் வெளியில் செல்வதா? அல்லது எதிர் நோக்கியிருக்கும் துன்பத்திற்கு ஆட்பட்டு மடிவதா? என்பதுதான் அவர் உள்ளத்தெழுந்த போராட்டம். கோழையைப் போல் ஒளிந்து செல்ல அவர் விரும்பவில்லை. இருந்தாலும் தமக்காகத் தம் நண்பர் இன்னலுக்கு உள்ளாவதை விரும்பவில்லை. உடனே ஒரு இந்தியப் போலீஸ்காரனைப் போல் உடை உடுத்துக் கொண்டார். தமிழகத்து அங்கவஸ்திரம் ஒன்றைத் தட்டின் மீது சுற்றி, அதைத் தலைக்குக் கவசமாக அணிந்து கொண்டார். இந்திய வணிகர்களைப் போல் மாறுவேடம் அணிந்திருந்த

ஒற்றர்களின் துணையால், வீட்டுக்கு அண்மையிலிருந்த ஒரு குறுக்குச் சந்தில் வெளியேறி, ஒரு சாமான் கிடங்கில் புகுந்து, சாக்கு மூட்டைகளின் வழியாக இருட்டில் தட்டுத் தடுமாறிக் கடைசியில் வீதிக்கு வந்து சேர்ந்தார்கள். அந்தக் கிடங்கின் வாயிலிலும் வெள்ளையர் கூட்டம் நின்று கொண்டிருந்தது. ஆனால் வெளிவந்த இந்தியர்களில் காந்தியடிகளும் இருப்பார் என்று அவர்கள் கருதவில்லை. எல்லாருடைய கவனமும் ரஸ்டம்ஜியின் வீட்டு வாசலில் இருந்தது.

ரஸ்டம்ஜியின் வீட்டு வாசலில் இருந்த உயரமான படிக்கட்டில் ஏறிக்கொண்டு அலெக்சாண்டர் மக்களின் கொந்தளிப்பை அடக்க முயன்று கொண்டிருந்தார்; முடியவில்லை. மக்களின் கவனத்தை வேறு பக்கம் திருப்புவதற்காக ஒரு வழி செய்தார்.

"புளிப்பு இலந்தை மரத்தின் மீது
பொல்லாத காந்தியைத் தூக்கி விடு"—

என்று தாமே ஒரு பாட்டை இட்டுக் கட்டிக்கொண்டு பாடினார். அப் பாட்டைக் கேட்ட மக்கள் மிகவும் மகிழ்ச்சியடைந்தனர்; அவரோடு சேர்ந்து பாடவும் செய்தனர். இதற்குள் காந்தியடிகள் வெளியேறி விட்டார் என்பதை உணர்ந்த அலெக்சாண்டர் கூட்டத்தை நோக்கிக் "காந்தி இந்த வீட்டில் இல்லை. நீங்கள் கலைந்து செல்லலாம்" என்று கூறினார். மக்கள் அவர் பேச்சை நம்பவில்லை. சிலர் சினங்கொண்டனர்; சிலர் சிரித்தனர்.

"நல்லது! உங்களுக்கு என் பேச்சில் நம்பிக்கை இல்லாவிட்டால் உங்களில் இருவரை என்னுடன் அனுப்புங்கள். காந்தியை அவர்கள் கண்டுபிடித்தால் உங்களிடமே ஒப்படைத்து விடுகிறேன். இல்லாவிட்டால் நீங்கள் எல்லோரும் இங்கிருந்து சென்று விட வேண்டும். ரஸ்டம்ஜியின் வீட்டுக்கோ காந்தியடிகளின் குடும்பத்

தாருக்கோ நீங்கள் எவ்விதத் தீங்கும் செய்யக் கூடாது'' என்று கூறினார் அலெக்சாண்டர். கூட்டத்திலிருந்தவர் களும் அதற்கு ஒத்துக் கொண்டனர். அலெக்சாண்டர் தன்னுடன் வந்த இருவரையும் ரஸ்டம்ஜியின் வீட்டுக்குள் அழைத்துச் சென்று காட்டினார். வீட்டின் மூலை முடுக் கெல்லாம் தேடினர் அவ்விருவரும். பிறகு வெளியில் வந்து 'காந்தி இல்லை' என்று தெரிவித்தார்கள். சிலர் அலெக் சாண்டரின் சமயோசித புத்தியைப் பாராட்டிக் கொண்டு வீடு திரும்பினர்; சிலர் கோபத்தால் குமுறிக் கொண்டு வீடு திரும்பினர். காந்தியடிகள் அன்று இரவு முழுவதும் காவல் நிலையத்திலேயே தங்கியிருந்தார்.

காந்தியடிகள் காவல் நிலையத்தை விட்டு அடுத்த நாள் வெளியேறினார். அலெக்சாண்டர் துணைக்கு இரண்டு காவ லர்களை அனுப்பினார். ஆனால் விரைவில் காவலரின் பாது காப்புத் தேவையில்லாமல் போய் விட்டது; நிலைமையும் சீர்திருந்தி அமைதி ஏற்பட்டது. 'நேடால் அட்வைசர்' என்ற பத்திரிகையின் நிருபர் காந்தியடிகளைக் காண வந்தார். இந்தியாவில் காந்தியடிகள் செய்த செயல்களைப் பற்றியும் பேசிய பேச்சுகளைப் பற்றியும் சில கேள்விகள் கேட்டார். காந்தியடிகள் இந்தியாவில் பேசிய பேச்சுகளை அச்சிட்டு வைத்திருந்தார். அவைகளையும், 'பச்சைப் பிர சுர'த்தையும் நிருபரிடம் அடிகள் கொடுத்தார். "தென்னாப் பிரிக்காவில் பகிரங்கமாகச் சொல்லாத எந்தச் செய்தியை யாவது, இந்தியாவில் சொல்லியிருக்கிறேனா? நீரே பார்த்துக் கொள்ளுங்கள்!" என்று சொன்னார். அவருடைய பேச்சுக் களும், வெளியீடுகளும் செய்தித்தாள்களில் வெளிவந்தன. அவற்றைப் படித்தறிந்த நேடால் வெள்ளையர்கள் காந்தி யடிகள் மேல் குற்றமில்லை என்பதை உணர்ந்தனர். தம் வெறிச் செயலுக்காக வெட்கப்பட்டனர்.

இந் நிகழ்ச்சி நடந்தபோது இங்கிலாந்தில் குடியேற்ற நாடுகளின் அமைச்சராக இருந்தவர் திருவாளர் ஜோசப்

சேம்பர்லின் என்பவர். காந்தியடிகள் வெள்ளையர்களால் தாக்கப்பட்ட செய்தியைச் செய்தித் தாள்களின் மூலம் அறிந்தார். "காந்தியாரைத் தாக்கியவர்களைக் கைது செய்து அவர்கள் மீது வழக்கு நடத்தவும்' என்று நேடால் அரசாங்கத்துக்கு ஒரு கம்பிச் செய்தி விடுத்தார்.

உடனே நேடாலின் அரசாங்க வழக்கறிஞரான திரு வாளர் எஸ்கோம்பு காந்தியடிகளை அழைத்து, "கப்பலி லிருந்து இரவு நேரத்தில் இறங்கும்படி நான் செய்தியனுப் பினேன். அதைக் கேட்டு நடந்திருந்தால் இந்தத் துன்பங் கள் நேர்ந்திரா. ஆனால் திருவாளர் இலாப்டனுடைய யோசனையின்படி நடந்து, அதனால் நேரும் துன்பங்களை ஏற்க உறுதி கொண்டிருந்ததை நான் பாராட்டுகிறேன். அம்மாதிரி நடந்துகொள்ள உங்களுக்கு உரிமையுண்டு என் பதையும் ஒத்துக் கொள்கிறேன். இப்போது உங்கள் விருப்பமென்ன? உங்களைத் தாக்கியவர்களைக் குறித்து அடையாளம் சொல்ல முடியுமானால் அவர்களைக் கைது செய்து வழக்கு நடத்தத் தயாராக இருக்கிறேன். வழக்கு நடத்த வேண்டுமென்று திருவாளர் சேம்பர்லினிடமிருந்து செய்தி வந்திருக்கிறது" என்று கூறினார்.

இதற்குக் காந்தியடிகள் பின்வருமாறு விடையளித் தார் :

"யார் மீதும் வழக்கு நடத்த எனக்கு விருப்பமில்லை. இரண்டொருவரை நான் அடையாளம் கண்டு பிடித்துச் சொல்ல முடியும். அதனால் யாது பயன்? அவர்களுக்குத் தண்டனை வாங்கிக் கொடுப்பதில் எனக்குத் திருப்தி கிடை யாது. என்னைத் தாக்கியவர்கள் மீது எனக்குக் கொஞ்சமும் சினம் இல்லை; அவர்கள் மீது நான் குற்றம் சொல்லவும் மாட்டேன். குற்றம் உங்களைப் போன்ற சமூகத் தலைவர் களுடையது. நீங்கள் மக்களுக்குச் சரியான வழிகாட்டி யிருக்க வேண்டும். அப்படிச் செய்ய நீங்கள் தவறி விட்டீர் கள். இந்தியாவில் நான் இருந்தபோது, நேடால் வெள்ளைக்

காரர்கள் மீது ஏதோ நான் அவதூருகப் பொய்ப் பிரசாரம் செய்ததாக நம்பி அவர்கள் இம்மாதிரி நடந்து கொண்டிருக் கிருர்கள். உண்மையை உணரும்போது அவர்களே தங்க ளுடைய செயலுக்காக வருந்துவார்கள்.''

கிருஸ்துமஸ் விருந்தின் போது காந்திபடிகள் கப்பலில் என்ன சொன்ஞரோ அதைச் செயலில் காட்டிவிட்டார். காந்தியடிகள் வாய்ச்சொல் வீரரல்ல என்ற உண்மையை உலகம் உணர்ந்தது. கீழை நாட்டின் அருளறம் அடிகளின் செயலில் வெளிப்பட்டு ஒளி வீசியது.

* * *

ஆப்பிரிக்காக்கண்டம் ஒரு மாகண்டம். பல இந்தியாவை அதனுள் அடைத்து விடலாம். தென்ஞப்பிரிக்கா மட்டும் இந்தியா அளவு பரப்புடையது. இந்தியாவிற்கு வழி கண்டுபிடிப்பதற்காகப் புறப்பட்ட 'வாஸ்கோடகாமா' என்பவன் தென்ஞப்பிரிக்காவின் தெற்கு முனையைக் கண்டறிந்து அதற்கு 'நன்னம்பிக்கை முனை' (Cape of Goodhope) என்று பெயரிட்டான். அந்நாட்டின் இயற்கை வளத்தை அறிந்த மேலே நாட்டினர் பெரும் அளவில் அங்கு குடியேறத் தொடங்கினர். அவர்களில் குறிப்பிடத்தக்கவர் கள் ஆங்கிலேயரும் டச்சுக்காரரும். தென்ஞப்பிரிக்காவில் குடியேறிய டச்சுக்காரர்கள் 'போயர்கள்' என்ற பெயரால் அழைக்கப்பட்டனர். ஆங்கிலேயர்களின் குடியேற்ற நாடு கள் கேப்காலனி, நேடால் என்று அழைக்கப்பட்டன. போயர்களின் குடியேற்ற நாடுகள் திரான்ஸ்வால், ஆரஞ்சு ஃபிரி ஸ்டேட் என்று அழைக்கப்பட்டன.

தென்ஞப்பிரிக்காவில் குடியேறிய ஐரோப்பியர்கள் ஏராளமான நிலங்களைத் தங்களுக்குச் சொந்தமென்று வளைத்துக் கட்டிக் கொண்டார்கள். ஆனல் அந்நிலங்களைப் பண்படுத்தி, விளைநிலங்களாக்கிச் சாகுபடி செய்ய ஆட்கள்

கிடைக்கவில்லை. ஆப்பிரிக்காவின் ஆதிகுடிகள் நீக்ரோவர் என்று சொல்லப்படும் கருப்பு இனத்தார். அவர்களில் பல பிரிவுகள் உண்டு. தென்னுப்பிரிக்காவில் வாழ்ந்த நீக்ரோ வர் 'சுலு' என்று அழைக்கப்பட்டனர். இந்த சுலுக்கள் காட்டுமிராண்டிகள்; நாகரிகமற்றவர்கள்; வேட்டையாடி உண்ணும் பழக்கமுடையவர்கள்; மூடநம்பிக்கையில் மூழ்கி யவர்கள்; உடல் வலிமையும் முரட்டுத்தனமும் மிக்கவர் கள்; ஆனால் வெள்ளையரைக் கண்டால் அஞ்சி நடுங்கு வார்கள். இந்த சுலுக்களுக்கு உழவுத்தொழிலைப்பற்றி ஒன்றும் தெரியாது. எனவே உழவுத் தொழிலில் வல்லவ ரான இந்தியர்களை இந்தியாவிலிருந்து தருவித்துக்கொள்ள விரும்பினர். அப்போது இந்திய நாட்டை ஆண்ட சர்வாதி காரிகளான ஆங்கிலேயர்கள் அப்பணிக்கு ஒத்துழைப்பு நல்கினர்

பல்லாயிரக்கணக்கான இந்தியர்கள் தென்னுப்பிரிக்கா வுக்குக் கூலிகளாக ஏற்றுமதி செய்யப்பட்டனர். அதற்கு 'ஒப்பந்தக் கூலிமுறை' என்று பெயர். தென்னுப்பிரிக்கா விற்கு ஏற்றுமதியாகும் கூலிகள் ஐந்து ஆண்டுகள் தென் னுப்பிரிக்க வெள்ளையரிடம் கூலிகளாகப் பணியாற்ற வேண்டுமென்றும், அதன் பிறகு அவ்விந்தியர்கள் அங்கேயே சொந்தமாக நிலம் வாங்கிக்கொண்டு சுதந்தரமாக வாழலா மென்றும் தென்னுப்பிரிக்க வெள்ளையர்கள் கூறினர். சொந்த நாட்டில் வாழ வழியற்று வறுமையால் வாடிய பல்லாயிரக் கணக்கான இந்தியர்கள், வாழ்வு தேடித் தென்னுப்பிரிக்காவுக்குப் புறப்பட்டனர். அவ்வாறு புறப் பட்டவர்களில் பெரும்பாலோர் தமிழரே.

தென்னுப்பிரிக்கா சென்ற இந்தியர் பலர் ஒப்பந்த காலம் தீர்ந்தவுடன், சொந்தமாக நிலம் வாங்கிக் கொண்டு நல்ல முறையில் வசதியோடு வாழத் தொடங்கினர். இதை யறிந்த இந்திய வணிகர்களும் தென்னுப்பிரிக்கா சென் றனர். பிறகு படித்த இளைஞர்களும் வேலை தேடிச்

சென்றனர். எப்படியோ தென் ஆப்பிரிக்காவில் இந்தியரின் தொகை மிகுந்தது. இந்தியர்கள் நல்ல முறையில் வாழ்வதைக் காணப் பொறுக்காத வெள்ளையர், அவர்களுக்குப் பல வகையில் தொல்லை கொடுக்கத் தொடங்கினர். தென்னுப்பிரிக்க அரசாங்கமும் இந்தியர் நலனுக்கு எதிரான பல சட்டங்களை இயற்றியது. அச்சட்டங்களில் கொடியது தலைவரி. அதன்படி ஒப்பந்தக் கூலியாக வந்த ஒவ்வொரு இந்தியனும், ஒப்பந்தக் காலம் தீர்ந்தவுடன் ஆண்டுக்கு 25 பவுன் கொடுக்க வேண்டும். எவ்வளவுதான் முயற்சியோடு உழைத்தாலும், ஆண்டுக்கு 12 பவுனுக்கு மேல் சம்பாதிக்க எந்த இந்தியக் கூலியாலும் முடியாது. அப்படியிருக்கும் போது அவன் எவ்வாறு 25 பவுன் கொடுக்க முடியும்? ஒன்று அவன் தென்னுப்பிரிக்காவை விட்டு வெளியேற வேண்டும்; அல்லது மீண்டும் ஒப்பந்தக் கூலியாக வேண்டும்; வேறு வழியில்லை.

திருவளார் 'இலயனஸ் கர்டிஸ்' என்ற ஓர் ஆங்கிலப் 'பெருந்தகையாளர்' தென்னுப்பிரிக்காவுக்கு வந்தார். அவர் போகிற போக்கில் ஒரு வெடிகுண்டை வீசி எறிந்து விட்டுச் சென்றார். 'தென்னுப்பிரிக்காவில் இந்தியர்கள் கை ஓங்குவதற்கு இடங் கொடுத்தால், ஐரோப்பியர் வாழ்வுக்கே ஆபத்து வந்து விடும்' என்று சொன்னார், அந்த நுண்ணறிவாளர். உடனே திரான்ஸ்வால் அரசாங்கத்தார் 'ஆசியச் சட்டத்திருத்த மசோதா' ஒன்றைத் தயாரித்தனர்.

இந்த மசோதாவின்படி திரான்ஸ்வாலில் அப்போது வசித்த ஒவ்வொரு இந்தியரும் புதிதாக அநுமதிச் சீட்டுப் பெற வேண்டும். அதற்காக விண்ணப்பம் போட வேண்டும். விண்ணப்பத்தில் பெயர், சாதி, வயது, இருப்பிடம் ஆகியவற்றைக் குறிப்பிட வேண்டும். அவற்றோடு விண்ணப்பத்தை அங்கீகரிக்கும் அதிகாரி, ஒவ்வொருவருடைய அங்க அடையாளங்களையும் குறித்துக் கொள்வார். இவை மட்டுமல்லாமல் ஒவ்வொரு இந்தியரும் தம்

முடைய பத்து விரல்களையும் கறுப்பு மையில் தோய்த்து ரேகை அடையாளமும் கொடுக்க வேண்டும். இப்படிப் பதிவு செய்து கொள்ளாதவர்களுக்குத் திரான்ஸ்வால் மாநிலத்தில் வாழும் உரிமை கிடையாது. குழந்தைகளுக்காகப் பெற்றோர்கள் விண்ணப்பம் போட வேண்டும். பெண்களும் குழந்தைகளும் கூட அலுவலகத்துக்குச் சென்று பத்து விரல்களின் அடையாளத்தையும் பதிவு செய்ய வேண்டும். விண்ணப்பம் செய்து பெற்ற அநுமதிச் சீட்டை, இந்தியர் ஒவ்வொருவரும் எப்போதும் கையில் கொண்டு போகவேண்டும். எந்தப் போலீஸ்காரன் எப்போது கேட்டாலும் காட்ட வேண்டும். காட்டா விட்டால் அபராதமோ, சிறைவாசமோ விதிக்கப்படும். இத்தகைய கொடிய மசோதா இந்தியரின் தன்மானத்திற்குப் பெரிய சோதனை. இம்மசோதா 1906-ல் திரான்ஸ்வால் அரசாங்க கெஜட்டில் வெளியிடப்பட்டது. இதைப் படித்த காந்தியடிகளின் குருதி கொதித்தது.

இம் மசோதா நிறைவேருமல் இருப்பதற்கான பெரு முயற்சியில் காந்தியடிகள் ஈடுபட்டார். இந்தியர்களை யெல்லாம் ஒன்றுகூட்டி, இதன் கொடுமையை விளக்கினார். இம்மசோதாவை எதிர்த்து அமைதியான முறையில் ஒரு சாத்துவிகப் போராட்டம் நடத்தத் தீர்மானித்தார். இக்கொடிய சட்டத்தைக் "கறுப்புச் சட்டம்" என்றார்.

1907-ம் ஆண்டு ஜுலை மாதம் முதல் நாள் வந்தது. அன்று திரான்ஸ்வால் எங்கும் இந்தியர்கள் பெயரைப் பதிவு செய்து கொண்டு, அநுமதிச் சீட்டுப் பெறும் அலுவலகங்கள் திறக்கப்பட்டன. இவ்வலுவலகங்களின் முன் தொண்டர்கள் நின்றுகொண்டு அமைதியாக மறியல் செய்தனர். இவர்களுடைய மறியல் நல்ல முறையில் வெற்றி பெற்றது. இதனால் சினங்கொண்ட திரான்ஸ்வால் அரசாங்கம் காந்தியடிகள் உட்பட ஆயிரக்கணக்கான இந்தியர்களைச் சிறை செய்தது. சிறைக்கு வெளியில் கிளர்ச்சி

வலுத்தது. ஒவ்வொரு ஊரிலும் இந்தியர்கள் பெருந்திரளாகக் கூடிக் கண்டனக் கூட்டங்கள் நடத்தினர். கருப்புக் கொடிபிடித்துக் கொண்டு ஊர்வலம் நடத்தினர். அரசாங்கத்தாரும் பெரும் அளவில் அடக்கு முறையைக் கையாண்டனர்.

இறுதியில் திரான்ஸ்வால் மாநிலத் தலைவராக இருந்த தளபதி ஸ்மட்சு துரையவர்கள் சமாதானத்திற்கு வந்தார். "இந்தியர்கள் தாங்களாகவே வலுவில் சென்று தங்களுடைய பெயர் முதலிய விவரங்களைப் பதிவு செய்து கொள்ள வேண்டும். அப்படிச் செய்ய அவர்கள் ஒப்புக் கொண்டால் கறுப்புச் சட்டத்தைத் திரான்ஸ்வால் அரசாங்கம் நீக்கி விடும்" என்று சொன்னார்.

எதிரியை நம்பவேண்டும் என்பது காந்தியடிகளின் கொள்கை. எனவே ஸ்மட்சு துரைக்கு ஒரு வாய்ப்புக் கொடுத்து, அவர் நாணயத்தைப் பார்க்க வேண்டும் என்று காந்தியடிகள் எண்ணினார். எனவே சமாதானத்துக்கு ஒப்புக் கொண்டார். காந்தியடிகளின் இச்செயல் பெரும்பாலான இந்தியர்களுக்கு வியப்பைக் கொடுத்தது. காந்தியடிகள் சிறையிலிருந்து வெளிவந்ததும், இந்தியர்களை ஒன்று கூட்டி, "நாம் எல்லோரும் அலுவலகத்திற்குச் சென்று பதிவு செய்து கொள்ள வேண்டும்" என்று சொன்னார்.

"இந்த காந்தி என்ன மனிதர்? இவரென்ன நினைத்தபடி பேசுகிறாரே! கறுப்புச் சட்டத்தை எதிர்க்க வேண்டும் என்று சொன்னவரும் இவர்தான்; இன்று அதற்கு உடன்பட வேண்டும் என்று சொல்லுபவரும் இவர்தான். விந்தையாக இருக்கிறது" என்று பலர் சலித்துக் கொண்டனர். சிலர் எதிர்ப்பும் காட்டினர்.

திரான்ஸ்வால் மாநிலத்தில் சுமார் 50 பட்டாணியர்கள் வாழ்ந்தார்கள். இவர்கள் இந்தியாவின் வடமேற்கு

எல்லையில் வாழும் கூட்டத்தார். முரட்டுத்தனத்துக்கும் வெறிச் செயலுக்கும் பேர்போனவர்கள். கொல்லுவதும் கொலையுண்பதும் அவர்களுக்கு நிலாச் சோறு. கொட்டும் குருதி அவர்களுக்குத் தண்ணீர். மிகுந்த முன் கோபம் உடையவர்கள். அடிக்கடி தங்களுக்குள் சண்டையிட்டுக் கொள்வார்கள். சண்டையென்றால் அநேகமாகக் கொலை யில்தான் முடியும். தென்னாப்பிரிக்காவில் வாழ்ந்த பட்டா ணியர்களுள் 'மீர் ஆலம்' என்பவன் ஒருவன். காந்தியார் பேசிக் கொண்டிருந்த போது அவன் நடுவில் எழுந்தான்.

"நீங்கள் பேசுவதை நாங்கள் ஏற்றுக்கொள்ளத் தயாரா யில்லை. நீங்கள் தளபதி ஸ்மட்சு துரையிடம் பதினையாயிரம் பவுன் கையூட்டுப் பெற்றுக் கொண்டு இந்திய சமூகத்தைக் காட்டிக் கொடுத்து விட்டதாகக் கேள்விப்படுகிறோம். இதைப்பற்றி எங்களுக்குக் கவலை யில்லை. ஆனால் நாங்கள் ஒருநாளும் விரல் அடையாளம் கொடுக்கப் போவதில்லை. யார் ஒருவன் முதன் முதலில் விரல் அடையாளம் கொடுக்கப் போகிறானோ, அவனை நான் கொன்று போட்டு விடப் போகிறேன். அல்லாவின் மீது ஆணையாகச் சொல்கிறேன்! ஜாக்கிரதை!" என்று சொன்னான்.

மீர் ஆலம் இவ்வாறு சொன்னவுடன் கூட்டத்தில் இருந்தவர்கள் எல்லோரும் கலங்கிப்போனார்கள். ஆனால் காந்தியடிகள் மட்டும் எவ்விதக் கலக்கமும் கொள்ளவில்லை. "உலகத்தில் பிறந்தவர்கள் எல்லோருக்கும் மரணம் உண்டு. நோயினாலோ முதுமையினாலோ இறப்பதைக் காட்டிலும் சகோதரன் ஒருவனுடைய கையினால் கொல்லப் பட்டு இறப்பது மேலானது. அதற்காக வருத்தப்பட வேண்டியதில்லை. அப்படி என்னைக் கொல்லவரும் சகோதர னிடத்தில் கோபமோ வெறுப்போ இல்லாமல் நான் இறந்தேனானால், அதுவே நான் பெறக்கூடிய பெரும் பேறா கும். அதுதான் என் ஆத்மாவுக்கு நற்கதியளிக்கும்.

என்னைக் கொல்லும் பொருட்டுத் தாக்கிய சகோதரனும் பிற்காலத்தில் கட்டாயம் நான் குற்றமற்றவன் என்பதை உணர்ந்துகொள்வான்'' என்று கூறினார் காந்தியடிகள்.

பிப்ரவரி 10 ஆம் நாள் இந்திய சமூகத்தின் தலைவர்கள் முதன் முதலாகச் சென்று பதிவு செய்துகொள்ள வேண்டும் என்று முடிவாயிற்று. காந்தியடிகள் பிடிவாத மாகத் தாமே முதலில் சென்று பதிவு செய்துகொள்ள வேண்டும் என்று, அலுவலகத்தை நோக்கிச் சென்றார். அவர் பதிவுச் சாவடியை நெருங்கியதும், மீர் ஆலமும் சில பட்டாணியரும் அங்கு வந்தனர். கையிலிருந்த தடியால் காந்தியடிகளைத் தாக்கினர். ''ஹே! ராம்'' என்று கதறிய வண்ணம் அடிகள் மயங்கிக் கீழேவிழுந்தார். காந்தியடிகள் கீழேமயங்கிவிழுந்தும்கூட அப்பாவியர் அடிப்பதை நிறுத்த வில்லை. அருகிலிருந்த வெள்ளையர்கள் மீர் ஆலத்தையும் அவன் கூட்டாளிகளையும் பிடித்துக் காவல் நிலையத்தில் ஒப்படைத்தனர். காந்தியடிகளை அவருடைய நண்பரான டோக் பாதிரியாரின் இல்லத்துக்கு எடுத்துச் சென்றனர். அவருடைய கன்னம், உதடு எல்லாம் அடிபட்டுக் காயமாகி, அவைகளிலிருந்து குருதி கொட்டிக்கொண்டிருந்தது.

காந்தியடிகள் சிரித்துக்கொண்டிருப்பதுபோல் உள்ள சில படங்களை நாம் பார்த்திருக்கிறோம். அப்படங்களில் அவருடைய பல்வரிசையின் முன்பகுதி பொக்கையாக இருக்கும். அப்பொக்கை வாய்ச் சிரிப்பும் அழகாகத்தான் இருக்கும். அவருடைய முன்பற்களை உடைத்துப்பொக்கை யாக்கிய புண்ணிய கைங்கரியம், மீர் ஆலத்தினுடையது.

காந்தியடிகள் மயக்கம் தெளிந்து கண்விழித்துப் பார்த்தார். 'மீர் ஆலம் எங்கே?' என்று கேட்டார். ''மீர் ஆலமும் அவன் கூட்டாளிகளும் கைது செய்யப்பட்டனர்'' என்று அருகிலிருந்த நண்பர்கள் கூறினார்கள்.

"அது எப்படி? கூடவே கூடாது! அவர்களை உடனே விடுதலை செய்ய வேண்டும்!" என்றார் மகாத்மா. அவர்களை விடுதலை செய்யும்படியும், அவர்கள் மேல் எந்தவிதமான வழக்கும் போடக்கூடாதென்றும் அரசாங்கத் தலைமை வழக்கறிஞருக்குக் காந்தியடிகள் ஒரு கம்பிச் செய்தி விடுத்தார். உடல்நிலை சிறிது குணமடைந்ததும் தாமே முதலில் சென்று கைரேகைகளைப் பதிவுசெய்துகொண்டார். பிறகு திரான்ஸ்வால் இந்தியர் எல்லோரும் பதிவு செய்து கொண்டனர், ஆனால் ஸ்மட்சு துரை தம் பேச்சைக் காப்பாற்றவில்லை. கறுப்புச் சட்டத்தை நீக்க முடியாது என்று கூறிவிட்டார்.

காந்தியடிகள் மீண்டும் போராட்டத்தைத் துவக்கினார். 1908 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 16 ஆம் நாள் ஜோகன்னஸ்பர்க் ஹமீதியா மசூதியைச் சேர்ந்த திறந்த வெளியில் மாபெரும் பொதுக்கூட்டம் கூடியது. அரசாங் கத்தாரிடமிருந்து பெற்ற எல்லாப் பதிவுச் சீட்டுகளையும் எரியும் தீயில் போட்டுப் பொசுக்குவதென்று முடிவாயிற்று. தீ கொழுந்துவிட்டு எரிந்தது, அப்போது மீர் ஆலம் கூட் டத்திலிருந்து எழுந்து மேடைமீதமர்ந்திருந்த காந்தியடி களை நோக்கி வந்தான். கூட்டத்திலிருந்தவர்கள் என்ன நடக்குமோ என்று குலைநடுக்கம் கொண்டனர்.

"நான் தங்களை அடித்தது பெருங்குற்றம். அதற்காக மன்னிப்புக் கேட்டுக்கொள்கிறேன். என் பேரில் கோபம் வேண்டாம்" என்று சொல்லிவிட்டுத் தன் பதிவுச்சீட்டை எடுத்துத் தீயில் வீசினான். கூட்டத்தில் காது செவிடுபடும் படி ஆரவாரம் எழுந்தது.

காந்தியடிகள் மீர் ஆலத்தின் கையைப் பிடித்துக் குலுக்கி, "அப்பனே! உன்பேரில் எப்பொழுதும் எனக்குச் சினம் கிடையாது" என்று கூறித் தம் பொக்கைவாயால் புன்சிரிப்புக் காட்டினார்.

கறுப்புச் சட்டம் சம்பந்தமாக, டர்பன் நகரில் காந்தியடிகள் ஒரு பொதுக் கூட்டத்துக்கு ஏற்பாடு செய்திருந்தார். கூட்டம் நடந்து கொண்டிருந்தபொழுது ஒரு பட்டாணியன் கையில் ஓங்கிய தடியோடு காந்தியடிகளைத் தாக்குவதற்காக மேடையை நோக்கி ஓடிவந்தான். இதை முதலிலேயே எதிர்பார்த்திருந்த நண்பர்கள், காந்தியடிகளை அக்கொடியவன் கையிலிருந்து காப்பாற்றினர். கூட்டம் குழப்பத்தில் முடிவடைந்தது. அடுத்தநாள் காலையில் காந்தியடிகள் போனிக்ஸ் பண்ணைக்குப் புறப்பட்டார். அவருடைய நண்பர்கள் தாங்களும் போனிக்சுக்கு வர விரும்புவதாகக் கூறினர். காந்தியடிகள் அவசியமில்லை என்று கூறினார். ஆனால் நண்பர்கள் காந்தியடிகளைத் தனியே அனுப்ப அஞ்சினர். பட்டாணியரின் அச்சம் அவர்களைவிட்டு நீங்கவில்லை. காந்தியடிகள் தனியாக இருக்கும்போது எங்கு தாக்கிவிடுவார்களோ என்று அச்சப்பட்டனர். கடைசியாக நண்பர்களும் போனிக்சுக்குப் புறப்பட்டனர்.

இவ்விதம் காந்தியடிகளுக்குத் துணையாக நின்ற நண்பர்களில் குறிப்பிடத் தக்கவர் ஜாக் முதலியார். இவர் தமிழர்; கிருத்தவ சமயத்தைச் சார்ந்தவர். கிருத்தவர்கள் நம் நாட்டில்கூட, இந்து சமயச் சாதிப்பெயரைக் கூடவே ஒட்டவைத்துக் கொண்டிருப்பது வழக்கம். (ஆசீர்வாதம் பிள்ளை, ஆரோக்கியசாமிப் பிள்ளை, கிருஷ்ண பிள்ளை, சத்தியாபிள்ளை என்பன) மற்போரில் ஜாக் முதலியார் ஈடு எடுப்பற்றவர். கறுப்பராயிருந்தாலும் சரி, வெள்ளையராயிருந்தாலும் சரி, தென்னாப்பிரிக்காவில் அவரை வெல்ல ஆள் கிடையாது. அவர் புகழ் எங்கும் பரவியிருந்தது.

தம்முடன் இருக்கும்போது யாரும் பலாத்காரத்தை கொள்ளக்கூடாது என்று கூறி, அவர்களிடம் வாக்குறுதி வாங்கிக்கொண்ட பிறகே காந்தியடிகள் அவர்களைத் தம்முடன் அழைத்துச் சென்றார். தென்னாப்பிரிக்காவில் மழை

யில்லாத காலங்களிலெல்லாம் காந்தியடிகள் திறந்த வெளியிலேயே தூங்குவது வழக்கம். போனிக்சு பண்ணை யிலும் காந்தியடிகள் திறந்த வெளியிலேயே தூங்கினார். ஜாக் முதலியாரும் அவருடைய நண்பர்களும் இரவில் முறை போட்டுக் கொண்டு காந்தியடிகளைக் காவல் காத்தார்கள். பட்டாணியர்கள் இரவில் கள்ளத்தனமாக வந்து காந்தியடிகளைத் தாக்கிவிடுவார்களோ என்ற அச்சம்தான்.

"என்னுடைய உயிரைப்பற்றி எனக்குக் கவலையில்லை, என் சகோதரன் ஒருவனுடைய கையினால் மடிவதைவிட எனக்கு வேறு நற்பேறு என்ன வாய்க்கப் போகிறது" என்று காந்தியடிகள் அடிக்கடி கூறுவார். தமக்குக் காவல் அவசியமில்லை என்றும் கூறுவார். "உங்களுக்கென்ன கவலை. உங்களுக்கு உறக்கம் வரும்போது உறங்குங்கள்" என்று கூறிவிட்டு ஜாக் முதலியாரும் அவருடைய நண்பர்களும் காந்தியடிகளின் கண்களில் படாமல் எட்ட இருந்து காவல் புரிந்தனர்.

* * *

காந்தியடிகள் எழுதியுள்ள சத்திய சோதனையைப் படித்தவர்கள் 'காலன் பேக்'கை அறியாமலிருக்கமுடியாது. தென்னாப்பிரிக்காவில் வாழ்ந்த உயிர் நண்பர்களில் காலன் பேக்கும் ஒருவர். உருஷியப் பேரறிஞரான தால்ஸ்தாயின் பெயரால், ஒரு பண்ணையைக் காந்தியடிகள் தென்னாப் பிரிக்காவில் ஆரம்பித்தாரல்லவா? அப்பண்ணை காலன் பேக்கிற்குச் சொந்தமாயிருந்த 1100 ஏகர் நிலத்தில் ஏற் படுத்தப்பட்டது. காலன்பேக் அவ்வளவு நிலங்களையும் நன்கொடையாக வழங்கிவிட்டார்.

காலன்பேக் ஒரு செர்மானியர். உயரமான தோற்ற முடையவர், வடித்தமைத்த வெண்கலச் சிலை போன்ற கட்டமைந்த உடலினர், அஞ்சா நெஞ்சமுடையவர். புகழ்

பெற்ற மற்போர் வீரர். எத்தகைய எதிர்ப்புக்கும் அஞ்சாமல் ஈடுகொடுக்கும் முரடர். பட்டாணியர் தொல்லை ஏற்பட்டபோது, அடிகள் எங்குச் சென்றாலும் இவரும் நிழல்போல் தொடர்ந்து செல்வார்.

ஒருநாள் காந்தியடிகள் ஒரு பொதுக் கூட்டத்துக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தார். அக்கூட்டத்தில் கலகம் விளைப்பதற்கு வேண்டிய முயற்சியில் வெள்ளையர் சிலர் ஈடுபட்டிருப்பதாகக் காலன்பேக்கிற்கு செய்திவந்தது. உடனே தற்காப்பிற்காகக் கைத்துப்பாக்கி ஒன்றை எடுத்து இடுப்பில் மறைத்துக்கொண்டார். இதை எவ்வாறோ அறிந்த காந்தியடிகள், "நண்பரே! அந்தக் கைத்துப் பாக்கியை எடுத்து வீசி எறிந்துவிடுங்கள். நீங்கள் கடவுளை நம்புகிறீர்களா? அல்லது இக் கைத் துப்பாக்கியை நம்புகிறீர்களா? என்னைப் பாதுகாக்க நீங்கள் வரவேண்டிய இன்றியமையாமை எதுவுமே இல்லை. நான் ஆண்டவன் கையில் பாதுகாவலோடு இருக்கிறேன். நான் இவ்வுலகில் ஏதேனும் நற்செயல் செய்ய வேண்டுமென்று ஆண்டவன் விரும்பினால், நிச்சயம் அவன் என்னைக் காப்பாற்றுவான்" என்று கூறினார்.

*　　*　　*

பீகார் மாநிலத்தில் 'சம்பரான்' என்பது ஓர் மாவட்டம். இமயமலையின் அடிவாரத்திலே அது உள்ளது. அம்மாவட்டத்திலிருந்த குடியானவர்கள், தோட்ட முதலாளிகளால் அடைந்த கொடிய இன்னல்களைப் போக்குவதற்காகக் காந்தியடிகள் அங்கு ஒரு சாத்வீகப் போராட்டத்தைத் துவக்கியிருந்தார். காந்தியடிகள் சம்பரானில் காலை எடுத்து வைத்தவுடன் அம்மாவட்டக் கலெக்டர், ஓர் அவசர ஆணை விதித்தார். காந்தியடிகள் உடனே அம்மாவட்டத்தை விட்டு வெளியேற வேண்டும் என்பதுதான் அக்கட்டளை. காந்தியடிகளா இம்மிரட்ட

லுக்கு அஞ்சுவார்? மாபெரும் அரசியல் மேதையான ஸ்மட்சு துரையே அடிகளின் அஹிம்சைப் போரில் திக்குமுக்காடிப் போனுர். கேவலம் மாவட்டத் தலைவருக்கா அடிகள் அஞ்சுவார். அம்மியும் குழவியும் ஆகாயத்தில் பறக்கும் போது, உமியும் தவிடும் காந்தியடிகளை என்ன செய்ய முடியும்?

"உங்கள் ஆணையை நான் பெற்றுக்கொண்டேன். ஆனால் நான் தொடங்கியுள்ள வேலை முடியும் வரையில் சம்பராணை விட்டு நான் வெளியில் செல்லுவது இயலாது" என்று ஒரு தாளில் எழுதிக் கொடுத்தனுப்பினுர் அடிகள். அக்காலத்தில் கலெக்டர் என்ருல், ஆண்டவனின் அவதாரம். அதுவும் வெள்ளைத்தோல் கலெக்டர்! கலெக்டரின் ஆணையை ஒருவன் அவமதிப்பதென்ருல், ஆங்கில அடிவருடிகளின் தீர்ப்புப்படி, அவனுக்கு 'ரௌரவாதி நரகம்'தான். காந்தியடிகளின் பதில் இந்திய நாட்டையே ஒரு கலக்குக் கலக்கி விட்டது. ஏன்? பெரு வியப்பிலாழ்த்தி விட்டது எனலாம். யாரோ காந்தியாமே! அவர் வெள்ளைக்காரக் கலெக்டரின் ஆணையையே மீறி விட்டாராமே! அஞ்சா நெஞ்சரப்பா அவர்!" என்றெல்லாம் மூக்கில் விரல் வைத்துப் பேசினர் இந்திய மக்கள்.

சம்பரான் போராட்டத்தின் போது மற்ருெரு குறிப்பிடத்தக்க நிகழ்ச்சி நடந்தது. சம்பரானிலிருந்த வெள்ளைக்காரத் தோட்ட முதலாளி ஒருவர், "காந்தியைக் கொல்வதற்கென்றே, அரசாங்கத்திடமிருந்து நான் துப்பாக்கி லைசென்ஸ் வாங்கியிருக்கிறேன். காந்தி என் எதிரில் வந்தால் சுட்டுப் பொசுக்கி விடுவேன்" என்று எல்லாரிடமும் சொல்லிக் கொண்டிருந்தார். இச் செய்தி காந்தியடிகளின் காதுக்கு எட்டியது. ஒரு நாள் மாலை காந்தியடிகள் தனியாக அந்தத் தோட்ட முதலாளியின் இல்லத்திற்குச் சென்ருர்.

"நீங்கள் என்னைக் கொல்வதற்கென்றே துப்பாக்கி வாங்கி வைத்திருப்பதாகக் கேள்விப்பட்டேன். நீங்கள் அவ்வாறு செய்ய விரும்பினால், இப்போது என்னைத் தாராளமாகக் கொன்றுவிடலாம். அதற்கென்றே நான் தனிமையில் வந்திருக்கிறேன்" என்று அடிகள் கூறினார். பாவம்! அவ்வெள்ளைக்காரர் வாயடைத்துப் போய்ச் சிலையாக நின்றார்.

* * *

திரான்ஸ்வால் மாநிலத்தின் தலை நகரான ஜொகன்னஸ்பர்க்கில் ஒரு கூலிச் சேரி இருந்தது. அதில் வாழ்ந்தவர்கள் நீகிரோவர்களும், இந்தியர்களுமே. அந் நகரிலிருந்த தங்கச் சுரங்கங்களில் வேலை செய்து வந்த கூலிகளே அச் சேரியில் வாழ்ந்தனர். அந்தக் கூலிச் சேரியில் கூட இந்தியர்கள் சொந்தமாக நிலம் வாங்கிக் கொள்ள முடியாது. அதில் வாழ்ந்த இந்தியர்கள், குடியிருப்பு நிலத்தை நகரசபையாரிடமிருந்து 99 ஆண்டுக் குத்தகைக்கு வாங்கிக் கொண்டிருந்தனர். மக்களின் தொகை பெருகிய அளவுக்குச் சேரியின் பரப்பு மிகவில்லை. அதனால் நெருக்கடி மிகவும் ஏற்பட்டது. சுகாதார வசதிகளும் மிகக் குறைவு. சரியான நடைபாதைகள் இல்லை; சாக்கடை கிடையாது; விளக்குகளும் வீதியில் கிடையாது. கல்வியறிவற்ற கூலிகளான அம்மக்களுக்குச் சுதாதாரத்தைப்பற்றி என்ன தெரியும்? நாயினும் கேவலமாக வாழ்ந்தார்கள். இந்நாதியற்ற இந்தியரின் நிலை வெள்ளைக்கார நகர சபையாரின் குருட்டுக் கண்களுக்குப் புலனாகவில்லை.

இச் சேரியில் கரும்பிளேக்கு என்னும் கொடிய கொள்ளை நோய் பரவியது. திடீரென்று இருபத்து மூன்று பேரைத் தாக்கியது. காந்தியடிகளுக்கு இச் செய்தி எட்டியது. காந்தியடிகளின் அலுவலகத்தில் அப்போது கல்யாண்தாஸ், மானக்லால், குன்வந்தராய் என்ற மூவர் பணியாற்றிக் கொண்டிருந்தனர். அந் நண்பர்களை

அழைத்து, "கூலிச் சேரியில் கொள்ளை நோய் பரவியிருக்கிறது. அதனால் அவதிப்படுபவர்கள் இந்தியர்கள். அவர்களுக்குத் தொண்டு செய்ய நான் செல்லுகிறேன். அப்பணியில் உயிரை இழக்க நேர்ந்தாலும் நேரலாம். நீங்கள் என்னுடன் ஒத்துழைக்க விரும்புகிறீர்களா?" என்று கேட்டார். அந் நண்பர்களும் மனமுவந்து அப்பணியை ஏற்றுக் கொண்டனர். காந்தியடிகளின் பொருட்டுத் தம் உயிரையும் அளிக்கச் சித்தமாக அவர்கள் இருந்தார்கள்.

இரவெல்லாம் கண்விழித்துத் தம் நண்பர்களுடன் நோயாளிகளுக்குப் பணிவிடை செய்தார். அவர்கள் ஆடைகளைத் தூய்மை செய்தார். நோயாளிகளுக்கு அடிக்கடி தைரியம் கூறி உற்சாகப்படுத்தினார். நகரசபையின் ஒத்துழைப்பைப் பெற்று அந்நோயைக் கூலிச் சேரியிலிருந்து விரட்டியடித்தார். அதன் பிறகு நகரசபையார் கூலிச்சேரியின் முன்னேற்றத்தில் அதிக அக்கறை காட்டத் தொடங்கினர். காரணம், மீண்டும் கொள்ளை நோய் ஏற்பட்டு வெள்ளையரையும் பற்றிக் கொண்டால் என்ன செய்வது என்ற அச்சம்தான்.

*　　　*　　　*

நம்மை அடிக்கும் ஒருவனைத் திருப்பியடிப்பது மிகவும் எளிது. ஆனால் ஒருவன் அடிக்கும் போது அதைப் பொறுமையோடு ஏற்றுக் கொள்வது அரிது. அப்படி ஏற்றுக் கொண்டாலும் அடித்தவனை மன்னிப்பது மிக அரிது. மன்னிப்பதோடு அமையாமல் நமக்குத் துன்பம் செய்தவனுக்கு நன்மை செய்தல் மிக அரிது. இது யாரால் முடியும் மலைபோன்ற துன்பத்தையும் தாங்கும் எஃகு உள்ளம் படைத்த அஞ்சா நெஞ்சர்களால்தான் முடியும்; கோழைகளால் முடியாது.

காந்தியடிகள் அஞ்சா நெஞ்சர். அஞ்சாமையோடு அவர் விளங்கியதால்தான் பிறருடைய அச்சத்தைப் போக்க

முடிந்தது. ஒரு வீரனுல்தான் வீரர்களை உருவாக்க முடியும். வீரன் என்ருல் 6 அடி உயரமும்தடித்த உடலும், பருத்த மீசையும், விழித்த கண்களும் உடைய ஒருவன் நம் மனக் கண்ணில் தோற்றமளிப்பான். ஆனுல் காந்தியடிகள் மெலிந்த உடலினர்; எளிய தோற்றமுடையவர். ஆனுல் அவருடைய உள்ளம் இரும்பு.

"இந்த எளிய மனிதர் பயனற்றுக் கிடந்த களிமண்ணிலிருந்து, ஆயிரமாயிரம் வீரர்களை உருவாக்கும் ஆற்றலைப் பெற்றிருக்கிருர். என்னே வியப்பு" என்று கூறுகிருர் கோகலே.

"பிறர் உள்ளத்தில் ஆண்மையைத் தூண்டிவிடும் ஒரு பேராற்றலைக் காந்தியடிகள் பெற்றிருந்தார். அவர் பேச்சு மிகவும் எளிமையானது; ஆடம்பரமற்றது. அவர் தோற்றம் தூய்மையானது; அவர் குரலில் ஒரு விதக் குளிர்ச்சி தோன்றும்; ஆனுல் அக் குளிர்ச்சிக்குப் பின்னர் எரிமலையும், ஊழித் தீயும் பதுங்கியிருக்கும். அவற்றின் வெப்பம் நம் உள்ளத்தின் உயிர் நாடியில் மோதி, உணர்ச்சி வெள்ளம் பெருக் கெடுத்தோடுமாறு செய்யும்," என்று நேரு அடிகளின் அஞ்சாமையையும் ஆண்மையையும் படம் பிடித்துக் காட்டுகிருர்.

* * *

ஆங்கிலேயரின் பீரங்கி முனைக்கும் அஞ்சாதவர் காந்தியடிகள். அடிகளைக் கண்டு அரசியல்வாதிகள் அத்தனை பேரும் நடுங்குவார்கள். ஏனென்ருல் அவர் மிகவும் கண்டிப்பான பேர்வழி. தம் ஆசிரமத்தில் ஒரு சிறு தவறுகூட நடக்கவிடமாட்டார். இத்தகைய அஞ்சாநெஞ்சர் ஒரு பெண்மணியைக் கண்டு அஞ்சி நடுங்குவார். யார் இந்தப் பெண்மணி? கஸ்தூரிபாய்.

சபர்மதி ஆசிரமத்தில் 200 பேர்களுக்கு மேல் வாழ்ந்தார்கள். அவர்கள் பல பிரிவினராகப் பிரிந்து உணவு

சமைத்து உண்டனர். கஸ்தூரிபாய்க்கும் அப்பணியில் பங்குண்டு. அவர் காந்தியடிகளுக்கும், குழந்தைகட்கும் இன்னும் பலருக்கும் உணவு சமைக்கும் பணியை மேற் கொண்டிருந்தார். ஏறக்குறைய நாள் தோறும் முப்பது பேருக்குச் சமைக்க வேண்டும். முதியவராக இருந்தாலும் கஸ்தூரிபாய் வேலையில் சுறுசுறுப்பாக இருப்பார். சமைய லறை அவர் ஆட்சிக்கடங்கிய மாநிலம். அதில் அவருடைய செங்கோல் தங்குதடையின்றி ஆட்சி புரியும்.

மற்ற சமையற் கூடத்திலிருப்பதைவிட இவருடைய கூடத்தில் வேலை எப்பொழுதும் அதிகமாக இருக்கும். சபர்மதி அரசியற் போராட்டத்தின் தலைநகரம். எதிர் பாராத விருந்தாளிகள் எப்போதும் வந்தவண்ணமிருப்பார் கள். கஸ்தூரிபாய் வேலைகளையெல்லாம் முடித்துவிட்டுச் சோர்ந்து போய்த் தம் அறையில் 'உஸ்! அப்பாடா!' என்று தலைசாய்த்துக் கண்ணை மூடுவார். விழியை இமை தழுவும் நேரத்தில் 'பா' என்று கதவுக்குப் பக்கத்திலிருந்து மெல்லிய ஓசை வரும். (ஆசிரமத்தில் கஸ்தூரிபாயைப் 'பா' என்றே எல்லோரும் அழைப்பர்) 'என்ன?' என்று எரிச்சலோடு எழுந்து வருவார் அன்னையார்.

காந்தியடிகள். புரவலன் வாயிலில் ஏங்கி நிற்கும் இரவலன் போல் ஒடுங்கி நிற்பார். "எதிர்பாராத விருந் தாளிகள் வந்திருக்கிறார்கள். மூன்று பேருக்கு..." என்று இழுப்பார்.

"சமையலாக வேண்டும், அப்படித்தானே" என்று வேகமாக முடிப்பார் அன்னையார். காந்தியடிகள் புன் முறுவல் பூப்பார்.

அன்னையார் பொறுமையை இழந்து விடுவார். சக்திக்குமேல் உழைக்க யாரால் முடியும்? சலிப்பு இருக் காதா என்ன?

ஒரு நாள் கஸ்தூரிபாய் தம்முடைய வேலைகளை யெல்லாம் முடித்துவிட்டுத் தம் அறையில் சென்று உறங்கி விட்டார். திடீரென்று விருந்தாளிகள் வந்துவிட்டனர். அதுவும் குறிப்பிடத்தக்கவர்கள். பண்டித மோதிலால் நேருவும் அவர்களில் ஒருவர். அடிகளுக்குக் கையும் ஓட வில்லை; காலும் ஓடவில்லை. சமையலறைக்குச் சென்றார். அன்னைக்குத் துணைபுரியும் இளைஞன் சமையலறையைத் தூய்மைப்படுத்திக் கொண்டிருந்தான். அவனை மெதுவாக அழைத்தார். வாயில் விரலைவைத்துச் சத்தம் செய்யாமல் இருக்குமாறு அச்சிறுவனுக்குச் சைகை காட்டினார். சீக்கிரம் சமையல் ஆகவேண்டுமென்று மெதுவாக அவன் காதில் சொன்னார். "கஸ்தூரிபாயின் உறக்கத்தைக் கலைக்கக் கூடாது; அவள் விழித்துக் கொள்ளாத முறையில் ஓசை யின்றிச் சமையல் நடக்கவேண்டும்" என்று எச்சரித்தார். தாமே அச்சிறுவனுக்கு அருகிலிருந்து ஒத்தாசை செய்தார் காய்கறி நறுக்கினார்; மாப்பிசைந்தார்.

அச்சிறுவன் கைதவறுதலாக ஒரு பாத்திரத்தைத் தவற விட்டுவிட்டான். அதன் ஓசை உறங்கிய கஸ்தூரிபாயை விழித்தெழுமாறு செய்தது. பூனைதான் சாமானை உருட்டு கிறது என்று எண்ணிய அன்னையார் அறையிலிருந்து வெளி யில் வந்தார். சமையல் வேலை விருவிருப்பாக நடந்துகொண் டிருந்தது. அடிகள் அரிவாள் மணையில் காய்கறி நறுக்கிக் கொண்டிருந்தார். அன்னையாருக்கு நிலைமை புரிந்து விட்டது.

"ஏன்? என்னைத் துணைக்கு அழைக்கக் கூடாதா? நான் இக்காரியத்தைச் செய்யமாட்டேனா?" என்று கடிந்து கொண்டார்.

"கஸ்தூரிபாய்! உனக்குத் தெரியாதா? இது மாதிரி சந்தர்ப்பங்களில் உன்னைக் கண்டு நான் மிகவும் அஞ்சு கிறேன்!" என்று காந்தியடிகள் கூறினார்.

"என்ன? என்னைக் கண்டா அஞ்சுகிறீர்கள்?" என்று கூறிச் சிரித்தார் அன்னையார்.

## 4. தீண்டாமை

"தீண்டாமை என்பது இந்து சமயத்திலுள்ள ஒரு கறை. தீண்டாமை இந்து சமயத்தின் பாற்பட்டதென்று நான் நம்பவில்லை. அது அம்மதத்தின் பாற்பட்ட தென்று சொல்லப்படின், அந்த இந்து சமயம் எனக்குரியதாகாது. தன்னால் ஒடுக்கப்பெற்றவரை உயர்த்துவது, இந்து சமயத்தி லுள்ள மாசைத் துடைப்பதாகும். அரிசனங்களைச் சாதி இந்துக்கள் நடத்தும் முறை, சமய அறிவுக்கும், அருள் ஒழுக்கத்துக்கும் மாறுபட்ட செயலாகும்.

தீண்டாமை இந்து சமயத்தின் உயிர்நாடி என்று என் முன்னிலையில் உறுதிப்படுத்தப்படுமேல், இந்து சமயத்துக்கு நேர்மாறாக யான் கிளர்ச்சி செய்யப் புறப்படுவேன். பல நன்மனமுடைய இந்துக்களும், தீண்டாமை இந்து சமயத் தின் கூறு என்று கூறிக்கொண்டு, சீர்திருத்தக்காரரைச் சமயத்துக்குப் புறம்பானவரென்று கருதுகிறார்கள். தீண் டாமை இந்து சமயத்தின் ஒரு கூறாயின், என்னை இந்து என்று சொல்லிக் கொள்வதை விடுத்து, என் கோரிக்கை களை நிறைவேற்ற வல்ல வேறு சமயம் புகுவேன். ஆனால் தீண்டாமை இந்து சமயத்தின் ஒரு கூறு என்று எனக்குத் தோன்றவில்லை.

தீண்டாமைக்கு இடந் தந்தமையால் இந்து சமயம் பாவத்துக்கு இடந் தந்ததாகிறது. அப் பாவம் நம்மையும்—இஸ்லாமியர் உட்பட்ட எல்லா இந்தியரையும்—ஆங்கில ஏகாதிபத்தியத்தில் பறையராக்கி யிருக்கிறது இந்துக்கள் தீண்டாமையைத் தமது சமயத்தில் ஒரு அங்கமாகக் கொள்ளும் வரையில், தங்களுடன் பிறந்த இனத்தாரைத் தீண்டுவது பாவம் என்று எண்ணும் வரையில், நம்

நாட்டுக்கு விடுதலை கிட்டுவது அரிது. நம் உடன் பிறந்தாரை ஒடுக்கிய பாவம் நம்பாலுண்டு அவர்களை நாம் பூமியில் ஊர்ந்து போகுமாறு செய்கிறோம். வண்டிகளில் ஏற வொண்ணாதவாறு தள்ளுகிறோம். இவைகளைவிட ஆங்கில ஆட்சி நமக்கென்ன கொடுமை செய்துவிட்டது? நம்பாலுள்ள கொடுமைகளை நாம் களைதல் வேண்டும். எளிய மக்களுக்கு ஆதரவு நல்காத வரை, நாட்டு விடுதலை பற்றிப் பேசுவது வீண். எளிய சகோதரர்களை ஒடுக்கும் பாவத்தில் மூழ்கியிருக்குமட்டும் நாம் விலங்குகளைவிட நல்லவர்களல்ல.

நான் வீடுபேறு எய்த விழைகிறேன். மீண்டும் உலகில் பிறக்க விரும்பவில்லை. பிறக்க நேரின், நான் தீண்டாதவனாகப் பிறந்து, அவர்கள் துயரங்களையும், துன்பங்களையும் அநுபவிப்பதில் பங்காளியாய், என்னையும் அவர்களையும் இரங்கத்தக்க நிலையினின்றுங் கரையேற்ற முயன்று உழைத்தல் வேண்டும். ஆதலால், மீண்டும் பிறப்புண்டேல் நான் பஞ்சமனாகப் பிறக்க வேண்டுமென்பது இறைவனுக்கு நான் விடுக்கும் வேண்டுகோள்.

தீண்டாமை சமயத்தின் விளைவன்று; சாத்தானின் சூழ்ச்சியால் விளைந்தது. தங்கள் அரசியல் உரிமைப் பேற்றிற்குத் தாழ்ந்த வகுப்பாரைக் கொள்ளையிடும் இந்து சகோதரர்களுக்கு எச்சரிக்கை செய்கிறேன். தீண்டாமையை ஒழிப்பது, சாதி இந்துக்கள் இந்து சமயத்துக்கும் தங்கட்கும் செய்ய வேண்டிய தலையாய கடமையாகும். அத்தூய கடமை நிறைவேறவேண்டிய இடம் சாதி இந்துக்கள் சமூகமாகும்; அது தீண்டாத மக்கள் சமூகத்திலில்லை. ஒரு சொட்டு நஞ்சு ஒரு கலப்பாலுக்குக் கேடு சூழ்வது போலத் தீண்டாமை இந்து சமயத்துக்கு கேடு சூழ்கிறது.''

மேற்கூறிய அரிய பொன் மொழிகள் யாவும், தீண்டாமை பற்றி அடிகள் உதிர்த்த பருமுத்துக்கள்.

தீண்டாமை வெறுப்பு, அடிகள் அரசியல் வாழ்வில் குதித்த பிறகு திடீரென்று ஏற்பட்ட 'ஞானோதய'மல்ல. இது அடிகளின் வாழ்வில் இளமையிலேயே முகிழ்த்த இயல்பூக்கம். 'சமுதாயத்தில் ஒருவன் உயர்ந்தவனாகக் கருதப்படுகிறான்; மற்றொருவன் பஞ்சமனாக, தீண்டப் படாத எச்சிற் புழுவாக, சேரியிலே ஒதுக்கப்பட்ட பாமரனாக வாழ்கிறான். ஏன்? ஆண்டவன் தான் உலக மக்களைப் படைத்தான். அவன் படைப்பில் உயர்வு தாழ்வு, வேறுபாடு இருக்கலாமா? ஆண்டவன் மக்கள் தாமே எல்லோரும்? அப்படியிருக்க, ஒரு மகன் உயர்ந்தவனென் றும், மற்றொரு மகன் தாழ்ந்தவன் என்றும் இருப்பது எப்படி இயலும்?' என்றெல்லாம் அவருடைய பிஞ்சுள்ளம் எண்ணிக் குழம்பியது.

அவர் வீட்டில் மலங்கழுவிய யுகன் என்னும் தோட்டி யைத் தொட்டால் தீட்டு என்று அவருடைய அன்னையார் கூறிய போதெல்லாம் அவருடைய உள்ளம் வருந்தியது. யாரும் பார்க்காத நேரத்தில் அடிகள் யுகனைத் தொட்டுப் பார்த்தார். எந்தவித வேறுபாடும் அவருக்குத் தெரியக் காணோம். யுகனைத் தீண்டிப் பார்த்ததில் அவருக்கு அளவில்லாத மகிழ்ச்சி; ஏதோ ஒரு செயற்கரிய செயலைச் செய்து விட்டது போன்ற உள்ள நிறைவு. இந் நிகழ்ச்சி யைச் சத்திய சோதனையில் பின்வருமாறு குறிப்பிடு கிறார் :—

"தீண்டாமை பாவம் என்ற எண்ணம் எனக்குப் பன்னிரண்டாவது வயதிலேயே ஏற்பட்டது. எமது வீட்டு மலங்கழுவும் தோட்டி யுகன் என்பவனைத் தொடுவது எப் படித் தீட்டாகும் என்று என் அன்னையாரைக் கேட்பது வழக்கம்."

காந்தியடிகள் தென்னாப்பிரிக்காவில் டர்பன் நகரில் வழக்கறிஞராகப் பணியாற்றிக்கொண்டிருந்தபோது குறிப் பிடத்தக்க நிகழ்ச்சி ஒன்று நடந்தது. கஸ்தூரிபாய்

வைணவ சமயத்தில் அளவற்ற பற்றும் பெருமதிப்பும் கொண்டிருந்தார். வைதீகக் கொள்கைகளில் உடும்புப் பிடியாக இருந்தார். தம் குல ஆசாரத்திலிருந்து இம்மியள வும் தவறுவதற்கு அவர் ஒருப்படார். இத்தகைய ஒரு பெண், சாதி சமயம், உயர்வு, தாழ்வு ஆகிய எண்ணங்களை கடந்து பரந்த நோக்கோடு வாழும் மகாத்மாவோடு வாழ்க்கை நடத்துவதென்பது அவ்வளவு எளிதில் நடக்கக் கூடிய செயலா? கஸ்தூரிபாய் படித்தவருமல்ல; படித் திருந்தால் ஓரளவு உலகின் நடைபேற்றை அறிந்திருக்க இயலும். அவர் உலகை அறிந்து கொண்டதெல்லாம், காந்தி என்னும் கண்ணாடியின் மூலம்தான்.

பொதுவாகவே இந்திய நாட்டிலிருக்கும் குடும்பத் தலைவிகளுக்குப் பரம்பரையாக ஒரு பண்பு உண்டு. கண வனைவிடத் தாம் அறிவாளி என்ற எண்ணம்! ஒவ்வொரு பெண்ணும் தன் கணவனைக் குடும்பப் பொறுப்பில்லாதவன் என்று எண்ணுவது வழக்கம். வெளியுலகில் சிறந்த அறிஞனாகவும், கலைஞனாகவும், பெரியோனாகவும் கணவன் மதிக்கப் பெறுவான். ஆனால் வீட்டுலகிலோ, "என்ன மனிதர்! குடும்பத்தில் சிறிதும் அக்கறையின்றிப் பொது நலம் பொதுநலம் என்று பொறுப்பற்றுத் திரிகிறாரே!" என்று மனைவி வருந்துவாள். இந்த விதிக்குக் கஸ்தூரி பாய் புறம்பானவரல்லர். காந்தியடிகளின் அருமை பெருமைகளை அவரும் தொடக்கத்தில் அறிந்து கொள்ளா மலே வாழ்ந்தார். அவருடைய உயர்ந்த குறிக்கோள் களுக்கு அவர் தடைக்கல்லாகவும் இருந்தார். அதுபோன்ற சமயங்களில் அடிகளின் குடும்பத்திலும் புயல் வீசும்.

காந்தியடிகள் டர்பன் நகரில் வழக்கறிஞராக இருந்த சமயம். அவர் அலுவலகத்தில் பல எழுத்தாளர்கள் (Clerks) பணியாற்றினர். அவர்களில் தமிழர்களும், குசராத்திகளும், கிருத்தவர்களும் இருந்தனர். தம்மிடத்தில்

பணிபுரியும் இவ்வெழுத்தாளர்களையெல்லாம் தம் குடும்பத்தவராகவே கருதி வந்தார். அவர்கள் எல்லோரும் அடிகளின் வீட்டிலேயே தங்கி வாழ்ந்து வந்தனர். காந்தியடிகளின் வீடு மேநாட்டு முறையில் கட்டப்பட்டது. அழுக்கு நீர் வெளிச் செல்வதற்குரிய சாக்கடை அவ்வீட்டு அறைகளில் அமைக்கப்படவில்லை; சாக்கடை வைத்தல் கூடாது தான். மேலைநாட்டு வீடுகளில் ஒவ்வொரு வீட்டிலும் அழுக்கு நீர்ப்பாண்ட மொன்று வைத்துக் கொள்வார்கள். அடிக்கடி அதைத் தூய்மைப்படுத்திக் கொள்வார்கள். காந்தியடிகள் வீட்டிலிருந்த எழுத்தாளர்கள் தங்களுடைய பாண்டங்களைத் தாங்களாகவே தூய்மைப்படுத்திக் கொள்வார்கள். அடிகள், வீட்டில் வேலைக்காரன் வைத்துக் கொள்வதில்லை. 'தம் கையே தமக்கு உதவி' என்ற கொள்கையில் அடிகள் உறுதி கொண்டார்.

அடிகளின் வீட்டிற்குப் புதிதாக ஒரு எழுத்தாளர் வந்தார். அவர் கிருத்தவர். அவருடைய தாய்தந்தையர் தீண்டத் தகாதவர்கள். வந்த புதிதாகையால், அந்நண்பர் தம்முடைய அறையையும் அழுக்குப் பாண்டங்களையும் தூய்மை செய்து கொள்ளவில்லை. அவருடைய அறையைத் தூய்மைப்படுத்தும் பொறுப்பை காந்தியடிகளே மேற்கொண்டார். அவ்வழுக்குப் பாண்டத்தைத் தூய்மைப் படுத்தும்படி கஸ்தூரிபாய்க்குக் காந்தியடிகள் கூறிய பொழுது, அவ்வம்மையார் மறுத்துவிட்டார். அப்பாண்டத்தைத் தீண்டவும் அவர் மனம் ஒப்பவில்லை; அடிகள் அப் பாண்டத்தைத் தொடுவதையும் அவரால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. அடிகள் மேலும் மேலும் வற்புறுத்தவே அவ்வம்மையார் வேண்டா வெறுப்போடும், அடக்க முடியாத ஆத்திரத்தோடும் கண்களில் நீர் தாரை தாரையாக வழிய சினப் பார்வையாலேயே காந்தியடிகளைக் கடிந்தவராய் கையில் அழுக்குப் பாண்டத்துடன் ஏணியின் வழியே இறங்கி வந்தார். அடிகள் இந்நிகழ்ச்சியைப் பற்றி,

'ஒரு புனித நினைவு' என்ற தலைப்பில் எழுதியிருக்கிறார். அவர் வாயாலேயே கேட்போம்:

"என் மனைவியிடம் நான் வைத்திருந்த அன்பு மிகக் கொடுமையானது வகையைச் சார்ந்தது. என்னை அவளுடைய ஆசிரியனாகக் கருதியிருந்தேன். எனவே அவளிடம் எனக்கிருந்த குருட்டுத்தனமான அன்பின் காரணமாக அவளைப் பெரிதும் தொல்லைப்படுத்தி வந்தேன்.

அவள் பாண்டத்தைத் தூக்கிச் சென்றதாலேயே நான் மனநிறைவு கொள்ளவில்லை. அதை அவள் மகிழ்ச்சியுடன் செய்ய வேண்டுமென்று விரும்பினேன். எனவே உரத்த குரலெடுத்து, 'என்னுடைய வீட்டில் இம்மாதிரி மூடத்தனத்தைப் பொறுக்க முடியாது' என்றேன். அம்மொழிகள் கூரிய அம்புகளைப் போல் அவளுடைய உள்ளத்தில் தைத்தன.

'உங்கள் வீட்டை நீங்களே வைத்துக்கொண்டு என்னைத் தொலைத்து விடுங்கள்' என்று அவள் கூச்சலிட்டாள். அப்பொழுது என்னை நான் மறந்தேன். என் இதயத்தில் இரக்க ஊற்று வற்றிப் போயிற்று. அவளுடைய கையைப் பிடித்து, ஏணிக்கு எதிரே இருந்த வாயிற்படிக்கு இழுத்துக் கொண்டு போனேன். வெளியே தள்ளுவதற்காகக் கதவைத் திறந்தேன்.

அவள் கன்னங்களின் வழியாய்க் கண்ணீர் தாரை தாரையாய் வழிந்து கொண்டிருந்தது. அவள், 'உங்களுக்கு வெட்கமில்லையா? உங்களுக்கு இப்படிச் சுய உணர்வு அற்றுப் போய்விட வேண்டுமா? எனக்கு போக்கிடமெங்கே? தஞ்சமளிப்பதற்கு இங்கு என் பெற்றோர்களாவது, உறவினர்களாவது இருக்கிறார்களா? நீங்கள் என்னை உதைத்தாலும் பொறுத்துக் கொள்ள வேண்டியதுதான். ஆண்டவன் மீது ஆணை! கதவைச் சாத்துங்கள். யாராவது சிரிக்கப் போகிறார்கள்!' என்றாள்.

வெளிக்குக் காட்டிக் கொள்ளவில்லை யென்றாலும் உள்ளுக்குள் மிகவும் வெட்கப்பட்டேன். கதவைச் சாத்தினேன். என் மனைவி என்னைவிட்டுப் போவதற்கில்லை யென்றால், நானும் அவளை விட்டுப் பிரிய முடியாது. நாங்கள் எத்தனையோ சண்டை போட்டிருக்கிறோமாயினும் இறுதியில் சமாதானம் அடைந்து விடுவோம். அளவற்ற பொறுமையுடையவளாதலால், என் மனைவியே வெற்றி யடைவாள்.

இன்று காய்தல் உவத்தல் இன்றி மேற்படி நிகழ்ச்சியை நான் கூறக் கூடியவனாக இருக்கிறேன். இப்புனித நிகழ்ச்சியை நான் கூறியதிலிருந்து தற்போது நானும் என் மனைவியும் தம்பதிகளுக்கு இலக்கியமாக இருப்பதாக முடிவு செய்துவிட வேண்டாம். எங்களுக்குள் முழுக் கொள்கை ஒற்றுமை இப்போதும் இல்லை. திருமதி கஸ்தூரிபாய்க்குத் தனியே ஏதேனும் கொள்கைகள் உண்டாவென்று, ஒருகால் அவருக்கே தெரியாமலிருக்கலாம்.

ஆனால் கஸ்தூரிபாயிடம் ஒரு அருங்குணம் இருக்கிறது. இந்து மனைவியர் பெரும்பாலோரிடம் இப்பண்பு உண்டு என்று சொல்லலாம். அது யாதெனில் விருப்பத்துடனோ விருப்பமின்றியோ, அறிந்தோ, அறியாமலோ என் அடிச் சுவட்டைப் பின்பற்றி நடப்பதால் அவள் மேன்மை யுறலாம் என்று கருதி வந்திருக்கிறாள். ஆதலின் எங்களுடைய கருத்துக்களில் வேற்றுமை யிருந்தபோதிலும், எங்களுடைய வாழ்க்கை எப்போதும் நிறைவும், மகிழ்ச்சியும், வளர்ச்சியும் உடையதாய் இருந்து வந்திருக்கிறது.''

* * *

இந்நிகழ்ச்சியின் பின்னர் தென்னாப்பிரிக்காவில் இருக்கும்வரையில் கஸ்தூரிபாய் தீண்டாமையைப் பொருட்படுத்தவில்லை. ஆனால் இந்திய நாட்டிற்கு வந்த பிறகு, ஆசிரமத்தில் தாழ்த்தப்பட்ட மக்களோடு வாழ நேரிட்ட பொழுது அன்னையார் தம் எதிர்ப்பைத் தெரிவித்தார்.

"கஸ்தூரிபாய்! தென்னப்பிரிக்காவில் இருக்கும் வரையில் தீண்டாமையைப்பற்றிப் பொருட்படுத்தாத நீ இங்கு வந்து பிடிவாதம் பிடிப்பானேன்?" என்று காந்தி யடிகள் கேட்டார்.

"தென்னப்பிரிக்கா தொலை நாடு. அங்கு நம் உறவினர் களும், சமூகத்தாரும் கிடையாது. இங்கு, நம் நாட்டிலே நம்முடைய சமுதாயத்தாரிடையே என் ஆசாரத்தைக் கை விட முடியாது" என்று அன்னையார் விடை யிறுத்தார். காந்தியடிகள் தான் பிடிவாதக்காரராயிற்றே. எப்படியோ கஸ்தூரிபாயைச் சமாதானப்படுத்தி வெற்றி கண்டு விட்டார்.

* * *

தென்னப்பிரிக்காவில் கறுப்புச்சட்டத்தை எதிர்த்துப் பெரும் போராட்டம் நடத்தினர் என்பதை நாம் அறிவோம். அப் போராட்டத்தில் எண்ணற்ற இந்திய மக்கள் கலந்து கொண்டனர். அளப்பரிய இன்னல்களுக்கு ஆட்பட்டனர். சத்தியாக்கிரக வேள்வியில் பெண்டிரும் கலந்து கொண்ட னர்; சிறையில் வாடினர்; பசியால் நைந்தனர்; பலர் உயிரை யும் விட்டனர். அவ்வாறு உயிரை விட்ட இந்திய வீரர் களில் தமிழச்சியான வள்ளியம்மை குறிப்பிடத் தக்கவள். இருபது வயதுகூட நிரம்பாத அவ்வேந்திழையின் வீரத் தைப் பலபடத் தம் சுயசரிதையில் பாராட்டிப் பேசுகிறார் காந்தியடிகள்.

அப்போராட்டத்தின்போது பல இந்தியர்கள் நாடு கடத்தப்பட்டனர். வெள்ளை அரசாங்கம் அவர்களைக் கப்பலில் ஏற்றி, இந்திய நாட்டுக் கரையில் கொண்டுவந்து இறக்கியது. அவர்களுக்குத் தென்னப்பிரிக்காவில், வீடு, நிலம், சொத்து யாவும் இருந்தன. அவற்றை யெல்லாம் பறிகொடுத்தனர். அன்பு மனைவியையும், ஆசைக் குழந்தை களையும் பிரிந்தனர். அநாதைகளைப் போல் இந்திய

நாட்டின் கரையிலே தள்ளப்பட்ட இம்மக்களுக்கு இரவீந்திரநாத தாகூரின் "சாந்தி நிகேதனம்" அடைக்கலம் தந்தது.

காந்தியடிகள் தம் போராட்டத்தை வெற்றிகரமாக முடித்துக் கொண்டு இந்தியா திரும்பினார். சாந்திநிகேதனத்தில் வாழ்ந்த தென்னாப்பிரிக்க இந்திய நண்பர்களுக்காக ஒரு ஆசிரமம் ஏற்படுத்த எண்ணினார். அவ்விந்தியர் எல்லோரும் அடிகளோடு போனிக்சு ஆசிரமத்தில் வாழ்ந்தவர்கள். காந்தியடிகள் தம் தாயகமான குசராத் நாட்டிலேயே அவ்வாசிரமத்தை ஏற்படுத்த எண்ணினார். அப்போதுதான் தம் தொண்டைச் சரிவரச் செய்ய முடியும் என்று அவர் நம்பினார். ஆமதாபாத்து நகரத்தில் வாழ்ந்த குசராத்திச் செல்வர்களிடம் பொருளுதவி பெறுவதும் எளிது என்றும் அவர் எண்ணினார்.

ஆமதாபாத்திற்கு அருகில் உள்ள கோச்ராப் என்ற சிற்றூரில் ஆசிரமம் ஏற்படுத்தப்பட்டது. அவ்வூரில் திருவாளர் ஜீவன்லால் தேசாய் என்னும் வழக்கறிஞருக்குச் சொந்தமா யிருந்த பங்களாவிலேயே அவ்வாசிரமம் முதன் முதலில் தொடங்கப்பட்டது. அதற்குச் "சத்தியாக்கிரக ஆசிரமம்" என்று அடிகள் பெயரிட்டார்.

ஆமதாபாத் செல்வர்கள் பலர் இப்பணிக்குப் பொருளுதவி செய்ய முன் வந்தனர். அச் செல்வர்களுடன் பேசிக் கொண்டிருந்தபொழுது, தீண்டாமையைப் பற்றிப் பேச்சு வந்தது. "நான் நடத்தும் ஆசிரமத்தில் தீண்டாமையைக் கடைப்பிடிப்பது நினைக்கவும் முடியாத செயல். தகுதியுடைய தாழ்த்தப்பட்ட வகுப்பினர் ஒருவர் ஆசிரமத்தில் சேர முன் வந்தால் நான் மறுக்காமல் அவரைச் சேர்த்துக் கொள்வேன்" என்று அடிகள் உறுதியாகச் சொன்னார். ஆனால் அருகிலிருந்த நண்பர்கள், "ஆசிரமத்தில் சேரக் கூடிய தகுதியுடைய தீண்டாதவர் எங்கிருந்து வரப்

போகிறார்!" என்று எண்ணினர். அப்படிப்பட்ட ஒருவர் அகப்படமாட்டார் என்பது அவர்களுடைய நம்பிக்கை.

ஆனால் அந் நம்பிக்கை பொடிப் பொடியாகும் நிலை விரைவில் ஏற்பட்டது. இந்திய ஊழியர் கழக (Servants of India Society) உறுப்பினர்களில் திருவாளர் அமிருதலால் தக்கர் என்பவர் குறிப்பிடத்தக்கவர். (இன்றைக்கு அரிசனத் தொண்டுக்காகவே வாழும் தக்கர் பாபா தான் இவர்). காந்தியடிகள்பால் இவருக்கு அளவற்ற பற்றும், பெருமதிப்பும் உண்டு. ஒருநாள் திருவாளர் தக்கரிடமிருந்து காந்தியடிகளுக்கு ஒரு கடிதம் வந்தது. அதில் தக்கர்பாபா, "தீண்டாவகுப்பைச் சேர்ந்த ஒரு குடும்பத்தார் தங்கள் ஆசிரமத்தில் சேர விரும்புகின்றனர். அவர்களை ஏற்றுக்கொள்ளுவீர்களா?" என்று அதில் கேட்டிருந்தார். இவ்வளவு விரைவில் இத்தகைய சோதனை ஏற்படுமென்று காந்தியடிகள் எதிர்பார்க்கவில்லை. ஆசிரமம் நடைபெறுவதற்குப் பொருளுதவி செய்து வந்த ஆமதாபாத் நண்பர்களுக்கு இது பிடிக்காது என்று காந்தியடிகளுக்குத் தெரியும். அதற்காகத் தம் அடிப்படைக் கொள்கையைக் காந்தியடிகள் மாற்றிக் கொள்ள விரும்பவில்லை. அக் கடிதத்தை ஆசிரமத்தில் வாழ்ந்த மற்ற நண்பர்களுக்கும் படித்துக் காண்பித்தார். அவர்களும் இச் சோதனையை உற்சாகமாக வரவேற்றனர். இச் சமயத்தில்தான் அன்னை கஸ்தூரிபாய் தம் எதிர்ப்பைத் தெரிவித்தார். ஆனால் காந்தியடிகள் "உனக்காக என் கொள்கைகளை மாற்றிக் கொள்ள முடியாது. தீண்டாமைக் கொள்கையை நான் அறவே வெறுக்கிறேன். மக்களிடையே உயர்வு தாழ்வு எண்ணும் பழக்கம், ஆசிரமத்தில் தலைகாட்டுவதை நான் விரும்பவில்லை. இக் கொள்கைக்கு உட்பட்டு நீ வாழ விரும்பினால் ஆசிரமத்தில் இருக்கலாம். இல்லாவிட்டால் இராசகோட்டை சென்று, நீ உன் ஆசாரத்தோடு வாழலாம்"

என்று கடுமையாகவே பதிலிறுத்தார். எப்படியோ, அரிசனக் குடும்பம் ஆசிரமத்தில் குடியேறியது.

அக் குடும்பம் மூன்றுபேர் அடங்கியது. அக்குடும்பத் தலைவர் திரு துதாபாய். அவருடைய மனைவியின் பெயர் தனிபென். அவர்களுக்கு இலக்குமி என்ற பெண் குழந்தையும் இருந்தது. துதாபாய் பம்பாயில் ஒரு துவக்கப்பள்ளியில் ஆசிரியராகப் பணியாற்றியவர். ஆசிரம விதிகளையெல்லாம் நன்கு தெரிந்து கொண்டு, அவைகளைக் கடைப்பிடித்து நடப்பதாக வாக்குறுதி யளித்தார்.

இச் செய்தி ஆமதாபாத் செல்வர்களின் காதுகளுக்கு எட்டியது. உடனே பொருளுதவி செய்வதை நிறுத்திக் கொண்டனர். வேறு பல தொல்லைகளும் ஆசிரமத்திற்கு ஏற்பட்டது. முதலில் தண்ணீர்பற்றிய தகராறு. ஆசிரமத்திற்குத் தண்ணீர் எடுக்கப் பயன்பட்ட கிணற்றில், அப் பங்களாவின் உரிமையாளரும் தண்ணீர் எடுத்து வந்தார். அது பொதுவான கிணறு. ஏற்றம் இறைத்து வந்த அப்பங்களாவின் வேலைக்காரன் ஆசிரமத் தொட்டியிலிருந்து நீர் சிந்துவதால் தனக்குத் தீட்டு ஏற்பட்டு விடுமென்று கூறி எதிர்ப்புத் தெரிவித்தான். அதோடு ஆசிரம வாசிகளைத் திட்டவும், துதாபாயைத் தொந்தரவு செய்யவும் தலைப்பட்டான். அவனுடைய சுடு சொற்களைப் பொறுமையோடு ஏற்றுக் கொண்டு நீர் இறைத்து வரும்படி எல்லோருக்கும் காந்தியடிகள் கூறினார். ஆசிரம வாசிகள் திருப்பித் திட்டாததை அந்த மனிதன் கண்டபோது, வெட்கமடைந்து அதன் பிறகு தொல்லை கொடுப்பதை நிறுத்தி விட்டான்.

இதற்குள் வேறு ஒரு வதந்தியும் காந்தியடிகளின் செவிக்கு எட்டியது. ஆமதாபாத்திலிருந்த சாதி இந்துக்கள் காந்தியடிகளையும் அவருடைய நண்பர்களையும் சாதியைவிட்டு விலக்கும் முயற்சியில் ஈடுபட்டிருப்பதாகக்

கேள்விப்பட்டார். காந்தியடிகள் தென்னாப்பிரிக்காவி லிருந்து இந்தியா திரும்பிய பொழுதே காந்தியடிகளைத் தம் சாதியிலிருந்து விலக்க மோட பனியாக்கள் முடிவு செய் திருந்தனர். அதற்காகக் கூட்டம் கூட்டி ஆராய்ந்தனர். இச்செய்தி காந்தியடிகளுக்குத் தெரிந்த பொழுது, "என்னை சாதியிலிருந்து விலக்க இவர்கள் ஏன் இத்தனை தொல்லை எடுத்துக்கொள்ள வேண்டும்? நானேசாதியை விட்டு விலகிக் கொள்கிறேன்" என்று கூறினார். பிறகு சிலருடைய எதிர்ப் பின் காரணமாக மோட பனியாக்களின் முயற்சி கைவிடப் பட்டது.

அரிசனக் குடும்பம் ஆசிரமத்தில் குடிப் புகுந்ததும் இம்முயற்சி மீண்டும் தலைதூக்கியது. காந்தியடிகள் இதற் காகச் சிறிதும் அஞ்சவில்லை. "சாதி இந்துக்கள் எங்களைச் சாதியைவிட்டு விலக்கினால், நாங்கள் எல்லோரும் சேரியி லேயே குடியேறி உடல் உழைப்பினால் வாழ முடிவு செய் திருக்கிறோம்" என்று கூறினார். ஆமதாபாத்து முதலாளி களின் பொருளுதவி தடைப்பட்டவுடன் ஆசிரமம் பொருள் நெருக்கடியில் மூழ்கியது. என்ன செய்வதென்று தெரியா மல் அடிகள் கலங்கினார்.

ஒருநாள் காலை ஆசிரமக் குழந்தையொன்று காந்தி யடிகளிடம் ஓடி வந்து, "பாபு! யாரோ ஒரு சேட் தங்களைக் காண்பதற்காகக் காரில் வந்து நம் ஆசிரம வாயிலில் காத்து கொண்டிருக்கிறார்" என்று கூறியது. காந்தியடிகள் வெளி யில் சென்று பார்த்தார். யாரோ ஒரு ஆமதாபாத் செல்வர்! காரிலிருந்தபடியே, "காந்திஜி! தங்கள் ஆசிரமத்திற்கு நான் சிறிது பொருளுதவி செய்ய விரும்புகிறேன். ஏற்றுக் கொள் வீரா?" என்று கேட்டார்.

"கரும்பு தின்னக் கூலியா! தாராளமாகக் கொடுங்கள்! நாங்களும் இப்போது பண முடையினால் தான் அவதிப்படு கிறோம்" என்று கூறினார் அடிகள்.

"அப்படியானால் நாளை இதே நேரத்திற்குப் பணத்தோடு வருகிறேன்" என்று கூறிவிட்டு அந்தச் செல்வர் சென்று விட்டார்.

அடுத்த நாள் காலை அதே நேரத்தில் கார் வந்தது. காரின் ஒலியைக் கேட்டதும் அடிகள் வெளியில் வந்தார். அச் செல்வர் காரைவிட்டு இறங்கவும் இல்லை; ஆசிரமத்தை சுற்றிப்பார்க்கவும் இல்லை. காரில் இருந்தபடியே ரூ. 13,000 மதிப்புள்ள நோட்டுக்களை அடிகளின் கையில் கொடுத்து விட்டுச் சென்று விட்டார். காந்தியடிகளுக்கு அந்தச் செல்வரைப்பற்றி ஒன்றும் தெரியாது. முன்பு எங்கோ ஒரு தடவை பார்த்திருப்பதாக அடிகள் எண்ணினார். அந்த நண்பரும் தம்மைப்பற்றி எதுவும் சொல்லவில்லை.

* * *

ஒரு சிற்றூரில் கூட்டத்திற்கு ஏற்பாடாகியிருந்தது. காந்தியடிகள் அதில் பேச இருந்தார். காந்தியடிகளைத் தரிசிக்கவும், அவர் அமுத மொழிகளைச் செவி மடுக்கவும் அவ்வூரிலுள்ள மக்களெல்லாரும் கூடியிருந்தனர். உயர் குலத்தோரெல்லாம் அங்கு திரளாக வந்திருந்தனர். காந்தியடிகள் வருகிறார் என்று கேள்விப்பட்டதும், அவ்வூரில் வாழ்ந்த பள்ளர், பறையர், சக்கிலியர் முதலிய தாழ்த்தப்பட்ட மக்களும் ஆவலோடு வந்திருந்தனர்.

தாழ்த்தப்பட்ட மக்களைக் கண்டதும் உயர் குலத்தாருக்குச் சினம் பொங்கியெழுந்தது. "யாரடா நீங்கள்? தாழ்த்தப்பட்டவர்களா? உங்களுக்கு இங்கென்ன வேலை? உங்களை யார் அழைத்தது? மரியாதையாகச் சென்று விடுங்கள். பள்ளு பறைக்குப் பொதுக்கூட்டம் ஒரு கேடா" என்று, சுடுசொற்களை அள்ளி வீசினர்.

பாவம்! அத்தீண்டாதாருக்குத் துணையாகப்பேச அங்கு யாருமில்லை. "எசமான்களே! எங்களுக்கும் இடங்கொடுங்கள். காந்தியடிகள் எங்களுக்கும் உரியவர் தானே. அவரைக்

காணக்கூடவா நாங்கள் கொடுத்துவைக்கவில்லை" என்று மன்றுடினர் அம்மக்கள். உயர்குலத்தாரின் ஆணவம் சிறிது அசைந்து கொடுத்தது.

"ஓகோ! நீங்களும் பார்க்கவேண்டுமா? சரி பார்த்துத் தொலையுங்கள், ஆனால் எட்ட இருந்து பார்க்க வேண்டும். அருகில் வரக்கூடாது; யாரையும் தொடக்கூடாது" என்று கட்டளையிட்டனர்.

காந்தியடிகள் மேடைக்கு வந்தார். கூட்டத்தைச் சுற்றி ஒரு முறை தம் பார்வையைச் செலுத்தினர். அரிசனங்கள் ஒதுங்கி அமர்ந்திருந்த காட்சி அவர் கழுகுக் கண்களுக்குப் பட்டது. கூட்ட நிர்வாகிகளை அழைத்தார். "ஏன் அந்த மக்கள் தனியாகத் தொலைவில் அமர்ந்திருக்கிருர்கள்?" என்று கேட்டார்.

"காந்திஜி! அவர்கள் தாழ்த்தப்பட்ட மக்கள்! தீண்டத் தகாதவர்! அதனுல் தான் அவர்களை ஒதுக்கி வைத்திருக்கிறோம்" என்று நிர்வாகிகள் விடை யிறுத்தனர்.

"ஏன் அவர்களையும் ஒன்ருக உட்காரவைத்தால் என்ன?" என்று அடிகள் கேட்டார். நிர்வாகிகள் தலையைச் சொறிந்து கொண்டு நின்றனர்.

"அப்படியென்ருல், நான் அவர்களிடம் சென்று பேசுகிறேன்?" என்று அடிகள் கூறினர். மேடையைவிட்டு இறங்கி, அரிசனங்களின் கூட்ட மிருக்குமிடத்தை யடைந்தார்.

அரிசனங்களின் உள்ளம் அன்பு வெள்ளத்தில் மிதந்தது. இன்பக் கண்ணீர் அவர்கள் கன்னத்தில் பெருக்கெடுத்தோடியது. "காந்திக்கு ஜே!" என்ற வாழ்த் தொலிவிண்ணைப் பிளந்தது.

*　　*　　*

ஒரு முறை ஒரு நண்பரிடம் காந்தியடிகள் பேசிக் கொண்டிருந்தபோது, "அரிசன முன்னேற்றத்தை ஒரு

தட்டில் வைத்து, நாட்டு விடுதலையை மற்றொரு தட்டில் வைத்து, எதுவேண்டுமென்று என்னைக் கேட்டால், அரிசன முன்னேற்றத்தைத் தான் தேர்ந்தெடுப்பேன்'' என்று கூறினார்.

அரிசன முன்னேற்றத் திட்டத்தைக் காந்தியடிகள் காங்கிரஸ் கட்சியினுள் நுழைத்தபோது பலருக்குப் பெரிய குழப்பமாக இருந்தது. அரசியலுக்கும் அரிசன முன்னேற்றத்துக்கும் என்ன தொடர்பு என்று அவர்கள் விழித்தனர். இது அவசியமில்லாத திட்டம் என்று சிலர் எண்ணினர். ஆனால் காந்தியடிகள் அக் கொள்கையில் குரங்குப் பிடியாக இருந்தார். தென்னாப்பிரிக்க இந்தியர்கள் வெள்ளையரால் சேரிவாழ் மக்களாக ஒதுக்கப்பட்டுக் கொடுந் துயருழந்த காட்சியைக் கண்டபோது, ''நாம் இந்திய நாட்டில் நம் உடன் பிறந்த சகோதரர்களைச் சேரிவாழ் மக்களாக ஒதுக்கி வைத்திருக்கிறோம். அதன் பலனை இங்கு அனுபவிக்கிறோம்'' என்று கூறினார்.

வட இந்தியாவில் ஒருமுறை பெரும் நிலநடுக்கம் ஏற்பட்டு ஆயிரக்கணக்கான மக்கள் உயிரிழந்தனர். அந் நிகழ்ச்சியைப்பற்றிக் குறிப்பிடும்போது, ''கோடிக் கணக்கான இந்தியச் சோதரரைத் தீண்டாதவராகச் சேரியில் ஒதுக்கி வைத்த பாவத்திற்கு இறைவனால் அளிக்கப்பட்ட தண்டனையே இந்நில நடுக்கம்'' என்று பத்திரிகையில் எழுதினார். இதற்குப் பண்டித நேருகூட மறுப்பு எழுதினார்

கதர் உற்பத்தி, தேசியக் கல்வி, தீண்டாமை விலக்கு, இந்து முஸ்லிம் ஒற்றுமை ஆகிய நான்கு திட்டங்களுமே சுயராச்சிய மாளிகையின் நான்கு தூண்கள் என்று அடிகள் அடிக்கடி கூறுவார். ஆங்கில அரசாங்கத்தார், பிரித்தாளும் சூழ்ச்சியில் வல்லவர்கள். சட்டசபைத் தேர்தலில் அரிசனங்களுக்குத் தனித் தொகுதி அமைத்து, அவர்களைத் தனியாகப் பிரித்த பொழுது, காந்தியடிகள் பெரிதும் வருந்

தினர். "அரிசனங்களைச் சமுதாயத்தில்தான் பிரித்து வைத்திருக்கிறோமென்றால் அரசியலிலுமா பிரித்து வைக்க வேண்டும்" என்று கூறினர். அச்சட்டத்தை எதிர்த்து உண்ணாவிரதமும் மேற்கொண்டார். அரிசன முன்னேற்றத்திற்காகக் கோடிக் கணக்கில் பொருள் திரட்டி, அவர்கள் முன்னேற்றத் திட்டங்களுக்குச் செலவிட்டார். சில ஆண்டுகள் அரசியலிலிருந்து விலகி, அரிசனத் தொண்டிலும், கதர்த் தொண்டிலுமே தம் முழு நேரத்தையும் செலவிட்டார்.

* * *

வெளிநாட்டுத் துணிகளைத் தியாகம் செய்யத் துணிந்து, காந்தியடிகளைத் திருநெல்வேலியில் வந்து பார்த்தவர்களில் ஒருவர் திருவாங்கூர் நாட்டைச் சேர்ந்தவர். அவர் சென்னை மாநிலத்தில் தீண்டா வகுப்பார் அநுபவிக்கும் இன்னல்களைப்பற்றி மகாத்மாவிடம் எடுத்துச் சொன்னர். தீண்டாதார் இந்துக்களாயிருந்த போதிலும், அவர்கள் இந்து ஆலயங்களில் அநுமதிக்கப்படுவதில்லை என்ற அநீதியைப்பற்றி உருக்கமாகக் கூறினர். இந்த அநீதியைப்பற்றி போக்குவதற்காகத் திருவாங்கூரில் சில சீர்திருத்தவாதிகள் 'ஆலயப்பிரவேச இயக்கம்' தொடங்க விரும்புவதாகவும் அவர் தெரிவித்தார்.

"என்னமாதிரி இயக்கம் துவங்கப் போகிறீர்கள்?" என்று காந்தியடிகள் கேட்டார்.

"முக்கியமான கோவில் ஒன்றில் உற்சவம் நடக்கப் போகிறது. அச்சமயம் ஒரு பெரிய தீண்டாதார் கும்பலை அழைத்துக்கொண்டு கோயிலுக்குள் நுழைவோம். அதை அரசாங்க அதிகாரிகளும் மற்ற இந்துக்களும் தடுத்தாலும் நாங்கள் பின்வாங்கப் போவதில்லை. எதிர்த்து உள் நுழைந்தே தீருவோம்" என்றார் வந்தவர்.

"கலகம் நேர்ந்தால் என்ன செய்வீர்?" என்று கேட்டார் மகாத்மா.

"கலகம் நேர்ந்தாலும் நேரட்டும். அதற்காக நாம் என்ன செய்வது?" என்றார் வந்த மனிதர்.

அது சரியான கொள்கை அல்ல, என்பதை மகாத்மா அவருக்கு எடுத்துக் காட்டினார்.

"தீண்டாமை பெரிய அநீதிதான். இந்துக்களில் ஒரு பகுதியாரை ஆலயங்களில் விடுவதில்லை என்பது பெருங் கொடுமைதான். ஆனால் அநீதியையும் கொடுமையையும் பலாத்காரத்தால் போக்க முடியாது. தீண்டாமை ஒழிய வேண்டுமானால், சாதி இந்துக்களின் மனம் மாறவேண்டும். பலாத்காரத்தால் சாதி இந்துக்களின் மனதை மாற்ற முடியாது. அதனால் வெறுப்பும் பகையும் தான் அதிக மாகும். ஆகையால் ஆலயங்களுக்குள் போவதாயிருந்தால், இரண்டு பேர் அல்லது மூன்று பேராகப் போங்கள். பலாத்காரத்தைக் கையாள வேண்டாம். அதிகாரிகள் சிறைக்கனுப்பினால் அமைதியோடு செல்லுங்கள். இது தான் சரியான முறை. இப்போது நான் இந்தியாவின் விடுதலையைக் கருதி ஒத்துழையாமை இயக்கத்தை நடத்திக் கொண்டிருக்கிறேன். எனக்கு நீங்கள் கொஞ்சம் அவகாசம் கொடுத்தால் தேச விடுதலை இயக்கம் முடிவடைந்த பிறகு நானே ஆலயப்பிரவேச இயக்கத்தை முன்னின்று நடத்து வேன்" என்றார் காந்தியடிகள்.

பின்னால் ஒத்துழையாமை இயக்கத்தை நிறுத்திவைக்க நேர்ந்தபோது, காந்தியடிகள் தீண்டாமை விலக்கிலும், ஆலயப் பிரவேசத்திலும் தம் முழுக் கவனத்தையும் செலுத் தினார். ஈரோட்டில் அப்பொழுது சிறந்த காங்கிரஸ் தலைவ ராக விளங்கியவர் பெரியார் ஈ. வெ. இராமசாமி. செல்வர்; பெருவணிகர்; பல துறையிலும் அரசியற் பணியாற்றி வந்தவர். காந்தியடிகள் கதர்த் திட்டம் துவங்கியபோது,

கதர் மூட்டையைத் தோளில் சுமந்துகொண்டு பட்டி தொட்டிகளிலும், திருப்பூர்ச் சந்தையிலும் விலை கூறி விற்றவர்; காந்தியடிகள் மதுவிலக்குத் திட்டம் கொண்டு வந்த போது, தம் தோட்டங்களிலிருந்த நூற்றுக் கணக்கான கள்ளிறக்கும் தென்னை மரங்களை வெட்டி யெறிந்தவர். காந்தியடிகள் திருவாங்கூரில் ஆலயப் பிரவேசத்திற்காக, ''வைக்கம் சத்தியாக்கிரகம்'' நடத்திய போது, திரு ஈ. வெ. ரா. அவர்களும் அவருடைய மனைவியான திருமதி நாகம்மையாரும் அதை முன்னின்று நடத்தினர். நாகம்மையாரின் தொண்டைக் காந்தியடிகள் வெகுவாகப் பாராட்டினர். ஈ. வெ. ரா. அவர்களும் 'வைக்கம் வீரர்' என்று பொதுமக்களால் அழைக்கப்பட்டார்.

தீண்டாமையை நாட்டை விட்டு ஓட்டும் பணியில் காந்தியடிகள் வெற்றி கண்டார் என்றே சொல்ல வேண்டும்.

## 5. அருள்

'அன்பு' என்பது கிணற்று நீரைப் போன்றது. ஒரு எல்லைக்கு உட்பட்டது. ஆனால் அருள் என்பது பரந்தது. எல்லைக்கு உட்படாத பெருங்கடலைப் போன்றது. அன்பு, தனக்குத் தொடர்புள்ளவர் மாட்டும், சுற்றத்தார் மாட்டுமே செலுத்தப்படுவது. ஆனால் அருள், தொடர்பில்லாதார் மாட்டும் செலுத்தப்படுவது; உலகிலுள்ள எல்லா உயிர்களையும் தன்னுயிர் போல் எண்ணுவது. இவ்வுயர் பண்பான அருளின் பருப்பொருளாகக் காந்தியடிகள் விளங்கினர். பிற உயிர் துன்புறும் போது, தாம் வருந்தினர்; கண்ணீர் விட்டு அழுதார்.

டர்பன் நகரில் காந்தியடிகள் வழக்கறிஞர் தொழில் நடத்திக் கொண்டிருந்தபோது ஒருநாள் ஒரு பிச்சைக்

காரன் அவர் வீட்டிற்கு வந்தான். அவன் தொழு நோயாளன் (குஷ்டரோகி). நோய்களில் கொடியது தொழுநோய். ஈயருந்த அழுதசை! எறும்பு மொய்க்க இற்றொழுகு புன்னீர்! அருகில் சென்றால் அருவருக்கும் நாற்றம்! அவன் ஒப்பந்தக் கூலியாகத் தென்னப்பிரிக்காவுக்கு வந்தவன். இப்பொழும் நோய் அவனைப் பற்றிக் கொண்டது. அதனால் வேலையும் போயிற்று. வயிற்றை நிரப்பப் பிச்சைக்காரனுன். ஒருவேளை அவனுக்குப் பிச்சை போட்டு விட்டால் அவன் துன்பம் தீர்ந்து விடுமா? என்று காந்தியடிகள் எண்ணினார். அவனைத் தம் வீட்டிலேயே வைத்துக் கொண்டார். உணவிட்டார்; அவன் புண்களை நாள்தோறும் கழுவி மருந்திட்டுக் கட்டினார். புண்களெல்லாம் சிறிது ஆறின. ஒரு தொழு நோயாளனை எவ்வளவு நாள் வீட்டில் வைத்துக் கொண்டிருக்க முடியும்? அந்நோய் பிறரையும் பற்றிக்கொண்டால் என்ன செய்வது என்று வீட்டிலிருந்தவர்கள் அஞ்சினர். அதனால் காந்தியடிகள் இந்தியத் தோட்டக் கூலிகளுக்கென்று அமைக்கப் பட்டிருந்த ஒரு மருத்துவ மனையில் கொண்டுபோய் அந் நோயாளியைச் சேர்த்து விட்டார்.

இதே போன்ற ஒரு நிகழ்ச்சி இந்தியாவிலும் நடந்தது. 1939-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம்; மாலை நேரம் காந்தியடிகள் வழக்கம்போல் உலாவுவதற்காக வெளியில் கிளம்பிக் கொண்டிருந்தார். அவரோடு ஐந்தாறு நண்பர்களும் ஆசிரமத்தை விட்டு வெளிக்கிளம்பிக் கொண்டிருந்தனர். காந்தியடிகள் ஆசிரம வாயிலைக் கடந்தவுடன், ஒருவர் ஆசிரமத்தை நோக்கி வந்தார். அவர் தம்முடன் கொண்டுவந்த ஒரு துணி மூட்டையை நிலத்தில் வைத்து விட்டு மரியாதையோடு அடிகளை வணங்கினார். காந்தியடிகளும் பதிலுக்கு வணங்கினார்.

"உங்களுடைய கடிதம் எனக்குக் கிடைத்தது ஆனால் என்னுடைய பதிலைப் பார்த்துக் கொண்டு நீங்கள் வருவீர்

கள் என்று எதிர்பார்த்தேன்" என்று அடிகள் வந்தவரிடம் கூறினார்.

"ஆமாம்! தங்களுடைய அநுமதியைப் பெற்ற பிறகு தான் நான் இங்கு வந்திருக்க வேண்டும். போருக்குப் பின் தாங்கள் வைசராயைச் சந்தித்து வெளியிட்ட துக்ககரமான அறிக்கையைச் செய்தித்தாளில் படித்தேன். உங்களைக் கண்டு உங்களோடு இரண்டு நாள் தங்கியிருந்து விட்டுச் செல்லலாமென்ற ஆசை என் உள்ளத்தில் எழுந்தது. உங்களைக் காணவேண்டுமென்று என் உள்ளத்தில் எழுந்த ஆவலை என்னால் அடக்கிக்கொள்ள முடியவில்லை. உடனே அரித்துவாரத்தை விட்டுப் புறப்பட்டு வந்துவிட்டேன்" என்று வந்தவர் கூறினார்.

"நீங்கள் என்ன நோயினால் வருந்திக் கொண்டிருக்கிறீர்கள் என்று நான் அறிவேன். ஆடவரும், பெண்டிரும், குழந்தைகளும் நிறைய இருக்கும் இந்த ஆசிரமத்தில் தங்களையும் ஏற்றுக்கொள்வது பற்றி இன்னும் நான் முடிவுக்கு வரவில்லை. அவ்வெண்ணம் என்னுள்ளத்தில் ஒரு போராட்டமாகவே இருந்து வருகிறது" என்று காந்தியடிகள் கூறினார்.

வந்த மனிதர், திருவாளர் பார்ச்சூர் சாஸ்திரி என்பவர். இவர் 1922-ஆம் ஆண்டு காந்தியடிகளோடு எரவாடா சிறையில் இருந்த தேசியத் தொண்டர். சிறையிலிருந்து வெளிவந்ததும், கொடியதொரு நோய் அவரைப் பற்றிக் கொண்டது. அவர் வட இந்தியாவிலுள்ள சிறந்த மருத்துவ மனைகட்கெல்லாம் சென்று மருத்துவம் செய்து கொண்டார். நாள் ஆக ஆக நோய் வளர்ந்ததே தவிரக் குறையவில்லை. கடைசியாக இந்தியாவின் சிறந்த புண்ணியத் தலமான அரித்துவாரத்தை அடைக்கலமாக அடைந்து அங்கு வாழ்ந்து வந்தார்.

அடிகளின் உள்ளநிலையை உணர்ந்த பார்ச்சூர் சாஸ்திரி, "உங்களுடைய 'தரிசனம்' எனக்குக் கிடைத்தது. அதோடு நான் மனநிறைவு கொள்கிறேன். இம் மூட்டையில் என் கையாலேயே நூற்கப்பட்ட கதர்நூல் உள்ளது. உங்களை நேரில் கண்டு கொடுக்க வேண்டும் என்று எண்ணினேன். என் ஆசை நிறைவேறி விட்டது. இன்று இரவு இம்மரத்தடியில் தங்கியிருக்க எனக்கு அநுமதி கொடுங்கள். நாளை காலை நான் அரித்துவாரம் சென்று விடுகிறேன்!" என்று கூறினார்.

அடிகள் சாஸ்திரியைப் பார்த்து, "உணவு உண்டீரா?" என்று கேட்டார். அவர் அன்று உணவு எதுவும் உண்ணவில்லை என்று அறிந்ததும், கனுகாந்தியை அழைத்து, சாஸ்திரிக்கு உணவு கொடுக்குமாறு சொன்னார். கனுகாந்தி சாஸ்திரியை அழைத்துச் சென்று உணவிட்டார்.

காந்தியடிகள் உலாவுவதற்குப் புறப்பட்டார். நாள் முழுதும் இடையறா உழைப்பினாலும், கடின சிந்தனையாலும் ஏற்பட்ட களைப்பை நீக்கிக்கொண்டு புத்துணர்ச்சி பெறுவதற்காக அடிகள் உலாவச் செல்வது வழக்கம். அப்போது குழந்தைகளுடனும், சிறுவர்களுடனும் சிரித்துப் பேசிக் கொண்டு செல்வார். நண்பர்களுடன் அதிக முக்கியமில்லாத சிறு விஷயங்களைப் பற்றி நகைச்சுவையோடு பேசிக்கொண்டு செல்வார். ஆனால் அன்று அடிகள் உள்ளம் பெரும் சிந்தனையில் மூழ்கியிருந்தது. அவர் உளப் போராட்டத்தை முகம் தெற்றெனக் காட்டியது. யாரிடமும் உரையாடாமல், சிரித்து மகிழாமல் நடந்து கொண்டிருந்தார். ஆசிரமத்திற்குத் திரும்பியவுடன் தொழுகைக் கூட்டத்துக்குச் சென்றார். தொழுகை முடிந்ததும், உறங்கச் சென்று விட்டார்.

உடல் ஓய்வு பெற்றது. மூளையும் கூட ஓரளவு ஓய்வு பெற்றதென்று சொல்லலாம். ஆனால் அவருடைய உள்ளம்

மட்டும் ஓயவில்லை; போராடிக்கொண்டே இருந்தது. அப் போராட்டம் வெளியில் தெரியாமல் அசைவற்று நடந்து கொண்டிருந்தது. சில மணிநேரம் படுக்கையில் கிடந்த வண்ணம் சிந்தனைப் போராட்டத்தில் ஈடுபட்டார். இரவு இரண்டு மணிக்குப் படுக்கையை விட்டு எழுந்து அமர்ந் தார். முகத்தில் தெளிவு ஏற்பட்டது. ஏதோ ஒரு முடிவுக்கு வந்து விட்டவர் போல் தென்பட்டார். காலைத் தொழுகை முடிந்தது. ஆசிரமவாசிகளையெல்லாம் அழைத்தார்.

முதல் நாள் மாலை நடந்த நிகழ்ச்சியை எல்லோருடைய முன்னிலையிலும் எடுத்துக் கூறினார்; பார்ச்சூர் சாஸ்திரியை ஆசிரமத்தில் சேர்த்துக் கொள்வதா, வேண்டாமா என்ற பிரச்சனையை அவர்கள் முன்னிலையில், ஆராய்ந்தார். ஆண்டவன் பார்ச்சூர் சாஸ்திரியின் வடிவத்தில் தம்மைச் சோதனை செய்ய வந்திருப்பதாகக் கூறினார். "பார்ச்சூர் சாஸ்திரியை அவருடைய தொழுநோயின் காரணமாக நான் வெளியில் அனுப்பினால், நான் ஆண்டவன் விருப்பத்திற்கு மாறுபட நடப்பவன் ஆகிறேன். ஆனால் அதே சமயத்தில் ஆண்டவனால் என்னிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கும் உங்கள் எல்லோருடைய நலத்தையும் பாதுகாப்பது என் கடமையாகிறது. இருதலைக் கொள்ளி எறும்புபோல் என் நிலை உள்ளது. இத் துன்பமான சோதனையை இவ்வாசிர மத்திலுள்ள எல்லோரும் ஒப்பி ஏற்றுக்கொண்டால் ஒழிய, நான் எவ்வாறு சாஸ்திரியை இங்கு தங்க வைக்க முடியும்?" என்று கூறினார்.

ஆசிரமவாசிகள் எல்லோரும் இக்கடின சோதனையில் பங்குகொள்ள ஒருமுகமாக ஒருப்பட்டனர். அடிகளின் உள்ளத்தில் ஏற்பட்டிருந்த பளு நீங்கியது. ஆனால் அவருடைய சத்தியத்திற்கும், அஹிம்சைக்கும் மீண்டுமோர் கொடிய சோதனை. தீண்டாமை கொடிது என்கிறோம். ஆனால் தீண்டாதோரும் தீண்டுவதற்கு அஞ்சும் தொழு

நோயாளன் வடிவில் அச்சோதனை காந்தியடிகளை நெருங்கியது.

உடனே, காந்தியடிகளின் குடிசைக்குப் பக்கத்தில் பார்ச்சூர் சாஸ்திரிக்கும் ஒரு குடிசை போடப்பட்டது. நோயாளியின் மீது சூரிய ஒளி நல்ல முறையில் படவேண்டுமென்பதற்காகக் கதர்த் துணியே கூரையாக வேயப்பட்டது. அன்றிலிருந்து பார்ச்சூர் சாஸ்திரியைப் போல் வேறு எந்த ஆசிரமவாசியும் காந்தியடிகளின் கவனத்தைக் கவரவில்லை. அப்போது இந்திய அரசியல் வானில் துன்ப மேகங்கள் சூழத்தொடங்கின. இரண்டாம் உலகப் போரில் ஆங்கிலேயருக்கு ஒத்துழைப்பு நல்க முடியாதென்று காந்தியடிகள் கூறி விட்டார். சட்டசபைகளிலும், பாராளுமன்றத்திலும் அமைச்சர் இருக்கையில் வீற்றிருந்த அரசியல் வாதிகள் எல்லோரும் சிறைக்கூடத்தைத் தழுவத் தயாராக இருந்தனர். சட்ட மறுப்பை எந்த வடிவில் துவக்குவது என்பது பற்றிய சொற்போர் அரசியல் தலைவர்களினிடையே காரசாரமாக இருந்தது. அமைச்சர் பதவியை உதறித்தள்ளிவிட்டுத் தியாகத் தீயில் தங்களைப் பொசுக்கிக் கொள்ள இந்திய அரியேறுகள் துடித்துக்கொண்டிருந்தன. இத்தகைய கொந்தளிப்புகளினிடையே, பார்ச்சூர் சாஸ்திரியின் உடலில் தொழுநோயால் ஏற்பட்டிருந்த புண்களை எப்படி ஆறவைப்பது என்ற சிந்தனையில் மகாத்மாவின் உள்ளம் மூழ்கியிருந்தது.

நாள்தோறும் பார்ச்சூர் சாஸ்திரியின் புண்களைத் தம் கையாலேயே கழுவி மருந்திட்டுக் கட்டினார். சிலநாட்களுக்குப் பின் ஒரு சில ஆசிரமவாசிகள் அப்பணியைத் தாங்கள் மேற்கொண்டனர். சாஸ்திரிக்கு என்ன உணவு கொடுக்க வேண்டுமென்பதை அடிகளே வரையறுத்துக் கூறினார். ஒவ்வொரு நாளும் மூன்று வேளையும், அடிகளிடம் காட்டிய பிறகே சாஸ்திரிக்கு உணவை எடுத்துச் செல்ல வேண்டும். காலையில் உலாவிவிட்டுத் திரும்பியதும்,

நேராக அடிகள் சாஸ்திரியின் குடிசைக்குச் செல்வார். அன்பு முகங் காட்டி ஆதரவான சொற்களால் அவருடைய நோயின் நிலைமையை வினவுவார். பார்ச்சூர் சாஸ்திரி வட மொழியில் பெரும் புலவர். அவர் எழுதிய இனிய கவிதை களை அடிகளுக்குப் படித்துக் காண்பிப்பார். அடிகள் மெய் மறந்து சாஸ்திரியின் கவிதைகளை ரசித்துச் சுவைப்பார். வேறு எந்த நோயாளியிடமும் காந்தியடிகள் அவ்வளவு நேரம் தங்குவதில்லை. இறுதியில் நகைச்சுவை யோடு பேசி, சாஸ்திரிகளிடமிருந்து விடை பெற்றுத் திரும்புவார்.

நாள் ஆக ஆக சாஸ்திரியின் கவிதைவளம் சிறப்படை யத் தொடங்கியது. நோயும் குறையத் தொடங்கியது. முதல் நாள் இங்கு வந்தபோது, அடிகளிடம் இரண்டு நாள் தங்க விரும்புவதாகக் கூறினார். ஆனால் அவ்விரண்டு நாள் இரண்டு ஆண்டுகளாக நீண்டது. சாஸ்திரியின் நோயின் கொடுமை தடைப்பட்டுக் குணம் ஏற்படும் வரையில் அவரை ஆசிரமத்தைவிட்டு அனுப்ப அடிகளுக்கு விருப்ப மில்லை.

உள்ளத்திற்கும் உடலுக்கும் நெருங்கிய தொடர் புண்டல்லவா? உள்ளம் தூய்மையும் இன்பமும் பெற்றிருக் கும்போது உடலும் தூய்மை பெறும். உள்ளத்தில் கவலை யும் தீமையும் குடிப் புகும்போது உடலும் நலிந்து வாடும். இவ்வுண்மையைப் பார்ச்சூர் சாஸ்திரி மெய்ப்பித்துக் காட்டினார். அவரை அடிகளின் அன்பு வெள்ளம் மூழ் கடித்தது. உள்ளத்தில் என்று மில்லாத இன்பத்தைப் பெற்றார் சாஸ்திரி. அவருடைய உடல் தூய்மை பெற்று, நோயினின்றும் கொஞ்சம் கொஞ்சமாக விடுதலை பெறத் தொடங்கியது. அதோடு பத்திய உணவும் அடிகளின் அன்பு மொழிகளும் அவருடைய நோய்க்கு அருமருந்து களாகப் பயன்பட்டன. உடலில் இருந்த நோயின் தோற்றங்களெல்லாம் மறைந்தன. தாமே எழுந்து தனி

மையில் வெளியில் சென்று உலாவும் அளவுக்குச் சாஸ்திரி யார் உடல் நிலை தேறியது. சாஸ்திரியார் உலாவிவிட்டு வழக்கமாக ஒரு இடத்தில் களைப்பாறுவதற்காக உட்காரு வது வழக்கம். காந்தியடிகளும் அப்பொழுது உலாவிவிட்டுத் திரும்புவார். சாஸ்திரியாரிடம் சிறிது நேரம் அமர்ந்து சிரிக்கச் சிரிக்கப் பேசுவார். அடிகளின் பேச்சிலும், கண் களிலும் மிளிரும் கருணை வெள்ளத்தில் சாஸ்திரியார் மூழ்கித் திணறுவார்.

வாரம் ஒரு முறை அடிகள் பேசா விரதம் மேற்கொள் வதுண்டல்லவா? அந்நாட்களில் சாஸ்திரியாரின் உள்ளத்தை எவ்வாறு மலர்விப்பது என்று அடிகள் சிந்தித்தார். அடி களின் அன்புமொழிகளைக் கேட்காவிட்டால், சாஸ்திரி யாருக்கு அன்று ஒரு பேரிழப்பாகும். அவருடைய பேச்சுத் தானே சாஸ்திரியாரின் மருந்து! அடிகள் அன்று ஒரு புதிய வழியைக் கையாண்டார். காலையில் எழுந்ததும் பழ மரத்தின் அருகில் சென்று புதிதாகப் பழுத்த ஆரஞ்சுப் பழ மொன்றைப் பறித்துக் கையில் எடுத்துக் கொள்வார். பிறகு சாஸ்திரிகளை நோக்கிச் செல்வார். புன் முறுவலோடு அப்பழத்தைக் கொடுப்பார். ஆர்வம் பொங்க சாஸ்திரியார் அப்பழத்தை வாங்கிக் கொள்வார். கண்களாலேயே காந்தி மருத்துவரும் நோயாளிக்கு அன்பு மருந்தை வழங்கு வார். அவரும் கண்களாலேயே ஏற்றுக் கொள்வார். காதலர்களும் பேசிக் கொள்ளமுடியாத அரிய கருத்துக்களை கண்களால் அவ்விருவரும் அன்று பேசிக் கொள்வர் காந்தி யெனும் சாந்த ஒளி, தன் அருட்சுடரைப் புன்னகையால் வீசிவிட்டுப் புறம்போகும்.

* * *

தென்னாப்பிரிக்காவில் 1899-ஆம் ஆண்டில் போயர் போர் தொடங்கியது. ஹாலந்து தேசத்திலிருந்து தென்னாப் பிரிக்காவில் போய்க் குடியேறியவர்கள் போயர்கள் என்று

அழைக்கப்பட்டார்கள். முதலில் இவர்கள் நேடாலில் குடியேறி இருந்தார்கள். நேடால், ஆங்கிலேயர் ஆட்சியின் கீழ் வந்த பிறகு போயர்களில் பெரும்பாலோர் உள்நாடு நோக்கிச் சென்று திரான்ஸ்வால் என்னும் தனி நாட்டை ஏற்படுத்திக் கொண்டனர். கொஞ்ச காலம் திரான்ஸ்வால் ஏறக்குறையச் சுதந்திர நாடாக இருந்தது. அப்போது குருகர் என்னும் போயர்ப் பிரமுகர் திரான்ஸ்வால் குடியரசின் தலைவராக விளங்கினார். குடியரசு என்ற பெயர் இருந்தாலும் ஓரளவு ஆங்கிலப் பேரரசுடன் தொடர்பு கொண்டிருந்தது. ஆனால் திரான்ஸ்வால் மீது ஆங்கில ஆதிக்கத்தை உறுதிப்படுத்த வேண்டுமென்று ஆங்கில அரசாங்கம் முயன்றபோது, போயர்கள் அம்முயற்சியை எதிர்த்தார்கள். அதன் விளைவாகவே போயர் போர் மூண்டது. இச்சமயம் காந்தியடிகள் ஒரு சேவைப் படையை ஏற்படுத்தினார். அப்படையில் 1100 இந்தியர்கள் பணி புரிந்தனர். குண்டுகள் பறக்கும் போர்க் களத்தில் அடிபட்ட வீரர்களைச் சுமந்து சென்றார். போர்க்களத்திற்கும் மருத்துவமனைக்கும் இருபது கல் தொலைவு இருக்கும். அவர்களுக்கு முதலுதவி செய்தார். போயர்போரில் காந்தியடிகள் செய்த சேவை பாராட்டற்குரியதாகும்.

காந்தியடிகள் இந்தியா வந்த பிறகுகூட, முதல் உலகப் போரில் ஆங்கில அரசாங்கத்திற்குப் பெருந்துணையாக இருந்தார். ஆங்கிலேயர்களும் அடிகளுக்குக் 'கெய்சரி—ஹிந்த்' பதக்கம் வழங்கினர். இச்செய்கைகளால் 'பகைவனுக் கருள்வாய்' என்ற காந்தியடிகளின் பேருண்மை விளங்கும்.

* * *

ஒருநாள் காந்தியடிகள் ஒரு மாட்டு வண்டியில் பயணம் செய்து கொண்டிருந்தார். பாதி வழி சென்றதும், அம்மாட்டின் கழுத்திலிருந்து குருதி வடிவதைக் கண்டார்.

அவர் உள்ளம் பெரிதும் வருந்தியது. ஏதோ செய்தற்கரிய மாபெரும் பாவத்தைச் செய்து விட்டதாகக் காந்தியடிகள் எண்ணினர். உடனே வண்டியைவிட்டுக் கீழே இறங்கினர். மாட்டை அவிழ்த்து விட்டுவிட்டு, வண்டியின் நுகத்தைத் தம் கழுத்தில் மாட்டிக் கொண்டார். அம் மாடு தம்மை எங்கிருந்து இழுத்து வந்ததோ அதுவரை வண்டியைத் தாம் இழுத்துச் சென்றார். இச்செயல், ஆராய்ச்சியில் ஈடுபடுவாருக்குக் கேலியாகத் தென்படலாம். வண்டியை அடிகள் இழுத்துச் சென்றதால் மாட்டின் நோய் தீர்ந்து விடுமா? என்று கேட்கலாம். இங்கு காரணகாரிய வாதத்திற்கு இடமில்லை. வண்டியை இழுத்துச் சென்றதன் மூலம் தம்முடைய பாவத்திற்குக் கழுவாய் தேடிக் கொண்டாத அடிகளின் உள்ளம் எண்ணியிருக்கலாம்.

* * *

காந்தியடிகளின் அருளுள்ளம் எவ்வளவு பரந்தது என்பதற்கும், அருளுக்கு எத்தகைய ஆற்றல் இருக்கிறது என்பதற்கும் அடிகளின் வாழ்க்கையிலிருந்தே ஓரிரு எடுத்துக்காட்டுகளைக் காண்போம்.

காந்தியடிகள் முதன் முதலாக 1922-ஆம் ஆண்டு இந்தியாவில் சிறைப்படுத்தப்பட்டு எரவாடா சிறையில் வைக்கப்பட்டார். காந்தியடிகள், இந்து முஸ்லீம் ஆகிய இரு இனத்தாராலும் பெரிதும் விரும்பப்படுகிறார் என்ற உண்மையை நன்கு உணர்ந்திருந்த வெள்ளைக்காரச் சிறையதிகாரி, மொழியறியா நீக்ரோ ஒருவனைக் காந்தியடிகளுக்குத் துணையாக அனுப்பியிருந்தார். அவனும் ஒரு கைதி. அவனுக்கு ஆங்கிலமும் தெரியாது; இந்துஸ்தானியும் தெரியாது. மொழி தெரியாத ஒருவனைத் துணைவனாக அனுப்பினால், ஆங்கில ஆட்சியின் பயங்கரப் பகைவரான காந்தியடிகள், தம் செல்வாக்கை அவன்மீது செலுத்த முடியாது என்று எண்ணினர் அந்தச் சிறையதிகாரி. வேற்று

நாட்டவன் ஆகையால், காந்தியடிகள் அவன் உள்ளத்தை மாற்ற முடியாது என்று எண்ணித் தம் செயலை வியந்து கொண்டார் சிறைக்காவலர்.

சிறையதிகாரி என்ன நடக்கக்கூடாது—நடைபெறாது— என்று எதிர்பார்த்தாரோ அது விரைவில் நடந்தது. ஒரு நாள் அந்த நீக்ரோ கைதியைத் தேள் கொட்டிவிட்டது. வலி பொறுக்க முடியாமல் துடித்தான். காந்தியடிகளிடம் ஓடிவந்தான். காந்தியடிகள் பிறருடைய துன்பத்தைத் தம்முடைய துன்பமாகக் கருதும் இயல்புடையவராயிற்றே. உடனே கடிவாயில் தம் வாயைவைத்துப் பலம் கொண்ட மட்டும் உறிஞ்சி, தேளின் நஞ்சைப் பெரும்பகுதி வெளியேற்றி விட்டார். அவனுடைய வலியும் பெருமளவு குறைந்து விட்டது. பிறகு அவருக்குத் தெரிந்த மருத்துவத்தைச் செய்தார்.

அன்றிருந்து அந்த நீக்ரோ, அடிகளின் அருளுள்ளத்திற்கு ஆட்பட்டு அடிமையானான். அவர் உள்ளமறிந்து பணிவிடை செய்தான். அவருடைய கண்ணின் குறிப்பறிந்து செயல் புரிந்தான். சிறிது நாட்களில் தக்ளியால் நூல் நூற்கக் கற்றுக் கொண்டான். பஞ்சை அடித்துப் பட்டை போட்டுக் கொடுத்தான். பிறகு இராட்டையாலும் நூல் நூற்கக் கற்றுக் கொண்டான். காந்தீயத் தொண்டனாகவே மாறிவிட்டான். இதைக் கண்ட சிறையதிகாரி, மிகவும் உளம் குழம்பிப் போனார்.

* * *

விடுதலைப் போரில் ஈடுபட்டு எண்ணற்ற இந்திய வீரர்கள் சிறை சென்றனர். அவ்வாறு சிறை செய்யப்பட்ட வீரர்களில் பலர் மீது, எண்ணற்ற குற்றங்கள் ஆங்கில அரசாங்கத்தாரால் சுமத்தப்பட்டன. ஒரு அரசியல் கைதியின் மீது கொலைக்குற்றம் சுமத்தப்பட்டிருந்தது. உண்மையாக, அவன் அரசியல் நோக்கத்தோடு, ஆவேச வெறியில்

கொலையும் செய்திருக்கலாம். அக்குற்றவாளியின் உறவினர் காந்தியடிகளிடம் ஓடி வந்தனர். அவனை எவ்வாறேனும் விடுதலை செய்யவேண்டும் என்று வேண்டினர். காந்தியடிகளும் அவனை செய்வதாகக் கூறினர். அப்போது கொலைஞர் களைப் பற்றிக் காந்தியடிகள் பின்வருமாறு கூறினர்.

''கொலையாளிகளும் மன்னிக்கத்தக்கவர்களே. கொடிய கொலைஞர்களாக இருந்தாலும், அவர்களைக் கொல்வதை நான் விரும்பவில்லை. மிகவும் அஞ்சத்தக்க கொலைஞர்கள் பலர் என்னுடைய ஆசிரமத்தில் உறுப்பினர்களாக உள்ளனர். ஆனால் அவர்களெல்லாம் திருந்தி, இன்று அஹிம்சாவாதிகளாக விளங்குகின்றனர்'' என்று கூறினர். காந்தியடிகளின் அருளறம் எந்த அளவு பரந்தது என்பதை இதனால் அறியலாம்.

## 6. சமயம்

தமக்குச் சமயத்தைப்பற்றிய சிந்தனைகள் எப்பொழுது தோன்றின என்பது பற்றிக் காந்தியடிகள் 'சமயத் தோற்றங்கள்' என்ற தலைப்பில் தம் நூலில் குறிப் பிட்டுள்ளார். அத்தலைப்பின் கீழ், இளமைக் காலத்தில் தம் உள்ளத்தில் ஏற்பட்ட நிலையற்ற சமயக்கருத்துக்களைப் பற்றிக் கூறிக்கொண்டு செல்கிறார். பள்ளியில் சமயத்தைப் பற்றி எதுவும் அக்காலத்தில் சொல்லிக் கொடுக்கப்படா ததைப் பெரும் குறையாக எண்ணுகிறார். காந்தியடிகள் குசராத்தி நாட்டு மோடபனியா வகுப்பைச் சார்ந்தவ ரென்றும், அவ்வகுப்பினரெல்லாம் வைணவ சமயத்தில் பெரும்பற்றுக் கொண்டவர்களென்றும் முதலிலேயே குறிப் பிட்டேன். அக் குலவழக்கத்திற்கேற்பக் காந்தியடிகளும் வைணவ சமயத்தின் பால் இளமையிலேயே பற்றுகொண்டு விளங்கினர். அடிகளுக்குப் பேய் பிசாசுகளைப் பற்றிய அச்சம் இளமையில் இருந்தது. அவ்வச்சத்தைப் போக்கிக்

கொள்ள, வீட்டு வேலைக்காரி அரம்பையின் அறிவுரைப்படி, இராம நாமத்தைப் பாராயணம் செய்யத் தொடங்கினர். அதன் பிறகு பேய் பிசாசுகளைப் பற்றிய அச்சமும் அவருள்ளத்தைவிட்டு நீங்கியதாம். எனவே அவர் பிற் காலத்தில் மேற்கொண்ட இராம பஜனைக்கு, இளமை யிலேயே வித்தூன்றப்பட்டது என்பதை அறியலாம். போர்பந்தரில் வாழ்ந்தபோது, அவருடைய வீட்டில் நாள் தோறும் அவர் தந்தையின் முன்னால், இராமாயணம் படிக்கப்படுவதுண்டாம். இராச கோட்டையில் அடிகள் வாழ்ந்தபோது பாகவதம் படிக்கப்பட்டதாம். இவைகளைக் கேட்டதனால் இராமாயணம், பாகவதம் ஆகிய நூல்களின் பால் இளமையிலேயே தமக்குப் பற்று ஏற்பட்டது என்று காந்தியடிகள் கூறுகிருர்.

காந்தியடிகளின் பெற்ருேர்கள் வைணவர்களாக இருந்தாலும், சிவன் கோவிலுக்கும் வழக்கமாகச் செல் வதுண்டு. சைவ நோன்புகளையும் அவருடைய தாயார் மேற்கொண்டு ஒழுகுவாராம். சமணப் பெரியர்களும் அடி களின் இல்லத்திற்கு அடிக்கடி வருவார்கள். காந்தியாரின் தந்தையாருக்கு இசுலாமிய நண்பர்களும், பாரசீக நண்பர் களும் பலருண்டு. அவர்களும் வீட்டுக்கு அடிக்கடி வருவார் கள். காந்தியடிகளின் தந்தையாருக்குச் சமயக் கொள்கை களை அறிந்து கொள்வதில் பேரார்வம் உண்டு. ஆகையினால் வீட்டில் சமயங்களைப் பற்றிய உரையாடல் அடிக்கடி நடை பெறும். நோய்வாய்ப்பட்டிருந்த தம் தந்தைக்குப் பணி விடை செய்து கொண்டே, மோகனதாஸ் மேற்படி உரை யாடல்களைக் கவனமாகக் கேட்பார். இதன் பயனாக 'எல்லாச் சமயங்களும் கடவுளுக்கு ஏற்ற சமயங்களே' என்ற உறுதியான நம்பிக்கை அவருக்கு இளமையிலேயே ஏற்பட்டது.

ஆனால் கிருத்தவ சமயத்தின் மேல் மட்டும் அடிகளுக்கு அந்த நாளில் சிறிது வெறுப்பு ஏற்பட்டிருந்தது. இதற்குக்

காரணம், பள்ளிக்கூடத்துக்கு அருகில், தெரு மூலையில் நின்று கொண்டு கிருத்தவப் பாதிரிமார்கள் செய்த சொற்பொழிவுகள்தாம். இந்து சமயத்தையும், அச்சமயக் கடவுளர்களையும் அப்பாதிரிமார் இகழ்ந்து பேசியதைக் காந்தியடிகளால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. இதே சமயத்தில் ஓர் இந்து நண்பர், கிருத்துவ சமயத்தைத் தழுவியது பற்றிக் காந்தியடிகள் கேள்விப்பட்டார். அந்த நண்பர் கிருத்தவரானவுடனே மாட்டிறைச்சி தின்னவும், சாராயம் குடிக்கவும், மேலைநாட்டினரைப்போல் உடைகளை யணியவும் தொடங்கிவிட்டாராம்; அதோடு இந்து சமயத்தையும், இந்திய நாட்டையும் இகழ்ந்து பேசத் தலைப் பட்டாராம். இவற்றையெல்லாம் அறிந்ததும், 'கிருத்தவ சமயமும் ஒரு சமயமா? இதற்குச் சமயம் என்ற பெயரே தகாது' என்று அடிகள் எண்ணினாராம். ஆனால் பிற்காலத்தில் மேற்படி காரியங்கட்கெல்லாம் கிருத்தவ சமயம் பொறுப்பில்லை என்றும், கிருத்தவ சமயச் சொற்பொழிவாளர்களே காரணம் என்றும், காந்தியடிகள் அறிந்து கொண்டார். கிருத்தவ சமயம் அடிகளின் வாழ்வில் எவ்வாறு தொடர்பு கொண்டிருந்தது என்பதைப் பற்றிப் பின்னர் அறிவோம்.

காந்தியடிகள் இங்கிலாந்தில் படித்துக் கொண்டிருந்த போது, பிரம்மஞான சங்கத்தைச் சேர்ந்த இரு ஆங்கில நண்பர்கள், அவருக்கு அறிமுகமானார்கள். அப்போது பகவத்கீதையைப்பற்றிய பேச்செழுந்தது. 'நீர் பகவத் கீதை படித்திருக்கிறீரா?' என்று அந்த நண்பர்கள் கேட்டார்கள். ஆனால் பகவத்கீதையோடு அடிகளுக்கு ஈடுபாடு கிடையாது. எனவே, அடிகளையும் தம்முடன் கீதை படிக்க வருமாறு அழைத்தார்கள். வெளிநாட்டுமக்கள், தம் தாய் நாட்டு நூலான கீதையைப் படிக்க அழைத்தபோது, அடிகள் உண்மையாகவே வெட்கமடைந்தார். பிறகு, 'சர்எட்வின் ஆர்னால்டு' என்பவரால் எழுதப்பட்ட கீதை

யின் ஆங்கில மொழி பெயர்ப்பைப் படித்தார். பின்னர் கீதையின் சமஸ்கிருத மூலத்தையும், குஜராத்தி மூலத்தையும் படிக்கத் தொடங்கினர். அதிலிருந்து கீதை அடிகளின் வாழ்வோடு பிரிக்க முடியாதபடி ஒன்றிவிட்டது.

மேற்கூறிய நண்பர்கள் இருவரும் காந்தியடிகளையும் பிரம்மஞான சங்கத்தில் சேருமாறு வற்புறுத்தினர்கள். 'என்னுடைய சொந்தச் சமயத்தைப் பற்றியே நான் இன்னும் சரியாகப் புரிந்து கொள்ளாதிருக்கையில், பிற சமயக் கழகம் எதிலும் சேர விரும்பவில்லை' என்று அடிகள் மறுத்துக் கூறிவிட்டார். பிறகு பிரம்மஞான சங்க நூல்களையும், இந்து சமய நூல்களையும் படித்தார். இந்து சமயத்தில் குருட்டு நம்பிக்கைகளே மிகுந்திருக்கின்றன வென்று, பாதிரிமார்களின் பிரசாரத்தினல் ஏற்பட்டிருந்த தவருன கொள்கை அடிகளின் உள்ளத்திலிருந்து மறைந்தது.

ஒரு நாள் மான்செஸ்டரிலிருந்து வந்த உத்தமக் கிருத்தவர் ஒருவரை, அடிகள் சந்தித்தார்; அதுவும் இலண்டன் மாநகரிலிருந்த சைவ உணவு விடுதியில் சந்தித்தார்; கிருத்தவ சமயத்தைப் பற்றித் தம் உள்ளத்தில் கொண்டிருந்த ஐயப்பாடுகளையெல்லாம் அந்நண்பரிடம் கேட்டார். 'மதுவருந்துவதும் புலாலுண்பதும் கிருத்தவ சமயக் கொள்கைகளா?' என்று அந்நண்பரை வினவினர். இராச கோட்டையில் கிருத்தவப் பாதிரிமார் பிற சமயங்களை இழித்துப் பேசியதையெல்லாம் எடுத்தியம்பினர். அடிகளின் சொற்களைக் கேட்ட அந்நண்பர் மிகவும் வருந்தினர். 'நான் புலால் உண்பதில்லை; மது அருந்துவதில்லை. கிருத்தவர் பலர் புலால் உண்பதும் மது அருந்துவதும் உண்மையே. ஆனல் எங்கள் சமய நூலில் மதுவும் புலாலும் அருந்தும்படி கட்டளையிடப்படவில்லை. அருள் கூர்ந்து விவிலிய நூலைப் படியுங்கள்' என்று அந்நண்பர் கூறினர். அவரே விவலிய நூலின் படி ஒன்றை அடிகளுக்கு வாங்கிக்

கொடுத்தார். விவிலிய நூலின் புதிய ஏற்பாட்டில் (New Testament) உள்ள 'மலைச் சொற்பொழிவு' (Sermons on the Mount) அடிகளின் உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்தது. எட்வின் ஆர்னால்டு எழுதிய 'ஆசிய சோதி' (Light of Asia) என்ற நூலையும், கார்லைல் என்பார் எழுதிய 'வீரரும் வீர வழிபாடும்' என்ற நூலையும் காந்தியடிகள் படித்தார். ஆசிய ஜோதி புத்தரின் வரலாற்றை விளக்கும் நூல். வீரரும் வீர வழிபாடும் பெரியோர்களின் வாழ்க்கை வரலாற்று நூல். அதில் எழுதப்பட்டிருந்த மகம்மது நபியின் வாழ்க்கை வரலாறு காந்தியடிகளின் உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்தது. அக்காலத்தில் சார்லஸ் பிராட்லா என்ற பேரறிஞர் இங்கிலாந்தில் வாழ்ந்தார். அவர் பெரிய நாத்திகர். நாத்திக சமயத்தைப் பற்றியும் அறிந்து கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தோடு, அவர் எழுதிய நூல்களையும் அடிகள் படித்தார். இவ்வாறு பல சமயங்களைப் பற்றியும் நன்கு அறிந்து கொண்டார்.

காந்தியடிகளுக்கு தென்னாப்பிரிக்காவில் பல கிருத்தவ நண்பர்கள் ஏற்பட்டனர். அவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் திருவாளர் பேகர், ரெவண்ட் ஆண்ட்ரூ, திருவாளர் டோக், திருவாளர் போலக், திருவாளர் காலன்பேக் என்பவர்கள். இந்தியாவில் அடிகளின் சிறந்த நண்பரான தீனபந்து ஆண்ட்ரூசை அறியாதார் யார்? பிரெஞ்சு நாட்டு பேரறிஞரும், அடிகளைப் பற்றி அரிய நூல் எழுதியவருமான 'ரோமண் ரோலண்டு' கிருத்தவரே. அடிகளின் அடித்தொண்டராய்ப் பணியாற்றி வந்த 'மீரா பெண்' என்பவர், ஆங்கில நாட்டைச் சேர்ந்த கிருத்தவப் பெண் மணியே ஆவார். தென்னாப்பிரிக்காவில் வாழ்ந்த கிருத்தவ நண்பர்கள், காந்தியடிகளை எவ்வாறேனும் கிருத்தவ சமயத்தில் சேர்த்துவிடவேண்டுமென்று பெரு முயற்சி செய்தனர். அவர்களில் குறிப்பிடத்தக்கவர் மர்ரே பாதிரியார். அவர் அடிகளைக் கிருத்தவசமய மாநாடுகட்கெல்லாம்

அழைத்துச் சென்றார். ஆனால் எதுவும் அடிகளின் உள்ளத்தை மாற்றவில்லை.

கிருத்தவ நண்பர்கள் காந்தியடிகளைத் தங்கள் சமயத்தில் சேர்த்துக்கொள்ள முயன்றது போலவே, இசுலாமிய நண்பர்களும் முயற்சி செய்தனர். இசுலாமிய நூல்களைப் படிக்குமாறு தாதா அப்துல்லா அடிக்கடி அடிகளுக்குக் கூறுவார். காந்தியடிகளும், 'சேல்' என்பாரின் குரான் மொழிபெயர்ப்பையும், இசுலாத்தைப் பற்றிய வேறு சில நூல்களையும் படித்தார். சமயம் நேரும்போதெல்லாம் இசுலாத்தின் பெருமைகளை எடுத்துக் கூறிக் காந்தியடிகளைத் தம் சமயத்தின்பால் அப்துல்லா சேத் இழுக்க முயன்றார். இதுபோன்ற சமயங்களில் தம் உள்ளத்தில் எழுந்த எண்ணங்களை அடிகள் பின்வருமாறு குறிப்பிடுகிறார்:

"கிருத்தவ சமயக் கொள்கைகளில் எனக்குப் பல ஐயப்பாடுகள் எழுந்தன. ஏசுநாதர் ஒருவரே கடவுளின் அவதாரப் புதல்வர் என்றும், அவரிடம் நம்பிக்கை வைப்போர் மட்டுமே வீடுபேற்றைப் பெறுவர் என்றும், அச்சமயத்தார் கூறிய சொற்களை என்னால் நம்ப முடியவில்லை. கடவுளுக்கு மக்கள் இருக்கக் கூடுமானால், நாம் எல்லோரும் அவருடைய மக்களே. ஏசுநாதர் கடவுளைப் போன்றவரானால், அல்லது கடவுளேயானால், உலகமக்கள் எல்லோரும் கடவுளைப் போன்றவராகவோ அல்லது கடவுளேயாகவோ ஆதல் கூடும். ஏசுநாதர் தம் இறப்பினால், தாம் வடித்த குருதியால், உலகத்தின் பாவங்கள் எல்லாவற்றிற்கும் கழுவாய் தேடிவிட்டார் என்பதை என் அறிவு அப்படியே ஒத்துக்கொள்ளத் தயாராயில்லை. இக் கொள்கையை அப்படியே எடுத்துக் கொள்ளக் கூடாதென்றும், உட்கருத்தை நோக்க வேண்டுமென்றும் எனக்குத் தோன்றியது. மற்றும், மக்களினத்திற்கே ஆன்மா உண்டு என்பதும், மற்ற உயிரினங்களுக்கு ஆன்மா கிடையா

தென்பதும், அவை சாவின்போது அடியோடு அழிந்து விடுகின்றன என்பதும் கிருத்தவக் கொள்கை. ஆனால் எனது கொள்கை இதற்கு முற்றிலும் மாறுபட்டது. ஏசுநாதரை நான் தியாகமூர்த்தி என்றும், வாய்மைக்காக உயிர் துறந்த பெருந்தகை என்றும், கடவுள் தன்மை பொருந்திய சமயக்குரவர் என்றும் ஒப்புக்கொண்டேன். ஆனால், உலகிலேயே இதுகாறும் பிறந்தவர்களுள் ஏசுநாதர் ஒருவரே 'மகான்' என்பதை என்னால் ஒத்துக்கொள்ள முடியவில்லை. சிலுவையில் அவர் உயிர்நீத்தது உலகுக்கு ஓர் அரிய எடுத்துக் காட்டாகும். ஆனால் அதில் எல்லை மீறிய விந்தை ஏதும் இருப்பதாக என் உள்ளம் ஏற்றுக் கொள்ளவில்லை. ஏசுநாதரைப் போலத் தூயவாழ்வும், தன்னலமறுப்பும் கொண்ட பெரியார்களும், விந்தைகளை நிகழ்த்திய மகான்களும் எல்லாச் சமயத்திலும் இருந்திருக் கின்றனர். கிருத்துவ சமயத்தில் பாவிகள் நல்லோர்களா வது குறித்துக் கேள்விப்பட்டது போலவே, மற்றச் சமயங் களிலும் மக்கள் சீர்திருந்தியிருப்பதைப் பார்த்திருக்கிறேன். தத்துவத்துறையில் பார்க்குங்கால், கிருத்தவ சமயக் கொள்கைகள், பிற சமயக் கொள்கைகளை விட உயர்ந் தவை என்று கூறிவிட முடியாது. தன்னல மறுப்பை முன்னிட்டுப் பார்க்கையிலோ, இந்துக்கள் கிருத்தவர் களிலும் பெரிதும் மேம்பட்டவர்கள் என்று தோன்றிற்று. கிருத்தவ சமயத்தை முற்றும் நிறைவுபெற்ற சமயம் எனவோ, எல்லாச் சமயங்களிலும் தலைசிறந்த தொன் றெனவோ என்னால் ஒப்புக்கொள்ள முடியவில்லை.

ஆனால் இந்து சமயமும் முழுதும் நிறைவுபெற்ற சமய மென்று நான் உறுதியாகக் கூறமுடியாது. இச் சமயத் திலும் பல குறைகள் என் கண்முன்னே நன்றாகப் புலப் பட்டுக் கொண்டிருக்கின்றன. தீண்டாமை இந்து சமயத் தின் ஒரு பகுதியானால், அது அழுகிப்போன பகுதியாகவே இருக்க வேண்டும். பற்பல சாதிகள், கோட்பாடுகள்

முதலிய பிரிவுகளின் நீதியும் எனக்குப் புலனாகவில்லை. மறைகள் யாவும் இறைவனால் வெளியிடப்பட்டவையெனில், விவிலிய நூலும், குரானும் ஏன் அத்தகையனவாக இருக்கக்கூடாது?''

அடிகள் வாழ்வின் முற்பகுதியில், அவருள்ளத்தில் சமயத்தைப்பற்றி எழுந்த எண்ண அலைகளைக் கண்டோம். இவற்றால் நாம் அறிவது யாதெனில், எல்லாச் சமயங்களிலும் படிந்துள்ள உயர்ந்த கொள்கைகளே அடிகளின் சமயமாக இருக்க முடியும் என்பதாகும். அதன் விரிவைப் பின்னர் காண்போம்.

அடிகளைப் பார்த்து, ''நீவிர் எச்சமயத்தைச் சார்ந்தவர்?'' என்று யாராவது கேட்டால், ''நான் வைணவன்'' என்று தயங்காமல் கூறுவார். அவரை அறியாதார்க்கு, அடிகளின் விடை வியப்பை ஊட்டலாம். ஏனெனில் காந்தியடிகள் திருமால் கோவிலுக்கும் செல்லுவதில்லை; வீட்டிலேயும் இறைவனின் திருவுருவத்தை வைத்து வழிபாடு நிகழ்த்துவதில்லை. வைணவனுக்குரிய துளசிமணி மாலையை அவர் கழுத்தில் காணமுடியாது. அடிகளின் வைணவம் உயர்வுதாழ்வற்றது; தீண்டாமைப் பேயைத் தீதெனவெறுப்பது; வடகலை, தென்கலைச் சண்டைகளுக்கு அப்பாற்பட்டது. உண்மை வைணவன் யார் என்பதை அவரே விளக்குகிறார்.

காந்தியடிகளின் வழிபாட்டுப் பாடல்களில் உள்ளத்தை உருக்கும் தன்மையது, 'வைஷ்ணவ ஜனதோ' என்று தொடங்கும் பாடல். அப்பாடல் நரசிம்ம மேத்தா என்பவரால் எழுதப்பட்டது அப்பாடலில் வைணவனின் இலக்கணங்கள் கூறப்படுகின்றன. அவை பின்வருமாறு :

'பிறருடைய துன்பங்களை உணர்கிறவனும், துன்பப் படுவோர்க்கு இறங்கி நன்மைபுரிபவனும், உள்ளத்தில் சிறிதும் செருக்கற்றவனும் வைணவன்.

உலகில் எல்லோர் முன்பும் பணிவு காட்டி, எவரையும் இகழாது இன்சொல் பேசி, உள்ளம் வாய் மெய் ஆகிய மூன்றினுலும் கவலையற்றிருப்பவனே வைணவன்.

எவ்வுயிரும் தன்னுயிர்போல் எண்ணி, பற்றை ஒழித்துப் பிறபெண்டிரைத் தாயென மதித்து, உள்ளத் தாற் பொய்யிலனுகிப் பிறன் பொருளை வெஃகாதவனுய் வாழ்பவன் வைணவன்.

மாயையால் அசையாது உறுதிப்பாடுகொண்டு, இராம நாமத்தில் ஈடுபாடு மிக்கவனுய் வாழ்பவன் வைணவன்.

பொய்யுரை, கயமை ஆகியவற்றினின்றும் விலகிப் பற்று, இன்பவிருப்பம், சினம் முதலியவற்றை அடக்கி ஆள்பவனே வைணவன்.

இத்தகைய வைணவனைப் பெற்ற தாயை நூறு முறை வணங்குவேன். அவனுடைய உடலில் எல்லாப் புண்ணியத் தலங்களும் அடக்கம். அவனை ஒருமுறை காண நேர்ந்தால், நமது எழுபத்தொரு தலைமுறையும் கடைத்தேறும்.''

மேற்கூறிய பாடலை எடுத்துக் கூறி, 'இம்மாதிரியான வைணவனுவதற்கு நான் முயன்று கொண்டிருக்கிறேன்' என்று கூறுவார். அடிகள் கடைப்பிடித்தொழுகிய சமயத் திற்கு உயிரூட்டிய மற்றொரு குசராத்திப் பாடல் குறிப் பிடத் தக்கது. அப்பாடல் பின்வருமாறு:

''ஒரு குவளை தண்ணீர் கொடுத்தவனுக்கு ஒருவேளை விருந்தளிக்க வேண்டும்.

அன்புடன் உன்னை வரவேற்பவனை ஆர்வத்தோடு வணங்க வேண்டும்.

உனக்கு ஒரு காசு கொடுத்தவனுக்கு ஒரு பொன் திருப்பிக் கொடுக்க வேண்டும்.

உன் உயிரைக் காத்து உதவிய அன்பனுக்குத் திரும்ப உன் உயிரை அளிக்க எப்போதும் ஆயத்தமாக இருக்க வேண்டும்.

இப்படியெல்லாம் நல்லோர் அறிவுரைகளை மதித்து நடப்பவன் பதின்மடங்கு நன்மை பெறுவான்.

சான்றோர் எனப்படுவோரின் இலக்கணம் மேலே சொல்லப்பட்டவை மட்டுமன்று; அவர்கள் மக்களினம் எல்லாம் ஒன்றெனை உணர்ந்தவர்கள்; ஆதலின் இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யும் பண்புடையவர்கள்

இன்னா செய்தார்க்கும் இனியவை செய்வதில் அவர்கள் பேரின்பம் அடைவார்கள்.''

இப்பாடலின் இறுதி வரிகள் அடிகளின் இளமை உள்ளத்தில் பசுமரத்தாணிபோல் பதிந்தன. மேற் கூறிய பாடல்களில் காணப்படும் கருத்துக்களே இவருடைய சமயம். இக் கருத்துக்கள் படிந்துள்ள சமயங்கள் யாவும் அடிகளின் சமயங்களே.

காந்தியடிகளின் முற்போக்குக் கருத்துக்களும், பொதுமை எண்ணங்களும் தீண்டாமைக் கொள்கையும் தீவிர இந்துக்களுக்குப் பிடிப்பதில்லை. இந்து சமயத்தைப் பாழ் செய்ய வந்தவர் என்று அடிகளைக் குறைகூறினர்; குற்றம் சாட்டினர். காந்தியடிகளுக்கு ஆரம்பத்திலிருந்தே இசுலாம் நண்பர்களோடு நெருங்கிய தொடர்புண்டு. இந்திய நாட்டில் இந்தியர்களும், இசுலாமியர்களும் உடன் பிறந்தவர்களாக வாழ வேண்டுமென்பதற்காக அடிகள் அரும்பாடுபட்டார். இசுலாமியரின் சமயக் குறிக்கோளுக்கு ஆதரவு காட்டுவதற்காகக் 'கிலாபாத் இயக்கத்'தையும் அரசியலோடு இணைத்துக் கொண்டார். 1947—48-ல் நடைபெற்ற இந்து-முஸ்லீம் குழப்பத்தை அடக்குவதற்காக அல்லும்பகலும் இடையறாது உழைத்தார். இறுதியில் அப்பணியிலேயே தம் இன்னுயிரை நல்கினார்.

இவ்விடத்தில் காந்தியத்தை நன்குணர்ந்த இரண்டு கவிஞர்களின் பாடல்களைக் குறிப்பிட விரும்புகிறேன் :

அல்லா என்பார் சிலபேர்கள்
அரனரி என்பார் சிலபேர்கள்
சொல்லால் விளங்கா நிர்வாணம்
என்றும் சிலபேர் சொல்வார்கள்
எல்லாம் இப்படிப் பலபேசும்
ஏதோ ஒருபொருள் இருக்குமன்றோ?
அந்தப் பொருளை நாம் நினைந்து
அனைவரும் ஒன்றாய்க் குலவிடுவோம்.

*   *   *

தெய்வம் பலபல சொல்லிப்—பகைத்
தீயை வளர்ப்பவர் மூடர்;
உய்வ தனைத்திலும் ஒன்றாய்—எங்கும்
ஓர்பொரு ளானது தெய்வம்.
தீயினைக் கும்பிடும் பார்ப்பார்—நித்தம்
திக்கை வணங்கும் துருக்கர்;
கோயிற் சிலுவையின் முன்னே—நின்று
கும்பிடும் ஏசு மதத்தார்.
யாரும் பணிந்திடும் தெய்வம்—பொருள்
யாவினும் நின்றிடும் தெய்வம்;
பாருக்குள்ளே தெய்வம் ஒன்று—இதில்
பற்பல சண்டைகள் வேண்டாம்.

*இப்பாடல்கள் முறையே நாமக்கல் இராமலிங்கம் பிள்ளையவர்களாலும், தேசிய கவி சுப்பிரமணிய பாரதியாராலும் பாடப்பட்டவை; இப்பாடல்களில் கூறப்படும் கடவுட் கொள்கை, காந்தியடிகளுக்கு அரனும் ஒன்றுதான்; அல்லாவும் ஒன்றுதான். பரமண்டலத்திலிருக்கும் பரம பிதாவும், பரந்தாமனும் ஒன்றே. குறளும் குரானும், கீதையும் கிருத்தவ வேதமும் அவர் சமய நூல்களே. இந்துக்களும், இசுலாமியர்களும், கிருத்தவர்களும் அவர் உடன் பிறந்தவர்களே. இராமனுக்கும் இரகீமுக்கும் அவர் வேறு*

பாடு கண்டறியார். 'ஈஸ்வர அல்லா தேரே நாம்' (ஈசுவரன் அல்லா என்பதெல்லாம் உம்பெயரே) என்பது அவர் வழி பாட்டுப் பாடல். இவர் தென்னாப்பிரிக்காவில் வாழ்ந்த போது மாதாகோவிலுக்கும் மசூதிக்கும் செல்வார்.

காந்தியடிகள் தம்மை எப்பொழுதும் அரசியல் வாதி என்று கூறிக் கொள்ளமாட்டார். சமயவாதி என்றே குறிப்பிடுவார். தம் வாழ்வில் நடத்திய அரசியல் போராட்டங்களையெல்லாம் சமயத்தொண்டாகவே அவர் குறிப்பிடுவார். சத்தியாக்கிரகத்தை 'வேள்வி' என்பார். 'நம்நாட்டின் சமயத்தைப்பற்றி, நன்குணர்ந்து கொள்ளாதவன், மக்களுக்கு உண்மையான அரசியல் பணியைச் செய்ய முடியாது' என்று அடிக்கடி கூறுவார். அரசியலைச் சமயக் கண் கொண்டு பார்க்கும் அடிகளின் கொள்கை, பல அரசியல் வாதிகளுக்குப் பிடிக்கவில்லை. பண்டித நேருகூட, 'காந்தியடிகளின் இக் கொள்கை எனக்குப் பிடிக்கவுமில்லை; புரியவுமில்லை' என்று பல இடங்களில் கூறியிருக்கிறார். அரசியல் காரணங்களுக்கு மட்டுமல்லாமல், இயற்கையின் கொடுமைகளுக்குகூடச் சமயத்தையே அடிகள் சான்று காட்டிப் பேசுவார்.

ஆனால் காலம் செல்லச் செல்ல அடிகளின் கொள்கை இந்திய அரசியல் வாதிகளுக்குப் பழகிப் போய்விட்டது. இது சிறந்த ஒரு கொள்கையாகவும் பட்டது. காந்தியடிகளின் சமயக் கொள்கைகள் வெறும் ஆன்மீகத்தின் அடிப்படையில் மட்டும் அமையாமல், சமூகம், அரசியல், பொருளியல் ஆகிய பலவற்றின் அடிப்படையில் அமைந்தவை. அத்தகைய அடிப்படைகளை அமைத்துக் கொடுத்தவை, பல அரிய நூல்களாகும். ஆன்மீக அடிப்படையை அமைத்துக் கொடுத்த நூல்கள் கீதையும் விவிலியமும் ஆகும். அடிகளின் அரசியல், பொருளியல், சமூகவியல் ஆகிய அடிப்படைகளை அமைத்துக் கொடுத்தவைகள், அன்னாகிங்ஸ் போர்டு என்பார் எழுதிய 'நேரிய வழி' (The Perfect Way)

என்ற நூலும், உருசியப் பேரறிஞரான தால்ஸ்தாய் எழுதிய 'ஆண்டவன் அரசு உனக்குள்ளே' என்ற நூலும், ஆங்கிலப் பேரறிஞரான இரஸ்கின் எழுதிய 'கடைசி மனிதனின் நல்வாழ்வு' (Unto This Last) என்ற நூலும் ஆகும். தால்ஸ்தாயை அடிகள் தம்முடைய குருநாதராகப் போற்றுவார்.

இனிச் சமயத்தைப் பற்றிக் காந்தியடிகள் கூறியுள்ள பொன் மொழிகள் சிலவற்றைக் காண்போம்.

'சமயம் சமயம் என்று எல்லாவற்றையும் நான் ஏற்றுக் கொள்ளமாட்டேன். சமயத்தின் பெயரால் செய்யப்படும் கொடுமைகளை ஏலேன். பண்டை நூல்கள் தெய்விக மானவைகளே. ஆனாலும் அவைகளிலுள்ள கருத்துக்கள் என் அறிவிற்குப் பொருந்தியனவாயிருத்தல் வேண்டும். இல்லையேல், நூல்களின் கடவுட்டன்மையையும் நான் மறுப்பேன்.'

'சமயமென்றால் எது சமயம்? கரவும், மூட பக்தியும், கண்மூடி வழக்கமும் கொண்டது சமயமன்று.'

'உயிரை, வருவாயை, வாணிகத்தை, குடும்பத்தை, உடலை, எதையும் பொருளாக மதித்தல் கூடாது. சத்தியாக் கிரகம் மனித உரிமையைப் பற்றிய போர். ஆதலால் இது சமயப் போராகிறது. மனச் சான்றுரிமை குறித்துப் போராடுவது சமயப் போராகவே இருத்தல் வேண்டும்.'

'எல்லா உலகங்கட்கும் பொதுவாயிருப்பது ஒன்று. அஃது எங்கும் நீக்கமற நிறைந்தது. அது சத்தியப்பொருள். அதை நேராகக் காணவிரும்பும் ஒருவன் என் செய்தல் வேண்டும்? அவன், படைப்பில் இழிந்த ஒன்றையும் தன்னைப்போல் நேசித்தல் வேண்டும். சத்தியத்தில் எனக்கு அளவிலா அன்பு உண்டு. அவ்வன்பு என்னை அரசியலிலுஞ் செலுத்தியது. இதனால் அரசியலுக்கும் சமயத்துக்கும் உள்ள தொடர்பு எனக்கு விளங்கியது. இரண்டிற்கும்

தொடர்பில்லை என்று சொல்பவன், சமய நுட்பம் இன்ன தென்று தெரியாதவன் என்று தயங்காமல் கூறுவேன்.'

'சமயமின்றி அரசியலில்லை. சமயத்துக்கு அரசியலும் ஒரு துணை. சமயமற்ற அரசியல், கூற்றுவன் போன்றது.

'யான் அரசியல் வாதியா? சமயவாதியா? யான் அரசியல் நாடகம் நடிக்கும் சமயவாதி.'

'சமயம் ஒரு முதல்; நாட்டுப்பற்று அதன் சினை. சமயத்துக்கு நாட்டுப்பற்று கீழ்ப்பட்டது.'

## 7. புலால் மறுத்தல்

உலகப் பேரறிஞர் பெர்னுர்டுஷாவைப்பற்றி அறியாதவர்கள் இருக்க முடியாது. அவர் இங்கிலாந்து நாட்டில் வாழ்ந்த சொல்லேருழவர்; ஷேக்ஸ்பியருக்கு அடுத்தாற் போல் ஆங்கிலத்தில் பெரிய நாடகாசிரியர்; பல்கலை மேதை. இவர் தொண்ணூறு ஆண்டுகட்குமேல் உயிர் வாழ்ந்த பழுத்த கிழம். தம் வாழ்வின் இறுதிக் காலத்தில் தவறி விழுந்து, கால் ஒடிந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். இவர் மரக்கறி உண்பவர். இவருக்கு மருத்துவம் புரிந்த மருத்துவர்கள், இவரை எவ்வாறேனும் புலால் உணவு உண்ணுமாறு செய்யவேண்டும் என்று பெரிதும் முயன்றனர். அவர் புலால் உணவு உண்டால் இன்னும் சிலகாலம் உயிர் வாழ்வார் என்று மருத்துவர்கள் கருதினர். இக் கருத்தைப் பெர்னுர்டுஷாவிடம் எடுத்துக் கூறினர். அதற்குப்பெர்னுர்டுஷா, "நண்பரே! எனக்குதொண்ணூறு வயதுக்குமேல் ஆகிவிட்டது. புலால் உணவு உண்ணுவோரில் என்னைவிட வயதில் மூத்தவர் யாராவது இலண்டன் மாநகரில் இருந்தால் தயவுசெய்து அவர்களை என்னிடம் அழைத்துக் கொண்டு வாருங்கள். அவர்களைப் பார்த்து, நானும் புலால் உணவை மேற் கொள்கிறேன்" என்று சொன்னுர்.

மருத்துவர்களும் இலண்டன் மாநகரில் துருவித் துருவித் தேடினர். பெர்னார்டுஷாவைவிட வயதில் மூத்த புலால் உணவுக்காரர் கிடைக்கமாட்டாரா என்று ஏங்கினர். பெர்னார்டுஷாவை இன்னும் கொஞ்ச நாள் வாழ வைத்து, அவர் இலக்கியத் தொண்டைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்று ஆங்கிலேயர் அடக்க முடியாத ஆசை கொண்டனர். ஆனால் பயனில்லாமல் போய்விட்டது. பெர்னார்டுஷாவைவிட வயதில் மூத்தவர் யாரும் கிடைக்க வில்லை. பெர்னார்டுஷாவும் உயிர் துறந்தார்.

பெர்னார்டுஷா கொள்கை வாதி. புலால் உணவைவிட மரக்கறி உணவே மக்களினத்துக்கு ஏற்றது என்ற கொள்கையில் உறுதியான நம்பிக்கை கொண்டவர். அவருடைய மரக்கறி உணவுக் கொள்கைக்கு அடிப்படைக் காரணம் அவருள்ளத்தில் படிந்திருந்த அருள். அதே அருள்தான் காந்தியடிகளையும் புலாலை வெறுக்குமாறு செய்தது

இந்திய நாட்டில் தோன்றிய சமயங்கள் பல. அவை சைவம், சமணம், பௌத்தம், வைணவம் என்பன. இந்திய நாட்டுச் சமயங்கள் எல்லாம் புலால் உண்ணலை மறுத்தே கூறுகின்றன. கிருத்தவசமயம் புலாலை மறுத்துக் கூற வில்லை. ஏசுபெருமானே மீனைப் பகிர்ந்து அன்பர்கட்கு அளித்ததாக விவிலிய நூல் கூறும். மேலும் புலால் உணவு பற்றிய கொள்கையானது, நாட்டுக்கு நாடு, இடத்திற்கு இடம் மாறுபடுகிறது.

சிலர் புலால் உணவைத் தூற்றியும், பலர் புலால் உண வைப் போற்றியும் கூறுகின்றனர். புலால் உணவை மிகவும் விரும்பிப் போற்றிவரும் மேலை நாடுகளில்கூட, 'மரக்கறி உண்போர் கழகம்' உள்ளது. புலால் உணவினரோ வேறு பல ஐயங்களைக் கிளப்புகின்றனர். புலால் மறுப்புக் கொள்கை உலகிலுள்ள எல்லா மக்களினத்துக்கும் பொருந்

றுமா? அப்படியானால் உலகின் வடமுனை, தென்முனைப் பகுதிகளில் (Polar Regions) வாழும் எஸ்கிமோ, லாப்ஸ் எனும் இன மக்கள் மரக்கறி உணவு உண்பது எங்ஙனம்? சீல், வால்ரஸ், மீன் போன்ற கடல் வாழ் உயிர்களும், கலை மான்களுமே அங்கு வாழ்கின்றன. அப்படியென்றால் புலால் மறுப்பிலிருந்து அவர்கட்கு விலக்களிக்கலாமா? என்பன போன்ற வினாக்கள் எழுகின்றன. கொங்கணக் கடற்கரையில் வாழ்பவன் மீனையே உண்டு வாழ்கிறான்.

இருக்கு வேதமும், மனு நீதியும் புலால் உண்ணலை ஆதரிக்கின்றன. இளமையில் மனுநீதியின் பால் தாம் வெறுப்புக் கொண்டதற்கு இதுவே காரணம் என்று காந்தியடிகள் கூறுகிறார். இந்திய நாட்டில் புலால் மறுப்பு பல வேறு காரணங்களால் நிலைபெறு கொள்கிறது சிலர் குலத்தின் அடிப்படையில் உண்பதில்லை. சிலர் சமய அடிப்படையில் புலாலை வெறுக்கின்றனர். புலால் உணவு செரிக்காத காரணத்தால், வேறு வழியின்றி மரக்கறியாளர் ஆவோரும் உண்டு. (இவர்களை எண்ணும்போது 'விருத்த நாரி பதி விரதா!' என்ற வடமொழிப் பழமொழி எனக்கு நினைவுக்கு வருவதுண்டு.)

ஆனால் மேற்கூறியவர்கள் யாவரும் இன்றியமையாமை ஏற்படும்போது புலாலை ஏற்கத் தவறுவதில்லை. நோய் வாய்ப்பட்டு வருந்தும் போது, புலால் கலந்த மருந்தையும், சத்துப்பொருள்களையும் ஏற்றுக்கொள்ளத் தயங்குவதில்லை. புலாலை வெறுக்கும் எல்லாச் சமயத்தவரும் பக்குவப்படுத்தப்பட்டுப் புட்டியில் அடைக்கப்பட்ட முட்டை(Oval)யை எவ்வித வேறுபாடும் கருதாமல் உண்பதைக் காண்கிறோம்.

மனிதனையே தின்னும் மனித இனம் (Cannibals) ஒரு சில நாடுகளில் வாழ்ந்ததாக வரலாறு கூறுகிறது. நல்ல வேளை! அவ்வினம் வரவர அருகி மறைந்து விட்டது. இல்லாவிட்டால் மனித இனமே அழிந்திருக்கும். வங்கா

ளத்தில் கொடிய பஞ்சம் ஏற்பட்டபோது மனித ஊனைக் கூடப் பசியின் காரணமாகப் பலர் உண்டதாகப் பங்கிம் சந்திரர் தம் 'ஆனந்த மடத்தில்' கூறுகிறார்.

இவ்வாறு புலாலைப்பற்றிய கொள்கைகள் பலவாறாக உள்ளன. ஆனால் காந்தியடிகளின் புலால் மறுப்புக் கொள்கை முற்றிலும் மாறுபட்டது. போலிக் காரணங் களுக்காகப் புலாலைக் கைவிட்டிருப்பது சிறந்த கொள்கை யாகாது. உண்மையான புலால் மறுப்புக் கொள்கை இன்னா செய்யாமை, கொல்லாமை, அருளுடைமை என்பன வற்றி னின்றும் வளர வேண்டும். காந்தியடிகளின் கொள்கை இத்தகையதே.

இனி, காந்தியடிகள் புலாலை மேற்கொண்டதற்குரிய காரணங்களை ஆராய்வோம். அவரே அவற்றை விளக்கு கிறார். காந்தியடிகள் 'மோடபனியா' என்ற வைணவ குலத்தைச் சார்ந்தவர் அக்குலத்தவர் புலாலை அறவே வெறுப்பவர். அப்படியிருக்க அடிகள் அப்பழக்கத்தை மேற்கொள்ளப் புகுந்தது விந்தையே.

* * *

காந்தியடிகள் நாச்சுவைக்காகப் புலால் உணவை மேற் கொள்ளவில்லை. நார்மாத் என்பவர் பாடிய ஒரு சிந்துப் பாடல், அக் காலத்தில் பள்ளிப் பிள்ளைகளிடத்தே அதிக மாக வழங்கிவந்தது. அதன் பொருள் வருமாறு:—"வலிமை படைத்த ஆங்கிலேயனைப் பார். சோகை இந்தியன் மீது அவன் ஆட்சி செலுத்துகிறான். காரணம், புலால் உணவு தின்று அவன் ஐந்து முழ உயரம் வளர்ந்திருப்பதே."

இப்பாட்டைப் படித்தவுடன் மோகனதாசின் உள்ளத் தில் ஒரு விபரீத எண்ணம் உண்டாயிற்று. நாமும் ஏன் ஆங்கிலேயனைப்போல் புலால் உண்டு வலிமை பெற்று வளரக் கூடாது? அவ்வாறு வளர்ந்தால் ஆங்கிலேயனை அடித்து விரட்டி விடலாம் என்று அவருடைய அரும்பு

உள்ளம் எண்ணியது. சில தீய நண்பர்கள் இக்கொள்கைக் குத் தீபமிட்டு வளர்த்தனர். சோதனை தொடங்குவதற்கு ஒரு நாள் குறிக்கப்பட்டது. பின் நடந்ததை அடிகளின் வாயாலேயே கேட்போம்.

"குறிப்பிட்ட நாள் வந்தது. அப்போதைய எனது நிலையை உள்ளபடி விவரித்தல் முடியாத செயல். சீர்திருத் தத்தில் உற்சாகமும், வாழ்க்கையில் ஒரு புதுமையான மாறுதலைக் காணப் போகிறோமென்ற ஆவலும் ஒருபக்கம் இருந்தன. மற்றொருபுறத்தில் திருடனைப் போல் ஒளிந்து அச்செயலைச் செய்யவேண்டி யிருக்கிறதே என்ற வெட்கம். இவ்விரு வகை உணர்ச்சிகளில் எது மேலெழுந்து நின்றது என்று சொல்வதற்கில்லை. ஆற்றங் கரையினில் தனிமை யான இடமொன்றை நாடிச் சென்றோம். அங்கு என் வாழ் நாளில் முதன் முதலாக இறைச்சியைக் கண்டேன். அத் துடன் கடை ரொட்டி கொஞ்சம் இருந்தது. இரண்டும் எனக்குப் பிடிக்கவில்லை. வெள்ளாட்டு மாமிசம் தோலைப் போல் கடினமா யிருந்தது. என்னால் அதைத் தின்னவே முடியவில்லை. அருவருப்பு அதிகமாகவே, முடியாதென்று விட்டு விட்டேன்.

அன்றிரவெல்லாம் நான் உறங்கவில்லை. ஒருவகைப் பயங்கரத் தோற்றம் உண்டாகிக் கொண்டே இருந்தது. கொஞ்சம் கண்ணயர்ந்ததும் உயிருள்ள ஆடு ஒன்று என் வயிற்றுக்குள் இருந்து பரிதாபமான குரலில் கத்துவதாகத் தோன்றும்; திடுக்கிட்டு எழுவேன். நான் செய்ததை எண்ணிக் கழிவிரக்கம் கொள்வேன். ஆனால் அடுத்தாற் போல் புலால் உண்ணல், நாட்டின் விடுதலைக்காக நான் மேற்கொள்ள வேண்டிய கடமை என்பதை நினைவு கூர்ந்து மீண்டும் உற்சாகம் கொள்வேன்.

என் நண்பர் எடுத்த காரியத்தை எளிதில் விட்டு விடுபவர் அல்லர். இறைச்சியைப் பலவகை உயர்ந்த பணியார வகைகளாகப் பாகம் செய்து பார்வைக்கு அழகா

யிருக்கும்படி செய்து வைக்கலானார். சாப்பிடுவதற்கு ஆற்றங்கரைக்குப் பதிலாக அரசாங்க மாளிகையொன்றை யும் பிடித்தார். அங்கிருந்த உணவு மண்டபத்தில் நாற்காலி, மேசை முதலியன இடப்பட்டிருந்தன. அவ் விடத்துத் தலைமைச் சமையற்காரருடன் பேசி என் நண்பர் வேண்டிய ஏற்பாடு செய்திருந்தார்.

இத் தூண்டிலில் நான் விழுந்தேன். ரொட்டியில் வெறுப்பையும், ஆடுகளிடம் இரக்கத்தையும் எப்படியோ போக்கடித்துக் கொண்டேன். இன்னும் இறைச்சி சுவைக்க வில்லையாயினும், இறைச்சிப் பணியாரங்களைச் சுவையுடன் உண்ணத் தொடங்கினேன். இவ்வாறு ஓராண்டு நிகழ்ந்து வந்தது. ஆனால் இந்த ஓராண்டில் ஆறு முறைக்கு மேல் இத்தகைய புலால் விருந்துகள் நடைபெறவில்லை. இதற்குக் காரணம் இரண்டாகும். முதலாவது அரசாங்க மாளிகை நாள்தோறும் கிடைப்பதில்லை. இரண்டாவதாக, உயர்ந்த வகைப் புலால் உண்டியைத் தயாரிப்பதற்குப் பணம் நிரம்ப வேண்டியிருந்தது.

இத்தகைய திருட்டு விருந்துகளில் உணவருந்திய நாட்களில், வீட்டில் சாப்பிடுவது இயலாத செயல். தாயார் உணவு உண்ண அழைக்கும் போது, நான் மறுத்தால், ஏன் என்று கேட்பார். 'பசியில்லை, வயிறு என்னவோ போலிருக் கிறது' என்று பொய் கூறுவேன். இக்காலங்களில் புலால் உணவுக்காகப் பெற்ற தாயிடம் பொய் கூற வேண்டியிருக் கிறதே என்று வருந்துவேன். புலால் உண்பதும், நாட்டில் உணவுச் சீர்திருத்தம் செய்வதும் இன்றியமையாதனதான். ஆனால் புலால் உண்ணாமலிருப்பதை விடப் பெற்றோரிடம் பொய் சொல்லி ஏமாற்றுதல் கடினம். ஆதலின் அவர்கள் உயிருடன் இருக்கும் வரையில் அது செய்யக் கூடாது. அவர்களுக்குப் பிறகு நான் சுதந்தரமாக வாழும்போது வெளிப்படையாகப் புலால் உண்பேன். அதுவரையில் புலாலைத் தொடமாட்டேன் என முடிவு செய்தேன்.

அடிகள் வழக்கறிஞர் கல்வி பயில்வதற்கு இங்கிலாந்திற்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தார். அப்போது, அவருடைய தாயார் மூன்று வாக்குறுதிகளை அடிகளிடம் பெற்றார். அவற்றில் 'புலாலைத் தொடுவதில்லை' என்பதும் ஒன்று. காந்தியடிகள் போகும் போது, இனிப்புப் பண்டங்கள் நிறையக் கொண்டு சென்றார். கப்பலில் அவற்றையே உணவாகக் கொண்டார். கப்பலில் செல்லும் போதே, புலால் உணவின் இன்றியமையாமையைப் பற்றிப் பல நண்பர்கள் எடுத்துக் கூறத் தொடங்கினர். புலால் உணவின்றி, இங்கிலாந்தில் வாழ்க்கை நடத்துவது முடியாத காரியம் என்றனர்.

காந்தியடிகள் இலண்டன் சென்றவுடன் மரக்கறி உணவிற்காக அரும்பாடு பட்டார். ஒருவேளை மரக்கறி உணவிற்குப் பல கல் தொலைவு நடக்கவேண்டி யிருந்தது. வெறும் ரொட்டித் துண்டை மட்டும் தின்று உயிர் வாழ்வதென்பது முடியாதல்லவா? மரக்கறி உணவுச் சாலையைத் தேடிப் பலநாள் அலைந்து இறுதியில் பாரிங்டன் தெருவில் இருந்த சைவ உணவுச்சாலை ஒன்றைக் கண்டுபிடித்தார். ஒரு குழந்தை தன் மனதிற்கினிய பொருளைக் கண்டவுடன் எவ்வாறு பெருமகிழ்ச்சிகொள்ளுமோ அது போல் பேருவகை கொண்டார்; வயிறார உண்டார். அக்கடையில் விற்பனைக்காகப் பல நூல்களும் வைக்கப்பட்டிருந்தன. மரக்கறி உணவின் மேன்மையைப் பற்றித் திருவாளர் சால்ட் என்பார் எழுதிய 'Plea for Vegetarianism' என்ற நூலும் அங்கிருந்தது. அந்நூலை வாங்கிப் படித்தார். பிறகு ஹோவார்டு வில்லியம்ஸ் என்பார் எழுதிய 'உணவின் அறம்' (The Ethics of Diet) என்ற நூலையும் அன்னா கிங்ஸ்போர்டு என்பார் எழுதிய 'உணவுக் கொள்கையில் நேரிய வழி' (The Perfect Way in Diet) என்ற நூலையும், மரக்கறி உணவின் மேன்மைகளை வற்புறுத்தும் வேறு பல சிறந்த நூல்களையும் காந்தியடிகள் படித்தார். இவ்வளவு

நாட்களாக அன்னைக்கு அளித்த வாக்குறுதியைக் காப்பாற்றுவதற்காக அடிகள் புலால் உணவை நீக்கி வந்தார். பிறகு 'புலால் மறுத்தல்' அவர் உள்ளத்திற்கு உகந்த கொள்கையாகவே மாறிவிட்டது.

இங்கிலாந்திற்குப் படிக்கச் செல்லும் இந்திய மாணவர்களெல்லாம், உணவு விடுதியில் தங்கினுல் நிறையப் பொருட் செலவு ஏற்படுகிறது என்ற காரணத்தால், ஏதேனும் ஒரு ஆங்கிலக் குடும்பத்தில் தங்கிப் படிப்பது வழக்கம். காந்தியடிகளும் அவ்வாறே ஒரு ஆங்கிலக் குடும்பத்தில் தங்கிக் கல்வி கற்றுவந்தார். ஆனுல் உணவுப்பிரச்சனை அடிகளுக்குத் துன்பத்தைத் தரக்கூடியதாக இருந்தது. உப்பு, மசாலை முதலியன கலவாமல் வேகவைத்த கறி வகைகள் அவருக்குச் சுவைக்கவே இல்லை. இவர் தங்கியிருந்த வீட்டுக்காரி, இவருக்கு என்ன உணவு தயார் செய்வது என்று தெரியாமல் திகைத்தாள். காலை வேளையில் 'ஓட்பீல்' என்னும் தானியத்திலான கூழ் அளிக்கப்பட்டது. இது கூடியவரை போதுமானதா யிருந்தது. ஆனுல் இடை வேளையிலும் மாலையிலும் அரைப் பட்டினியாகவே இருந்து வந்தார். நடுப்பகல் சிற்றுண்டிக்கும், மாலை உணவுக்கும் பசலைக் கீரையும் ரொட்டியும் அளிக்கப்பட்டன. காந்தியடிகள் நன்ருகச் சாப்பிடக் கூடியவர். ஆனுல் இரண்டு மூன்று ரொட்டித் துண்டுகளைவிட அதிகமாகக் கேட்க அவருக்கு வெட்கமாக இருந்தது. இத்துடன் இவ்விரு வேளைகளிலும் பால்கூடக் கிடையாது.

* * *

மரக்கறி உணவுக் கொள்கையின் காரணமாக அடிகள் இங்கிலாந்தில் பலவிதத் தொல்லைகட்கு ஆளாக வேண்டி நேரிட்டது. அவருடைய நண்பர்கள் அவரைப் படித்த முட்டாள் என்றும், பிடிவாதக்காரன் என்றும் கேலி செய்தனர். ஒரு நண்பர், "நீர் என் உடன் பிறந்தவராக

இருந்தால் இத்தனை நாள் உம்மை மூட்டை கட்டி அனுப்பி யிருப்பேன். எழுத்துவாசனை தெரியாத தாயாரிடம் அளித்த வாக்குறுதியைக் கட்டிக் கொண்டு அழுவதா? மேலும் இங்குள்ள நிலைமை உமக்கு அப்போது தெரியாது. அத்தகைய வாக்குறுதியை விடாமல் பிடித்துக் கொண் டிருப்பது மூட நம்பிக்கையைத் தவிர வேறில்லை. இந்தப் பிடிவாதத்தினால் இங்கே உமக்கு எவ்வகைப் பயனும் உண்டாகாது. புலால் உணவை நீர் முன்னம் தின்று அது உமக்குச் சுவைத்ததாக ஒப்புக் கொள்கிறீர். வேண்டாத நேரத்தில் புலாலை உண்டீர். இன்றியமையாததா யிருக்கும் இந்நாட்டில் உண்ண மறுக்கிறீர்"—என்று கடிந்து கொண்டார்.

ஒருநாள் மேற்படி நண்பர் காந்தியடிகளை ஒரு நாடகம் பார்ப்பதற்காக அழைத்துச் சென்றார். நாடகத் துக்கு முன்னால் 'ஹால்பர்ண்' உணவு விடுதியில் இருவரும் உணவு அருந்துவது என்று ஏற்பாடாயிற்று. இவ்வுணவு விடுதி ஒரு அரண்மனையைப் போல் விளங்கியது. காந்தி யடிகள் இதற்கு முன் இந்த உணவு விடுதிக்கு வந்ததில்லை. இருவரும் சாப்பிட உட்கார்ந்தார்கள். முதலிலே குழம்பு பரிமாறப்பட்டது. என்ன குழம்பு என்று தெரிந்துகொள்ள அடிகள் விரும்பினார். ஆனால் நண்பரைக் கேட்க அவருக்குத் துணிவில்லை. உணவு பரிமாறியவனை அழைத்து, அவனிடம் கேட்க விரும்பினார்.

அதைக் கவனித்த நண்பர், 'என்ன?' என்று கடுமை யாகக் கேட்டார்.

'குழம்பு புலால் கலப்பற்றதா?' என்று கேட்க விரும்பு வதாகத் தயக்கத்துடன் கூறினார் காந்தியார்.

'நாகரிக மக்களின் கூட்டுறவுக்கு நீர் தகுதியற்றவர். சரியாக நடந்துகொள்ளத் தெரியாவிடில் வெளியே சென்று வேறெந்த உணவு விடுதியிலாவது சாப்பிட்டுவிட்டு எனக்

காக வாயிலில் காத்திரும்' என்று சினந்துரைத்தார் நண்பர். அடிகளும் அவமானத்துடன்—ஆனால் மகிழ்ச்சியுடன் வெளியேறினார்.

* * *

ஒரு மாணவன் இங்கிலாந்தில் வழக்கறிஞர் பட்டம் பெறுவதற்கு முன் இரண்டு நிபந்தனைகளுக்கு உட்படுதல் வேண்டும். மாணவர்களும் அவர்களுக்குப் பட்டம் வழங்க வேண்டியவர்களான பாரிஸ்டர் நீதிபதிக் குழுவினரும் சேர்ந்து உணவருந்தும் விருந்துகளுக்குச் செல்லுதல் ஒன்று; தேர்வுகளில் தேருதல் மற்றொன்று. ஒவ்வொரு மூன்று மாதத்திலும் 24 விருந்துகள் நடைபெறும். இவற்றுள் குறைந்தது ஆறு விருந்துகளுக்காவது ஒவ்வொரு மாணாக்கனும் செல்ல வேண்டும். இவ்வாறு மொத்தம் மூன்றாண்டுகள் விருந்துண்ண வேண்டும். விருந்துக்குச் செல்பவர்கள் சாப்பிட்டே ஆகவேண்டும் என்ற கட்டாயமில்லை. குறிப்பிட்ட நேரத்தில் சென்று விருந்து முடியும் வரை இருந்தால் போதும். ஆனால் நல்ல உணவுப் பண்டங்களும், உயர்ந்த மது வகைகளும் அளிக்கப்பட்டபடியால், சாதாரணமாக எல்லோரும் வயிறு நிறைய உண்டு குடித்தலே வழக்கம். ஒவ்வொரு விருந்துக்கும் இரண்டு ரூபாய் முதல் மூன்று ரூபாய் வரையில் கொடுக்கவேண்டியிருந்தது. இத்தொகை குறைவானதென்றே கருதப்பட்டது. ஏனெனில் உணவு விடுதிகளில் உண்டால் மதுவகைகளுக்கே அவ்வளவு தொகை கொடுக்கவேண்டியிருக்கும். அநேகமாக இவ் விருந்துகளில் காந்தியடிகள் ஒன்றும் சாப்பிடுவதில்லை. ரொட்டி, வேக வைத்த உருளைக்கிழங்கு, முட்டைக்கோசு என்னும் கீரை ஆகியவற்றையே காந்தியடிகள் உண்பார். துவக்கத்தில் இவைகள் அடிகளுக்குப் பிடிக்காத காரணத்தால், அவற்றையும் கூடச் சாப்பிடுவதில்லை. பின்னால் அவை அவருக்குச் சுவைக்கத் தொடங்கியதும், வேறு உணவுப் பொருட்களைக் கேட்கவும் அவருக்குத் துணிவுண்டாயிற்று.

மாணவர்களுக்கு அளிக்கப்பட்ட உணவை விட பாரிஸ்டர்—நீதிபதி கூட்டத்துக்கு அளிக்கப்பட்ட உணவு உயர்ந்தது. காந்தியடிகளோடு மரக்கறி உண்பவரான பாரசீக நண்பர் ஒருவரும் இருந்தார். இவ்விருவரும் சேர்ந்து, பாரிஸ்டர்—நீதிபதிக் கூட்டத்துக்கு அளிக்கப் பட்ட சைவ உணவுப் பண்டங்களில் சில தங்களுக்கும் தரும்படி கேட்டார்கள். அவர்களுடைய கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டது. அதன் பயனாகப் பழங்களும், இன்னும் சில கறி வகைகளும் கிடைத்தன.

விருந்தில், நான்கு பேருக்கு இரண்டு மது புட்டிகள் வீதம் கொடுக்கப்பட்டன. அடிகள் மது அருந்ாதவராத லால் அவரையும் தங்கள் தங்கள் கோஷ்டியில் சேர்ந்து கொள்ளும்படி எல்லோரும் வற்புறுத்துவார்கள். ஏனெனில் மற்ற மூவரும் சேர்ந்து இரண்டு புட்டிகளைக் காலி செய்து விடலாமல்லவா? மூன்று திங்கள்களுக் கொருமுறை நடக்கும் சிறப்பு விருந்துகளில், சாதாரணமாகக் கொடுக் கப்படும் மதுவகைகளோடு 'சாம்பேன்' முதலிய உயர்ந்த மதுவகைகள் அதிகப்படியாக வழங்கப்படும். அத்தகைய நாட்களில் அடிகளுக்குக் கிராக்கி அதிகம்.

* * *

காந்தியடிகளுக்கு ஆங்கிலக் குடும்பத்தின் உணவு சரிபட்டுவராத காரணத்தாலும், போதிய அளவு கிடைக் காத காரணத்தாலும், அவர் அங்கிருந்து விலகிக் கொண் டார். பிறகு ஓர் அறையைக் குடிக்கூலிக்கு எடுத்துக் கொண்டு, தாமே சமைத்து உண்ணத் தொடங்கினார். இலண்டன் மாநகரிலிருந்த 'மரக்கறி உண்பவர் கழகத்' தோடு அதிகத் தொடர்பு கொண்டார். அக் கழகத்தின் செயலாளராகவும் பணியாற்றினார்.

மேலைநாட்டு மரக்கறி உணவாளர், முட்டையைச் சைவ உணவே என்று முடிவுகட்டியிருந்தனர்; எல்லோரும் சாப்பிட்டனர். முட்டை மரக்கறி உணவாகவும் இருக்க

லாம். ஆனால் அன்னையின் கொள்கைப்படி அது புலால் உணவுதான் என்று எண்ணி, காந்தியடிகள் அதையும் தொடுவதில்லை. அடிகள் பாலையும் புலால் உணவே என்று விலக்கி வந்தார். ஆவின் குருதிதான் பாலாக மாறுகிறது. அப்படி யிருக்கும்போது அது எப்படிச் சைவ உணவாகும்? என்பது அடிகளின் வாதம். 'பசு மனிதர்களுக்காக மடி சுரந்து பால் கொடுப்பதில்லை. அது தன் கன்றிற்காகவே பாலைக் கொடுக்கிறது. அப்படி யிருக்கும்போது, அதன் பாலை மனிதன் பெறுவது திருட்டு' என்று அடிகள் அருளறம் பேசினார். கல்கத்தாவில் பசுவிடமிருந்து மிகுதி யாகப் பால் பெறுவதற்காக மக்கள் செய்த கொடுமைகளை யும் வழிமுறைகளையும் கேட்டு மிகவும் உள்ளம் வருந்தினார்.

'ஒருமுறை 'கும்பமேளா'வைப் பார்ப்பதற்காக அடிகள் சென்றார். [கும்பகோணத்தில் 'மகாமகம்' என்று ஒரு பெருவிழா பன்னிரண்டு ஆண்டுகட்கொருமுறை தமிழகத் தில் கொண்டாடப்படுகிறதல்லவா? அதே போன்றதுதான் கும்பமேளாவும்.] அங்கு ஐந்துகால் பசு இருப்பதாக யாரோ சொன்னார்கள். அவ் விந்தையைக் காண்பதற்காக அடிகளும் சென்றார். ஐந்தாவது கால் பொய்க்கால். ஏதோ ஒரு கன்றுக்குட்டியின் காலை வெட்டி, ஒரு பசுவோடு ஒட்டி யிருந்தார்கள். மக்களை ஏமாற்றிப் பணம் பறிப்பதற்காகச் செய்யப்பட்டிருந்த சூழ்ச்சி. இக் கொடுமையைக் கண்டு உளம் வருந்தினார் அடிகள். அதிலிருந்து பால் உண்பதையே பல்லாண்டுகள் விட்டு விட்டார்.

ஒருமுறை அடிகள் நோய்வாய்ப்பட்டார். வயிற்றில் ஓர் அறுவை மருத்துவம் செய்யப்பட்டது. அதனால் அடிகள் உடல் மெலிந்து சாகும் நிலைக்கு வந்துவிட்டார். பால் உண்டால்தான் அடிகள் பிழைத்தெழ முடியும் என்று மருத்துவர் கூறி விட்டார். அதன் பிறகு மீராபென்னின் யோசனைப்படி ஆட்டுப்பால் சாப்பிட இசைந்தார்.

காந்தியடிகள் பம்பாயில் வழக்கறிஞர் தொழில் நடத்திக் கொண்டிருந்தபோது, அவருடைய இரண்டாவது மகனான மணிலாலுக்குக் கடுமையான டைபாய்டு காய்ச்சல் வந்தது. ஏற்கனவே மணிலால் வைசூரி நோயினால் அவதிப் பட்டிருந்தான். டைபாய்டு காய்ச்சலோடு கபவாதமும் சேர்ந்து கொண்டது. காய்ச்சல் மிகக் கடுமையாக இருந்த காரணத்தால் இரவில் பிதற்றலும் அதிகமாயிருந்தது

மருத்துவர் ஒருவரை அடிகள் அழைத்து வந்தார். காய்ச்சலுக்கு மருந்து அதிகப்பயனை அளிக்காது என்றும், கோழி முட்டையும், கோழிக்குஞ்சுச் சாறும் (Soup) கொடுக்க வேண்டுமென்றும் கூறினார் மருத்துவர். காந்தி யடிகள் தாம் தீவிர சைவராயிற்றே! தம் கொள்கையை விட்டுக் கொடுக்க அடிகளுக்கு விருப்பமில்லை. ஆனால் மணிலாலோ அப்போது பத்து வயதுச் சிறுவன். அவனு டைய எண்ணத்தைக் கேட்டு முடிவு செய்வதற்கும் வழி யில்லை. அவனுக்காக அடிகளே முடிவு செய்தாக வேண்டும்.

"நாங்கள் சைவ உணவுக்காரர்கள். தாங்கள் சொன்னவற்றைத்தவிர வேறு ஏதாவது யோசனை சொல்ல முடியுமா?" என்று காந்தியடிகள் கேட்டார்.

"மற்றக் காலங்களில் மரக்கறி உணவுக் கொள்கை ஏற்றதே. ஆனால் மைந்தன் உயிருக்கே ஆபத்து நேரலாம் என்றிருக்கும்போது பிடிவாதம் செய்யக் கூடாது. எவ் வளவோ தீவிர வைதிகர்களும், என்னுடைய யோசனைப் படி செய்திருக்கிறார்கள். தாங்களும் இக்குழந்தையின் பொருட்டுப் பிடிவாதம் செய்யாதிருப்பது நலம்" என்று மருத்துவர் கூறினார்.

அதற்குக் காந்தியடிகள், "மருத்துவராகிய தாங்கள் தங்களுடைய கடமையைச் செய்து விட்டீர்கள். ஆனால் என்னுடைய பொறுப்பை நான் கைவிட முடியாது. வயது

வந்த பையனுயிருந்தால் அவனுடைய எண்ணத்தைக் கேட்டு அதன்படி செய்திருப்பேன். புலாலும் முட்டையும் மனிதன் உண்ணக் கூடாது என்பது என்னுடைய திட மான சமயக் கொள்கை. அது சரியோ தவருே தெரியாது. ஆனாலும் உயிர் வாழ்வதற்காகக் கூடச் சிற்சில காரியங்களை நாம் செய்யக் கூடாது. இது என் உறுதியான நம்பிக்கை. ஆகையினுல் தங்களுடைய யோசனையை நான் ஏற்றுக் கொள்ள முடியாமைக்கு வருந்துகிறேன். எனக்குத் தெரிந் திருக்கும் வேறு மருத்துவ முறைகளைக் கையாளப் போகி றேன். ஆனுல் நாடி பார்க்கவும், இருதயம்—நுரையீரல் ஆகியவற்றைச் சோதனையிடவும் எனக்குத் தெரியாது. தாங்கள் அவ்வப்போது வந்து இந்தப் பரிசோதனைகள் மட்டும் செய்து சொல்லிவிட்டுப் போனுல் என் உளங் கலந்த நன்றியைச் செலுத்துவேன்'' என்று கூறினுர்.

காந்தியடிகளின் சங்கடமான நிலையை உணர்ந்தார் மருத்துவர். அப்படியே ஆகட்டும் என்று சொல்லிப் போனுர். அடிகள் தமக்குத் தெரிந்த மருத்துவ முறையைக் கையாண்டு மணிலாலைக் காப்பாற்றினுர்.

* * *

கஸ்தூரிபாய்க்குத் தென்னுப்பிரிக்காவில் வாழ்ந்த காலத்தில் அடிக்கடி குருதி இழப்பு ஏற்பட்டு உடல் நலம் குன்றியிருந்தது. அறுவை மருத்துவம் செய்து கொள்ள வேண்டும் என்று மருத்துவர்கள் சொன்னுர்கள். டர்பனில் இருந்த புகழ் பெற்ற மருத்துவரிடம் அறுவை மருத்துவம் செய்யப்பட்டது. உடல் மெலிவு காரணமாக, மயக்க மருந்து கொடாமலேயே அறுவை நடத்த வேண்டியிருந்தது. இதனுல் ஏற்பட்ட வலியையும், பெருந்துன்பத்தையும் அன்னை கஸ்தூரிபாய் வியக்கத்தகுந்த முறையில் பொறுத்துக்கொண்டார். மருத்துவரும், செவிலி (Nurse) யாகப் பணி புரிந்த அவருடைய மனைவியாரும், கஸ்தூரி

பாயைக் கண்ணும் கருத்துமாகக் கண்காணித்து வந்தனர். இனி ஒன்றும் கவலையில்லை என்ற நிலை ஏற்பட்டதும், கஸ்தூரிபாயை மேற்படி மருத்துவரின் பொறுப்பில் விட்டு விட்டு ஜொகன்னஸ்பர்க் சென்றார் அடிகள்.

ஆனால் சில நாட்களில் கவலைக்கிடமான செய்தி வந்தது. கஸ்தூரிபாய் மிகவும் வலி விழுந்து, படுக்கையில் எழுந்து உட்காரவும் முடியாத நிலையை அடைந்திருக்கிறார் என்று தெரிந்தது. மருத்துவர், தொலை பேசியின் மூலம் காந்தியடிகளைக் கூப்பிட்டு, "நிலைமை நெருக்கடியாக இருக்கிறது. நோயாளிக்கு மாட்டிறைச்சிச் சாறு உடனே கொடுத்தால்தான் பிழைப்பார், அதற்குத் தங்கள் இசைவு வேண்டும்" என்றார். மது, புலால் பற்றிக் காந்தியடிகளின் கடுமையான கொள்கையை உணர்ந்திருந்தபடியால், மருத்துவர் இந்த இசைவைக் கேட்டார்.

அடிகளோ, "நான் அத்தகைய இசைவைக் கொடுக்க முடியாது. கஸ்தூரிபாயையே கேளுங்கள். அவள் சிந்தித்துப் பதில் சொல்லக்கூடிய நிலையில் இருந்தால் அவள் விருப்பம்போல் செய்யுங்கள்!" என்றார்.

"அதெல்லாம் முடியாது. நோயாளியின் விருப்பத்தைக் கேட்பது தவறு. என் விருப்பப்படி உணவு கொடுக்கக் கூடாது என்றால் நோயாளியின் உயிருக்கு நான் பொறுப்பாளியல்லன். உடனே தாங்கள் புறப்பட்டு வந்து பொறுப்பை ஏற்றுக் கொள்ளவும்" என்றார் மருத்துவர்.

காந்தியடிகள், அடுத்த வண்டியில் புறப்பட்டு டர்பனுக்குப் போனார். மருத்துவரைப் பார்த்ததும் "கஸ்தூரிபாய் விரும்பினாலன்றி அவளுக்கு மாட்டிறைச்சிச் சாறு கொடுக்க நான் ஒருநாளும் ஒப்பமாட்டேன். அதனால் உயிருக்கு ஆபத்து வருவதாயிருந்தாலும் சரி!" என்று உறுதியாகச் சொன்னார்.

"அப்படியானால், உம்மனைவியை இங்கிருந்து அகற்றிக் கொண்டு போய்விடும். அவர் என் வீட்டில் சாவதை நான் பார்த்துக் கொண்டிருக்க முடியாது!" என்றார் மருத்துவர்.

"உடனே அகற்றிவிட வேண்டும் என்கிறீர்களா?" என்று கேட்டார் அடிகள்.

டாக்டர் சினத்தோடு, "இது என்ன கேள்வி? அகற்றி விடவேண்டும் என்று எப்போது சொன்னேன்? மருத்துவம் செய்வதால் எனக்கு முழு உரிமையும் கொடுக்க வேண்டும் என்றுதானே கேட்கிறேன். அப்படிக் கொடுத்தால் நானும் என் மனைவியும் கூடியதையெல்லாம் செய்யத் தயாராயிருக் கிறோம். இந்தச் சிறிய கருத்தை உம்மால் அறிந்துகொள்ள முடியவில்லையே!" என்றார்.

நயத்தினாலும் பயத்தினாலும் மருத்துவர் கூறிய தொண்டும் அடிகளிடம் பலிக்கவில்லை. அவர் உடனே கஸ்தூரிபாயிடம் சென்றார். மிகவும் வலிவிழந்த நிலையில் இருந்தபோதிலும், அவரிடம் கேட்டுவிட வேண்டும் என்று முடிவு செய்து, மருத்துவரின் கருத்தை கஸ்தூரிபாயிடம் தெரிவித்தார். மருத்துவருக்கும் தமக்கும் நடந்த உரை யாடலையும் கூறினார்.

அன்னை கஸ்தூரிபாய் உறுதியான குரலில், "மாட்டி றைச்சிச் சாறு எனக்கு வேண்டாம். அதை ஒருநாளும் சாப்பிடமாட்டேன். மக்கட் பிறவி கிடைத்தல் அரிது. அப்படிக் கிடைத்த அரிய பிறவியை, இத்தகைய தீச் செய லால் இழிவு படுத்திக்கொள்ள வேண்டுமா? கூடவே கூடாது. அதைக் காட்டிலும் தங்கள் மடியில் படுத்து நிம்மதியாய் உயிரை விடுவேன். இந்தச் சமயத்தில் நீங்கள் வந்து சேர்ந்தீர்களே அதுவே போதும்" என்று கூறினார்.

காந்தியடிகள் சிறிது வாதாடிப் பார்த்தார் அன்னை யிடம். தம்முடைய கொள்கைக்காகக் கஸ்தூரிபாய் எந்த

முடிவுக்கும் வரக்கூடாது என்று எடுத்துச் சொன்னார். வைதிக இந்துக்கள் பலர் மருத்துவத்திற்காக மது, புலால் உண்டதை எடுத்துக் காட்டினார். அதெல்லாம் கஸ்தூரி பாயின் மன உறுதியை அசைக்கவில்லை.

"முடியாது! முடியவே முடியாது! என்னை இந்த இடத்திலிருந்து உடனே அப்புறப்படுத்துங்கள். இங்கு இருக்கவே நான் விரும்பவில்லை!" என்றார் கஸ்தூரிபாய்.

கஸ்தூரிபாயின் மனஉறுதி அடிகளுக்கு மிக்க மகிழ்ச்சியைத் தந்தது. ஆயினும் பொறுப்பின் நிறை மிகுந்தது. கஸ்தூரிபாயின் கருத்தை மருத்துவரிடம் கூறியபோது அவர் மிகவும் கடுமையாகப் பேசினார்.

"எத்தகைய ஈவிரக்கமற்ற மனிதரையா நீர்? நோயாளியிடம் இதைப்பற்றிக் கேட்க உமக்கு வெட்கமாயில்லையா? அப்புறப்படுத்தக் கூடிய நிலையில் உம் மனைவியில்லை. ஒரு கால், வழியில் செத்துப் போனாலும் போகலாம். நான் சொல்லவேண்டியதைச் சொல்லிவிட்டேன். என் கடமை தீர்ந்தது. அப்புறம் உங்கள் விருப்பம்" என்றார் மருத்துவர்.

கஸ்தூரிபாயை எப்படியாவது காப்பாற்ற விரும்பிய இந்த வெள்ளைக்கார மருத்துவரை நாம் பாராட்டாமலிருக்கமுடியாது. மருத்துவர் சொன்னபடி இந்தக் காந்தி கேட்டால்தான் என்ன? என்று நமக்குத் தோன்றுவதும் இயல்புதான். "ஆபத்துக்குப் பாவமில்லை" என்ற பழமொழியின் மேல் பாரத்தைப் போடவும் நம்மில் பலர் தயார்தான்.

ஆனால் அடிகளின் உளப்போக்கும், கஸ்தூரிபாயின் பிடிவாதமும் வேறுவிதமாயிருந்தன. "உயிர் போனாலும் கொள்கையைக் கைவிடக்கூடாது" என்பதில் அவர்கள் இருவரும் உறுதி கொண்டிருந்தார்கள். அடிகள், அன்னையாரை மருத்துவ மனையினின்றும் அகற்றிச் சென்றார்.

"எனக்கு ஒன்றும் நேராது; கவலைப்படாதீர்கள்!" என்று அன்னையார் அடிகளுக்கு ஆறுதல் சொன்னார். போனிக்ஸ் ஆசிரமத்தை அடைந்த பின்னர் தம்முடைய சொந்த மருத்துவ முறையினாலேயே அன்னையாரைக் குணப்படுத்திவிட்டார் அடிகள்.

## 8. நோயும் மருந்தும்

"விஞ்ஞானிகள் புராணீகர்களைவிட மோசமானவர்கள்" என்று பெர்னார்டுஷா ஒருமுறை குறிப்பிட்டார். அது உண்மைதான். ஒரு புராணிகன் பூமியை ஆதிசேடன் ஆயிரம் தலைகளால், தாங்கிக்கொண்டிருக்கிறான் என்று கூறும்போதும், இரணியாட்சன் பூமியைப் பாயாகச் சுருட்டிக் கடலில் ஒளியவைத்தான் என்று கூறும்போதும், "இது என்ன விந்தையாக இருக்கிறது! ஆதிசேடனாவது பூமியைத் தாங்குவதாவது? அவன் எங்கே நின்றுகொண்டு தாங்குகிறான்? உருண்டையான பூமியைப் பாயாகச் சுருட்டமுடியுமா? அப்படிச் சுருட்டினாலும் கடலில் எப்படி ஒளிய வைக்கமுடியும்? கடல் பூமிக்கு வெளியிலா இருக்கிறது? இது என்ன மூடநம்பிக்கை? பகுத்தறிவுக்குப் பொருந்தவில்லையே!" என்று நகையாடுகிறோம். ஆனால் விஞ்ஞானி, "வானத்தில் ஓரியன் என்னும் விண்மீன் இருக்கிறது. அதிலிருந்து ஒரு ஒளிக்கற்றை புறப்பட்டுப் பூமியை அடைவதற்குப் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகள் ஆகின்றன" என்று சொன்னால் அக்கருத்தை ஏனென்று கேட்காமல் ஒப்புக்கொள்கிறோம். அதன் உண்மையை ஆராய யாரும் விரும்புவதில்லை. விஞ்ஞானியின் வாக்கு வேத வாக்கு!

சரி! விஞ்ஞானி கண்டுபிடித்த ஒவ்வொன்றும் உண்மையாகி விடுகின்றதா? ஆர்க்கமிடிஸ், அரிஸ்டாட்டில் போன்ற கிரேக்க விஞ்ஞானிகள் காலத்தில் சரியானவை

என்று ஏற்றுக்கொள்ளப்பட்ட கொள்கைகள், கலீலியோ வின் காலத்தில் பொய்யாக்கப்பட்டன. அவரே பொய்ப் பித்துக் காண்பித்தார். நியூட்டன் காலத்திய விஞ்ஞானக் கொள்கைகள் ஐன்ஸ்டீன் காலத்தில் பொய்யாக்கப் பட்டன. எனவேதான் விஞ்ஞானிகள் புராணிகர்களைவிட மோசமானவர்கள் என்று பெர்னார்டுஷா குறிப்பிட்டார்.

அதேபோலத்தான் மருத்துவர்களும். என்புருக்கி நோயின் தடுப்பு மருந்தான பி. சி சி. மக்களினத்திற்குச் சஞ்சீவி எனக் கருதப்பட்டது. ஆனால் பிற்காலத்தில், அதைப் போற்றி கூறிய விஞ்ஞானிகளே அதன் குறை பாட்டை விளக்க ஆரம்பித்து விட்டனர். பென்சிலின் இரண்டாம் உலகப்போரில் செயற்கரிய செயல்களையெல் லாம் செய்து காட்டியது ஆனால் அம்மருந்து அபாயகர மானது என்று இப்போது மருத்துவர்களால் எச்சரிக்கப்படு கிறது. முதலில் நோய்வாய்ப்பட்டு ஒருமருத்துவரிடம் சென் ருல் நோய் என்ன என்பதை அவரால் கண்டுபிடிக்க முடிவ தில்லை. முதலில் ஒரு மருந்து கொடுக்கிருர். பிறகு அதன் பலாபலனைப் பார்த்துக்கொண்டு வேறு மருந்து கொடுக் கிருர். இறுதியில் அந்நோயாளியின் உடல் மருத்துவரின் சோதனைக்களமாக மாறிவிடுகிறது. இக்காரணங்களையெல் லாம் நன்குணர்ந்த காந்தியடிகள் மருத்துவர்களிடம் அதிக நம்பிக்கை வைப்பதில்லை.

மருத்துவர்களால் 'பிழைக்கமுடியாது' என்று கை விடப்பட்ட நோயாளிகளையெல்லாம் காந்தியடிகள் குணப் படுத்தி வெற்றி கண்டிருக்கிருர். பார்ச்சூர் சாஸ்திரியின் தொழுநோய் மருத்துவத்தைப் பற்றிப் படித்தோம். வட நாட்டில் தலைசிறந்த மருத்துவ மனைகட்கெல்லாம் சென்று முயன்று பார்த்தவர் பார்ச்சூர் சாஸ்திரி. தொழுநோய்க்கு மருந்தே கிடையாது என்று எண்ணிய காலம் அக் காலம். அக்காலத்தில் வியக்கத்தக்க முறையில் அந்நோயைப் பெரு மளவு குணப்படுத்தி வெற்றி கண்டார் காந்தியடிகள்.

தம்மகனை மணிலால் காந்தி டைபாய்டு காய்ச்சலி ஞல் சாகும் நிலையில் இருந்தானென்று சென்ற தலைப்பில் படித்தோம். அந்நோயைக் காந்தியடிகள் 'நீர்மருத்துவ'த் தின் மூலம் குணப்படுத்தினர்.

ஜெர்மானியரான டாக்டர் கூன் என்பவர் நீர் மருத்துவ முறையைப் பற்றி ஒரு நூல் எழுதியிருக்கிறர். அதில் 'ஆசனக் குளிப்பு', 'இடுப்புக் குளிப்பு' ஆகிய முறை களினால் நோய் தீர்க்கும் முறையைப் பற்றி எழுதியிருக் கிறர். காந்தியடிகள் அந்நூலில் கண்ட முறைகளை ஏற் கனவே சோதனை செய்திருந்தார். இப்போது மணி லாலுக்கு 'இடுப்புக் குளிப்பு'ச் செய்வித்தார். தொட்டி நீரில், மூன்று நிமிடம் முழங்காலுக்கு மேலே தொப்புளுக் குக் கீழே தண்ணீர் இருக்கும்படி உட்காரவைத்து வெளியே எடுத்தார். இதை அடிக்கடி செய்ததுடன் ஆரஞ் சுப் பழச்சாறும் தண்ணீரும் கலந்து உணவாகக் கொடுத் தார்.

மூன்று நாள் இப்படிச் செய்து வந்தும் பயன் தெரிய வில்லை. 104 டிகிரி வரையில் காய்ச்சல் அடிக்கடி ஏறிக் கொண்டிருந்தது. காந்தியடிகள் கவலையடைந்தார். தம் முடைய பிடிவாதம் குழந்தைக்கு ஆபத்தாக முடிந்துவிட் டால் என்ன செய்வது? தம்முடைய மருத்துவக் கொள்கை யைக் குழந்தை மேல் சுமத்துவது நியாயமாகுமா? வேறு மருத்துவரைக் கூப்பிட்டால் என்ன? அல்லது ஆயுர்வேத மருத்துவரை அழைத்துக் காட்டினல் என்ன? என்றெல் லாம் உள்ளம் குழம்பினர்.

இந்த எண்ணங்களுக்கு இடையே மாறுன எண்ணங் களும் தோன்றின. மருத்துவர்கள் மட்டும் குணப்படுத்தி விடுவதாக உறுதி கொடுக்கிறர்களா? அவர்களும் சோதனை தானே செய்கிறர்கள் என்று நினைத்தார். சட்டென்று ஒரு யோசனை தோன்றியது. எழுந்து ஒரு நீளமான துணியைத்

தண்ணீரில் நனைத்துப் பிழிந்து மணிலாலின் உடல்மீது தலையை மட்டும் விட்டுவிட்டுச் சுற்றினார். தலையில் தனியாக ஓர் ஈரத்துண்டைச் சுற்றினார், பிறகு இரண்டு கனமான கம்பளிகளைப் போட்டுக் குழந்தையைப் போர்த்து விட்டார். அப்போது பழுக்கக் காய்ச்சிய இரும்பைப் போல் குழந்தையின் உடம்பு கொதித்தது. ஆனால் ஒரே வரட்சி; கொஞ்சம்கூட வியர்வையில்லை.

மணிலாலைச் சற்று நேரம் அவனுடைய அன்னையிடம் ஒப்புவித்துவிட்டு வெளியே சிறிது உலாவச் சென்றார். சௌபாத்திக் கடற்கரைக்குப் போனார். அப்போது இரவு மணி பத்து. கடற்கரையில் இவரைத் தவிர இன்னும் இரண்டொருவர் உலாவிக் கொண்டிருந்தார்கள். காந்தியடிகள் அங்குமிங்கும் நடந்துகொண்டே கடவுளைத் துதித்தார். "ஆண்டவனே இந்தச் சோதனை நேரத்தில் என்னுடைய நம்பிக்கையைப் பாதுகாத்தல் உன்னுடைய பொறுப்பு!" என்று முறையிட்டார். அவருடைய உதடுகள் இராமநாமத்தை இடைவிடாது கூறிக் கொண்டிருந்தன. சிறிது நேரம் உலாவிய பிறகு வீட்டுக்குத் திரும்பினார். குழந்தையின் நிலை யாதோ என்று நெஞ்சு கலக்கமுற்றிருந்தது.

வீட்டுக்குள் நுழைந்ததும், "பாபு! வந்துவிட்டீர்களா?" என்று மணிலாலின் குரல் கேட்டது.

"வந்துவிட்டேனடா, கண்மணி!" என்று சொல்லிக் கொண்டே அருகில் போனார்.

"உடம்பு பற்றி எரிகிறது. துணியையும் கம்பளியையும் எடுத்துவிடுங்கள்."

"குழந்தாய்! உடம்பு வியர்த்திருக்கிறதா?"

"வியர்வை வெள்ளத்தில் மூழ்கியிருக்கிறேன். சீக்கிரம் எடுங்கள்."

குழந்தையின் நெற்றியை அடிகள் தொட்டுப் பார்த்தார். முத்து முத்தாய் வியர்வை துளித்திருந்தது; காய்ச்சலும் குறைந்திருந்தது. ஆண்டவனுக்கு உளங்கலந்த நன்றியைச் செலுத்தினர்.

"மணிலால்! காய்ச்சல் இனிக் கட்டாயம் குணமாகி விடும். இன்னும் சிறிது வியர்க்கட்டும்."

"அப்பா! இனி ஒரு நிமிடமும் இந்த உலேக்களத்தில் என்னல் இருக்க முடியாது. தயவுசெய்து உடனே எடுத்து விடுங்கள். வேண்டுமானல் மறுபடியும் துணி சுற்றிக் கொள்ளலாம்."

பேச்சுக் கொடுத்துக்கொண்டே இன்னும் சில நிமிடம் வைத்திருந்தார். நெற்றியிலிருந்து வியர்வை வழிந்து அருவியாக ஓடிற்று. பிறகு கம்பளிகளேயும், ஈரத் துணியையும் எடுத்துவிட்டு உடம்பைத் துடைத்தார். மணிலால் உறக்கம் வருகிறது என்ருன். அடிகளுக்கும் உறக்கம் வந்தது. தந்தையும் மகனும் ஒரே படுக்கையில் படுத்து உறங்கிவிட்டார்கள். மறுநாள் காலேயில் காய்ச்சல் மிகவும் குறைந்திருந்தது. ஆனலும் அடியோடு போகவில்லே. பாலும் பழச்சாறும் அருந்திக்கொண்டு நாற்பது நாள் படுக்கையில் இருக்கவேண்டி வந்தது. பிறகு நோயினின்றும் மணிலால் மீண்டான். கஸ்தூரிபாய் மருத்துவமனேயிலிருந்து போனிக்ஸ் பண்ணேக்கு எடுத்துச் செல்லப்பட்ட பிறகு, காந்தியடிகள் இதே நீர் மருத்துவ முறையைக் கையாண்டே அன்னேயாரைக் குணப்படுத்தினர்.

*　　　*　　　*

காந்தியடிகள் ஒருமுறை இங்கிலாந்து சென்றிருந்த போது அவருக்குப் பாரிசவாயு நோய் கண்டிருந்தது. டாக்டர் ஜீவராஜ் மேதா என்பவர் அடிகளுக்கு மருத்துவம் செய்துவந்தார். மருத்துவர் குறிப்பிட்ட உணவு வகைகளேக் காந்தியார் உட்கொள்ள முடியவில்லே. நிலக்கடலே, வாழைப்பழம், எலுமிச்சம்பழம், தக்காளிப்பழம்,

திராட்சைப்பழம் ஆகியவையே அப்போது காந்தியடிகளின் உணவாக இருந்தன. பருப்பு வகைகளையும், தானியங் களையும் உட்கொள்ளுவதை அடியோடு விட்டிருந்தார். பாலும் சாப்பிடுவதில்லை.

நிலைமை இவ்வாறு இருக்கும்போது திருவாளர் கோகலே பாரிசிலிருந்து இலண்டன் வந்து சேர்ந்தார். மருத்துவர் கூறும் உணவை உட்கொள்ளுமாறு காந்தியடி களை வற்புறுத்தினர். காந்தியாருக்கோ தம் உணவுக் கொள்கையை விட்டுக்கொடுக்க விருப்பமில்லை. நெடுநேர வற்புறுத்தலுக்குப் பிறகு, யோசனை செய்வதற்காகத் தமக்கு இருபத்து நான்கு மணி நேரம் வேண்டுமென்று காந்தியடிகள் சொன்னர். ஒருநாள் முழுதும் யோசனை செய்துவிட்டுத் தமது முடிவைப் பின்வருமாறு தெரிவித் தார் :— "தானியங்களும் பருப்பு வகைகளும் உட்கொள்ளு கிறேன். ஆனல் பாலும் புலாலும் உட்கொள்ளமாட்டேன். பாலையும், புலாலையும் உட்கொள்ளுவதைவிடச் சாவே மேல். தயவுசெய்து என்னை மன்னிக்க வேண்டும்."

மகாத்மாவின் இந்த முடிவு திரு. கோகலேயுக்குப் பிடிக்கவில்லை. ஆயினும் அவருடைய ஆத்ம சாதன நோக் கத்தையும், கொள்கையில் உறுதியையும் கருதி, மருத்துவ ரிடம், "காந்தி ஒப்புக்கொண்ட வரையிலும் சரி. மேலும் அவரைத் தொல்லைப்படுத்த வேண்டாம்" என்று கூறினர்.

மருத்துவர் கூறியபடி காந்தியடிகள் உணவை ஓரளவு மாற்றிக்கொண்டார். மேலுக்கு மருந்து தடவிக் கொண் டார். ஒரு பயனும் ஏற்படவில்லை. டாக்டர் அல்லின்சன் என்பாரின் யோசனைப்படி பச்சைக் காய்கறிகளை உண்டுப் பார்த்தார். அதனாலும் பயன் ஏற்படவில்லை. பிறகு கப்பலேறி இந்தியாவுக்குப் புறப்பட்டார். கப்பல் சூயஸ் கால்வாயை அடைந்ததும் அவருக்கு உடம்பு முழுக் குண மடைந்துவிட்டது. கடற் பயணத்தின் தூய்மையான

காற்றே தாம் குணமடைந்ததற்குக் காரணம் என்று கூறினார்.

* * *

முதலாம் உலகப் போர் நடந்து கொண்டிருந்த காலத்தில், ஆங்கில அரசாட்சிக்குத் துணை செய்ய வேண்டுமென்பது காந்தியடிகள் கொள்கை. ஆகையினால் ஊர் ஊராகச் சென்று போருக்கு ஆள் திரட்டும் பணியில் தீவிரமாக ஈடுபட்டார். இடைவிடாத உழைப்பின் காரணமாக அவருடைய உடல்நிலை கெட்டு வயிற்றுக் கடுப்பு நோய் வந்துவிட்டது. ஒருநாள் சபர்மதி ஆசிரமத்திலிருந்து புறப்பட்டு நதியாத்துக்குப் போகத் திட்டம் போட்டிருந்தார். ஆசிரமத்திலிருந்து ஒன்றேகால் கல் தொலைவிலிருந்த புகைவண்டி நிலையத்திற்கு நடந்தே சென்றார். ஆமதாபாத்தில் அவருடன் சேர்ந்துகொண்ட வல்லபாய்படேல் காந்தியடிகள் உடல் நலமின்றியிருக்கிறார் என்பதை அறிந்துகொண்டார். திரும்பிவிடலாம் என்று படேல் வற்புறுத்தியதைக் காந்தியடிகள் ஏற்றுக் கொள்ளவில்லை. இரவு பத்து மணிக்கு இருவரும் நதியாத் நிலையத்தில் இறங்கி அநாதை ஆசிரமத்தை அடைந்தார்கள். அங்கே அடிகளுக்கு வயிற்றுக் கடுப்பு நோய் மிகவும் கடுமையாகிவிட்டது. நண்பர்கள் கவலைகொண்டு மருத்துவரை அழைத்து வந்தார்கள். ஆனால் காந்தியடிகளோ மருத்துவம் செய்துகொள்ளவும் மருந்து சாப்பிடவும் மறுத்துவிட்டார். ஊசி குத்திக் கொள்ளவும் இணங்கவில்லை. பட்டினி கிடந்தால் சரியாகப் போய்விடும் என்று நம்பிக்கை தெரிவித்தார். இருபத்து நான்கு மணிநேரம் பட்டினி கிடந்த பிறகு பசியே இல்லாமல் போய்விட்டது. உடல் மெலிந்து வலி குன்றியது. வயிற்றுப் போக்கோடு காய்ச்சலும், பிதற்றலும் சேர்ந்துகொண்டன. காந்தியார் சாவு தம்மை நெருங்கிவிட்டது என்று நம்பினார். அம்பலால் சாராபாய் முதலிய நண்பர்கள் ஆமதாபாத்திலிருந்து அவரைப் பார்க்க வந்தார்கள். தம்மை ஆசிரமத்

தில் கொண்டுபோய் விடும்படி அவர்களைக் கேட்டுக் கொண்டார். அவர்களும் அவ்வாறே செய்தார்கள்.

சபர்மதி ஆசிரமத்தில் காந்தியடிகள் யமனோடு போராடிக் கொண்டிருந்த சமயத்தில், போர் முடிந்து விட்டதென்றும், இனிமேல் ஆள் திரட்ட வேண்டியதில்லையென்றும் ஆணையாள (Commissioner)ரிடமிருந்து செய்தி வந்தது. அந்தச் செய்தியை வல்லபாய் படேல் காந்தியடிகளிடம் கூறினார். மகாத்மாவின் உள்ளத்திலிருந்த பாரம் இறங்கியது. கொஞ்சம் கொஞ்சமாகக் காந்தியடிகளின் உடம்பு குணமடையத் தொடங்கியது. நீர் மருத்துவம், பனிக்கட்டி மருத்துவம் முதலிய இயற்கை வைத்திய முறைகளைக் கடைப்பிடித்து வந்தார். நோய் நீங்கிய பிறகும் உடம்பில் பழைய வலிமை வருவதற்கு நெடுநாள் ஆயிற்று.

*                    *                    *

திரான்ஸ்வாலின் தலைநகரமான ஜொகன்னஸ்பர்க்கிலிருந்த கூலிச் சேரியில் பிளேக் (Black Plague) என்னும் கொள்ளை நோய் பரவியிருந்ததென்றும், அந்நோயைப் போக்கும் பணியில் தம் உயிரையும் பணயம் வைத்துக் காந்தியடிகள் உழைத்தார் என்றும் நாம் படித்தோம். காந்தியடிகளுக்கும் அவருடைய நண்பர்களுக்கும் துணையாக இருந்த கூலிச் சேரியில் பணிபுரிவதற்காக நகரசபையாரால் ஒரு செவிலிப் பெண் அனுப்பி வைக்கப்பட்டாள். அவள் அன்புள்ளம் கொண்டவள். நோயாளிகளுக்குத் தானே பணிவிடை செய்வதாகச் சொன்னாள். ஆனால் நோயாளிகளை அவள் தொடும்படி மற்றவர்கள் விடவில்லை.

பிளேக்குக்குப் பிராந்தி ஒரு மருந்து என்று கருதப்பட்டது. நோயாளிகளுக்கு அடிக்கடி கொடுக்க வேண்டுமென்றும், பணிவிடை செய்பவர்களும் அடிக்கடி பிராந்தி சாப்பிட வேண்டுமென்றும் சொல்லப்பட்டது. செவிலி, அவ்விதமே பிராந்தி குடித்துக் கொண்டிருந்தாள். ஆனால் காந்தியடிகளும் அவர் நண்பர்களும் பிராந்தியைத் தொட

வில்லை. நோயாளிகளில் மூன்று பேர் பிராந்தி குடிக்காமல் மருத்துவம் செய்துகொள்ள இணங்கினார்கள். அவர்களுக்குக் காந்தியடிகள் தலையிலும் மார்பிலும் ஈர மண்ணை வைத்துக் கட்டினார். மூன்று பேரில் இருவர் பிழைத்தனர். ஒருவர் இறந்து விட்டார். பிராந்தி குடித்து வழக்கமான மருத்துவம் பெற்ற இருபது பேரும் மாண்டு போனார்கள். பாவம்! பிராந்தி குடித்துத் தன்னை காப்பாற்றிக் கொள்ள விரும்பிய செவிலியும் கொள்ளை நோயினால் பிடிக்கப்பட்டு இறந்து போனாள். காந்தியடிகளையும் அவருடைய நண்பர்களையும் தொற்றுநோய் பீடிக்கவில்லை. இதிலிருந்து பிராந்தியை மருந்தாகச் சில சமயங்களில் பயன்படுத்துவது முழுத் தவறு என்ற முடிவுக்கு காந்தியடிகள் வந்தார்; ஈர மண் மருத்துவத்தில் அவருடைய நம்பிக்கையும் அதிகமாயிற்று.

மண் சிறந்த மருந்து என்பது அவருடைய கொள்கை. பூமித்தாய் எல்லாவிதப் பொருள்களையும் தன்னகத்தில் அடக்கிக் கொண்டிருக்கிறாள். எனவே மண் இயற்கையாக அமைந்து கிடக்கும் மருந்து என்று காந்தியடிகள் கூறினார். காந்தியடிகளுக்கு இளமையிலிருந்தே மலச்சிக்கல் உண்டு. மலச்சிக்கல்களுக்கு எல்லா மருந்தையும் விட ஈர மண்ணே அவருக்கு ஏற்ற மருந்தாக இறுதிக் காலம் வரையிலும் விளங்கியது.

* * *

காந்தியடிகள் மகன்வாடியில் தங்கியிருந்த போது, ஒரு நாள் 17 அல்லது 18 வயதுள்ள ஒரு இளைஞன் வந்தான். அவன் ஒருவகை நரம்புத் தளர்ச்சி(Chorca)யால் அவதிப்பட்டுக் கொண்டிருந்தான். அவன் உறுப்புக்கள் எப்பொழுதும் நடுக்கம் (St Vitus's dance) கொண்டு இருக்கும். அவன் காந்தியடிகளிடம், "பாபு! இந்நோயினால் நான் மிகவும் வருந்துகிறேன். எனக்கு வாழ்க்கையே மிகவும் கசந்து விட்டது. இந்நோயினால் நான் யாருக்கும் எந்த விதமான

பயனும் உடையவனாக இல்லை. ஆகையினால் தங்களோடு ஆசிரமத்திலேயே தங்க விரும்புகிறேன். தயவு செய்து ஏற்றுக்கொள்ளுங்கள்" என்று மன்றாடினான்.

"உலகில் வாழ முடியாத எல்லோரையும் ஆசிரமத்தில் ஏற்றுக்கொள்ள என்னால் முடியாது. வேறு எங்காவது நீ இடந் தேடிக்கொள்" என்று காந்தியடிகள் மறுத்துக் கூறி விட்டார்.

அவ்விளைஞன் விடாக்கண்டன். காந்தியடிகள் நாட்டுக்குக் கற்றுக் கொடுத்த சத்தியாக்கிரகத்தை அவர் பக்கமே திருப்பி விட்டான் இளைஞன். ஆசிரம வாயிலில் உட்கார்ந்து கொண்டான். இருட்டும் நேரமாகிவிட்டது. திருவாளர் ஜே. சி. குமரப்பா காந்தியடிகளை யடைந்து, "அச் சிறுவன் போகாமல் பிடிவாதமாகக் காலையிலிருந்து வாயிலில் உட்கார்ந்து கொண்டிருக்கிறான். அவனை வெளியில் அனுப்பினால் பரவாயில்லை" என்று சொன்னார்.

"அவனை எங்கு அனுப்புவது. நாமே வெளியில் துரத்தினால் அவனுக்குத் தஞ்சமளிப்பவர் யார்? அவனை ஆசிரமத்திலேயே தங்கச் சொல்லுங்கள். அவனால் முடிந்த ஏதாவது வேலையைச் செய்யச் சொல்லுங்கள்" என்று காந்தியார் கூறினார்.

சிறுவன் ஆசிரமத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டான். கை நடுக்கம் கொண்ட அவன் நூல் நூற்க முடியாது. முதன் முதலாக அவனுக்குக் காய்கறி அலம்பும் வேலை கொடுக்கப்பட்டது. பிறகு அவனால் முடிந்த அளவு சமையலறையில் வேலை செய்தான். கொஞ்சங் கொஞ்சமாக அவனிடம் முன்னேற்றம் காணப்பட்டது. கொஞ்ச நாளில் கத்தியை எடுத்துக் காய்கறி நறுக்கும் அளவுக்கு அவன் நோயினின்றும் விடுதலை பெற்றான். காந்தியடிகள் உள்ள ஒருமைப்பாட்டுச் சக்தியை (Will Power) வளர்த்துக் கொள்ளுமாறு அவனிடம் கூறினார். அதற்குப் பயிற்சியும் வழங்கினார். அச் சிறுவனும் தன் உள்ள உறுதியால் அங்

நோயை அடியோடு போக்கிக் கொண்டான். நோய் குண மடைந்ததும், காந்தியடிகளின் நல்வாழ்த்தைப் பெற்றுக் கொண்டு தொழில் கல்வி பயில்வதற்காக அமெரிக்க நாட்டுக்குச் சென்று விட்டான்.

*   *   *

ஒருதடவை திருவாளர் ஜே. சி. குமரப்பா தமக்கு இரத்தக் கொதிப்பு இருப்பதாக உணர்ந்தார். உடனே பம்பாயிலிருந்த ஒரு சிறந்த மருத்துவரிடம் சோதனைக்காகச் சென்றார். அந்த மருத்துவர் இரத்தக் கொதிப்பு நோயைப்பற்றி நன்கு உணர்ந்தவர். அவர் குமரப்பாவை நன்கு சோதனை செய்தார். ' இரத்தக் கொதிப்பு உங்களுக்கு நரம்புகளின் களைப்பால் ஏற்படுகிறது. உடலில் எவ்விதக் கோளாறுமில்லை'' என்று கண்டறிந்து கூறினார். குமரப்பா காந்தியடிகளிடம் திரும்பி வந்து மருத்துவர் சொன்னதைக் கூறினார். இதைக் கேட்ட காந்தியடிகள் தம் இயற்கை மருத்துவத்தைத் துவக்கினார்.

முதலில் நரம்புகளின் களைப்பு உடலுழைப்பால் ஏற்படுகிறதா? அல்லது மூளையின் உழைப்பால் ஏற்படுகிறதா? என்று கண்டறிய விரும்பினார். அதை உணரா விட்டால் நோய்க்கு மருத்துவம் செய்வதெப்படி? ஒருநாள் லாகூர் கல்லூரிப் பேராசிரியரான ஒரு மாது, சில கடினமான கருத்துக்களைப்பற்றிக் காந்தியடிகளிடம் பேசிச் செல்ல வந்தார். அப் பொறுப்பைத் தாம் ஏற்றுக் கொள்ளாமல் அம் மாதைக் குமரப்பாவிடம் அனுப்பினார். பேச்சுத் துவங்கு முன்பாகத் திருமதி சுசீலா நய்யாரை அழைத்துக் குமரப்பாவின் இரத்த அழுக்கத்தைக் கணக்கிடச் சொன்னார் அவ்வுரையாடல் 15 நிமிடம் நிகழ்ந்தது. அவ்வுரையாடல் முடிந்த பிறகு மீண்டும் இரத்த அழுக்கத்தைக் கணக்கிடச் சொன்னார். அப்போது இரத்த அழுக்கம் 15 எண்கள் அதிகமாக இருந்தது.

அடுத்த நாள் காந்தியடிகள் தொழிற்கூடத்தின் நிர்வாகியை அழைத்து ஒரு மரப்பலகையில் கோடுபோடச் சொன்னார். குமரப்பாவின் கையில் ஒரு ரம்பத்தைக் கொடுத்து, அந்தக் கோட்டின் மேலேயே அறுக்குமாறு சொன்னார். அவ் வேலையைத் துவக்குவதற்கு முன்பும் பின்பும் இரத்த அழுக்கம் எடுக்கப்பட்டது. இப்போது இரத்த அழுக்கம் 20 எண்கள் அதிகமாக இருந்தது.

மூன்றும் நாள் ஓர் உடற்பயிற்சி ஆசிரியை அழைத்தார். குமரப்பாவை ஒரு பர்லாங்கு தூரம் ஓடுமாறு சொன்னார். ஓடுவதற்கு முன்பும் இரத்த அழுக்கம் குறித்துக் கொள்ளப்பட்டது. உடற்பயிற்சி ஆசிரியர் குமரப்பாவோடு ஓடிவந்து அவர் நின்றதும் இரத்த அழுக்கத்தைக் கணக்கிட்டார். இப்போது இரத்த அழுக்கம் 15 எண்கள் குறைந்திருந்தது. நாடித் துடிப்புச் சரிநிலையில் இருந்தது.

இச் சோதனைகளிலிருந்து குமரப்பாவின் குருதிக் கொதிப்பு உடல் உழைப்பால் ஏற்படுவதென்று; மூளை உழைப்பால் தான் ஏற்படுகிறது என்பதைக் கண்டறிந்தார். குருதிக் கொதிப்பைப் போக்கிக் கொள்ள மருத்துவமும் சொன்னார்.

“குமரப்பா! குருதிக் கொதிப்பு உங்கள் உடலில் ஏற்பட்டிருக்கிறது என்று தெரிந்தவுடன், நீங்கள் மூளை உழைப்புக்கு ஓய்வளித்துவிட்டு உடலுழைப்பை மேற்கொள்ள வேண்டும். அப்போது நடப்பது நல்ல மருந்து. மேலும் காலை 11 அல்லது 12 மணிவரை வேலைசெய்த பிறகு இடையில் இரண்டு மணி நேரமாவது ஓய்வெடுத்துக் கொள்ள வேண்டும். அதற்குமேல் உங்கள் வேலையைத் தொடர்ந்து செய்யலாம். அதோடு உங்கள் உணவையும் ஒழுங்குபடுத்திக் கொள்ள வேண்டும். அசீரணம் ஏற்படாமல் பார்த்துக் கொள்ளவேண்டும். அசீரணம் மூளைக்குக் களைப்பையும் நோயையும் தரும்” என்று சொன்னார் காந்தியடிகள். அன்றிலிருந்து காந்தியடிகளின் அறிவுரையை

மேற் கொண்டு குமரப்பா ஒழுகி வந்தார். குருதிக் கொதிப் புக்கு அடிகளின் மருத்துவம் மிகவும் ஏற்றதாக அமைந்தது.

* * *

காந்தியடிகள் இயற்கை மருத்துவமுறையில் தென்னுப் பிரிக்காவில் வாழ்ந்த காலத்திலிருந்தே பேரூக்கம் காட்டினுர். அதற்காகப் பல பரிசோதனைகளை நடத்தினுர். தால்ஸ்தாய் பண்ணையில் அச்சோதனைகளை நடத்த வேண்டிய வசதிகள் இருந்தன. பண்ணையில் யாருக்கு என்ன நோய் வந்தாலும் மருத்துவரைக் கூப்பிடுவதில்லை. காந்தியடிகள் இயற்கை மருத்துவ முறையைக்கொண்டே எல்லா நோய்களையும் குணப்படுத்தி வந்தார். இவரிடம் இயற்கை மருத்துவம் செய்து கொள்வதற்காக பண்ணைக்கு வெளியே அக்கம்பக்கத்திலிருந்த மக்களும் வந்தார்கள். தால்ஸ்தாய் பண்ணைக்குச் சற்று தூரத்தில் புகைவண்டி நிலையம் ஒன்று இருந்தது. புகைவண்டி நிலையத் தலைவரின் குழந்தைக்கு — இரண்டு வயது — டைபாய்டு கண்டது. அதை இயற்கை மருத்துவ முறையைக் கையாண்டு குணப் படுத்தினுர். இயற்கை மருத்துவ முறையில் தாம் பெற்ற பட்டறிவைக்கொண்டு, 'ஆரோக்கியவழி' என்ற ஓர் அருமையான நூலும் எழுதியிருக்கிருர் காந்தியடிகள்.

ஆனுல் இந்தத் துறையிலேயும் காந்தியடிகள் எழுதி யுள்ள எச்சரிக்கையை நாம் கவனித்து உள்ளத்தில் வைத்துக் கொள்வது இன்றியமையாதது. அந்த எச்சரிக்கை வருமாறு :- "இம்மாதிரி பல சோதனைகளை நான் தால்ஸ் தாய் பண்ணையில் நடத்தினேன். ஒன்றில்கூடத் தோல்வி யடையவில்லை. ஆனுல் நான் கைக்கொண்டிருந்த முறை களில் அப்போதிருந்த உறுதி இப்போது எனக்குக் கிடை யாது. 1919-ஆம் ஆண்டில் இந்தியாவுக்கு வந்த பிறகு எனக்கு வயிற்றுக் கடுப்பு நோய் வந்தது அதை என்னுல் இயற்கை மருத்துவத்தின் துணைகொண்டு குணப்

படுத்திக் கொள்ளவே முடியவில்லை. அதற்குக் காரணம் எனக்கு நம்பிக்கை குறைந்து போனதா, அல்லது தட்ப வெப்ப நிலை மாறுதலா என்று சொல்லமுடியாது. தென்னுப் பிரிக்காவில் வெற்றியளித்த சில முறைகள் இந்தியாவில் எனக்கு வெற்றிதரவில்லை என்று மட்டும் சொல்லு வேன்.''

சூரிய ஒளியில் இருத்தல், திறந்த வெளியில் படுத்து உறங்குதல் ஆகியவையும் காந்தியடிகளின் இயற்கை மருத்துவ முறையில் அடங்கும். அவருடைய மருத்துவ முறைகளில் முக்கியமானது பட்டினி கிடத்தல், நோயுற்ற காலங்களில் வீட்டிலுள்ளவர்கள் வெளியில் ஓடித்திரிந்து அமளி செய்யும் அளவுக்கு, நோயாளியிடம் கவனம் செலுத்துவதில்லை. ஆனுல் நோயாளிகளுக்குச் சேவை செய் வதில் அடிகள் பேரூக்கம் காட்டுவார். நாட்டின் பெரிய அரசியல் வேலைகள் கூட அவருக்கு இதைவிட அதிக முக்கிய மென்று தோன்றுவதில்லை. அவர் நோயாளிகளுக்குச் சேவை செய்வதற்குக் கிடைக்கும் வாய்ப்புகளை நழுவிப் போகாமல் பார்த்துக் கொள்வார். ஆகையால் அவருடைய பார்வையிலிருந்து சேவை பெற்றுக் குணமடைந்த சிலர் தங்களுடைய நற்பேற்றை எண்ணி மகிழாமல் இருக்க முடியாது.

## 9. உணவு

காந்தியடிகளின் வாழ்க்கையே ஒரு சோதனைக்களம். அதேபோல் அவருடைய உடலும் ஓர் ஆய்வுக் கூடம். அவ் வாய்வுக் கூடத்தில் எப்போதும் சோதனைகள் நடத்திக் கொண்டே இருப்பார். ஆகையினுல்தான், தாம் எழுதி யுள்ள நூலுக்கும் சத்திய சோதனை (My Experiments with Truth) என்று பெயரிட்டனர்.

உணவைப் பற்றிப் பல திறப்பட்ட சோதனைகள் நடத்துவதில் காந்தியடிகளுக்கு இளமையிலிருந்தே ஆர்வம் அதிகம். தம்முடைய சொந்த விஷயத்தில் அவர் நிகழ்த்தியுள்ள சோதனைகளுக்குக் கணக்கில்லை. இதனால் பல தடவை அவருடைய உயிருக்கு ஆபத்துவரும் வாய்ப்புகளும் ஏற்பட்டிருக்கின்றன. பாலைப் பற்றிக் காந்தியடிகள் கொண்டிருந்த கொள்கையையும், இன்றியமையாத நேரத்தில் அதை மீண்டும் ஏற்றுக் கொண்டதையும் நாம் முன்பே படித்தோம். தமக்கு ஏற்பட்ட பட்டறிவின் காரணமாகப் பாலின்றி மனிதனால் உயிர் வாழ முடியாதென்று பிறகு ஒப்புக் கொள்ளத் தொடங்கியிருக்கிறார். ஆனால் ஏதேனும் ஒரு காலத்தில் இந்நாட்டில் ஒரு விஞ்ஞானி தோன்றிக் காய்கறிகளைக் கொண்டே பாலுக்கு ஈடான சத்துள்ள உணவைத் தயாரிக்கும் முறையைக் காட்டுவாரென்ற நம்பிக்கை அவருக்குக் கடைசி வரையிலும் இருந்தது.

உப்பும் மனிதனுக்குத் தேவையில்லை என்று காந்தியடிகள் எண்ணிக் கொண்டிருந்தார். இதனால் அவர் பல ஆண்டுகள் உப்பில்லாத உணவையும் சாப்பிட்டு வந்தார். ஆனால் பிறகு மனிதனுடைய உணவில் உப்பையும் சேர்க்க வேண்டியதுதான் என்று தெரியவே உப்புச் சாப்பிடத் தொடங்கினர்.

மனிதனுக்குப் பூரணமான சத்தைக்கொடுக்கச் சரியான உணவு பழங்களே என்பது காந்தியடிகளின் கருத்து. மனிதனுடைய உடல் அமைப்பு, அவனுடைய கைகால்களின் வேலைப்பாடு, அவனுடைய வயது ஆகியவற்றின் தன்மை முதலியனவற்றை ஆராய்ந்து பார்க்கும்போது பழங்களைக் கொண்டு வாழ்வதற்கென்றே மனிதன் படைக்கப்பட்டிருக்கிறன் என்பது காந்தியடிகளின் கொள்கை. ஏழ்மை மிகுந்துள்ள நாட்டு மக்களான இந்தியர்கள் பழத்தைச் சாப்பிட்டு வாழ்வதெப்படி? ஒருகால் இதனாலேயே காந்தியடிகள் பேரீச்சை, வாழை முதலிய மலிவான பழங்

களையே சாப்பிட்டுக் கொண்டிருந்தாரோ என்னவோ? காந்தியடிகள் தென்னுப்பிரிக்காவில் இருந்தபோது, ஐந்து ஆண்டுகள் வெறும் பழ உணவையே உண்டு வாழ்ந்தார். அதைப்பற்றி அவர் குறிப்பிடும்போது, "தனித்த பழ உணவு மட்டுமே உண்டு வாழ்ந்த ஐந்தாண்டுக் காலம் நான் உடல் நலத்தோடு இருந்ததுபோல், வேறு எந்தக் காலத்திலும் இருந்ததில்லை. அந்த காலத்தில் என் உழைப்புச் சக்தி மிகுதியாக இருந்தது. நாள் ஒன்றுக்கு எளிதாக நாற்பது கல் நடப்பேன். குறிப்பிட்ட ஒருநாள் ஐம்பது மைல் நடந்திருக்கிறேன். இவ்வாறு உடலுக்கு ஏற்பட்ட நலத்தையல்லாமல், பழ உணவு என் ஆன்ம வளர்ச்சிக்கும் உறுதுணையாயிருந்தது, என்று உறுதியாகக் கூறுவேன். இந்தியாவுக்குத் திரும்பி வந்த பிறகு, தனித்த பழ உணவு மட்டும் சாப்பிட முடியாமல் வேறு உணவும் சேர்த்துக் கொள்ளும்படி நேரிட்டது. அதை எப்போது நினைத்தாலும் எனக்கு வருத்தம் உண்டாகாமலிருப்பதில்லை" என்று கூறுகிறார்.

* * *

உணவைச் சமைப்பதில் நம் நாட்டில் இப்பொழுது வழங்கும் முறைகளைக் காந்தியடிகள் எப்போதும் சரியென்று ஒத்துக் கொள்வதில்லை. உண்ணவேண்டிய பொருள்களைத் தீயின் மீதிட்டு வேகவைக்கவே தேவையில்லை என்பது அவருடைய கருத்து. 'வெயிலில் கிடப்பதால் எவை பக்குவமாகி விடுகின்றனவோ, அவைகளே நாம் உண்பதற்குப் போதுமானவை. அவைகளை மீண்டும் அடுப்பிலிட்டு வேகவைப்பது அவற்றிலுள்ள சத்தைக் கெடுப்பதாகும்' என்று சொல்லுகிறார்.

ஒரு சமயம், தானியங்களை நீரில் ஊறவைத்து முளை கிளம்பச் செய்து முளைத்த தானியங்களைச் சாப்பிட்டு வருவோமானால் பெண்களுக்கு அடுப்பு ஊதும் வேலையே இல்லாமல் போய்விடும்; செலவும் மிச்சமாகும் என்ற

எண்ணம் காந்தியடிகளுக்கு ஏற்பட்டது. முளை கண்ட தானியங்களை நன்றாக மென்று தின்ன வேண்டியிருப்பதால் வேகவைத்த தானியத்தைவிடக் குறைவாகவே அவை செலவாகும் என்ற எண்ணமும் இருந்தது. உடனே ஊறவைத்த பச்சைத் தானியத்தை உணவாகமேற்கொள்ளத் தொடங்கி விட்டார். அவ்வளவு செரிக்காததோடு, வயிற்றுக் கடுப்பையும் உண்டாக்கி விட்டது. ஆனால் அடிகள் அதைப் பொருட்படுத்தாமல், மற்றவர்களிடமும் சொல்லாமல் தம் சோதனையிலேயே மூழ்கியிருந்தார். மலத்தில் குருதி கொட்டிக் கிடப்பதைக் கண்ட மகாதேவதேசாய் இதைப் பற்றி அடிகளிடம் வினவினார்.

"ஒன்றுமில்லை! சிறு சோதனை! துவக்கத்தில் கொஞ்சம் தொல்லையாகத்தான் இருக்கும். பிறகு சரியாகப் போய் விடும்! குருதியா கொட்டிக் கிடக்கிறது? நான் கவனிக்கவில்லை"—என்று கூறிவிட்டு அவர் ஆராய்ச்சியைத் தொடர்ந்து நடத்தினார். நிலைமை மிகவும் மோசமாகிக் கொண்டு வந்தது. சீதம் கொட்டத் தொடங்கி விட்டது. அடிகளின் உடலும் மெலிந்தது. என்றாலும் சோதனையைக் குரங்குப் பிடியாகப் பிடித்துக் கொண்டார். அவரை அச் சோதனையிலிருந்து மீட்பது பெரும்பாடாகிப் போய் விட்டது.

* * *

ஒரு தடவை காந்தியடிகள் இரவீந்திரநாத தாகூரைக் காண்பதற்காகச் சாந்தி நிகேதனம் சென்றிருந்தார். தாகூரினிடம் காந்தியடிகளுக்கு அளவு கடந்த மதிப்பும் பற்றும் உண்டு. காந்தியடிகளைக் கண்டதும் தாகூர் வரவேற்க எழுந்தார். தாகூர் உயர்ந்த வடிவமும் கம்பீரமான தோற்றமும் படைத்தவர். அவருடைய நீண்ட அங்கியும், வெண் தாடியும் அவருடைய தோற்றத்திற்கு இணையற்ற சிறப்பை அளித்தன. காந்தியடிகள் மெலிந்த உடலை உடையவர். உயரமானவர் என்றும் சொல்ல முடியாது. இடுப்

பில் ஒரு வேஷ்டியும், மேலே ஒரு அங்கியும், தலையில் காஷ்மீர் குல்லாயும் தரித்து எளிய தோற்றத்தோடு விளங்கினார். அவர் தாகூரோடு அமர்ந்திருந்ததானது சிங்கத்தின் அருகில் சுண்டெலியொன்று அமர்ந்திருப்பதுபோல் காணப்பட்டது. அவர்கள் அருகில் நண்பர்களெல்லாம் அமர்ந்திருந்தனர். உலகம் போற்றும் ஒரு கவிஞரும், ஒரு மகாத்மாவும் சந்தித்தால் சொல்லவேண்டுமா? ஏதோ பெரிய கருத்துக்களெல்லாம் அவர்களுடைய வாயில் புரண்டு ஓடப் போகின்றன என்று எதிர்பார்த்தார்கள் அங்கிருந்த நண்பர்கள்.

உணவு பரிமாறப்பட்டது. சமையற்காரன் பூரியும் மசாலும் கொண்டுவந்து வைத்தான். உடனே காந்தியடிகள் தம் உரையாடலைத் துவக்கினார். எதைப் பற்றி? அரசியலைப் பற்றியா? இலக்கியத்தைப் பற்றியா? அல்ல! உணவைப்பற்றி!

"குருதேவ்! (ஆம்! காந்தியடிகள் எப்போதும் தாகூரை அவ்வாறுதான் பெருமதிப்போடு அழைப்பார்) பூரியை எண்ணெயிலும், நெய்யிலும் போட்டுப் பொரிப்பதை நான் விரும்புவதில்லை. அவ்வாறு செய்வது நல்ல தானியத்தை நஞ்சாக்குவதாகும்" என்று கூறினார் மகாத்மா.

"இருக்கலாம். ஆனால் மிகவும் மிதமான நஞ்சு போலும் நான் என் வாழ்நாள் முழுவதும் பூரியைத் தின்று வருகிறேன் எனக்கொன்றும் அவ்வளவாக அது தீங்கு செய்யவில்லை," என்று சிரிக்காமல் பதிலுரைத்தார் கவிஞர்.

* * *

காகா காலேல்கர் முதன் முதலாக ஆசிரமத்தை அடைந்தபோது, அங்கு சமைக்கப்பட்ட அரிசி உணவு அவருக்குப் பிடிக்கவே இல்லை. அவர் காந்தியடிகளிடம், "பாபு! ஆசிரமத்து அரிசிச் சோறு களிமண்ணைப்போல் இருக்கிறது. என்னால் உண்ணவே முடியவில்லை" என்று சொன்னார்.

அதற்கு அடிகள், "பொதுவாக மக்கள் அரிசிச் சோறு மல்லிகை இதழைப் போன்று வெண்மையாக இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள். ஆலையில் கொடுத்து அரைப்பதால் அரிசியிலுள்ள சத்துப்பொருளான தவிடு நீக்கப்படுகிறது. அதைமேலும் நீரில் ஊறவைத்துப் பல தடவை கழுவி அதில் கொஞ்ச நஞ்சம் ஒட்டிக்கொண்டிருக்கும் சத்தையும் நீக்கி விடுகிறார்கள். பிறகு வேக வைத்து அதிலுள்ள எஞ்சிய சத்தான கஞ்சியையும் நீக்கி விடுகிறார்கள். இவ்வாறு உணவைச் சமைப்பதால் உணவு மிகவும் மென்மையாக ஆகிவிடுகிறது. அதனால் அளவுக்கு மீறி உண்ணவும் முடிகிறது. அளவுக்கு மீறி உண்பதால் பிள்ளையாரைப்போல் வயிறு பெருத்துத் தொங்கிவிழுந்து விடுகிறது. ஆனால் கைக்குத்தலரிசியை நீரில் நீண்ட நேரம் ஊறவைக்க வேண்டும். அதிலுள்ள தவிடு நீங்கிவிடாதவாறு கழுவவேண்டும். பின் கஞ்சியை வடித்துவிடாமல் சமைக்க வேண்டும். அவ்வாறு சமைத்த உணவு மிகவும் மென்மையாக இராது. அதிகச் சிரமம் எடுத்துக்கொண்டு மெல்ல வேண்டியிருப்பதால் உணவும் அதிகம் செல்லாது. தொந்தியும் விழாது. அரிசியிலுள்ள சத்துப் பொருளும் கெடாது" என்று அடிகள் கூறினார். அதன் பிறகு காகா கைக்குத்தல் அரிசியின் மேன்மையை உணர்ந்து பழக்கப் படுத்திக் கொண்டார்.

* * *

காந்தியடிகள் இளமையிலிருந்தே மலச்சிக்கலினால் தொல்லைப்பட்டவர். அவர் மலச்சிக்கலுக்கு எளிய மருந்து ஒன்று சொல்லுவார். "உப்பு, புளி, காரம் ஆகிய இம் மூன்றையும் நீக்கிவிட்டால் மலச்சிக்கலே வராது" என்று கூறுவார். எப்படி? இம் மூன்றையும் நீக்கிவிட்டு நாம் எதைத்தான் தின்பது?

இவருக்கு மிளகாயைக் கண்டாலே பிடிக்காது. திருவாளர். ஜே. சி. குமரப்பா 'யங் இந்தியா' பத்திரிகாசிரியரின்

பொறுப்பைச் சிறிது காலம் தாங்கி வந்தார். அப்போது குமரப்பா எழுதிய கட்டுரை ஒன்று காரசாரமானதாக இருந்தது. சற்று வேகமான சொற்களைப் போட்டு எழுதியிருந்தார். இதைப் பிடித்த ஓர் அஹிம்சாவாதி காந்தியாரிடம், "பாபு! குமரப்பா எழுதிய கட்டுரை சற்று வேகமாக இருக்கிறது அவர், எழுத்துத் துறையில் இன்னும் கொஞ்சம் அஹிம்சையைக் கடைப்பிடித்தால் நல்லது" என்று சொன்னார்.

அதற்குக் காந்தியடிகள் "குமரப்பா சென்னை வாசியல்லவா! மிளகாயின் காரம் அவர் குருதியிலும் கலந்து ஓடுகிறது" என்று சிரித்துக் கொண்டே சொன்னார்.

* * *

புதிய புதிய கருத்துக்களை அறிந்து கொள்ளவேண்டும் என்ற ஆர்வம் காந்தியடிகளுக்கு இருந்ததைப் போன்று விஞ்ஞானிகளுக்குக்கூட இருந்திருக்க முடியாது. ஆய்வுக் கூடம் எதுவும் அவருக்குக் கிடையாது. ஆனால் விடாமல் சோதனைகள் நடத்திக் கொண்டிருப்பார். அடிக்கடி உணவுகளை மாற்றி, அவற்றின் பலாபலன்களை அறிய முனைவார். காந்தியடிகள் மகன்வாடியில் இருந்தபோது அங்கு நிறைய வேப்ப மரங்கள் இருந்தன. தினமும் 10 தோலா வேப்பிலையை எடுத்துத் துவையல் செய்து சாப்பிட்டுச் சோதனை நடத்தினார். ஒருநாள் குமரப்பா காந்தியடிகளின் வலது புறமும், வல்லபாய் படேல் இடது புறமும், அமர்ந்து உணவு உண்டு கொண்டிருந்தனர். காந்தியடிகள் வேப்பந் துவையலோடு போராடிக் கொண்டிருந்தார். ஒரு தேக்கரண்டி துவையலை எடுத்துக் குமரப்பாவின் தட்டில் போட்டார். காந்தியடிகளின் தாயன்பை அருகிலிருந்து கண்ட வல்லபாய் படேல், "குமரப்பா! பாபு ஆட்டுப்பாலைக் குடிக்கத் தொடங்கியதோடு, அதனுடைய உணவையும் உண்ணத் தொடங்கி விட்டார்" என்று கூறிச் சிரித்தார்.

காந்தியடிகளுக்குக் காபியும் தேநீரும் பிடிக்காது அவர் தென்னுப்பிரிக்காவிலிருந்த போதே அப்பழக்கத்தை விட்டுவிட்டார். ஆனுல் மற்றவர்கள் விஷயத்தில் இப் பழக்கத்தை இவர் அவ்வளவாகக் கட்டுப்படுத்துவதில்லை. காந்தியடிகள் தம் நண்பர்களோடு அயலூருக்குப் பயணம் செய்யும்போது, புகைவண்டியில் அவர்கள் உட்கார்ந்த வண்ணம் தூங்குவார்கள். வண்டி ஒரு நிலையத்தை அடைந் ததும், உடனே காந்தியடிகள் கீழே இறங்கி நான்கைந்து கோப்பைத் தேநீரை வாங்கி ஒரு தட்டில் வைத்துக் கொண்டு வந்து நண்பர்களுக்குக் கொடுப்பார். காந்தி யடிகள் என்ன சொல்லுவாரோ என்று அஞ்சியே அந்த நண்பர்கள் தேநீர் அருந்தும் ஆசையைப் பொறுத்துக் கொண்டு வந்திருப்பார்கள். அடிகளே தேநீர் வாங்கிக் கொண்டு வந்து கொடுப்பதைக் கண்டதும் அவர்கள் வியப் பினுல் வாயடைத்துப் போவார்கள்.

*　　　*　　　*

காந்தியடிகள் நோயாளிகளுக்குச் சிறந்த செவிலித் தாய் என்பதை முன்பே படித்தோம். அவர் நாள்தோறும் நோயாளிகளைக் கண்டு சிறிது நேரம் பேசிச் சிரித்துக் கொண்டே அவர்களுக்குத் தொண்டு செய்வார். காந்தி யடிகளை நாள்தோறும் கண்டு அவருடைய நகைச்சுவை யைக் கேட்க வேண்டும் என்று எண்ணும் சிலர் வேண்டு மென்றே நோய்வாய்பட்டதாகக் கூறுவர்.

ஒருமுறை தமிழ்நாட்டைச் சேர்ந்த இளைஞன் ஒருவன் வயிற்றுப் போக்கினுல் அவதிப்பட்டான். அவனுக்கு ஆசிரமச் சாப்பாடு வந்த புதிதில் ஒத்துவரவில்லை. படுக்கை யில் கிடந்தான். நாள்தோறும் காந்தியடிகள் நேரில் வந்து அவன் நோயைப்பற்றி விசாரித்துச் செல்வது வழக்கம். நோய் தணிந்தது. அவ்விளைஞன் காபிப் பிரியன். ஆனுல் காபி ஆசிரமத்தில் கிடையாது. காபி குடிக்கக் கூடாது என்பது ஆசிரமச் சட்டங்களில் ஒன்று. நீண்ட நாள் காபி

குடிக்காத அவ்விளைஞனுக்குக் காபியின் ஏக்கம் அதிக மாயிற்று. அப்போது காந்தியடிகளின் மரச் செருப்பின் ஓசை 'டக் டக்' என்று கேட்டது. அடிகள் வந்தார்.

"என்ன தம்பி! உடல்நிலை நன்றாக இருக்குமென்று எண்ணுகிறேன். என்ன சாப்பிடுகிறாய்? உப்புமா வேண் டுமா? அல்லது தோசை வேண்டுமா?" என்று கேட்டார். உப்புமா, தோசை, இட்டிலி ஆகியவற்றில்தான் தமிழ் நாட்டுக்காரர்கள் உயிரையே வைத்துக் கொண்டிருக்கிறார் கள் என்று காந்தியடிகளுக்குத் தெரியும்.

"எனக்கு அவையெல்லாம் வேண்டாம் பாபு! ஒரு கோப்பைக் காபி இருந்தால் கொடுங்கள்" என்று கேட்டான் இளைஞன்.

"ஓ! நீ இரங்கத்தக்க குற்றவாளி! உனக்குக் காபி தானே வேண்டும்? அதோடு வாட்டிய ரொட்டித் துண்டு ஒன்றும் கொண்டுவருகிறேன்! காபிக்கும் அதற்கும் கன பொருத்தமாக இருக்கும்" என்று சிரித்துக்கொண்டு கூறினார்.

காந்தியடிகள் அவ்விடத்தை விட்டு அகன்றதும் இளைஞன் சிந்தித்தான். அப்போது இரண்டுங் கெட்டான் நேரம். உணவு விடுதியும் மூடப்பட்டிருக்கும். கஸ்தூரி பாயும் வேலையின் அலுப்பு நீங்க ஓய்வெடுத்துக் கொண் டிருப்பார். இந்தச் சமயத்தில் தனக்காக யார் காபி போட்டுக் கொடுக்கப் போகிறார்கள்? என்று எண்ணிக் கொண்டிருந்தான்.

"டக்! டக்!" என்ற ஒலி மீண்டும் கேட்டது! ஆம்! காந்தியடிகளே ஒரு தட்டில் காபியும் வாட்டிய ரொட்டியும் வைத்துக் கதர்த் துணி ஒன்றால் மூடி எடுத்து வந்தார்.

"பாபு! நான் உங்களுக்கு மிகவும் தொல்லை கொடுத்து விட்டேன். நீங்களே சுமந்துகொண்டு வருகிறீர்களே! வேறு யாரிடமாவது கொடுத்து அனுப்பினால் என்ன?" என்று கேட்டான் இளைஞன்.

"கஸ்தூரிபாய் வேலை செய்த அலுப்பால் உறங்கிக் கொண்டிருக்கிருள். அவளை எழுப்பித் தொல்லை கொடுக்க நான் விரும்பவில்லை. ஆகையினுல் தான் நானே இவற்றைத் தயாரித்தேன். சரி! சரி! ஆறிப்போன காபி சுவைக்காது. சாப்பிடு! நீ தென்னுட்டான்! என்னுடைய காபியை நீ பாராட்டுவாய் என்று எண்ணுகிறேன்!" என்று கூறி விட்டுக் காந்தியடிகள் சென்று விட்டார். அடிகளின் தாயுள்ளத்தை எண்ணிய வண்ணம் காபியை உறிஞ்சிக் குடித்தான் அவ்விளைஞன்.

ஆசிரமத்தில் காபியும் தேநீரும் யாரும் குடிப்பதில்லை என்ருலும், அவை இரண்டும் எப்போதும் தயாராக இருக்கும். தேநீர் தீனபந்து ஆண்ட்ருசுக்கு; காபி சக்கர வர்த்தி இராசகோபாலாச்சாரியாருக்கு.

## 10. உடை

"பம்பாயிலிருந்து நான் கொண்டு வந்த உடுப்புகள் ஆங்கில நாகரிகத்துக்கு ஏற்றவை யல்லவெனக் கருதிப் புதிய உடுப்புகள் வாங்கினேன். 19 ஷில்லிங் கொடுத்துச் சிறந்த தொப்பி யொன்றை வாங்கிக் கொண்டேன். அக் காலத்தில் அது மிகவும் அதிக விலையாகும். இதுவும் போதாதென்று இலண்டனில் நாகரிக வாழ்க்கைக்கே நிலைக்களமான பேண்ட் தெருவில், மாலை வேலையில் தரிக்கும் உடுப்பு ஒன்றுக்குப் பத்துப்பவுன் தொலைத்தேன். தயாளகுணம் படைத்த என் தமையனுருக்கு எழுதித் தங்கத்தினுலான இரட்டைக் கடிகாரச் சங்கிலி ஒன்று தருவித்தேன். கடையில் தயாராய்ச் செய்து விற்கும் கழுத்துச் சுருக்கு அணிவது நாகரிகமன்ருதலால், நானே கழுத்துச் சுருக்குத் தயாரிக்கக் கற்றுக் கொண்டேன். இந்தியாவில் நாவிதனிடம் சவரம் செய்து கொள்ளும் நாட்களிலன்றி; மற்ற நாட்களில் நான் கண்ணுடி பார்த்

தறியேன். இங்கு நாள்தோறும் நிலைக் கண்ணாடியின் முன்பு நின்று, தலைமயிரைச் சீவி ஒப்பனை செய்வதிலும், கழுத்துச் சுருக்கை நேர் செய்வதிலும் பத்து நிமிடம் செல வழித்தேன். எனது மயிர் மென்மையானதன்று. அதைச் சீவி ஒழுங்குபடுத்துவதற்கு நாள்தோறும் ஒரு பெரும் போராட்டமே நடத்தவேண்டி யிருந்தது. ஒவ்வொரு முறை தொப்பி வைத்துக் கொள்ளும் போதும், தொப்பியை எடுக்கும் போதும் கை தானாகவே தலைமயிரை நாடிற்று. இவ்வாறே நாகரிக மாந்தர் நடுவில் அமர்ந்திருக்கும் போதெல்லாம், கை தானாகவே தலைமயிரை அடிக்கடி ஒழுங்குபடுத்திக் கொண்டிருக்கும்" என்று காந்தியடிகள் சத்திய சோதனையில் குறிப்பிடுகின்றார். இதைப் படிக்கும் போது காந்தியடிகள் உடை அணிவதிலும், அலங்காரம் செய்து கொள்வதிலும் எவ்வளவு பேரார்வம் கொண்டிருந் தார் என்று புலப்படும்.

காந்தியடிகள் தென்னாப்பிரிக்காவில் வாழ்ந்தபோது கூட ஆடை அணிவதில் பெரிதும் அக்கறை காட்டினார். ஆங்கிலேயரைப் போல் பகட்டாக உடையணியா விட்டால், தென்னாப்பிரிக்க வெள்ளையர்கள் தம்மை மதிக்கமாட்டார் கள் என்று நினைத்தார். தென்னாப்பிரிக்க இந்தியருக்கு நன்மை புரிய வேண்டும் என்றால் கூட, ஆடம்பரமான மேனாட்டு உடை மிகவும் இன்றியமையாதது என்று கருதினார்.

தம் மனைவியையும், குழந்தைகளையும் தென்னாப்பிரிக் காவிற்கு அழைத்துச் சென்ற போது குசராத்தி வைசிய உடையில் அவர்களை அழைத்துச் செல்வது ஏற்றதல்ல என்று கருதினார். அவ்வாறு சென்றால் தென்னாப்பிரிக்கா வில் யாரும் மதிக்கமாட்டார்கள் என்று கருதினார். தென் னாப்பிரிக்காவில் இந்தியர்களை விடப் பார்சிகளுக்கு அதிக மதிப்பிருந்தது. எனவே கஸ்தூரிபாய்க்குப் பார்சி மாதர் அணியும் புடவையும், குழந்தைகளுக்குப் பார்சிகளைப்

போல் மேற்சட்டையும் காற்சட்டையும் வாங்கிக் கொடுத்து அணியுமாறு செய்தார். காலுறைகளும், மூடு செருப்பும் இன்றியமையாதவை என்று சொல்லத் தேவையில்லை. கஸ்தூரிபாய்க்கும் குழந்தைகளுக்கும் அவை பழக்கமாவதற்கு நீண்ட நாட்கள் சென்றன. செருப்பால் இறுக்கப் பட்டு பாதங்கள் நசுங்கிப் புண்ணாயின. என்றாலும் காந்தியடிகளின் வற்புறுத்தலுக்கும், பிடிவாதத்துக்கும் அஞ்சி அவர்கள் தொடர்ந்து அணிய வேண்டியதாயிற்று.

* * *

ஆனால் காலப் போக்கில் அவருடைய ஆடையைப் பற்றிய கொள்கை மாறுபடத் தொடங்கியது. தென்னாப்பிரிக்க உரிமைப் போராட்டத்தின் போது இந்தியக் கூலிகளோடு ஒன்றி வாழ நேரிட்டது. அதனால் அவர்களைப் போலவே எளிய உடையைத் தரிக்கத் தொடங்கினார். ஆனால் இதுவும் பாதி மேனாட்டு முறையில் இருந்தது. தென்னாப்பிரிக்காவை விட்டு இந்திய நாடு திரும்பிய போது, கத்தியவார் பிரமுகர்கள் உடுக்கும் உடை தரித்திருந்தார். இந்த உடையில் வேட்டி, உட்சட்டை, நீண்ட மேலங்கி, மேல் துண்டு, தலைப்பாகை ஆகியவை இருந்தன. பம்பாயிலிருந்து இராசகோட்டைக்குக் கிளம்பியபோது மூன்றாம் வகுப்பில் பயணம் செய்ய முடிவு செய்தார். அத்துடன் கத்தியவார் உடையில் நீண்ட மேலங்கியையும், மேல் துண்டையும் புறக்கணித்து விட்டார். வெப்ப நாட்களில் இவைகளை யெல்லாம் சுமந்துகொண்டு அலைவது இவருக்குப் பெரிய தொல்லையாகவும் பட்டது. அலங்காரமான தலைப்பாகையை விலக்கிவிட்டு அதற்குப் பதிலாக எட்டணா விலையுள்ள காஷ்மீர் குல்லா ஒன்று வாங்கி வைத்துக் கொண்டார். மூன்றாம் வகுப்பில் ஏழை மக்களோடு பயணம் செய்த போது, இம்மாதிரி எளிய உடுப்புத் தரிப்பது தான் ஏற்றது என்று கருதினார்.

கத்தியவார் நாட்டில் அக்காலத்தில் மக்கள் உடையின் மீது அதிக அக்கறை காட்டினர். கோட்டு அணியாமல் எவனாவது தெருவில் நடந்து சென்றால், அவன் சரியாக உடுத்தவில்லை என்று பார்ப்பவர்களெல்லாம் கேலி செய்வார்கள். வெப்பத்தாலும், வியர்வையாலும் உடல் உருளைக்கிழங்குபோல் வெந்தாலும், கோட்டைக் கழற்றக் கூடாது. கோட்டு அணியாமல் ஒரு மாணவன் பள்ளிக்குப் போகமுடியாது. அவனை உள்ளே நுழைய விடமாட்டார்கள். 'அரைகுறையான உடுப்புடன் பள்ளிக்கு வரக் கூடாது' என்பது விதி என்று எல்லோரும் சொல்லுவார்கள். கோட்டு அணியாமல் யாரும் வழக்குமன்றத்தில் போய் நிற்கமுடியாது. 'இம்மாதிரியான காட்டுமிராண்டிகளுக்கு இங்கே வேலையில்லை' என்று சொல்லிவிடுவார்கள். ஆனால் புரட்சிவீரரான காந்தியடிகள், கீழே நான்கு முழ வேட்டியும், மேலே ஒரு சட்டையும் மட்டும் அணிந்து வெளிவரத் தொடங்கினார்.

பார்த்தவர்கள் கேலி செய்தார்கள். காந்தியடிகள், "சிரிப்பவர்கள் சிரிக்கட்டும். உண்மையில் இந்த வெப்ப நாட்டில் இத்தனை ஆடைகளைச் சுமந்து திரிவதுதான் அநாகரிகம். மேலும் இந்தியா ஏழை நாடு. ஏழைகளின் நாட்டில் தேவைக்கு அதிகமான ஆடைகளை ஒருவன் அணிவது பாவம்!" என்று சொல்லுவார்.

* * *

இந்தியாவின் 'மான்செஸ்டர்' என்று போற்றப்படும் ஆமதாபாத்தில், நெசவாலைத் தொழிலாளர்கள் ஒருமுறை வேலைநிறுத்தம் செய்தனர். காந்தியடிகள் அவ்வேலை நிறுத்தத்தைத் தலைமை ஏற்று நடத்தி வந்தார். அத்தொழிலாளர்களின் அவலநிலை அடிகளின் உள்ளத்தை வாட்டியது. பிறர் ஆடையில்லாமல் வருந்தத் தாம் மட்டும் இவ்வளவு ஆடைகளை அணிவது அவருடைய மனச்சாட்சிக்கு

ஏற்றதாகத் தெரியவில்லை. காந்தியடிகள் அப்போது பெரிய தலைப்பாகை அணிந்து வந்தார்.

'இவ்வேழைப் பாட்டாளிகள் உடலை மூடிக்கொள்ளப் போதிய துணியில்லாதிருக்கையில், நான் மட்டும் இவ்வளவு ஆடைகளை ஏன் சுமந்து திரியவேண்டும்? என்னுடைய தலைப்பாகைத் துணியைக் கொண்டு பத்துக் குல்லாய்கள் தைக்கலாமே! அது பத்துப் பேருடைய தலையை மூடப் போதுமே!'' என்று அடிகள் எண்ணினர். அன்றிலிருந்து எளிய கதர்க்குல்லாய் அணியத் தொடங்கினர். காந்தியடிகளின் வெண்மையான கதர்க்குல்லாயை எல்லோரும் வேடிக்கையாகப் பார்த்தனர். அவர் தெருவில் சென்ற போது, ''அதோ! காந்தி அணிந்து செல்லுகிறாரே அது என்ன?'' என்று கேட்பார்கள். சில குறும்புக்காரர்கள் "இது குல்லாயா? அல்லது காசிப் பண்டாக்கள் அணியும் காது மூடியா?'' என்று கேலி செய்வார்கள். ஆனால் அக் குல்லாய் வாய்மையின் அறிகுறி என்று அடிகள் விளக்கம் தந்தார். வண்ணக் குல்லாய்களை அணிந்தால், அதில் படியும் அழுக்குத் தெரியாது. அதேபோலப் பொய்மை படிந்த உள்ளத்தவரும் வாய்மையாளராக வெளியில் தென்படுவர். வெள்ளைக் குல்லாயில் சிறிது அழுக்குப் படிந்தாலும் பளிச் சென்று தெரியும். உடனே அவ்வழுக்கைப் போக்கிக் கொள்ள வேண்டும் என்ற உணர்வும் ஏற்படும். அதே போல வாய்மையாளர், தம் உள்ளத்தில் சிறிது பொய்மை யழுக்குப் படிந்தாலும் உடனே போக்கிக் கொள்வர்.

* * *

1905—1906-ல் வங்காளத்தில் ஒரு தடவை சுதேசி இயக்கம் தீவிரமாகத் தொடங்கப்பட்டது. அப்போது சுதேசி இயக்கத்தின் நோக்கம், பிரிட்டிஷ் துணிகளை விலக்குவதுதான். இந்த இயக்கத்துக்கும் அப்போது சில இடையூறுகள் ஏற்பட்டன. அவற்றில் முக்கியமானது, பம்பாய்—ஆமதாபாத் ஆலைமுதலாளிகளின் பேராசையாகும்.

சுதேசி இயக்கத்தைப் பயன்படுத்திக் கொண்டு அவர்கள் ஆலைத் துணிகளின் விலைகளைக் கண்டபடி உயர்த்திக் கொள்ளை லாபம் சம்பாதிக்கத் தொடங்கினர். இதை உணர்ந்த காந்தியடிகள், ஏழைகளின் செல்வம் வீணாகப் பறிபோவதை எண்ணிக் கதர்த் திட்டத்தைத் துவக்கினார்.

காந்தியடிகள் 'கதர் பிரசாரம்' செய்வதற்காக ஒரு முறை தமிழ்நாடு வந்தார். மதுரையில் தங்கியிருந்தபோது, பலரும் அவரைக் காண வந்திருந்தனர். வந்தவர்களில் ஒரு நண்பர் வெளிநாட்டுத் துணியை அணிந்திருந்தார். நண்பரின் செயல் காந்தியடிகளின் உள்ளத்தை உறுத்தியது. தாம் மேற்கொண்ட கதர்ப் பிரசாரம் எதிர்பார்த்த அளவு பயன் விளைக்கவில்லை என்பதை உணர்ந்தார். அந்நண்பரைப் பார்த்து, 'நீர் என்னைப் பார்க்க வந்து என்ன பயன்? கதர் உடுக்காமல் வந்திருக்கிறீரே!' என்று அடிகள் வினவினார். ஆனால் அந்நண்பரோ, கதர் கிடைக்கவில்லை என்று கூறினார். இவ்விடை அடிகளின் உள்ளத்தைச் சிந்தனையில் சாய்த்தது. கதரின் பற்றுக்குறையைப்போக்கத் தம்முடைய ஆடையை இன்னும் குறைத்துக் கொள்ள விரும்பினார்.

தமிழகச் சிற்றூர்களின் வழிச் சென்றபோது, அங்குள்ள வயற்புறங்களில் வேலை செய்வோர் கோவணம் மட்டுமே அணிந்திருப்பதை அடிகள் கண்டார். இக்காட்சி அவருக்கு வியப்பாக இருந்தது. வடநாட்டில் உழவர்களும் கூடச் சட்டை அணிவது வழக்கம். தம் அருகில் இருந்த தமிழ் நண்பர்களை இதுபற்றிக் கேட்டார். "அக் கோவணத்தைத் தவிர வேறு ஆடை வாங்குவதற்கு அவர்களிடம் பணம் ஏது?" என்று அந்த நண்பர்கள் கூறினார்கள் சொந்தநாட்டுச் சோதரர்கள் மானங்காக்கப் போதிய துணியின்றி வாடத் தாம் மட்டும் வேட்டியும் சட்டையும் அணிவது அவருக்குப் பெரும் பாவமாகப் பட்டது. மனச்சாட்சி அவருள்ளத்தை வாள் கொண்டு அறுத்தது. அன்றிலிருந்து அவர் ஒரு முடிவுக்கு வந்தார். "இனி இடையில்

ஒரு முழத்துணியே அணிவேன். குளிர் காலத்தில் மட்டும் என் உடலை மூடிக்கொள்ள ஒரு போர்வையைப் பயன் படுத்துவேன்" என்று நண்பர்களிடம் கூறினர். இறக்கும் வரையில் அடிகள் அவ்வுறுதியிலிருந்து தவறவில்லை. கொடுங்குளிர் நாடான இங்கிலாந்து சென்றபோதும், அம் முழத் துண்டுடனேயே சென்ருர். இங்கிலாந்தின் பேரமைச்சராயிருந்த சர்ச்சில் கோமகஞர், அடிகளை 'அரை நிர்வாணப் பக்கிரி' (Half Naked Fakir) என்று இகழ்ந் தார். காந்தியடிகள் அவ்விகழ்ச்சியை ஒரு பொருட்டாகக் கருதவில்லை.

* * *

இந்திய மக்கள் மேலைநாட்டினரைப் போல் ஆடை அணிவது, இந்தியப் பண்பாட்டிற்கும், தட்பவெப்ப நிலைக் கும், தேசிய உணர்வுக்கும் மாறான செயல் என்று அடி களின் மனச்சாட்சி அறிவுறுத்தியது. சமயம் நேரும் போதெல்லாம் அடிகள் இக்கொள்கையை வற்புறுத்தத் தயங்கியதில்லை. காசியிலுள்ள இந்துப் பல்கலைக் கழகத் தைப் பற்றி எல்லாரும் அறிவர். அது சிறந்த பல்கலைக் கழகம் என இந்திய மக்களால் கருதப்படுகிறது. அதைத் தோற்றுவித்து முன்னுக்குக் கொண்டுவந்தவர் பழம்பெரும் தேசபக்தரும், பேரறிவாளருமான பண்டித மதன மோகன மாளவியா என்பவர். அப்பல்கலைக் கழகத்திற்கு நிதி திரட் டும் நோக்கத்தோடு அவர் ஒரு விழாக் கொண்டாடினர். அவ்விழாவுக்குத் திருவாட்டி அன்னிபெசன்ட் அம்மை யாரும், பல சுதேச மன்னர்களும் வந்திருந்தனர். சுதேச மன்னர்கள் அப்போது அணிந்திருந்த ஆடை அலங்காரம் அடிகளின் உள்ளத்தில் அருவருப்பை விளைவித்தது. அவர் கள் மேலைநாட்டு உடையணிந்திருந்ததோடு, இடையில் வைரமிழைத்த பட்டாக் கத்திகளும், கழுத்தில் முத்துக் கோவைகளும், நவமணிகள் பதித்த பொன்னரி மாலை களும் அணிந்திருந்தனர். அடிகள் அப்போது வெறும்

காந்தியாக இருந்த காலம். 'மகாத்மா'வாக இன்னும் மாற வில்லை.

பண்டித மாளவியா பலரையும் பேசுமாறு அழைத்தார். காந்தியடிகளின் முறை வந்தது. தம் சொற்பொழிவி னிடையே 'இச்சுதேச மன்னர்கள் ஏன் வெள்ளையரின் வேலைக்கார(Butler)ரைப் போல் விநோத உடையணிந்து விளங்க வேண்டும்? அவர்கள் தோற்றம் கூர்ச்சர நாட்டு வயல்வெளிகளில் திரியும் குரங்குகளைப் போல் இருக்கிறது' என்று கூறிவிட்டார். அன்னிபெசன்ட் அம்மையாருக்கு அடங்காத கோபம்! மன்னர்களின் கோபத்திற்குக் கேட்க வேண்டுமா? உடனே அரசர் கூட்டம் ஆத்திரத்தோடு வெளியேறியது. பண்டித மாளவியாவோ, 'அரசர் பெரு மக்களே! அரசர் பெருமக்களே! (Your Highness) என்று அலறியடித்துக்கொண்டு அரசர்களின் பின்னால் ஓடினார். ஆனால் அவர் அலறல் அரசர் பெருமக்களின் செவிகளுக்கு எட்டவில்லை.

* * *

'காந்தி சேவா சங்க' மாநாடு ஆண்டுக்கொரு முறை கூட்டப்படும். அம் மாநாடு இந்தியாவின் எப்பகுதியில் வேண்டுமானாலும் கூட்டப்படும். 31-3-38-ல் இம் மாநாடு ஒரிஸ்ஸா மாநிலத்திலுள்ள 'தேலாஸ்' என்ற இடத்தில் கூட்டப்பட்டது. இத் தேலாஸ் கட்டாக்கிற்கு அருகி லுள்ளது. திருவாளர் பட்டாபி சீதாராமய்யாவும் அம் மாநாட்டிற்கு வந்திருந்தார். அவர் மாநாட்டிற்குள் நுழைந் ததும், காந்தியடிகளை வணங்கிவிட்டு ஒரு நாற்காலியில் அமர்ந்துகொண்டார். சீதாராமய்யா அணிந்திருந்த மேல் வேட்டியில் ஒரு கிழிசல் இருந்தது. அது காந்தியடிகளின் கண்களில் பட்டுவிட்டது. உடனே, "உம்முடைய மேல் வேட்டியில் உள்ள கிழிசலை நான் விரும்பவில்லை. கிழிசல் வறுமையின் அறிகுறியல்ல. அது மனைவியில்லாததற்கோ, அல்லது பொறுப்பற்ற மனைவிக்கோ, அல்லது சோம்பேறித்

தனத்துக்கோ அடையாளம்" என்று ஒரு தாளில் எழுதிச் சீதாராமய்யாவுக்குக் கொடுத்தனுப்பினார். அதைப் படித்த சீதாராமய்யா, "இம்மேல் துண்டு நாளை இரண்டாகக் கிழிக்கப்பட்டு இரண்டு துண்டுகளாகப் பயன்படப் போகிறது; அவ்விரு துண்டுகளும் பின்னர் தலையணை உறைகளாக மாறும்; அத் தலையணை உறைகளும் கொஞ்சநாள் பயன்பட்ட பிறகு இரண்டு கைக்குட்டைகளாகும்; பிறகு அவ்விரண்டு கைக்குட்டைகளும் குழந்தைகளின் இடையைப் போர்த்தும் சிறு துணிகளாக மாறும்" என்று கூறிச் சிரித்தார்.

# 11. தொழில்

காந்தியடிகள் ஒரு முறை ஜோகன்னஸ்பர்க்கிலிருந்து டர்பன் நகருக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தார். அப்போது திருவாளர் போலக் என்பவர் அவரை வண்டியேற்றி விடுவதற்காகப் புகைவண்டி நிலையத்திற்கு வந்திருந்தார் அப்போது அவர் கையில் "கடைசி மனிதன் நல்வாழ்வு வரை (Unto This Last) என்ற நூல் இருந்தது. அது ஆங்கிலப் பேரறிஞரான இரஸ்கின் என்பவரால் எழுதப்பட்டது புகைவண்டிப் பயணத்தின்போது படிப்பதற்காக அந் நூலைக் காந்தியடிகளிடம் கொடுத்தார் போலக். காந்தியடிகள் அதைப் படிக்கத் தொடங்கிய பிறகு நிறுத்தவே இல்லை. காந்தியடிகளின் உளப் போக்கை அந் நூல் கொண்டதாக விளங்கியது. மக்கள் வாழ்வின் குறிக்கோள்கள் எப்படி இருக்க வேண்டும் என்று அது தெளிவுபடுத்திக் கூறியது. அந் நூலில் குறிப்பிடப்பட்டிருந்த மூன்று கொள்கைகள் முக்கியமானவை. அவை பின்வருமாறு :—

1. தனி மனிதனின் நன்மை பொதுமக்களின் நன்மையில் அடங்கியுள்ளது.

2. வழக்கறிஞன் உழைப்பும், நாவிதன் உழைப்பும் ஒரே பெறுமானமுள்ளவைதான். ஏனெனில், அனைவருக்கும் தங்கள் உழைப்பினால் வாழ்க்கைக்குச் சம்பாதிக்கும் உரிமை சமமாக உண்டு.

3. உடலை உழைத்து வாழும் வாழ்வே, அதாவது குடியானவனுடைய அல்லது பாட்டாளியின் வாழ்க்கையே மேன்மையான வாழ்க்கையாகும்.

முதல் இரு கொள்கைகளும் ஏற்கனவே காந்தியடிகளால் நன்கு அறியப்பட்டவை. ஆனால் மூன்றாவது கொள்கை அவருக்குப் புதிதாக இருந்தது. ஆயினும் அது உண்மை—சிறந்த உண்மை—என்பது இப்போது அவருக்குத் தெளிவாயிற்று. அந்தக் கொள்கைக்கு இணங்கத் தம் வாழ்க்கையைச் செப்பனிடுவது பற்றிச் சிந்திக்கத் தொடங்கினார். அன்றிரவெல்லாம் புகைவண்டிப் பயணத்தின்போது உறங்காமல் சிந்தனை செய்து கொண்டிருந்தார். சிந்தனை டர்பன் நகரம் சென்றவுடன் செயலாக உருக்கொண்டது.

* * *

காந்தியடிகள் தென்னாப்பிரிக்காவில் வாழ்ந்தபோது, துவக்கத்தில் மேநாட்டு நாகரிகத்தின்பால் மிகவும் விருப்புக் கொண்டு வாழ்ந்தார். தொண்டில் பற்று அதிகம் ஆக ஆக, ஆடம்பரத்தில் வெறுப்பு மிகுந்தது. வாழ்க்கையை எளிமைப்படுத்தத் தொடங்கினார். வண்ணானிடம் துணிகளைச் சலவைக்குப் போடுவதில் பணம் அதிகச் செலவானதுடன், சமயத்தில் துணிகள் வருவதில்லையாதலால் நிறையச் சட்டை துணிமணிகள் வேண்டியிருந்தன. எனவே சலவைச் சாமான்களும், இஸ்திரிப் பெட்டியும் வாங்கி வைத்துக்கொண்டு காந்தியடிகள் தாமே துணிகளை வெளுத்துக் கொள்ளத் தொடங்கினார். முதன்முதலில் சலவை சரியாக வரவில்லை. கழுத்துப் பட்டைக்குப் பெட்டி போட்டதில் பசை மாவு அதில் அதிகமாக ஒட்டிக்கொண்டு, வழக்கு மன்றத்துக்குப் போன பிறகு உதிர்ந்து விழத்

தொடங்கியது. மற்ற வழக்கறிஞர்கள் இதன் பொருட்டுக் காந்தியடிகளைப் பார்த்துச் சிரித்தார்கள். ஆனால் கேலிக்கும் கிண்டலுக்கும் அஞ்சும் வழக்கம் காந்தியடிகளுக்கு எப்போதுமே கிடையாது. "என் கழுத்துப் பட்டியை நானே சலவை செய்து, பெட்டி போட்டதில் இப்படி மா உதிர்கிறது. அது உங்களுடைய குதூகலத்துக்குக் காரணமாயிருப்பதில் எனக்கு இருமடங்கு மகிழ்ச்சி" என்று சொன்னார் காந்தியடிகள்.

" எதற்காக நீங்களே சலவை செய்துகொள்ள வேண்டும்? இந்த ஊரில் சலவைச் சாலை இல்லையா?" என்று நண்பர்கள் கேட்டார்கள்.

"இருக்கின்றன! அதனால் என்ன? நம்முடைய சொந்த வேலைகளுக்கு எதற்காகப் பிறரை நம்பியிருக்க வேண்டும்? நம்முடைய வேலைகளை நாமே செய்து கொள்வதுதானே நல்லது?" என்று காந்தியடிகள் கூறினார்.

கொஞ்ச நாட்களில் காந்தியடிகள் சலவைக் கலையில் கைதேர்ந்தவராகிவிட்டார். பின்னால் ஒரு சமயம் திருவாளர் கோகலே தென்னாப்பிரிக்கா வந்திருந்தார். கோகலேயிடம் அவர் அரசியற் குருவான ரானடே அன்பளிப்பாகக் கொடுத்த மேல் துண்டு ஒன்றிருந்தது. அது சரிகைக் கரையிட்ட அழகிய துண்டு. சிறப்பான கூட்டங்களின்போதும், நிகழ்ச்சிகளின்போதும் அந்தத் துண்டை அணிந்து கொள்வது கோகலேயின் வழக்கம். தென்னாப்பிரிக்காவில் ஜொகன்னஸ்பர்க் இந்தியர்கள் கோகலேவுக்கு ஒரு விருந்து ஏற்பாடு செய்திருந்தார்கள். அதற்கு மேற்படி துண்டை அணிந்து செல்ல விரும்பினார். ஆனால் அத்துண்டு மடிப்புக் கலைந்து போயிருந்தது. இது குறித்துக் கோகலே அடைந்த கவலையைத் தெரிந்துகொண்டு, தம்முடைய கைவரிசையைக் காட்டுவதாகச் சொன்னார்.

"அரசியல் வேலைகளுக்கும், வழக்கறிஞர் தொழிலுக்கும் உம்மை நம்பலாம். ஆனால் சலவைத் தொழிலுக்கு

எப்படி நம்பமுடியும்? என் சரிகைத் துண்டைக் குட்டிச் சுவராக்கிவிட்டால் என் செய்வேன்?'' என்றார் கோகலே.

காந்தியடிகள் மேலும் பிடிவாதம் பிடித்துத் துண்டை வாங்கிக் கொண்டார். சலவைத் தொழிலாளியைவிட நன்றாய்ப் பெட்டிபோட்டு மடித்துக் கொடுத்திருப்பதாகக் கோகலே மகிழ்ச்சியுடன் பாராட்டுரை வழங்கினார்.

ஒரு தடவை காந்தியடிகள் முடிவெட்டும் நிலையமொன்றுக்குச் சென்றார். அங்கிருந்த வெள்ளைக்கார நாவிதன் கருப்பரான காந்தியடிகளுக்குச் சிகைவெட்ட மறுத்துவிட்டான். உடனே காந்தியடிகள் தாமே மயிர் வெட்டிக் கொண்டால் என்ன என்று எண்ணினார். பிறகு சலவைத் தொழிலைப் போலவே தலைமயிர் வெட்டிக்கொள்ளும் வேலையையும் கற்றுக்கொள்ளத் தொடங்கினார். முதலில் இந்தச் செயலும், காந்தியடிகளை அவருடைய நண்பர்களின் நகைப்புக்கு ஆளாக்கியது. "உமது மயிருக்கு என்ன ஆபத்து வந்துவிட்டது? எலி கடித்துவிட்டதா?'' என்று நண்பர்கள் சிரித்துக்கொண்டே கேட்டார்கள். ஆனால் கொஞ்ச நாளைக்குள், தாமே முடி வெட்டிக் கொள்வதிலும் காந்தியடிகள் நல்ல திறமையடைந்தார்.

* * *

காந்தியடிகள் தென்னாப்பிரிக்காவிலிருந்து இரண்டாம் முறையாக இந்தியா திரும்பி வந்திருந்தார். 1901-ஆம் ஆண்டில் கல்கத்தாவில் அகில இந்திய காங்கிரஸ் மாநாடு கூடியது. 'பம்பாயின் முடிசூடா மன்னர்' என்றும், 'பம்பாயின் சிங்கம்' என்றும் பாராட்டப்பெற்ற திரு. பிரோஸிஷா மேத்தாவின் தலைமைச் சீடரான திரு. டின்சா வாச்சா அம் மாநாட்டிற்குத் தலைமை தாங்கினார். காந்தியடிகளும் அம் மாநாட்டில் கலந்துகொள்ளச் சென்றார். மாநாட்டுப் பிரதிநிதிகள் தங்குவதற்கென்று, ரிப்பன் கலாசாலைக் கட்டிடம் ஏற்பாடாகியிருந்தது. அவ் விடுதி மிகவும் மோசமான நிலையில் இருந்தது. சுகாதார ஏற்பாடுகள் நல்ல முறையில்

செய்யப்படவில்லை. எங்குப் பார்த்தாலும் குப்பை கூளங்கள்! கண்ட இடத்தில் எச்சில் துப்பப்பட்டிருந்தது. கழிப்பறைகள் மிகவும் குறைவு! தீ நாற்றம் மிகுதியாக இருந்தது! கழிப்பறைகளை நன்கு சுத்தம் செய்யவில்லை. காங்கிரஸ் விடுதியில் ஊழியம் செய்வதற்கென்று அமர்த்தப்பட்ட தொண்டர்களுக்கோ தொண்டு என்றால் என்னவென்று தெரியாது. ஒரு தொண்டரிடம் ஏதேனும் சொன்னால், அவர் அடுத்த தொண்டரிடம் சொல்வார். அவர் மூன்றாமவரிடம் சொல்வார். இறுதியில் ஒரு வேலையும் நடைபெறாது. போதாததற்குத் தொண்டர்கள் தங்களுக்குள் அடிக்கடி சச்சரவிட்டுக் கொள்வார்கள். மாநாட்டுக்கு வந்திருந்த பிரதிநிதிகள் யாது செய்வதென்று தெரியாமல் விழித்துக் கொண்டிருந்தனர்.

தமிழ் நாட்டிலிருந்து வந்திருந்த தொண்டர்களோ, தங்களுக்கென்று தனிச் சமையலறைகளை அமைத்துக் கொண்டு, நாற்புறமும் அதைத் தட்டியினால் மூடியிருந்தனர். தாங்கள் உண்பதைப் பிறர் பார்த்துவிட்டால் தீட்டு என்று அவ்வாசாரக்காரச் சனாதனிகள் நினைத்தனர். அவ்வறைக்குள் செல்வோர் மூச்சுவிட முடியாமல் திக்குமுக்காட வேண்டியதுதான். அவர்களின் அறியாமையைக் கண்டு அடிகள் வருந்தினார்.

காங்கிரஸ் விடுதிகளைத் தூய்மைப்படுத்துவது சம்பந்தமாக அடிகள் தொண்டர்களோடு பேசிப் பார்த்தார். அவர்கள் வழிக்கு வருவதாகக் காணோம். "இந்தக் குப்பைகளை எல்லாம் அப்புறப்படுத்த வேண்டாமா?" என்று கேட்டார்.

"அதெல்லாம் தோட்டியின் வேலை" என்று தொண்டர்கள் கண்ணை மூடிக்கொண்டு பதில் சொன்னார்கள். பிறகு ஒரு விளக்குமாறு கொடுக்கும்படி கேட்டார். தொண்டர்கள் அவ்வுதவியும் செய்யவில்லை. காந்தியடிகள் எப்படியோ ஒரு விளக்குமாற்றைத் தேடிப் பிடித்தார்.

குப்பைகளைக் கூட்டி வாரி எறிந்தார். அப்பொழுதும் தொண்டர்கள் அருகில் வரவில்லை! அதுதான் தோட்டியின் வேலையாயிற்றே! இம் மாநாட்டு விடுதியைப் பற்றிக் காந்தியடிகள் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்:—

"பிரதிநிதிகளில் சிலர் தங்கள் அறைகளின் வெளிப்புறத்துத் தாழ்வாரத்தை இரவு நேரத்தில் அசுத்தம் செய்யவும் பின்வாங்கவில்லை. காலையில் தொண்டர்களிடம் இத்தகைய அசுத்தமான இடங்களைக் காட்டினேன். அவ்விடங்களைத் தூய்மைப்படுத்த எவரும் முன்வரவில்லை. அந்தக் கௌரவத்தை என்னுடன் பங்கிட்டுக்கொள்ள ஒருவரும் தயாராயில்லை எனக் கண்டேன். இப்போது நிலைமை பெரிதும் முன்னேற்றமடைந்திருக்கிறது. ஆனால் இன்றுகூட காங்கிரஸ் விடுதியில் கண்டவிடமெல்லாம் அசுத்தமாக்கும் பிரதிநிதிகள் இல்லாமல் போகவில்லை. அவ்வாறே, அந்த இடங்களைச் சுத்தப்படுத்த எந்தத் தொண்டரும் முன்வருவதில்லை... ,

காங்கிரஸ் மாநாடு இன்னும் சில தினங்கள் கல்கத்தாவில் நீடித்திருக்குமானால், கொள்ளை நோய் பரவுவதற்குப் சாதகமான நிலைமை ஏற்படும் என்பதைக் கண்டேன்."

காந்தியடிகள் மாநாடு நடப்பதற்கு இரண்டு நாள் முன்னதாகவே சென்றுவிட்டார். அந்த இரண்டு நாட்களும் காங்கிரஸ் அலுவலகத்தில் தம்மாலியன்ற வேலைகளைச் செய்ய விரும்பினார். மாநாட்டுச் செயலாளராக விளங்கிய திருவாளர் கோஷாலிடம் சென்றார்.

"உமக்கு என்ன வேலை கொடுக்கட்டும்? குமஸ்தா வேலைதான் கொடுக்கலாம். செய்கிறீரா?" என்று கேட்டார். காந்தியடிகள் மகிழ்ச்சியுடன் செய்வதாகச் சொன்னார்.

"அதோ ஒரு கட்டுக் கடிதங்கள் கிடக்கின்றன. அவற்றைப் பிரித்துப் பாருங்கள். பெரும்பாலும் பயனற்ற

செய்திகளே இருக்கும். அவற்றைப் படித்துப் பார்த்து, முக்கியமானவற்றிற்கு மட்டும் பதில் எழுத வேண்டும்" என்றார் கோஷால். காந்தியடிகள் அவ் வேலையில் ஈடுபட்டார். நல்ல முறையில் செய்து முடித்தார்.

அதற்குள் காந்தியடிகளைப் பற்றிப் பிறரிடம் விசாரித்து அறிந்துகொண்ட கோஷால், "அடடா! உமக்குக் குமஸ்தா வேலை கொடுத்தேனே!" என்று வருத்தப்பட்டார்.

"அதைப் பற்றிக் கவலை வேண்டாம்! காங்கிரஸ் தொண்டு எதுவானால் என்ன? இம்மாதிரி சில்லறை வேலைகளில்தான் எனக்கு அநுபவம் வேண்டும்!" என்றார் காந்தியடிகள்.

* * *

ஒரு நாள் கிராம சேவை செய்யும் தொண்டர்கள் சிலர் காந்தியடிகளைக் காண வந்தார்கள். "முதலில் கிராமத்தைத் தூய்மையாக வைத்துக்கொள்ள வேண்டும். தோட்டி வேலைகூட நீங்களே செய்ய வேண்டும்" என்று காந்தியடிகள் அவர்களைப் பார்த்துச் சொன்னார்.

"தோட்டி வேலை செய்தால் கிராம மக்கள் பிறகு நம்மை மதிக்கமாட்டார்கள். ஆகையினால் கிராமத்தில் பிற தொண்டுகளைச் செய்ய முடியாத நிலைமை ஏற்பட்டுவிடும்" என்று அந்தத் தொண்டர்கள் அடிகளிடம் கூறினார்கள். காந்தியடிகள் அவர்களுடைய கூற்றை ஒப்புக்கொள்ளவில்லை. அடுத்த நாளிலிருந்து காலையில் எழுந்தவுடன், ஒரு தோண்டியும் சிறு மண்வெட்டியும் எடுத்துக்கொண்டு கிளம்புவார். அருகிலுள்ள கிராமத்திற்குச் செல்வார். பாதையில் கிடக்கும் மலத்தையும், அசுத்தங்களையும் தோண்டியில் எடுத்துப் போட்டுக்கொள்வார். பிறகு அவைகளைக் கொணர்ந்து ஆசிரமத்திலுள்ள குழியில் கொட்டி எருவாக்குவார்.

* * *

அகில இந்திய கிராமக் கைத்தொழில் இயக்கம் ஆரம்பிக்கப்பட்டபோது, அதன் கொள்கைகளை நடைமுறையில் விளக்குவதற்காகக் காந்தியடிகள் மகன்வாடிக்கு வந்து தங்கியிருந்தார். அன்றாட ஆசிரம வேலைகளில் அங்கிருப்போர் எல்லோரும் பங்கு கொள்ள வேண்டுமென்பது விதி. ஆசிரமத்திலுள்ள சமையல் கூடத்தையும், அங்குள்ள தட்டுகளையும், பிற சாமான்களையும் துலக்குவது அப்பணிகளில் ஒன்று. ஒரு நாள் காந்தியடிகளின் முறை வந்தது. அவருக்குத் துணையாளராகக் குமரப்பாவும் இருந்தார். இருவரும் தேங்காய் நாரையும், சாம்பலையும், மண்ணையும் கையில் எடுத்துக்கொண்டு பாத்திரங்களைத் துலக்கத் தொடங்கினர். அப்போது அன்னை கஸ்தூரிபாய் அப் பக்கமாக வந்தார். உலகம் போற்றும் மகாத்மாவாகிய தம் கணவர், முழங்கை வரை சேற்றிலே தோய்த்துக் கொண்டு அப்பணியைச் செய்வதை அவரால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை.

"ஏன்? இவ் வேலையை நீங்களே செய்ய வேண்டுமா? வேறு யாரையாவது செய்யச் சொன்னால் ஆகாதா? உங்களுக்கு எவ்வளவோ வேறு வேலைகள் இருக்கலாம். அதைப் போய்ச் செய்யுங்கள். கொடுங்கள் இப்படி!" என்று சொல்லி வெடுக்கெனப் பாத்திரத்தைக் காந்தியடிகளிடமிருந்து பிடுங்கித் தாம் துலக்கத் தொடங்கினார்.

காந்தியடிகள் உடனே சிரித்த வண்ணம், "குமரப்பா! நீர் மிகவும் கொடுத்து வைத்தவர்! உம்மை இவ்வாறு மிரட்டிப் பணிய வைக்க உமக்கு ஒரு மனைவியில்லை; என்னுடைய வேலையைச் செய்ய என் மனைவியைப் பிரதிநிதியாக ஏற்படுத்துகிறேன். மன்னித்து விடு!" என்று கூறிவிட்டு, அவ்விடத்தை விட்டு அகன்றார்.

* * *

'குஜராத் சபா' என்ற கழகம், குஜராத்தி மக்களிடம் அரசியல், பொருளியல், சமூகவியல் வளர்ச்சிக்குப் பாடு

படும் நோக்கத்துடன் ஆமதாபாத்தில் துவக்கப்பட்ட தாகும். குஜராத்தி மாநிலக் காங்கிரஸ் குழுவாகவும் அந்தச் சபை செயலாற்றியது. குஜராத்தி மக்களின் குறைகளை அழகிய ஆங்கில நடையில் அரசியலாருக்கு அடிக்கடி விண்ணப்பங்களின் மூலம் நினைவுபடுத்திக் கொண்டிருப்பதுதான் அக்காலத்தில் அச் சபையின் தொண்டாகக் கருதப்பட்டது.

காந்தியடிகள் பீகாரிலுள்ள மோதிகாரி மாவட்ட நீதி பதியின் ஆணைக்குக் கீழ்ப்படிய மறுத்த செயல், இந்திய நாட்டில் ஒரு விழிப்பை உண்டாக்கியது. இந்திய நாடே காந்தியடிகளின் அஞ்சாமையைக் கண்டு வியந்தது. காந்தி யடிகளின் ஆங்கில நடை ஆங்கிலேயரே போற்றும் சிறப்பு வாய்ந்தது. எனவே அஞ்சாமையும், எழுத்தாற்றலும் மிக்க காந்தியடிகளைத் தம்முடைய குஜராத்தி சபைக்குத் தலைவராக ஏற்றுக் கொள்ளக் குஜராத்திமக்கள் விரும் பினர். அச்சபையின் செயலாளராக விளங்கிய ஜி. வி. மாவ் லாங்கர் 1917-ஆம் ஆண்டு காந்தியடிகளை அண்மி, மேற்படி சபைக்குத் தலைவராக விளங்கும்படி கேட்டுக் கொண்டார். காந்தியடிகளும் அவ்வேண்டுகோளுக்கு இசைந்தார். அவர் தலைமை ஏற்றவுடன் அச்சபை மிகவும் ஊக்கத்துடன் பணி புரியத் தொடங்கியது.

சபையின் கடிதப் போக்குவரத்துக்காக 'லெட்டர் பேட்' அச்சிடப்பட்டது. அதின் வலது தலைப்பில் தலைவரின் பெயரும், மற்ற பொறுப்பாளர்களின் பெயரும் அச்சிடுவது முறையல்லவா? அதையொட்டி மாவ்லங்கர், "மோகன தாஸ் கே. காந்தி அவர்கள், பார்-அட்-லா" என்று அச்சிட்டார். அவ்வாறு அச்சிட்ட கடிதத்தைக் கண்ட காந்தியடிகள், "மாவ்லங்கர்! 'ஏன் பார்-அட்-லா' என்று என் பெயரோடு சேர்த்து அச்சிட்டிருக்கிறாய்?" என்று கேட்டார்.

"ஏன்? நீங்கள் பார்-அட்-லா அல்லவா?" என்று மாவ் லங்கர் கேட்டார்.

"ஆமாம்! நான் ஒரு காலத்தில் பாரிஸ்டராக இருந் தேன். ஆனால் இப்போது வழக்கறிஞனாகவா பணியாற்று கிறேன்? இல்லை. நான் ஒரு நெசவாளி; உழவன்; அதுவும் தாழ்த்தப்பட்ட குலத்தைச் சேர்ந்த உழவன்" என்று கூறிச் சிரித்தார்.

* * *

இப்போதுள்ள சபர்மதி ஆசிரமம் துவக்கத்தில் மிகவும் எளிய முறையில் துவங்கப்பட்டது. அப்போது கட்டிடம் எதுவும் கிடையாது. சில கூடாரங்களே இருந்தன. ஒரு முறை திரு. மாவ்லங்கர் குஜராத் சபா சம்பந்தமாகக் கலந்து பேசுவதற்காகச் சபர்மதி சென்றிருந்தார். அன்று இரவு அங்கேயே தங்க வேண்டியநிலை ஏற்பட்டது. மாவ் லங்கருக்கு ஒரு படுக்கை கொடுக்கப்பட்டது. ஒரு கூடாரத் தில் அதை விரித்து உறங்கினார். காலையில் எழுந்ததும் அப் படுக்கையைச் சுருட்டினார். அதை எங்கு கொண்டு போய் வைப்பதென்று அவருக்குத் தெரியவில்லை. அதைப் பற்றிக் கேட்பதற்காக ஆசிரமத்தின் அலுவலகத்திற்குச் சென்றார். விசாரித்து விட்டுத் திரும்பினார். ஆனால் எதிரில் ஒருமனிதர், தம்முடைய படுக்கையைத் தூக்கித் தலையின் மேல் வைத்துக் கொண்டு வருவதைக் கண்டார் மாவ்லங்கர். அம் மனிதர் வேறு யாருமல்லர். காந்தியடிகளே! மாவ் லங்கர் வியப்பினால் வாயடைத்துப் போய் நின்றார். ஓடிப் போய் காந்தியடிகளிடம் அப்படுக்கையை வாங்கிக் கொள் ளக்கூட அவருக்கு நினைவு வரவில்லை.

* * *

திருவாளர் கோகலே 1912-ஆம் ஆண்டு தென்னாப் பிரிக்க இந்தியரின் குறைகளை ஆய்வதற்காக வந்திருந்தார். அப்போது காந்தியடிகள் தம் நண்பர்களோடு போனிக்ஸ் ஆசிரமத்தில் தங்கியிருந்தார். அங்கு கோகலேயைத் தங்க

வைக்கப் போதிய வசதியில்லாத காரணத்தால், ஒரு இந்திய வணிகரின் மாளிகையில் தங்க ஏற்பாடு செய்தார். அவருடைய எல்லாத் தேவைகளையும் காந்தியடிகள் மிகவும் நுணுக்கமாகக் கவனித்து வந்தார். திரு. கோகலே அப்போது சக்கரை நோயி(diabetes)னால் வருந்திக் கொண்டிருந்தார். எனவே அவருக்கு உணவு தயாரிக்கும் பணியில் மிகவும் எச்சரிக்கையோடு காந்தியடிகள் இருந்தார். தம் நண்பரான திருவாளர் போலக்கின் மனைவியான 'மில்லி' யின் துணைக் கொண்டு தாமே ரொட்டியையும், உருளைக் கிழங்கையும் நெருப்பின் மேலிட்டுச் சுட்டு எடுத்தார். ஒரு பொருளை எண்ணெயில் பொரிப்பதை விட, அல்லது நீரில் வேக வைப்பதை விட அனலில் போட்டு வேகவைத்தால் அதிலுள்ள சர்க்கரைப் பொருள் (starch) அதிகமாக வெளியேற்றப்படும். இதை உணர்ந்துதான் காந்தியடிகள் தம் இடையருத அரசியல் பணிகளினிடையிலும் இச்சிறு வேலையை அன்புடன் மேற்கொண்டார்.

* * *

1909-ஆம் ஆண்டு இலண்டன் மாநகரில் வாழ்ந்த இந்திய மாணவர்களெல்லாம் ஒன்று கூடிக் காந்தியடிகளுக்கு ஒரு விருந்தளிக்க ஏற்பாடு செய்தனர். அவர்களில் குறிப்பிடத் தக்கவர்கள் விநாயக தாமோதர சவர்க்கார், வ. வெ. சுப்பிரமணிய அய்யர், டாக்டர் தி. சே. சௌ. இராசன் ஆகியோர் குறிப்பிடத் தக்கவர்கள். காந்தியடிகள் அப்போது தென்னாப்பிரிக்காவில் வழக்கறிஞராகப் பணியாற்றிக் கொண்டிருந்தார். அதோடு அரசியல் தொண்டிலும் ஈடுபட்டுத் தென்னாப்பிரிக்க இந்தியரின் நலனுக்காகவும் பாடுபட்டு வந்தார். அவருடைய புகழ் இங்கிலாந்திலும் பரவி யிருந்தது. வ. வெ. சு. அய்யரைத் தவிர மற்றவர் யாரும் காந்தியடிகளைக் கண்டதில்லை.

காந்தியடிகளின் விருப்பத்திற்கிணங்க அவ்விருந்தில் மரக்கறி உணவே பரிமாறுவதென்று ஏற்பாடு செய்யப்

பட்டது. அதனால் ஓர் உணவு விடுதியில் இரண்டு பெரிய அறைகளை வாடகைக்கு எடுத்துக் கொண்டு உணவு தயாரிக்கத் தொடங்கினர். பிற்பகல் 2 மணிக்கு ஒரு மனிதர் வந்தார். எளியதோற்றமும் மலர்ந்த முகமும் வாய்க்கப் பெற்ற அவர் விருப்பத்தோடு அம் மாணவர்களின் பணியில் கலந்து கொண்டு அவர்களுக்கு ஒத்துழைக்கத் தொடங்கினர். பாத்திரங்களைத் துலக்கினர்; காய்கறிகள் நறுக்கினர்; வேறு பல அலுவல்களையும் ஊக்கத்தோடு செய்தார். அம்மனிதரின் ஒத்துழைப்பைக் கண்டு மாணவர்கள் பெரிதும் மகிழ்ந்தனர்.

விருந்து துவக்கப்படுவதற்கு ஒருமணி நேரத்திற்கு முன்பாக வ. வெ. சு. அய்யர் வந்தார். சமையலறையில் உற்சாகத்தோடு வேலை செய்து கொண்டிருக்கும் புதிய மனிதரைக் கண்டு பெரு வியப்பில் ஆழ்ந்தார்! காந்தியடிகள் தாம் அப் புதிய மனிதர்! ஐயரவர்களும் பிற மாணவர்களும் எவ்வளவோ தடுத்தும் காந்தியடிகள் தம் வேலையை நிறுத்தவில்லை. விருந்து துவக்கப்பட்டது. அடிகள் மற்றவர்களுடன் சேர்ந்து கொண்டு மேசை நாற்காலிகளை எடுத்துப் போட்டார். உணவுகளைப் பரிமாறினர். இறுதியில் விருந்திற்குத் தலைமை தாங்கிச் சொற்பொழிவாற்றினர்.

* * *

காந்தியடிகள் சிறுவராயிருந்தபோது, அவருடைய இல்லத்தில் அரம்பை என்ற வேலைக்காரி ஒருத்தி இருந்தாள். ஆனால் அடிகள் அவளைத் தம் தாய் போலக் கருதிவந்தார். பம்பாயில் வழக்கறிஞர் தொழில் நடத்தி வந்தபோது, அவர் வீட்டில் ஒரு பார்ப்பனர், சமையல் தொழில் செய்து வந்தார். காந்தியடிகளுக்கு அப்போதெல்லாம் ஆங்கில நாகரிகத்தில் அலாதிப் பிரியம். ஆடம்பரத்தில் அளவு கடந்த பற்று. ஆயினும் வேலைக்காரனை வேலைக்காரனாக அவர் எண்ணியதில்லை. பாதிச் சமையலை வேலைக்காரன்

செய்ய, பாதிச் சமையலைத் தாமே செய்வார். சமையல் வேலையோடு சமையற்காரனுக்குப் படிப்பும் சொல்லிக் கொடுப்பார். அவனுடன் சேர்ந்தே தாமும் உணவு உண்பார்.

தென்னாப்பிரிக்காவில் காந்தியடிகள் நிறையச் சம்பாதித்துக் கொண்டிருந்தார். அங்கே அவருடைய குடும்பமும் மிகப் பெரிது. ஆயினும் துணி துவைத்தல், கழிப்பறையைச் சுத்தம் செய்தல் ஆகிய செயல்களைக் காந்தியடிகளும் கஸ்தூரிபாயும் செய்து வந்தனர். வீட்டில் குமஸ்தாக்களும், கட்சிக்காரர்களும் நிறைய வாழ்ந்தார்கள். ஆனால் அவர்கள் அனைவரும் வீட்டு மனிதர்களாகவே கருதப் பட்டு, அவ்வாறே நடத்தப்பட்டார்கள். ஆசிரமவாசியான பிறகு, வேலைக்காரர் வைத்துக்கொள்ளக்கூடாது என்ற விதியே ஏற்படுத்திக் கொண்டார்.

* * *

"எனக்குத் தோட்டித் தொழிலில் விருப்புண்டு. எனது ஆசிரமத்தில் பதினெட்டு வயதுப் பார்ப்பனச் சிறுவன், ஆசிரமக் குப்பை கூட்டும் வேலையைக் கற்பிக்க வேண்டித்தான் தோட்டிவேலை செய்கிறான். அவ்விளைஞன் சீர்திருத்தக்காரன் அல்லன். அவன் வைதிகத்தில் பிறந்து வளர்ந்தவன்; அவன் நாடோறும் கீதை பாராயணம் செய்பவன்; சந்தியாவந்தனம் முதலியவற்றை முறையே நிகழ்த்துபவன். அவனது சமஸ்கிருத உச்சரிப்பு என்னுடையதினும் நன்றாக இருக்கிறது. இறை வழிபாட்டின் போது அவன் பாடும் இனிய இசை, உள்ளத்தை உருக்கி அன்பு வண்ணமாக்குகிறது. குப்பை கூட்டுந் தொழில் பயில்வது, கடமை நிறைவேற்றத்தில் ஒன்றென்றும், ஆசிரமக் குப்பைக்காரர் செவ்வனே வேலை செய்ய வேண்டுமானால், தான் அத்தொழிலில் வல்லவனாயிருந்து வழிகாட்டியாய் அமைதல் வேண்டுமென்றும் அவன் உணர்கிறான்" என்று தொழிலின் சிறப்பைக் காந்தியடிகள் தம் நூலில்

விளக்குகிருர். இச் சொற்களிலிருந்து, "தொழில் கடமையின் அடிப்படையில் அமைய வேண்டுமேயன்றிச் சாதியின் அடிப்படையில் அமைவது கூடாது" என்ற சிறந்த உண்மையை நாம் உணரலாம். பொதுவாக இக்காலத்திலும் தண்ணீர் நிரப்புதல், பாத்திரம் கழுவுதல், வீடுவாசல் தூய்மை செய்தல், துணி துவைத்தல், கழிப்பறையைக் கழுவுதல் ஆகிய வேலைகள் மட்டமானவை என்று கருதப்பட்டு வருகின்றன. இவ்வெண்ணத்தை மக்கள் உள்ளத்திலிருந்து அகற்றுவதற்காகத்தான் காந்தியடிகள் எல்லாப் பணிகளையும் தாமே செய்தார்.

'அரை நிர்வாணப் பக்கிரி'யான காந்தியடிகள் அரிசனங்கள் வாழும் சேரியிலும் இருப்பார்; பேரரசர்கள், சிற்றரசர்கள், சமீன்தார்கள், கோடீசுவரர்கள் ஆகியோரின் மாளிகையிலும் தங்கியிருப்பார். வங்காளத்தில் காந்தியடிகள் ஒரு சமீன்தாரின் அரண்மனையில் தங்க நேரிட்டது. அவ்வரண்மனை நவீன வசதிகளோடு கூடிய அழகிய கட்டிடம். எங்கு பார்த்தாலும் சலவைக் கற்கள் பதிக்கப்பட்டிருந்தன. கண்கவர் ஓவியங்களும், வனப்பு மிக்கப் பொருள்களும், கலைச்சிறப்பு மிக்க நுண்பொருள்களும் அந்தச் சமீன்தாரின் ஆடம்பரத்தை வெளிப்படுத்திக் கொண்டிருந்தன. சமீன்தார் உரத்த குரலில் ஏவலாளரை அழைப்பதும், அவர்கட்கு ஆணையிடுவதும், அவர்கள் பணியை மேற்பார்வையிடுவதுமாக இருந்தார். பணியாளர்கள் இங்குமங்கும் காற்ருய்ப் பறந்துகொண்டிருந்தனர்.

மாலைத் தொழுகைக் கூட்டம் துவங்கியது. காந்தியடிகளைத் தரிசிக்க ஏராளமான மக்கள் கூடியிருந்தனர். தொழுகையின்போது விளக்கை அணைத்துவிடுவது அடிகளின் பழக்கம். எனவே விளக்குகளை அணைக்குமாறு காந்தியடிகள் கூறினுர். விளக்குகளின் விசைகள் (Switches) சமீன்தாரின் தலைக்கு மேல் இருந்தன. சமீன்தார் உரத்த குரலில் பணியாளனை விளக்கை அணைப்பதற்கு

அழைத்தார். காந்தியடிகள் கண்ணிமைக்கும் நேரத்தில் தம் இருக்கையை விட்டு எழுந்து விளக்கை அணைத்தார். சமீன்தார் வியப்பும் வெட்கமும் கொண்டார்.

தொழுகை முடிந்தது. காந்தியடிகளை நெருங்கிப் பலரும் பல கேள்விகளைக் கேட்டனர். நூல் நூற்றலைப் பற்றிப் பேச்சு வந்தது. அதைப் பற்றிக் குறிப்பிடும்போது, "செல்வர்களும், படித்தவர்களும் ஏதேனும் உடலுழைப்புச் செய்ய வேண்டும் என்பதற்காகவே, நான் நூல் நூற்க வேண்டும் என்று எல்லோருக்கும் கூறுகிறேன். உடலை வருத்தாமல் உண்பவன் திருடன் என்று கீதை அறிவுறுத்துகிறது" என்று அடிகள் கூறினர்.

பிறகு கூட்டம் கலைந்தது. எல்லோரும் வெளியில் சென்றனர். வெளியில் சென்ற ஒருவர் அசட்டையின் காரணமாக வழியிலிருந்த சிறு மேசை ஒன்றை கவிழ்த்து விட்டார். அதன் மேல் அழகாக வைக்கப்பட்டிருந்த சீனப் பூக் குவளை கீழே விழுந்து நொறுங்கிவிட்டது. அதைக் கண்ட சமீன்தார் உரத்தக் குரலெடுத்துப் பணியாளரை அழைக்கவில்லை. சுறுசுறுப்பான விளையாட்டு வீரனைப் போல் தாவி ஓடினர். தம்முடைய கைகளால் நொறுங்கிய அக் குவளையின் துண்டுகளைப் பொறுக்கினர். பணியாளர்கள் வியப்பால் வாயடைத்து நின்றனர். உடல் உழைப்பைப் பற்றிக் காந்தியடிகள் கூறிய சில சொற்கள் சமீன்தாரின் உள்ளத்தில் வேலை செய்யத் தொடங்கிவிட்டன.

## 12. ஏழ்மை

பணக்காரர்கள் என்பவர்கள் நாட்டு மக்களின் பாதுகாவலர்கள். ஒரு நாட்டின் செல்வம் அவர்கள் வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அச்செல்வத்தை அவர்களே துய்த்து இன்பமடையாமல் ஏழைமக்களுக்கும் வழங்க

வேண்டும்" என்று காந்தியடிகள் குறிப்பிடுவார். கதர்த் திட்டத்திற்காகப் பொருள் திரட்டிய நேரத்தில் காந்தியடிகள் "தரித்திர நாராயணனுக்காகப் பொருள் கொடுங்கள்" என்று கேட்பார். தரித்திர நாராயணன் என்றால் ஏழைகள் உள்ளத்தில் வாழும் இறைவன் என்று பொருள். அவ்வாறு சேர்க்கப்பட்ட பொருளைக் கிராமக் கைத்தொழில் முன்னேற்றத்துக்குச் செலவிட்டு, ஏழைகளின் நலத்துக்குப் பாடுபட்டார்.

* * *

காந்தியடிகள் செல்வர்களின் நடுவில் வாழ்வதைவிட ஏழைகளின் நடுவில் வாழ்வதையே பெரிதும் விரும்பினார். வட்டமேசை மாநாட்டிற்காகக் காந்தியடிகள் இலண்டன் சென்றார். அம்மாநாட்டிற்கு வந்திருந்த பிரதிநிதிகள் தங்குவதற்கென்று, ஆங்கில அரசாங்கத்தாரால் ஹைட் பூங்கா (Hyde Park)விற்கு எதிரில் ஓர் அழகிய மாளிகை ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. எடுபிடி ஆட்கள் ஏராளம்; ஆடம்பரத்திற்குக் குறைச்சலில்லை; மிக விலையுயர்ந்த உணவு. இத்தனை வசதிகளோடு கூடிய அம்மாளிகையில் காந்தியடிகள் தங்க விரும்பவில்லை. இலண்டன் மாநகரில் ஏழைகள் வாழும் பகுதி 'பௌ' என்ற இடமாகும். அது இலண்டனின் கிழக்குக் கோடியில் உள்ளது. அங்கிருந்த 'கிங்ஸ்லி ஹால்' என்ற இடத்தில் காந்தியடிகள் தங்கினார். "நான் ஏழைகளுக்காக என்னை ஆட்படுத்திக் கொண்டேன். ஆகையினால் ஏழைகள் வாழும் பகுதியிலேயே தங்க விரும்புகிறேன்" என்று குறிப்பிட்டார்.

* * *

1926-27-ஆம் ஆண்டுகளில் காந்தியடிகள் தமிழ் நாட்டில் கதர்ப் பிரசாரச் சுற்றுச் செலவை முடித்துக் கொண்டு ஒரிசா மாநிலம் சென்றார். ஒரிசாவில் 'ஈடாமதி' என்ற ஊரை அடைந்தார். அங்கு ஒரு பொதுக் கூட்டத்துக்கு ஏற்பாடாகியிருந்தது. மக்கள் அடிகளிடம் நிதி

வழங்கத் தொடங்கினர். சிலர் காசுகளாகக் கொடுத்தனர்; சிலர் பூசணிக்காய்கள் வழங்கினர்; சிலர் கத்தரிக்காய்கள் கொடுத்தனர்; வேறு சிலர் வேறு சில காய்கறிகளும் வழங்கினர். அவர்கள் கொடுத்த காசு பாசி படிந்திருந்தது; அவர்கள் வறுமை நிலைமிகவும் இரங்கத்தக்க நிலையில் இருந்தது.

இந்திய நாடு ஏழை நாடு. ஒரிசா ஏழ்மையின் கேந்திரம். அங்கு வாழும் மக்களை மனிதர்கள் என்று கூறுவதைவிட எலும்புக் கூடுகள் என்றோ நடைப் பிணங்கள் என்றோ சொல்லலாம். ஒரிசாவின் ஏழ்மையைப் பற்றிக் காந்தியடிகள் கேள்விப்பட்டிருக்கிறார்; ஆனால் பார்த்ததில்லை. இன்று அக் கொடுமையை நேரில் காணும் வாய்ப்பு அவருக்கு ஏற்பட்டது. எங்கு பார்த்தாலும் பாழிடங்கள்! இடை இடையே இடிந்து விழுந்த குடிசைகள்! அக்குடிசைகளில் பட்டினியாலும், நீர் வேட்கையாலும் ஆடவரும் பெண்டிரும் குழந்தைகளும் துடித்துக் கொண்டிருக்கும் கொடிய காட்சியைக் கண்டார். பெண்களின் உடலில் கந்தல் துணிகள் ஒட்டிக் கொண்டிருந்தன. இந்தக் கந்தல்களால் இடையை மட்டும் எப்படியோ மூடிக் கொண்டிருந்தார்கள். எஞ்சிய உடலை மறைக்க அவர்களுக்குத் துணி ஏது? காந்தியடிகளின் உள்ளம் நெக்குவிட்டு உருகியது.

'கொடுமை! ஏழ்மை! ஆற்றொணு ஏழ்மை! உதவுவாரற்ற ஏழ்மை! என்னைப் போன்ற தனிப்பட்ட மனிதன் இவர்கள் ஏழ்மையை எவ்வாறு போக்க இயலும்? என் வாழ்வின் இறுதிக் காலத்தில், நான் இங்கு வந்து சாகப் பெரிதும் விரும்புகிறேன். அப்போது இந்திய நாட்டின் பல பகுதியிலிருந்து என்னைக் காணப் பலர் வருவார்கள். அப்போது ஒரிசாவின் ஏழ்மை அவர்கள் கண்களில் படும்; அவர்கள் உள்ளத்தை உருக்கும். அவர்களில் ஒரு சிலராவது இம் மக்களின் துயர் துடைக்கத் தம் அன்புக்கரங்களை

நீட்டித் தொண்டு செய்வார்கள்'' என்று கண்ணீர் விட்டுக் கொண்டே கூறினார்.

அடுத்தாற்போல் காந்தியடிகள் 'சார்பதியா' என்ற ஊரை அடைந்தார். அங்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பொதுக் கூட்டத்திற்கு ஒரு சிலரே வந்திருந்தனர். ஏழ்மை அவர்களை வாட்டியிருந்தது. ஒளியிழந்த கண்ணோடும், உற்சாகமற்ற தோற்றத்தோடும் அவர்கள் நின்று கொண்டிருந்தனர். காந்தியடிகள் அங்கும் நிதி கேட்டார். அவ் வேழை மக்கள் பாசி படிந்த காசுகளை வழங்கினர். திருவாளர் காகா காலேல்கர் கூட்டத்தினிடையே சென்று காசு வாங்கினார். ஆமாம்! காசுதான்! அவர்கள் வெள்ளி நாணயங்களைக் கண்ணால் கண்டதில்லை. கிடைத்த ஒரு சில காசுகளையும் கவனமாகக் கந்தையில் முடிந்து வைத்திருந்தனர்; அல்லது பூமியில் போட்டுப் புதைத்து வைத்திருந்தனர். அதனால்தான் அவைகள் பாசி படிந்து காணப்பட்டன.

"இவ்வேழைகளிட மிருந்துகூடக் காசு வாங்க வேண்டுமா?'' என்று காந்தியடிகளிடம் கேட்டார் காகா.

"ஆம்! கட்டாயம் வாங்க வேண்டும்! இவர்கள் வழங்கும் அன்புக் காணிக்கையான பாசி படிந்த செப்புக்காசுகள் புனிதமானவை! அவர்களுடைய பரிதாபகரமான வாழ்க்கைக்குப் புது நம்பிக்கை நல்கும் விடி வெள்ளி! இக்காசு அவர்களின் முன்னேற்ற வாழ்க்கைக்கு அறிகுறி!'' என்று கூறினார் அடிகள்.

* * *

1947-ஆம் ஆண்டு நம் நாடு விடுதலை பெற்றது. அம் மகிழ்ச்சியான நேரத்தில் நாட்டின் சில பகுதிகளில் கொந்தளிப்பும், குழப்பமும், குருதி வெறியும் தலைவிரித்துப் பேயாட்டமாடின. நவகாளியிலும், காஷ்மீரிலும், தில்லியிலும் இந்துக்களும் இசுலாமியர்களும் ஒருவரையொருவர்

வெட்டிச் சாய்த்துக் கொண்டனர். நவகாளியில் குருதி வெள்ளம் பெருக்கெடுத் தோடியது. அக் குழப்பத்தை அடக்குவதற்காகக் காந்தியடிகள் அல்லும் பகலும் சுற்றித் திரிந்தார். நாள்தோறும் ஒவ்வொரு சிற்றூராகச் சென்றார்.

அடிகள் சாந்திப்பூர் என்ற இடத்தை அடைந்ததும் தம் காலில் அணிந்திருந்த செருப்பைக் கழற்றி எறிந்து விட்டார். அருகிலிருந்த நண்பர்கள் "ஏன்?" என்று வினவினர்.

"புனிதமான இடங்களான கோவில்கள், மாதா கோவில்கள், மசூதிகள் ஆகியவற்றில் நுழையும் போது. காலில் செருப்பணிந்தா செல்லுகிறோம்? நான் இப்போது தரித்திர நாராயணனைத் தரிசிக்கச் செல்லுகிறேன். எங்கு மக்களெல்லாம் தம் அன்பிற்குரிய தாயையும், தந்தையையும், மனைவியையும், குழந்தைகளையும் இழந்து துன்பக் கடலில் வீழ்ந்து கிடக்கின்றனரோ, அங்கு செல்லுகிறேன்! எங்கு குழந்தைகள் இரக்கமற்றுக் கொன்று குவிக்கப்படுகின்றனவோ அங்கு செல்கிறேன்! எங்கு பெண்டிர் தம் கற்பைப் பறிகொடுத்துத் தம் அம்மணத்தையும் மறைத்துக் கொள்ள ஆடையின்றிக் கலங்கி நிற்கின்றனரோ அங்கு செல்கிறேன்! எங்கு கொள்ளையும் கொலையும் கோர நடம் புரிகின்றனவோ அங்கு செல்கிறேன்! அத்தகைய இடத்திற்குச் செல்லுவது எனக்கு ஒரு புனித யாத்திரை! அப்படியிருக்க நான் எவ்வாறு செருப்பணிந்து செல்வேன்?" என்று நாத் தழுதழுக்கக் கூறினார். ஏழ்மை தாண்டவமாடும் நவகாளியில் வெறுங் காலோடுந் திரிந்தார். பூவினும் மென்மையான அவருடைய பாதங்களில் முள் தைத்துக் குருதி கொட்டிற்று. அக்குருதி ஏழை மக்களின் பொருட்டு அவர் வடித்த இரத்தக் கண்ணீர்!

* * *

காந்தியடிகள் இந்து முஸ்லீம் கலகத்தின்போது கல்கத்தாவில் தங்கியிருந்தார். அப்போது பாட்டாளிகளின் கூட்டத்தில் பேச வேண்டி ஏற்பட்டது. அப்போது பாட்டாளிகளின் நிலையை விளக்கிப் பின் கண்டவாறு கூறினார்.

“பாட்டாளிகள் தங்களுக்குள் சண்டையிட்டுக் கொள்ளக் கூடாது. ஆண்டவனைத் தொழுவதும் நமாஸ் செய்வதும் அவரவர்களுடைய சொந்த விருப்பம். சமயத்தின் அடிப்படையில் சம்பள உயர்வு தாழ்வு இருக்கக் கூடாது. அவரவர்களுடைய திறமையின் அடிப்படையிலேயே சம்பளத்தின் உயர்வு தாழ்வு இருக்க வேண்டும். பாட்டாளிகளை வேலைக்கமர்த்திக் கொள்ளும் தொழில் அதிபரும், ஒரு பாட்டாளியே! அதோடு பாட்டாளிகளின் பாதுகாவலரும் அவரே! இது என் கொள்கை.

பாட்டாளிகள் ஏழ்மையினால் வாடவேண்டிய அவசியமில்லை. தொழில் அதிபருக்கு அவரிடமுள்ள பணம், செல்வமாகும். அதே போலப் பாட்டாளிக்கு அவனுடைய கையும் காலும் செல்வமாகும். பணம் எப்போதும் ஓரிடத்தில் நிலைத்து நில்லாமல் ஓடிவிடும். ஆனால் பாட்டாளி இழந்த தன் உடல் வலிமையை மீண்டும் பெற்று வருவாயைத் தேடிக் கொள்ளலாம்; அப்படியிருக்கப் பாட்டாளி இன்னும் தன்னை ஏழை என்று கருதுகிறான். பெரிய கப்பல்கள் பெருமிதத்தோடு கிழித்துச் செல்லும் ஆழ் கடலின் பரந்த நீர் எவ்வாறு சிறு துளிகளால் ஆக்கப்பட்டதோ, அதே போன்று நாட்டிலுள்ள கோடிக் கணக்கான செல்வங்களும் பாட்டாளிகளின் உழைப்பால் உண்டானவையே! ஒரு காரோட்டி எவ்வாறு பாட்டாளியோ, அதேபோல உயர்ந்த வருவாயுடைய ஒரு பொறியியல் வல்லுநனும் (Engineer) பாட்டாளியே! எல்லாப் பாட்டாளிகளும் ஒன்று திரண்டு, தங்கள் வாழ்க்கைத் தேவைக்குப் போதுமான தொகையை நிர்ணயிக்கவேண்டும். பிறகு எல்லோரும்

முதலாளியிடம் சென்று, "ஐயா! எங்களுக்கு வேண்டியது பாலோடு கூடிய எளிய உணவு; எங்கள் குழந்தைகட்குக் கல்வி; அதோடு காற்றோட்டமுள்ள சிறியவீடு, இவைகளைத் தவிர எங்கட்கு வேறு எதுவும் வேண்டாம்" என்று கூற வேண்டும். இவ் வேண்டுகோளை உணர்ந்து முதலாளிகள் நடந்து கொண்டால் உலகமே ஒன்றுபட்டு வாழும்.

## 13. மொழி

உலகமே ஒன்று என்று பேசிக்கொள்ளும் இக்காலத்தில், தாய் மொழிப்பற்றைப் பற்றிப் பேசுபவனைப் 'பித்தன்', 'மொழி வெறியன்' என்றும் குறுகிய புத்திக் காரன் என்றும் கூறச் சிலர் தயங்குவதில்லை. அத்தகைய பெரிய மனிதர்களுக்குக் காந்தியடிகளின் மொழிப்பற்று சிறந்த அறிவுரையாக அமையும் என்பதில் ஐயமில்லை. காந்தியடிகளுக்குப் பல மொழிகள் தெரியும். அவர் அம் மொழிகளையெல்லாம் சேவை மனப்பான்மையுடன் கற்றாரேயல்லாமல், பன்மொழிப் புலவர் ஆகவேண்டும் என்பதற்காகக் கற்கவில்லை.

குஜராத்தி அவருடைய தாய்மொழி. பெற்றோரின் விருப்பத்திற்கிணங்க அவர் ஆங்கிலம் கற்றார் பள்ளியில். தென்னாப்பிரிக்காவில் இசுலாமிய நண்பர்களோடு பழக நேரிட்ட நாட்களில் உருது பேசக் கற்றுக்கொண்டார். இந்திய நாட்டுக்குத் திரும்பி அரசியல் தொண்டில் ஈடு பட்ட காலத்தில் இந்துஸ்தானியைக் கற்றுக் கொண்டார். வடஇந்தியாவில் எந்த மாநிலத்தில் இந்துஸ்தானியைப் பேசினாலும் மக்கள் ஓரளவு புரிந்து கொள்ளுகிறார்கள் என்பதை உணர்ந்த அடிகள் அம் மொழியை நன்கு பயிலவும் பரப்பவும் முற்பட்டார். மாணவராகப் பள்ளியில் பயின்ற காலத்தில் சமஸ்கிருதம் ஓரளவு பயின்றார்.

பிறகு சிறையிலிருந்த காலத்தில் அம்மொழியறிவைப் பெருக்கிக் கொண்டார். காந்தியடிகள் இங்கிலாந்து நாட்டில் வழக்கறிஞர் கல்வி பயின்ற காலத்தில், ஐரோப்பிய நாட்டின் பழம்பெரும் மொழியான இலத்தீனையும், அங்கு பொது மொழியாக மதிக்கப்படும் ஃபிரெஞ்செயும் கற்ருர். தம் தாய்மொழியான குஜராத்தின் முன்னேற்றத்திற்கு அடிகள் எவ்வளவோ பாடுபட்டிருக்கிருர். குஜராத் பத்திரிகைகளுக்கும், அம்மொழி வளர்ச்சிக்கும் நன்கொடை வழங்கியிருக்கிருர். அவருடைய ஆங்கிலப் பேச்சும் எழுத்தும் மிக எளிய நடையில் அமைந்திருக்கும்; ஆடம்பரமிருக்காது; எதுகை மோனைகளில் இடர்ப்படமாட்டார்; மிக அரிய கருத்துக்களையும் எளிய சொற்களைக் கொண்டு விளங்கவைக்கும் இவருடைய ஆற்றலை ஆங்கில மக்களே பாராட்டிப் பேசுகின்றனர்.

தமிழ்மொழிக்கும் காந்தியடிகளுக்கும் நெருங்கிய தொடர்புண்டு. காந்தியடிகள் தென்னுப்பிரிக்காவில் வாழ்ந்த போது, தமிழர்களோடு நெருங்கி பழகினுர். நேடால், திரான்ஸ்வால் முதலிய மாநிலங்களில் மிகுதியாக வாழ்ந்தவர்கள் தமிழர்களே! காந்தியடிகள் தம்முடைய சத்தியசோதனையில் குறிப்பிடும், ஜாக் முதலியார், தம்பி நாயுடு, பாலசுந்தரம், பி. கே. நாயுடு, திருமதி தம்பி நாயுடு, திருமதி என். பிள்ளை, திருமதி கே. முருகேசபிள்ளை, திருமதி பெருமாள் நாயுடு, திருமதி பி. கே. நாயுடு, திருமதி கே. சின்னச்சாமி பிள்ளை, திருமதி ஆர். ஏ. பூதலிங்கம், குமாரி மீனுட்சிப் பிள்ளை, குமாரி முருகேசபிள்ளை ஆகியோர் தமிழர்களே. பாலசுந்தரம் ஒரு தோட்டக்கூலி. மற்றவர்கள் எல்லோரும் தென்னுப்பிரிக்கப் போராட்டத்தில் காந்தியடிகளுக்குத் தோள் கொடுத்துத் தொண்டாற்றியவர்கள்; ஆற்ருெணு இன்னல்களுக்கு ஆட்பட்டவர்கள்; சிறையில் வாடியவர்கள்; நாடு கடத்தப்பட்டவர்கள்; மனைவி மக்களையும் செல்வத்தையும் இழந்தவர்கள். 'கறுப்புச் சட்ட' எதிர்ப்புப்

போராட்டத்தில் உயிர் கொடுத்த சாமி நாகப்பனும், குமாரி வள்ளியம்மையும் தமிழர்களே என்று நாம் பெருமையுடன் கூறிக்கொள்ளலாம்.

காந்தியடிகள் தமிழ்மொழியைப் பற்றியும் தமிழ் மக்களைப் பற்றியும் ஆங்காங்கு கூறிய சொற்களைக் கீழ்க் கண்டவாறு தொகுத்திருக்கிறேன் :

"தென்னாப்பிரிக்க உரிமைப் போரில் தமிழ் மக்கள் புரிந்த துணையைப் போல வேறெவ் விந்தியரும் புரியவில்லை. அவர்கட்கு நன்றி செலுத்த அவர்கள் நூல்களைப் பயில வேண்டுமென்று எண்ணினேன். அப்படியே, அவர்கள் மொழி பயில்வதில் மிக ஊக்கமாக ஒரு திங்கள் கழித்தேன். அம்மொழியைப் பயிலப் பயில அதன் அழகை உணரலானேன். அது உள்ளத்தைக் கவரும் ஓரினிய மொழி. தமிழ் மக்களுள் பண்டை நாளிலும் இந் நாளிலும் கூடப் பல அறிஞர் இருந்தனர்—இருக்கின்றனர் என்ற உண்மை அம்மொழியின் அமைப்பாலும், பயிற்சியாலும் அறியக் கிடக்கின்றது. இந்திய மக்கள் இமய முதல் குமரி வரை ஓரினமாக வாழவேண்டுமானால், தமிழரல்லாத மற்ற மொழியினரும் தமிழுணரல் வேண்டும்."

"ஆங்கிலம் பயில்வதற்கு முன்னர்த் தமிழ்மொழி பயிலல் வேண்டுமென்று நான் பன்முறை பகர்ந்திருக்கிறேன். 1915-ஆம் ஆண்டிலேயே ஆங்கிலத்தினும் தமிழ்மொழியைச் சிறப்பாகக் கொள்ளுமாறு தமிழ் மக்களை வேண்டிக் கொண்டேன்; தாய்மொழியில் பேசுமாறும், தாய்மொழி நூல்களைப் பயிலுமாறும் மக்களை வேண்டிக்கொண்டேன். இருபது ஆண்டுகட்கு முன்னரே யான் தமிழ் பயிலத் தொடங்கியதற்குக் காரணம், திருக்குறள் மூலத்தையே நேராகப் படித்தல் வேண்டுமென்று என் உள்ளத்தெழுந்த அவாவேயாகும். தமிழ்மொழியில் புலமை பெறுதற்குரிய ஓய்வு எனக்கு ஆண்டவன் அருளினனில்லை. அது குறித்து யான் உறும் வருத்தத்துக்கோர் அளவில்லை.

அவரவர்,அவரவர்க்குரிய தாய்மொழியிலேயே கல்வி பயிலல் வேண்டும். தமிழ் மக்கள், தம் மொழியை ஆங்கிலம் முதலிய மொழிகளைவிட முதன்மையாகக் கருதவேண்டும். தமிழ்நாட்டில் ஓரிடத்தில் எனக்கு ஆங்கிலத்தில் வரவேற்பு அறிக்கை வழங்கப்பட்டது. உடனே நான் அதை மறுத்துரைத்ததை நீங்கள் அறிந்திருக்கலாம். அவ்வறிக்கை தமிழில் எனக்கு அளிக்கப்பட்டிருந்திருப்பின் நான் பெரிதும் மகிழ்ந்திருப்பேன்."

"தமிழ் மக்கள் எனது குருதிக் கலப்புற்ற உடன்பிறந்தவர் போலத் தோன்றுகிருர்கள்."

* * *

1912-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 22-ஆம் நாள் கோகலே தென்னுப்பிரிக்க மக்களின் நிலைமையை அறிவதற்காக வந்தார். தென்னுப்பிரிக்க அரசாங்கமும், வெள்ளைக்காரர்களும் கோகலேயை நல்ல முறையில் வரவேற்றுப் பாராட்டினர். அவர் பல பொதுக்கூட்டங்களில் பேசினுர். அவருடைய பேச்சு வன்மை, இந்தியர் ஐரோப்பியர் ஆகியோரின் உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்தது. தென்னுப்பிரிக்காவில் அவர் சுற்றுப் பயணம் செய்வதற்காக அரசாங்கத்திற்கு உரிமையான 'ரயில்வே சலூன்' ஒன்றும் வழங்கப்பட்டது. ஜொகன்னஸ்பர்க் இந்தியர்கள், ரொடீசியாவில் உற்பத்தியாகும் உயர்ந்த தேக்குமரச் சட்டத்தில் தங்கத் தகடு அடித்து அதில் வரவேற்பறிக்கை எழுதிக் கோகலேக்கு அளித்தனர்.

ஜொகன்னஸ்பர்க்கில் இந்தியர்கள் ஏற்பாடு செய்திருந்த பொதுக் கூட்டமொன்றில் கோகலே பேசவேண்டியிருந்தது. கோகலே ஆங்கிலத்தில் மாபெரும் சொற்பொழிவாளர். ஆங்கிலேயரும் வியக்கும் வண்ணம் பேசும் சொல்வேருழவர். எல்லா இடங்களிலும் அவர் ஆங்கிலத்திலேயே பேசினுர். ஆனுல் இக் கூட்டத்தில் அவருடைய தாய்

மொழியான மராத்தியில் பேசுமாறு காந்தியடிகள் வற்புறுத்தினர். அக்கால இந்திய அரசியல்வாதிகள் ஆங்கிலத்தில் பேசுவதையே பெருமையாகவும், நாகரிக மாகவும் கருதிவந்தனர். ஆங்கிலத்தில்தான் அவர்கள் சொல்லாற்றல் பளிச்சிடும். கோகலேயும் அதற்கு விலக் கானவரல்ல. ஆகையினால் அவர் மராத்தியில் பேச மறுத் தார். காந்தியடிகள் தான் விடாக்கண்டராயிற்றே. எப்படியோ வாதிட்டு இசையுமாறு செய்துவிட்டார். பிறகு கோகலே மராத்தியில் பேசினர். காந்தியடிகள் அதை இந்தியில் மொழி பெயர்த்துச் சொன்னர். தாய்நாட்டு மக்கள் நடுவில் தாய்மொழியில் பேசாமல் வேற்று மொழி யில் பேசுவதைக் காந்தியடிகள் எப்பொழுதுமே வெறுப் பார்.

* * *

காந்தியடிகள் தென்னுப்பிரிக்க மக்களின் குறைகளைப் போக்கப் பெரிய போராட்டம் நிகழ்த்தி வெற்றிவீரராக இந்தியாவிற்குத் திரும்பினர். 'ஆங்கிலப் பேரரசில் சூரியன் மறைவதில்லை' என்று பெருமை பேசிய பிரிட்டிஷ் சிங்கத் தின் பிடரியைக் குலுக்கி, அருளறத்தின் அடிப்படையில் கத்தியின்றி இரத்தமின்றி வெற்றி கொண்டார். ஆங்கிலே யரின் அடக்குமுறையால் எச்சிற் புழுவினும் கீழாக வாழ்ந்த இந்திய மக்களுடைய கண்களுக்குக் காந்தியடிகள் மாபெரும் வீரராகவும், அஞ்சாத சூரராகவும் தென்பட் டார். அவர் பம்பாய்த் துறைமுகத்தில் இறங்கியதும், பத்திரிகாசிரியர்கள் அவரைச் சூழ்ந்துகொண்டனர். ஒரு பாரசீகப் பத்திரிகாசிரியர் ஆங்கிலத்தில் தம் கேள்விகளைக் கேட்கத் தொடங்கினர்.

உடனே காந்தியடிகள் அவருடைய வினவுக்கு விடை யளிக்காமல் பின் கண்டவாறு அவரைக் கேட்டார். "நண்பரே! நானும் ஓர் இந்தியன்; நீங்களும் ஓர் இந்தியர்;

உங்களுடைய தாய்மொழியும் குஜராத்தி; என்னுடையதும் அதுவே. அப்படியிருக்க நீங்கள் ஏன் ஆங்கிலத்தில் கேள்வி கேட்கிறீர்? நான் பல்லாண்டுகள் தென்னாப்பிரிக்காவில் வாழ்ந்த காரணத்தால், என் தாய்மொழியை நான் மறந்து விட்டதாகத் தாங்கள் கருதுகின்றீரா? அல்லது நான் ஒரு பாரிஸ்டர் என்ற காரணத்தால், என்னிடம் ஆங்கிலத்தில் பேசுவதுதான் கௌரவம் என்று கருதுகின்றீரா?"

இச் சொற்களைக் கேட்ட அப் பத்திரிகாசிரியர் மிகவும் வெட்கமடைந்தார், பிறகு குஜராத்தியிலேயே பல கேள்விகள் கேட்டார். அடிகளும் விடையிறுத்தார். அடுத்த நாள் அடிகளின் சந்திப்பைப்பற்றித் தம் பத்திரிகையில் குறிப்பிடும்போது, அடிகளின் மொழிப்பற்றை விளக்கி அதற்கு முதலிடம் கொடுத்து எழுதியிருந்தார். அதைப் படித்த இந்திய மக்கள் பெரிதும் மகிழ்ந்தனர். தாய்மொழியின்மேல் பற்றுக்கொண்டு வாழும் ஒரு இந்தியத் தலைவராவது கிடைத்தாரே என்று பலர் மகிழ்ந்தனர். அப்போது இந்திய நாட்டுப் பத்திரிகைகள் எல்லாம் காந்தியடிகளின் செயலை ஒருமுகமாகப் பாராட்டத் தொடங்கின; அப்போது இந்திய நாடு முழுவதும் காந்தியடிகளைப் பற்றியே பேச்சாக இருந்தது.

*　　　*　　　*

வெற்றிவீரராக இந்தியா திரும்பிய காந்தியாருக்குக் குஜராத்தி மக்கள் ஒரு பெரிய விருந்து நடத்தினர். காரணம், காந்தியடிகள் தம்முடைய மாநிலத்தைச் சேர்ந்தவர் என்ற காரணத்தால் திருவாளர் ஜெகாங்கீர் பெடிட் என்பவர் பம்பாயில் அப்போது வாழ்ந்த பாரசீகக் கோடீசுவரர்களில் ஒருவர். அவருடைய ஆடம்பரமான அரண்மனையில் அந்த விருந்து ஏற்பாடாகியிருந்தது. இந்த விருந்துக்குப் பம்பாயில் வாழ்ந்த செல்வர்களும், பெரிய மனிதர்களும், அரசியல்வாதிகளும் வந்திருந்தனர்.

எல்லாரும் மேலைநாட்டுப் பாணியில் உடை உடுத்து வந்திருந்தனர். ஆனால் அடிகள் பழைய கர்நாடகக் கத்தியவார் பாணியில் இடுப்பில் வேட்டியும், உடம்பில் நீண்ட அங்கியும், தலைப்பாகையும் அணிந்திருந்தார். அவ்வளவு நாகரிக மனிதர்களுக்கு நடுவில் காந்தியடிகள் பேசிப் பழகுவதற்குத் திணறிப்போனார். பெடிட் மாளிகையின் பெருமிதமும், பேரொளியும் அவரைத் திக்குமுக்காடச் செய்துவிட்டன. ஆயினும் சர் பிரோசிஷா மேதாவின் அன்பும் ஆதரவும், காந்தியடிகள் ஒருவாறு சமாளித்துக்கொள்ளத் துணை புரிந்தன.

அவ்விருந்திற்குக் குஜராத் மாநிலத்தவரான ஜனுப் ஜின்னாவும் வந்திருந்தார். காந்தியடிகளை வரவேற்றுப் பாராட்டி ஆங்கிலத்தில் இனிய சொற்பொழிவு ஒன்றும் செய்தார். விருந்துக்குவந்த எல்லோரும் ஆங்கிலத்திலேயே சொற்பொழிவாற்றினர்.

ஆனால் காந்தியடிகள் விருந்துக்கும், வரவேற்புக்கும் நன்றி தெரிவிக்கும் சமயம் வந்தபோது, "இங்கே எல்லோருக்கும் குஜராத்தி தெரியுமாதலால், நான் குஜராத்தியிலேயே பேச விரும்புகிறேன். நம் தாய்மொழி இருக்கும்போது அதைப் புறக்கணித்துவிட்டு ஆங்கிலத்தில் ஏன் பேச வேண்டும்?" என்று தம் பேச்சைத் தொடங்கினார். காந்தியடிகளின் தாய்மொழிப் பற்றை எல்லோரும் பாராட்டினார்கள். ஆங்கிலத்தில் பேசுவதே கௌரவம் என்று கருதப்பட்டு வந்த காலத்தில் மகாத்மா துணிந்து குஜராத்தியில் பேசியதை எல்லோரும் மெச்சினார்கள்.

* * *

முதலாம் உலகப் போர் 1918-ஆம் ஆண்டு பயங்கரமான கட்டத்தை அடைந்திருந்தது. பிரிட்டன் முதலிய நேச நாடுகளின் நிலைமை மிகவும் நெருக்கடியாக இருந்தது. இந்த நிலைமையில் இந்தியாவின் அரசப் பிரதிநிதியாக

விளங்கிய செம்ஸ்போர்டு பிரபு தில்லியில் ஒரு யுத்தமாநாடு கூட்டினார். இந்திய நாட்டின் பிரபல தலைவர்கள் பலருக்கும், அம் மாநாட்டில் கலந்துகொள்ளும்படி அழைப்பு அனுப்பி யிருந்தார். காந்தியடிகளுக்கும் அழைப்பு வந்தது; அவரும் சென்றார்.

அம் மாநாட்டில் போருக்கு ஆள் திரட்டும் தீர்மானம் ஒன்று வந்தது. இதுதான் இம் மாநாட்டில் முக்கியமான தீர்மானம். இத் தீர்மானத்தைக் காந்தியடிகள் ஆதரித்துப் பேச வேண்டுமென்று செம்ஸ்போர்டு விரும்பினார். காந்தி யடிகளும் அதற்கு இணங்கினார். ஆனால் இந்துஸ்தானியில் பேசுவதற்கு அநுமதி கேட்டுப் பெற்றுக்கொண்டார்.

காந்தியடிகள் இந்துஸ்தானியில் பேசியதுபற்றிப் பலர் அவருக்கு வாழ்த்துக் கூறினார்கள். வைசிராய் வந்திருந்த ஒரு கூட்டத்தில் இந்துஸ்தானியில் பேசப்பட்டது இது தான் முதல் தடவை என்றும் சொன்னார்கள். காந்தியடி களுக்கு இது மிகவும் அவமானமாகப் பட்டது. இந்திய நாட்டில், இந்திய மொழியில் பேசியதற்காக ஒரு பாராட்டா என்று வருந்தினார்.

* * *

1915-ஆம் ஆண்டு. ஒரு நாள் காந்தியடிகள் ஆசிர மத்தில் அமர்ந்து ஏதோ எழுதிக் கொண்டிருந்தார். அவர் அருகில் காகா காலேல்கர் அமர்ந்திருந்தார். ஓமர்கயாம் பாடல்களின் ஆங்கில மொழி பெயர்ப்பு (ஃபிட்ஸரால்டு என்பவரால் மொழிபெயர்க்கப்பட்டது) ஒன்றைக் கையில் வைத்துப் படித்துக் கொண்டிருந்தார். காந்தியடிகளின் பார்வை காகாவின்மேல் விழுந்தது.

'என்ன படிக்கிறீர்?' என்று கேட்டார் அடிகள்.

'ஓமர் கயாம் பாடல்கள்' என்று விடையிறுத்தார் காகா.

காந்தியடிகள் நீண்ட ஒரு பெருமூச்சு விட்டார் "நானும் ஒரு காலத்தில் ஆங்கிலச் செய்யுள்களைப் பெரிதும் விரும்பிப் படித்தேன். ஆனால் இப்போது படிப்பதை விட்டுவிட்டேன். இந்தியனாகிய நான் குறைந்தது எவ்வளவு சமஸ்கிருதம் தெரிந்துகொள்ள வேண்டுமோ, அந்த அளவு இன்னும் அறிந்துகொள்ளவில்லை எனக்கு ஏதாவது ஓய்வு கிடைத்தால் அவ்வோய்வு நேரத்தைக் குஜராத்தியில் புலமை பெறுவதற்கு ஏன் பயன்படுத்திக் கொள்ளக் கூடாது? என்று நினைத்தேன். இந்திய நாட்டின் சேவைக் காக என்னை உரிமையாக்கிக் கொண்டேன். அப்படி யிருக்கும்போது, இந்திய மொழிகளை நல்ல முறையில் பயின்று, தொண்டு செய்யும் தகுதியை இன்னும் உயர்த்திக் கொள்ளலாமல்லவா? நாட்டுத் தொண்டுக்காக நான் எதையாவது துறந்துவிட்டேன் என்றால், அது நான் ஆங்கில இலக்கியத்தின்பால் கொண்ட பேரார்வம்தான். பணமும் பதவியும் அதற்கு முன் ஒன்றுமில்லை; அவற்றை இழத்தல் துறவுமாகாது. நான் ஆங்கில இலக்கியத்தின்பால் எவ்வளவு பற்று வைத்திருந்தேன் என்று என்னால் அளவிட்டுக் கூற முடியாது. எனினும் அதைத் துறக்க முடிவு செய்தேன்; துறந்தும்விட்டேன்" என்று கூறினார்.

இதைக் கேட்ட காகா ஓமர்கயாம் பாடல்களை மூடி வைத்துவிட்டார். பிறகு அதை எப்போதும் திறந்து படிக்கவேயில்லை. அன்றிலிருந்து குஜராத்தி மொழியை நல்ல முறையில் பயிலத் தொடங்கினார்.

## 14. கல்வி

காந்தியடிகளின் வாழ்க்கை சத்தியத்திற்கு ஒரு சோதனைக் களமாக அமைந்தது என்று முன்பே குறிப்பிட்டேன். தம் மனச்சாட்சிக்குப் புறம்பான எந்தச் செயலையும்.

சத்தியத்திற்கு மாறுபட்ட செயலாகவே கருதினர். ஆகையினால் பிறர் செய்யத் துணியாத செயல்களைக் காந்தியடிகள் செய்யவேண்டி நேரிட்டது.

பண்டைக் காலத்தில் பள்ளிப் படிப்பு என்றால், ஆங்கிலப் படிப்பையே குறிக்கும். ஒவ்வொரு தந்தையும் தன்னுடைய மக்கள் ஆங்கிலம் கற்றுப் பட்டதாரியாக வேண்டும்; அரசாங்கத்தில் நல்ல அலுவலில் அமர்ந்து சுகமாக வாழ வேண்டும் என்று எண்ணினர். 'அரைக்காசு என்றாலும் அரண்மனைக்காசு உயர்ந்தது' என்ற பழமொழி நாட்டில் பரவலாக வழங்கிவந்த ஒன்று. எனவே அரசாங்க வேலையே மக்களின் குறிக்கோளாக இருந்தது. அக் குறிக்கோளை எட்டிப்பறிக்கும் ஏணியாக ஆங்கிலக் கல்வி கருதப்பட்டது.

ஆனால் காந்தியடிகள் இக் கொள்கைக்கு முற்றிலும் மாறுபட்டவர். ஆங்கிலப் பள்ளிக்கு அனுப்பித் தம் மக்களை அவர் படிப்பிக்க விரும்பவில்லை. அப்படிச் செய்ய அவர் மனச்சாட்சி இடந்தரவில்லை. அவர் 'பாரிஸ்டர்' என்ற காரணத்தால் தென்னாப்பிரிக்க வெள்ளையர் பள்ளியில், இவருடைய மக்களுக்கு இடம் கிடைத்திருக்கும். ஆனால் இவர் அனுப்ப விரும்பவில்லை. இந்தியாவிற்கும் அனுப்பிப் படிக்க வைக்க விரும்பவில்லை.

காந்தியடிகளின் மக்களில் மூத்தவராகிய அரிலால் காந்திக்குத் தந்தையின்மீது அடங்காத கோபம். மற்ற பெற்றோர்கள் தம் பிள்ளைகளை உயர்நிலைப் பள்ளியிலும், கல்லூரியிலும் படிக்கவைப்பதைப்போல் தம்மையும் படிக்க வைக்கவில்லையே என்று அவர் குறைப்பட்டுக் கொண்டிருந்தார். தந்தையாரிடம் வெளிப்படையாகவே இதை எடுத்துக் கூறிக் குற்றம் சாட்டினர். செய்தித்தாள்களிலும் எழுதினர். இறுதியில் தந்தையைவிட்டு அடியோடு பிரிந்து தம் வாழ்க்கையைச் சுதந்தரமாக அமைத்துக்கொண்டார்.

இந்திய நாடு சென்று கல்விக்கூடங்களில் சேர்ந்தும் கற்றூர். இதனுல் அரிலால் அவ்வளவாக நன்மையடையவில்லே. அவருடைய எதிர்கால வாழ்க்கையும் போற்றத் தகுந்ததாக அமையவில்லே.

மற்ற மூன்று மக்களும் தந்தையின் சொற்களே மீறி நடக்கமாட்டார்கள், தந்தையின் சொற்படியே கேட்டுக் கல்வி பயின்ருர்கள். பிள்ளைகளுக்குப் புத்தகப் படிப்பே வேண்டியதில்லே என்பது காந்தியடிகளின் கருத்தன்று. ஆனல் அக்காலத்தில் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் கல்வி கற்பிக்கப்பட்ட முறையை வெறுத்தார். எனவே, தம் குழந்தைகளுக்கு ஆங்கிலம் கற்பிக்க மட்டும் ஒரு ஆங்கில ஆசிரியையை ஏற்பாடு செய்துவிட்டு, மற்ற பாடங்களேத் தாமே கற்பித்தார். வீட்டிலே நிதானமாக அமர்ந்து பாடங்களேக் கற்பிப்பதற்கு அவருக்கு நேரம் கிடையாது. அவர் குடியிருந்த வீட்டிற்கும் அவருடைய அலுவலகத்துக்கும் இரண்டரைக் கல் தொலேவு இருக்கும். தம் மக்களேயும் அலுவலகத்திற்கு உடன் அழைத்துச் செல்வார். போகும்போதும் வரும்போதும் வழியில் அவர்களுக்கு உரையாடலின் மூலமாகக் கல்வி கற்பிக்கலானுர். நாள்தோறும் ஐந்து கல் நடப்பது அவர்களுக்குச் சிறந்த உடற்பயிற்சியாகவும் அமைந்தது. ஆனல் இக்கல்வியும் தொடர்ந்து நடைபெற இயலவில்லே. காந்தியடிகள் அரசியற் போராட்டங்களில் அடிக்கடி ஈடுபட வேண்டியிருந்ததால், இக் கல்வியும் தடைப்பட்டது.

இதுபற்றிக் காந்தியடிகள் தம்முடைய வாழ்க்கை வரலாற்றில் பின்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

" தக்க இலக்கியக் கல்வி என் மக்களுக்குத் தர முடியாமல்போனது அவர்களுக்கும் எனக்கும் துயரந் தரும் செயலேயாகும். என் மூத்தமகன் அரிலால் என்முன் தனிமையிலும், செய்தித்தாள்களில் வெளிப்படையாகவும்

வெளியிட்டிருக்கிறான். மற்றப் புதல்வர்கள், விளக்க முடியாத காரணங்களாலேயே நான் அவர்களுக்கு இலக்கியக் கல்வியளிக்கவில்லை என்பதை உணர்ந்து தயாள சிந்தையுடன் என்னை மன்னித்துவிட்டார்கள். எனினும் அவர்கள் இலக்கியக் கல்வி பெருததால் குடிமுழுகிப் போய் விட்டதாக எண்ணிக் கவலைக் கடலில் மூழ்கவில்லை. தந்தை யொருவன் எப்படி இருக்க வேண்டும் என்பது என் குறிக்கோளோ, அவ்வாறு நான் இல்லையே என்ற வருத்தத்தைத் தவிர வேறு வருத்தம் எனக்குக் கிடையாது. சமூக நன்மையை முன்னிட்டே அவர்களுடைய இலக்கியக் கல்வி யைப் பலியிட்டதாக நான் கருதுகிறேன். இந்த நம்பிக்கை தவருயிருக்கலாம். எனினும் முழு மனதுடன் அவ்வாறு நம்பினேன் என்பதில் ஐயமில்லை. ஆனல் அவர்களுக்கு நல்லொழுக்கப் பயிற்சியளிப்பதில் நான் எள்ளளவும் அசட்டை காட்டியது கிடையாது. இப்பயிற்சிக்கு ஏற்பாடு செய்வதுதான் பெற்ருேர்களின் முதன்மையான கடமை என்பது என்னுடைய கருத்து.

குழந்தைகளுக்கு ஆங்கிலக்கல்வி அளிக்க வேண்டுமா வேண்டாமா என்பதைப்பற்றி நானும் போலக்கும் அடிக்கடி சொற்போர் நிகழ்த்துவதுண்டு. இவ்விஷயமாக நான் எப்போதும் உறுதியான கொள்கையுடையவன். இளம் வயதிலிருந்து குழந்தைகளை ஆங்கிலத்திலேயே எண்ணவும், பேசவும் பயிற்றுவிக்கும் இந்தியர்கள், தங்கள் குழந்தைகளுக்கும் நாட்டுக்கும் பெரிய துரோகம் செய்கிருர்கள் என்பது எனது அசைக்க முடியாத கொள்கை. இதனுல் அக்குழந்தைகள் நாட்டின் பரம்பரையான சமூதாயச் சிறப்புக்களையும், அறிவுச் செல்வங்களையும் இழந்துவிடுகிருர்கள். அந்த அளவில் அவர்கள் நாட்டுத் தொண்டுக்குத் தகுதியற்றவர்களாகிவிடுகிருர்கள். இத்தகைய உறுதி கொண்டவனுதலின் குழந்தைகளிடம் நான் எப்போதும் குஜராத்தியிலேயே பேசிவந்தேன். போலக்குக்கு இது

பிடிக்கவில்லை. அவர்களுடைய வருங்கால வாழ்வை நான் கெடுத்து வருவதாக நினைத்தார். முழு அன்புடன் தமது முழு வலிமையையும் காட்டி அவர் என்னுடன் வாதிடுவார். ஆங்கிலம் உலகம் முழுவதும் பரவியுள்ள மொழியென்றும், இளமையில் அதைக் கற்றுக்கொள்வோர் வாழ்க்கைப் போராட்டத்தில் மற்றவர்களைவிடப் பெரிய நன்மை பெற்ற வர்களாவார்கள் என்றும் அவர் கூறினார். என்றாலும், என் உறுதியை அவரால் மாற்ற முடியவில்லை. என்னுடைய கொள்கைதான் சரியானதென்று அவர் ஒப்புக் கொண்டாரா அல்லது நான் சுத்தப் பிடிவாதக்காரன் என்று விட்டுவிட்டாரா என்பது இப்போது நினைவில்லை. இது இருபது ஆண்டுகட்கு முன் நடந்த நிகழ்ச்சி. அதற்குப் பின் எனக்கு ஏற்பட்ட பட்டறிவினால், இக் கொள்கையில் என் உறுதி வலிமை பெற்றிருக்கிறது. இலக்கியக் கல்வி பூரணமாய்ப் பெறாத குறைபாடு என் மக்களிடம் இருப் பினும், தாய்மொழியில் அவர்கள் பெற்ற பயிற்சி, அவர் களுக்கும் நாட்டுக்கும் பெரும் நன்மையளித்து வருகிறது."

முப்பது ஆண்டுகளுக்கு முன் காந்தியடிகள் இவ்வாறு எழுதினார். காந்தியடிகளின் மக்கள் நாட்டுக்கு அருந் தொண்டுகள் புரிந்து வந்தார்கள். மணிலால் தென்னாப் பிரிக்க மக்களின் நலனுக்காக 'அந்தியன் ஒபினியன்' என்ற செய்தித்தாள் நடத்தி வந்தார். தேவதாஸ் இந்தியாவில் சிறந்த ஒரு ஆங்கிலச் செய்தித்தாளின் ஆசிரியராகப் பணி யாற்றிவந்தார். காந்தியடிகள், ஆசிரமம் துவங்கியவுடன் 'ஆதாரக் கல்வி' முறையைக் கண்டறிந்து நாட்டிற்கு வழங் கினார். தொழில் மூலமாகவே எல்லாக் கல்வியையும் கற்க லாம் என்பது அவரது கொள்கை. பள்ளியில் பயிலும் கல்வியானது நாட்டுப்பற்றை எட்டக்கூடியதாக இருக்க வேண்டும் என்று வற்புறுத்தினார். தேசியக் கல்வியை நிர்மாணத் திட்டங்களில் ஒன்றாக்கி நாடெங்கும் பரப்பினார்.

* * *

காந்தியடிகள் பிறருக்குக் கல்வி கற்பிப்பதில் மிகவும் ஊக்கமுள்ளவர். ஓய்வுள்ள நேரங்களில் இவரே தேடிச் சென்று பிறருக்குக் கல்வி கற்றுக்கொடுப்பார். தென்னுப்பிரிக்காவில் காந்தியடிகள் வழக்கறிஞர் தொழில் செய்துகொண்டிருந்தபோது, இவருடைய நண்பர் ஒருவர் ஏதோ ஒரு சட்டத்தேர்வு (Law Examination) எழுதுவதற்காகப் படித்துக்கொண்டிருந்தார். தாமே படித்துச் சட்டப் புத்தகங்களைப் புரிந்துகொள்வதற்குத் திறமையோ, நேரமோ அந்த நண்பருக்குக் கிடையாது. ஆகையினுல் காந்தியடிகள் அந்த நண்பரின் வீட்டுக்குச் சென்று நாள்தோறும் சொல்லிக் கொடுப்பார். தம்முடைய இடையருத கோர்ட்டு வேலைகளுக்கிடையிலும், டச்சுச் சட்ட நூலை (Dutch Law)ப் படித்து அவருக்காகக் குறிப்பெடுத்துக் கொடுத்தார். தாமே தேர்வு எழுதுபவர்போல் அவர் உழைத்தார்.

* * *

காந்தியடிகள் தென்னுப்பிரிக்காவில் வாழ்ந்த காலத்தில் மற்றொரு நிகழ்ச்சி நடந்தது. ஒரு நாள் ஒரு இசுலாமிய வேலைக்காரன் ஒருவன் காந்தியடிகளிடம், "பாபு! எனக்கு ஆங்கிலம் தெரிந்தால் நான் நிறையச் சம்பாதிக்க முடியும். எனக்கு ஆங்கிலந் தெரியாத காரணத்தால் அரை வயிற்றுக்குக் கூடச் சம்பாதிக்க முடியவில்லை" என்று சொன்னுன்.

உடனே காந்தியடிகள், "அதைப்பற்றிக் கவலைப் படாதே! நான் உனக்கு நாள்தோறும் கற்றுக் கொடுக்கிறேன்!" என்று காந்தியடிகள் சொன்னுர்.

"மிக்க மகிழ்ச்சி பாபு! ஆனுல் என் வேலைகளை விட்டு விட்டு நான் நாள்தோறும் உங்களைத் தேடிவர இயலாதே!" என்று கூறினுன் அவ்வேலைக்காரன்.

"அப்படியென்முல் நான் நாள்தோறும் நீ இருக்குமிடத்திற்கு வந்து சொல்லிக் கொடுக்கிறேன்" என்று

கூறினார். அதன்படியே நாள்தோறும் நான்கு கல் தொலை நடந்து சென்று அப்பணியாளருக்கு ஆங்கிலப் பாடம் கற்றுக் கொடுத்தார்.

* * *

காந்தியடிகள் முதன் முதலாகப் பிரிட்டோரியா சென்றபோது அங்கிருந்த இந்தியர்களை யெல்லாம் ஒன்று திரட்டி, சேத்ஹாஜி முகம்மதுவின் வீட்டில் ஒரு கூட்டம் போட்டார். அக் கூட்டத்தில், ஒழுக்கத்தைப் பற்றியும், நாணயத்தைப்பற்றியும், ஒற்றுமையைப்பற்றியும் எடுத்துக் கூறினார். இந்தியர்களெல்லாம் தங்கள் நலனுக்குப் போராட ஒரு கழகத்தை ஏற்படுத்த வேண்டுமென்றும் வற்புறுத்தினார். அந்தக் கூட்டத்துக்கு வந்திருந்தவர்களில் பலருக்கு ஆங்கில மொழி தெரியவில்லை என்பதைக் காந்தியடிகள் கண்டார். தென்னாப்பிரிக்காவிலுள்ள இந்தியர்களுக்கு ஆங்கில மொழி மிகவும் பயனுடையதாக இருக்குமாதலால், யாராவது ஆங்கிலம் கற்றுக்கொள்ள விரும்பினால் தாமே சொல்லிக் கொடுப்பதாகச் சொன்னார். மூன்று பேர் அவ்விதம் ஆங்கிலம் கற்றுக்கொள்ள முன் வந்தனர். அவர்களில் ஒருவர் நாவிதர்; ஒருவர் குமாஸ்தா; ஒருவர் சில்லறைக் கடைக்காரர். பின் இருவரும் எட்டு மாதங்களில் நல்ல ஆங்கில அறிவு பெற்றார்களாம். அதனால் அவர்களுடைய வருவாயும் உயர்ந்தது. நாவிதர் தம்மிடம் சவரம் செய்து கொள்ள வருவோரிடம் பேசவேண்டிய அளவுக்கு ஆங்கிலம் கற்றுக் கொண்டாராம்.

## 15. காலந் தவறாமை

காந்தியடிகளின் வாழ்க்கையிலிருந்து உணர்ந்து கடைப்பிடிக்க வேண்டிய கொள்கைகள் பல. அவற்றுள் இன்றியமையாத கொள்கை, 'காலந்தவறாமை' (Punctua-

lity) ஆகும். காலந் தவருமை எல்லோருக்கும் இயைந்த ஒன்று என்ருலும், சிறப்பாக அரசியல்வாதிகளுக்கு ஏற்றது. அதனுல்தான் காந்தியடிகள் காலந் தவருமையைத் தம் முடைய தலையாய கொள்கைகளில் ஒன்ருகக் கருதிக் கடைப்பிடித்து வந்தார்; குறிப்பிட்ட காலத்தில் தம் முடைய வேலைகளைத் தவருமல் செய்து முடிப்பார். பிறர் காலந்தாழ்த்திச் செய்தாலும் கண்டிக்காமல் விட மாட்டார்.

காந்தியடிகள் நவகாளியில் சுற்றுப்பயணம் செய்து கொண்டிருந்தபோது நாள்தோறும் ஒவ்வொரு ஊராகச் செல்வது வழக்கம். இரவு அவ்வூரில் தங்கியிருந்து விட்டு அடுத்த நாள் காலையில் குறிப்பிட்ட காலத்தில் அடுத்த ஊருக்குக் கிளம்புவார். ஒருநாள் காலை காந்தியடிகள் புறப்படத் தொடங்கினுர். அவருக்குத் துணையாக வந்திருந்த அவருடைய பேத்தியான மனுபென் புறப்படுவதற்குச் சிறிது கால தாமதம் ஏற்பட்டது. அது அப் பெண்ணின் குற்றமல்ல. காந்தியடிகள் புறப்பட்ட பிறகுதான் அவ ருடைய பொருள்கள் சிலவற்றை மூட்டை கட்ட முடியும். அதனுல் தான் காலதாமதம். உடனே காந்தியடிகளுக்குக் கோபம் வந்து விட்டது.

"மனு! நீ மிகவும் தவறு செய்கிருய்! உனக்காக இங்கு எவ்வளவு பேர் காத்துக் கொண்டிருக்கிருர்கள் என்பதைக் கவனித்தாயா? நீ இளம் பெண்! முதியவனுன என்னை ஓடி வந்து பிடித்துவிடுவாய்! ஆனுல் உனக்காக இவர்கள் தங்க ளுடைய காலத்தை இழக்கிருர்கள்! இங்கு நிற்கும் நூற்றுக் கணக்கானவர்களில், ஒவ்வொருவரிடமிருந்தும் ஐந்து நிமிடங்களை நீ பறித்துக் கொள்வது எவ்வளவு பெரிய குற்றம் என்று உணர்ந்தாயா?" என்று கூறினுர் காந்தி யடிகள்.

• • •

ஒருமுறை திலகர் பெருமான் காங்கிரஸ் மாநாட்டிற்கு நாற்பத்தைந்து நிமிடம் தாமதமாக வந்தார். அக் காலத்தில் திலகர் இந்திய விடுதலை இயக்கத்தின் முடிசூடா மன்னராக விளங்கினார். அவருடைய நா அசைந்தால் இந்திய நாடே அசைந்தது. 'மராட்டிய அரியேறு' என்றும் 'லோகமான்யர்' என்றும் இந்திய மக்களால் பெருமதிப்போடு அழைக்கப்பட்டு வந்தார். காந்தியடிகள் அப்பொழுதுதான் இந்திய அரசியலில் காலை எடுத்து வைத்திருந்தார். இருந்தாலும் ஒரு பெரிய அரசியல் வாதி காலந் தவறி மாநாட்டிற்கு வருவதை அவரால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. தம் பேச்சின்போது, "திலகர் பெருமான் மாநாட்டிற்கு நாற்பத்தைந்து நிமிடம் காலந் தாழ்த்தி வந்திருக்கிறார். நம் நாட்டின் விடுதலையும் நாற்பத்தைந்து நிமிடம் காலந் தாழ்த்தியே வரும்" என்று நகைச் சுவையோடு கண்டித்தார்.

*　　*　　*

காந்தியடிகள் ஒருமுறை மராட்டிய நாட்டில் சுற்றுப் பயணம் செய்து கொண்டிருந்தார். 'மிராஜ்' என்ற இடத்தில் ஒரு பொதுக்கூட்டத்துக்கு ஏற்பாடாகியிருந்தது. காந்தியடிகள் அக் கூட்டத்தில் பேசி முடித்தவுடன் அடுத்த ஊருக்குப் புறப்பட ஆயத்தமானார். ஆனால் மிராஜ் நகர வாசிகள் அடிகளை இன்னும் சிறிது நேரம் தங்களிடையே தங்க வைக்க வேண்டுமென்று விரும்பினர். ஆனால் அடிகள் அதற்கு ஒத்துக்கொள்ளவில்லை. தம்முடைய உந்து வண்டி (Car)யைக் கொண்டுவருமாறு கூறினார். ஆனால் அவ்வூர் மக்கள் அது பழுதாகி விட்டது என்று பொய் கூறினர். காந்தியடிகள் தம் அருகில் இருந்த சிலரை "அடுத்த ஊருக்கு வழி எது?" என்று கேட்டார். அக் குறும்புக் காரர்களும் தவறான வழியைக் காட்டி விட்டனர். அடிகளும் அவர்கள் காட்டிய வழியில் நடந்தே புறப்பட்டு விட்டார். அப்போது அவர் காலில் செருப்புகள் கூட

அணிவதில்லை. (கோபால கிருஷ்ண கோகலே அடிகளின் அரசியல் குரு. அவர் இறந்தபோது, ஓராண்டு செருப்பணிவ தில்லை என்று அடிகள் உறுதி பூண்டிருந்தார்.)

அவ்வழி வயற்புறமாக இருந்ததால், அடிகளின் காலில் முட்கள் தைத்தன; குருதியும் கொட்டிற்று. ஆனால் அடிகள் தம் பயணத்தை நிறுத்தவில்லை. உடனே அவ்வூர் மக்கள் தம் செயலுக்காக வெட்கி, அடிகளை உந்து வண்டியில் ஏற்றி அடுத்த ஊரில் சேர்த்தனர்.

* * *

ஒருமுறை குஜராத்தி கலைமன்றத்தில் அடிகள் பேச வேண்டியிருந்தது. அடிகளின் ஆசிரமத்திலிருந்து அம் மன்றம் இரண்டு கல் தொலைவில் அமைந்திருந்தது. ஆனால் குறிப்பிட்ட காலத்தில் மன்றத்தினர் வண்டி எதுவும் அனுப்பவில்லை. கூட்டம் துவக்க இன்னும் கால் மணி நேரமே இருந்தது. அடிகள் உடனே கால்நடையாகப் புறப்பட்டு விட்டார். "நாம் குறிப்பிட்ட நேரத்தில் போய்ச் சேருகிறோமோ இல்லையோ; அது வேறு விஷயம். ஆனால் குறிப்பிட்ட காலத்தில் புறப்பட்டு விட வேண்டும்" என்பது காந்தியடிகளின் கொள்கை.

காந்தியடிகள் பாதிவழி சென்றுகொண்டிருக்கும் போது, அவருக்குத் தெரிந்த ஒரு மனிதர் எதிரில் மிதி வண்டியில் வந்துகொண்டிருந்தார். உடனே அம்மனித ரிடம் மிதிவண்டியைச் சிறிதுநேரம் இரவல் கொடுக்குமாறு கேட்டார் அம்மனிதர் மிகவும் வியப்படைந்தவராய், மிதி வண்டியை அடிகளிடம் கொடுத்தார். அடிகளும் மிதி வண்டியூர்ந்து குறிப்பிட்ட காலத்தில் கலைமன்றத்தை யடைந்தார். இடையில் கட்டிய ஒரு முழத்துண்டோடு, திறந்த மேனியராய் அடிகள் மிதிவண்டியூர்ந்து வந்த காட்சி எல்லோரையும் திகைப்பிலாழ்த்தியது. ஏனென்றால் அடிகள் மிதிவண்டியூர்ந்து சென்ற காட்சியை இந்திய

காட்டில் யாரும் கண்டதில்லை. ஒருகால், தென்னாப்பிரிக் காவில் கண்டிருக்கலாம்.

* * *

காந்தியடிகள் தமிழ்நாட்டில் சுற்றுப்பயணம் செய்த போது, சிதம்பரத்திற்கு வந்திருந்தார். அண்ணாமலைப் பல் கலைக் கழக மாணவர் மன்றத்தில் பேசுவதற்காகச் சென்று கொண்டிருந்தார்கள். காந்தியடிகளின் வருகையை உணர்ந்த ஒரு பெருங்கூட்டம் பாதையில் நின்றுகொண் டிருந்தது. காந்தியடிகள் ஏறிவந்த உந்து அவ்விடத்தை அடைந்ததும், அக்கூட்டத்தினர் வண்டியை நிறுத்தினர். காந்தியடிகளின் அருகில் டாக்டர். தி. சே. சௌ. இராசன் அமர்ந்திருந்தார். அக்கூட்டத்தினர் திரு. இராசனை நெருங்கி "இங்கு உயர்குலத்தைச் சேர்ந்தவர்கள், அரி சனங்களோடு ஒன்றாக அமர்ந்து உணவு உண்ண ஒத்துக் கொண்டிருக்கின்றனர். அதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்திருக்கிறோம். விருந்து நடக்கும் பந்தல், அருகில் உள்ளது. காந்தியடிகளை அவ்விடத்திற்கு வந்து ஒரு நிமிடம் காட்சி கொடுக்கச் சொல்லுங்கள்!" என்று மன்றாடினார்கள். திரு. இராசன் காந்தியடிகளுக்கு நிலை மையை விளக்கினார். "இந்நிகழ்ச்சி நம் நிரலில் (Programme) அடங்கியிருக்கிறதா?" என்று கேட்டார். இராசன் இல்லை என்று சொன்னார்.

"மாணவர் மன்ற நிகழ்ச்சிக்கு இன்னும் எவ்வளவு நேரம் இருக்கிறது?" என்று கேட்டார் அடிகள்.

"இன்னும் பத்து நிமிடங்களே உள்ளன" என்று இராசன் விடையிறுத்தார்.

"அப்படியென்றால் நாம் இந்நிகழ்ச்சியில் கலந்து கொள்ள முடியாது. நிலைமையை விளக்கி அவர்களுக்குக் கூறுங்கள்" என்று அடிகள் சொன்னார். இராசனும் கூட்டத்தாருக்கு எடுத்து விளக்கினார். அவர்கள் அதற்கு

இசைவதாகத் தெரியவில்லை. உடனே காந்தியடிகள் அவ் வண்டியின் மறுபக்கக் கதவைத் திறந்துகொண்டு வெளியே சென்றார். கூட்டத்தார் இதைக் கவனிக்கவில்லை. அப் போது அருகில் வந்த மற்றொரு உந்து வண்டியில் அடிகள் ஏறிக்கொண்டார். வண்டி பல்கலைக் கழகத்தை நோக்கிப் பறந்தது; என்றாலும் ஒரு நிமிடம் காலதாமதம் ஏற்பட் டது. காந்தியடிகள் எடுத்தவுடன் தம் கால தாமதத்திற் காக மன்னிப்புக் கேட்டுக் கொண்டு சொற்பொழிவைத் துவக்கினார்.

## 16. சிக்கனம்

காந்தியடிகள் காஷ்மீரில் தம்முடைய சுற்றுப் பயணத்தை முடித்துக் கொண்டு இந்து-முஸ்லீம் கலகம் மிகுதியாக இருந்த நவகாளிக்குச் சென்று கொண்டிருந் தார். அப்போது அப்பாபெகனும், மனுபென்காந்தியும் காந்தியடிகளோடு சென்றுகொண்டிருந்தனர். காந்தியடி களின் தேவைப் பொருள்களெல்லாம் சரியாக இருக்கின் றனவா என்று பார்த்தார்கள் அப்பெண்கள். அவருடைய கழிவுப் பாத்திரத்தை (Chamber - Pot) மறந்து வந்து விட்டதை அவர்கள் உணர்ந்தார்கள். மனுகாந்தி காந்தி யடிகளை நோக்கி, "பாபு! புதிதாக ஒரு கழிவுப் பாத்திரம் வாங்கிக் கொள்ளலாமா?" என்று கேட்டாள்.

காந்தியடிகள் சிரித்துக்கொண்டே, "அதற்கென்ன வாங்கிக்கொள்ளலாம். உன்னுடைய தந்தை உன் பணத்தை என் பாதுகாவலில் போட்டு வைத்திருக்கிறார். நீ விரும்பினால் அப் பணத்தில் புதிதாக ஒன்று வாங்கிக் கொள்ளலாம். ஆனால் என் கைப்பணத்திலிருந்து ஒரு காசு தரமாட்டேன்" என்று சொன்னார். காந்தியடிகள் இதை விளையாட்டுக்காகச் சொன்னார் என்பது மனுவுக்

குத் தெரியும். நவகாளியில் கழிவுப் பாத்திரம் அவருக்கு மிகவும் இன்றியமையாதது என்பதை உணர்ந்து, ஒன்றை விலைகொடுத்து வாங்கிவிட்டாள். காந்தியடிகளுக்கு மறு நாட் காலையில்தான் இச்செய்தி தெரியும். இவர்கள் ஏறிச் சென்ற புகைவண்டி கல்கத்தாவை நெருங்கிக் கொண்டிருந்தது. பர்த்வான் புகைவண்டி நிலையத்தில் திருவாளர் நிர்மல்பாபு காந்தியடிகளை வந்தடைந்தார். அவரோடு உற்சாகமாக உரையாடிக் கொண்டிருந்த காரணத்தால், கழிவுப் பாத்திரம் வாங்கியதைப் பற்றி அடிகள் எதுவும் மனுவிடம் கேட்கவில்லை.

கல்கத்தாவில் இறங்கியதும் எல்லோருமாக ஒரு உந்து வண்டியிலேறிச் சேட்பூருக்குச் சென்றார்கள். அப்போது காந்தியடிகள் மனுவிடம் தம் பேச்சைத் துவக்கினார். மனுவும் அப்பாபெகனும் காந்தியடிகளை ஏறிட்டுப் பார்க்கவே அஞ்சினர். இக்குற்றம் முழுவதும் மனுவையே சாரும். அவள்தான் அப் பாண்டத்தையே வாங்கினாள். எனவே காந்தியடிகள் அவளைக் கடிந்துக் கொண்டபோது, மிகவும் பரிதாபமாக இருந்தது.

"கழிவுப் பாத்திரம் வாங்குவது பற்றி நான் விளையாட்டாகச் சொன்னேன். நீ அதை உண்மை என்று எடுத்துக் கொண்டாய். நான் ஒரு கண்ணாடிக் குவளையை வைத்துக்கொண்டு இன்னும் சில நாட்களை இங்குக் கழித்திருப்பேன். அதற்குள் அவசரப்பட்டு ஏழு ரூபாய்களை வீணாக்கிவிட்டாய்! ஏழு ரூபாய் எப்படிச் சம்பாதிப்பது என்று உனக்குத் தெரியுமா? இதுநாள்வரை ஒரு காசாவது நீ சம்பாதித்திருக்கிறாயா? இன்று என் கழிவுப் பாண்டத்திற்கு ஏழு ரூபாய் செலவிட்டிருக்கிறாய்! நாளை, வேறு ஏதாவது பயனற்ற பொருளுக்கும் இப்படித்தான் செலவு செய்வாய்! உன்னுடைய தாராள உள்ளத்தை நான் பாராட்டுகிறேன். ஆனால் அனுபவ புத்தியோடு நடந்து கொள்ளவேண்டும். நீ சுயமதிப்புக்கும், கௌரவத்துக்கு

மாக இப்பணத்தைச் செலவிட்டாய் என்று பிறர் எண்ண இடமுண்டு. ஆனால் நான் அவ்வாறு நினைக்கவில்லை கையில் பணம் இருக்கும்போது, நமக்கு இன்றியமையாத பொருள்களை நாம் வாங்கிக்கொள்வதில் தவறு ஏதும் இல்லை என்று நீ வாதிடலாம். ஆனால் அது மனிதனைத் தாழ்ச்சியில் கொண்டு சேர்க்கும். இதை நான் 2 மணிக்கே சொல்ல வேண்டுமென்று எண்ணினேன். ஆனால் முடியவில்லை. இவற்றையெல்லாம் உங்களுக்கு எதற்காகச் சொல்லு கிறேன் என்றால், இனிமேலாவது நீங்கள் இதுபோன்ற தவறுகள் செய்யக்கூடாது என்பதற்காகத்தான்'' என்று சொற்பொழிவையே செய்து முடித்தார் காந்தியடிகள்.

* * *

ஒருநாள் காலை காந்தியடிகளுக்குக் குடிநீர் சுட வைப்ப தற்குச் சிறிது காலதாமதம் ஏற்பட்டுவிட்டது. பனிக்கால மாக இருந்ததால் அன்று எளிதில் அடுப்புப் பற்றவைக்க முடியவில்லை. மனுகாந்தி தன் முன்தானையின் ஓரத்தில் சிறிது துணியைக் கிழித்து மண்ணெண்ணெயில் தோய்த்து அடுப்புப் பற்றவைக்க முனைந்தாள். காந்தியடி களின் கழுகுக் கண்கள் இதை எவ்வாறோ கவனித்து விட்டன.

''மனுதி! (காந்தியடிகள் இவ்வாறு செல்லமாகத் தன் பேத்தியை அழைப்பார்) உன் கையிலிருப்பது என்ன என்று நான் பார்க்கலாமா?'' என்று கேட்டார். மண் ணெண்ணெயில் தோய்த்த அத்துணியை மனு, காந்தியடி களிடம் காண்பித்தாள். அவர் அதைக் கையில் வாங்கிப் பிரித்துப் பார்த்தார். தலைக்கு வைத்துப் பின்னிக் கொள் ளும் நாடாவின் அளவு அது இருந்தது.

''மனு! இதைத் தூய்மைப்படுத்தி உலரவிடு. தலைக்கு வைத்து பின்னிக்கொள்ளும் நாடாவாகப் பயன்படும் அள வுள்ள ஒரு துணியை இவ்வாறு பாழ்படுத்தலாமா? நான்

எவ்வளவு பெரிய கருமி என்று உனக்குத் தெரியாதா? சிறிது தாமதமாகத் தண்ணீரைச் சுடவைப்பதால் என்ன குடிமுழுகிப் போய்விடும்? இந்தத் துணியை நனைப்பதற்கு எவ்வளவு மண்ணெண்ணெய் பாழாகியிருக்கும்! நான் இதைக் கவனிக்காமலிருந்தால், இத்துணியைத் தீயிலிட்டுப் பொசுக்கியிருப்பாய்! நல்ல பெண் நீ!" என்று கடிந்து கொண்டார் காந்தியடிகள்.

மனு காந்தியடிகளை நோக்கி, "பாபு! நாம் ஏன் அவ்வளவு கருமித்தனமாக இருக்கவேண்டும்?" என்று கேட்டாள்.

"நீ தாராள உள்ளமுடைய ஒரு தந்தைக்கு மகள், ஆனால் அவ்வாறு சம்பாதித்துக் கொடுக்க எனக்கு எந்தத் தந்தையுமில்லை. மனு! நான் விளையாட்டுக்காக எதேனும் சொன்னால்கூட, அதில் ஆழ்ந்த உண்மையிருக்கும். அதை நீ அறிந்துகொண்டால்தான் என் உள்ளம் திருப்தியடையும்" என்று கூறினார் காந்தியடிகள். மனு அவ்வாறே அத்துணியைத் தூய்மைப்படுத்திக் காயவைத்தாள். அருகில் கிடந்த வைக்கோலை எடுத்து, அதன் உதவியால் அடுப்புப் பற்றவைத்தாள். அளவற்ற அரசியல் பணிகளினிடையிலும்கூட, இதுபோன்ற சிறு விஷயங்களில் அறிவுரை கூறக் காந்தியடிகள் தவறமாட்டார்.

* * *

காந்தியடிகள் எப்போதும் இரவு 11 மணிக்குத்தான் உறங்கச் செல்வது வழக்கம். அதனால் அவருக்குப் பணிவிடை செய்யும் மனுபென்காந்தியும் அந்நேரம் வரையில் விழித்துக் கொண்டிருக்க நேரிடும். பிறகு பின்னிரவில் 2 மணிக்கே எழுந்துவிடுவார். அதோடு மனுவையும் எழுப்பிவிடுவார். மிகுந்த குளிர்நாட்களில் அவளால் எழுந்திருப்பது சற்றுத் தொல்லையாயிருக்கும். ஆனால் கடமை வீரனான காந்தியடிகளுக்குக் குளிரும் ஒன்றுதான்; வெயிலும் ஒன்றுதான்.

ஒருநாள் மனு, காந்தியடிகளை நோக்கி, "பாபு! நீங்கள் தாமதித்து எழுந்தாலோ அல்லது கடிகாரத்தில் மணியைப் பார்ப்பதில் தவறு செய்தாலோ நான் ஆண்டவனுக்கு நன்றி செலுத்தித் தீபம் கொண்டு வணங்குவேன்!" என்று சிரித்துக்கொண்டே கூறினாள்.

காந்தியடிகள் மனுவின் சொற்களைக் கேட்டு உரக்கச் சிரித்தார். "மனு! ஆண்டவன், நீ லஞ்சம் கொடுத்து ஏமாற்றும் அளவுக்கு ஏமாளியல்ல!" என்று கூறிவிட்டு உறங்கினார்.

பாவம்! ஆண்டவன் மனுவின் வேண்டுகோளுக்கு இரக்கம் காட்டியதாகத் தெரியவில்லை. சரியாக மணி இரண்டுக்குக் காந்தியடிகள் விழித்துக் கொண்டார். அன்போடு மனுவின் தலையில் தட்டி,"மனுதி! எழுந்திருந்து பார்! நீ கொடுப்பதாகச் சொன்ன லஞ்சத்தில் ஆண்டவன் ஏமாற வில்லை" என்று சொன்னார். பிறகு அவளை விளக்கேற்று மாறு சொன்னார். அப்பொழுது மனு, "பாபு! நாம் நாள் தோறும் உறங்கச் செல்லுவதற்கு மணி பத்து அல்லது பதினொன்று ஆகிவிடுகிறது. பிறகு இரண்டு மணிக்கே எழுந்து விடுகிறோம். அப்படியிருக்க, நாம் ஏன் விளக்கை அணைக்க வேண்டும். அணைக்காமல் மங்கலாக எரிய விட்டால் என்ன?" என்று கேட்டாள்.

"நீ சொல்வது ஒருவகையில் உண்மைதான். ஆனால் அவ்வளவு நேரம் எரிவதற்கு மண்ணெண்ணெய் யார் கொடுப்பார்கள்? நீயும் சம்பாதிப்பதில்லை; நானும் சம்பா திப்பதில்லை. நீ அவ்வாறு நினைப்பதற்குக் காரணம், உன்னுடைய தந்தை மகுவாவில் சம்பாதித்துக் கொண்டிருக் கிறார். விளக்கை அணைப்பதால் மண்ணெண்ணெய் மிச்ச மாவதோடு வேறு ஒரு நன்மையும் உள்ளது. விழித்தவுடன் மீண்டும் விளக்கை ஏற்றுவதால், நம் உறக்கம் பறந்து விடு கிறது. நான் ஏதாவது சொல்லி, நீ அதை எழுதும்போது

தூங்கிவிழமாட்டாய். இவ்வாறு ஒரே கல்லில் நான் இரண்டு பறவைகளை அடிக்கிறேன்'' என்று காந்தியடிகள் சொன்னார்.

*        *        *

காந்தியடிகள் நவகாளியில் சுற்றுப் பயணம் செய்து கொண்டிருந்தபோது, தேவிபுரம் என்ற இடத்தை அடைந்தார். அந்த ஊர் மக்கள் காந்தியடிகளை வரவேற்பதற்காக ஆடம்பரமாகச் செலவிட்டிருந்தனர். சுமார் 200 ரூபாய் வரையில் செலவாகி யிருக்கும். பொதுவாக ஒவ்வொரு ஊரிலும் எளிய முறையிலேயே அலங்காரங்களெல்லாம் இருக்கும். தென்னை ஓலையை எங்கும் அலங்காரமாகப் பின்னி, வளைத்துக் கட்டியிருப்பார்கள். காந்தியடிகள் ஒவ்வொரு ஊரிலும் நுழைந்தவுடன் அவ்வூர்ப் பெண்டிர் அடிகளின் நெற்றியில் திலகமிட்டு ஆரத்தி சுற்றி வரவேற்பார்கள். இவற்றைக் காந்தியடிகள் எப்போதும் எதிர்த்ததில்லை.

ஆனால் தேவிபுரமக்களோ, பூக்கள், வண்ணக் காகிதங்கள், பட்டு, வெள்ளி, தங்க நிறச் சரிகைகள் ஆகியவற்றைச் சந்தபுரத்திலிருந்து வாங்கி வந்து, அவற்றால் அலங்காரங்கள் செய்திருந்தனர். மிகவும் பெரிய அளவில் சரிகை வேலைப்பாட்டோடு கூடிய மாலையும் கட்டிவைத்திருந்தனர். இவற்றையெல்லாம் கண்ட காந்தியடிகள் மிகவும் சினங்கொண்டார். அவ்வூரின் தலைவர்களைப் பற்றியும் ஊர் மக்களைப் பற்றியும் காந்தியடிகள் விசாரிக்கச் சொன்னார். அவ்வூரில் இந்துக்கள் 300 பேரும் 150 இசுலாமியர்களும் இருப்பதாக மனுகாந்தி, அடிகளிடம் கூறினாள். அவ்வூர் காங்கிரஸ் தலைவரைக் காந்தியடிகள் வரவழைத்தார். "இவ்வளவு ஆடம்பரமாகச் செலவிடுவதற்குப் பணம் எங்கு பெற்றீர்?'' என்று கேட்டார்.

"பாபு! உங்கள் வருகை இவ்வூருக்குப் புனிதமானது. ஆகையினால் இங்குள்ள இந்துக்களிடம் மட்டும், எட்டணா

முதல் அவரவர் விருப்பம்போல் கொடுப்பவற்றை வசூல் செய்தோம். ரூ. 300 சேர்ந்தன. அப்பணத்தைக் கொண்டு இந்த ஏற்பாடுகளெல்லாம் செய்தோம்'' என்று அத்தலைவர் கூறினர்.

பாபுவின் சினம் எல்லை கடந்தது ''இந்த ஆடம்பர மான அலங்காரங்களெல்லாம் உடனே அகற்றப்பட வேண்டும். இச்செயல்களால் நீங்கள் என்னை ஏமாற்ற எண்ணி இருக்கிறீர்கள் என்று நினைக்கிறேன். என்னு டைய வருகைக்கு இத்தகைய ஆடம்பரமான செயல்களைச் செய்வதன் மூலம், நீங்கள் வகுப்புக் கலவரத்தை மீண்டும் கிண்டி விடுகிறீர்கள். நான் இத்தகைய வரவேற்பை எப் பொழுதும் விரும்புவதில்லை. இத்தகைய மாலை எனக்கு எதற்கு? கையினல் நூற்ற கதர் மாலையே போதும். அம் மாலையால் இரண்டுவிதப் பயன் உண்டு. ஒன்று, அது மாலையாகப் பயன் படுகிறது. மற்றொன்று அது ஆடை நெய்யப்பயன்படுகிறது. இதனல் உங்கள் கையில் அளவுக்கு மீறிப் பணம் இருக்கவேண்டும்; இல்லாவிட்டால் வகுப்புக் கலவரத்தால் துன்பமடைந்திருக்கும் இக்காலத் தில் இவ்வாறு செலவு செய்யத் துணிய மாட்டீர்கள்.

அதுவுமின்றி, நீர் ஒரு காங்கிரஸ் ஊழியர். நீர் என்னு டைய நூல்களைப் படித்திருப்பதாகக் கூறுகிறீர். நீர் ஒரு எம். ஏ. பட்டதாரி என்று கூறிக் கொள்கிறீர். சிறையிலும் இருந்ததாகக் கூறுகிறீர். இடையில் குறுகிய கதராடையை உடுத்துக் கொண்டிருக்கிறீர். அப்படியிருக்க வெளி நாட்டுப் பட்டையும் நாடாவை எவ்வாறு வாங்கினீர். இவைகள் யாவும் என் உள்ளத்தைப் புண்ணக்கி விட்டன. இப்போது சமூக ஊழியர்களாக இருக்கும் நீங்கள், எதிர்காலத்தில் பொறுப் பான அரசியல் பதவிகளில் அமர்த்தப்படலாம். அப்போது நீங்கள் ஆடம்பரமாகப் பிறருக்கு மாலை அணிவிக்கவும், ஏற்றுக் கொள்ளவும் தயங்கமாட்டீர்கள் என்று எண்ணுகிறேன்.

உங்களுடைய இச்செயல் என் கண்களைத் திறந்து எச்சரிக்கையளித்தது. உங்கள் உண்மைக்குறையை என்னிடம் மூடி மறைக்கப் பார்க்கிறீர்கள். ஆனால் இச் செயலின் மூலம் நான் எத்தகைய இடத்தில் இருக்கிறேன் என்று ஆண்டவன் எனக்குக் காட்டிவிட்டான். இன்னும் என்னென்ன கொடுமைகள் மறைந்திருக்குமோ என்று அஞ்சுகிறேன்" என்று அடிகள் கூறினார். உடனே அங்கிருந்த ஊழியர்கள் அலங்காரப் பொருள்களை எல்லாம் அரைமணி நேரத்தில் அகற்றிவிட்டனர். அம்மாலையிலிருந்த நூலை உருண்டையாகச் சுற்றச் சொன்னார். அதைத் துணி நெய்வோருக்கு வழங்கினார். பிறகு காந்தியடிகளுக்குக் கதர் மாலையும், 50 கெஜம் கதர்த்துணியும் வழங்கப் பட்டது. அத்துணியை ஏழை மக்களுக்கு அடிகள் வழங்கி விட்டார்.

* * *

காந்தியடிகள் 7-9-1947-இல் கல்கத்தா ஹைதரி மாளிகையிலிருந்து, வேற்றூருக்குக் கிளம்புவதற்காக புறப் பட்டார். மனுகாந்தியும், அப்பா பெகனும் சாமான்களைக் கட்டிக் கொண்டிருந்தார்கள். காந்தியடிகள் வாயிலைக் கடந்து வெளியில் வந்தபோது, சில சிறுமிகள் மாலைகளோடும் கைச்செண்டுகளோடும் காந்தியடிகளை வழியனுப்புவதற்காக வந்தார்கள். அவர்களில் மிகவும் சிறுமியாக இருந்த ஒருத்தி அடிகளுக்கு ஆரத்தி சுற்றினாள். அடிகள் அக்குழந்தையைப் பார்த்து, "குழந்தாய்! இந்த விளக்கை அணைத்து, இதிலுள்ள நெய் முழுவதையும் யாராவது ஒரு ஏழைக்குக் கொடு, எனக்கு ஆரத்தி சுற்றுவதற்காக இவ்வளவு நெய்யையா வீணாக்குவது? ஏழை, நெய்யைக் காண்பதற்குக்கூட வாய்ப்பு ஏற்படுவதில்லை" என்று கூறினார்.

# 17. பொதுப் பணம்

தென்னுப்பிரிக்காவில் 'நேடால் இந்தியக் காங்கிரஸ்' என்ற இயக்கத்தை ஏற்படுத்தியவர் காந்தியடிகள். இவர் இந்தியாவிற்குத் திரும்பிவிட்டபொழுது அவ்வியக்கத்தைப் பொறுப்பேற்று நடத்தி வந்தவர் ஆதம்ஜி மியாகான் என்பவர். அவர் நேடால் இந்தியக் காங்கிரசுக்கு ஆயிரம் பவுனுக்குமேல் நிதி சேர்த்திருந்தார். காந்தியடிகள் மீண்டும் தென் ஆப்பிரிக்கா திரும்பிவந்த நாட்களில் நடந்த சம்பவ (காந்தியடிகள் டர்பனில் தாக்கப்பட்ட சம்பவம்)த்தின் பயனுக, இந்திய மக்களிடையே பெரிய கிளர்ச்சி ஏற்பட்டிருந்தது. அதைப் பயன்படுத்திக் கொண்டு காந்தியடிகள் காங்கிரஸ் நிதியை 5000 பவுனுகப் பெருக்கினுர்.

இம்மாதிரி பொது நிறுவனங்களுக்கு நிரந்தரமான சொத்து அதிகம் சேர்த்து வைப்பது தவறு என்பது காந்தியடிகள் பிற்காலத்தில் கொண்ட உறுதியான கொள்கை. காந்தியடிகள் தென்னுப்பிரிக்காவைவிட்டு இந்தியாவுக்குத் திரும்பிய பிறகு, நேடால் காங்கிரசின் சொத்து நீதி மன்றத்தில் வழக்கு நடப்பதற்குக் காரணமாயிற்று. இதுவும், இன்னும் பல பொது நிறுவனங்களினுல் ஏற்பட்ட பட்டறிவும் காந்தியடிகளின் உள்ளத்தில் இக்கொள்கையை உறுதிப்படுத்தின. இதைப்பற்றிக் காந்தியடிகள் பின் கண்டவாறு தம் கருத்தை வெளியிட்டிருக்கிருர் :

"ஒரு பொது நிறுவனத்தின் நிலேயான நிதியிலே அதன் அறமுறை வீழ்ச்சிக்கு வித்து இருக்கிற தென்பதில் ஐயமில்லே. பொது நிறுவனம் என்ருல், பொதுமக்களின் இசைவுடன், பொதுமக்களின் பணத்தைக் கொண்டு நடக்கும் அமைப்பு என்று பொருள். அத்தகைய நிறுவனத்துக்குப் பொதுமக்களின் ஆதரவு எப்பொழுது இல்லாமல்

போகிறதோ, அப்போது அந்த நிறுவனம் இருப்பதற்கே உரிமை இழந்ததாகிறது. நிலையான நிதியைக்கொண்டு நடத்தப்படும் அமைப்புகள், பொதுமக்களின் கருத்தை மதியாமல் அதற்கு மாறாக அடிக்கடி செயல்புரிவதைக் காண்கிறோம். நம் நாட்டில் இந்நிலை எங்கும் காணப்படு கிறது. மத சம்பந்தமான நிறுவனங்கள் என்று கூறப்படும் அமைப்புகளில் பல கணக்குச் சொல்வதே கிடையாது. 'தருமகர்த்தா'க்கள் சொத்துக்குச் சொந்தக்காரராகி விட்டார்கள். அவர்கள் யாருக்கும் கணக்குச் சொல்லக் கடமைப் பட்டவர்களல்லர். இதையெல்லாம் பார்க்கும் போது, அன்றன்று வரும் வருவாயைக் கொண்டு வாழ்க்கை நடத்துவதே பொது நிறுவனங்களின் குறிக்கோளா யிருக்க வேண்டுமென்று நான் உறுதி கொண்டிருக்கிறேன். நிலையான கட்டிடங்கள் இல்லாமல் நடைபெற முடியாத சில நிறுவனங்கள் இருக்கின்றன. அவற்றிற்கு நான் மேற் கூறியவை பொருந்தா. பொது நிறுவனங்களின் நடைமுறைச் செலவுகள் ஆண்டாண்டுதோறும் கிடைக்கும் சந்தாத் தொகையைக் கொண்டே நடைபெற வேண்டு மென்பது என்னுடைய கருத்து."

காந்தியடிகள் மேலே கூறிய கருத்துக்கள் சிறந்த ஆராய்ச்சி, பட்டறிவு ஆகிய அடிப்படையினின்றும் கிளம் பிய அரிய உண்மைகள். பொதுப் பணத்தை எப்படி நிர்வகிக்க வேண்டும் என்று எண்ணுபவர்களுக்கும், பொது வாழ்வில் ஈடுபடும் அரசியல்வாதிகளுக்கும் இது அரிய பாடம்.

* * *

காந்தியடிகள் பொதுப் பணத்தை நிர்வகிப்பதில் எவ்வளவு கண்ணும் கருத்துமாக இருந்தாரோ, அதை விடப் பொது மக்களிடமிருந்து நன்கொடை பெறுவதிலும் அதிக எச்சரிக்கையோடு நடந்து கொண்டார். அதற்கு

அவருடைய வாழ்க்கையிலிருந்து அரிய பல எடுத்துக் காட்டுகள் அமைந்துள்ளன.

காந்தியடிகள் இரண்டாம் முறை தென்னுப்பிரிக்கா சென்றபோது தம் குடும்பத்துடன் சென்ருர். அங்கு ஐந்து ஆண்டுகள் தங்கித் தென்னுப்பிரிக்க இந்தியரின் முன்னேற்றத்திற்குப் பெரிதும் உழைத்தார். 1901-ஆம் ஆண்டில் தாய்நாட்டுக்குத் திரும்ப எண்ணிஞர். தென்னுப்பிரிக்காவில் மேலும் தங்கிஞல் பணம் சம்பாதிப்பதே முக்கியமான வேலையாகப் போய்விடுமென்றும், இந்தியாவுக்குச் சென்ருல் அதிகப் பயன் தரும் தொண்டு செய்யலாம் என்றும் நினைத்தார். தென்னுப்பிரிக்காவில் இந்தியர்களின் நலன்களைக் கவனித்துக் கொள்வதற்கு மனுசுக்லால், நாசர் முதலிய நண்பர்கள் இருந்தார்கள். காந்தியடிகளுடன் சேர்ந்து தொண்டு புரிந்ததில் அவர்களுக்கு நல்ல பயிற்சி ஏற்பட்டிருந்தது.

நண்பர்களிடம் காந்தியடிகள் தம் கருத்தைத் தெரிவித்தபோது அவர்கள் எளிதில் அதற்கு இணங்கவில்லை. கடைசியாக ஒரு நிபந்தனையின் பேரில் விடைகொடுக்க ஒப்புக் கொண்டார்கள். அந்த நிபந்தனை, தென்னுப்பிரிக்க இந்தியர்கள் மறுபடியும் காந்தியடிகளின் உதவி தங்களுக்குத் தேவை என்று கருதி அழைத்தால், காந்தியடிகள் எந்தத் தடையும் கூருமல் உடனே திரும்பிவந்து விட வேண்டும் என்பதுதான்.

இந்த நிபந்தனையைக் காந்தியடிகள் அவ்வளவாக விரும்பவில்லை யென்ருலும், நண்பர்களின் அன்புக்குக் கட்டுப்பட்டு அதை ஒப்புக் கொண்டார். பிறகு காந்தியடிகள் இந்தியா போவதை முன்னிட்டுப் பிரிவியல் விருந்துகளும், இன்னுரைகளும் தொடங்கின. நேட்டால் இந்தியர்கள் அன்பு என்னும் அமுத வெள்ளத்தில் காந்தியடிகளை மூழ்கடித்தார்கள். பல பரிசுப் பொருள்கள் அளிக்கப்

பட்டன. தங்கச் சாமான்கள், வெள்ளிச் சாமான்களோடு விலையுயர்ந்த வைர நகைகளும் பரிசாக அளிக்கப்பட்டன. இந்தப் பரிசுகளில், ஐம்பத்திரண்டு பவுன் பெறுமான முள்ள 'கண்டகாரம்' ஒன்றும் இருந்தது. இது காந்தி யடிகளின் மனைவியான கஸ்தூரிபாய்க்கென்று கொடுக்கப் பட்டது.

மேற்படி வெகுமதிகள் ஏராளமாகக் கிடைத்த ஒரு நாள் காந்தியடிகளுக்குத் தூக்கமே பிடிக்கவில்லை. பரிசு களைத் தாம் சொந்தத்துக்கு வைத்துக்கொள்வது ஏற்றதா என்று சிந்தித்தார். அவை பெரும்பாலும் சமூகத்துக்கு அவர் செய்த தொண்டின் பொருட்டு அளிக்கப்பட்டவை. அவற்றை ஏற்றுக் கொண்டால் சமூகத் தொண்டுக்குக் கூலி பெற்றுக் கொண்டதாகும். அது முறையாகுமா? ஆயிரக் கணக்கான ரூபாய் பெறுமானமுள்ள பரிசுகளை வேண்டாமென்று புறக்கணிப்பதும் எளிதான செயலில்லை. வேண்டாமென்று மறுப்பது காந்தியடிகளுக்கு விருப்பமா யிருந்தாலும், அதற்கு மனைவியும் குழந்தைகளும் ஒப்புக் கொள்ள வேண்டுமே? அவர்கள் ஒருவேளை எதிர்ப்புத் தெரிவித்தால் என்ன செய்வது?

காந்தியடிகளின் வீட்டில் அது வரை விலையுயர்ந்த நகை எதுவும் கிடையாது. தங்க, வெள்ளிச் சாமான்கள் கிடையவே கிடையா. நகைப் பித்தை ஒழிக்க வேண்டும் என்று காந்தியடிகள் மக்களுக்கு அடிக்கடி எடுத்துக் கூறி வந்தார். தம் குடும்பத்தில் அக் கொள்கையை உறுதியுடன் கடைப்பிடித்து வந்தார். அப்படி யிருக்க, இப்போது பரிசாகக் கிடைத்த தங்கக் கடிகாரங்கள், தங்கச் சங்கிலி கள், வைர மோதிரங்கள் ஆகியவற்றை என்ன செய்வது?

இரவெல்லாம் ஆழ்ந்து சிந்தித்துப் பரிசுகளைச் சொந் தத்துக்கு வைத்துக் கொள்ளக் கூடாது என்ற முடிவுக்கு வந்தார். அவற்றைத் தென்னாப்பிரிக்க இந்தியர் நலனுக்கே

உரிமையாக்குவதென்றும், அந்தச் சொத்தை நிர்வகிப் பதற்குப் பார்சி ரஸ்டம்ஜி முதலியவர்களைப் பொறுப் பாளர்களாக அமர்த்துவதென்றும் முடிவு செய்தார். அந்தப்படியே கடிதமும் எழுதி முடித்தார். அதன்பிறகு தான் அவரால் தூங்க முடிந்தது.

பொழுது விடிந்ததும் குழந்தைகளிடம் தம்முடைய முடிவைத் தெரிவித்தார். தந்தையின் உயர்ந்த எண்ணங் களில் பயிற்சி பெற்று, ஊறிப் போயிருந்த குழந்தைகள் அடிகளின் முடிவை உற்சாகமாக வரவேற்றனர். "அப்படி யானால் உங்கள் அம்மாவிடம் இதைப்பற்றிப் பேசி, அவளை இந்த ஏற்பாட்டுக்கு இணங்கச் செய்யுங்கள், பார்க்கலாம்!" என்றார் காந்தியடிகள்.

அவர் எதிர்பார்த்தது போலவே கஸ்தூரிபாயை இணங்கச்செய்வது அவ்வளவு எளிதான காரியமாகத்தெரிய வில்லை. கஸ்தூரிபாய் கூறியதாவது :

"உங்களுக்கு இப் பொருள்கள் தேவையில்லை. உங்கள் குழந்தைகளுக்கும் தேவையில்லை. நீங்கள் சொல்லுகிறபடி கேட்டுக் கொண்டு அவர்கள் உங்கள் விருப்பப்படி கூத்தாடு வார்கள். குழந்தைகளுக்கு என்ன தெரியும்? ஆனால் பரிசு களைத் திருப்பிக் கொடுக்க நான் ஒப்பமாட்டேன். என்னை நகை அணிந்து கொள்ளக் கூடாது என்று சொல்லுகிறீர் கள்; அதன்படி நான் நடக்கிறேன். ஆனால் நாளைக்கு நம் பிள்ளைகளை மணக்கும் நாட்டுப் பெண்களின் நிலை என்ன? அவர்களையும் நீங்கள் கட்டாயப்படுத்த முடியுமா? அவர் களுக்கு நகைகள் வேண்டி யிருக்கும். ஆகையால் திருப்பிக் கொடுக்கவே கூடாது" இவ்வாறு கஸ்தூரிபாய் சொல்லித் தம் வாதத்துக்குப் பக்கபலமாகக் கண்ணீர் வடிக்கத் தொடங்கினார். எனினும் காந்தியடிகள் சிறிதும் அசைந்து கொடுக்கவில்லை.

"குழந்தைகளுக்கு நாளைக்குத் திருமணம் செய்து வைக்கப் போகிறோமா? அவர்களுக்கு வயது வந்த பின் திருமணம் செய்து கொள்ளலாம். அப்போது அவர்களே தங்கள் காரியத்தைக் கவனித்துக்கொள்வார்கள். நாமாகத் திருமணம் செய்து வைத்தால், நகைப் பைத்தியம் பிடித்த பெண்களைத் திருமணம் செய்து வைக்கப் போவதில்லை. அப்படி உன் மருமக்களுக்கு நகை செய்து போடுவது இன்றி யமையாதது என்றால் நான் ஒருவன் இல்லையா? என்னைக் கேட்டால் வேண்டியதை வாங்கிக் கொடுக்கிறேன்!"

"உங்களையா கேட்பது? இவ்வளவு நாட்களுக்குப் பிறகும் உங்களைப்பற்றி எனக்குத் தெரியாதா? என்னுடைய நகைகளை யெல்லாம் நீங்கள்தானே பிடுங்கிக் கொண்டீர்கள். அப்படிப்பட்ட நீங்களா நாட்டுப் பெண் களுக்கு நகை செய்து போடப் போகிறீர்கள்? ஒருநாளும் இல்லை! இப்போதே என் குழந்தைகளைத் துறவிகளாக்கப் பார்க்கிறீரே! கூடாது! மேலும் என்னுடைய கண்டகாரத்தைக் கேட்பதற்கு நீங்கள் யார்? உங்களுக்கு என்ன உரிமை?

இதைக் கேட்ட காந்தியடிகள் சற்றுச் சினங்கொண்டு, "கண்டகாரம், இந்திய சமூகத்துக்கு நான் செய்த ஊழியத்துக்காகக் கொடுக்கப்பட்டதா? உன்னுடைய ஊழியத்துக்காகக் கொடுக்கப்பட்டதா?" என்று கேட்டார்.

"உங்களுடைய ஊழியத்துக்காகத்தான். அவ்வூழியத்தில் எனக்குப் பங்கில்லையா? உண்மையில் நான் ஒன்றும் செய்யவில்லையா? இரவும் பகலும் உங்களுக்காக உழைத்தேனே! அதெல்லாம் ஊழியமில்லையா? வழியோடு போகிறவர்களை யெல்லாம் வீட்டுக்கு அழைத்து வந்து என்னை வதைத்தீர்களே! அதெல்லாம் என்ன? உங்களுடைய விருந்தாளிகளுக்கெல்லாம் நான் அடிமையைப் போல் உழைக்கவில்லையா? அவைகட்காக இந்தக் கண்டகாரம் எனக்குத் தகாதா?"

கஸ்தூரிபாயின் கேள்விகளில் பெரிதும் உண்மையிருந்தது. ஆகையால் அவைகள் கூரிய அம்புகளைப்போல் காந்தியடிகளின் உள்ளத்தில் தைத்தன. எனினும் அவர் தம் உறுதியிலிருந்தும் பிறழவில்லை. மேலும் கஸ்தூரி பாயுடன் வாதாடிப் பரிசுகளைத் திருப்பிக் கொடுப்பதற்கு ஒத்துக்கொள்ளும்படி செய்தார்.

இந்த நிகழ்ச்சியைப்பற்றி விவரமாகச் சொல்லிவிட்டுக் காந்தியடிகள் தம் நூலில் முடிவாக எழுதியிருப்பதாவது :

"இவ்வாறு செய்ததன்பொருட்டு நான் எப்போதுமே வருந்தியதில்லை. நாளடைவில் என் மனைவியும் அப்படிச் செய்ததே அறிவுடைமை என்பதை நன்கு உணர்ந்து கொண்டாள். இதனால் எவ்வளவோ சோதனைகளுக்குள்ளாகாமல் நாங்கள் பாதுகாக்கப்பட்டோம். பொது ஊழியத்தில் ஈடுபட்டோர் விலையுயர்ந்த வெகுமதிகளை ஏற்றுக் கொள்ளக்கூடாதென்பது என் உறுதியான கொள்கை."

* * *

காந்தியடிகள் ஒருமுறை ஒரு பொதுக் கூட்டத்தில் பரிசு பெற்றுக்கொண்ட நிலையைப்பற்றி எல். டபிள்யூ. ரிச் என்ற வெள்ளையர் பின்கண்டவாறு குறிப்பிடுகிறார்.

"காந்தியடிகள் இந்தியா திரும்புவதற்கான ஆயத்தங்களில் ஈடுபட்டிருந்தபோது அவருக்குப் பல பரிசுகள் வழங்கப்பட்டன. எப்பொழுதும் பரிசுப் பொருள்களும் நன்கொடைகளும், ஒருவர் செய்த தொண்டுக்கு நன்றி தெரிவிப்பதற்காகப் பெரும்பாலும் அளிக்கப்படுவதில்லை. ஒரு சில பெரிய மனிதர்கள், பலபேர் கூடியிருக்கும் பொதுக்கூட்டத்தில், தங்களை விளம்பரப்படுத்திக் கொள்வதற்கும், தம்முடைய தாராள சிந்தையைப் பலருக்கும் வெளிப்படுத்துவதற்கும், பரிசுப் பொருள்களும் நன்கொடையும் வழங்குகின்றனர். காந்தியடிகளுக்கு ஒரு பொதுக் கூட்டத்தில் விலையுயர்ந்த தங்கக் கடிகாரமும் சங்கிலியும் வழங்கப்பட்

டன. அவைகளைக் கையில் வாங்கும்போது காந்தியடிகள் முகம் அடைந்த மாறுதலை விவரித்துக் கூற முடியாது. ஏதோ தீண்டத்தகாத ஒரு பொருளைத் தீண்டியவர்போல் அப் பொருளை வாங்கி மேசையின்மேல் வைத்துவிட்டார்.''

* * *

சபர்மதியில் முதன்முதலில் ஆசிரமம் துவக்கப்பட்ட போது போதிய கட்டிட வசதி அதில் கிடையாது. துணியாலான கூடாரங்களே இருந்தன. அப்போது கிரிஜா சங்கர் என்ற சோதிடர் ஒருவர் அடிக்கடி காந்தியடிகளைக் காண வருவார். அவர் ஆசிரம மாணவர்களுக்குச் சமஸ்கிருதம் சொல்லிக் கொடுத்துவந்தார். அவர் சோதிடத்தில் வல்லுநர். ஆமதாபாத்திலிருந்த பெரிய முதலாளிகளெல்லாம் அவர்பால் பெருநம்பிக்கை கொண்டிருந்தனர். அம் முதலாளிகளில் சோமலால்ஜி என்பவர் ஒருவர். அவர் காந்தி ஆசிரமத்தில் தேசியப் பாடசாலை கட்டுவதற்காக, நாற்பதாயிரம் ரூபாய் கிரிஜாசங்கர் மூலமாகக் கொடுத்து விடுவதாகச் சொல்லி அனுப்பினார். காந்தியடிகளும் அதற்கு ஒப்புக்கொண்டார். சோமலால்ஜி பணமும் கொடுத்தனுப்பினார். அச்சமயத்தில் இன்புளுயன்சா என்ற கொள்ளை நோய் ஆமதாபாத்தில் பரவியிருந்தது. நாள் தோறும் நூற்றுக்கணக்கானவர் இறந்து கொண்டிருந்தனர். ஆகையால் அவ்வாண்டு ஆசிரமத்தில் பள்ளிக் கட்டிடம் கட்ட இயலாத நிலை ஏற்பட்டது. எனவே காந்தியடிகள் அந்தப் பணத்தைச் சோதிடரிடம் கொடுத்து, "நாங்கள் இந்த ஆண்டு பள்ளிக்கூடம் கட்ட முடியவில்லை. ஆகையால் இப்பணத்தைச் சோமலால்ஜியிடம் திருப்பிக் கொடுத்துவிடுங்கள்'' என்று கூறினார்.

அதற்குச் சோதிடர், "இப்பொழுது கட்டாவிட்டால் நீங்கள் மறுபடி கட்டத்தானே போகிறீர்கள். பின் ஏன் திருப்பிக் கொடுக்க வேண்டும்? கட்டும்போது பயன்படுத்திக்கொள்ளலாமே!'' என்று சோதிடர் சொன்னார்.

"உண்மை! ஆனால் பிறருடைய பணத்தை அதுநாள் வரையில் வைத்துக் காக்க என்னால் ஆகாது. பள்ளி கட்டத் தொடங்கும்போது சோமலால்ஜியிடம் வாங்கிக் கொள்கிறேன். அவர் தராவிட்டால் வேறு யாரிடமாவது வாங்கிக் கொள்கிறேன்" என்று காந்தியடிகள் கூறினார்.

சோதிடர் வேறு வழியின்றி அப் பணத்தைச் சோம லால்ஜியிடம் கொண்டு சென்றார். சோமலாலோ, "ஒரு தடவை நன்கொடையாகக் கொடுத்த பணத்தை மீண்டும் நான் திரும்பப் பெற்றுக்கொள்ள மாட்டேன்" என்று கூறி ஏற்க மறுத்துவிட்டார்.

* * *

காந்தியடிகள் பொதுப்பணத்தைக் காப்பதில் எவ் வளவு கண்ணுங் கருத்துமாக இருந்தாரோ அதுபோல் பொதுப் பணத்தைச் சேர்ப்பதில் மிகவும் கருத்தாக இருந் தார். பொது நிதிகள் சேர்ப்பதில் காந்தியடிகளுக்கு இணை யான ஆற்றல் வாய்ந்தவர்கள் யாருமே கிடையாது. அப் போதெல்லாம் காந்தியடிகளைத் தரிசிக்கப் பல பெண் மணிகள் பக்தியுடன் வருவார்கள். தமிழ்நாட்டுப் பெண் மணிகள் நிறைய நகைகள் அணிந்து கொண்டிருப்பது வழக்கமல்லவா? தம்மைக் காணவரும் பெண்களைப் பார்த்து, "இந்த நகைகளை எதற்காக இப்படிச் சுமக் கிறீர்கள்? என்னிடம் கழற்றிக் கொடுத்துவிடுங்கள்; நல்ல காரியத்துக்குப் பயன்படுத்துகிறேன்" என்று கூசாமல் கேட்டுவிடுவார். இந்த வழக்கத்தை அறிந்த பிறகு, பெண் மணிகள் காந்தியடிகளின் அருகில் சென்று, அவரிடம் பேச வேண்டுமென்று ஆசைப்படுவது குறைந்துபோயிற்று

காந்தியடிகள், தமிழ்நாட்டுச் சுற்றுப்பயணத்தின் போது சேலம் வந்திருந்தார். அப்போது ஒரு சிறு சம்பவம் நிகழ்ந்தது. டாக்டர் வரதராஜுலு நாயுடு சேலத்தில் வாழ்ந்த காங்கிரஸ் தலைவர்களில் குறிப்பிடத்தக்கவர்.

அவர், தம் குடும்பத்துடன் காந்தியடிகளைக் காண்பதற்காக வந்தார். டாக்டர் நாயுடுவின் ஏழு வயதுச் சிறுமியும் வந்திருந்தாள். அப்பெண் கைகளில் நிறையத் தங்க வளையல்கள் அணிந்திருந்தாள்.

"இந்த வளையல்கள் உனக்கு எதற்கு? எனக்குக் கொடுத்துவிடு!" என்றார். காந்தியடிகள் கூறியதைத் திரு வாளர் நாயுடு தமிழில் தம் குழந்தைக்குச் சொன்னார். குழந்தை உடனே வளையல்களைக் கழற்றிக் கொடுத்துவிட்டாள்.

"நான் விளையாட்டாகக் கேட்டேன் அம்மா! நீயே வைத்துக்கொள்!" என்று அடிகள் பலதடவை சொல்லியும் அக் குழந்தை கேட்கவில்லை. காந்தியடிகளிடமிருந்து வளை களைத் திரும்பப் பெற்றுக்கொள்ளக் கண்டிப்பாக மறுத்து விட்டாள்.

* * *

1947-ஆம் ஆண்டு, அக்டோபர் திங்கள் இரண்டாம் நாள் வந்தது. அன்று காந்தியடிகளின் பிறந்தநாள். காந்தி யடிகள் சளியினாலும், இருமலினாலும், காய்ச்சலினாலும் அவதிப்பட்டுக் கொண்டிருந்தார். இருமல் சிலசமயங்களில் மிகவும் கடுமையாக இருக்கும். அச் சமயங்களில் அருகி லிருப்பவர்களுக்கு அவர் படும் துன்பம் பரிதாபமாக இருக் கும். இவ்விருமல் காந்தியடிகளுக்குப் பிடித்தால் மூன்று வாரங்களுக்கு உயிரை வாங்கிவிடும். மருத்துவர்கள் ஓய் வெடுத்துக் கொள்ளுமாறு எவ்வளவோ எடுத்துக் கூறியும் காந்தியடிகள் கேட்கவில்லை. காலைத் தொழுகை முடிந்த வுடன், உடனே அரிஜன் பத்திரிகைக்கு கட்டுரை எழுத வும், கடிதங்களுக்குப் பதில் எழுதவும் தொடங்கிவிட்டார்.

அன்று காந்தியடிகளைக் காண்பதற்காகப் பலரும் வந்துகொண்டே இருந்தனர். காட்கில், தேவதாஸ் காந்தி, அவர் குடும்பம், பட்நாகர், டாக்டர் ஜீவராஜ் மேதா, சர் ததார்சிங், ஆர்தர் மூர், சண்முகம் செட்டியார், பேராசிரியர்

மஜீத், சர்தார் வல்லபாய் படேல், மணிபென், கணேச தத்தா, எச் எல். ஏ. ஆங் (பர்மிய தூதர்), டாக்டர் எம். அவுங்கூ (சீனத்தூதர்), லேடி மவுண்ட் பேட்டன், ஹுமாயூன் கபீர் ஆகியோர் அவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள்.

அடிகளின் பிறந்தநாள், இந்திய மாதக் கணக்குப்படி வேறு நாள் வருகிறது. பாதருவா மாதம் 12ஆம் நாள் அவருடைய பிறந்தநாள். அன்று தில்லியிலிருந்த குஜராத்தியர், காந்தியடிகளுக்கு அளிப்பதற்காக நிதி திரட்டியிருந்தார்கள். காந்தியடிகளும் அந்த நிதியளிப்பு விழாவில் கலந்து கொள்ள ஒப்புதல் அளித்திருந்தார். இதை அறிந்த சர்தார்வல்லபாய் படேல், காந்தியடிகளைப் பார்த்து, "இவ்வாறு உடல்நலங் கெட்டு இருமிக்கொண்டிருக்கும் நிலையில், அவ்விழாவில் கலந்துகொள்ள ஏன் ஒப்பினீர்? நீர் மிகவும் பேராசைக்காரர். பணவாடை எத் திக்கிலிருந்தாவது உம் மூக்கில் உறைத்தால்போதும்; மரணப் படுக்கையிலிருந்து கூட எழுந்து உட்கார்ந்து விடுவீர். அந்தப் பணம் உங்கள் கைக்கு வந்து சேரத்தான் போகிறது. அப்படியிருக்கும்போது, விடாமல் இருமிக்கொண்டு நீங்கள் ஏன் அங்கு செல்லவேண்டும்? ஆனால், நான் சொல்வதை நீங்கள் கேட்கமாட்டீர் என்பது எனக்குத் தெரியும்!" என்று கூறினார்.

அருகிலிருந்தவர்கள் எல்லாம் சர்தாரின் பேச்சைக் கேட்டு மெய்மறந்து சிரித்தார்கள். அடிகளும் சிரித்தார். அடிகளுக்கும் சர்தாருக்கும் ஒட்டுறவு அத்தகையது. அங்கு வந்திருந்தவர்கள், படேலைச் சிறிது நேரம் அடிகளைப் பற்றிப் பேசவேண்டு மென்று கேட்டார்கள். படேல் மீண்டும் ஒரு நகைச்சுவை குண்டைத் தூக்கி எறிந்தார்.

"இன்று என்ன, என்னுடைய பிறந்த நாளா நான் பேசுவதற்கு? உங்கள் பரிசுப் பொருள்களையெல்லாம்

காந்தியடிகளுக்குத்தானே கொண்டு வந்திருக்கிறீர்கள்? எனக்கல்லவே? பிறகு ஏன் என்னைப் பேசச் சொல்லுகிறீர்! உங்களுக்குத் தெரியும், பாபு ஒரு பனியா என்று பனியாக்கள் எப்பொழுதும் பேராசைப் பிடித்தவர்கள்! இவரைப் பாருங்கள்! இவ்வளவு மெலிந்த நிலையிலும், இருமலிலும் உங்களை ஏமாற்றுவதற்காக, எவ்வளவு சீக்கிரம் புத்துணர்வு கொண்டவர் போல் காணப்படுகிறார். (கூடி இருந்தவர்கள் வாய்விட்டுச் சிரித்தனர்) நான் இப்பொழுது உங்களை வேண்டிக்கொள்வது ஒன்றே ஒன்று. அவரைத் தனிமையில் விட்டுவிடுங்கள். ஓய்வு பெறட்டும்!'' என்று கூறினார் படேல்.

* * *

*1934*-ஆம் ஆண்டு காந்தியடிகள் மேற்கொண்ட வரலாற்றுப் புகழ்பெற்ற உண்ணாவிரதத்திற்குப் பின், அரிஜன் நிதிக்காக அவர் தமிழ்நாட்டிற் ஒரு சுற்றுப்பிரயாணத்தை மேற்கொண்டார். கேரளாவில் தம் சுற்றுப் பயணத்தை முடித்துக்கொண்டு, திருநெல்வேலி மாவட்டம் வந்தார். திருநெல்வேலியிலிருந்து புறப்பட்டுத் தூத்துக்குடியை அடைந்தார். மாலைநேரம்; இருட்டிவிட்டது. கூட்டம் நடக்கும் இடத்தை அடிகள் அடைந்தார். மேடை மிகவும் அலங்காரமாக அமைக்கப்பட்டிருந்தது. வண்ண விளக்குகள் நாற்புறமும் ஒளிவீசின. அவற்றைக் கண்டு அடிகள் மிகவும் மகிழ்ந்தார். உடனே அவர் பனியா உள்ளம் விழித்துக் கொண்டது. அருகிலிருந்த டாக்டர் தி. சே. சௌ. இராசனை நோக்கி, ''இவ் வலங்காரங்களெல்லாம் எப்பணத்திலிருந்து செய்யப்பட்டுள்ளன? அரிஜன நிதியிலிருந்தா?'' என்று கேட்டார்.

''அவ்வாறு இருக்கமுடியாது. யாரோ ஒரு காண்டிரேக்டர் இச் செலவை விருப்பத்தோடு ஏற்றுக்கொண்டதாகக் கூறினார்கள்'' என்று இராசன் குறிப்பிட்டார். காந்தியடிகளின் உள்ளம் திருப்தியடையவில்லை. அதன்

உண்மையை உணரும் வரையில் கூட்டத்தைத் தொடங்க அடிகள் விரும்பவில்லை. வேறு வழியின்றி இராசன் கூட்ட நிர்வாகிகளை அழைக்கவேண்டியதாயிற்று. கூட்ட நிர்வாகியும் வந்து மேற்கூறிய பதிலையே கூறினார். அடிகள் உள்ளம் அப்போதும் திருப்தியடையவில்லை.

"அந்தக் காண்டிரேக்டர் வந்திருக்கின்றாரா? அவர் வந்திருந்தால் அழையுங்கள்" என்று கூறினார் காந்தியடிகள். பிறகு காண்டிரேக்டர் தாமே நேரில் வந்து, ஒத்துக் கொண்ட பிறகுதான் அடிகள் அக் கூட்டத்தைத் தொடங்கினார். உடனே இராசன் முதல் வேலையாகத் தமிழ்நாட்டின் மற்ற இடங்களுக்கெல்லாம், "அரிஜன நிதியிலிருந்து ஒருகாசுகூட வேறு எந்தச் செலவுக்கும் பயன்படுத்தக் கூடாது" என்று சுற்றறிக்கை விட்டார். இல்லாவிட்டால் இந்தக் கண்டிப்புக்காரப் பனியாவுக்கு யார் பதில் சொல்வது?

* * *

காந்தியடிகள் தேசபந்து நினைவு நிதிக்காக நாட்டில் சுற்றுப்பயணம் செய்துகொண்டிருந்தார். ஒவ்வொரு காங்கிரஸ் தொண்டரும் வீடுவீடாகச் சென்று நிதி திரட்ட வேண்டும் என்று வேண்டிக்கொண்டார். ஒரு காங்கிரஸ் தொண்டர் தாம் திரட்டிய நிதியில் 67 ரூபாய் உந்து வண்டிக்குச் செலவு செய்ததாக கணக்குக் காட்டியிருந்தார். இதைக் கண்ட காந்தியடிகள் மிகவும் சினங்கொண்டார். "உந்து வண்டிக்காக அவர் 67 ரூபாய் இந்த நிதியிலிருந்து செலவிட்டிருப்பதை நான் ஏற்றுக்கொள்ளமாட்டேன். இது போன்ற செயல்களை அநுமதித்தால் பொதுப்பணத்தின் தூய்மையே கெட்டுவிடும். அவர் அப்பணத்தைத் தம் கைப் பொறுப்பிலிருந்தோ அல்லது வேறு வழியிலோ ஈடு கட்டியே ஆகவேண்டும்" என்று கண்டிப்பாகக் கூறினார்.

* * *

1926-ஆம் ஆண்டு. திருவாளர் ஆண்ட்ரூஸ் சபர்மதியில் காந்தியடிகளோடு தங்கியிருந்தார். அவர் எப்போதாவது தம்முடைய பொதுப்பணிகளை ஒதுக்கி வைத்து ஓய்வு எடுத்துக்கொள்வதற்காகச் சபர்மதிக்கு வருவார்; ஏதாவது எழுத்து வேலையில் ஈடுபடுவார்.

அச்சமயத்தில் ஒருநாள் தென்னிந்தியாவிலிருந்து ஒரு இளைஞன் வந்திருந்தான். அவன் மாவட்டக் காங்கிரஸ் செயலாளராகப் பணியாற்றியவன். அரசியல் தொண்டில் ஈடுபடுவதற்காகத் தன்னுடைய ஆசிரியர்ப் பணியை விட்டவன். அம்மாவட்டத்தின் காங்கிரஸ் குழுவின் நிதி அவன் பொறுப்பில் விடப்பட்டிருந்தது. அரசியற் பணிகளுக்காக அவற்றை அவன் செலவிட்டுவிட்டான். ஆனால் அவைகட்குச் சரியான கணக்கு வைத்துக் கொள்ளவில்லை. ஆயிரம் ரூபாய்ச் செலவுக்குச் சரியான கணக்கில்லை. ஆனால் அவன் குற்றமற்றவன் என்பது எல்லோருக்கும் தெரியும். அவனுடைய நாணயத்தில் எல்லோருக்கும் நம்பிக்கையுண்டு. இருந்தாலும் மாவட்டக் காங்கிரஸ் செயற்குழு "ஆயிரம் ரூபாய்க்கும் கணக்குக் காட்டு; இல்லாவிட்டால் பணத்தை வைத்துவிட்டு மறுவேலையைப் பார்" என்று மென்னியைப் பிடிக்கத் தொடங்கியது. இளைஞன் செய்வதறியாது திகைத்தான். வேறுவழியறியாத அவன் நேராகச் சபர்மதி வந்தான். தன் நிலையைக் காந்தியடிகளிடம் எடுத்துக் கூறினான். காந்தியடிகளும் பொறுமையோடு அவன் கூறுவதைக் கேட்டார். பல குறுக்குக் கேள்விகள் கேட்டு அவன் குற்றமற்றவன் என்பதை உணர்ந்துகொண்டார். இறுதியில் அவ்விளைஞனைப் பார்த்து, "நான் அதற்காக இப்பொழுது என்ன செய்ய வேண்டும்?" என்று கேட்டார்.

"எங்கள் மாவட்டச் செயற்குழுவிற்கு என்னை மன்னித்து, அப்பணத்தைக் கேட்கவேண்டாமென்று ஒரு கடிதம் எழுதுங்கள்!" என்று கேட்டான்.

"என்னால் அப்படிச் செய்ய முடியாது! அதுவுமின்றி உன்னுடைய செயல் மன்னிக்க முடியாததாகும். பொதுப் பணத்தின் ஒவ்வொரு காசும் புனிதமான சொத்து. நீ அப் பணத்தைச் செலவிடுவதில் கண்ணும் கருத்துமாயிருந் திருக்க வேண்டும். நீ கணக்கில்லை என்று குறிப்பிடப்படும் ஒவ்வொரு காசும், என் கொள்கைப்படி உன்னால் கையாடப் பட்டதென்றே கருதப்படும். ஒரு பொதுத் தொண்டன் பொது நிதியின் கணக்கைச் சரியாக வைத்துக் கொள்ள வேண்டும் என்பது பணத்துக்காக அல்ல; அவன் நாணயத் துக்கும் நன்னடக்கைக்கும் தான்! இப்பொழுதும் ஒன்றும் குடி முழுகிப் போய்விடவில்லை. அப்பணத்தின் பெரும் பகுதிக்கு இன்றும் நீ பட்டியல் தேடலாம். இல்லாவிட் டால் அப்பணத்தை உன்னிடமிருந்து வசூல் செய்ய உங்கள் செயற்குழுவிற்கு நேரிய உரிமையிருக்கிறது. அவசியமேற் பட்டால் உன்னுடைய சொத்தையும் விற்று அப்பணத் திற்கு ஈடு கட்டவேண்டும்" என்று கண்டிப்போடு கூறினார் காந்தியடிகள்.

அவ்விளைஞன் பேயறைந்தவன்போல் பேந்தப் பேந்த விழித்தான். காந்தியடிகள் இவ்வாறு தயவு தாட்சணிய மின்றிக் கூறுவார் என்று அவன் சற்றும் எதிர்பார்க்க வில்லை. அவருடைய சாந்த முகத்தையும் கருணை ஒழுகும் கண்களையும் கணக்கிட்டுக் கொண்டு, அவருடைய இரக் கத்தை எதிர்பார்த்து ஓடிவந்தான். ஆனால் அவனுடைய அநுபவம் அவன் எதிர்பார்த்ததற்கு எதிர்மாறாக இருந்தது. குழந்தையைப்போல் தேம்பித் தேம்பி அழத் தொடங் கினான். அருகில் அமர்ந்திருந்த ஆண்ட்ரூசின் உள்ளம் இரக் கத்தால் உருகியது.

"தன் தவற்றை உணர்ந்து வருந்தும் ஒருவனிடம், தாங்கள் நடந்து கொள்ளும் முறை சரியல்ல" என்று அவர் அடிகளிடம் கூறினார்.

"ஆமாம்! அவன் தவற்றுக்காக வருந்துகிறுன். ஆனால் உள்ளத்தால் வருந்துவது திருந்துவதாகாது. அவன் செயலால் தன்னைத் திருத்திக் கொள்ள வேண்டும். தான் செய்த தவற்றுக்கு மாற்றுத் தேடவேண்டும். இவன் ஒரு காங்கிரஸ் தொண்டன். அதோடு படித்தவன். ஒவ்வொரு காங்கிரஸ் தொண்டனும் தன் நாணயத்தால் அக் கட்சிக்குப் புகழைத் தேடித்தரவேண்டும். இவன் உடனே திரும்பிச் சென்று கணக்குக் காட்டவேண்டிய ஒவ்வொரு காசையும் திருப்பிக் கொடுக்கவேண்டும். அதன் பிறகு வேண்டுமானுல் என்னுலான உதவியைச் செய்யலாம்" என்று கூறினுர் காந்தியடிகள்.

மீண்டும் ஒரு தொல்லை ஏற்பட்டது. ஊருக்குத் திரும்பிச் செல்ல அவ்விளைஞனிடம் காசு கிடையாது. புகைவண்டிக் கட்டணத்துக்கு ரூபாய் முப்பத்தைந்து வேண்டும். இதை உணர்ந்த ஆண்ட்ரூஸ் மிகவும் உள்ளம் இரங்கி, "பாபு! இந்தப் பணத்தை வேண்டுமானுல் நாம் கொடுத்து விடுவோம். அவன் விரைவில் ஊர் திரும்பி ஆவன செய்யட்டும்" என்று கூறினுர். காந்தியடிகள் அதற்கு ஒத்துக் கொள்ளவில்லை.

"முடியாது! நாம் எங்கிருந்து இவனுக்கு முப்பத்தைந்து ரூபாய் கொடுக்க முடியும். நம் இரண்டு பேரிடத்திலும் காசு கிடையாது. மக்கள் நம்மை நம்பிக் கொடுத்திருக்கும் பொதுப் பணத்திலிருந்துதானே கொடுக்க வேண்டும்? அது என்னுல் முடியாது. இவன் நடந்தே ஊர் திரும்பட்டும். முதலிலேயே காங்கிரஸ் செயற்குழுவிற்கு ஆயிரம் ரூபாய் கடன் பட்டிருக்கிறுன்! அதோடு இந்தக் கடனும் சேர வேண்டுமா? அப்படிக் கொடுத்தாலும், நாம் கூறிய அறிவுரைகளின்படி இவன் காரியங்களைச் செய்வான் என்று எப்படி நம்ப முடியும்? முதன் முதலில் பிறரைப் பணம் கேட்கும் பழக்கத்தையும், கடன் வாங்கும்

பழக்கத்தையும் அடக்கிப் பழகிக் கொள்ளட்டும்'' என்று கூறினார் காந்தியடிகள்.

''சபர்மதியிலிருந்து தென்னிந்தியாவுக்கு அவ்விளைஞனை நடந்து செல்லச் சொல்லுவது அவ்வளவு பொருத்தமாகத் தோன்றவில்லை'' என்று ஆண்ட்ரூஸ் கூறினார். காந்தியடிகள் தம் முடிவில் உறுதியாக இருந்தார். இளைஞனும் வேறு வழியின்றி ஊருக்குக் கிளம்பினான்.

''ஊருக்குத் திரும்பிச் சென்று சரியாக நடந்துகொள்; பிறகு எனக்குக் கடிதம் போடு. ஆண்டவன் உனக்குத் துணை புரிவார்!'' என்று காந்தியடிகள் அவ்விளைஞனைப் பார்த்துக் கூறினார்.

தீனபந்து ஆண்ட்ரூஸ் அவ்விளைஞனோடு புகைவண்டி நிலையம் வரை நடந்து சென்றார். தம்முடைய சட்டைப் பையிலிருந்து முப்பத்தைந்து ரூபாயை எடுத்து அவ்விளைஞன் கையில் கொடுத்தார். பிறகு ஆசிரமத்துக்குத் திரும்பினார். நேராகக் காந்தியடிகளிடம் சென்றார்.

''பாபு! நான் உங்களிடம் மன்னிப்புக் கேட்க விரும்புகிறேன்'' என்று சொன்னார் தீனபந்து.

''எனக்குத் தெரியும்! நீங்கள் அவனுக்குப் பணம் கொடுத்திருப்பீர்! அப்படித்தானே! நீர் திருத்த முடியாத ஆளய்யா!'' என்று கூறிச் சிரித்தார் காந்தியடிகள்.

காந்தியடிகள் பொதுப் பணத்தைச் செலவிடுவதைப் பற்றியும், அச் செலவினங்களைக் கணக்கு வைத்துக் கொள்வதைப் பற்றியும், தம் நூலில் குறிப்பிட்டுள்ளவற்றை இவ்விடத்தில் எடுத்துக்காட்டுவது மிகவும் பொருத்தம் என்று எண்ணுகிறேன்.

''பொது வேலைகளில் சில்லரைச் செலவுகளே பெருந் தொகைகளாகிவிடும் என்பதை நான் அறிந்தேன். எனவே ஆரம்பத்தில் ரசீதுப் புத்தகங்கள்கூட அச்சடிக்க வேண்டாமெனத் தீர்மானித்தேன். எனது அலுவலகத்தில் 'சைக்

ஸ்லோஸ்டைல்' என்னும் படிஎடுக்கும் கருவியில் ரசீதுகளும் அறிக்கைகளும் தயாரித்துக் கொண்டேன். காங்கிரசுக்கு நிதியும் உறுப்பினரும் நிறையச் சேர்ந்து, வேலையும் அதிகமான பின்னரே, ரசீதுப் புத்தகம், அறிக்கை முதலியன அச்சடிக்கத் தொடங்கினேன். எல்லாப் பொது நிறுவனங்களுக்கும் இத்தகைய சிக்கனம் இன்றியமையாதது. ஆனால் பெரும்பாலான நிறுவனங்கள் இந்த விஷயத்தில் கவனஞ் செலுத்துவதில்லை என்பதை அறிந்திருந்தேன்.

பொது மக்கள் தாங்கள் கொடுத்த பணத்துக்கு ரசீது பெறுவதில் கவலை காட்டுவதில்லை. ஆனால் நாங்கள் ரசீது கொடுப்பதை எப்போதும் வற்புறுத்திக்கொண்டு வந்தோம். ஒவ்வொரு காசுக்கும் கணக்கு வைத்தோம். நேடால் இந்தியக் காங்கிரசின் பழைய காகிதக் கட்டுக்களைப் புரட்டினால் இன்றும் 1894-ஆம் ஆண்டுக் கணக்குப் புத்தகத்தை அப்படியே காணலாம் என்று நான் துணிந்து கூற முடியும். எந்தப் பொது நிறுவனமும் வரவு செலவுக் கணக்கை ஒழுங்காக வைத்திருத்தல் இன்றியமையாதது. இல்லாவிட்டால் அந்த நிறுவனம் விரைவில் கெட்ட பெயர் எடுக்கும் என்பதில் ஐயமில்லை. ஒழுங்குபட்ட கணக்கு வையாமல் உண்மையைப் பாதுகாத்தல் இயலாத காரியம் என்பது நான் பட்டறிவால் கண்ட உண்மை."

* * *

தென்னாப்பிரிக்காவில் காந்தியடிகள் வாழ்ந்தபோது திரான்ஸ்வாலின் தலைநகரமான ஜொகன்னஸ்பர்க்கில், இந்தியர்கள் வாழ்ந்த கூலிச்சேரியில் பிளேக் என்னும் கொள்ளை நோய் பரவிப் பலர் உயிரைக் குடித்தது. அந்நோய் எங்கு வெள்ளையரையும் பற்றிவிடுமோ என்று அஞ்சிய ஜொகன்னஸ்பர்க் நகரசபை, அச்சேரியையே தீக்கிரையாக்கிவிட்டுப் புதிதாக வேறொன்றைக் கட்டிக் கொடுக்க விரும்பியது. கூலிச்சேரியில் வாழ்ந்த இந்தியர் எல்லோரும், ஜொகன்னஸ்பர்க்கிற்கு வெளியில்

பதின்மூன்றுகல் தொலைவில் உள்ள திறந்த வெளியொன்றில் மூன்று வாரம் வசிக்க வேண்டுமென்று ஏற்பாடாயிற்று. எல்லோரும் புறப்படத் தயாரானார்கள்.

அவரவர்களும் வெகுகாலமாகப் பாடுபட்டுத் தேடி ஏதோ கொஞ்சம் பணம் மீத்துவைத்திருந்தார்கள். பணத்தைப் பாங்கியில் போடுவதென்பது அவ்வேழைத் தொழிலாளிகளுக்குத் தெரியவே தெரியாது. அவர்கள் வாழ்ந்த குடிசையில் நிலத்தைத் தோண்டிப் புதைத்து வைத்திருந்தார்கள். மேற்படி சிறு தொகைகளை என்ன செய்வது என்பது பற்றிக் கவலையுண்டாயிற்று. திறந்த வெளியில் வசிக்கப்போகும் இடத்திற்குப் பணத்தைக் கொண்டுபோக அவர்கள் உள்ளம் இடங்கொடுக்கவில்லை. திருட்டுப்போய் விட்டால் என்ன செய்வது? காந்தியடிகளிடம் முறையிட்டார்கள்.

"பாங்கியில் போடுங்கள்!" என்று காந்தியடிகள் கூறினார்.

"எங்களுக்குப் பாங்கியில் போடத் தெரியாது! போட்டால் திரும்பி வருமோ, என்னமோ? யார் கண்டது? பாங்கியின் பக்கம் போவதே எங்களுக்குக் கடினம். உங்களிடமே கொடுத்து விடுகிறோம். நீங்கள் வைத்திருந்து திருப்பிக் கொடுத்து விடுங்கள்! உங்களிடம் பணம் இருந்தால் எங்களுக்குக் கவலையில்லை!" என்று சொன்னார்கள்.

அந்த ஏழை மக்கள் தம்மிடத்தில் காட்டிய நம்பிக்கை அவர் உள்ளத்தை உருக்கியது. அவர்களுடைய பாங்கியாக இருந்து உதவ ஒப்புக் கொண்டார். இது எளிதான செயலல்ல. நூற்றுக் கணக்கான இந்தியர்கள் தங்களுடைய சேமிப்புப் பணத்தைக் கொண்டு வந்து கொடுத்தார்கள். பெரும்பாலும் செப்புக் காசுகளும் வெள்ளி நாணயங்களுமாக வந்து குவிந்தன. இவற்றையெல்லாம் எண்ணி எடுத்துக் கொண்டு அவரவர்கள் பேரில் கணக்கெழுத வேண்டும். அவ்வளவு நாணயங்களையும் காந்தியடிகளால்

எப்படி வைத்திருக்க முடியும்? தம்முடைய பெயரில் பாங்கிக்குத்தான் அனுப்ப வேண்டும். பிளேக் நோய்ப் பகுதியிலிருந்து வந்தவை என்று பாங்கிக்காரர்கள் எடுத்துக்கொள்ள மறுக்கக் கூடும். பாங்க் நிருவாகியைக் கண்டு நேரில் பேசி ஏற்றுக் கொள்ளுமாறு செய்தார். நாணயங்களையெல்லாம் மருந்து நீரில் கழுவித் தூய்மைப் படுத்திப் பாங்கிக்கு அனுப்பினார். மொத்தம் 60,000 பவுன் காந்தியடிகளிடம் அவ்வேழை மக்களால் ஒப்படைக்கப் பட்டது. அவ்வளவையும் காத்துக் கணக்கு வைத்திருந்து, பிறகு திருப்பிக் கொடுத்தார்.

## 18. பிடிவாதம்

இந்தியாவிலுள்ள சுதேச சமஸ்தானங்களை மேற் பார்வையிட ஆங்கில அரசாங்கம் 'பொலிடிகல் ஏஜெண்டு' என்ற அதிகாரிகளை அமர்த்திக் கொண்டு வந்தார்கள். ஒரு சமயம் ஒரு பொலிடிகல் ஏஜெண்டு இராச கோட்டை மன்னரைப்பற்றிச் சிறிது மதிப்புக்குறைவாகப்பேசினாராம். உடனே அங்கு திவானாக இருந்த திருவாளர் காபா காந்தி (காந்தியடிகளின் தந்தை) குறுக்கிட்டு எதிர்ப்புத் தெரிவித்தாராம். பொலிடிகல் ஏஜெண்டு துரை, அப்பொழு தெல்லாம் ஆணவம் படைத்திருந்த ஆங்கில அரசாங்கத்தின் பிரதிநிதியல்லவா? துரைக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்து விட்டது. காபாகாந்தி உடனே தம்மிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும் என்று துரை சொன்னாராம். திரு. காபா காந்தி 'முடியாது' என்றாராம். துரை அவரை காவலில் வைத்தாராம். அதற்கும் மன்னிப்புக் கேட்க இணங்க வில்லையாம். சிலமணி நேரத்துக்குப் பிறகு, பொலிடிகல் ஏஜெண்டு அவரை விடுதலை செய்து விட்டாராம்.

தந்தையிடம் இருந்த பிடிவாத உணர்ச்சி, காந்தியடி களிடம் ஆயிரம் மடங்கு பெருகி வளர்ந்திருந்தது. சிறந்த

அரசியல்வாதிகளும், சீர்திருத்தவாதிகளும், தங்களுடைய கொள்கை சரியானது என்று பட்டால், பிடிவாதமாக இருந்து அதை நிலை நாட்டத் தவறுதில்லை. குறிப்பாகச் சொன்னால் பிடிவாதம் அரசியல்வாதிகளுக்கு இன்றியமையாத ஒரு அரும்பண்பாகும்.

* * *

காந்தியடிகளும் அவருடைய தென்னாப்பிரிக்க நண்பர்களும், காங்கிரஸ் உறுப்பினர் சேர்ப்பதற்காக நேடாலில் உள்ள தொலைவான ஊர்களுக்கும் செல்லுவதுண்டு. ஆங்காங்கிருந்த இந்திய வணிகர்கள் உற்சாகமாக வரவேற்று விருந்தளித்து, உறுப்பினராகவும் சேருவார்கள். பல இடங்களிலிருந்து காந்தியடிகளுக்கு அழைப்பு வந்து கொண்டிருந்தது.

இத்தகைய சுற்றுப்பயணத்தின்போது, ஒருமுறை ஒரு ஊரில் இக்கட்டான நிலைமை ஏற்பட்டது. அந்த ஊரில் யாருடைய விருந்தாளிகளாகக் காந்தியடிகளும் நண்பர்களும் தங்கினார்களோ, அந்த மனிதர் நல்ல பணக்காரர். அவரிடமிருந்து ஆண்டுக்கு ஆறு பவுன் சந்தா எதிர்பார்த்தார்கள். அவரோ மூன்று பவுன்தான் கொடுப்பேன் என்று பிடிவாதம் பிடித்தார். கொடாக்கண்டர்—விடாக்கண்டர் கதை நடந்தது. அவரிடம் மூன்று பவுன் வாங்கி விட்டால் மற்றவர்கள் யாரும் அதற்குமேல் கொடுக்க மாட்டார்கள். தேவைப்பட்ட தொகை சேராது. எனவே வெகுநேரம் வரையில் விவாதம் நீடித்தது. ஒருவரும் சாப்பிட்டபாடில்லை.

எல்லோருக்கும் பசி அதிகமாயிருந்தாலும், ஆறு பவுன் வசூலிக்காமல் சாப்பிடுவதில்லை என்று உறுதியாயிருந்தார்கள். அந்த வணிகரும் வழிக்கு வருபவராகத் தெரியவில்லை. அதே ஊரைச் சேர்ந்த மற்ற வணிகர்கள் மன்றாடியும் பயனில்லை. இரவில் பெரும்பகுதி இவ்விதம் கழிந்த பிறகு,

நான்காம் சாமத்தில் அந் நண்பர் வழிக்கு வந்து ஆறு பவுன் தர ஒப்புக் கொண்டார். பிறகு விருந்தும் நடந்தது. இச் செய்தி நாற்புறமும் பரவியபடியால் சந்தா வசூலும் எளிதாயிற்று.

* * *

சந்தா வசூலிப்பதில் அடிகள் எவ்வளவு பிடிவாதக்காரராக இருந்தாரோ, அதேபோல அரசியலிலும் பிடிவாதக்காரராகவே இருந்தார்.

1922-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 12-ஆம் தேதி காந்தியடிகள் பர்தோலியில் அஹிம்சையைக் கடைப் பிடித்துப் பொதுசனச் சட்டமறுப்பைத் துவங்குவதற்கு வேண்டிய ஆயத்தங்களில் ஈடுபட்டிருந்தார். அப்போது திடீரென்று ஒரு எதிர்பாராத சம்பவம் நிகழ்ந்து விட்டது. பிப்ரவரி 8-ஆந் தேதி, ஐக்கிய மாநிலத்தில், கோரக்பூர் மாவட்டத்தைச் சேர்ந்த 'சௌரிசௌரா' என்ற சிறு நகரில், வெறிகொண்ட மக்கட் கூட்டமொன்று 'காவல் நிலையம்' ஒன்றைத் தாக்கி நெருப்பு வைத்து இருபத்தொரு காவல் வீரர்களையும் உயிரோடு கொளுத்திக் கொன்று விட்டது. இச் செய்தியை உணர்ந்த காந்தியடிகள் அடக்க முடியாத கவலைக்குள்ளானார். மக்களின் வெறிச் செயலை எண்ணிக் கண்ணீர் வடித்தார். இன்னும் இந்திய நாட்டு மக்களுக்கு அஹிம்சையின் தத்துவம் புரியவில்லை என்று கூறிச் சட்ட மறுப்பை நிறுத்தி விட்டார். இந்தியத் தலைவர்களுக்கும், தொண்டர்களுக்கும் இது பெரிய ஏமாற்றமாகி விட்டது. எவ்வளவோ கேட்டுக் கொண்டும் காந்தியடிகள் சட்ட மறுப்பைத் தொடங்கவில்லை.

1921-ஆம் ஆண்டு இந்தியநாட்டு வரலாற்றில் ஒரு குறிப்பிடத்தக்க ஆண்டாகும். அந்த ஆண்டில்தான் இந்திய மக்கள் இமயம் முதல் குமரிவரை வீறு கொண்டு விழித்தெழுந்தார்கள். அவ்வாண்டு வேல்ஸ் இளவரசர்

ஐந்தாம் ஜார்ஜ் இந்தியா வந்தார். இளவரசர் இந்தியாவில் எந்த எந்த ஊர்களுக்கு வருகிறாரோ அங்கெல்லாம் 'அர்த்தால்' நடத்தும்படி காங்கிரஸ்-கிலாபத் இயக்கங்கள் முடிவு செய்திருந்தன. இதை எவ்வாறேனும் தடுத்து நிறுத்த வேண்டும் என்று அப்போது இந்தியநாட்டு வைசிராயாக இருந்த ரெடிங் பிரபு பெரிதும் முயன்றார். எப்படியாவது இவ்வியக்கங்களோடு சமாதானம் செய்துகொள்ளத் துடியாய்த் துடித்தார். இரு தரப்பிலும் சமாதானம் செய்து வைப்பதற்காகப் பண்டித மதனமோகன மாளவியா பெரிதும் முயன்றார். அப்போது சிறையில் இருந்த பெருந் தலைவர்களான சித்தரஞ்சனதாஸ், ஆசாத் ஆகியோரும் சமாதானத்தை ஏற்றுக்கொள்ள விரும்பினர். கம்பிச் செய்திகளும் அனுப்பினர். அத்தனைக்கும் காந்தியடிகள் ஒரு நூல் கோட அசைந்து கொடுக்கவில்லை.

*　　　*　　　*

1919-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 13-ஆம் நாள் அமிருதசரசில் குருதியாறு பெருக்கெடுத்தோடியது. ஜெனரல் டயர் என்ற வெள்ளை வெறியன் ஜாலியன்வாலா பாக் என்ற மந்தைவெளியில், காங்கிரஸ் பொதுக்கூட்டத்துக்காகக் கூடியிருந்த மக்களைத் தெருநாயைச் சுடுவதுபோல் சுட்டு வீழ்த்தினான். அந்தப் படுகொலையில் தம் ஆவியை நல்கிய தியாகிகளுக்கு நினைவுச் சின்னம் எழுப்ப, அவர்கள் இன்னுயிர் நல்கிய ஜாலியன்வாலாபாக்கையே விலைக்கு வாங்க முடிவு செய்தனர். அதை வாங்குவதற்குரிய பணத்தை அமிருதசரஸ் மக்களிடமிருந்தே வசூல் செய்வது என்று முடிவு செய்தனர். ஆனால் அமிருதசரஸ் வணிகர்கள் எளிதில் உடன்படுவதாகக் காணோம். பண்டித மாளவியா தம் பேச்சுத் திறமையை எல்லாம் பயன்படுத்திப் பார்த்தார். அவ்வணிகர்களிடமிருந்து பணம் பெயருவதாகக் காணோம். உடனே காந்தியடிகளின் முறை வந்தது. 'நீங்கள் பணம் சேர்த்துக் கொடுக்கா விட்டாலும்,

ஜாலியன் வாலாபாக்கை நான் வாங்காமல் விடமாட்டேன். என் ஆசிரமத்தை விற்று வாங்கப் போகிறேன்" என்று சொன்னார். உடனே வேறு எதுவும் பேசாமல் அவ் வணிகர்கள் பணம் சேர்த்துக் கொடுக்க இசைந்தனர்.

## 19. பொறுப்புணர்ச்சி

காந்தியடிகள் எவ்வளவு சிறிய வேலையாக இருந்தாலும் பொறுப்புணர்ச்சியோடு நடந்துகொள்ள வேண்டும் என்பதில் அளவற்ற விருப்பம் உடையவர். அரசியற் பணியாக இருந்தாலும் சரி; அல்லது ஆசிரமப் பணியாக இருந்தாலும் சரி; அருகிலிருந்து பொறுப்போடு கற்றுக் கொடுப்பார். தமக்கிருக்கும் இடையறாத அலுவல்களின் இடையிலும், காலையில் சமையலறைக்கு வந்து ஆசிரமவாசிகளோடு சேர்ந்து தாமே காய்கறிகளை நறுக்குவார். எவ்வாறு சமையல் செய்யவேண்டுமென்பதையும் கற்றுக் கொடுப்பார். மற்றவர்களும் பொறுப்போடு நடந்து கொள்வதற்காகத் தாமே அப்பணிகளைப் பொறுப்புடன் செய்து காட்டுவார். அவரிடத்தில் அலட்சிய புத்தியை எப்போதும் காண முடியாது. சில சமயங்கள் ஏதேனும் ஒருசிறு பொருளை இழக்க நேர்ந்தால், அதைப்பற்றி நாம் கவலைப்படமாட்டோம். போனால் போகிறது என்று பொறுப்பற்று இருந்து விடுவோம். ஆனால் காந்தியடிகள் ஒரு சிறு பொருளாக இருந்தாலும், அதைப் பொறுப்பின்றி இழக்கமாட்டார்.

ஒருநாள் காந்தியடிகள் வைத்திருந்த சிறிய பென்சில் ஒன்று தொலைந்து விட்டது. அதைக் கண்டுபிடிப்பதற்காக அவர் அரும்பாடு பட்டார். புத்தகங்களைப் புரட்டிப் பார்த்தார். மேசை நாற்காலிகளைப் புரட்டித் தேடினார். பெட்டிகளைக் குடைந்து தேடினார். இரண்டு அங்குல நீளமுள்ள அந்த எழுதுகோல் எங்கோ மறைந்து கொண்டு அவரோடு கண்ணாம்பூச்சி விளையாடியது. அவரும் அரைமணி நேர

மாக அவ்வேட்டையில் ஈடுபட்டார். காந்தியடிகளின் நிலையைக் கண்ட ஒரு நண்பர் தம்மிடமிருந்த ஒரு முழுப் பென்சிலைக் கொடுத்தார். காந்தியடிகள் அதை ஏற்க மறுத்து விட்டார்.

"எனக்கு என் துண்டுப் பென்சில்தான் வேண்டும்" என்றார் அடிகள்.

மற்றொரு நண்பர் தம்மிடமிருந்த ஒரு துண்டுப் பென்சிலை எடுத்து அடிகளிடம் நீட்டினார்.

"வேறொருவர் பென்சிலை ஏற்றுக்கொண்டு நான் திருப்தியடைந்து விடவேண்டுமென்று நீர் விரும்புகிறீர். நான் உங்களை ஒன்று கேட்கிறேன். உங்கள் குழந்தை காணமல் போய்விடுகிறதென்று வைத்துக் கொள்வோம். வேறொரு குழந்தையைக் கொண்டுவந்து உம்மிடம் கொடுத்தால் அதை ஏற்றுக்கொண்டு திருப்தியடைவீரா?" என்று அந்த நண்பரைப் பார்த்து அடிகள் கேட்டார்.

பிறகு எல்லோருமாகத் தேடி அந்தப் பென்சிலை எடுத்துக் கொடுத்தார்கள். காந்தியடிகள் இழந்த தம் துண்டுப் பென்சிலை மீண்டும் பெற்றதில், அளவற்ற மகிழ்ச்சியடைந்தார். அந்தப் பென்சில், சென்னையில் ஒரு சிறுவனால் காந்தியடிகளுக்குப் பரிசாகக் கொடுக்கப்பட்டது.

* * *

நவகாளியில் காந்தியடிகள் சுற்றுப்பயணம் செய்த போது ஒரு குறிப்பிடத்தக்க சம்பவம் நிகழ்ந்தது. காந்தியடிகள் தாம் பொறுப்புணர்ச்சியோடு நடந்து கொண்டதோடு, பிறரையும் பொறுப்புணர்ச்சியோடு நடக்க வேண்டும் என்று எந்த அளவு எதிர்பார்த்தார் என்பதற்கு அந் நிகழ்ச்சி சிறந்த எடுத்துக்காட்டாகும். காந்தியடிகள் நவகாளியில் ஒவ்வொரு சிற்றூராக நாள்தோறும் சென்று, அமைதியை நிலைநாட்டினார். ஒருநாள் நாராயணபுரி (Narayanpur) என்ற ஒரு சிற்றூரை அடைந்தார்.

அப்பொழுது மாலை 7 மணி இருக்கும். ஒரு நெசவாளியின் வீட்டிலே தங்க ஏற்பாடாகி யிருந்தது. நாள்தோறும் தம் சுற்றுப் பயணத்தை முடித்துக் கொண்டு தம்முடைய அடிகளைச் சுடு நீரால் கழுவிக் கொண்டு ஏதேனும் எழுதுவது வழக்கம். அதற்குள் மனுகாந்தி குளிப்பதற்காக வெந்நீர் போடுவாள். பிறகு காந்தியடிகள் குளித்துக் கொள்வார்.

காந்தியடிகள் எப்பொழுதும் குளிக்கும் போது சோப்பைப் பயன்படுத்துவதில்லை. சொரசொரப்பான கல்லையே அழுக்குத் தேய்க்கப் பயன்படுத்துவார். அந்தக் கல் பல ஆண்டுகளுக்கு முன்பாக மீராபென் என்ற அம்மையாரால் அவருக்குக் கொடுக்கப்பட்டது. அந்தக் கல் மறு நாள் காலையில் தேடும்போது கிடைக்கவில்லை அக்கல்லை முதல்நாள் தங்கியிருந்த இடத்திலேயே விட்டுவிட்டு வந்து விட்டாள் மனு. அவள் காந்தியடிகளை நோக்கி, "பாபு! நீங்கள் உடம்புத் தேய்த்துக்கொள்ளப் பயன்படுத்தும் கல்லை எங்கோ தவறவிட்டுவிட்டேன். நாம் நேற்றுத் தங்கியிருந்த வீட்டில் வைத்துவிட்டு வந்துவிட்டேன் போலிருக்கிறது. இப்போது என்ன செய்வதென்று புரியவில்லை" என்று நடுங்கும் குரலில் சொன்னாள்.

காந்தியடிகள் சிறிது நேரம் பேசாமல் இருந்தார். பிறகு, "மனுதி! நீ உண்மையில் தவறு செய்துவிட்டாய் என்பதில் ஐயமில்லை. நீ திரும்பிச்சென்று அக்கல்லைத் தேடி எடுத்துவர வேண்டும் என்று விரும்புகிறேன். நிர்மல் பாபுவை எனக்கு சமையல் செய்யச்சொல்லு. நீ தனியாகச் சென்று அக்கல்லைத் தேடவேண்டும், அவ்வாறு செய்தால் தான் மறுமுறை அதைத் தவறவிடமாட்டாய்" என்று கூறினார்.

மனு, காந்தியடிகளிடம், "பாபு! இங்கு பல தொண்டர்கள் இருக்கிறார்கள். அவர்களில் யாரையேனும் உடன் அழைத்துச் செல்லட்டுமா?" என்று கேட்டாள்.

"ஏன்?" என்றார் அடிகள். அதற்கு எவ்வாறு விடையிறுப்பதென்று மனுவுக்குப் புரியவில்லை. நவகாளியில் தென்னைமரங்களும், பாக்குமரங்களும் காடுபோல் வளர்ந்திருந்தன. புதிதாகச் செல்லும் ஒருவர் அக்காட்டின் நடுவே எளிதில் வழி தவறக்கூடும். அதுவுமல்லாமல் வகுப்புக்கலவரம் அப்போது மிகுந்திருந்த நேரம். மனுதி செல்லும் பாதை தனிமையானது. அப்பாதையின் வழியில் அங்கொன்றும் இங்கொன்றுமாக அமைந்திருந்த சில வீடுகளிலும் இஸ்லாமியர்களே குடியிருந்தார்கள். அஞ்சத்தக்க அத் தனிவழியில், மனு தனியே செல்ல வேண்டியிருந்தது. பாவம்! அவள் தான் அடிகளின் கணக்குப்படி பெருந்தவறு செய்துவிட்டாளே!

'போகும் வழியில் யாராவது ஒரு வகுப்பு வெறி கொண்ட முரடன் தன்னை வழிமறித்தால் யாதுசெய்வது?" என்று ஒரு முறை எண்ணிப் பார்த்தாள். அவள் உள்ளம் அச்சத்தால் அதிர்ந்தது. அவள் நா ராமநாமத்தை ஜெபிக்கத் தொடங்கியது. அவள் கால்கள் ஒற்றையடிப்பாதையில் விரைந்து சென்றுகொண்டிருந்தன. மிகுந்த தொல்லைப்பட்டு அந்தச் சிற்றூரை அடைந்தாள். முதல்நாள் தங்கியிருந்த அந்த வீட்டில், ஒரு கிழவி இருந்தாள். அவளுக்கு எப்படித் தெரியும் அக்கல் உயர்ந்தது என்று? அதை வெளியில் எடுத்து எறிந்துவிட்டாள். நீண்டநேரம் தேடிக் கடைசியாக அக்கல்லைக் கண்டுபிடித்தாள் மனு. அவளுக்குப் போன உயிர் திரும்பிவந்தது.

உடனே நாராயணபுரியை நோக்கிப் புறப்பட்டாள். பிற்பகல் ஒரு மணிக்கு நாராயணபுரியை அடைந்தாள். காலையில் 9-30 மணிக்கு வீட்டைவிட்டுப் புறப்பட்டவள்; ஆகையால் பசிவேறு வயிற்றைக் கிள்ளியது. பசிக்காகக்கூட அவள் வருந்தவில்லை. காந்தியடிகளுக்கு அன்று சேவை செய்ய முடியாமல் போய்விட்டதே என்பதற்காகப் பெரிதும் வருந்தினாள்.

அக்கல்லைக் காந்தியடிகளின் மடிமீது வைத்துவிட்டு மனு தேம்பித்தேம்பி அழத் தொடங்கினாள். உடனே காந்தியடிகள், "மனு! இன்று நீ சோதனைக்கு உட்படுத்தப் பட்டாய், கடவுள் என்ன செய்தாலும் நமக்கு நன்மையே செய்கிறார். நீ என்னோடு புறப்பட்ட முதல்நாள், என்னுடைய தொண்டில் பங்கு கொள்வது மிகவும் கடினம் என்றும் குலையாத மன உறுதி மிக்கவருக்கே அது சாலும் என்றும் நீண்ட நேரம் சொன்னேன். சிறு தவறுசெய்து விட்டால்கூடச் சோதனையில் நீ தோல்வி யடைந்ததாகவே பொருள். நீ விரும்பினால் மகுவாவுக்கு உன் தந்தையிடம் திரும்பிச் சென்றுவிடலாம். ஆனால் பிரயாணத்தின் குறுக்கே உன்னைத் திரும்பிச்செல்ல அனுமதிக்கமாட்டேன். உனக்கு, முதல் சோதனையை இவ்வளவு விரைவில் அளித்த இக்கல்லுக்கு நன்றி செலுத்துகிறேன். அச்சோதனையில் நீ வெற்றிபெற்றாய். நான் இப்போது எந்த அளவு மகிழ்ச்சி யடைந்திருக்கிறேன் என்பதை நீ உணரமாட்டாய். இந்தக் கல் இருபத்தைந்து ஆண்டுகளாக என் நலனைக் காப்பாற்றும் நண்பனாக விளங்குகிறது. நான் சிறையிலிருந்தாலும் சரி, மாளிகையிலிருந்தாலும் சரி, இதுவே என் நீங்காத் துணை. இந்தக் கல் தொலைந்துவிட்டால் என்னுள்ளமும், மீரா பென் உள்ளமும் ஒருங்கே வருந்தும். அதுவுமன்றி, பயனுள்ள பொருள்களின் மீது கண்ணுங் கருத்தோடு இருக்க வேண்டுமென்பதற்கு இன்று நீ அரிய பாட மொன்று கற்றாய். இது ஒரு சிறு கல்தானே; இது தொலைந்தால் என்ன? இதைப்போன்று எத்தனையோ கற்கள் கிடைக்கும்; ஏதாவதொன்றை அந்தக் கல் இருந்த இடத்தில் வைத்துவிடலாம் என்று எண்ணுவது பெருந்தவறு" என்று கூறி முடித்தார்.

மனு, காந்தியடிகளை நோக்கி, "பாபு! ராமநாமத்தை முழுமனதோடு என்றாவது ஜெபித்தேன் என்றால் அது இன்று தான். அப்பயங்கரமான வழியில் சென்றபோது என் உள்ளம் மிகவும் நடுங்கியது" என்று சொன்னாள்.

உடனே காந்தியடிகள் சிரித்துக்கொண்டே, "உண்மை! உண்மை! துன்பம் வந்த காலத்தில்தான் ஒவ்வொருவரும் ஆண்டவனை நினைக்கிறார்கள்" என்று கூறினார்.

## 20. நகைச்சுவை

பொறுப்பான அலுவல்களில் ஈடுபட்டிருப்பவர்களும், சமய உணர்வு கொண்டவர்களும், பொதுவாக நகைச்சுவையை விரும்புவதில்லை என்று எல்லோரும் எண்ணுகிறார்கள். காந்தியடிகள் சமயம் நேரும்போதெல்லாம் நகைச்சுவைத் துணுக்குகளை அள்ளி வீசிச் சிரித்து மகிழத் தவறுவதில்லை என்பதைப் பலர் கேட்கும்போது, நம்புவதில்லை. "இவ்வளவு பெரிய அரசியற் பொறுப்புகளைத் தாங்கிக்கொண்டு ஓய்வில்லாமல் உழைக்கும் காந்தியடிகளுக்குச் சிரிக்கவும் நகைச்சுவையாகப் பேசவும் நேரமேது" என்று பலர் கேட்பதுண்டு. "இவ்வாறு சமயம் நேரும்போதெல்லாம், எல்லாச் சூழ்நிலையிலும் சிரிக்கக் கற்றுக்கொண்ட காரணத்தாலேயே, இவ்வளவு பெரிய அரசியற் பொறுப்புக்களைத் தம் தோளில் சுமந்து கவலையின்றி அவைகளைச் செய்ய முடிகிறது" என்று அவர்களுக்குக் கூறுவார் காந்தியடிகள்.

அவர் ஒரு நாள் ஒரு நண்பரிடம் "நான் நகைச்சுவையில் விருப்பம் கொண்டிராவிட்டால், என் வாழ்வில் எதிர்ப்பட்ட துன்பங்கள் என்னை நீண்ட நாட்களுக்கு முன்பாகவே அழித்தொழித்திருக்கும். நான் கடவுளின்பால் தளராத நம்பிக்கை வைத்திருக்கிறேன். கடவுள் எனக்கு வழி காட்டுகிறார். ஆகையினால் என்னைப்பற்றிப் பிறர் என்ன சொல்லுகிறார்கள் என்று நான் எப்பொழுதும் கவலைப்படுவதில்லை. பிறர் என்னைப் பார்த்து இகழ்ந்து பேசிச் சிரிக்கும்போது, நான் அவர்களைப் பார்த்துச் சிரித்து என் துன்பத்தைப் போக்கிக் கொள்கிறேன். அதனால்

தான் என்னால் கவலையின்றி வாழ முடிகிறது" என்று கூறினார்.

அவர் குழந்தைகளிடம் பேசும்போது குழந்தையாகவும், வாலிபர்களோடு பேசும்போது வாலிபராகவும், வயது முதிர்ந்தவரோடு பேசும்போது வயது முதிர்ந்தவராகவும் தென்படுவார். அரசியல்வாதிகளோடு அரசியலைப் பற்றி நகைச்சுவையோடு பேசுவார்; குடும்பிகளோடு பேசும்போது குடும்பத்தைப்பற்றி நகைச்சுவையாகப் பேசுவார். ஆனால் அவர் வீசும் ஒவ்வொரு நகைச்சுவைத் துணுக்கிலும், சக்தி வாய்ந்த ஒரு உண்மை புதைந்திருப்பதைக் கூர்ந்து கவனிப்பவர்கள் உணராமற் போகார். சிரித்துப் பேசும் போதுகூடக் கருத்தற்ற சொற்களைச் சொல்லமாட்டார்; பயனற்ற வெற்றுச்சொல் ஒன்றுகூட அவர் வாயிலிருந்து வெளிவருவதைக் காண முடியாது.

ஒருநாள் சபர்மதி ஆசிரமத்தைவிட்டு, மாலையில் உலாவுவதற்காகக் காந்தியடிகள் புறப்பட்டுக் கொண்டிருந்தார். அப்போது அங்கிருந்த ஆசிரமச் சிறுமி ஒருத்தியும் அடிகளோடு உலாவக் கிளம்பினாள். அவளுடைய ஆடையில் ஒரு பாதி மையினால் நனைந்திருந்தது. அவளுடைய மைப் புட்டியை உடைத்துவிட்டாள் போல் இருக்கிறது. அந்த மை அவளுடைய ஆடையில் கொட்டிப் பாதிப் பகுதியைக் கருப்பாக்கிவிட்டது அவ்வாடையை மாற்றிக் கொண்டு வருவதற்குச் சோம்பேறித்தனப்பட்டு அப்பெண் அப்படியே வந்து விட்டாள். இதைக் காந்தியடிகள் கவனித்தார்.

"ஓ! என்ன பாப்பா! நீ கங்கையையும் யமுனையையும் ஒன்றாகக் கொணர்ந்திருக்கிறாய்?" என்று சிரித்துக் கொண்டே கேட்டார். அதைக் கேட்ட எல்லோரும் சிரித்தார்கள். அச் சிறுமிக்கு அடிகள் கூறிய நகைச்சுவையின் பொருள் விளங்கவில்லை. அதை அறிந்துகொள்ளப் பெரிதும் விரும்பினாள். பிறகு காந்தியடிகளே அதை விளக்கிக் கூறத் தொடங்கினார்.

"கங்கையின் தண்ணீரைவிட யமுனையின் தண்ணீர் கருப்பாக இருக்கும். அவையிரண்டும் பிரயாகையில் ஒன்று கூடினாலும், அதற்கப்புறம் சிறிது தூரம் இரண்டும் வேறு பட்டே பிரிவாகத் தெரியும்" என்று கூறி விளக்கினார். ஒரு கருத்தை அறிவுரையாகக் கூறுவதைவிட நகைச்சுவை யாகக் கூறினால் நன்கு பதியும் என்பது காந்தியடிகளின் கொள்கை.

*　　　　*　　　　*

காந்தியடிகள் கல்கத்தாவிலிருந்தபோது வெளியில் உலாவுவதற்காகப் புறப்பட்டார். அவரோடு மனுபென் காந்தியும், அப்பாபெகனும் இருந்தார்கள். காந்தியடிகள் அவர்களிருவரையும் பார்த்து, "உங்கள் இருவரில் யார் மூத்தவர் ?" என்று சிரித்துக்கொண்டே கேட்டார். அப்பா பெகன் தான் தான் மூத்தவள் என்று சொன்னாள்.

"அப்படியானால் நீ விரும்பினால் மனுதியைத் திட்டலாம் என்று சொல்லு!" என்று கூறினார்.

உடனே மனுகாந்தி, "ஆனால் பாபு! நான் கனுபாயின் தங்கையாயிற்றே! அந்த முறையில் அப்பாபெகனுக்கு நான் கொழுந்தியாக வேண்டும். கத்தியவார் நாட்டின் சம்பிரதாயப்படி வயதில் இளையவளாக இருந்தாலும் ஒரு கொழுந்தி தன் அண்ணன் மனைவியைத் திட்டுவதற்கு உரிமையுண்டு." (அப்பாபெகன் மனுதிக்கு அண்ணி.) என்று கூறினாள்

காந்தியடிகள் சிரித்துக்கொண்டே, "ஆமாம்! ஆமாம்! அவ் வழக்கத்தை நான் மறந்தேபோனேன். நான்கூட இளமையில்—வயதில் இளையவனாக இருந்தாலும் என் அண்ணியைத் திட்டுவதுண்டு. எப்பொழுதுமே நாட்டுப் பெண்கள் கொழுந்தி, நாத்திமார்களின் கையில் சிக்கி வருந்துவதற்கே பிறந்தவர்கள். ஆனால் நீங்கள் இருவரும்

அவ்வாறு இல்லாமல் பிறருக்கு வழிகாட்டியாக விளங்க வேண்டும்'' என்று கூறினார்.

*　　　*　　　*

காந்தியடிகளுக்கு இரத்தக் கொதிப்புண்டு. ஒருநாள் ஒரு ஹோமியோபதி மருத்துவர் காந்தியடிகளிடம் வந்திருந்தார். காந்தியடிகளுடைய இரத்தக் கொதிப்பு நோயின் காரணத்தைக் கண்டறிவதற்காக, அவரிடம் பல கேள்விகள் கேட்டார். அந் நிகழ்ச்சி ஒரு நகைச்சுவைக் களஞ்சியம். முதன் முதலில் அம் மருத்துவர் காந்தியடிகளின் குடும்ப வரலாற்றைப் பற்றிப் பல கேள்விகள் கேட்டார்.

''உங்கள் தந்தை எதனால் இறந்தார்?''

''ஒருநாள் கீழே தவறி வீழ்ந்து நோய்வாய்ப்பட்டார். அதோடு புண்புரை (Fistula) ஒன்று பெரிதாகி அதனால் நொந்து, தம் அறுபத்தைந்தாம் வயதில் உயிர் துறந்தார்.''

''உங்களுடைய தாயார் எப்படி இறந்தார்?''

''அவர் விதவையாகி, உடைந்த உள்ளத்தோடு இறந்தார்.''

காந்தியடிகளின் விடை மருத்துவருக்குத் திருப்தியளிக்கவில்லை. அடிகளுக்கு அருகில் ஒரு கண்ணாடிப் புட்டியில் வெல்லம் இருந்தது. அதைக் கண்ட மருத்துவர், ''நீங்கள் புளிப்பான பொருள்களை விரும்புகிறீரா? அல்லது காரமான பொருள்களை விரும்புகிறீரா? நீங்கள் இனிப்பை அதிகமாக விரும்புகிறீர்கள் என்று எண்ணுகிறேன்'' என்று கூறினார்.

''எனக்கு இனிப்பில் விருப்பந்தான். ஆனால் பஜ்ஜிகளையும் அடைகளையும் ஆவலோடு விழுங்குவேன்'' என்றார் அடிகள்.

''ஆமாம்! ஆமாம்! இனிப்பு ஒன்றையே எல்லோரும் விரும்பிச் சாப்பிட முடியாது'' என்றார் மருத்துவர்.

"அப்படிச் சொல்லாதீர்! எனக்குத் தெரியும்! சில பிராமணர்கள் பெரிய பெரிய லட்டு உருண்டைகளை டசன் கணக்கில் பஜ்ஜியின் துணையில்லாமலே விழுங்கித் தள்ளுகிறார்கள்!" என்றார் காந்தியடிகள்.

மருத்துவர் சிறிது பதட்டமடைந்தார். ஹோமியோபதி மருத்துவம், நோயின் அறிகுறியைப் பூரணமாக உணர்ந்த பிறகே மருந்து கொடுக்க வேண்டும் என்ற நிலையில் அமைந்தது என்பர். ஆகையினால் மருத்துவரும் காந்தியடிகளுடைய நோயின் காரணத்தை, அவர் மூலமாகவே அறிவதற்கு எவ்வளவோ பாடுபட்டுப் பார்த்தார். காந்தியடிகள் அசைந்து கொடுப்பதாகக் காணோம். இருந்தாலும் மருத்துவர் விட்டவரல்லர்.

"உங்களுடைய நினைவாற்றல் எத்தகையது?" என்றார் மருத்துவர்.

"நீங்கள் நினைப்பதுபோல் மோசமானதுதான்! நான் அடிக்கடி மறதியின்பால் படுகிறேன். சில நண்பர்கள் முழுப் பாடலை ஒரு தடவை படித்ததும், மனப்பாடமாகச் சொல்லுகிறார்கள். அவர்களைக் கண்டால் எனக்குப் பொறாமையாக இருக்கிறது. நீங்கள் அத்தகைய நினைவாற்றலை எனக்குக் கொடுக்க முடியுமா? அவ்வாறு கொடுத்தால், சம்பளமில்லாத ஏஜெண்டாக உங்களுக்குப் பணிபுரிவேன்!" என்றார் காந்தியடிகள்.

"ஆண்டவன் ஒருவனால்தான் அத்தகைய திறமையை உங்களுக்குக் கொடுக்க முடியும். நீங்கள் எவ்வளவுதான் எனக்குப் பொருள் கொடுத்தாலும், என்னால் அத்திறமையை உங்களுக்கு அளிக்க முடியாது" என்றார் மருத்துவர்.

"அப்படியென்றால் சும்மாவே கொடுங்கள்" என்று அடிகள் சிரித்துக்கொண்டே சொன்னார்.

"ஓராண்டுக்குமுன் நீங்கள் அரித்துவாரத்திலுள்ள மிஷன் ஆஸ்பத்திரிக்கு வந்திருந்தீர்கள். அப்போது நான் தான் கூட இருந்து எல்லா இடங்களையும் உங்களுக்குக் காட்டினேன். இந் நிகழ்ச்சி உங்களுக்கு நினைவிருக்கிற தல்லவா?" என்றார் மருத்துவர். சொல்லும்போது கடைசி வாக்கியத்தை அழுத்திச் சொன்னார்.

"ஆமாம்! அரித்துவாரத்தில் அம் மருத்துவமனையைச் சுற்றிப் பார்த்தது நன்றாக நினைவிருக்கிறது" என்றார் காந்தியடிகள்.

இவ் விடையைக் கேட்ட மருத்துவர் மிகவும் மகிழ்ச்சி யடைந்து, "அப்படியென்றால் உங்கள் நினைவாற்றல் மிகவும் சிறந்த முறையில் உள்ளது!" என்றார்.

"அதுதான் இல்லை. எனக்கு நினைவாற்றல் மிகவும் மோசமாக உள்ளது. அம் மருத்துவமனையில் உம்மைப் பார்த்ததாக எனக்குச் சிறிதுகூட நினைவில்லை" என்றார் காந்தியடிகள்.

பிறகு காந்தியடிகள் சிலபெயர்களை அம் மருத்துவரிடம் காட்டி, 'இவர்களைத் தெரியுமா? இவர்களெல்லாம் மருத்து வர்கள்' என்று சொன்னார்.

அதற்கு அம் மருத்துவர், "தெரியும். இவர்களில் ஒருவர் என்னிடம் மருத்துவம் செய்துகொண்டார். அவ ரிடம் எனக்குப் பெருமதிப்புண்டு" என்றார்.

"தாமே நோயாளியாக இருக்கும் மருத்துவர் ஒருவ ரிடம் நீர் எப்படி மதிப்பு வைக்கிறீர்?" என்று கேட்டார் காந்தியடிகள்.

அதற்கு அம் மருத்துவர், "பாபு! ஒவ்வொருவரும் எப்பொழுதாவது நோய்வாய்ப்பட்டுத்தான் ஆகவேண்டும். நோயிலிருந்து யாரும் தப்ப முடியாது. மேலும் நோய்க்குக் காரணம் நாமே என்று சொல்ல முடியாது. சில பரம்பரை

நோய்கள் பெற்றோரிடமிருந்து நமக்கும் வருவதுண்டு'' என்றார்

''இருக்கலாம். ஆனால் என் வயிற்றிலுள்ள கீரைப்பூச்சிகளும், கழிச்சல் கிருமிகளும் நான் என் பெற்றோரிடமிருந்து பெற்றவையல்ல! காலஞ்சென்ற சி. ஆர். தாஸ் அவர்களும் மோதிலால் நேருவும் ஹோமியோபதி மருத்துவத்தை ஒரு தடவை முயன்று பாருங்கள் என்று எனக்குச் சொன்னார்கள். அவர்களுக்கு அதில் ஒரு பிரியம். ஆனால் எனக்கு ஹோமியோபதி மருத்துவத்தில் நம்பிக்கை கிடையாது. எனக்குப் பிடித்தமானது இயற்கை மருத்துவ முறைதான். நான் இப்போது உங்கள் உதவியை நாடக் காரணம் அல்லோபதிக் மருத்துவ முறையில் எனக்கு நம்பிக்கையின்மைதான். அதோடு கடவுளின் உதவியையும், பஞ்ச பூதங்களின் உதவியையும் கொண்டு நோயைத் தீர்த்துக் கொள்ளும் நம்பிக்கை கொள்வதற்குரிய மன உறுதி இப்பொழுது இல்லை'' என்றார் காந்தியடிகள்.

''மகாத்மாஜி! உங்களுக்கு எந்த மருந்துமே வேண்டியதில்லை. உணவை ஒழுங்கு படுத்திக்கொண்டு வாழ்ந்தால், அதுவே போதும்'' என்று கூறிவிட்டு மருத்துவர் புறப்படுவதற்கு எழுந்தார். புறப்படத் தொடங்கும் நேரத்தில் அவர் அடிகளைப் பார்த்து, ''பாபு! என்னோடு என் மாணவி ஒருத்தி வந்திருக்கிறாள். அவள் தங்களைக் கண்டு பேச வேண்டும் என்று பெரிதும் விரும்புகிறாள். அவள் ஒரு அழகிய குஜராத்திப் பெண்'' என்றார்.

''எல்லாக் குஜராத்திப் பெண்களும் அழகாகத்தான் இருக்கிறார்கள்!'' என்றார் காந்தியடிகள்.

''எல்லாக் குஜராத்திப் பெண்களும் என்று சொல்லாதீர்கள்! எல்லாப் பெண்களுமே அழகிகள்! என்று கூறுங்கள்'' என்றார் மருத்துவர்.

"இருக்கலாம். ஆனால் சிறப்பாகக் குஜராத்திப் பெண்டிரே அழகிகள். அதிருக்கட்டும்! அந்தப் பெண்ணை இழுத்துக் கொண்டு எங்காவது ஓடிவிடாதீர்!" என்று கூறினார் காந்தியடிகள்.

மருத்துவர் திக்குமுக்காடிப் போனார். "நான் அப்படிச் செய்வேன் என்று எப்படிக் கூறுகிறீர் மகாத்மாஜி! எனக்கு அறுபது வயதுக்கு மேலாகிறது. அப்படியிருக்கும் போது, நான் எந்தப் பெண்ணை இழுத்துக்கொண்டு ஓட முடியும்?" என்றார் மருத்துவர்.

"ஏன் முடியாது. அறுபது வயதைக் கடந்த ஒரு கிழம், ஒரு ஃபிரெஞ்சுக் குமரியை இழுத்துக் கொண்டு ஓடிய நிகழ்ச்சியை நான் அறிவேன்" என்றார் காந்தியடிகள். அங்கிருந்தவர்கள் வீடே அதிர்ந்து போகும்படி சிரித்தார்கள். சிரிப்பு அடங்கியதும், "என்னுடைய இரத்தக் கொதிப்பை நான் இவ்வாறுதான் தணித்துக் கொள்கிறேன்" என்று கூறினார். நகைச்சுவை, நோய்க்கு மருந்து என்பது அவர் கொள்கை.

*　　　*　　　*

1947-ஆம் ஆண்டு அக்டோபர் 2-ல் காந்தியடிகளின் பிறந்த நாள் வந்தது. அவர் வழக்கம்போல 2 மணிக்கே எழுந்து விட்டார். 3-30 மணிக்குத் தொழுகை நடந்தது. பிர்லா மாளிகையிலிருந்த பலரும் காந்தியடிகளின் முன் கூடி விட்டனர். ஒவ்வொருவராகக் காந்தியடிகளை வணங்கினர். மனுகாந்தியும் வணங்கினாள். அவள் காந்தியடிகளை நோக்கி, "பாபு! இன்று உங்களுடைய பிறந்த நாள். நீரல்லவோ எல்லோரையும் வணங்கி ஆசி பெறவேண்டும். அப்படியிருக்க எங்களுடைய வணக்கத்தையன்றோ நீங்கள் ஏற்றுக் கொண்டு அமைதியாக இருக்கிறீர்கள். இது நன்றாக இல்லை" என்று தன் கிண்டலைத் துவக்கினாள்.

"ஆமாம்! நான் மகாத்மாவல்லவா! மகாத்மாக்கள் எப்போதும் சாதாரண மக்களிடமிருந்து மாறுபட்டவர்கள். நீங்களெல்லாம் சேர்ந்துதானே என்னை மகாத்மாவின் நிலைக்கு உயர்த்தினீர்கள்? ஆனால் அந்த மகாத்மா போலி யாக இருந்தாலும் கவலையில்லை. ஒரு தடவை 'மகாத்மா' பட்டம் பெற்று விட்டால் போதும். அம் மனிதன் சாதாரணப் பழக்க வழக்கங்கட்கும் நடைமுறைகளுக்கும் அப்பாற்பட்டவன்; உயர்ந்தவன்! நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்'' என்று கூறிச் சிரித்தார்.

## 21. மூன்றும் வகுப்புப் பயணம்

**பி**ற்காலத்தில் மூன்றும் வகுப்பிலேயே பயணம் செய்வேன் என்று பிடிவாதமாக இருந்த காந்தியடிகள் இளமையில் முதல் வகுப்பிலேயே பிரயாணம் செய்வேன் என்று பிடிவாதமாக இருந்தார். தம்மைப்போன்ற ஒரு 'பாரிஸ்டர்' முதல் வகுப்பில் பயணம் செய்வதுதான் மதிப்பு என்று கருதினார். காந்தியடிகள் தாதா அப்துல்லா கம்பெனியாரின் வழக்கு சம்பந்தமாகத் தென் ஆப்பிரிக்காவுக்கு முதன் முதலில் சென்றார் என்பதை நாம் அறிவோம். அவர் புறப்பட இருந்த கப்பலில் முதல் வகுப்பு டிக்கெட் கிடைக்கவில்லை என்று தாதா அப்துல்லா கம்பெனி நிர்வாகி கூறிவிட்டார். கப்பலின் மேல் தளத்தில் (Deck) பிரயாணத்துக்கு ஏற்பாடு செய்யலாம் என்று குறிப்பிட்டார். பாரிஸ்டர் ஆகிய தாம் முதல் வகுப்புக்குக் கீழே பிரயாணம் செய்வதா? என்று எண்ணினார் நிர்வாகியின் பேச்சில் அவருக்கு நம்பிக்கை ஏற்படவில்லை.

"நானே போய் விசாரித்துப் பார்க்கிறேன்'' என்று சொல்லிக் கப்பல் தலைவரிடம் நேரில் சென்றார். "எப்படியாவது நெருக்கிப் பிடித்து எனக்கு ஓர் இடம் கொடுக்கக்

கூடாதா?" என்று கேட்டார். கப்பல் தலைவர் மோகன தாசைத் தலைமுதல் கால்வரை ஒரு தடவை உற்றுப் பார்த்தார். அவருடைய தோற்றம் எதனாலோ கப்பல் தலைவரின் உள்ளத்தைக் கவர்ந்தது.

"என்னுடைய சொந்த அறையிலேயே இன்னொருவரும் பிரயாணம் செய்ய இடம் இருக்கிறது. அந்த இடத்தைச் சாதாரணமாய் வேறு யாருக்கும் கொடுப்பதில்லை. வேண்டுமானால் உமக்குத் தருகிறேன்" என்று கப்பல் தலைவர் கூறினார். மோகனதாஸ் மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டார்.

* * *

காந்தியடிகள் 1901-ஆம் ஆண்டில் கல்கத்தா காங்கிரசுக்குச் சென்றிருந்தார். இந்திய நாட்டுக்குக் கல்கத்தா அப்போது தலைநகராயிருந்தது. சட்டசபைக் கூட்டம் நடக்கும்போது திரு. கோகலே அங்குதான் தங்கியிருப்பார். அதற்காகத் தனியான ஒரு வீடு வாடகைக்கு எடுத்துக் கொண்டு அவர் அங்கு வாழ்ந்தார். காந்தியடிகள் சிலநாள் அங்கு விருந்தாளியாகத் தங்கியிருந்தார். அவரோடு ஒரு மாதம் கழித்த பிறகு, காந்தியடிகள் இந்தியா முழுவதும் ஒரு முறை மூன்றும் வகுப்புப் புகை வண்டியில் பயணம் செய்து சுற்றிப் பார்ப்பதென்று முடிவு செய்தார். அவருடைய வாழ்க்கையில் மூன்றும் வகுப்பில் பயணம் செய்வது இதுதான் முதல் தடவை. மூன்றும் வகுப்புப் பிரயாணிகளின் துன்பங்களை நேரில் கண்டு பரிகாரம் தேட வேண்டுமென்பது அவர் விருப்பம். அதனாலேயே அவர் மூன்றும் வகுப்பில்செல்ல முடிவுசெய்தார். பன்னிரண்டணா பெறுமானமுள்ள கித்தான்பை ஒன்றைக் காந்தியடிகள் வாங்கிக் கொண்டார். அதில் ஒரு முரட்டுக் கம்பளிச் சட்டை, ஒரு வேட்டி, ஒரு துண்டு, ஒரு பனியன் இவற்றை வைத்துக் கொண்டார். இந்தப் பையைத் தவிர, ஒரு

துப்பட்டி, ஒரு மண் கூஜா ஆகியவைதான் காந்தியடிகள் மூன்றும் வகுப்புப் பயணத்துக்காக எடுத்துக் கொண்டவை. கோகலே, பிரயாணத்துக்காகப் பூரிகளும், லட்டுகளும் தயாரித்து ஒரு சிற்றுண்டிப் பாத்திரத்தில் வைத்துக் கொடுத்தார்.

* * *

காந்தியடிகள் எதிர்பார்த்தது போலவே மூன்றும் வகுப்புப் பயணம் மிகவும் மோசமாயிருந்தது. அதிகாரிகள் மூன்றும் வகுப்புப் பிரயாணிகளை ஆடுமாடுகள் என்று எண்ணி நடத்தினார்கள். இங்கிலாந்திலும் தென்னாப்பிரிக்காவிலும் காந்தியடிகள் புகைவண்டிப் பயணம் செய்ததுண்டு. அங்கேயெல்லாம் மூன்றும் வகுப்பு இவ்வளவு மோசமாக இல்லை. முதல் வகுப்புக்கும் மூன்றும் வகுப்புக்கும் இவ்வளவு வேறுபாடும் கிடையாது. தென்னாப்பிரிக்காவில் பெரும்பாலும் மூன்றும் வகுப்பில் நீகிரோவர் தாம் பிரயாணம் செய்வார்கள். ஆயினும் அங்கே மூன்றும் வகுப்பில் இதைவிட அதிக வசதி அளிக்கப்பட்டது. சில வண்டிகளில் மூன்றும் வகுப்பில்கூட இரவில் தூங்க இடமும் மெத்தை தைத்த இருக்கையும் ஏற்படுத்தியிருந்தார்கள். கூட்டம் அளவுக்கு அதிகம் ஆகாமலும் பார்த்துக் கொண்டார்கள். இங்கேயோ நிலைமை எல்லா விதத்திலும் மோசமாயிருந்தது. வசதிகளும் இல்லை; கூட்டமும் குறிப்பிட்ட எண்ணிகையைவிட எப்போதும் அதிகம்.

இரயில்வே அதிகாரிகளின் அசட்டையும் அக்கிரமங்களும் ஒருபுறம் இருக்க, பிரயாணிகளும் பெரும் அநியாயங்கள் செய்தார்கள். மற்றப் பிரயாணிகளின் வசதியைப் பொருட்படுத்தாமல் குப்பைகளைப் போட்டார்கள்; சுருட்டுக் குடித்தார்கள்; வெற்றிலை புகையிலை மென்று துப்பி வண்டியை எச்சில் குழியாக்கினார்கள். கூச்சல் போடுவதும், ஆபாச மொழிகள் பேசுவதும் அதிகம். இந்த

மோசமான சூழ்நிலையை எவ்வாறு சீர்திருத்துவது என்று காந்தியடிகள் சிந்தனை செய்தார். படித்த வகுப்பார் மூன்றும் வகுப்பில் பிரயாணம் செய்வதுதான் அதற்கு வழி என்று தோன்றியது. படித்தவர்கள் மூன்றும் வகுப்பில் பிரயாணம் செய்து, மற்றவர்களின் அநாகரிக வழக்கங்களைச் சீர்திருத்த வேண்டும். அவசியம் ஏற்பட்ட போதெல்லாம் வசதிக் குறைவுகளைப்பற்றி மேல் அதிகாரிகளுக்குப் புகார் எழுத வேண்டும். இரயில்வே ஊழியர்களுக்குக் கையூட்டு வழங்கித் தங்கள் சொந்த வசதிகளைத் தேடிக்கொள்ளக் கூடாது. விதிகளை யார் மீறி நடந்தாலும் அதைக் கண்டிக்க வேண்டும்; தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இப்படியெல்லாம் செய்தால் ஒருவாறு சீர்திருத்தலாம் என்று எண்ணினார். தாமே இப்படியெல்லாம் செய்ய வேண்டுமென்றும், அதற்காக ஒரு இயக்கமே நடத்த வேண்டுமென்றும் எண்ணினார். பிறகு பெரிய பெரிய அரசியல் கிளர்ச்சிகளில் ஈடுபட்டதால் இவ்வெண்ணம் கைவிடப்பட்டது. இவ் வநுபவம் 60 ஆண்டுகளுக்கு முன் ஏற்பட்டது. நாடு சுதந்தரம் பெற்ற பிறகும் கூட, மூன்றும் வகுப்புப் பயணம் நரகவேதனையாகவே இருக்கிறது.

மூன்றும் வகுப்புப் பிரயாண அநுபவத்தைப் பற்றிக் காந்தியடிகள் மற்றொரு இடத்தில் குறிப்பிட்டிருப்பதாவது :

"பெரிய மனிதர்கள் மூன்றும் வகுப்பில் பயணம் செய்யப் பிரியப்பட்டால், ஏழைகள் உள்ளாகவேண்டியிருக்கும் எல்லா விதிகளுக்கும் அவர்களும் உள்ளாக வேண்டியது அவசியம். இரயில்வே ஊழியர்களும் வேறுபாடு கருதாமல் நடந்துகொள்ள வேண்டும். அவர்கள் மூன்றும் வகுப்புப் பிரயாணிகளை மனிதர்களாகவே பாவிப்பதில்லை என்பதும் கேவலம் ஆடுமாடுகளாகப் பாவிக்கிறார்கள் என்பதும் என் அநுபவம். படித்த பணக்கார

வகுப்பாரில் சிலர் தாங்களாகவே ஏழைகளின் அந்தஸ்தை ஏற்க முன்வரவேண்டும். அவர்களும் மூன்றும் வகுப்பில் பிரயாணம் செய்ய வேண்டும். ஏழைகளுக்குக் கிடைக்காத எந்த வசதியையும் தாங்கள் பெறக்கூடாது. பிரயாணத்தில் ஏற்படும் அவமதிப்புக்களுக்கும் அநீதிகளுக்கும் தலை குனிந்து போகாமல் அவற்றைத் தொலைப்பதற்காகப் போராட வேண்டும்."

* * *

காந்தியடிகள் 1947-ஆம் ஆண்டு காஷ்மீரிலிருந்து. கல்கத்தாவுக்குத் திரும்பிக் கொண்டிருந்தார். வண்டி அமிருதசரஸ் புகைவண்டி நிலையத்தை அடைந்தது. மழை பிடித்துக் கொண்டது. காந்தியடிகள் ஏறிச்சென்ற பெட்டி ஒழுகத் தொடங்கியது. உட்காரும் இடமெல்லாம் நனைந்து நீர் தேங்கத் தொடங்கியது. இதை உணர்ந்த இரயில்வே 'கார்டு' காந்தியடிகளிடம் வந்து, வேறொரு பெட்டிக்கு மாறிச் செல்லுமாறு கேட்டுக் கொண்டார்.

காந்தியடிகள் அவரைப் பார்த்து, "அப்படியென்றால் இந்தப் பெட்டியை என்ன செய்யப் போகிறீர்கள்?" என்றார்.

"உங்களுக்காக நாங்கள் வேறொரு பெட்டியைக் காலி செய்திருக்கிறோம். அப் பெட்டியிலிருந்த மக்கள் இதற்கு மாற்றப்படுவார்கள்" என்று கூறினார் கார்டு.

"இந்தப் பெட்டி மற்ற மக்களுக்குப் பயன்படும் என்றால், நான் ஏன் இதிலேயே பயணம் செய்யக்கூடாது. மற்ற மக்களுக்குத் தொல்லை கொடுப்பதன் மூலம் நான் என்னுடைய வசதிகளைத் தேடிக்கொள்ள விரும்பவில்லை" என்றார் அடிகள்.

'கார்டு' வேறு எதுவும் பேசவில்லை. காந்தியடிகளின் பிடிவாத உணர்ச்சியை அவர் அறிவார் போலும். "நான் தங்களுக்கு வேறு ஏதாவது உதவி செய்ய வேண்டுமானால் செய்கிறேன்" என்றார் கார்டு.

ம. 18

"உம்முடைய கடமை எதுவென்று உமக்குத் தெரியும். பிரயாணிகளைக் கடிந்து கொள்ளாதீர்! கையூட்டுப் பெருதீர்! இவ்விரண்டு கொள்கைகளைச் சரிவர வாழ்க்கையில் கடைப்பிடியுங்கள். அதுவே நீங்கள் எனக்குச் செய்யும் உதவி" என்ருர் அடிகள்.

*　　　*　　　*

நவகாளியிலும், பீகாரிலும் நடைபெற்ற வகுப்புக் கலவரத்தைச் சீர்படுத்துவதற்காகக் காந்தியடிகள் 1944-ஆம் ஆண்டு சென்ருரல்லவா? அவ்வாண்டு மார்ச் திங்கள் 30-ஆம் நாள் மவுண்ட்பேட்டன் பிரபுவைக் காணவேண்டியேற்பட்டது. மவுண்ட்பேட்டன் பிரபு காந்தியடிகளுக்கு ஒரு விமானத்தை அனுப்பி வைத்தார். ஆனல் காந்தியடிகள் அதில் ஏறமறுத்து விட்டுப் புகைவண்டியிலேயே தில்லி புறப்பட்டார்.

காந்தியடிகள் மனுகாந்தியை நோக்கி, "குறைந்த சாமான்களை எடுத்துக்கொள். ஒரு சிறிய மூன்ரும் வகுப்புப் பெட்டியில் நாம் ஏறிக்கொள்ள வேண்டும்," என்று சொன்னர்.

மனு, காந்தியடிகள் கூறியபடியே குறைந்த சாமான்களோடு புறப்பட்டாள். ஆனல் இரட்டைப் பெட்டி (Double compartment)யில் ஏறிக்கொண்டாள். யாராவது காந்தியடிகளைப் பார்க்க வந்து கொண்டே இருப்பார்கள். அதோடு ஒவ்வொரு புகைவண்டி நிலையத்திலும் அரிஜன் நிதிக்காகப் பணம் வசூல் செய்து கணக்கு வைத்துக் கொள்ள வேண்டும். சமையல் வேறு செய்ய வேண்டும். இவற்றிற்கெல்லாம் இடைஞ்சலாக இருக்கும் என்பதற்காக மனுகாந்தி இரட்டைப் பெட்டியைத் தேர்ந்தெடுத்தாள்.

வண்டி பாடலிபுத்திரத்தை விட்டுக் காலை 9-30 மணிக்குப் புறப்பட்டது. காந்தியடிகள் கோடை நாட்களில்

காலை 10 மணிக்கே நடுப்பகல் உணவு உண்பது வழக்கம். எனவே உணவு சமைப்பதற்காக மனு அடுத்த பெட்டிக்குச் சென்றாள். சிறிது நேரம் கழித்துக் காந்தியடிகளின் பெட்டிக்கு வந்தாள். அவர் அவசரமாக ஏதோ எழுதிக் கொண்டிருந்தார். பிறகு தலைநிமிர்ந்து! "இவ்வளவு நேரம் எங்கு சென்றிருந்தாய்?" என்று கேட்டார்.

"நான் உங்களுக்காக அடுத்த பெட்டியில் சமைத்துக் கொண்டிருக்கிறேன்" என்றாள் மனு. உடனே காந்தி யடிகள் சன்னல் வழியாக வெளியே எட்டிப் பார்த்தார். அவளையும் எட்டிப் பார்க்குமாறு சொன்னார். உடனே தான் ஏதோ பெரிய தவறு செய்து விட்டதை உணர்ந் தாள். வெளியில் எட்டிப்பார்த்தாள். இடமில்லாமல் படிக்கட்டிலெல்லாம் மக்கள் நின்று கொண்டு வந்தார்கள்.

"அடுத்த பெட்டியும் வேண்டுமென்று நீ கேட்டாயா?" என்று கேட்டார் காந்தியடிகள்.

"ஆமாம்! நான் இங்கு சமையல் செய்வதாலும், பாத்தி ரங்களைத் துலக்குவதாலும் உங்களுக்குத் தொல்லையாக இருக்கும் என்பதற்காக இரட்டைப் பெட்டி கேட்டேன்" என்றாள் மனு.

"இது நொண்டிச் சமாதானம்! குருட்டுத்தனமான அன்பு! நீ என்மேல் கொண்ட அன்பின் காரணமாக எவ்வளவு பேர் வெளியில் அவதிப்படுகிறார்கள். அன்பு இவ்வாறு குறுகிய அளவில் இருக்கக் கூடாது. இன்னும் உயர்ந்த நிலையில் இருக்க வேண்டும்" என்று கடிந்து கொண்டார் காந்தியடிகள்.

மனுகாந்தியின் உடம்பு நடுங்கியது. அவள் கண்களி லிருந்து கண்ணீர் வழிந்தது. அவளால் எதுவும் பேச முடிய வில்லை. செயலற்று நின்றாள்.

"நீ இவ்வாறு அழுவதில் பயனில்லை. அழுவது திருந்துவ தாகாது. அந்தப் பெட்டியிலிருக்கும் பொருள்களை இங்கு

கொண்டுவா. ஸ்டேசன் மாஸ்டரை அடுத்த நிலையத்தில் என்னை வந்து சந்திக்கச் சொல்லு" என்று கூறினர்.

வண்டி அடுத்த நிலையத்தை அடைந்தது. ஸ்டேசன் மாஸ்டர் வந்தார். அடிகள் நிலையை விளக்கினர். "இவள் என் பேத்தி; ஒன்றுமறியாதவள். அவள் என்னை நன்ருகப் புரிந்து கொள்ளவில்லை. அதனுல்தான் தவறு நேர்ந்து விட்டது. அதற்காக நாங்கள் இருவரும் வருந்துகிரும். தவறு என்னுடையது. ஏன் என்ருல் அவளுக்குப் போதிய பயிற்சி நான் அளிக்கவில்லை. அடுத்த பெட்டியைக் காலி செய்து விட்டோம். அதோ படிமீது தொங்கிக் கொண்டு வருகிருர்களே! அவர்களை அப் பெட்டியில் வந்து ஏறச் சொல்லுங்கள்!" என்று கூறினர்.

ஸ்டேசன் மாஸ்டர், "அதனுல் பரவாயில்லை. அவர்களுக்காக நான் வேறு ஒரு பெட்டி இணைத்து விடுகிறேன். இதை நீங்களே பயன்படுத்திக் கொள்ளுங்கள்!" என்று எவ்வளவோ சொல்லிப் பார்த்தார்.

"நல்லது! மற்ருெரு பெட்டி இணைக்கச் சொல்லுங்கள். அதோடு இப்பெட்டியையும் பயன்படுத்திக்கொள்ளச் சொல்லுங்கள்! அவசியமில்லாத ஒரு பொருளை வலியப் பயன்படுத்துவது பலாத்காரமாகும். இந்தப் பெட்டியைத் தவருகப் பயன்படுத்த அநுமதிப்பதன் மூலம் இப் பெண்ணைப் பொறுப்பற்றவளாக ஆக்க முயல்கிறீரா?' என்று கேட்டார் காந்தியடிகள். ஸ்டேசன் மாஸ்டர் வேறு எதுவும் பேச வழியின்றித் திரும்பிச் சென்ருர்.

## 22. தூய்மை விருப்பம்

காந்தியடிகள் தூய்மையில் அதிக நாட்டமுடையவர். அகத்தூய்மையில் எவ்வாறு அவர் பெருவிருப்புக்கொண்டு விளங்கினரோ அதேபோல் புறத்தூய்மையிலும் பெரும்

பற்றுக்கொண்டு விளங்கினார். ஏதேனும் ஒழுங்கீனமான, தூய்மையற்ற செயலை யாராவது செய்தால், தாமே அச் செயலைத் தூய்மைப்படுத்துவதன் மூலம் பிறருக்குப் பாடம் கற்பிப்பார்.

நவகாளியில் ஒவ்வொரு ஊரிலும் குறுகலான சந்துகள் நிறைய இருக்கும். அவற்றின் வழியும் மோசமாக இருக்கும். அதனால் காந்தியடிகள் தாங்கலுக்காகக் கையில் ஒரு தடியை வைத்துக் கொண்டு நடப்பார். நடக்கும் வழியில் அசுத்தம் ஏதாவது தென்பட்டால் அதை அவரால் பொறுத்துக்கொள்ள முடியாது. ஒருநாள் அசுத்தமான பாதையில் அவர் நடந்து செல்ல நேர்ந்தபோது, ஒரு இலையைக் கையிலெடுத்து அங்கு கிடந்த எச்சில், மலம் முதலியவற்றை அப்புறப்படுத்தத் தொடங்கினார். அவரைச் சுற்றியிருந்த கிராமவாசிகள் அக்காட்சியைக் கண்டு வாயடைத்து நின்றனர்.

அருகிலிருந்த மனு மிகவும் கோபங்கொண்டு, "பாபு! என்னை ஏன் நீங்கள் இப்படி அவமானத்துக்கு உள்ளாக்குகிறீர்கள்? நான் உங்கள் பின்னால் நின்று கொண்டு தானே இருக்கிறேன்? என்னைக் கூப்பிட்டு இச் செயலைச் செய்யுமாறு பணிக்கக் கூடாதா?" என்று கேட்டாள்.

உடனே காந்தியடிகள் சிரித்துக்கொண்டு, "நான் இப் பணியைச் செய்வதன் மூலம் எவ்வளவு மகிழ்ச்சியடைகிறேன் என்று உனக்குத் தெரியாது. பிறரைக் கூப்பிட்டு இச் செயலைச் செய்யும்படி சொல்வதை விட நானே செய்வது எவ்வளவு எளிது என்பதை நீ அறியமாட்டாயா?" என்று கூறினார்.

"இருக்கலாம்! ஆனால் நீங்கள் செய்வதை இவ்வூர் மக்கள் பார்த்துக் கொண்டிருக்கிறார்களே! அவர்கள் என்னைப்பற்றி என்ன நினைப்பார்கள்?" என்று மனு கேட்டாள்.

“நான் செய்வதை இவ்வூர் மக்கள் பார்க்க வேண்டும் என்பதற்காகவே நான் இச் செயலைச் செய்கிறேன். அப்போது தான், நாளை இவர்கள் இத்தெருவை அசுத்தம் செய்யமாட்டார்கள்” என்று கூறினார் காந்தியடிகள்.

“சரி! இவ்வூர் மக்கள் மீண்டும் அசுத்தம் செய்தால் என்ன செய்வீர்கள்?” என்று மனு கேட்டாள்.

“இவர்கள் இப்பாதையை மீண்டும் அசுத்தம் செய்கிறார்களா என்பதை அறிவதற்காக உன்னை அனுப்புவேன். அவர்கள் மீண்டும் அசுத்தம் செய்தால் நான் மறுபடியும் வந்து தூய்மைப்படுத்துவேன்” என்று காந்தியடிகள் சொன்னார்.

அதன்படியே காந்தியடிகள் மனுகாந்தியை அடுத்த நாள் அனுப்பி அப்பாதை தூய்மையாக இருக்கிறதா என்று பார்த்து வரச் சொன்னார். மனுவும் அவ்வாறே சென்றாள். ஓரிரு இடங்களில் அசுத்தம் செய்து வைத்திருந்தார்கள். மனு உடனே அவைகளை அப்புறப்படுத்தத் தொடங்கினாள். உடனே அங்கிருந்த கிராமவாசிகளும் அப்பணியில் பங்கு கொண்டனர். மீண்டும் இவ்வாறு அசுத்தம் ஏற்படாமல் பார்த்துக் கொள்கிறோம் என்று உறுதி கூறினர். மனு, காந்தியடிகளிடம் வந்து நிகழ்ந்ததைச் சொன்னாள்.

“அப்படி யென்றால் அச்செயலை நீ செய்ததன் மூலம் நான் அடைய வேண்டிய சிறப்பைத் தட்டிப் பறித்துக் கொண்டாய்” என்று கூறிச் சிரித்தார். அன்றிலிருந்து அத் தெருவில் வாழ்ந்த மக்கள் அத் தெருவை அசுத்தம் செய்வதில்லை.

காந்தியடிகள் இதைப்பற்றி மீண்டும் குறிப்பிடும் போது, “அத்தெரு மக்கள் தங்கள் வாக்குறுதியைக் காப்பாற்றுவதன் மூலம் இரண்டு வித நன்மைகளை அடைகிறார்கள். ஒன்று, தூய்மையைக் கடைப்பிடிப்பது; மற்றொன்று சொன்ன சொல்லைக் காப்பாற்றுவது” என்று கூறினார்.

* * *

காந்தியடிகள் பெலியகட்டாவில் ஹைதரி மாளிகையில் தங்கியிருந்தார். அவரைக் காண்பதற்காக ஆயிரக்கணக்கான மக்கள் வாயிலில் கூடியிருந்தனர். பாபு வெளியில் வந்து அவர்களை எல்லாம் உட்காரும்படி கையமர்த்தினார். அவர்கள் போடும் இரைச்சல் தாங்க முடியாததாக இருக்கிறது என்பதை விளக்கிக் கூறினார். அம் மக்கள் அமைதியடைந்தனர். பிறகு காந்தியடிகள் வெறும் காலோடு வெளியில் கிளம்பினார். அவ்வாறு காலில் செருப்பணியாமல் சென்றால் தான், வழியெல்லாம் எச்சில் துப்பி அசுத்தம் செய்திருப்பவர்கள் தங்கள் தவற்றை உணர்வார்கள் என்று எண்ணினார். அவருடைய எண்ணம் பலித்தது. அன்றிலிருந்து மக்கள் பாதைகளில் எச்சில் துப்புவதை நிறுத்திக் கொண்டார்கள்.

## 23. தொழுகை

காந்தியடிகள் 20—8—1947-ல் பெலியகட்டாவில் ஒரு கூட்டத்தில் பேசுவதற்காகச் சென்றிருந்தார். அக் கூட்டத்தில் லட்சக்கணக்கான மக்கள் காந்தியடிகளைக் காண்பதற்காகக் கூடியிருந்தனர். முதலில் தொழுகை ஆரம்பமாயிற்று. இராமநாம பஜனை நடந்தது. தொழுகை முடிந்தவுடன் கூட்டத்தினர் எல்லோரும் கைதட்ட ஆரம்பித்தனர். உடனே காந்தியடிகள் அம்மக்களை நோக்கி, "தொழுகை என்பது நாடகக் காட்சியோ, திரைப்படக் காட்சியோ அல்ல கைதட்டுவதற்கு! இது கண்காட்சியுமல்ல! இது கடவுளை நினைவுகூரும் கூட்டம். எனவே தொழுகைக் கூட்டத்தில் கைதட்டுவது தவறு!" என்று குறிப்பிட்டார்.

ஒருநாள் காந்தியடிகளின் தொழுகைக் கூட்டமொன்றில் இறுதியாக 'வந்தேமாதரம்' பாடல் பாடப்

பட்டது. காந்தியடிகள் இதைப்பற்றிக் குறிப்பிடும் போது, "நாட்டு வாழ்த்துப் பாடலின் போது நீங்களெல்லோரும் நிமிர்ந்து நின்றீர்கள். இது ஆங்கிலேயர்களின் பழக்கம். ஆனால் நம் நாட்டில் நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டு பாட வேண்டும். நாம் இப்பாடலின் மூலம் நம் தாய்த்திரு நாட்டைப் போற்றுகிறோம். வந்தேமாதரம் பாடல் ஒரு சாதியாருக்கோ சமயத்தாருக்கோ மட்டும் உரிமை பெற்ற தன்று. இந்திய சமூகத்திற்கே உரியது. இதற்காக எவ்வளவோ பேர் தம் உயிரைத் தியாகம் செய்திருக் கிறார்கள். இப்பாடலானது இந்திய நாட்டில் எங்கு பாடப் பட்டாலும் ஒன்றுபட்ட குரலில், ஒரே இசையமைப்பில் பாடப்பட வேண்டும்," என்று குறிப்பிட்டார்.

## 24. கடவுள்

ஒரு நாள் காந்தியடிகளும், இரவீந்திரநாத தாகூரும், ஃபிஷர் என்ற பாதிரியாரும் 'விஸ்வபாரதி'யில் ஒன்றாக அமர்ந்து உரையாடிக் கொண்டிருந்தார்கள். அப்போது உருவ வழிபாட்டைப் பற்றிப் பேச்சு எழுந்தது. காந்தி யடிகள் உருவ வழிபாடு இன்றியமையாதது என்று வாதிட்டார்.

அதிலும் குறிப்பாகத் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு மிக மிக இன்றியமையாதது என்றார். தாழ்த்தப்பட்ட மக்களைப் பற்றிப் பேசும்போது காந்தியடிகள், தாமே ஒரு பறைய னாகவும், தோட்டியாகவும் மாறி உணர்ச்சிவயப்பட்டுப் பேசினார். கல்வியறிவற்ற அவர்களின் மூதாதையர்களையும், எதிர் காலத்தில் தோட்டியாகவே—தீண்டப்படாதவ னாகவே—வாழவேண்டி விதிக்கப்பட்ட அவர்கள் சந்ததியா ரையும் எண்ணி நைந்தார்.

"தீண்டாத மகனுக்குக் கோவில் கிடையாது. ஒரு மரத்தடியில் சிவப்புச் சாயம் பூசப்பட்ட சிறு கல் இருக்கும்.

அதுதான் அவர்கள் கடவுள்; இல்லை, கடவுளையும் அவர்களையும் இணைத்து வைக்கும் இடைப் பொருள். அச் சிறு பொருளையும் அவர்களிடமிருந்து பிடுங்கி எறிந்து விட்டால், அவர்களுக்குக் கடவுளைப்பற்றிய சிந்தனையே இல்லாமல் போய் விடும்'' என்று கூறினார் காந்தியடிகள்.

உடனே தாகூர், ''காந்திஜி! நீங்களும் உங்கள் சமண முன்னோர்களும் பாடுவதையும், பஜனை செய்வதையும், பாசிமணி உருட்டுவதையும் விட்டுவிட்டீர்கள். கடவுள் கோயிலில் மட்டும் அல்ல; எல்லா இடங்களிலும் இருக்கிறார் என்பதை நாம் அறிவோம். ஆண்டவன், நெற்றி வியர்வை நிலத்தில் வீழப் பாதை அமைக்கும் பாட்டாளியிடம் இருக்கிறான். அவனும் அவ்வேழைகளோடு வெயிலில் காய்கிறான்; மழையில் நனைகிறான். ஆண்டவன் ஆடைகளும் அவர்களுடைய ஆடைகளைப் போன்று அழுக்கடைந்தவை; புழுதி படிந்தவை! இவ்வுண்மையை விளக்குவதற்காகத்தான் ஆண்டவன் ஏசுவாக—மனிதனாகப் பிறந்து உலகத் துன்பங்களை எல்லாம் ஏற்றார் என்று பாதிரியாருக்குத் தெரியும். எனவே ஆண்டவன் நம்பால் எப்பொழுதும் இணைக்கப்பட்டிருக்கிறான். அதற்காக அவனை நான் கல்லாக்க விரும்பவில்லை. நாம் அமர்ந்திருக்கும் இவ்வறையில் மணிகளும், சாயம் பூசப்பட்ட நடுகற்களும், உருவவழிபாடு நமக்குத் தேவைப்படாதபோது, பிற மக்களுக்கு எதற்காக? எவ்வளவு தாழ்த்தப்பட்ட மனிதனாக இருந்தாலும் சரி; உருவவழிபாடு அவனுக்குத் தேவை இல்லை என்று கருதுகிறேன். ஒவ்வொரு நகரிலும், சிற்றூரிலுமுள்ள கோவில்களில் கல்லினாலும், பித்தளையாலும், மரத்தாலும், பளிங்கினாலும் நாட்டப்பட்டுள்ள எல்லா உருவங்களையும் கொண்டுவந்து ஓரிடத்தில் குவித்து, அதை இறுதியில் கடலில் கொட்டி நம் நாட்டைப் புனிதப்படுத்த விரும்புகிறேன்,'' என்று கூறி முடித்தார்.

அங்கு அமர்ந்திருந்த பலரும் அமைதியோடு இருந்தனர். குருதேவர் நாட்டைத் தூய்மைப் படுத்திக்கொண்டிருந்தார். காந்தியடிகளோ, தீண்டாதவரின் பிரதிநிதியாக மாறி அவர்களுக்காக வாதாடும் சிந்தனையில் மூழ்கியிருந்தார். காந்தியடிகள் என்ன விடை கூறுவார் என்று எல்லோரும் எதிர்பார்த்தனர்.

"குருதேவ்! உருவவழிபாடு நொண்டியின் கையிலுள்ள ஊன்றுகோல் போன்றது. முதலில் அவனுடைய முடத்தன்மையை நீக்கி, நடக்குமாறு செய்யவேண்டும். பிறகு கோலைப் பிடுங்கிவிடலாம். அதுதான் நம் மூவருடைய பணியும் ஆகும்" என்று கூறிமுடித்தார் காந்தியடிகள்.

## 25. கோவில்

இளமையில் கோவிலைப் பற்றித் தாம் கொண்டிருந்த எண்ணத்தைச் 'சமயத் தோற்றங்கள்' என்ற தலைப்பில் தம் நூலான 'சத்தியசோதனையில்' குறிப்பிட்டுள்ளார் காந்தியடிகள். அது வருமாறு :

"வைணவ குடும்பத்தில் பிறந்தவனாதலின், அடிக்கடி திருமால் கோவிலுக்குப் போகவே செய்தேன். ஆயினும் கோவில் என் உள்ளத்தைக் கவரவில்லை. அங்குள்ள ஆடம்பரமும், பகட்டும் எனக்குப் பிடிக்கவில்லை. அங்கே பல தீச்செயல்கள் நடைபெறுவதாகவும் கேள்விப்பட்டேன். இவ்வாறு கோயிலிலிருந்து நான் பெறக்கூடியது எதுவுமிலதாயிற்று."

* * *

1901-ஆம் ஆண்டு காந்தியடிகள் கல்கத்தா காங்கிரஸ் மாநாட்டிற்குச் சென்றுவிட்டு இராசகோட்டை திரும்பினார். வழியில் முக்கியமான ஊர்களான காசி, ஆக்ரா முதலிய இடங்களையும் பார்த்தார். காசியில் அவர் கண்ட

காட்சிகள் பெரும் ஏமாற்றத்தை அளித்தன. புகழ்பெற்ற காசிவிசுவநாதர் கோவிலுக்குச் செல்லும் வழி ஒரு குறுகலான சந்து. கோயிலைச் சுற்றியும், கோயிலுக்குள்ளும் அமைதி என்பதே கிடையாது. தந்திரசாலிகளான கடைக்காரர்கள் மிட்டாய்களும், புதுமையான விளையாட்டுக் கருவிகளும் விற்ருர்கள். கடைக்காரர்களும், கடைகளில் சாமான்கள் வாங்கிய பிரயாணிகளும் ஏகச்சத்தம் போட்டார்கள். எங்கு பார்த்தாலும் ஈக்கள் மொய்த்திருந்தன. உளமொன்றி இறைவனை வழிபட அது ஏற்ற இடமாகவே இல்லை. இவ்வளவு சந்தை இரைச்சலிலும் மெய்மறந்து இறைவழிபாட்டில் மூழ்கியிருந்த ஒருசிலர் காணப்பட்டனர். ஆனுல் மிகப் பெரும்பாலோருக்கு அது முடியாததாயிருந்தது. கோயில் வாயிலை அடைந்ததும் அழுகிப் போன பூக்குவியலின் நாற்றம் காந்தியடிகளுக்கு நல்வரவு கூறியது. கோயிலின் உட்புறம் நல்ல சலவைக் கல்லால் தளவரிசை போடப்பட்டு விளங்கியது. ஆனுல் யாரோ ஒரு பக்தர் அந்தச் சலவைக் கற்களை நடுநடுவே உடைத்து ஆங்காங்கு வெள்ளி ரூபாய்களைப் பதித்திருந்தார். இந்த ரூபாய்கள் அழுக்குச் சேரும் தூய்மையற்ற பாண்டங்களாக விளங்கின.

கோவிலைச் சேர்ந்த 'ஞானவாவி' என்ற புனித நீர்த் துறைக்குச் சென்ருர்கள் அடிகள். ஞானவாவியைச் சுற்றியும்கூட ஒரே ஆபாசமும் அழுக்கும் படிந்திருந்தன காந்தியடிகட்கு இவையெல்லாம் மிக்க ஆத்திரத்தை அளித்தன. அந்த ஆத்திரத்தை வாவிக் கடையில் அமர்ந்திருந்த பண்டாவிடம் காட்டினுர் : (கோயிற் குருக்களின் வேலையும், புரோகிதர் வேலையும் சேர்த்துச் செய்கிறவர்களுக்குப் 'பண்டாக்கள்' என்று பெயர்) பண்டாவுக்குத் தட்சணை கொடுக்க இவருக்கு உள்ளம் இணங்கவில்லை. இதற்கு அறிகுறியாக ஒரு தம்பிடி கொடுத்தார்.

"நீ நேரே நரகத்துக்குப் போவாய்!" என்று சபித்துக் கொண்டே, காந்தியடிகள் கொடுத்த காசை வீசி எறிந்தார் பண்டா.

காந்தியடிகள் இதனால் உள்ளம் கலங்கவில்லை. "என்னுடைய கதி எப்படியானாலும் ஆகட்டும்; ஆச்சாரியராகிய தாங்கள் இப்படிப் பேசுதல் தகாது. வேண்டுமென்றால் தம்பிடியை எடுத்துக் கொள்ளுங்கள். இல்லாவிட்டால் அதுவும் போய்விடும்!" என்றார்.

"தொலைந்துபோ! உன் தம்பிடி இங்கே யாருக்கு வேண்டும்?" என்று திட்டினார் பண்டா.

"நமக்கு ஒரு தம்பிடி லாபம்; பண்டாவுக்கு இழப்பு" என்று காந்தியடிகள் நினைத்துக் கொண்டு தம்பிடியைத் திருப்பி எடுத்துக் கொண்டு புறப்பட்டார். ஆனால் பண்டாவா விடுகிறவர்? காந்தியடிகளைக் கூப்பிட்டு, "நானும் உன்னைப் போல நடந்துகொள்ளலாமா? அந்தத் தம்பிடியை ஏற்றுக்கொள்ளாவிட்டால் உனக்குப் பாவமல்லவோ வந்து சேரும். கொடுத்துவிட்டுப் போ!" என்றார். காந்தியடிகள் அவ்விதமே கொடுத்துவிட்டுத் திரும்பினார்.

இந்நிகழ்ச்சியை விவரித்துவிட்டுக் காந்தியடிகள் இறுதியில் எழுதியிருப்பதாவது:

"ஆண்டவன் கருணையில் யாருக்கேனும் ஐயமிருக்குமானால், அவர் இத்தகைய புண்ணிய இடங்களைப் போய்ப் பார்ப்பாராக. இறைவன் தன் பெயரால் நடக்கும் எத்துணை அக்கிரமங்களையும், ஏமாற்றுச் செயல்களையும் பொறுத்துக் கொண்டிருக்கிறான்! மனிதன் விதைப்பதை அறுக்கிறான்! வினைப்பயனை அநுபவிக்காமல் தப்ப யாராலும் முடியாது இதில் ஆண்டவன் தலையிடவேண்டிய அவசியமே இல்லை. சட்டத்தை இயற்றிவிட்டு அவன் அப்புறம் சென்றுவிட்டான் என்றே கூறலாம்."

மேற்கண்டவாறு காந்தியடிகள் எழுதி முப்பதாண்டு கட்கு மேல் ஆகிவிட்டன. இன்றும் காசி நகரமும் விசுவ நாதர் ஆலயமும் அவர் பார்த்த நிலையிலேயே இருக்கின் றன. 1927-ஆம் ஆண்டு காந்தியடிகள் கதர் நிதி திரட்டத் தமிழ்நாடு வந்தபோது, காரைக்குடியில் 'இந்துக் கோயில் கள் வேசையர் இல்லங்களாகி விட்டன' என்று வெறுத் துரைத்தார். கோவில்களில் வேசையர் நடம் புரிதல், வாணிபஞ் செய்தல் முதலிய இழிவுகள் காந்தியடிகட்குப் பிடிப்பதில்லை.

## 26. சோம்பலின்மை

அரசியல்வாதிகளுக்கு எப்போதுமே வேலையதிகம். அதுவும் காந்தியடிகளைப் போன்ற அரசியல் தலைவர்களுக்கு ஓய்வே கிடையாது. நாள்தோறும் வரும் நூற்றுக்கணக் கான கடிதங்களைப் படித்துப் பதில் எழுவேண்டும்; பத்திரிகைகளுக்குக் கட்டுரை எழுத வேண்டும்; தன்னைத் தேடி அடிக்கடி வரும் தொண்டர்களுக்கும் நண்பர்களுக் கும் யோசனை கூறவேண்டும்; பொதுக் கூட்டங்களில் கலந்து கொள்ளவேண்டும். இவைகளல்லாமல் வேறு பல சொந்த வேலைகளையும் காந்தியடிகள் கவனித்து வந்தார். இவ்வளவு வேலைகளையும் ஒழுங்கு படுத்திச் சோம்பலில்லா மல் குறிப்பிட்ட காலத்தில் செய்து வந்தார்.

காந்தியடிகள் எப்பொழுதும் அதிகாலையில் 4 மணிக்கு முன்பாகவே எழுந்து விடுவார். காலைக்கடன்களை முடித்துக் கொண்டு தொழுகைக் கூட்டத்தில் கலந்து கொள்ளுவார். தொழுகைக்குப் பிறகு இளைப்பாறுவார்; அல்லது ஏதாவது எழுதுவார். அப்பொழுது எலுமிச்சம்பழச் சாறும், தேனும் கலந்த வெந்நீரை அருந்துவார். இதன் பிறகு உலாவச் செல்வார்.

உலாவிவிட்டுத் திரும்பும்போது, ஆசிரமத்தில் நோய் வாய்ப்பட்டுப் படுத்திருப்பவர்களைக் கண்டு, அவர் நலன்களை விசாரித்து வருவார். பிறகு சமையற்கூடத்திற்குச் சென்று தம் பங்குள்ள வேலையைச் செய்துவிட்டுச் சிற்றுண்டி சாப்பிடுவார்.

இதன் பிறகு தம்மைப் பார்க்க வந்தவரோடு உரையாடுவார்; கடிதங்களுக்குப் பதில் எழுதுவார்; பத்திரிகைகளுக்குக் கட்டுரை எழுதுவார். நடுப்பகல் உணவு நேரத்தில் இவரே மற்றவர்களுக்கு விருப்பத்தோடு பரிமாறுவார்.

பிற்பகலில் தவருமல் இராட்டையில் நூல் நூற்பார்; குறைந்தது ஒரு மணி நேரம் நூற்பார்.

மாலையில் சூரியன் மறைவதற்கு முன்பாகவே உண வருந்துவார். பிறகு சிறிது நேரம் உலாவப் போவார். மாலை 7 மணிக்கு மணியடித்ததும் தொழுகைக்குத் திரும்பி விடுவார். இவற்றைத் தவிரத் தாம் ஏற்படுத்திக்கொண்ட வேலை அட்டவணையின்படி சில சமயம் ஆசிரமக் குழந்தைகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுப்பார்.

இவ்வாறு நாள் முழுதும் வேலை செய்தபின் இரவு 9-30 மணிக்கு உறங்கச் செல்வார். ஆனால் சில சமயங்களில் வேலை மிகுதியினால் இரவில் வெகு நேரம் கண் விழித்து வேலையை முடிக்க வேண்டியிருப்பதுண்டு. இவ்வாறு நேரம் தாழ்த்தித் தூங்கிய போதிலும் காலையில் மட்டும் நான்கு மணிக்கு எழத் தவறுவதில்லை.

## 27. நாணம்

'நாண உணர்வு சில சமயங்களில் தீச்செயல்களிலிருந்து காப்பாற்றுகிறது' என்பது காந்தியடிகளின் கொள்கை. அக் கொள்கைக்கு ஏற்ப அவர் வாழ்க்கையில் பல நிகழ்ச்சிகள் நடந்தன. காந்தியடிகளை 'மகாத்மா'

என்று உலகம் போற்றுகிறது; மாந்தருள் தெய்வமாக மக்கள் அவரைக் கருதுகின்றனர். இதே காந்தியடிகள் இளமையில் பல தவறுகள் செய்திருக்கிறார். இயற்கையாக அவர்பால் படிந்திருந்த நாணம் அவரைப் பலதடவை தவறு செய்யாதவாறு காத்திருக்கிறது. இளமையில் காந்தியடிகள் சில தீய நண்பர்களுடன் சேர்ந்துகொண்டு சுருட்டுக் குடித்தார்; திருடினார்; புலால் உண்டார் என்று படித்தோம். இவைகளோடு மற்றொரு பெரும் குற்றமும் செய்ய இருந்தார்; ஒரு நாள் அந்த நண்பர்களோடு சேர்ந்து கொண்டு விபசார விடுதியொன்றுக்கும் சென்றிருந்தார். அந் நிகழ்ச்சியைப் பற்றிக் காந்தியடிகள் வாயாலேயே கேட்போம்:

"இவருடைய நட்பின் காரணமாக என் மனைவிக்கும் நான் துரோகம் செய்ய இருந்தேன். ஒரு மயிரிழை அளவில் இதனின்றும் தப்பினேன். இந் நண்பர் ஒரு முறை என்னை விபசார வீடு ஒன்றுக்கு அழைத்துச் சென்றார். அங்கு எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்ற விளக்கங்களைக் கூறி, என்னை உள்ளே அனுப்பினார். எல்லா ஏற்பாடுகளும் செய்யப்பட்டு விட்டன; பணமும் கொடுத்தாகி விட்டது. இறைவன் தன் எல்லையற்ற கருணையால் என்னைத் தடுத்தாட் கொண்டான். அந்தப் பாவக் குகையில் நுழைந்ததும் என் பார்வை மங்கிப்போயிற்று. பேசுவதற்கு நா எழவில்லை. படுக்கையில் அவள் அருகில் உட்கார்ந்தேன். ஆனால் ஒரு வார்த்தையும் என்னால் பேச இயலவில்லை. இதனால் அவள் பொறுமையிழந்து என்னைத் திட்டி வெளியே போகச் சொன்னாள். என் ஆண்மைக்கு இதனால் இழுக்கு வந்துவிட்டதாக எண்ணினேன். தாங்க முடியாத அவமானத்தினால், பூமியே வெடித்து நம்மை விழுங்கக் கூடாதா என நினைத்தேன். என் வாழ்க்கையில் இம்மாதிரி நிகழ்ச்சிகள் இன்னும் நான்கு எனக்கு நினைவிருக்கின்றன. அநேகமாக ஒவ்வொரு முறையிலும் என்னுடைய முயற்

சியைவிட, எனது நல்லதிர்ஷ்டமும் நாணமுமே காத்தன என்று சொல்லலாம்."

* * *

காந்தியடிகள் தாதா அப்துல்லா கம்பெனியாரின் வழக்கு சம்பந்தமாகத் தென்னுப்பிரிக்காவுக்கு முதன்முறை புறப்பட்டபோது, முதல் வகுப்பில் இடமில்லாமல் கப்பல் தலைவரோடு அவர் அறையிலேயே பயணம்செய்தார் என்று முன்பு படித்தோம். கப்பல் தலைவர் ஒரு கேளிக்கைப் பேர்வழி. காந்தியடிகளும் அவரோடு நெருங்கிப் பழக ஆரம்பித்தார். ஒரே நாளில் இருவரும் சிறந்த நண்பர் களாகி விட்டார்கள். இந் நட்பு காந்தியடிகளுக்கு ஒரு முறை பெரிய தீங்கு விளைவிப்பதற்குத் தயாராகியிருந்தது ஆனால் காந்தியடிகள் அதனின்றும் தப்பிவிட்டார்.

கப்பல் சான்ஸிபார் துறைமுகத்தை அடைந்தது. கப்பல் தலைவர் காந்தியடிகளையும், மற்ருெரு ஆங்கில நண் பரையும், 'தமாஷா'க் கரைக்குப் போய்விட்டு வரலாம் என்று அழைத்தார். பிறகு நடந்ததைக் காந்தியடிகளே கூறட்டும்.

"தமாஷாகப் போய் வருவதென்ருல் என்னவென்பது எனக்குக் கொஞ்சமும் தெரியாது. இதுபோன்ற சமாச் சாரங்களில் நான் 'ஸைபர்' என்பதைக் கப்பல் தலைவர் அறியார். 'டாபர்' ஒருவன் எங்களை நீகிரோ மாதர் சிலர் வசித்த வீட்டுக்கு அழைத்துச் சென்ருன். ஒவ்வொருவருக் கும் ஒரு அறையைக் காட்டி உள்ளே போகச் சொன்னுன். நான் அறைக்குள் சென்றதும் வெட்கத்தை அடக்க முடியா மல் ஊமையாய் நின்றேன். அந்தப் பெண் என்னைப்பற்றி என்ன நினைத்தாளோ ஆண்டவனுக்குத்தான் தெரியும். கப்பல் தலைவர் அழைத்ததும், உள்ளே நுழைந்தவண்ணமே வெளியில் வந்தேன். எனது நிலையை அவர் அறிந்து

கொண்டார். என் வாழ்க்கையில் இத்தகைய சோதனைகளில் இது மூன்றாவதாகும்!

*　　　*　　　*

காந்தியடிகள் இலண்டனில் ஒரு ஆங்கிலக்குடும்பத்தில் தங்கிக் கல்வி பயின்றார். அப்போது அவ்வீட்டுக்காரியின் மகளுடன் காந்தியடிகள் உலாவப் போவார். வெண்ட்னரைச் சுற்றியுள்ள குன்றுகளில் அப்பெண்ணோடு சுற்றித் திரிவார். அந்தப் பெண் இவரிடம் சற்றுத் தாராளமாகவே பழகுவாள். வழியெல்லாம் சலிப்பில்லாமல் ஏதேதோ பேசிக் கொண்டு வருவாள். ஆனால் காந்தியடிகள் 'ஆமாம்', 'இல்லை', 'ஆகா! என்ன அழகு!' என்ற அளவோடு அவர் உரையாடலை முடித்துக் கொள்வார். அதற்குமேல் அவருக்குப் பேசத் தெரியாது என்பதல்ல! வெட்கம்! நாணம்!!

இலண்டனில் இவருக்கும் ஒரு மூதாட்டிக்கும் நட்பு ஏற்பட்டு, அவர் இல்லத்திற்குக் காந்தியடிகள் அடிக்கடி செல்வதுண்டென்றும், அம்மூதாட்டி காந்தியடிகளுக்குத் திருமணமாகவில்லை என்று எண்ணி ஒரு இளம் பெண்ணை இவருடன் பழகவிட்டாரென்றும் நாம் முன்பு படித்தோம். அப்போதுகூட, அப்பெண்ணிடம் ஏதும் தவறு செய்யாமல் இவரைக் காத்தது நாணமே!

## 28. அவை நடுக்கம்

காந்தியடிகள் 1931-ஆம் ஆண்டு இலண்டனில் நடந்த வட்ட மேசை மாநாட்டுக்குச் சென்று திரும்பி வந்தார். எல்லைப்புற காந்தி என்று இந்திய மக்களால் பாராட்டப் பட்ட கான் அப்துல் கபார்கானும், பண்டித ஜவகர்லால் நேருவும் அப்போது சிறைப்படுத்தப்பட்டிருந்தனர் அவர்கள் கைது செய்யப்பட்டது சம்பந்தமாகப் பேசுவதற்கு,

அப்போது வைசிராயாக இருந்த வெல்லிங்டன் பிரபுவிடம் அநுமதிக் கேட்டார். ஆனால் வெல்லிங்டன் பிரபு அதற்கு இசையவில்லை. அப்போது டாக்டர் சுப்பராயன், "ஆங்கிலப் பேரரசின் பிரதிநிதியாக விளங்கும் நீங்கள், காந்தியடிகளை சந்தித்துப் பேசுவதற்குச் சங்கோசப்படவேண்டியதே இல்லை. இச்செயல், அரசியற் தந்திரத்தில் தங்கட்குள்ள குறைபாட்டையே காட்டுகிறது" என்று வெல்லிங்டன் பிரபுவுக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தார்.

"ஆங்கிலப் பேரரசு, காங்கிரஸ் கட்சியோடு எந்த விதப் பேச்சுவார்த்தையும் நடத்தும் நிலையில் இப்போது இல்லை. காந்தியாரை நான் இப்போது சந்தித்தால், அவர் தம்முடைய பேச்சு வன்மையால் என் முடிவை எங்கு மாற்றி விடுவாரோ என்று அஞ்சுகிறேன்" என்று திருவாளர் சுப்பராயனுக்குப் பதில் எழுதியிருந்தார், வெல்லிங்டன். இதைப்பற்றிச் சுப்பராயன் அவர்கள் காந்தியடிகளிடம் கூறியபோது, "என்னைக் கண்டு பேசுவதற்கு யாரும் அஞ்ச வேண்டியதில்லை. நான் எதையும் கபடமாகப் பேசுவதில்லையே! உள்ளத்திலுள்ளதை ஒளிவு மறைவின்றி திறந்துதானே பேசுகிறேன்!" என்று கூறினார்.

இவ்வாறு வெல்லிங்டன் பிரபுவே அஞ்சத்தக்க சொல்லாற்றல் பெற்றவரான காந்தியடிகள் ஆரம்பத்தில் மிகவும் கூச்சமுள்ளவராக விளங்கினார். மேடையில் ஏறிப் பேச நடுங்கினார். அவர் இங்கிலாந்தில் படித்துக்கொண்டிருந்தபோது, ஒருநாள் சைவ உணவுப் பிரசாரக் கூட்டமொன்றில் பேச அழைக்கப்பட்டிருந்தார். அக்கூட்டம் 'உணவின் அறம்' (The Ethics of Diet) என்ற நூலை எழுதிய திருவாளர் ஹோவார்டு வில்லியம்ஸ் என்பவரால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. மேல் நாடுகளில் சொற்பொழிவுகளை எழுதிப்படிக்கும் வழக்கம் உண்டு. எனவே காந்தியடிகள் தம் சொற்பொழிவை ஒரு தாளில் எழுதிக் கொண்டார். படிப்பதற்காக மேடையின் மீது எழுந்து

கின்றார். நா எழவில்லை; கண் மங்கலடைந்தது; உடல் நடுங்கியது. இத்தனைக்கும் அச்சொற்பொழிவு ஒரு பக்கத் திற்குமேல் இருக்காது. அதைக்கூட அவரால் படிக்க முடியவில்லை. எனவே அருகிலிருந்த திருவாளர் மஜூம்தார் என்பவர் காந்தியடிகளின் பொருட்டு அச்சொற்பொழிவைப் படிக்க வேண்டியதாயிற்று. அவருடைய சொற்பொழிவு மிக நன்றாயிருந்தது. சபையிலிருந்தோர் கேட்டு மகிழ்ந் தனர்; ஆரவாரம் செய்தனர். காந்தியடிகள் மிகவும் வெட்கமடைந்தார். தம் திறமையின்மையை எண்ணித் துயரப்பட்டார்.

* * *

மோகனதாஸின் தமையனார் அவரைப்பற்றி ஆகாயக் கோட்டைகள் கட்டியிருந்தார். 'பாரிஸ்டர்' தேர்வில் வெற்றி பெற்று வந்திருக்கும் தம் தம்பி, பேரும் புகழும் பெற்று வழக்கறிஞர் தொழிலில் நிறையப் பணம் சம்பாதிக்கப் போகிறார் என்று நம்பியிருந்தார். எனவே இலண்டனிலிருந்து திரும்பி வந்ததும், தம் தம்பி தொழில் தொடங்குவதற்கு வேண்டிய எல்லா ஏற்பாடுகளும் செய்து வைத்திருந்தார்.

பம்பாயில் தம் தொழிலைத் துவக்கினார் காந்தி யடிகள். முதன் முதலாக பம்பாய் 'ஸ்மால் காஸ்' கோர்ட் ஒன்றில், ஒரு சிறு வழக்கில், மமிபாய் என்னும் பெண்மணி யின் சார்பாக வாதிடச் சென்றார். வழக்கில் மமிபாய் பிரதி வாதி, எனவே, வாதிதரப்புச் சாட்சிகளைப் பாரிஸ்டர் மோகனதாஸ் காந்தி குறுக்கு விசாரணை செய்ய வேண்டி யிருந்தது. முதல் சாட்சியைக் குறுக்கு விசாரணை செய்வ தற்காக எழுந்தார். ஆனால் ஒன்றும் கேட்கத் தோன்ற வில்லை. தலை சுழலத் தொடங்கியது. நீதி மன்றமும், நீதி பதியும், சாட்சிகளும் ஆகிய எல்லாருமே சுழல்வது போலத் தோன்றினர். கேள்வி எதுவும் கேட்காமலேயே தம் இருக் கையில் அமர்ந்து கொண்டார். கட்சிக்காரி மமிபாயின்

பிரதிநிதி பக்கத்தில் இருந்தார். அவரிடம் தம்மால் வழக்கு நடத்த முடியாதென்றும், வேறொரு வக்கீலை அமர்த்திக் கொள்ளும்படியும் சொல்லிவிட்டு வெளியேறினர்.

* * *

பம்பாய் நகரில், 'சர்கவாஸ்ஜி ஜிஹாங்கீர் மண்டபத்தில்' ஒரு பொதுக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதற்குப் பம்பாயின் சிங்கமான சர் பிரோஸிஷா மேத்தா தலைமை தாங்கினர். தென்னப்பிரிக்க இந்தியர்களின் துன்பத்தைப் பற்றி அக்கூட்டத்தில் காந்தியடிகள் பேச இருந்தார். தம் சொற்பொழிவை அச்சடித்துக் கொண்டு காந்தியடிகள் வந்திருந்தார். அச்சிடப்பட்ட அச்சொற்பொழிவைப் படிப்பதற்காக அடிகள் எழுந்தார். அவர் உடல் காற்றில் பட்ட மாந்தளிர்போல் படபடக்கத் தொடங்கியது. தலைமை வகித்த பம்பாயின் சிங்கம் "உரக்கப் படியுங்கள்" என்று அடிக்கடி உறுமியது; உற்சாகப் படுத்தியது. இதனல் காந்தியடிகளின் குரல் இன்னும் மெலிந்தது. உடனே சர் பிரோஸிஷா மேத்தாவின் தலைமைச் சீடரான திரு. டி. வாச்சா அச்சொற்பொழிவைத்தாம் வாங்கிப் படித்தார். இதே காந்தியடிகள் தாம், தம் சொல்லாற்றலால் ஆங்கில அரசாங்கத்தைத் திணற அடித்தார். இலட்சக்கணக்கான மக்கள் அடங்கிய கூட்டத்தைத் தம் சொல் என்னும் மந்திரக் கயிற்றல் பிணித்தார்.

## 29. திருமணம்

காந்தியடிகளுக்குத் திருமணம் மிக இளமையிலேயே நடைபெற்றது. அவர் மணம் குழந்தை மணம். அதைப் பற்றிப் பின் வருந்தி எழுதியிருக்கிருர். அவைகளைப் பின் கண்டவாறு தொகுத்து வரைகிறேன்:-

"பதின் மூன்றும் வயதில் எனக்குத் திருமணம் நடந்தது என்ற செய்தியை மிகவும் வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். அதே வயதுள்ள சிறுவர்கள் பலர் இப்போது என்னிடம் வளர்ந்து வருகின்றனர். அவர்களைப் பார்க்கும்போதெல்லாம், என்னுடைய கதியை நினைத்து இரக்கமும், அவர்களுக்கு என் கதி நேராமலிருப்பது குறித்து மகிழ்ச்சியும் கொள்கிறேன். இவ்வளவு இளம் வயதில் மண முடித்தல் நியாயமென்று ஆதரிக்க, அறவழிப் பட்டவாதம் எதுவும் இருப்பதாக எனக்குத்தெரியவில்லை."

* * *

"இந்துக்களுக்குள் திருமணம் என்பது சாதாரணச் செய்தியன்று. திருமணத்தால் குடும்பமே அழியப் பெறுவோர் பலர். மணமகன், மணமகள் இருவரின் பெற்றோர்களும் இதில் தங்கள் பொருளையும் காலத்தையும் வீணுக்கிறார்கள். திருமணம் என்றால், அதற்குப் பல மாதங்களுக்கு முன்னிருந்தே பொருள்கள் சேகரிக்கவும், துணிமணிகள் நகைகள் தயாரிக்கவும், விருந்துகளுக்குத் திட்டம் போடவும் தொடங்கி விடுகிறார்கள். யாருடைய விருந்தில் பலகாரங்கள் அதிகம் என்பதில் போட்டி. பெண் மணிகள் குரல் நன்றாயிருந்தாலும், இல்லாவிட்டாலும், பாடித் தீர்த்துத் தொண்டையைப் புண்ணாக்கிக் கொண்டு, சில சமயங்களில் நோய்வாய்ப் படுகிறார்கள். அண்டை அயலார்க்குப் பெரும் தொந்தரவு, ஆனால் அவர்கள் வாய் திறப்பதில்லை. கூச்சல், குழப்பம், குப்பை, அழுக்கு எல்லாவற்றையும் அண்டை அயலார் பொறுமையுடன் சகித்துக் கொண்டிருப்பர். ஏனெனில் அவர்களும் இவ்வாறு கூத்தடிக்கும் காலம் ஒன்று வருமன்றோ?"

* * *

"திருமணத்துக்கு ஆயத்தம் செய்யப்படுவதினின்று தான், எனக்கும் திருமணச்செய்தி தெரிய வந்தது. திருமண

மென்றால், நல்ல பட்டாடைகள், மேள முழக்கம், ஊர்வலம் விருந்து, விளையாட்டுக்கு ஒரு புதுப் பெண் என்னும் இவற்றையன்றி அதற்கு வேறு பொருள் ஏதேனும் அப்போது நான் அறிந்ததாய் நினைவில்லை. சிற்றின்ப ஆசை பின்னால் வந்தது.''

* * *

''எனக்குக் குழந்தைப் பருவத்திலேயே மணம் செய்து வைத்தது குறித்துப் பிற்காலத்தில் என் தந்தையைப் பெரிதும் கடிந்து கொள்வேனென்று அப்போது கனவிலும் நினைக்கவில்லை. அன்று நடந்தது ஒவ்வொன்றும் எனக்குச் சரியாகவே பட்டது. அவை எனக்கு மகிழ்ச்சியும் அளித்தன. மேலும் திருமணம் செய்து கொள்ள விருப்பமும் இருந்தது. அன்று நாங்கள் திருமண மேடையில் உட்கார்ந்திருந்தது, சப்தபதி நடந்தது, மணமகனும் மணமகளும் ஒருவருடைய வாயில் ஒருவர் தின்பண்டம் ஊட்டியது முதலியன எல்லாம் இப்போது எனக்கு நன்றாக நினைவிலிருக்கின்றன. ஓ! அந்த முதல் இரவு! அறியாக் குழந்தைகள் இருவர் குடும்பமென்னும் கடலில் அதன் பலாபலன்களை அறியாமலே தொப்பென்று வீழ்ந்தனர்! அம் முதல் நாளிரவு எப்படி நடந்து கொள்ள வேண்டுமென்பதைப் பற்றி எனது அண்ணியார் எனக்கு அறிவுரை பகர்ந்திருந்தார். என் மனைவியை இவ்வாறு யார் தயார் செய்தார்கள் என்று எனக்குத் தெரியாது. இன்றுவரை அதைப் பற்றி அவளிடம் நான் கேட்டதில்லை. இப்போது கேட்கவும் விரும்புகிறேனில்லை. முதன் முதலாக நாங்கள் சந்தித்த போது பெரிதும் கூச்சப்பட்டோமென்று வாசகர்கள் சொல்லாமலே தெரிந்து கொள்வார்கள். அவளிடம் எவ்வாறு பேசத் தொடங்குவது, என்ன பேசுவது, என்று புரியவில்லை. அண்ணியாரின் அறிவுரைகள் அதிகமாகப் பயன்படவில்லை. உண்மையில், இதுபோன்ற காரியங்களில் பிறரின் அறிவுரைகள் அவசியமே இல்லை. முற்பிறப்பில்

ஏற்பட்ட அநுபவமே, இப்பிறவியில் பிறருடைய அறிவுரையைத் தேவையில்லாமல் செய்து விடுகின்றது. வரவர ஒருவரையொருவர் நன்கு அறிந்து கொள்ளலானோம். தாராளமாகப் பேசவும் பழகவும் தொடங்கினோம். இருவரும் ஒத்த வயதுடையவர்களே! இருந்தாலும் கணவனுடைய அதிகாரத்தைச் செலுத்த நான் தயங்கியதில்லை."

* * *

காந்தியடிகள் குழந்தை மணத்தின் கொடுமைகளை விளக்கியிருப்பதை அறிந்தோம். சமயம் நேரும்போதெல்லாம், சிறுவயதில் மக்களுக்குத் திருமணம் செய்ய வேண்டாம் என்று எச்சரிப்பார். குழந்தை மணம் செய்துவைத்த பெற்றோர்களைக் கண்டிக்காமலுமிருக்கமாட்டார். காந்தியடிகள் கதர்ப்பிரசாரச் சுற்றுப் பயணத்திற்காக 1929 ஆம் ஆண்டு தென்னாட்டுக்கு வந்தார். ஆந்திரா சென்றிருந்தபோது பட்டாபி சீதாராமய்யாவின் வீட்டில் தங்கியிருந்தார். பட்டாபி சீதாராமய்யாவின் மருமகளுக்கு வயது பன்னிரண்டு. அவளும் வீட்டிலிருந்தாள். உடனே காந்தியடிகள், "என்ன? உங்கள் மகன் 12 வயதுள்ள தன் மனைவியோடா இங்கு வாழ்கிறான்? இது ஏற்றதல்ல!" என்று கூறினார்.

"இல்லையே! யார் கூறியது?" என்றார் சீதாராமய்யா.

"ஆனால், அப்பெண் உங்கள் வீட்டில் அல்லவோ இருக்கிறாள்" என்றார் காந்தியடிகள்.

"ஆமாம்! அவள், அவளுடைய தந்தை, தாயார், பாட்டி, சகோதரிகள் ஆகிய எல்லோருமே இங்குதான் இருக்கிறார்கள். அவர்கள் இதே ஊரில்தான் வாழ்கிறார்கள். அவர்கள் வீடும் சிறிது தூரத்தில் தான் இருக்கிறது. அவர்கள் எல்லோரும் உங்களை அருகில் வந்து காண வேண்டும் என்பதற்காக வந்திருக்கிறார்கள்" என்று விளக்

ஞர் சீதாராமய்யா. அதன் பிறகே காந்தியடிகள் திருப்தி யடைந்தார்.

*　　　*　　　*

1945-ஆம் ஆண்டு காந்தியடிகளின் சேவாக்கிராமத்தில் இந்துமதி—தெண்டுல்கர் என்பாருக்குத் திருமணம் நடைபெற்றது. திருமணத்தை நடத்தி வைத்தவர் காந்தியடிகள். அப்போது, அவர் மதச்சம்பிரதாயங்களை யொட்டியோ, அல்லது அரசியல் சட்டத்தை ஒட்டியோ அத்திருமணத்தை நடத்தவில்லை. வாழ்க்கையை ஒட்டி, ஆழ்ந்த கருத்துப் புலப்படுமாறு நடத்தினார். வடநாட்டு இந்துக்களின் திருமணத்தில் 'சப்தபதி' என்ற சடங்கு குறிப்பிடத் தக்கது. மணமக்கள் எதிர்கால வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டிய ஏழு கொள்கைகளை அது வற்புறுத்துகிறது. அவ்வேழு செயல்களையும் 'கடைப்பிடிப்போம்' என்று உறுதி கூறுவதோடு, அப்போது செய்தும் காட்ட வேண்டும். ஆனால் இந்தத் திருமணங்களில் பண்டைக் காலங்களில் கடைப்பிடிக்கப்பட்டு வந்த சப்தபதி சடங்கு பொருளற்றது; திருமண நிகழ்ச்சிகளில் அது ஒரு அங்கமே தவிர, வாழ்க்கைக்குப் பயன்படாதது. காந்தியடிகள் அச் சடங்கிற்குப் புத்துருவம் கொடுத்தார். சப்தபதி சடங்கின் போது மணமக்கள் இருவரும் இணைந்து ஏழு பணிகளைச் செய்யுமாறு ஏவினார். அப்பணிகளாவன: பகவத்கீதை படித்தல், நூல் நூற்றல், ஆண் காத்தல், கிணற்றடியைக் கழுவல், உழவுத்தொழில் செய்தல் முதலியன. திருமணம் இந்துஸ்தானியிலேயே நடைபெற்றது. (தமிழகத்தைப் போல் அங்கும் வடமொழியிலேயே புரோகிதர் மந்திரம் சொல்வது வழக்கம். ஆனால் காந்தியடிகள் அதிலும் புரட்சி செய்தார். தமிழ்த் திருமண முறையைக் கேலி செய்யும் நண்பர்கள் காந்தியடிகளின் செயலை உற்று உணர்வார்களாக.) அத் திருமணத்தை நடத்தி வைத்த புரோகிதர் ஒரு அரிஜன் என்பது குறிப்பிடத் தக்கது. அதுவும் அவர்

இந்துவல்ல; கிறித்தவர். இத் திருமணத்தில் காந்தியடிகள் வற்புறுத்தியதெல்லாம் ஒழுக்கமே.

* * *

இராமேசுவரி நேருவின் மகனுக்குத் திருமண ஏற்பாடு நிகழ்ந்து கொண்டிருந்தது. மணமகனும் மணமகளும் வேறு வேறு சமயத்தைச் சார்ந்தவர்கள். எனவே திருமணத்தை எந்த முறையில் நடத்துவது என்ற ஐயப்பாடு எழுந்தது. காந்தியடிகளிடம் இதைப்பற்றிக் கூறி, யோசனை கேட்டபோது, அடிகள் பின்வருமாறு குறிப்பிட்டார் :

"இந்து என்ற சொல் புதிது. இது நமக்களிக்கப்பட்ட 'லேபிள்.' நம்முடைய சமயத்தின் உண்மைப் பெயர், 'மானவதர்மம்'; அதாவது 'மனித சமயம்.' மனித சமயத்தின் சட்ட நூல் மனுநீதி. இச் சமயத்தின் ஊற்று வேதங்கள். மனித சமயம் காலப்போக்கில் மாறிக் கொண்டே வந்தது. ஆங்கிலர் ஆட்சி இங்கு ஏற்படுவதற்கு முன் நம் சமுதாயமானது அடிக்கடி காலத்திற்கேற்ற மாற்றங்களைப் பெற்றுத் திருந்தி வந்தது. ஆனால் ஆங்கில அரசாட்சி, அவைகளின் போக்கைத் தடுத்து நிறுத்திச் சட்டமாக்கி விட்டது. காலத்தால் மாற வேண்டியவை, மாற முடியாத நிலையில் அமைந்து விட்டன. அப்படி ஏதேனும் மாறுதல்கள் ஏற்பட்டிருந்தால் அவை ஆங்கிலேயரால் நிறுவப்பட்ட சட்டசபைகளினாலும், உயர்நீதி மன்றங்களாலும் ஏற்பட்டவையே! இச் சட்டங்களால் இந்து சமுதாயம் உணர்விழந்திருக்கிறது. இந்நிலையில் மக்கள் சட்டங்களைப் பொருட்படுத்துவது கூடாது; பழைய சம்பிரதாயங்களையும் தூக்கி எறிய வேண்டும். ஒழுக்கத்திற்கு ஒத்துவராத ஆங்கிலச் சட்டத்தைப் புறக்கணித்து விட்டு, மனித சமயத்தின் அடிப்படையில் திருமணத்தை நடத்த வேண்டும். அதனால் உண்டாகக் கூடிய இன்னல்களையும் ஏற்கத் தயாராக இருக்க வேண்டும்."

காந்தியடிகள் 'மனித சமயம்' (மானவ தர்மம்), மனு நீதியில் விளக்கப்பட்டிருப்பதாகக் கூறுகிறார். மனுநீதி வருணாசிரம தர்மத்தை வற்புறுத்தும் நூல். இவ் வருணக் கொள்கை காந்தியடிகளுக்கு உடன்பாடே. ஆனால் தமிழ்த் தென்றல் திரு. வி. க. இக் கொள்கையால் காந்தியடிக ளோடு மாறுபடுகிறார். காந்தியடிகள் வருணக் கொள்கையை ஒத்துக் கொண்டாலும் மனுநீதியில் கூறப்பட்டுள்ள எல்லாக் கொள்கைகளும் அவருக்கு உடன்பாடல்ல.

## 30. பிரம்மச்சரியமும் கருத்தடையும்

காந்தியடிகள் மனித சமுதாயத்துக்குத் தொண்டு செய்வதையே தமது வாழ்வின் தலைசிறந்த குறிக்கோளாகக் கருதினார். முழு நேரமும் மக்களுக்குத் தொண்டு செய்ய வேண்டுமானால், குடும்பத்தைப் பெருக்கிக் கொண்டே போவதில் பயனில்லை என்று அவருக்குத் தோன்றியது. இல்வாழ்க்கையில் சிற்றின்பத்தில் ஈடுபடுவது, ஆத்ம சாத னத்துக்குத் தடையாகும் என்ற கருத்து காந்தியடிகள் உள்ளத்தில் சிலகாலம் இடம் பெற்றிருந்தது. அதோடு குடும்பப் பாதுகாப்பிலும், குழந்தைகள் பெற்று வளர்ப் பதிலும் அதிகம் ஈடுபட்டால் மக்கள் குலத்துக்குத் தொண்டு செய்ய நேரும் சந்தர்ப்பங்களைச் சரிவரப் பயன் படுத்திக்கொள்ள முடியாது என்று அவருக்குத் தோன் றியது. எனவே அவர் வாழ்க்கையில் பிரம்மச்சரியத்தை மேற்கொள்ளத் துணிந்தார்.

இதைப்பற்றிக் காந்தியடிகள் 'சத்திய சோதனை'யில் பின் கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

"வாழ்நாள் முழுவதும் பிரம்மச்சரியத்தைக் கடைப் பிடிப்பதென்னும் உறுதிப்பாட்டை மேற்கொண்டேன். அது எவ்வளவு பெரிய சிறப்பான செயல் என்பதை நான் அப்போது அறியவில்லை என்று ஒப்புக்கொள்ள வேண்டும்.

அதைக் கடைப்பிடிக்க நான் அநுபவித்த துன்பங்கள் இன்றும் என் மனக்கண்முன் நிற்கக் காண்கிறேன். அதன் முக்கியமும் நாளுக்கு நாள் எனக்குப் புலனாகி வருகிறது. பிரம்மச்சரியம் இல்லாத வாழ்க்கை சாரமற்றதாகவும், விலங்கு நிலையுற்றதாகவும் எனக்குத் தோன்றுகிறது. இயற்கையில் விலங்குக்குப் புலனடக்கமென்பது தெரியாது. மனிதன் புலனடக்கத்தைக் கடைப்பிடிக்கக் கூடிய ஆற்றலைப் பெற்றிருப்பதால்தான் மனிதனாகிறான்.

பிரம்மச்சரியம்; உடல் கட்டுப்பாட்டில் தொடங்குகிறது; ஆனால் உடலுடன் முடிவதில்லை. முழு பிரம்மச்சரியம் கெட்ட எண்ணங்களுக்குக் கூட இடம் கொடுக்காது. உண்மைப் பிரம்மச்சாரி, புலன் ஆசையைப் பூர்த்தி செய்வது குறித்துக் கனவிலும் கருதமாட்டான். உடல் பிரம்மச்சரியத்தைக் கடைப்பிடிப்பதிலும் எனக்கு எவ்வளவோ துன்பங்கள் ஏற்பட்டன. தற்போது நான் அபாய எல்லையைத் தாண்டி விட்டேன் என்று சொல்லலாம். ஆயினும் உள்ளம் இன்னும் முற்றிலும் வசப்பட்டு விடவில்லை. இப் பெரிய வெற்றியை அடையும் விருப்பம் பெரிதும் கொண்டிருக்கிறேன். அதற்காகப் பெரு முயற்சி செய்து வருகிறேன். ஆனால் எவ்வளவு விழிப்புடனிருந்தாலும், தீய எண்ணங்கள் எங்கிருந்து வந்து எப்படித்தான் முளைக்கின்றன என்பது எனக்கு இன்றும் விளங்காத ஒன்றாகவே இருந்து வருகின்றது. தீய எண்ணங்கள் உள்ளே நுழையா வண்ணம் மனக்கதவைப் பூட்டும் சாவி மனிதனிடம் இருக்கிறதென்பதில் எனக்கு எள்ளளவும் ஐயமில்லை. ஆனால் ஒவ்வொரு மனிதனும் அதைத் தானே தேடிக் கண்டுபிடிக்க வேண்டும். மகான்களும், முனிவர்களும் தங்கள் அனுபவங்களை நமக்காகச் சொல்லிவிட்டுச் சென்றுள்ளார்களாயினும், எல்லோருக்கும் பொருந்தக் கூடியதும், தவறாது பயனளிப்பதுமான மருந்து எதையும் அவர்கள் குறிப்பிடவில்லை.

தொடக்க உற்சாகத்தில் பிரம்மச்சரியத்தைக் கடைப் பிடிப்பது மிக எளிதாகவே இருந்தது. இதற்காக என் வாழ்வு முறையில் நான் செய்த முதல் மாறுதல் என்ன வெனில், என் மனைவியுடன் ஒரே படுக்கையில் படுப்ப தையோ, அவளுடன் தனிமையை நாடுவதையோ விட்டு விட்டதே ஆகும். இவ்வாறு 1900-ஆம் ஆண்டிலிருந்து ஓரளவு நான் கடைப்பிடித்து வந்த பிரம்மச்சரியத்தை 1906-ஆம் ஆண்டில் ஆயுள் விரதமாகக் கைக் கொண் டேன்."

* * *

காந்தியடிகளும் திரு. என். ஆர். மால்கானி என்பவரும் கருத்தடையைப்பற்றி ஒரு உரையாடல் நிகழ்த்தினர். அவ் வுரையாடலில் காந்தியடிகள் கருத்தடையைப் பற்றிய தம் கருத்தைப் பின்வருமாறு வெளியிடுகிறார் :—

"கருத்தடை முறையைப் பயன்படுத்துபவர்கள், புணர்ச்சி, வாழ்க்கைக்கு இன்றியமையாத ஒன்று என்று கருதுகிறார்கள். கருத்தடை செய்யாமல் உடலுறவு கொள் வதால் ஏற்படும் பலாபலன் எவ்வளவு கொடுமையானது என்று அவர்கள் கருதுகிறார்களோ, அதை விடக் கருத் தடை முறையைக் கையாண்டு உடலுறவு கொள்வதால் ஏற்படும் பலாபலன் மிகவும் கொடியது என்று நான் எண்ணுகிறேன். 'கருத்தடை முறை, இன்ப வேட்கை யைத் தீர்த்துக்கொள்ளும் நோக்கத்தோடு' கைக்கொள்ளப் படவில்லை. பொருளாதார நெருக்கடியை முன்னிட்டும் பெண்ணின் உடல்நலத்தை முன்னிட்டும், சமுதாய நலனை முன்னிட்டும், மக்களை நல்லமுறையில் வளர்க்க வேண்டும் என்ற நோக்கத்தை முன்னிட்டும் கைக் கொள்ளப்படு கிறது' என்று சமாதானம் கூறுகிறார்கள்.

இந்த நோக்கங்களே கருத்தடையின் நோக்கமாக இருந்தால் கருத்தடையே செய்து கொள்ள வேண்டிய அவசியமில்லையே. வறுமையில் வாடுபவன் உடலின் பத்

தைப்பற்றி அடிக்கடி நினைக்கமாட்டான். பொதுத் தொண்டில் ஈடுபட்டிருப்பவனும் அப்படியே. இவர்களெல்லாம் உடலின்பத்தின் பால் தங்களுக்குள்ள பற்றைச் சிறிது சிறிதாகக் குறைத்துக் கொள்ளலாம். உடலுறவே வேண்டாம் என்று நான் சொல்லவில்லை. ஆனால் அவ்வுறவு குழந்தை பெறுவதற்காக மட்டும் ஏற்பட வேண்டும். இதில் காட்டுமிராண்டிகள் நம்மை விட உயர்ந்தவர்கள். காட்டுமிராண்டிகள் இன்பத்திற்காக உடலுறவு கொள்வதில்லை. பிள்ளைப் பேற்றிற்காகவே புணருகின்றனர். காட்டுமிராண்டிகள் தங்களையறியாமலேயே இவ் விஷயத்தில் நல்லவர்களாக இருக்கிறார்கள். திருவாளர் வாலஸ் என்பார், 'காட்டுமிராண்டிக்கும் நாகரிக மனிதனுக்கும் இருக்கும் உண்மையான வேறுபாடு, காட்டுமிராண்டிக்கே சிறப்பைத் தருகிறது. கருத் தடையாளர்கள் தீமையை நன்மையாக மக்களிடத்தில் காட்டுகிறார்கள். உடலுறவு, வாழ்க்கையில் நன்மையாகக் கருதப்பட்டால், அது மனித குலத்திற்கு அழிவையே விளைக்கும்' என்று கூறுகிறார். மேலும் கருத் தடையானது பலாபலன்களைப் பற்றிய அச்சத்தைப் போக்குகிறது. பலாபலன்களைப்பற்றிய அச்சமில்லாதவன் கவலையற்ற புணர்ச்சியை விரும்புவான்; அடிக்கடி உடலுறவுக்கு ஆசைப்படுவான். கருத் தடையைக் கையாள்பவர் தவறு செய்வதற்கும் அஞ்ச வேண்டிய நிலை இல்லாமல் போய் விடுகிறது. எனவே புலனடக்கமே சிறந்தது. கண்ணபிரான் ஆயிரக் கணக்கான கோபியரிடம் காதல் புரிந்தான். ஆனால் தன் வீரியத்தை அவன் கட்டுப்படுத்தும் ஆற்றல் பெற்றிருந்தான். எனவே அவன் காதல், தெய்வத்தன்மை வாய்ந்தது.''

இதற்குள் திரு மால்கானி குறுக்கிட்டார். ''ஆம் பாபு! மேலைநாட்டார்கூட இத்தகைய திறமையைப் பற்றிக் கூறக் கேட்டிருக்கிறேன். 'கேரசா' (Karezza) என்று அதைச் சொல்லுவார்கள். அது ஒருவகைப் புணர்ச்சியாம். அப்

புணர்ச்சியால், விந்து வெளிப்படாமலேயே உடலுறவு கொள்வார்களாம்" என்று கிண்டலாகக் குறிப்பிட்டார் மால்கானி.

"நன்ருகச் சொன்ணுய்! அத்தகைய கண்ணன் கொடியவன்! நான் அவனை அருகில் அண்டவிட மாட்டேன்" என்று கூறிச் சிரித்தார் காந்தியடிகள்.

காந்தியடிகள் மீண்டும் கூறியதாவது :

"புலனடக்கம் எல்லோருக்கும் ஏற்றதல்ல; ஆத்மசக்தி மிக்க பெரியோர்களாலேயே அது முடியும்; சாதாரண மக்களால் முடியாது என்று பலர் கூறுகிருர்கள். இதை நான் ஒத்துக் கொள்ளமுடியாது. ஏனென்ருல் நானும் சாதாரண மனிதனே. புலனடக்கத்தைக் கைக்கொண்டால் மக்கட் பெருக்கம் குறைந்து, மனித இனமே குன்றிவிடும் என்று சிலர் கூறுகின்றனர். மனித இனம் குறைந்தாலும் கவலையில்லை. குறைந்த அளவுள்ள மக்களாவது, உயர் மக்களாக வாழமுடியும். கருத்தடையை விடப் புலனடக்கமே சிறந்தது என்பது என் அசைக்க முடியாத கொள்கை. இக் கொள்கை உலகில் வலிமைபெற ஆயிரக்கணக்கான ஆண்டுகள் ஆனுலும் கவலையில்லை. உலகம் அப்படித்தானே வளர்ந்தது. உலகை ஒருநாளில் மாற்றிவிட முடியாது."

* * *

காந்தியடிகள் ஒருநாள் உலாவச் சென்றபோது காகா காலேல்கரும் உடன் சென்ருர். அவர் காந்தியடிகளை நோக்கி, "பாபு! நீங்கள் இப்போதெல்லாம் அதிகமாக நடக்கிறீர்கள். முன்பெல்லாம் மாலையில் அரைமணி நேரம்தான் நடப்பீர். இப்பொழுது ஒருமணி நேரம் நடக்கிறீர். அதோடு காலையிலும் நடக்கிறீர்" என்று கூறினுர்.

அதற்குக் காந்தியடிகள், "காகா! மனிதன் நாள் தோறும் வேலைசெய்வதற்குரிய சக்தியைப் பெறுகிருன். அச் சக்தியை முழுதும் அவன் செலவிட்டுவிட வேண்டும்.

மிச்சம் வைக்கக்கூடாது. அன்றைய 'கோட்டா' அன்றோடு தீர்ந்து விடவேண்டும். மிச்சம் வைத்திருந்தால், அச்சக்தி வேலை கேட்கும். இரவு நேரத்தில் அமைதியாக இருக்காது. புணர்ச்சியின் பால் நாட்டம் செல்லும். நன்கு வேலை செய்துவிட்டால் நம் சக்தி தீர்ந்து, அசதி ஏற்பட்டு இரவில் உறக்கம் எளிதில் வந்துவிடும். புலனடக்கத்திற்கு இது தக்க மருந்து. நான் தென்னுப்பிரிக்காவில் வாழ்ந்தபோது, நாற்பது கல் நடப்பதற்குரிய சக்தி இருந்தால் முப்பத்தொன்பது கல் நடந்து தீர்த்து விடுவேன். அங்கு நான் நன்ருகச் சாப்பிட்டேன்; நன்ருக வேலை செய்தேன்" என்று கூறினர்.

## 31. உடற்பயிற்சி

"நான் ஏழாம் வகுப்பில் படித்துக்கொண்டிருந்த போது திருவாளர் தோராப்ஜி என்பவர் தலைமையாசிரியராக இருந்தார். அவர் கட்டுப்பாட்டை வலியுறுத்துபவர்; ஒழுங்கு முறைப்படி செயலாற்றுபவர். உடற்பயிற்சி, கிரிக்கெட் ஆட்டம் இரண்டையும் அவர் மேல்வகுப்புக்களில் கட்டாயமாகச் செய்தார். இவை இரண்டையும் நான் வெறுத்தேன். கட்டாயமாக்கப்படுவதற்கு முன்பு நான் உடற்பயிற்சிக்கும் விளையாட்டுக்கும் செல்வதே இல்லை. எனக்கு இயற்கையான கூச்சம் இதற்கு ஒரு காரணமாகும். அது தவறென இப்போது உணர்கிறேன். உடற்பயிற்சிக்கும் கல்விக்கும் சம்பந்தமில்லை என்று அக்காலத்தில் நினைத்தேன். ஆனல் இன்று மனப்பயிற்சியைப் போலவே உடற்பயிற்சியும் பள்ளிக்கூடத்தில் இடம் பெற வேண்டுமென அறிந்துள்ளேன்.

எனினும் உடற்பயிற்சி இல்லாததால் எனக்கு அதிகத் தீமையொன்றும் ஏற்படவில்லை என்பதை இங்கே கூற

வேண்டும். இதற்குக் காரணம், திறந்தவெளியில் உலாவு வதின் நன்மையைப் பற்றி நான் நூல்களில் படித்திருந்த படியால், நாள்தோறும் நீண்டநேரம் நடக்கும் வழக்கத் தைக் கைக்கொண்டிருந்ததேயாகும். இவ்வழக்கத்தின் பயனாக என் உடம்பு நல்ல உரம் பெற்றது" என்று காந்தி யடிகள் தம் பள்ளி வாழ்க்கையைப் பற்றிக் குறிப்பிடு கிறார். காந்தியடிகள் உண்ணத் தவறிய காலத்தும் உலாவத் தவறியதில்லை.

*　　　*　　　*

மகாதேவ தேசாயைப் பற்றி அறியாதவர்கள் யாரும் இருக்கமுடியாது. காந்தியடிகளின் தனிச் செயலாளராக (Personal Secretary) நீண்டநாள் பணிபுரிந்தவர். 'காந்தி யடிகளின் நிழல்' என்று அவரைச் சொன்னால்கூடப் பொருந்தும். நிறைய அலுவல் இருந்த காரணத்தால் மகா தேவ தேசாய் வெளியில் உலாவுவதற்காக மாலையில் செல்ல வில்லை. காகித கட்டில் மூழ்கியிருந்தார். அதைக் கண்ட காந்தியடிகள், "மகாதேவ்! உணவில்லாமல் கூட நீ ஒரு நாள் இருக்கலாம்; ஆனால் உடற்பயிற்சியில்லாமல் இருக்கக்கூடாது," என்று கூறினார்.

*　　　*　　　*

காந்தியடிகள் வகுப்புக் கலவரத்தைப் போக்குவதற் காகக் கல்கத்தா சென்றிருந்தார். ஹைதரி மாளிகை என்ற இல்லத்தில் தங்கியிருந்தார். ஒருநாள் காலையில் மழை தூறிக்கொண்டிருந்தது. அதனால் அன்று உலாவுவதற்காக அவரால் வெளியில் செல்ல முடியவில்லை; உலாவாமலும் இருக்க முடியவில்லை. அந்த அறைக்குள்ளேயே உலாவத் தொடங்கினார். மிகவும் குறுகிய இடமாக இருந்த கார ணத்தால், மனுவும் அவரோடு உலாவ முடியவில்லை. எனவே அருகிலிருந்த ஒரு நாற்காலியில் அமர்ந்து கொண் டாள். அப்போது காந்தியடிகள் மனுவைப் பார்த்து,

"மனுதி! நீ ஏன் இன்று சோம்பலாக இருக்கிறாய்?" என்று கேட்டார். மனுவுக்கு ஒன்றும் விளங்கவில்லை.

"என்ன கூறுகிறீர்கள் பாபு?" என்று கேட்டாள் மனு.

"நீ இன்று நடக்காமல் உட்கார்ந்து கொண்டிருக்கிறாயே! அதைச் சொன்னேன். நான் சென்ற பிறகு நீ நாற்காலியில் சோம்பலாக உட்கார்ந்து காலம் கழிக்கப் போகிறாயா? நான் உன்னைக் கொண்டுதான் மற்றவர்களை எடை போடவேண்டும். இத்தகைய புனிதமான நவகாளி யாத்திரையில் நீதானே பங்குகொண்டிருக்கிறாய்? இன்று உலாவுவதை நீ கைவிட்டதற்கு ஏதேனும் சொந்தக் காரணம் இருக்கலாம்; ஆனால் உன் சொந்தக் கொள்கையை நீ கைவிடலாமா? நான் அதிருப்தி கொள்வேன் என்பதற்காகப் பிறர் செயல்புரிவதை நான் விரும்பவில்லை. பிற தொண்டர்களும் எனக்கு அஞ்சியே பணிபுரிகிறார்களோ என்று ஐயப்பட வேண்டியிருக்கிறது. உன் செயலை எடுத்துக் கொண்டு ஆராய்ந்தால், எனக்குப் பிறகு என் தொண்டர்களெல்லாம் நாற்காலியில் நிலையாக இடம்பிடித்து விடுவார்கள் என்றே தோன்றுகிறது!" என்று சிரித்துக் கொண்டே கூறினார் அடிகள்.

*　　*　　*

காந்தியடிகளுடன் உலாவச் செல்பவர்களுக்கு, கிடைக்கும் மகிழ்ச்சி உண்மையில் சிறப்பு வாய்ந்ததாகும். காந்தியடிகள் நடக்கும்போது இரு குழந்தைகள் அவருக்கு இரு புறமும் நின்று கொண்டு, தங்களுடைய தோள்களின்மேல் அவருடைய கைகளைத் தாங்கிக் கொள்வார்கள். இவர்களை அடிகள் "உயிர் ஊன்றுகோல்" என்று குறிப்பிடுவார். இந்த வாய்ப்புக் கிடைக்காத குழந்தைகள் ஏங்குவார்கள். ஆனால் அவருக்கு உயிர் ஊன்றுகோலாக உதவுவது அவ்

வளவு எளிதான செயலல்ல. காந்தியடிகள் கிழவர்தான்; ஆனால் அவர் நடை விரைவுநடை (Double march).

## 32. சத்தியாக்கிரகம்

1906-ஆம் ஆண்டு காந்தியடிகளின் வாழ்க்கையில் சத்தியாக்கிரகக் கொள்கை குடிப்புகுந்தது. காந்தியடிகள் தென்னாப்பிரிக்காவில் இந்தியர் நலனுக்காகப் போராட்ட இயக்கம் நடத்திக்கொண்டிருந்தாரல்லவா? அவ்வியக்கம் 'பாசிவ் ரெசிஸ்டன்ஸ்' என்ற பெயராலேயே குறிப்பிடப் பட்டது. அந்தக் காலத்துத் தமிழ் ஏடுகளில் அதை 'எதிர்க்காமல் எதிர்க்கும் முறை' என்றும், 'சாத்விக எதிர்ப்பு' என்றும் மொழிபெயர்த்து வந்தார்கள். இந்தியர்கள் நடத்திவந்த இந்த இயக்கத்தை ஆங்கிலப் பெயரால் குறிப்பிட்டு வந்தது காந்தியடிகளுக்கு பிடிக்கவில்லை. இந்திய மொழியில் பெயர் கொடுக்கவேண்டுமென்பதற்கு, வேறொரு முக்கியமான காரணமும் ஏற்பட்டது. ஒரு பொதுக்கூட்டத்தில் தென்னாப்பிரிக்க இந்தியர்களின் கட்சியை ஆதரித்துப் பேசிய ஓர் ஆங்கிலேயர், "இந்தியர்கள் சிறு தொகையினர்; பலமற்றவர். அதனால் 'பாசிவ் ரெசிஸ்டன்ஸ்' முறையைக் கையாளுகிறார்கள். பலவீனர்கள் வேறு என்ன செய்ய முடியும்?" என்று பேசினார். இதைக் காந்தியடிகள் கேட்டுக்கொண்டிருந்தார். தாம் கைக் கொண்ட போர்முறை பலவீனங் காரணமாக ஏற்பட்டதல்ல என்பது காந்தியடிகளின் உறுதியாகும். எனவே 'பாசிவ் ரெசிஸ்டன்ஸ்' பலவீனர்களுடைய இயக்கம் என்று கருதப்பட்டபடியால் தம் இயக்கத்தின் பெயரை உடனே மாற்றிவிட வேண்டும் எனத் தீர்மானித்தார். புதிய பெயர் கண்டுபிடித்துச் சொல்பவர்களுக்குப் பரிசு வழங்கப்படும் என்று 'இண்டியன் ஒபினியன்' பத்திரிகையில் விளம்பரம் செய்தார். இந்த அதிசயமான பரிசுப் போட்டியில் கலந்து

கொண்டவர்களில் ஒருவர், மகன்லால் காந்தி. இவர், 'நற் செயலில் உறுதி' என்னும் பொருள்படும் 'சதாக்கிரகம்' என்னும் பெயரைக் குறிப்பிட்டார். எல்லாப் பெயர்களி லும் இது காந்தியடிகளுக்குப் பிடித்திருந்தது. ஆனால் முழுத் திருப்தி ஏற்படவில்லை. மேலும் யோசனை செய்து 'சதாக்கிரகம்' என்ற பெயரைச் 'சத்தியாக்கிரகம்' என்று மாற்றினார். சத்தியம் என்பதால் அன்பும் அஹிம்சையும் அடங்கியுள்ளன என்பது, காந்தியடிகளின் நம்பிக்கை. எனவே காந்தியடிகள் உலகத்திற்குக் கண்டுபிடித்துக் கொடுத்த புதிய போர்முறைக்குச் 'சத்தியாக்கிரகம்' என்னும் பெயரே நிலைபெற்று விளங்குகிறது.

*   *   *

காந்தியடிகள் கறுப்புச் சட்டத்தை எதிர்த்துக் கிளர்ச்சி செய்தார் என்று முன்பே அறிந்தோம். ஆயிரக் கணக்கான இந்தியர்கள் சிறைப்புகுந்தனர். உடனே தளபதி ஸ்மட்ஸ் இந்தியர்கள் தாமாகவே வலியச் சென்று தங்களைப் பதிவு செய்துகொண்டால் அச்சட்டத்தை நீக்கி விடுவதாகச் சொன்னார். ஸ்மட்சின் அரசியல் தந்திரம் காந்தியடிகளுக்குப் புரியவில்லை. போராட்டத்தை நிறுத்தி விட்டார். ஆனால் ஸ்மட்ஸ் தாம் அளித்த வாக்குறுதியை நிறைவேற்றவில்லை. காந்தியடிகள் உடனே சத்தியாக் கிரகச் செயற்குழுவைக் கூட்டினார். கூட்டத்தில் சிலர், "முதலிலேயே சொன்னோமே கேட்டீர்களா? இப்படித் தான் நீங்கள் யாரையும் சுலபத்தில் நம்பிவிடுகிறீர்கள். பிறகு ஏமாந்து போகிறீர்கள்" என்றார்கள்.

அவர்களுக்கு காந்தியடிகள் தம் கட்சியை எடுத்துச் சொன்னார். 'எதிரியை நம்புவது சத்தியாக்கிரகத்தின் முதல் தருமம். பிறகு எதிரி வாக்கை மீறினால் அதற்குத் தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டும். அப்படியில்லாமல், உலகத்தில் எல்லோருமே அயோக்கியர்கள் என்று

எண்ணிக்கொண்டு சத்தியாக்கிரகத்தைக் கையாள முடியாது. பிறரை நம்புவது என்னிடமுள்ள குறை என்று நீங்கள் நினைக்கலாம். அப்படி நினைத்தால் அந்தக் குறையுடனேயே என்னை உங்கள் தலைவனாக ஏற்றுக்கொள்ள வேண்டும். என்ன சொல்லுகிறீர்கள்?'' என்று கேட்டார். எல்லாரும் ஒருமுகமாகக் காந்தியடிகளை மீண்டும் தலைமை ஏற்கும்படியும், போரைத் திரும்பத் தொடங்கி நடத்தும்படியும் கேட்டுக்கொண்டார்கள்.

* * *

## 33. உண்ணாவிரதம்

''என் தாயாரைப் பற்றி எண்ணும்போது அவருடைய தவ ஒழுக்கமே முதன்மையாய் நினைவுக்கு வருகிறது. அவர் பெரிதும் சமயப்பற்றுக் கொண்டவர். நாள்தோறும் இறைவனை வழிபாடு செய்யாமல் அவர் உணவு கொள்ளமாட்டார். நாள்தோறும் திருமால் கோவிலுக்குச் சென்று வருவார். மிகக் கடுமையான நோன்புகளை அவர் மேற்கொண்டு நிறைவேற்றி வந்தார். உடல்நோய் காரணமாகவும் அவர் நோன்பைக் கைவிடுவதில்லை. ஒருமுறை சாந்திராயண விரதத்தின்போது கடுமையான நோய் வந்தும், அவர் நோன்பை விடாது நடத்தியது எனக்கு நினைவிருக்கிறது. இரண்டு மூன்று முறை சேர்ந்தாற்போல் உண்ணா நோன்பிருப்பது அவருக்குச் சர்வசாதாரணம். சில திங்கள்களில் பரிதி வணக்கம் செய்யாமல் சாப்பிடுவதில்லை என்று விரதமெடுத்துக் கொள்வார். நானும் மற்றக் குழந்தைகளும் தெருவில் நின்றுகொண்டு, இரவி எப்போது மேகக் கூட்டங்களினின்றும் வெளிவரப் போகிறதென்று காத்துக் கொண்டிருப்போம். மழைகாலத்தில் சில நாட்களில்

சூரியன் காட்சி கொடுக்கக் கருணை செய்வதில்லை என்பது எல்லோருக்கும் தெரியும். அத்தகைய நாட்களில் சூரியன் மெதுவாக மேகத்தின் பின்னுலிருந்து எட்டிப் பார்த்தால், ஓட்டமாக உள்ளே ஓடி அன்னையிடம் தெரிவிப்போம். ஆனால் அவர் ஓடிவந்து பார்ப்பதற்குள் சூரியன் மறைந்து விடும். 'அதனாலென்ன மோசம்? இன்று நான் சாப்பிடுவது ஆண்டவனுக்கு விருப்பமில்லை' என்று கூறிக்கொண்டு மலர்ந்த முகத்துடன் மீண்டும் வீட்டு வேலையைக் கவனிக்கத் தொடங்கிவிடுவார்."

மேலே கூறியவை யாவும் காந்தியடிகள் தம் அன்னையாரைப் பற்றிக் கூறியவை. அன்னையார், தம் வாழ்க்கையில் கடைப்பிடித்த உண்ணு நோன்பு அடிகளின் வாழ்விலும் வேரூன்றிவிட்டது.

*   *   *

உண்ணு நோன்பு காந்தியடிகளின் கையில் ஒரு அரிய ஆயுதமாகப் பயன்பட்டது. அக் கருவியைப் பயன்படுத்தி அரசியல் போராட்டங்களிலும் சரி; சமுதாயப் போராட்டங்களிலும் சரி; அரிய வெற்றி கண்டார். தென்னுப்பிரிக்காவில் ஒரு நண்பரிடம் நன்கொடை வசூலுக்குச் சென்றிருந்தாரென்றும், பின்னிரவு வரை சாப்பிடாமல் இருந்து தம் காரியத்தைக் காந்தியடிகள் சாதித்தார் என்றும் நாம் முதலிலேயே படித்தோம்.

காந்தியடிகள் சம்பரானில் குடியானவர்களின் குறைகளை வெற்றிகரமாகத் தீர்த்து வைத்துவிட்டு ஆமதாபாத் வந்தார். ஆமதாபாத்தில் ஆலைகள் மிகுதி. அங்கிருந்த ஆலைத் தொழிலாளர்கள் சம்பள உயர்வு கோரிக் கிளர்ச்சி செய்து வந்தார்கள். திருமதி அனுசூயா பென் அக்கிளர்ச்சியைத் தலைமை தாங்கி நடத்தி வந்தார். தொழிலாளர்களின் கட்சியில் நியாயம் இருப்பதை உணர்ந்த காந்தி

யடிகள் ஆலை முதலாளிகளைக் கண்டு பேசி, கோரிக்கைகளை நடுவர்களின் தீர்ப்புக்கு விட்டுவிடும்படி கேட்டுக் கொண்டார்.

"எங்களுக்கும், எங்கள் தொழிலாளர்களுக்கும் இடையே மூன்றாவது மனிதர் வந்து சமரசம் செய்வதா? இதற்கு நாங்கள் இணங்கவே முடியாது" என்று ஆலை முதலாளிகள் கூறினர். வேறு வழியின்றிக் காந்தியடிகள், தொழிலாளர்களுக்கு வேலை நிறுத்தம் செய்யுமாறு யோசனை கூறினார். அக் கிளர்ச்சிக்குக் காந்தியடிகள் தலைமை ஏற்கும் போது நான்கு நிபந்தனைகளைக் குறிப்பிட்டார். அவை யாவன :

(1) எந்த நிலைமையிலும் தொழிலாளர் பலாத்காரத்தைக் கைக்கொள்ளக்கூடாது.

(2) கட்டுப்பாட்டை மீறி எந்தத் தொழிலாளராவது வேலைக்குப் போனால் அவர்களை மற்றவர்கள் கட்டாயப் படுத்தக்கூடாது.

(3) வேலை நிறுத்தத்தின் போது வாழ்க்கை நடத்துவதற்காகப் பிச்சை எடுக்கக்கூடாது.

(4) வேலை நிறுத்தம் எவ்வளவு காலம் நீடித்தாலும் உறுதியாக நிற்க வேண்டும்; வேறு தொழில் செய்து பிழைக்க வேண்டும்.

முதல் இரண்டு வாரகாலம் தொழிலாளர்கள் உள்ள உறுதியுடன் இருந்தனர். மூன்றாம் வாரம் மனந் தளர்ந்தனர். சிலர் வேலைக்குத் திரும்பி விட்டனர் வேலைக்குச் சென்றவர்களைப் பார்த்து மற்ற பெரும்பான்மையோர் சினம் கொள்ளத் தொடங்கினர். அவர்கள் பலாத்காரத்தில் இறங்கிவிடலாம் போல் தோன்றியது. கட்டுப்பாடும் குலைந்தது. காந்தியடிகளின் உள்ளம் வேதனைப்பட்டது. இந்நிலைமையில் என்ன செய்வது என்ற சிந்தனை அவர்

உள்ளத்தை ஓயாமல் ஆட்கொண்டது. வேலை நிறுத்தம் முடியும் வரையில் உண்ணாவிரதம் மேற்கொள்வதாக அறிவித்தார். இதுவே அடிகள் தம் வாழ்வில் மேற்கொண்ட முதல் உண்ணாவிரதம். உடனே வேலை நிறுத்தம் கட்டுப்பாட்டோடு நடந்தது. ஆலை முதலாளிகளின் தலைவரான திருவாளர் அம்பாலால் சாராபாயும், அவர் மனைவியான சாரளா தேவியும் அடிகள்பால் பேரன்பு கொண்டவர்கள். அடிகளின் உண்ணாவிரதம் அவர்களை வாட்டியது. ஆலை முதலாளிகளும் சமரசத்துக்கு இணங்கினர்.

* * *

1921-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 17-ஆம் தேதி காலையில் வேல்ஸ் இளவரசர் 'இந்தியாவின் வாயில்' என்று சொல்லப்படும் பம்பாய்க் கடற்கரை மண்டபத்தில் வந்து தங்கினர். அதிகார வர்க்கத்தார் சிறப்பான வரவேற்பளிக்க ஏற்பாடு செய்திருந்தனர். அந்த ஏற்பாடுகள் குறிப்பிட்ட திட்டத்தின்படி நடை பெற்றன. இந்துக்களும் இசுலாமியர்களும் அவ்வரவேற்பில் கலந்து கொள்ளவில்லை. பார்சிகளும் ஆங்கிலேய பக்தர்களான கிருத்தவர்களும், ஆங்கிலோ இந்தியர்களும் கலந்து கொண்டனர். பம்பாய் பெரிய நகரமாகையால் இவர்களின் தொகை இலட்சக்கணக்கில் இருக்கும்.

அதே சமயத்தில் பம்பாய் நகரின் மற்ெறாரு மூலையில் மகாத்மாவின் பொதுக்கூட்டமொன்று நடந்தது. அப்பொதுக்கூட்டத்திலிருந்து திரும்பியவர்களும், வேல்ஸ் இளவரசரின் வரவேற்பிலிருந்து திரும்பியவர்களும் எதிரெதிரில் சந்தித்தனர்; கைகலப்பு ஏற்பட்டது. இளவரசரை வரவேற்றுவிட்டு வந்த பார்சிகளின் தலைகளிலிருந்த வெளிநாட்டுக் குல்லாய்களையும் அவர்கள் உடம்பின் மீதிருந்த வெளிநாட்டுத் துணிகளையும் சிலர் பலவந்தமாக நீக்கித் தீயிலே போட்டார்கள். எதிர்த்தவர்களை அடித்தார்கள்.

மோட்டார்களின் மீது கற்கள் வீசப்பட்டன—மோட்டார் வண்டிகளும், டிராம்களும் எரிக்கப்பட்டன. சாராயக் கடைகளுக்கும் போலீஸ் நிலையங்களுக்கும் தீ வைக்கப் பட்டது. (சாராயக் கடைகள் பெரும்பாலும் பார்சிகளால் நடத்தப்பட்டன.) சில பார்சி பெண்களும் தாக்கப் பட்டனர்.

மறுநாள் காலையில் பார்சிகளும், ஆங்கிலோ இந்தியர் களும் துப்பாக்கி வைத்துக்கொள்ள அரசாங்கத்திடம் அநுமதி பெற்றுக் கொண்டனர். பிறகு இந்தியர்களும் முஸ்லீம்களும் வாழ்ந்த பகுதிகளில் புகுந்து தாக்கத் தொடங்கினர். இதையறிந்த இந்துக்களும் இசுலாமியர் களும் பழையபடி தடிகளைத் தூக்கிக் கொண்டு கிளம்பி னார்கள். கண்ட இடங்களிலெல்லாம் பார்சிகளைத் தாக்கத் தொடங்கினர். பார்சிகளும் ஆங்கிலோ இந்தியர்களும் வாழும் இடங்களைத் தேடிப் போகவும் தொடங்கினர். இக் கொடுமைகளை உணர்ந்த காந்தியடிகள் கண்ணீர் வடித் தார். மக்களின் அறியாமைக்காகப் பெரிதும் வருந்தினார். "இனிமேல் சுதந்திரம் கிட்டும் வரையில், ஒவ்வொரு திங்கட் கிழமையும் இருபத்து நான்கு மணி நேரம் உண்ணாவிரதம் இருக்க முடிவு செய்திருக்கிறேன்" என்று கூறினார்.

* * *

காந்தியடிகள் 1922-ஆம் ஆண்டு பர்தோலியில் சட்ட மறுப்பு இயக்கத்தை ஆரம்பிப்பதற்கான பெரு முயற்சியில் ஈடுபட்டிருந்தார். அவ்வாண்டு பிப்ரவரி 12-ஆம் தேதியில் தொடங்குவதென்று முடிவு செய்திருந்தார். பிப்ரவரி 8-ஆம் தேதி எதிர்பாராத பேரிடி ஒன்று விழுந்தது. ஐக்கிய மாநிலத்தில் கோரக்பூர் மாவட்டத்தில் சௌரி—சௌரா என்ற ஒரு சிறு பட்டணம் உள்ளது. அவ்வூரில் வெறி கொண்ட ஒரு கூட்டம் அங்கிருந்த காவல் நிலையத்தைத் தாக்கி நெருப்பு வைத்து, இருபத்தொரு போலீஸ்காரர்

களையும் உயிரோடு கொளுத்திக் கொன்று விட்டது. இதை அறிந்த காந்தியடிகள் உடனே சட்ட மறுப்பு இயக்கத்தை நிறுத்தி வைத்தார். பிப்ரவரி 12-லிருந்து ஐந்து நாள் உண்ணுவிரதம் மேற் கொண்டார். திருவாளர் ராம்சே மாக்டனுல்டு, அரிஜனங்கள் சட்டசபைக்குப் போட்டி யிடுவதற்கென்று தனித் தொகுதிகளை அமைக்க 1932-ல் ஒரு சட்டமியற்றினர். இதை ஒழிப்பதற்காகவும் காந்தி யடிகள் உண்ணுவிரம் மேற்கொண்டார்.

பிள்ளைகள் பிழை செய்தால் காந்தியடிகள் அவர்களை அடிப்பதோ, கேலி செய்து தலை குனியச் செய்வதோ இல்லை. ஆனல் பிள்ளைகள் பெரிய குற்ற மொன்றைச் செய்துவிடும்பொழுது, காந்தியடிகள் அதற்கான தண்டனை யைத் தாமே ஏற்றுக் கொள்கிருர்—பட்டினியிருக்கிருர். ஒரு முறை இம்மாதிரி எட்டு நாட்களுக்கும், பிறிதொரு முறை பதினன்கு நாட்களுக்கும் உண்ணுவிரதம் இருந்தார்.

"குழந்தைகளின் தவறுகளுக்காக நான் அவர்களை எப்படிக் கடிந்து கொள்ளலாம்? என்னுள் ஏதோ குற்ற மிருப்பதாலேயே குழந்தைகளும் தவறு செய்கிருர்கள். நான் தூயவனுகயிருந்தால், என்னிடமுள்ள குழந்தை எப்படிக் கெட்டவனுவான்? நான் நல்லவன்; இவர்கள் தீயர் களா? நான் உண்மையில் அருளறத்தைக் கடைப்பிடிப்ப வனுயிருந்தால் எந்தப் பிள்ளையும் என்னைக் கண்டு அஞ்சவோ, தன் பிழைகளை மறைக்கவோ மாட்டான்" என்று காந்தியடிகள் கூறுவார்.

மற்றுமொருமுறை இந்து முஸ்லீம்களின் கலவரத்தை ஒழித்து அமைதியை நிலை நாட்டுவதற்காக 21 நாள் உண்ணுவிரதம் தொடங்கினர். இவருடைய உண்ணு விரதக் கொள்கையானது, குழந்தையின் நோய் நீங்கத் தாய் மருந்துண்பதற்கு ஒப்பாகும்.

# 34. நூல் நிலையம்

நூல் நிலையம் என்றவுடனே வரிசை வரிசையாக அடுக்கப்பட்ட நூல்கள் நம் கண்முன் தோன்றும். ஆனால் அந்த நூல் நிலையமல்ல நான் இங்கு குறிப்பிடுவது. காந்தியடிகள் கக்கூசையே நூல் நிலையம் என்பார். கக்கூசை அவர் நூல் நிலையம் என்று குறிப்பிடுவதற்கு இரண்டு காரணங்களுண்டு. முதலாவதாகக் கக்கூசு, நூல் நிலையத்தைப்போல் தூய்மையாக இருக்கவேண்டும் என்று வற்புறுத்தி வந்தார். மற்றொன்று அவர் பெரும்பாலும் படிக்கும் வேலையைக் கக்கூசிலேயே செய்வார். ஒரு முறை கக்கூசுக்குப் போகும்போது சார்லஸ் டிக்கன்ஸ் எழுதிய புதினத் தொகுப்பு நூல் ஒன்றைக் காந்தியடிகள் எடுத்துக் கொண்டு சென்றதைப் பார்த்ததாகத் திருவாளர் சந்திர சங்கர் சுக்லா குறிப்பிட்டுள்ளார். 1927-ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள், பெங்களூரில் குமரன் பூங்காவில் தங்கியிருந்தபோது காந்தியடிகள் ஒரு கற்றைக் கடிதங்களை எடுத்துக் கொண்டு கக்கூசுக்குள் சென்றாராம். அருகில் நின்று கொண்டிருந்த சந்திரசங்கர் சுக்லாவை நோக்கி, "மிகவும் இன்றியமையாத காரணங்களில் கக்கூசில் படிக்கும் வேலையை நான் மேற் கொண்டிருக்கிறேன். ஆனால் மற்றவர்கள் என்னைப் பார்த்து இப்பழக்கத்தைக் கைக்கொள்ளக் கூடாது" என்று குறிப்பிட்டாராம்.

ஒரு நாள் காந்தியடிகள் கக்கூசுக்குள் சென்றார். பிறகு அரைமணி நேரம் கழித்து வெளியில் வந்தார். உடனே தம் செயலாளரான மகாதேவ தேசாயையும் மற்றவர்களையும் அழைத்தார். "நான் கக்கூசுக்குள் இருந்தபோது, ஐரோப்பாவுக்குச் செல்ல வேண்டாமென்று என் ஆன்மா எனக்குக் கட்டளையிட்டது. எனவே என் ஐரோப்பியப் பிரயாணத்

தைக் கைவிட்டுவிட முடிவு செய்து விட்டேன்" என்று கூறினார்.

## 35. காங்கிரஸ்

நியூ டெல்லியில் ஒரு நாள் காலை, காந்தியடிகள் உலாவுவதற்காக வெளியில் சென்றார். அப்போது பண்டித ஜவகர்லால் நேருவும் உடன் சென்றார். நாடு ஆங்கில ஆட்சியிலிருந்து விடுதலை பெற்றதும், காங்கிரஸ்கட்சி தொடர்ந்து இயங்க வேண்டுமா, கூடாதா என்பது பற்றிப் பேச்சு எழுந்தது. அப்போது காந்தியடிகள் கூறியதாவது:

* "காங்கிரஸ் கட்சி, நாடு விடுதலை பெற்ற பின்னும் இயங்கவேண்டும். ஆனால் ஒரு நிபந்தனை. காங்கிரஸ் கட்சியில் உறுப்பினராக இருக்கும் யாரும் ஊதியம் பெற்றுக் கொண்டு அரசியல் பதவிகளை வகிக்கக் கூடாது; அவ்வாறு பதவி வகிக்க விரும்புவோர் காங்கிரஸ் கட்சியிலிருந்து விலகிவிட வேண்டும், என்ற ஒரு தன்னல மறுப்பு சட்டத்தை இயற்றிக் கொள்ள வேண்டும்."

---

*Vide Page 68. Mahatma Gandhi—by Jawaharlal Nehru.